தென்னிந்தியாவில் எனது சங்கீத யாத்திரை

பண்டித விஷ்ணு நாராயண பாத்கண்டே

மொழிபெயர்ப்பு - வித்யா ஜயராமன்

தென்னிந்தியாவில் எனது சங்கீத யாத்திரை

பண்டித விஷ்ணு நாராயண பாத்கண்டே

பண்டித பாத்கண்டே 1904-ஆம் வருடம் மேற்கொண்ட தென்னிந்திய யாத்திரையின் நாட்குறிப்பை மராத்தியில், “மாஜா தக்ஷிணேசா ப்ரவாஸ்” என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார். அது, 1986-ஆம் ஆண்டு இந்திரா கலா ஸங்கீத விஸ்வ வித்யாலயம், கைராகர் வாயிலாக, பேரா. டா. அமரேஷ் சந்திர சௌபே-யால் இந்தி மொழியில் மொழி பெயர்த்து வெளியிடபட்டது. இந்தப் தமிழ் மொழி பெயர்ப்பு, கைராரகர் இந்திப் பதிப்பின் அடிப்படையில் அமைந்தது.

இந்திரா கலா விஸ்வ வித்யாலயத்தின் மொழி பெயர்ப்பில் சிறிய அச்சுபிழைகள் அல்லது புரிந்துக் கொள்ள வேண்டிய கூடுதல் குறிப்புகள், விளக்கங்கள் போன்றவை தேவைப்பட்ட இடங்களில், [ ] இந்த அடைப்பு குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

வித்யா ஜயராமன்
vidyajay@gmail.com

யாத்திரையின் நோக்கம்

நம்முடைய இந்து சங்கீதம் மிகவும் பழமையானது என்பதால் அதற்கு மிகப் பெரிய சாஸ்திரம் இருக்கிறது என்று பலர் நினைக்கிறார்கள். இப்படி எண்ணுவது தவறு என்று நான் சொல்ல வரவில்லை. அப்படிச் சொல்லிவிடுவது அழகாகவும் இருக்காது. நம்மிடையே பல சமஸ்கிருத கிரந்தங்களின் பெயர்கள் பரவி இருக்கின்றன, அவற்றுள் சில கிரந்தங்கள், நமக்குப் படிக்கவும் கிடைக்கின்றன. ஆனாலும், நம் மனதில் ஒரு கேள்வி எழுகிறது - நம் கிரந்தங்களில் சொல்லப்படும் சாஸ்திரத்திற்கும் நாம் இன்று சங்கீதம் என்று அழைப்பதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா இல்லையா? அப்படி இருந்தால், அது எந்த அளவில் இருக்கிறது? எல்லாப் பழைய கிரந்தங்களையும் படித்து, அதன் உண்மையான தரத்தைப் பற்றி அறிந்துக் கொண்டாலும் கூட, அவ்வாறு அறிவதன் மூலம் சங்கீதத்தின் இன்றைய நிலையுடன் சம்பந்தப் படுத்தமுடியாது போனால், அதாவது, அவை இன்றைய சங்கீதத்திற்கு முற்றிலும் வேறுபட்டதாக இருந்துவிட்டால், இந்த கிரந்தங்களை மும்முரமாகப் படிப்பதில் என்ன பிரயோஜனம்? நான் இந்தக் கேள்வியைப் பற்றி பல முறை யோசித்திருக்கிறேன். இதற்கு சரியான விடை கிடைப்பது கடினம் என்பதை ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும். ரத்னாகரம், த3ர்பணம். ராகபோதம், பாரிஜாதம், முதலிய கிரந்தங்களில் விவரிக்கப்படும் சங்கீத நியமங்களின் படி நாம் இன்று பாடுகிறோம் என்று நம்மால் சொல்ல முடியுமா? புத்தகங்களில் சொல்லப்படும் ஸ்வரங்கள் இன்றும் புழக்கத்தில் இருக்கின்றன, அவற்றில் விவரிக்கப்பட்டுள்ள ராகத்தின் பெயர்கள் மட்டும் இன்றும் புழக்கத்தில் இருக்கின்றன. இதனால் மட்டுமே நாம் பழைய சங்கீதத்தை இன்றும் பாடுகிறோம் என்று எப்படிச் சொல்ல முடியும்? கிரந்தங்களில் சொல்லப்படும் ராக வர்ணனைகளை, அந்தந்த பெயர்களுக்குரிய இன்றைய ராகங்களோடு சேர்த்துப் பார்த்தால் , அவை சரியாக ஒத்து அமைவதில்லை. சரி, கிரந்தங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளபடி, நாம் ராகத்தை அமைத்துப் பாடலாம் என்றாலோ, அதை நம்மால் ரசிக்க முடிவதில்லை, மற்றும் நமக்கு நவீனன் என்று பெயர் சூட்டி விடுவார்கள். இப்படி இருக்கையில் கிரந்தங்களைப் படிப்பது எதற்காக , படித்தவர்களை சங்கீதம் தெரிந்தவர் என்று சொல்வதும் எதற்காக? இன்றைய சங்கீதத்தின் பார்வையில் பண்டிதனின் நிலை தான் என்ன? இந்தக் கேள்வி உங்கள் மனதில் தோன்றுகிறதா இல்லையா? அப்படி எழுந்தால் அதற்கு என்ன பதில் சொல்லுவீர்கள்? ரத்னாகரத்தில் பத்து வகையான ராகங்கள், அதன் பெயர்கள் மற்றும் லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் அந்த புத்தகத்தில் சொன்ன முறைப்படி இவற்றில் ஐந்து ராகங்களைக் கூடப் பாடிக் காட்டவோ அல்லது இன்று புழக்கத்தில் இருக்கும் ராகங்களுடன் அதன் தொடர்பை விளக்கவோ கூடிய ஒரு வித்வானாவது இன்று கிடைப்பார்களா? இந்நிலையில் அந்த கிரந்தங்கள் எதற்காக?

இன்றைய சங்கீதம் முற்றிலும் வேறானது என்று கருதி, புதிய கிரந்தங்களை செய்து வைத்தலே சரி என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். இத்தகைய விசாரங்கள் என் மனத்தில் அடிக்கடி தோன்றுகின்றன. நான் சென்னை சென்று வந்தால், இந்தப் பெரும் கேள்விக்கு விடை மற்றும் தெளிவு ஏற்படக்கூடும் என்று என் நண்பர்களில் சிலரின் மூலம் ஆலோசனை கிடைத்தது. அங்கே புழக்கத்தில் இருக்கும் சங்கீதம் கிரந்தங்களின் அடிப்படையில் இருக்கிறது.

கிரந்தங்களில் சொல்லப்பட்ட பெயர், ராக லக்ஷணம் முதலியவை கிரந்தத்தைப் பிரமாணமாகக் கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. நண்பர்களின் இந்த ஆலோசனையை நான் பல நாட்களாக மனத்தில் கொண்டு, சரியான சமயம் வரும் போது அங்கே போகலாம் என்று நினைத்திருக்கிறேன். இறைவனின் கிருபையால் இன்று அந்த ஸந்தர்ப்பம் வந்தது - அங்கே செல்லத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது, அங்கேயுள்ள எல்லா முக்கியமான ஊர்களுக்கும் சென்று , அங்கே எந்த கிரந்தத்தின் அடிப்படையில் சங்கீதம் அமைந்திருக்கிறது என்று ஆராய வேண்டும், மேலும், அந்த கிரந்தங்களைப் பெற்றுக்கொண்டு, ரத்னாகரம் முதலிய பழைய கிரந்தங்களுக்கும் அவற்றுக்கும் என்ன தொடர்பு என்பதையும் ஆராய முயற்சிக்க வேண்டும். என்னால் அப்படிச் செய்ய முடிந்தால் ஒரு உபயோகமான வேலை என்னால் ஆனது என்று நினைத்துக் கோள்வேன்.

சென்னையில் வருகை — சென்னை

15 November 1904

இன்றைய தேதியில், காலை ஆறு மணிக்கு இந்த ஊரின் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தேன். என் மும்பை நண்பர் ஸ்ரீ ரதன் சீ லீலாதார், மெஸ்சர்ஸ் டாகுர் அண்ட் சன்ஸ் பெயரில் ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்திருந்தார். அதனால் நான் கிளம்புவதற்கு முன்னர், அவர்களுக்கு தபால் மூலம் ஒரு கடிதம் அனுப்பிவிட்டேன், ஒரு தந்தியும் கொடுத்து விட்டேன். ஸ்டேஷனில் இறங்கியவுடன் பார்த்தால், ஸ்ரீ ரகுநாத் தாகூரின் மருமகன் ஸ்ரீ சிவசங்கர் என்னை எதிர்பார்த்துக்கொண்டு நின்றிருந்தார். வித்தியாசமான உடையில் இருந்ததால் என்னை அடையாளம் கண்டு கொண்டார், ஊர்-பேர் பரிச்சயம் ஆன பின், என்னுடைய ஸாமானங்களுடன் வண்டியில் அமர்த்தி சாவ்கார்பேட்டையில், ஏகாம்பரேஸ்வரருக்கு அருகில் ஒரு பெரிய வீட்டில் எனக்காக பார்த்து வைக்கப்பட்ட இடத்தில் கொண்டு விட்டார் - இடம் பெரிதாக வசதியாக இருந்தது. ஆகையால் ஒரு பெரிய கவலை தீர்ந்தது, நான் என் பொருட்களை ஒழுங்கு படுத்தி வைத்தேன் - ஒரு அறையில் என் சங்கீத கார்யாலயத்தையும் அமைத்துக் கொண்டேன். இந்த யாத்திரை ராமேஸ்வரத்திலிருக்கும் இறைவனுக்கும் சங்கீதத்திற்கும் சமர்ப்பணம் , அதனால் உபயோகமற்ற அறிமுகங்கள், உபசாரத்திற்காக சந்திப்புக்கள் என்று உட்கார்ந்திருக்கக் கூடாது என்று வீட்டை விட்டுக் கிளம்பு முன்னரே முடிவு செய்துவிட்டேன். அதே போல கோர்ட், தர்பார் இவற்றையெல்லாம் பார்க்கப் போகக் கூடாது, ஏனென்றால் அப்படிப் போவதால் ஒரு லாபமும் இன்றி வீணாக நேரம் விரயம் ஆகும். இரண்டாவதாக , இந்த யாத்திரையில் சாஸ்திரம் அறிந்த சங்கீதக்காரர்களை (ஆண்கள்) எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் போக வேண்டும் என்று முடிவு செய்தேன். பெண்களின் சங்கீதத்தைக் கேட்பதற்கு தனிப்பட்ட அவசியம் இல்லை, காரணம், அவர்களுக்கு சாஸ்திர ஞானம் இருக்கும் சாத்தியம் மிகக் குறைவு. சங்கீதப் பண்டிதர்களுள் நடத்தும் விவாதம் மற்றும் உரையாடல் இவற்றைக் கேள்வி - பதில் வடிவத்தில் எழுதிவிட வேண்டும். உரையாடலில் ஒவ்வொரு வார்த்தையையும் நினைவில் கொண்டு எழுதுவதென்பது

முடியாது. அதனால் ஒவ்வொரு வித்வானுடன் நடத்தும் விவாதத்தின் படிவத்தை முதலில் எழுதி வைத்துக் கொண்டு கிடைக்கும் பதில்களை குறிப்புக்களாக நோட் செய்துக் கொள்ளவேண்டும். சங்கீத சர்ச்சையைத் தவிர வேறொன்றிலும் ஒரு நாளைக் கூட வீணாக்கக் கூடாது. ஆகட்டும்

ஸ்ரீ திருமலய்ய நாயுடு மற்றும் ஸ்ரீ சிங்கராச்சாரியாரைத் தேடி

சாப்பாடு முதலியவற்றை முடித்துக் கொண்டு, முதலில் ஸ்ரீ திருமலய்ய நாயுடுவைத் தேடி வெளியில் கிளம்பினேன். நான் இவரை நேரில் சந்தித்ததில்லை ஆனால் அவருடன் எனக்கு கடிதப் போக்குவரத்து உண்டு. இவர் 'ஈஸ்ட் அண்ட் வெஸ்டில்' [East and West] எழுதுவதுண்டு. இவர் தான் எழுதிய "வித்யா சஞ்சீவனி" என்ற பெயரில் ஒரு சிறிய புத்தகத்தை எனக்கு மும்பைக்கு அனுப்பி இருந்தார். இதைப் படித்த பின் சில சந்தேகங்களை நிவர்த்தி செய்துக் கொள்ள விரும்பினேன். இவர் அந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வில்லை அதனால் நேரில் பார்த்து அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம் என்பது என் ஆவல். கேட்டுப் பார்த்தபோது இவர் ட்ரிப்லிகேனில் இருக்கிறார் என்று தெரியவந்தது. இந்த இடம் என் வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் இருந்ததால் , வீட்டிற்கு வந்து தபால்காரர் மூலம் கடிதம் அனுப்பினேன்.

26 நவம்பர் 1904

இவரை நாளை காலை எட்டு மணிக்கு சந்திக்க முடியும் என்று இரவில் தபால்காரர் மூலம் சேதி வந்தது. அவரை நேராகப் பார்க்க முடியவில்லையாம். அவர் வீட்டிலிருப்பவர்கள் இப்படிச் சொன்னார்கள். அதனால் நாளை காலை தபால்காரரை அனுப்பி இடம் மற்றும் நேரத்தை நிச்சயம் செய்துக் கொள்ள வேண்டும். இன்று காலை அவர் மீண்டும் கடிதத்துடன் ஸ்ரீ நாயுடுவின் வீட்டிற்குச் சென்றார். அவரைப் பார்த்தார். அவர் என்னை இன்று மாலை ஐந்து மணிக்கு மௌண்ட் ரோட்டில் உள்ள காஸ்மோபாலிடன் கிளப்பிற்கு வருமாறு அழைத்திருக்கிறார். ஸ்ரீ நாயுடு ஊரில் இருக்கிறார் மற்றும் இன்று அவர் வருவார் என்பதையும் அறிந்தது எனக்கு மிகவும் ஆனந்தம் அளித்தது. இந்த கிருகஸ்தர் இந்த விஷயத்தைப் பற்றி பல பத்திரிகைகளில் எழுதுகிறார் , நல்ல வித்வான் என்று தோன்றுகிறது. என் நண்பர் ஸ்ரீ டாகுர் சாகிப் கூட அவர் பி.ஏ (படித்திருக்கிறார்), மற்றும் நகர பாலிகையில் உறுப்பினர் என்று சொன்னார். இத்தனை எல்லாம் இருந்தும் கூட, அவரது இந்த அப்பியாசம் தொடர்கிறது என்பது மிகப்பெரிய விஷயம் தான். எனக்கு அவரிடமிருந்து இந்த கிரந்தங்களைப் பற்றிய பல விஷயங்களை அறிய வேண்டும். இங்கே சமஸ்கிருத கிரந்தங்கள் படித்த தொழில்முறை இசைக் கலைஞர் யாரும் இல்லை,

ஆர்வலர் பலர் இருக்கின்றனர் என்று எனக்கு அவர் எழுதி இருந்தார். இவரைச் சந்தித்து, இந்த விஷயத்தை பற்றி விவாதித்தால் லாபகரமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. அதனால் இன்று மாலை எப்படி அமைகிறது என்று பார்ப்போம்.

காலை சிங்கராச்சாரியாருடன் சந்திப்பு

இன்று காலை வேறு வேலை எதுவும் இல்லாததால் , மும்பையில் இருக்கும் போது, சில தினத்திற்கு முன்னர் சென்னையில் உள்ள ஒரு சங்கீத சாஸ்திரி சிங்கராச்சார்யுலுவிடமிருந்து அவரது முறையான சங்கீதப் புத்தகம் கிடைத்ததே, அவரைத் தேடலாமே என்று தோன்றியது. அப்படியே அவர் இங்கே இருந்தால், அவரைச் சந்தித்து, அவருடன் இது குறித்துப் பேசி, இந்த ஊரில், எங்கே என்ன தகவல் கிடைக்கும் இதைப் பற்றியும் கேட்கலாம். சிங்கராசாரியார் 'ஸ்வர மஞ்சரி', 'காயன பாரிஜாதம்', 'கலாநிதி' ஆகிய புத்தகங்களை எழுதி இருக்கிறார். எனக்கு என்னவோ இந்த மனிதரிடம் சமஸ்கிருத கிரந்தமும் இருக்கும் என்று தோன்றுகிறது. ஏனென்றால் இவரே ஒரு கிரந்தகர்த்தாவும் கூட. இந்த காரணத்தால், அங்கே செல்வதென்று தீர்மானித்தேன். கொஞ்சம் முயற்சித்த பின் அவரது முகவரி கிடைத்தது, அவரைப் பார்க்கும் ஆனந்தமும் கிடைத்தது. கோவிந்த நாயக்கர் வீதியில் ஒரு சிறிய ராமர் கோவிலின் இரண்டாவது வீதியில் இவர் ஜாகை இருந்தது. அவர் குடியிருக்கும் வீடு வேறிடத்தில் இருந்தது. ஆனால் இந்த கோவிலில் உட்கார்ந்துக் கொண்டு அவர் தன் சிஷ்யர்களுக்குக் காலையிலும் மாலையிலும் சங்கீதம் போதிக்கிறார். நான் மேலே போனேன் - அப்போது அவர் மூன்று மதராஸி சிஷ்யர்களுக்கு அங்கே ஸ்ரீ ராகத்தில் தன் புத்தகத்திலிருந்து ஒரு பாட்டு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். நமஸ்கரித்து விட்டு நான் அருகிலிருந்த சின்ன பாயின் மீது உட்கார்ந்துக் கொண்டேன். அறை (8 x 8) மிகவும் சின்னதாக இருந்தது. அங்கே ஒரு பக்கத்தில் ஓரிரண்டு ருத்ர வீணை, ஒரு தம்பூரா, இரண்டு வயலின் வைக்கப்பட்டிருந்தன. ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவர் தன் வேலையை நிறுத்தி விட்டார், நான் வேற்று மனிதன், ஆக இருந்ததால், என் பக்கம் பார்த்தார். நான் யார் மற்றும் எங்கிருந்து வருகிறேன் என்பது பற்றி விசாரித்தார். என் தொழில், மற்றும் ஆர்வம் இவற்றைப் பற்றிச் சொன்னவுடன் சிறிது ஆச்சரியம் அடைந்தார். ஸ்ரீ சிங்கராச்சாரியார் சுமார் 50 வயதானவர், பாடுவதையே தொழிலாகக் கொண்டவர். இவருக்கு ஒரு சகோதரர் இருந்தார் அவரும் மிக்க புகழ் உடையவர். இவர் நன்றாக வயலின் வாசிப்பார் என்பதும் தெரிய வந்தது. இந்தப் பெரிய மனிதர் மிகவும் எளிமையாகப் பழகுபவராக இருந்தார். அவர் என்னைப் பார்த்து பேசத் தொடங்கினார்.

சி: நீங்கள் மும்பையைச் சேர்ந்தவர். அதனால் அண்ணா தாரபுரேவை அறிந்திருப்பீர்கள். அதே போல, நாடேகரையும் பார்த்திருப்பீர்கள்

நான்: ஆம். நான் இந்த இரண்டு பேரையும் அறிவேன். இவர்களுள் அண்ணா தாரபுரே என் நண்பர். உங்களுக்கு அவரைத் தெரியுமா? அவரைப் பற்றி என்ன நினைவு இருக்கிறது?

சி: இங்கே எங்களுடைய காயன சமாஜத்தின் மூலம் அவரை அறிவேன். ஸ்ரீ ஸஹஸ்ரபுத்தேவையும் தெரியும். வித்வத்தைப் பொறுத்தவரை எனக்கு நாடேகரை விட அண்ணா சிறந்தவர் என்று தோன்றுகிறது.

நான்: அண்ணா தாரபூரேயுடன் நீங்கள் சங்கீத சாஸ்திரத்தைப் பற்றி விவாதம் செய்திருக்கிறீர்களா?

சி: அவர் சாஸ்திரம் நன்கு அறிந்தவர், அவரிடம் போய் நான் எப்படி விவாதம் செய்ய முடியும்? ஆனாலும் அவர் நல்ல வித்வான் என்று அவரது பேச்சு, பாவனையிலிருந்து புரிந்துக் கொண்டேன். அவரிடம் இந்த விஷயத்தைப் பற்றி எப்போதும் எதுவும் பேசவில்லை. ஹிந்துஸ்தானி சங்கீதம் குறித்து எனக்கு ஞானம் அதிகம் இல்லாமையால் அவரிடம் இந்த விஷயத்தைப் பற்றி ஒன்றும் பேசவில்லை.

நான்: அவர் உண்மையில் சங்கீத வித்யையில் தேர்ச்சி பெற்றவர். மஹாராஷ்ட்ரத்தில் அவரைப் போல ஓரிரண்டு பேர் தான் தேறுவார்கள் என்பது என் கருத்து.

ஸ்ரீ சிங்கராச்சாரியார் சிறிதளவு ஆங்கிலத்தில் பேசினார், அவர் சிஷ்யர் ஒருவரும் ஆங்கிலத்தில் பேசினார். அதனால் பாஷையினால் இடையூறு இருக்கவில்லை. அவருடன் என் உரையாடல் பின் வருமாறு:

கேள்வி: சங்கீதத்தில் ஹனுமான் மதம், பிங்கல மதம், சிவ மதம், போன்ற அநேக மதங்களைச சொல்லுகிறோம். அதனால் உங்கள் மதராஸ் பகுதியில் குறிப்பாக எந்த மதம் பின்பற்றப்படுகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

ப: ஆம். இங்கே “நாரத பரத மதம்” பின்பற்றப் படுகிறது, வடக்கில், “ஹனுமத் - பரத” மதம் பின்பற்றப் படுகிறது.

கே: நாரதர், மற்றும் பரதர் இரண்டு வெவ்வேறானவர்கள். வெவ்வேறு சமயத்தில் வாழ்ந்தவர்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. அதனால் “நாரத-பரத” என்ற கூட்டுப் பெயரால் எப்படி ஒரு மதம் இருக்கும்?

ப: நான் இந்த மதத்தை நாரதீய மதம் என்று அழைக்கிறேன்.

கே: இந்த நாரதீய மதத்தின் கிரந்தம் சமஸ்கிருதம் அல்லது வேறு ஏதாவது மொழியில் இருந்தால் அவற்றை நேரில் பார்க்க வேண்டும் என்பது என் ஆசை. அதனால் அவை உங்களிடம் இருந்தால் தயவு செய்து எனக்குக் காட்டுங்கள்.

ப: இத்தகைய கிரந்தம் எதுவும் என்னிடம் இல்லை.

கே: (இப்போது இல்லையென்றால் இதற்கு) முன்னால் இருந்திருக்கிறதா? அதன் பெயர் என்ன?

ப: அவை என்னிடம் எப்போதும் இருந்ததில்லை

கே: நீங்கள் அவற்றை நேரில் பார்த்ததோ படித்ததோ உண்டா?

ப: நான் பார்த்ததில்லை

கே: இந்த ஊரிலோ அல்லது வேறு ஊரிலோ எங்காவது கிடைக்குமா என்று உங்களால் சொல்ல முடியுமா? நான் சங்கீதத்திற்காகப் பெயர் பெற்ற ஊர்களுக்கெல்லாம் செல்ல தீர்மானித்திருக்கிறேன்.

ப: எனக்குச் சரியாகத் தெரியாது. இந்த கிரந்தத்தின் பெயர் மட்டும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கே: சிங்கராச்சாரியார் அவர்களே! நீங்கள் நாலைந்து புத்தகம் எழுதி இருக்கிறீர்கள். நீங்கள் இவற்றை எந்த கிரந்தத்தின் ஆதரத்துடன் எழுதி இருக்கிறீர்கள்?

ப: நான் கற்று வந்த பரம்பரையே எங்களது நடைமுறை வழி. எங்கள் வழியில் எழுபத்திரண்டு மேளங்கள் மற்றும் அதன் குடும்பம் அதாவது ஜன்ய ராகம் இந்த நாரதீயத்தின் ஆதாரத்தில் தான் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு தான் நாங்கள் ஒத்துக் கோள்கிறோம், இவ்வாறே கேள்விப்பட்டும் இருக்கிறோம்.

கே: ஸ்ருதி, மூர்ச்சனை, கிராமம் இந்த விஷயங்களை சமஸ்கிருத கிரந்தங்களில் படிக்கிறீர்கள். இது சம்பந்தமாக உங்கள் கருத்து என்ன, இதை அறிந்துக் கொள்ள ஆவலாக இருக்கிறது.

ப: சரி. என்ன வேண்டுமோ கேளுங்கள். எனக்கு என்ன தெரிகிறதோ சந்தோஷத்துடன் சொல்கிறேன்.

கே: ஷட்ஜத்தின் நான்கு ஸ்ருதிகள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவற்றை (வீணையை நோக்கி) இந்த வாத்தியத்தில் காட்டுங்கள்.

ப: மிகவும் சரி. (அவர் வயலினை எடுத்து 'ஸா' ஸ்வரத்தை தந்தியில் வாசித்துக் காட்டினார். பிறகு என்னைக் கேட்கலானார் - இந்த ஸ்வரம் 'ஸா' என்று நீங்கள் தெரிந்துக் கொண்டீர்களா? நான் ஆம் என்றவுடன், ஸா-விற்கு அடுத்து 'ரி' வரை, இருக்கும் பகுதியைக் காட்டி, இது ஷட்ஜத்தின் மற்ற ஸ்ருதிக்கானது என்று சொல்லிவிட்டார்)

கே: நீங்கள் சொல்வதன் பிரகாரம், இங்கே ரிஷபம் (்ப்ளாட்) கூட ஷட்ஜத்தின் ஒரு ஸ்ருதி இல்லையா? வாத்தியத்தில் ஒவ்வொரு ஸ்வரத்தின் ஸ்ருதியும் அதன் கடைசி வரை வாசிக்க வேண்டும் இல்லையா?

ப: ஆம் , நானும் அப்படித் தான் நினைக்கிறேன்.

கே: ரத்னாகரம், த3ர்பணம், முதலிய கிரந்தங்களை(பற்றி) நீங்கள் நிச்சயம் கேட்டிருப்பீர்கள். அந்த கிரந்தங்களை இங்கே ஆதாரமாகக் கருதுகிறார்களா?

ப: ஆம். இல்லை என்று யார் தான் சொல்லுவார்கள்? எங்கள் சங்கீதம் அங்கிருந்து தான் எடுக்கப்பட்டது.

கே: அப்படி இருந்தால், அந்த கிரந்தங்களின் படி , ஷட்ஜத்தின் ஸ்ருதிகள், "நி-ஸா" ஸ்வர இடைவெளியில் இருக்கின்றன, ஏனெனில் "ஸா" ஸ்வரத்தின் நாலாவது ஸ்ருதியில் இருந்தால் இதில் எப்படி சேர்க்க (ஸ்ருதி) முடியும்?

ப: அப்படி இருந்தால் எனக்குத் தெரியாது.

கே: மூர்ச்சனை என்பதைப் பற்றிய உங்கள் புரிதல் என்ன?

ப: (பைரவ் தாட்டைப் பாடி) ஸா ரி கா ம ப த நீ ஸா । ஸா நீ த ப ம க ரி ஸா । இது மூர்ச்சனை

கே: கிரந்தங்களில் சுத்த ஸ்வரம் எவை? அதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?

ப: இல்லை. அது எனக்குத் தெரியாது

கே: மூர்ச்சனையின் உபயோகம் என்ன?

ப: அவை எங்கள் பாட்டில் தானத்தின் வடிவில் எப்போதும் வருகிறது. மேலும் அவை பழக்கத்தில் தானத்தின் வாயிலாகத் தான் புலப்படுகிறது.

கே: அப்போது சுத்ததானம் கூடதானம் என்று சொல்லப்படுகிறதே அது, வேறா?

ப: என்னால் அதைப் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

கே: காந்தாரக் கிராமம் இந்த லோகத்தில் கிடையாது என்று சொல்லப்படுகிறது. இதன் அர்த்தம் என்ன? ஏன் அவ்வாறு சொல்லப்படுகிறது?

ப: இந்த லோகத்தின் மனிதர்களின் சாரீரத்திற்கு அதைப்பாடும் யோக்யதை இல்லை. அதனால் அது கந்தர்வ லோகத்துக்குச் சென்று விட்டது.

கே: கந்தர்வ லோகத்தில் இதை எப்படிப் பாடுவார்கள் என்பதை நாம் அறிய முடியாது. இந்த கிராமம் எப்படி இருந்திருக்க வேண்டும், என்பதைப் பற்றி நீங்களாக ஏதாவது அனுமானம் செய்திருந்தால், அதைச் சொல்ல முடியுமா?

ப: ஆம் சொல்கிறேன். (வயலினை எடுத்து மந்தர ஷட்ஜத்தை தந்தியில் வாசித்துக் கொண்டு) இந்த மந்தர ஷட்ஜத்தைக் கவனியுங்கள். இந்த மந்தர ஸப்தகத்திற்கு மேல் மத்ய ஸப்தகம் இருக்கிறது. அதில் இந்த ஸ்வரம் இருக்கிறதே (வாசித்துக் காட்டி), அதற்கு மேல் தார ஸப்தகம் இருக்கிறது. இப்போது தார ஸப்தகத்தின் காந்தாரம் இருக்கிறதே, அதை மந்தர

ஸப்தகத்தின் ஷட்ஜமாகக் கொண்டு, அதற்கும் மேலே உள்ள மூன்று ஸப்தகங்களில் மனிதர்களால் பாட முடியுமா என்ன? இரண்டரை ஸப்தகம் சரியாகப் பாடுவதென்பதே அவர்களுக்குக் கஷ்டம் இல்லையா? (இந்த விளக்கத்தைக் கேட்ட சிஷ்யனின் முகம் மலர்ந்தது)

கே: 'பியானோ'-வில் ஏழு ஸப்தகங்கள் இருக்கின்றன, அதில் காந்தாரக் கிராமம், வாசிக்க முடியும். ஆனால் என்னவோ கிரந்தகாரர்களின் சமயத்தில் 'பியானோ' இருக்கவில்லை என்பதும் சரி. இந்த கிராமத்தைப் பற்றிய உங்கள் தர்க்கத்திற்கு என்ன ஆதாரம்?

ப: பேராசிரியர். சேஷ சாஸ்திரி எனக்கு இவ்வாறு விளக்கினார். அவர் சொன்னது எனக்குச் சரியாகப்பட்டது. உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?

கே: நீங்கள் சொன்ன விளக்கம் எனக்குப் புரிந்தது. ஆனால், இந்த விளக்கம் சாஸ்திரத்தின் அடிப்படையில் இல்லை. கிராமத்தில் 'பிட்ச்' ஐக் கற்பிக்காமல் , ஸ்ருதியின் (பண்டைய) அடிப்படையில் வகுத்திருக்கிறார்கள் என்பது சாஸ்திரத்தின் மூலம் தெளிவாகிறது.

ப: அப்படியும் இருக்கலாம். எனக்கு இது பற்றித் தெரியாது. நான் கேட்டதைச் சொன்னேன். இங்கே பல வித்வான்களும் இப்படித் தான் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

கே: ஸ்வாமி! நீங்கள் எழுபத்திரண்டு ஜனக ராகங்கள் அல்லது மேள ராகங்களை ஒத்துக் கொள்கிறீர்கள் (அதாவது முப்பத்தாறு சுத்த மத்யமம், முப்பத்தாறு ப்ரதி மத்யமம்). இதற்கு எந்த கிரந்தம் ஆதாரம்?

ப: நான் தான் தெளிவாகச் சொன்னேனே, நாரதீய மதத்தின் செவிவழிச் செய்தி மற்றும் எங்கள் பரம்பரையில் கற்ற கல்வி.

கே: எனக்கு கிரந்தம் எங்கே கிடைக்கும்?

ப: இது போன்ற புத்தகங்கள் தஞ்சாவூர் பேலஸ் லைப்ரரியில் பார்க்கக் கிடைக்கும். நான் அவற்றைப் பார்த்ததில்லை.

கே: நான் தஞ்சாவூருக்கு எப்படியும் போகப் போகிறேன். அவற்றை அங்கே பார்க்கிறேன். சிறிது நேரத்திற்கு முன்பு உங்கள் சிஷ்யர்களுக்கு எங்கள் சாரங்கைப் போலவே தோன்றும் ராகம் சொல்லிக் கொடுத்து கொண்டிருந்தீர்களே, அது என்ன ராகம்?

ப: அதை நாயகி என்று நாங்கள் அழைக்கிறோம்.

கே: இதுவும் ஒரு வகை கானடா இல்லையா? இந்தப் பெயர் பழைய பெயரா?

ப: இது கானடா இல்லை. தர்பார் ராகத்தைப் போல கொஞ்சம் இருக்கும். ஆனால் நாயகி முற்றிலும் வேறானது.

கே: தர்பார், நவ்ரோஜ், ஹுஸேநி நாயகி ஆகியவை இங்கே நீண்ட காலமாக இருந்து வரும் சங்கீதத்தோடு சேர்த்தியா?

ப: அவை இங்கே பழமையானவை என்றே கருதப்படுகிறது. மற்றும் அவை ஜனரஞ்சகமானவையும் கூட.

கே: உங்கள் பக்கம் 'நட்நாராயண்' எப்படி பாடுவார்கள்? அதைக் கொஞ்சம் சொல்ல முடியுமா?

ப: அது எனக்குச் சரியாக நினைவு இல்லை. புத்தகத்தைப் பார்த்து வாசிக்கிறேன். (சிஷ்யன் அந்தப் பக்கத்தைத் தேடி எடுக்க, அதிலிருந்து ஆரோஹண-அவரோஹணத்தை வாசித்துவிட்டு) அது இவ்வாறு இருக்கும். அதிகம் பிரபலமான ராகம் இல்லை. ஹரிகாம்போஜி மேளத்திலிருந்து தோன்றியது. (சிஷ்யன் மறுபடியும் ஆரோஹண அவரோஹணத்தைப் படித்தான், மீண்டும் அதை வயலினில் வாசித்தார்)

கே: உங்கள் புத்தகத்தில் பல ராகங்களின் ஆரோஹண அவரோஹணத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். ஒரே கதியில் மேலே போய், பிறகு அதே கதியில் கீழே இறங்கினால், ராகத்தில் இனிமை எப்படித் தோன்றும்? இனிமையாக வாசிப்பது எப்படி சாத்தியமாகும்? இதற்கான வழியைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

ப: அது சுலபம். மேலே ஜனக ராகம் கொடுக்கப்பட்டிருக்கிறதே. அதனால் எந்த ஸ்கேல் என்பதும் நிச்சயம் புரிந்து விடும். அதிலிருந்து தோன்றும் ஜன்ய ராகங்களுடைய ஆரோஹண-அவரோஹணம் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வேறு வேறு 'கார்ட்ஸ்'-ஐப் பொல. சொன்ன பிரகாரம் மீண்டும் மீண்டும் மெதுவாக வாசித்தால், ஒருவாறு அதன் போக்கு தெரியும். அந்த போக்கை வழிகாட்டியாகக் கொண்டு, சிறிது சிறிதாய் வாசிக்க வேண்டும். ஒரு முறை இதை எல்லாம் சேர்த்து வாசித்தால் உடனே தென்படும். ஒவ்வொரு ராகத்தின் ஆரோஹண-அவரோஹணமும் வெவ்வேறானதால் ஒன்றில் இன்னொன்று கலக்கும் என்ற பயம் இல்லை. வாசிக்க வாசிக்க ஒரு மாதிரி ராகத்தின் வடிவம் புரிபடும். அதை வைத்துக் கொண்டு வாசித்துக் கொண்டே போக வேண்டும்.

கே: கீத கோவிந்தத்தில் சொல்லப்பட்ட ராகம், தாளம் இவற்றை இங்கே யாராவது பாடுகிறார்களா?

ப: இல்லை. யாரும் அப்படிப் பாடி நான் கேட்டதில்லை. எனக்கும் அவை தெரியாது. திருவாங்கூரைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், அங்கேயும் இவை பிரபலமாக இருப்பதாகத் தெரியவில்லை. அது வடக்கில் தான் பாடப்படுகிறது என்று தான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கே: உங்களுக்குத் திருமலய்யா நாயுடுவைத் தெரியுமா?

ப: ஆம். அவர் என் நண்பர். அவர் இந்த விஷயத்தைப் பற்றிக் கட்டுரைகள் எழுதி வருகிறார். அவர் ஒரு புத்தகம் கூட எழுதி இருக்கிறார். அவர் ஒரு பி.ஏ, பட்டதாரி, இந்த விஷயத்தில் நன்கு உழைத்திருக்கிறார்.

கே: அவர் சமஸ்கிருத கிரந்தங்கள் படித்தவர் என்று பெயர் பெற்றவரா?

ப: அது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் சங்கீத சாஸ்திரம் நன்றாகத் தெரிந்தவர். சங்கீதத்தைப் பற்றி சிந்தனைக்குரிய உரை எழுதக் கூடியவர் என்று சொல்கிறார்கள். அவரை நீங்கள் நிச்சயம் சந்தியுங்கள்.

கே: 'ஓரியண்டல் மியூஸிக்' எழுதிய சின்னஸ்வாமி முதலியார் எம்.ஏ. எங்கே இருக்கிறார் என்று சொல்ல முடியுமா? அவர் மீது எனக்கு மிகவும் மரியாதை உண்டு. அவரைச் சந்திக்க மிகவும் ஆவலாக இருக்கிறேன்.

ப: அவர் காலமாகி இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. அவருக்கு ஒரு அச்சுக்கூடம் இருந்தது. அதற்கு அவர் நிறைய செலவழித்தார். அதனால் தொழிலில் மிகவும் நஷ்டம் அடைந்த பின், இங்கிருந்து வேறிடத்திற்குச் சென்று விட்டார், பிறகு இறந்து விட்டார். அவர் சகோதரர் 'புதுபெட்'-டில் இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அவர் உங்களுக்கு ஏதாவது செய்தி சொல்லக் கூடும். ஆனால் அவருக்கு சங்கீத ஞானம் எதுவும் இல்லை.

கே: எனக்கு முதலியாருடைய புத்தகத்தின் ஒரு பிரதி வேண்டும்.

ப: அவர் சகோதரர் கொடுத்தாலும் கொடுக்கலாம்.

கே: நீங்கள் எனக்கு இந்த ஊரில் புத்தகங்கள் படித்த சங்கீத வித்வானின் பெயரைச் சொல்லுங்களேன். நான் அவர்களைச் சென்று பார்ப்பேன். எனக்கு ஒரு பெயரும் நினைவுக்கு வரவில்லை. முக்கால்வாசிப்பேர் பரம்பரையாக சங்கீதம் கற்ற பிராக்டிகல் பாடகர்களாகத் தான் இருக்கிறார்கள். ஆனால் சாஸ்திரம் தெரிந்தவர்கள் யாரையும் எனக்குத் தெரியாது.

ப: அப்படியா. நான் உங்களுக்கு மிகவும் சிரமம் கொடுத்து விட்டேன். இது சம்பந்தமாக என்னை மன்னிக்க வேண்டுகிறேன். இப்போது நேரம் ஆகி விட்டது, அதனால் விடை பெற்றுக் கொள்கிறேன் (பிரிவுபசாரங்கள்)

என் புரவலர் திரு.டாகுர் என்னைப் பார்க்க வந்திருந்தார். இங்கே ஓரியண்டல் லைப்ரரி என்று ஒரு நிறுவனம் இருக்கிறது . அங்கே பழைய ஓலைச்சுவடிகள் கிடைக்கும் என்றார். அவர் சொன்ன தகவலின் படி ஸ்ரீ துளஜாராம் டாகூருடன் ஓரியண்டல் லைப்ரரிக்குச் சென்றேன். அது நல்ல நிலையில் இருந்தது. அங்கே ஒரு நூலகரும் அவரது இரண்டு உதவியாளர்களும் இருந்தனர். ஒரு மேஜையில் இரண்டு மூன்று எழுத்தாளார்கள் பிரதி எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு மேஜையின் மேல் 'கேட்டலாக்'[catalog] வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்து நமக்கு எந்த நூல் தேவையோ அதன் பெயரை நூலகரிடம் விண்ணப்பப் படிவத்தில் எழுதிக் கொடுத்தால், அவர் கணக்கிட்டுப் பார்த்து நம்மிடம் ஒரு தொகை சொல்லுவார். நம்

முகவரியை எழுதிக் கொள்வார். பிறகு வி.பி. வழியாக கிரந்தத்தை அனுப்பிக் கொடுப்பார். அந்த கேட்டலாக்கில் சங்கீத கிரந்தங்களின் விவரம் பின்வருமாறு:

1. நிருத்ததாள புராணம் 2. ராக விசேஷம் 3. சங்கீத த3ர்பணம் 4. சங்கீத ரத்னாகரம் 5. சங்கீத ஸார ஸங்க்ரஹம் - 6. ஸ்வர மேள கலாநிதி

இவ்வாறு ஆறு கிரந்தங்கள் இருந்தன. என்னிடம் ரத்னாகரமும் த3ர்பணமும் இருக்கின்றன. அதனால், மற்ற நான்கு கிரந்தங்களையும் தேவநாகரி லிபியில் எழுதித் தர ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். தெலுகு லிபியில் எழுதி இருந்தது. 2000 அனுஷ்டுப் ஸுலோகங்களை எழுதிக் கொடுக்க ஐந்து ரூபாய் ஆகிறது. நான் இந்த தொகைக்கு ஒத்துக் கொண்டு நாளை டெபாஸிட் கொடுப்பதாக உறுதி தந்தேன். இது மிகவும் நல்லது என்றே சொல்லவேண்டும். ஐரோப்பிய மனிதர்களிடம் ஒரு விசேஷத்தை கவனிக்க வேண்டும். இது போன்றவற்றை மறைத்து வைக்க அவர்கள் விரும்புவதில்லை. இந்த நூலகத்தில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இருக்கின்றன ஆனால் என்னுடைய துறையில் ஆறு தான் இருக்கிறது.

ஸ்ரீ திருமலய்ய நாயுடு மாலை

சாயங்காலம் ஐந்து மணிக்கு நூலகத்திலிருந்து கிளம்பி மவுண்ட் ரோடுக்கு அருகில் இருக்கும் காஸ்மோபாலிடன் கிளப் சென்றேன். அங்கே நாயுடுவை சந்திப்பதாக ஏற்பாடு. இன்று ஒரு கிரந்தகர்த்தா ,சங்கீத வித்வான், க்ராஜுவேட்டுடன் சங்கீதம் பற்றிப் பேச வந்திருக்கிறோம், அதனால் கொஞ்ச நேரத்தில் நிறைய தகவல் கிடைக்கப் போகிறது என்று என் மனம் மிக உல்லாசமாக இருந்தது.

ஸ்ரீ நாயுடு எங்கள் சந்திப்பை எதிர்பார்த்து வராந்தாவில் நடந்துக் கொண்டிருந்தார். நான் சென்றவுடன் அவர் என்னை வரவேற்றார், உபசாரங்களுக்குப் பிறகு என்னை மேலே அழைத்துச் சென்றார். அங்கே ஒரு பத்து பதினைந்து பேர் இரண்டு-மூன்று கூட்டங்களில் அமர்ந்திருந்தனர். என்னை உபசாரத்திற்காக அவர்களுக்கு அறிமுகமும் செய்தார், பிறகு ஒரு கூட்டதுடன் நானும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டேன். எனக்கு சங்கீத நண்பர்களைத் தவிர வேறெதற்கும் அவசியம் இல்லை, ஏனென்றால் வீண் அரட்டை அடித்துக் கொண்டு உட்கார்ந்தால் என் நேரம் வீணாகும். இந்த பயத்தினால் நாம் ஏதாவது காலியான மேஜைக்கு அருகில் போய் உட்காரலாம் என்று நாயுடுவிடம் சொன்னேன். என் பேச்சைக் கேட்டு நாயுடு என்னை ஒரு மேஜைக்கு அழைத்துச் சென்றார். வானிலை பற்றிய உபசாரப் பேச்சிற்குப் பிறகு, என்னுடைய ஆர்வத்தைப் பற்றிப் பேச இரண்டு மூன்று நிமிடம் அவகாசம் கேட்டேன், அவரும் சரி என்றார். நான் கேட்கும் படிவத்தை எழுதி வைத்துக் கொண்டு விட்டேன், அப்போது தான் கேள்வி உடனே நினைவுக்கு வரும், நேரமும் வீணாகாது. பேச்சு இவ்வாறு நடந்தது. நான் பேசுவதற்கு இடை இடையில் மற்ற பேச்சுக்கள் நடந்தன என்று மட்டும் சொன்னால் போதும்.

அவை எல்லாவற்றையும் எழுத்தில் எழுதுவதென்பது முடியாத காரியம். ஆனால் முக்கியமானவற்றை மட்டும் விடக் கூடாது.

கே: ஸ்ரீ நாயுடு, உங்களுக்கு நினைவிருக்கக் கூடும். நான் என் கடிதங்களில் பல வகையான கேள்விகள் கேட்டிருந்தேன், நீங்கள் அதற்கெல்லாம் பதில் தரவில்லை, அதனால் ஒரு கடிதத்தில் நான் இங்கே வரும் போது தெளிவாக விளக்கமாக பதில் கிடைக்கும் என்று சொல்லி இருந்தீர்கள். உங்களின் இந்த பேச்சை நினைவில் கொண்டு, நேராக உங்களைப் பார்க்க நிச்சயித்திருந்தேன். என் பாக்கியம் அந்த சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நான் முதலில் கேட்க விரும்புவது - நீங்கள் சங்கீத சம்பந்தமாக, எந்த சமஸ்கிருத கிரந்தத்தைப் படித்திருக்கிறீர்கள் என்பது. இதை திறந்த மனத்துடன் சொல்லுங்களேன். நீங்கள் எதைப் படித்திருக்கிறீர்களோ அந்த கிரந்தத்தைப் பற்றி முதலில் பேசத் தொடங்கலாம்.

ப: நான் சிற்சில கிரந்தங்களின் முக்கியப் பகுதிகளைப் படித்திருக்கிறேன்., மற்றும் புரிந்து வைத்திருக்கிறேன். கிரந்தத்தை முறையாகப் படிக்கவில்லை. ராக விபோதத்தின் முதல் அத்தியாயம் என்னிடம் இருக்கிறது. அதை நான் படித்திருக்கிறேன். ரத்னாகரத்தின் ஆனந்தாஸ்ரமப் பதிப்பு இப்போது தான் வெளிவந்திருக்கிறது. அது மிகவும் நல்ல முறையில் அச்சாகி இருக்கிறது. அந்த புத்தகம் என்னிடம் இருக்கிறது. பாரிஜாதத்தின் இரண்டாம் பகுதி இப்போது அச்சாகி இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். ஆனால் அது என்னிடம் இல்லை.

கே: இதைத் தவிர வேறு ஏதாவது கிரந்தங்கள் படித்தோ அல்லது பார்த்தோ இருக்கிறீர்களா?

ப: இல்லை

கே: என்ன படித்திருக்கிறீர்களோ அது நன்றாகப் புரிந்ததா? புரிந்திருந்தால் யார் சொல்லிக் கொடுத்தார்கள்?

ப: முழுப் புத்தகமும் நான் பார்த்ததில்லை. முக்கியப் பகுதிகளை மட்டும் படித்திருக்கிறேன், புரிந்துக் கொண்டும் இருக்கிறேன்.

கே: உதாரணமாக ரத்னாகரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் எதை அதிக முக்கியத்துவம் இல்லாத பகுதி என்று கூறுவது? நான் உங்களை சோதிக்க வந்திருக்கிறேன் என்று ஒரு பொழுதும் நினைக்க வேண்டாம். நீங்கள் என் நண்பர். விசாரங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்வது நம் கடமை. எனக்குத் தெரிந்த, ஆனால் உங்களுக்குத் தெரியாத சில விஷயங்கள் இருக்கும். எனக்கு ஒன்றுமே தெரியாத சில விஷயங்களும் இருக்கும். நீங்கள் கிரந்தத்தைப் பார்த்திராவிட்டால் உங்கள் கருத்தை நிச்சயம் குறைவாக மதிப்பிட மாட்டேன். அதே போல் நண்பர்களிடையே நம்பிக்கை இன்மை இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் ஒருங்கிணைந்து வேலை செய்வது கடினம். நீங்கள் எதைப் படித்து வைத்திருக்கிறீர்களோ, அது எனக்குத் தெரிய வந்தால், நாம் இருவரும் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் உதவலாம். இது போன்ற விவாதங்களில், ஒருவர் எதைப் படித்திருக்கிறார், எதைப் படிக்கவில்லை என்று எனக்கெப்படித் தெரியும்? ஏனென்றால் இதைப்பற்றி தெளிவடைய என்னைக் கேட்டால் நான்

எப்படி பதில் சொல்ல முடியும்? அதனால் நான் திறந்த மனத்துடன் கேள்வி கேட்கிறேன். இதனால் நீங்கள் கோபப்பட வேண்டாம்.

ப: இல்லை. இந்த உண்மையை நானும் அறிவேன். இது போன்ற கேள்விகளை நான் எப்போதும் தவறாக நினைக்கமாட்டேன். ரத்னாகரத்தின் முற்பகுதி அதிக மகத்துவம் வாய்ந்ததில்லை என்று நான் எப்போதுமே சொன்னதில்லை.

கே: நீங்கள் சமஸ்கிருத கிரந்தங்களின் சுத்த ஸப்தகத்தை எப்படி நிர்ணயம் செய்தீர்கள்?

ப: என்னால் இந்தக் கேள்விக்கு பதில் தர இயலாது. ஆனாலும் என் கருத்து என்னவென்றால் , வேதம் மிகவும் பிராசீனமான புத்தகமாகக் கருதப்படுகிறது. அதனால் வேதத்தைப் போன்று பாடப்படும் ஸ்வர ஸப்தகம், எதுவோ அதை பண்டைய ஸ்வர ஸப்தகமாகக் கொள்ளவேண்டும். வைதிக ஸ்வர ஸப்தகம் மிகவும் புராதனமானது என்று கொள்வதற்கு இன்னொரு காரணம், மிகவும் பண்டைய காலத்தில் மூன்று-நான்கு ஸ்வரங்களுடன் மட்டுமே கூடிய ஸப்தகம் இருந்தது என்றும் அதுவே சிறிது சிறிதாக வளர்ந்திருக்கும் என்பதும் தான். இங்கே வைதிகர்கள் மூன்று-நான்கு ஸ்வரத்தில் தான் வேதத்தை பாடுகிறார்கள் , அதனால் இது பழமையான ஸ்வர ஸப்தகம் என்று அறிய முடிகிறது.

கே: எனக்கென்னவோ என் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை என்றே தோன்றுகிறது. மிகவும் பழைய காலத்தில் , மூன்று-நான்கு ஸ்வரங்கள் மட்டும் கொண்ட ஸப்தகம் இருந்திருக்கும், பிறகு அது ஐந்து ஸ்வரமாக ஆனது, போகப் போக, ஏழு ஸ்வரமாக ஆனது என்ற மேற்கத்திய சிந்தனை சரி தான். கார்ல் ஏஞ்சல்ஸ் மற்றும் டா.பர்ன், இவர்களின் புத்தகங்களில், இந்த விஷயம் சொல்லப்பட்டுத்தான் இருக்கிறது. அதை நான் படித்திருக்கிறேன். நீங்கள் அத்யயனம் செய்த ரத்னாகரம், ராகவிபோதம் முதலிய கிரந்தங்களில் ஏழு சுத்த ஸ்வரங்களுடன் கூடிய ஸ்வர ஸப்தகத்தை எப்படி நிர்ணயித்திருக்கிறார்கள் என்று உங்களைக் கேட்டேன்.

ப: என்னால் கிரந்தங்களின் ஸ்கேலை நிச்சயமாகச் சொல்ல முடியாது.

கே: கார்ல் ஏஞ்சல்ஸின் "மியூசிக் ஆ஼ப் ஏன்சியண்ட் நேஷன்ஸ்"[Music of Ancient Nations] மற்றும் டா. பர்னே யின் "ஹிஸ்டரி ஆ஼ப் ம்யூசிக்" [History of Music] - இந்த புத்தகங்களை நீங்கள் படித்ததுண்டா?

ப: மேலோட்டமாகப் படித்திருக்கிறேன். அவர்களும் இப்படித் தான் சொல்கிறார்கள்.

கே: நீங்கள் வைதிக ஸ்கேலைப் பற்றிய பேச்சை எடுத்தீர்கள். அதனால் இதைக் கேட்கிறேன். இந்த ஊரில் வைதிகர்கள் வேதத்தை எந்த ஸ்வரத்தில் ஓதுகிறார்கள்?

ப: அவர்கள் ப, நி, ஸா, ரி - இப்படிபட்ட ஸ்கேலை எடுத்துக் கொள்கிறார்கள். நாங்கள் எங்கள் பக்கத்தில் மாயாமாளவகௌளையை பிராசீனமான மற்றும் முக்கியமானதாகக் கருதுகிறோம். இதற்குப் பிறகு மற்ற ஸப்தகங்கள் தோன்றி இருக்கக் கூடும்.

கே: இதன் ஸ்கேல் எங்கள் 'பைரவ்'-வுக்குரியது. ஆனால் இதை நீங்கள் "ஆதி ஸ்கேல்" என்று கொள்வதற்கு என்ன ஆதாரம் சொல்கிறீர்கள்?

உ: நான் எந்த ஆதாரமும் சொல்லவில்லை. புத்தகங்களில் இது தான் கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லை வேறா என்பது பற்றி என்னால் சொல்ல இயலாது. ஆனால் நடைமுறையில் இதை இங்கே ஒத்துக் கொள்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் இது ஏன் என்பதைப் பற்றி எனக்குச் சொல்லத் தெரியாது.

கே: பழைய கிரந்தங்களை விடுங்கள். ஆனால் இந்த பக்கத்தின் இன்றைய புத்தகங்களில் ஏதும் ஆதாரம் தர முடியுமா?

ப: என்னால் எந்த கிரந்தத்திலிருந்தும் ஆதாரம் தர முடியாது, இது என் கருத்து, அவ்வளவு தான்.

கே: சங்கராபரணத்தின் ஸ்கேல் எப்போது / எப்படி சுத்தம் ஆனது? இது பற்றி நீங்கள் சிந்தித்திருக்கிறீர்களா? ஐரோப்பியர்கள் இதை தங்களது மேஜர் மோட் [major mode] என்று சொல்கிறார்கள்.

ப: எங்கள் பக்கத்தில் இது மிகவும் பழமையானது மற்றும், பல ஸப்தகங்களில் இதுவும் ஒன்று.

கே: டா.பர்னே தன்னுடைய புத்தகத்தில் "எல்லா பிராசீனமான சங்கீதமும் மைனரில் தான்" என்கிறார். இதைப் பற்றி நீங்கள் சிந்தித்திருக்கிறீர்களா?

ப: எனக்கு இது பற்றித் தெரியாது.

கே: புத்தகத்தில் சொல்லப்பட்ட பண்டைய ஸ்வரங்களுக்கு பண்டைய ஸ்ருதிகள் இருக்கின்றன. ஆனால் கிரந்தங்களில் அவைகளின் பயன்பாட்டைப் பற்றிய விஷயத்தில் தெளிவான விவரம் இல்லை. உங்கள் ஊரில் ஸ்ருதி பற்றிய விவரம் சொல்லக் கூடிய யாராவது இருக்கிறார்களா?

ப: இல்லை. அப்படி ஒருவரும் இல்லை. அதன் உபயோகம் ஜனரஞ்சகமான 'கிரேஸஸ்' [Graces] மூலம் அறியப்படுகிறது.

கே: மூன்று கிராமங்களைப் பற்றிய உங்கள் கருத்து என்ன? அப்படிப்பட்ட ஸ்கேல் இன்று உபயோகமற்றதா? அந்த ராகங்களின் பயன்பாட்டை இன்று எதன் மூலம் அடையலாம்? இந்த முறை எப்படித் தோன்றியது மற்றும் யார் தோற்றுவித்தார்கள்?

ப: எங்கள் பகுதியில் கிராமங்களைப் பற்றிய புரிதல் மற்றும் அது குறித்த கருத்துக்கள் பரவ வில்லை. அவை எப்படி இருந்தது என்பதும் யாருக்கும் தெரியாது. எனக்கும் இந்த விஷயத்தைப் பற்றித் தெரியாது என்றே சொல்லலாம். அவை நடைமுறையில் உபயோகப்படாததால் அதைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லை.

கே: நான் இன்று சிங்கராச்சாரியார் என்ற இசை வல்லுனரைச் சந்திக்கச் சென்றேன். அவர் தார ஸப்தகத்தின் காந்தாரத்தை மந்தர 'ஸ' வாகக் கொண்டு மூன்று ஸப்தகங்கள் பாடினால் , காந்தாரக் கிராமம் பாடலாம் என்றார். நீங்கள் இதை ஒத்துக் கொள்கிறீர்களா, இங்கே இப்படித்தான் கருதுகிறார்களா?

ப: இங்கே இப்படிப்பட்ட கருத்து நிலவுவது உண்மை தான். ஆனால் எனக்கு இது தவறாகப் படுகிறது. இங்கே சர்வ ஸ்ரீ சேஷ சாஸ்திரி , பிரசிடன்சி கல்லூரியின் பேராசிரியர் இவ்வாறு விளக்கினார். இது அவரது சொந்தக் கருத்து என்று எனக்குத் தோன்றுகிறது.

கே: அவர் இந்தக் கருத்தை எந்த ஆதாரத்துடன் சொல்லி இருப்பார்?

ப: இங்கே ஆண்கள் "ஸா" இதை ஸ்ருதியாகக் (ஆதார ஸ்வரம்) கொண்டு, பாடுகிறார்கள். பெண்கள் "மா" இதை ஆதார ஸ்வரமாகக் கொண்டு பாடுகிறார்கள். இதற்கு முன்னர், "கா" வும் ஒரு ஆதார ஸ்வரமாக இருந்திருக்கக் கூடும். இவ்வாறு அவர் யோசித்திருக்கலாம். ஆனால் எப்படி 'ஸ' ஸ்வரத்தையும், 'ம' ஸ்வரத்தையும் (ஆதாரமாகக்) கொண்டு பாட முடியுமோ, அதே போல, 'க' ஸ்வரத்தையும் ஆதாரமாகக் கொண்டு, பாட முடியாது என்று நிரூபிக்காத வரை இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம் (அஸ்திநாஸ்தி) என்ற யுக்தியின் படி , நிரூபிக்க முடியாமல் இருக்கலாம். இந்த காரணத்தால் சாஸ்திரி அவர்கள், இப்படியொரு விளக்கம் கொடுத்திருக்கலாம்.

கே: நீங்கள் கிராமங்கள் ஸ்ருதியின் படி அமைந்திருக்கின்றனவா அல்லது ஸப்தகத்தின் படி அமைந்திருக்கின்றனவா என்பது பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

ப: இல்லை. கிராமம் என்ற இந்த விஷயம் எனக்குச் சுத்தமாகப் புரிந்ததே இல்லை.

கே: என் சமஸ்கிருத புத்தகங்கள் சில என்னிடம் இருக்கின்றன. அவற்றில் இரண்டு மூன்றை, நாளை கிளப்பில் உங்களிடம் கொண்டுவந்து தந்தால் நன்றாக இருக்கும் இல்லையா?

ப: ஆஹா. ஆனந்தமாக இருக்கும். எங்கள் பக்கத்தில் கிரந்தங்களை அத்யயனம் செய்தவர்கள் யாரும் கிடைப்பதில்லை. நானும் என்னிடம் இருக்கும் இரண்டு-மூன்று புத்தகங்களை கிளப்பிற்கு கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். நான் இந்த கிளப்பிற்கு தினமும் மாலை சுமார் ஐந்து அல்லது ஆறு மணியளவில் வருகிறேன், வெறுமனே பொழுதைக் கழிக்கிறேன்.

கே: மூர்ச்சனையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: உங்களின் இந்த மூர்ச்சனையைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நாங்கள் எங்கள் சங்கீத பத்ததியில் இந்த சொல்லை வேறு விதமாகப் பிரயோகிக்கிறோம். "ஸ ரி க ம ப த நி" - இதை மூர்ச்சனை என்று அழைக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் உங்கள் ஹிந்துஸ்தானி பத்ததிக்கு மட்டும் இவ்வாறு சொல்வது பொருந்தும் என்று நான் நினைக்கிறேன். இந்த பிரதேசத்தில் அதை விளக்குபவர்கள் உங்களுக்கு கிடைக்க மாட்டார்கள் என்பதை மட்டும் சொல்லலாம்.

கே: உங்கள் அனுமதியுடன் நான் அதை உங்களுக்கு விளக்கலாமா? இந்த மூர்ச்சனைகளில் நாம் கிரந்தங்களின் முக்கியமான பகுதிகள் அடங்கி இருக்கின்றன.

ப: சரி. மிகவும் நல்லது.

கே: மூர்ச்சனைகளை ராகங்கள் தோன்றும் ஸ்கேல் என்று சொல்வார்கள். வேறு வேறு மூர்ச்சனைகளினால், செமிடோன்ஸின் [semitones] இடங்கள் மாறுகின்றன. எப்படி தைவத மூர்ச்சனையை எடுத்துக் கொண்டால், இரண்டாவது ஸ்வரம், "சுத்த நி" என்ற செமிடோன் ஆகிறது, மேலும் அதன் பெயர் "கோமள ரி" ஆகிறது , மற்றும் "தைவதம்" "ஸ" ஆகி விடுகிறது (பிறகு உதாரணங்களுடன் விளக்கினேன்). இப்போது மூர்ச்சனைகளின் உபயோகம் தெளிவடைந்ததா?

ப: இது எனக்கு நன்றாகப் புரிந்தது. இது போன்ற தெளிவான புரிதல் எனக்கு ஏற்பட்டதே இல்லை. இங்கே இந்த விஷயத்தை அறிந்தவர்கள் யாரும் தென்படுவதில்லை. (கிரந்தகாரர்கள் ராகத்தின் ஸ்கேலை இவ்வாறு சொல்வார்கள் என்பது எனக்கு இப்போது தான் புரிந்தது)

கே: நான் சொல்வது தவறாகவும் இருக்கலாம். ஆனால் இந்த கருத்திற்கு ஆதாரம் ஐரோப்பிய "மோட்ஸ்-இலும் [modes] உள்ளது. அவர்கள் பக்கத்திலும் பண்டைய காலம் முதல் இது போன்ற மோட்ஸ் ஆதெந்டிக் மற்றும் பிளேகல் [authentic and plagal] மோட்ஸ் இருந்தன என்றும் அதன் மூலம் தான் இந்த ஸ்கேலைச் சொன்னார்கள். இரண்டொரு ஸப்தகங்களில் இருக்கும் செமிடோன்களை , பேதம் செய்து , வேறு வேறு ஸ்கேல்களைக் காட்டும் வழி இருந்தது. இன்றைய ஸ்கேலும் பழைய ஸ்கேலும் ஒன்றல்ல ஆனாலும் மூர்ச்சனையின் உபயோகத்தைச் சொன்னேன்.

கே: திரு நாயுடு! ஸ்கேல் பற்றிய கற்பனை இன்மை பற்றி இவ்வாறு சொன்னோமானால், கிரந்தங்களில் சொல்லப்பட்ட ராகங்களைப் பற்றிய சிந்தனைக்கும் வழி இல்லை என்று விட்டு விடலாம் அல்லவா?

ப: ஆம். வழி ஒன்றும் இல்லை. இதே காரணத்துக்காக நான் கிரந்தங்களில் சொல்லப்பட்ட சங்கீதம் உபயோகமற்றது மற்றும் மறைந்து விட்டது என்று நினைக்கிறேன்.

கே: உங்கள் பகுதியில் எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களின் பத்ததி இருக்கிறது, அதை நான் நான்கு புரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் இந்த பத்ததிக்கு ஆதாரமான சமஸ்கிருத கிரந்தங்கள் எவை என்று எதை எடுத்துக் கொள்வது?

ப: ஆதாரப்பூர்வமான பிராசீன கிரந்தங்கள் பற்றி எனக்குத் தெரியாது. இருநூறு நானூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏதாவதொரு கணிதம் மற்றும் சங்கீத சாஸ்திரம் அறிந்த வித்வான் யாராவது இந்த அழகிய முறையைச் செய்திருப்பார்கள் என்பது என் கருத்து. இதில் கணித சாஸ்திரக்காரரின் கை தென்படுகிறது. எனக்கென்னமோ இது மிகவும் பிராசீனமானதென்று தோன்றவில்லை. ஒரு கிரந்தக்காரர் இன்றும் சொல்கிறார் இது அவர் செய்தது என்று.

கே: திரு நாயுடு! "கான வித்யா சஞ்சீவனி"யின் முன்னுரையில் நீங்கள் நிறைய பழைய சமஸ்கிருத கிரந்தங்களைப் படித்திருப்பதாகவும், உங்கள் புத்தகத்தில் சில எளிமையான சமஸ்கிருத ஸ்லோகங்களின் விளக்கம் இருந்ததாலும், உங்களிடம் இவ்வளவு கேள்விகள் கேட்டேன். உங்கள் பக்கத்தில் நிறைய சாஸ்திரம் அறிந்தவர்கள் இருக்கிறார்கள், அவர்களிடம் புத்தகங்களும் இருக்கக் கூடும். ஆனால் இந்த விஷயத்தில் உங்கள் ஆர்வமின்மை பற்றியும், உங்களுக்கு சிந்தனையில் மட்டுமே ஆர்வம் இருப்பது பற்றியும் எனக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது.

ப: இங்கிருப்பவர்களின் ஆர்வம் நடைமுறை சங்கீதத்தில் தான் இருக்கிறது. எழுபத்திரண்டு மேளகர்த்தா மற்றும் அதன் ஜன்ய ராகங்கள் அல்லாது இங்கே யாரும் வேறு எதைப் பற்றியும் ஆராய்வதில்லை. கிரந்தங்களில் அதிலும் குறிப்பாக சமஸ்கிருத கிரந்தங்களை ஒருவரும் கண்டுக் கொள்வதில்லை. உங்கள் பகுதியில் இந்த விஷயத்தில் ஆர்வம் இருப்பவர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எங்கள் பகுதியின் நன்கு படித்தவர்களும் அப்படிச் செய்தால் எவ்வளவு உபயோகமாக இருக்கும். நான் சாஸ்திரங்களின் மீது ஆர்வம் வளர பல முயற்சிகள் செய்தேன், விளக்கம் கொடுத்தேன், ஆனால் எல்லா முயற்சிகளும் வீணானனதாக இருக்கிறது. இங்கே சங்கீதக்காரர்களின் பிரயோகத்தில் மூழ்கி விடும் வித்வான்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு வீணையில் கொஞ்சம் வாசிக்கத் தெரிந்தால், அல்லது சில பாடல்கள் தெரிந்தால் போதுமானது, சாஸ்திரத்தின் பரிச்சயம் தேவை இல்லாமல் போகிறது. இந்த சென்னையில் ஆழ்ந்த சாஸ்திர அபிமானி என்று எனக்குத் தெரிந்து ஒருவரும் இல்லை. இங்கே எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களின் உபயோகப்படும் ராகங்களின் சர்ச்சை நடந்துக் கொண்டு தான் இருக்கிறது. அந்த ராகத்தின் வழி தனியாக இருக்கிறது என்று சொல்வதினால் கற்றுக்கொள்ள-கற்றுக்கொடுக்க எளிமையாகிறது. சில மேளங்களும் ஜன்ய ராகங்களும் ஜனரஞ்சகமாகி விட்டன. சில ராகங்கள் ஜனரஞ்சகமாகாததால் பிரசித்தி அடையவில்லை. இதன் காரணத்தால், முந்தைய கிரந்தங்கள் மற்றும் கிரந்தகாரர்கள் இருந்தார்களா இல்லையா என்பது பற்றி மக்களுக்குக் கவலை இல்லை. இந்த ஊரில் வித்வான் என்ற அளவில் நீங்கள் சந்தித்த சிங்கராச்சாரியார் இருக்கிறார், அவரைத் தவிர "தியாகய்யா" என்ற ஒரு வயதானவர் இருக்கிறார். இது தவிர பேர் சொல்லும்படியாக ஒருவருமே இல்லை. மற்றபடி பிரபலமாக, கொஞ்சம் பிரயோகரீதியாக பாட, வாசிக்கத் தெரிந்தவர்கள் சில பேர் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் கேட்கத் தகுந்தவர்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. இங்கே இருக்கும் மக்களின் ஆர்வம் தினத்துக்கு தினம் குறைந்து வருகிறது. பல்லவி (ஆலாபனை அஸ்தாயி) ஒரு மணி நேரம் கேட்டு வீணாக அமர்ந்திருப்பார்கள். இப்படி சமூகத்தில் ஒரு பிரகாசமான நிலை நடந்துக் கொண்டிருக்கிறது! நான் இப்படி பாதை மயங்கிப் போவதால் நண்பர்களை அழைத்து ஒரு வியாக்கியானம் கொடுக்கலாம் என்று நினைத்தேன். பத்திரிகையில் எழுதினேன். இப்போது நான் சொல்லும் உண்மை என்று சிலருக்கு விளங்கியது. அட, ராகத்தின் ஆலாபனை செய்யுங்கள், ஆனால் நாள் முழுதும் இப்படிக் கத்திக் கொண்டே இருந்தால், ஜனங்களுக்கு நிஜமாகவே சலிப்பு ஏற்படத் தொடங்கும். எதற்கும் ஒரு மரியாதை இருக்கிறது. இங்கே தாளத்தின் கதையும் அதே தான். வியாக்கியானத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு

திருத்திக் கொண்டிருக்கிறேன். வெறும் ஸ்வரங்களால் அதாவது பாடலின் வார்த்தைகளின்றி, மனிதனின் சரீரத்தில் ஆனந்தம், துக்கம், முதலிய பரிணாமங்கள் எப்படி ஏற்படும் என்ற கேள்வியை உங்களிடம் கேட்க விரும்புகிறேன். என் கருத்து அது நிச்சயம் முடியாது என்பதே.

நான்: நம்முடைய கிரந்தங்களில் "சரீ- வீரே"[1] இவ்வாறெல்லாம் சொல்லப்பட்டு இருக்கிறது. அதில் சொற்களைப் பற்றி பேசப்படவில்லை. சொற்களின் (பாடல்) மற்றும் ஸ்வரத்தின் சேர்க்கையால் விரைவில் மாற்றம் நல்லபடியாக ஆகும் என்று நீங்களும் சொல்கிறீர்கள். ஆனால் என் வாதம் என்னவென்றால், உங்களுக்குப் புரியாத மொழியில் ஒருவரோ அல்லது சொற்கள் இல்லாத பாஷையில் மீண்டும் மீண்டும் துக்கம் ஏற்படும் வகையில் பாடலைக் குரலில் பாடினால் நீங்கள் அந்த பாடலின் ஸ்வரங்களைக் கேட்டால் உங்களுக்கும் துக்கம் ஏற்படுமா அல்லது சுகம் ஏற்படுமா?

அவர்: மனதிற்குக் கஷ்டமாகத் தான் இருக்கும்

நான்: இதே போல் துருக்கியிலிருந்து ஒருவர் வந்து தாளத்துடனும் ஸ்வரத்துடனும் (நமக்கு எப்படியும் அது வெறும் ஸ்வரம் தான்) இனிமையான ஸ்வர சமூகத்தைக் குரலில் கொண்டு வந்தால் இன்பமாகத் தானே இருக்கும்? இல்லை துன்பமாக இருக்குமா?

அவர்: துன்பம் ஏற்படாது. நன்றாக இருப்பது போலத் தான் தோன்றும். ஆனால் இந்த விஷயமும் விவாதத்திற்குரியது என்பது என் கருத்து. ஐரோப்பிய தேசத்தில் கூட இந்த விஷயம் விவாதிக்கப்படுகிறது.

நான்: சில ஸ்வரங்களை வேறு வேறு விதமாகப் பாடினால் சரீரத்தில் வேறு வேறு மனோவிகாரங்கள் தோன்றும் என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். அந்திமக் கிரியையின் போது பாடப்படும் பாடல்கள் ஒரு வகையான கம்பீரமாகவும் விசித்திரமாகவும் இருக்கின்றன. அதில் ஆட வேண்டும் என்ற உணர்வு ஏற்படுவதில்லை. இனிமையான ஸ்வரங்களால் , மற்றும் சிறந்த அங்காபிநயத்தால் மட்டுமே மனத்தை தொட முடியும்.ஸ, ம, ப - இந்த ஒவ்வொரு (தனிப்பட்ட) ஸ்வரங்களால் மட்டுமே இந்த காரியம் நடக்காது. ஆனால் இதனால் என்ன அர்த்தம் செய்துக் கொள்ளவேண்டும் என்றால், எந்த ராகம் அல்லது ஸ்வரக் கூட்டங்களில், இதில் ஏதாவது ஒரு ஸ்வரம் வாதியாகுமோ , அந்த ராகம் அதாவது அந்த ஸ்வரக் கூட்டம், அந்த ரசத்திற்கு அனுகூலமாக இருக்கும்.திரு நாயுடுவும் இந்த விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பதாகச் சொன்னார்.

---

[1] [சங்கீத ரத்னாகரம் 1.3.59cd. இங்கே சரி வீரே என்றவிடத்தில், நாட்டிய சாஸ்திரத்தில், ஸ-வை அம்ஸமாகக் கொண்ட ஜாதியோ, அல்லது ரி-யை அம்ஸமாகக் கொண்ட ஜாதியை - உதாரணத்திற்கு ஷாட்ஜி அல்லது ஆர்ஷபி, வீர ரசம் மிகுந்த ஒரு சூழ்நிலையில் உபயோகிக்க வேண்டும் என்று தான் உணர்த்துகிறது. பிருஹத்தேசி மற்றும் சங்கீத ரத்னாகரம், போன்ற கிரந்தத்தில் கூட, இவ்வாறே குறிப்பான சொற்பிரயோகங்களால் இது விளக்கப்படுகிறது. ஒரு ஸ்வரமோ அல்லது ராகம் / அல்லது ஜாதியோ தாமாக எந்த விதமான ரசத்தை உண்டு செய்யும் என்ற அர்த்தத்தில் எந்த கிரந்தத்திலும் பேசப்படவில்லை.]
.

நம்முடைய பிராசீன கிரந்தக்காரர்கள் மற்றும் சங்கீத பண்டிதர்கள் மூர்க்கர்கள் மற்றும் அவர்கள் கற்பனை அடிப்படையற்றது இவ்வாறு எண்ணாமல் , அவர்கள் கற்றறிந்தவர்கள் மற்றும் வித்வான்கள், அவர்களின் எண்ணம் சிந்தனைக்குரியது இவ்வாறு யோசிக்க எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயற்சிக்க வேண்டும் என்பதே என் கருத்து என்று நான் திரு நாயுடுவிடம் வேண்டுகோள் விடுத்தேன். ஆம், பிராசீன கிரந்தங்களில் மிகைப்படுத்திக் கூறல் இல்லை என்று நான் நிச்சயமாகச் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் மிகைப்படுத்திக் கூறல் எல்லா தேசங்களின் சங்கீத வரலாற்றிலும் காணக் கிடைக்காமலா இருக்கிறது? அப்படி இருந்து மேற்கத்திய அறிஞர்கள், தம் சங்கீதத்தின் மீது எத்தனை அபிமானம் வைக்கிறார்கள்! எவ்வளவுக்கெவ்வளவு முடியுமோ, அவ்வளவு தம் பண்டைய மற்றும் நவீன சங்கீதத்தின் வரலாற்றை எழுதுவதிலும் ஆராய்வதிலும் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள். நாம் நம் முன்னோர்களை அறிவிலிகள் என்று நினைத்து, நேராக எழுபத்திரண்டு மேளங்களிலிருந்து ஆரம்பித்தால், இதில் நமக்கு என்ன கௌரவம் இருக்கும்? நம் வித்வான்கள் முதலில் பண்டைய சங்கீத சாஸ்திரத்தைப் புரிந்துக் கொண்டு, ஆராய்ந்து, பின்னர் அதிலிருந்து இன்றைய சங்கீதம் எவ்வாறு உருவானது என்று நிர்ணயம் செய்யவேண்டும். நீங்களே உங்களது எழுபத்திரண்டு மேளங்கள் இருநூறு வருடத்திற்கு முன்னர் தோன்றியது என்று சொல்கிறீர்கள். அப்போது அதற்கு முன்னர் ஏதாவதொரு சங்கீதம் இருந்திருக்க வேண்டுமே. "மேளம்" என்ற சொல், கிரந்தங்களிலும் வருகிறது. அதனால் அதற்கு முன்பும் மேளம் இருந்து தான் இருக்கிறது. அவை எத்தனை, மற்றும் எவை என்பதை ஆராய்ந்து, அவற்றில் எழுபத்திரண்டு புதியவை எவை, எப்போது தோன்றின, வேத காலத்தில் எவ்வளவு ஸ்வரங்கள் இருந்தன, அவை எவை, அதற்குப் பின் ஏழு ஸ்வரங்கள் எவ்வகையில் தோன்றின, எப்போது தோன்றின, மற்றும் முதலில் எந்த மேளம் தோன்றியது, இதையெல்லாம் ஆராய்ந்தால், சங்கீதத்தின் இதிகாசம் கிடைக்காமலா போய்விடும்? முதலில் கிரந்தங்களைச் சேர்த்து, பின்னர் அதன் அடிப்படையில் முதல் மேளங்களை நிச்சயம் செய்யவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. நான் இப்படிப்பட்ட விஷயங்களை மிக முக்கியமாகக் கருதுகிறேன், அதனால் நீங்களும் இந்த விஷயத்தில் கவனம் செலுத்துங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

ப: இந்த விஷயத்தை இப்படி ஆய்ந்தறிய வேண்டும் என்று எனக்கும் ஆசை தான். ஆனால் நான் இங்கே தனியாக இருக்கிறேன். எனக்கு இங்கே வித்வான்களின் உதவி இல்லை. அவர்களுக்கு இதில் துளி கூட ஆர்வம் இல்லை. இதில் அவர்களுக்குக் கொஞ்சம் கூட ஈடுபாடு இல்லை. கிரந்தங்களைப் படித்துப் புரிந்துக் கொண்டவர்கள் ஒருவர் கூட எனக்கு இது வரை தென்படவில்லை. நீங்கள் இந்த பகுதியை நேராகப் பார்க்கப் போகிறீர்கள். எனக்கு ஏற்பட்ட அனுபவம் போலவே உங்களுக்கும் ஏற்படும்.

கே: திரு நாயுடு. ஸ்வரங்களுக்கு வண்ணம் சொல்லப்பட்டிருக்கிறது, இதில் ஆழ்ந்த சாஸ்திர அடிப்படை ஏதும் இருக்கிறதா?

ப: அதெல்லாம் உளறல். நம் கவிஞர்கள் கற்பனையில் கரைகண்டவர்கள் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். இது அதற்கு ஒரு எடுத்துக்காட்டு. எந்த புத்திசாலி ஸ்வரத்தின் தேவதை,

இடம் எல்லாம் சொன்னாரோ அவரே அதற்கு வண்ணமும் சொல்லி இருப்பார் என்று எனக்குப்படுகிறது.

கே: நீங்கள் "19-ஆம் நூற்றாண்டு" , 1865, அக்டோபர் இதழைப் பார்த்திருக்கிறீர்களா? அதில் "கலர் மியூசிக்" (Colour Music) என்ற பெயரில் ஒரு கட்டுரை படிக்கத் தகுந்தது. ஐரோப்பாவில் இது குறித்து பெரிய வாத-விவாதம் நடக்கிறது என்று போட்டிருந்தது. நாம் முன்னோர்களின் சிந்தனையும் இதில் சென்றது என்று தோன்றுகிறது. சரியான உபகரணங்கள் ஏதும் இல்லாத காலத்தில் , ஏழு ஸ்வரங்களை நிச்சயித்தவர்கள், அவற்றின் இருபத்திரண்டு ஸூக்ஷ்மமான ஸ்வரங்களைக் கண்டறிந்தவர்கள் புத்தி உடையவர்களாக இருந்திருப்பார்கள் என்று இன்று எல்லாரும் ஒத்துக் கொள்கிறார்கள்

ப: நான் இதை எல்லாம் அவர்கள் புரிந்து தான் செய்திருப்பார்கள் என்று ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை.

நான்: சரி. இது மிகவும் துர்பாக்யமான நிலை என்று தான் சொல்ல வேண்டும்.

கே: உங்கள் எழுபத்திரண்டு ஜனக மற்றும் ஆயிரக்கணக்கான ஜன்ய ராகங்கள் கூட வெறும் கற்பனை தானா?

ப: ஆம். எப்படி உங்கள் ரத்னாகரத்தில் ஆறு ராகங்கள் மற்றும் முப்பது ராகினி கற்பனை செய்யப்பட்டதோ அப்படி.

கே: ரத்னாகரத்தில் இவ்வாறு சொல்லப்படவில்லை. அதில் ராகங்கள் பத்து விதம் சொல்லப்பட்டிருக்கிறது - எப்படியென்றால் கிராம ராகம், உபராகம், மூன்று பாஷா மற்றும் நான்கு அங்கங்கள்.

ப: ஓ! அப்படியா! அப்போது ராக விபோதத்தில் அப்படி சொல்லி இருக்கலாம்

கே: ராக விபோதத்திலும் அப்படி இல்லை. ராக விபோதத்திலும் உங்களதைப் போலத்தான். மேளம் மற்றும் ஜன்யம் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் பெயர், எண்ணிக்கை, ஸ்வரூபம் ஆகியவை வேறுபடுகிறது அவ்வளவே! ராகம்-ராகினி-யின் செய்தி $த_3$ர்பணத்தில் இருக்கிறது.

ப: அப்போது அங்கே தான் அதைப் பார்த்திருப்பேன்.

கே: உங்களிடம் த3ர்பணம் இருக்கிறதா? நான் அதைக்கொண்டு வந்திருக்கிறேன்.

ப: என்னிடம் புத்தகம் இல்லை

கே: நீங்கள் ராகவிபோதத்தின் முதல் அத்தியாயத்தை படித்திருக்கிறீர்கள் என்று சொன்னீர்கள். அதில் கோமள "ரிஷப தைவதங்கள்" எப்படி எழுதப்பட்டிருக்கின்றன என்று நாளை இங்கே வந்தபோது காட்டமுடியுமா? எனக்கு அவை கிடைக்கவில்லையே. அதில் பதினைந்து விக்ருதி மற்றும் ஆறு சுத்த ஸ்வரத்தின் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இருபத்திரண்டு

ஸ்ருதி காகிதத்தில் எழுதி மற்றும் சேர்த்துப் பார்த்தால் ரிஷப தைவதத்தின் கோமள ஸ்தானம் இல்லாமல் இருக்கிறது. இதன் காரணம் அல்லது ரகசியத்தை புரிந்துக் கொள்ளவேண்டும்.

ப:என்னால் அந்த ஸ்வரத்தை உங்களுக்கு சொல்ல இயலாது, அந்த கிரந்தமும் எனக்கு சரியாகப் புரியவில்லை.

கே: இன்று காலை சிங்கராச்சாரியார், கும்பகோணம் கல்லூரியில் பேராசிரியராக இருக்கும் ஸ்ரீனிவாச ராவ் இதை நன்றாக அறிந்திருக்கிறார் என்று என்னிடம் சொன்னார். உங்களுக்கு அவரைத் தெரியுமா? நீங்கள் சொன்னால் நான் அவரைப் போய் சந்தித்து விஷயத்தை தெரிந்துக் கொள்வேன்.

ப: அவர் என் நண்பர் தான். அவர் சமஸ்கிருத பாஷையில் நல்ல வித்வான். அவர் இங்கே நிறைய நாள் இருந்தார். எனக்கு அவரை நன்றாகத் தெரியும். அவர் ஆர்வத்துடன் புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தார், பிறகு புரியவில்லை என்றதும் விட்டு விட்டார். அவருக்கு சங்கீதத்துடன் எந்த சம்பந்தமும் இல்லை.

நீங்கள் அங்கே போவதற்கு அவசியமே இல்லை. சிங்கராச்சாரியாரை விட எனக்கு அவரைப் பற்றி அதிகமே தெரியும். இத்தனைப் பேச்சு வார்த்தையில் மணி ஆறாகி விட்டது. ஒரு மணி நேரம் ஆனபின் நான் எழுந்தேன்.திரு நாயுடு இங்கே இருக்கும் ஒரு பிரபலமான ஒரு அம்மாளின் (அவர் பெயர் வீணை தனம்) பாடலை நான் கேட்க வேண்டும் என்று விரும்புவதாகச் சொன்னார். பாட்டைக் கேட்பதற்கு எனக்கென்ன எதிர்ப்பு இருக்க முடியும். நான் அவரிடம் பாட்டு கேட்பதற்கு எந்த வித எதிர்ப்பும் இல்லை என்று சொன்னேன். அவர் அப்படி ஒரு நல்ல தருணத்தின் போது என்னை அழைத்துச் செல்வதாகக் கூறினார். அவர் அந்த அம்மாளிடம் இந்த விஷயத்தில் எப்படி பாட வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன் என்றார். மேலும் அவர் பல்லவி எவ்வளவு நல்ல முறையில் பாடுகிறார் என்பதைப் பார்க்க வேண்டும் என்றார். நான் அவர் பேச்சைக் கேட்டேன் , மற்றும் முதல் சந்திப்பு முடிந்தது. நாளை ஐந்து மணிக்கு இரண்டாவது சந்திப்பு நிச்சயிக்கப்பட்டது. திரு நாயுடுவிடம் உங்கள் பகுதியில் வாதி சம்வாதியின் நியமங்கள் என்ன என்று கேட்டேன். ஆனால் அவர் எங்கள் பக்கத்தில் இது போன்ற நியமங்கள் சுத்தமாகக் கிடையாது என்றார். அதன் அர்த்தம் மற்றும் உபயோகம் உண்மையில் எனக்கும் தெரியாது.

சுஶ்ரீ நாகரத்னாம்மாவின் பாட்டில் கலந்துக் கொள்ளுதல்: 26 **நவம்பர்** 1904

அடுத்த நாள் முன்னர் நிச்சயித்தவாறு சாயங்காலம் திரு நாயுடுவைச் சந்திப்பதற்குகக் கிளம்பினேன். கையோடு ஒரு பையில், ஐந்தாறு சமஸ்கிருத புத்தகங்களையும் எடுத்துக் கொண்டேன். என்ன தான், புத்தகத்திலிருந்து கிடைக்கும் அறிவின் ஆசை இப்போது குறைந்து போயிருந்தாலும், திரு நாயுடு தெரிந்துக் கொள்வதற்காக கொடுக்க வேண்டியிருந்தது. அவர் புத்திசாலி, நான் கொடுத்த செய்திகளை நிச்சயம் எப்படியாவது உபயோகிப்பார் என்று எனக்குத் தோன்றியது. துரதிஷ்டவசமாக, ட்ராம் சீக்கிரம் நிரம்பி விட்டதால் தெருவில் நிற்க வேண்டியதாயிற்று. இதன் விளைவு காஸ்மோபாலிடன் கிளப்பிற்கு ஐந்தரை மணிக்குத் தான்

சென்றடைந்தேன். அங்கே திரு நாயுடு என்னை கிளப்பின் வாசலில் சந்தித்து இன்று ஒரு கச்சேரிக்குச் செல்வதாகவும், அதனால் நாளை சந்திக்கலாம் என்றும் சொன்னார்.

சிரமம் வீணாகப் போனது, அதனால் கொஞ்சம் சலிப்பு ஏற்பட்டது. ஆனால் இந்த பணியை மேற்கொண்டு விட்டதால் எவ்வளவு அலைச்சல் இருந்தாலும் பரவாயில்லை என்று நினைத்தேன். வீட்டுக்குத் திரும்பத் தான் நினைத்திருந்தேன் அதற்குள் திரு டாகுரின் செய்திக்கேற்ப, "மதராஸ் மெயிலில்" ஒரு பாட்டுக் கச்சேரிக்கான அறிவிப்பு நினைவுக்கு வந்தது. அந்த கச்சேரி இன்று மாலை 6.30 மணிக்கு ராமஸ்வாமி தெருவில், "கானமனோஹரி அசோசியேஷன்" என்ற இடத்தில் நடக்க இருக்கிறது. ராமஸ்வாமி வீதி எனக்குத் தெரியாது. அதனால் அதன் முகவரியை திரு நாயுடுவிடம் கேட்டுத் தெரிந்துக் கொண்டு அந்த தெருவைத் தேடிக் கொண்டு போனேன். இது போன்ற பார்ட்டியில் அழைப்பின்றிச் செல்வது சரியில்லை. ஆனால் எனக்குச் சென்னையில் சில நாட்களே இருக்க முடியுமாதலால், இது போன்ற சந்தர்ப்பம் மறுபடி கிடைக்காது என்று அந்த கச்சேரி நடக்கும் இடத்துக்குச் சென்றேன். டிக்கட் கிடைக்கும் பட்சத்தில் டிக்கட் வாங்கிக்கொள்ளலாம் என்றும் திட்டமிட்டிருந்தேன். அங்கே போய் வாசலில் நின்றவுடன், ஒருவர் மேலே கையைக் காட்டி தமிழில் ஏதோ சொன்னார். நான் செருப்பைக் கழட்டிவிட்டு எங்கே மற்றவர்கள் உட்கார்ந்திருந்தார்களோ அங்கே போய் உட்கார்ந்து விட்டேன்.

யாரும் என்னை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை, எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. நிகழ்ச்சி அசோசியேஷன் அங்கத்தினர்களிடாம் சந்தா வசூலித்து நடத்தப்பட்டது என்று பிறகு தெரிந்தது. நான் என்னவோ மேலே போய் உட்கார்ந்து விட்டேன். பாடும் பெண்மணியின் பெயர் நாகரத்னா. பாட்டு நன்றாக இருந்தது. நமது பல ராகங்களின் சாயை அந்த ராகங்களில் தெரிந்தது. ஆனால் அது என்ன ராகம் என்று தெரிந்துக் கொள்ள முடியவில்லை. வெறும் ஸ்வரங்களாய்க் கேட்டன, நியமம் தெரியாததால் அதன் பெயரைச் சொல்ல முடியவில்லை. என்ன ராகம் என்று யாரையும் கேட்கவும் முடியவில்லை - ஏனென்றால் போனதே அழைப்பின்றித் தான், அப்படி இருக்கும் போது இவ்வளவு ஆர்வம் காட்டுவது நன்றாகப் படவில்லை. இவ்வாறு யோசித்து யாருக்கும் சிரமம் கொடுக்க விரும்ப வில்லை. எனக்குத் தெரிந்த ராகங்களின் சாயை இவ்வாறு இருந்தது :-

முதல் ராகம் “ஸாரங்கைப்” போல இருந்தது ஆனால் அதில் தைவதம் இருந்தது மற்றும் ரிஷபம் வரும் போது “க”வைத் தொட்டுக் கொண்டு சென்றது. ஒரு வேளை “நாயகி” அல்லது ஸ்ரீயாக இருந்திருக்கக் கூடும். இங்கே நாயகி மிகவும் பிரபலமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். சிங்கராச்சாரியாரிடத்தில் கூட அதைத் தான் கேட்டேன். இங்கே கானடாவை சங்கராபரணத்தின் தாட்டில் பாடுகிறார்கள். அந்த பாட்டில் இன்னொரு விசேஷம், என்னவென்றால், “ஸோஹனி” வழியில், “ம த நீ சா நீ த ப - ரீ” என்று தீர்க்கமான “ஸா ஸா ரீ க ரீ ஸ” இவ்வாறு சமத்காரமான ஸ்வர சமூகத்துடன் அந்தப் பெண்மணி எடுத்தது கேட்பதற்கு நன்றாக இல்லாமல் இல்லை. தீவிர ரிஷபமும், கோமள தைவதமும் அந்த ராகத்தில் இருந்தன. “ஸ ரி க ரி ஸா”, மற்றும் “ம த நீ ஸா” இந்த பிரயோகங்கள் மீண்டும் மீண்டும் எடுத்து விஸ்தாரம் செய்யப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு அதை அடுத்து,

அவரோஹணத்தில் “ரிஷபம்” கொஞ்சம் குறைந்து ஒலித்தது, ஆனால் ஆரோஹணத்தில் ரிஷபம் ஸ்பஷ்டமாக இருந்ததால் சோஹனியிலிருந்து வேறுபட்டுத் தெரிந்தது. மூன்றாவது பாட்டில் “ஜோகியா”வின் ஸ்வரூபம் தோன்றியது. இங்கே கனகாங்கி முதல் சக்ரத்தின் ராகம், அதனால் அது ஜோகியாவைப் போல இருந்தது, ஏனென்றால் அதில் இரண்டு ரிஷபங்களும் இரண்டு தைவதங்களும் (வெவ்வேறு பெயருடன்) பாடுவார்கள். அது அவருடைய பாட்டில் தெரிந்தது. இந்த உருப்படியில் ஆரோஹணத்தில் தீவிர நி , அவரோஹணத்தில் கோமள நி வந்தது. இந்த உருப்படியின் தாட் 'பைரவ்' வைப் போன்றே இருந்தது ஆனால் தைவதத்தில் அழுத்தம் இருக்கவில்லை. ஆனால் ஜோகியாவைப்போல் , மத்யமத்தை தீர்க்கமாகப் பிடித்து, ஸா-வோடு சேர்ப்பது இருந்தது. அந்த அம்மாளின் குரல் நன்றாக இருந்தது. நடுநடுவே "மாடுலேஷன்ஸ்" என்று கிரீச்சிட்டுப் பாடியதை என்னால் ரசிக்க முடியவில்லை ஆனால் அதற்குத்தான் கேட்பவர்கள் 'பலே பலே' என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். பல முறை நிகழ்ச்சியில் நடுநடுவெ, வெறும் ஆலாபனைக்கான வேண்டுகோள் அவரிடம் கொடுக்கப்பட்டது.

அவை கானடா, பைரவ், பீலு இவற்றைப்போன்று ஒலித்தன. உடன் வாசிக்கும் வயலின்காரர் இனிமையாக வாசித்துக் கொண்டிருந்தார். தபலா (ம்ருதங்கம்) எப்படி நம் பாடகிகளுக்கு வாசிப்பார்களோ அப்படி வாசித்துக் கொண்திருந்தார். பஞ்சாபீ டேகா அல்லது த்ரிதாளம் போல் மீண்டும் மீண்டும் வாசித்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு என்னவோ நம் பக்கத்தின் தபலாக்கார்கள் இது போன்ற தாளங்களில் அசத்திவிடுவார்கள் என்று தோன்றியது. மொத்தத்தில் எனக்கு நிகழ்ச்சி பிடித்திருந்தது. இந்த அம்மாள் மைசூர் மஹாராஜாவின் இடத்தில் இருந்தார் என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். மஹாராஜாவின் மறைவுக்குப் பின்னர், இங்கே வந்து சேர்ந்தார்களாம். பம்பையில் இருக்கும் சில பெண்களைப்போல், இவருக்கு அருவருக்கத்தக்கதான பாவனைகள் இருக்கவில்லை. இது அவர் பாடல் பக்திப்பரமாக இருப்பதனால் இருக்கலாம். பாட்டைக்கேட்டு விட்டு கீழே வந்தேன். அங்கே இருந்த சிலருடன் பேசியதில், 'தியாகய்யா' என்ற பெயர் கொண்ட பிரசித்தி பெற்ற பாடகர் அருகில் தான் இருப்பதாகத் தெரிந்தது. அதனால் அவர் வீட்டுக்குச் சென்றேன். அவரைப் பார்க்கவும் முடிந்தது. அவரால் அப்போது பாட முடியவில்லை. அவர் சென்னையில் சாஸ்திரத்தில் எல்லோரின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். அவர் தெலுங்கு பாஷையில் “ஸ்வரபல்லவி” என்ற பெயருடன் ஒரு புத்தகம் எழுதி இருந்தார். நான் அதை அவரிடம் விலைக்கு வாங்கிக்கொண்டேன். எனக்கு அவருடனும் சங்கீத சம்பந்தமாக விவாதிக்க வேண்டி இருந்தது. அதைச் செய்யும் நோக்கத்தோடு, அவரிடம் கேட்டேன், அவர் உடனே ஒத்துக் கொண்டார்.

திரு தியாகய்யாவுடன் உரையாடல் - 27 நவம்பர் 1904

இன்று காலை 7.30 மணிக்கு, நான் “தியாகய்யா”-வின் வீட்டுக்குச் சென்றேன். அவர் இரண்டு மைல் தொலைவில் இருந்தார், மற்றும் எளிமையானவராக இருந்தார்.அவருடைய இரண்டு

சகோதரர்கள், பட்டதாரிகள் கூட, வீட்டில் தான் இருந்தார்கள். அதனால் பேசுவதில் எந்த கஷ்டமும் இருக்கவில்லை. "தியாகய்யா"-விற்கு தமிழும் தெலுங்கும் தான் தெரிந்திருந்தது. பேச்சுவார்த்தை இவ்வாறு நடந்தது:

கே: திரு. தியாகய்யா! நீங்கள் உங்கள் சங்கீத அப்பியாசம் எந்த புத்தகத்திலிருந்து செய்தீர்கள், அதாவது எந்த புத்தகத்தின் அடிப்படையில் செய்தீர்கள்?

ப: என் கருத்து தனிப்பட்டது, மேலும் அதை நான் ஒரு புத்தக வடிவில் எழுதி இருக்கிறேன். எந்த கிரந்தத்தையோ அல்லது மதத்தையோ நான் ஏற்றுக் கொள்வதில்லை. என் புத்தகத்தைத் தான் மக்கள் ஆதாரப் பூர்வமானதாக ஒத்துக் கொள்கிறார்கள்.

கே: நீங்கள் என் கேள்வியைப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். உங்கள் புத்தகம் பிரசுரித்து பன்னிரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. நான் கேட்பது என்னவென்றால், நீங்கள் உங்கள் சிறுவயதில் இந்த விஷயத்தைப் பற்றி ஏதேனும் கிரந்தங்களைப் படித்திருக்கிறீர்களா?

ப: இங்கே ஆதாரப்பூர்வமான கிரந்தம் என்று எதுவும் இல்லை

கே: எழுபத்திரண்டு மேளகர்த்தா பத்ததியின் மூலகர்த்தா யார், அவர் அதை எப்போது செய்தார் என்பதைப் பற்றி நீங்கள் ஏதேனும் சொல்ல முடியுமா?

ப: அவை அநாதியானவை. அதை உண்டு பண்ணியவர் என்று யாரும் இல்லை

கே: (ஆஹா! என்னவென்று சொல்வது!) ஏதாவது சந்தோஷமானபோதோ அல்லது புல்லரிக்கும் போதோ அல்லது துக்கம் உண்டாகும் போதோ, இவ்வாறு பாடுவதை அநாதி என்று கொள்ளலாம். ஆனால் இந்த கணித ரீதியான சங்கீத பத்ததியை எப்படி அநாதி என்பது? எனக்கென்னமோ இந்த நியமங்களை உண்டாக்கியவர் யாராவது இருந்திருக்கக் கூடும் என்றே தோன்றுகிறது.

ப: ஆம், அப்படிப் பார்த்தால், இதை கோவிந்த தீக்ஷிதர் செய்தார் என்று சொல்லப்படுகிறது. அவர் மைசூரில் அரசவையில் இருந்தார்.

கே: அவர் காலத்திற்கு முன்பு இந்த மேளங்கள் முதலியவை இருந்திருக்கவில்லை என்று கருதுகிறீர்களா?

ப: கோவிந்த தீக்ஷிதர் - இவர் கீத கோவிந்தம் இயற்றிய ஜயதேவரின் காலத்தவர்[2]. அவர் ஜயதேவரின் சிஷ்யர், என்று தன்னுடைய ஒரு பிரபந்தத்தில் எழுதி இருக்கிறார்.

[2] [ஜயதேவர் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார் என்பது இதிகாச வழக்குகளாலும், ஸதுக்திகர்ணாம்ருதம் போன்ற தொக்குப்புக்களில் கிடைக்கும் தகவல்கள் மூலமாகவும் தெரிகிறது. [பார்பரா ஸ்டோலர் மில்லர். கோவிந்த தீக்ஷிதர் காலம் பதினாறாம் நூற்றாண்டு]

கே: இது சுமார் ஆயிரம் வருஷமாக இருந்திருக்கிறது. அந்த சமயத்தில் மைசூரில் கோவிந்த தீக்ஷிதர் இருந்திருப்பார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஜயதேவ கவியை மிகவும் பிராசீனமான காலத்தவராகக் கொள்கின்றனர்.

ப: ஆம் அவரும் அவ்வளவு பிராசீனமானவர், அங்கே தான் அவர் காலமானார். ஜயதேவரின் அஷ்டபதி என்னிடம் இருக்கின்றன.

கே: அவற்றின் மூல ராகம் மற்றும் தாளத்தில் அமைத்து உங்களால் பாட முடியுமா?

ப: இல்லை

கே: கோவிந்த தீக்ஷிதர் ஏதேனும் கிரந்தம் எழுதி இருக்கிறாரா? அவ்வாறு எழுதி இருந்தால், எனக்கு அது எங்கே கிடைக்கும்?

ப: அவர் கிரந்தம் எதுவும் எழுதவில்லை. ஆனால் "பிரபந்தம்" மற்றும் "டாயம்" இயற்றி இருக்கிறார். அதில் எட்டு பத்து பிரபந்தங்கள், அதே எண்ணிக்கையில் கீதங்கள், மற்றும் மூன்று நான்கு டாயங்கள் என்னிடம் தெலுங்கில் இருக்கின்றன, அவற்றில் ஒன்றை என் புத்தகத்திலும் கொடுத்திருக்கிறேன். பக்கம் எட்டு (அதைப் பாடிக் காட்டினார் - "போ ரகுவர" என்பதைப் போல இருந்தது)

கே: "தியாகய்யா" ஐயர்வாளை உங்களுக்குத் தெரியுமா?

ப: ஆம். அவர் இப்போது சில காலத்திற்கு முன்னர் வரை இருந்தார். என் அப்பா அவரிடம் சிஷ்யராக இருந்தார். அவர் மிகவும் நல்ல பாடகர். கோவிந்த தீக்ஷிதர் இந்த சங்கீதத்தின் கர்த்தா. அவர் தன்னுடைய உருப்படிகளை சமஸ்கிருதத்தில் இயற்றி இருக்கிறார். "தியாகய்யா" தெலுங்கு கவி, அவர் ஆயிரம் கவனங்கள் அல்லது கீர்த்தனங்கள் எழுதி இருக்கிறார். எங்கள் வீட்டில் அதில் பல, ஓலைச்சுவடிகளில் எழுதப் பட்டிருக்கிறது. அவருடைய கீர்த்தனைகள் மிகவும் ரசப்பூர்வமாக இருக்கும். அது எல்லோருக்கும் புரியும் பாஷையில் விரும்பும்படி இருப்பதால் பிரபலமாகி விட்டன. தீக்ஷிதரின் பிரபந்தங்கள் கடினமாகவும் சமஸ்கிருத பாஷையில் இருந்ததால் சாமான்யர்களுக்குப் அன்னியமாகி விட்டது. அவை பிரபலமடையவில்லை. நீங்கள் எங்கே போனாலும் அங்கே மக்கள் "தியாகய்யா"வின் கீர்த்தனைகளைப் பாடுவதைக் காண்பீர்கள். அவர் எங்கள் காலத்தில் மிகவும் பிரசித்தமாக இருந்தார். என்னிடம் கூட நிறைய கீர்த்தனைகள் உண்டு, ஆனால் அவற்றைப் பிரசுரிப்பதற்கு மிகவும் செலவாகும்.

கே: உங்கள் பக்கத்தில், அதாவது தென்னிந்தியாவில் யாராவது சமஸ்கிருத கிரந்தங்களை அத்யயனம் செய்வதுண்டா? நீங்களும் அவற்றில் ஏதாவது படித்திருக்கிறீர்களா?

ப: அவ்வாறு அத்யாயனம் செய்தவர் யாரையும் எனக்குத் தெரியாது. மேலும் எங்கள் பத்ததி கிரந்தத்தின் அடிப்படையில் இல்லை, அதனால் கிரந்தத்தின் அவசியமும் இல்லை.

கே: தியாகய்யா அவர்களே! கோவிந்த தீக்ஷிதர், ஜயதேவரின் காலத்தவராக இருந்து அவர் மேளங்களைச் செய்தது உண்மையானால், அவர் இந்த விஷயத்தைப்பற்றி நிச்சயமாக சமஸ்கிருத கிரந்தம் எழுதி இருப்பார். அவர் எழுதிய 'கவனங்கள்' சமஸ்கிருதத்தில் தான் இருக்கின்றன, என்று நீங்களே சொல்கிறீர்கள். உங்கள் வீட்டில் தெலுங்கு லிபியில் ஓலைச்சுவடிகள் கூட இருக்கின்றன என்றும் சொல்கிறீர்கள். அதில் ஏதேனும் ஒரு சுவடி கூட பாஷை சமஸ்கிருதத்திலும், லிபி தெலுங்கிலும் ஆக இருக்காதா? அந்த ஓலைச்சுவடியைக் கொஞ்சம் வெளிச்சத்தில் கொண்டு வந்து காட்டுங்களேன். அதில் ஏதாவது இருக்கிறதா என்று தேட முயற்சிக்கலாம். (உடனே அவர் சில ஓலைச்சுவடிகளை வெளியில் கொண்டு வந்தார்) அவற்றிலிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து படிக்க ஆரம்பித்தேன். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. "தஸ்ய ஜாதம் சுநாமகம்". நீங்கள் சொல்வதைப் போல இந்த ஸ்லோகத்தில் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் நான் படிக்க முயலவில்லை. இந்த புத்தகம் முற்றுப் பெறாததாகத் தோன்றுகிறது.

கே: நான் இந்தப் புத்தகத்தை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகலாமா? எனக்கு உபயோகமானால் அதைப் பார்ப்பேன், அதனை நகல் எடுத்துக் கொள்வேன், அது முடிந்ததும் புத்தகத்தைத் திருப்பித் தந்து விடுகிறேன். இது போன்ற வேறு புத்தகங்கள் கிடைக்குமா?

ப: நீங்கள் இதை எடுத்துக் கொள்ளுங்கள். வேலை முடிந்ததும் திருப்பிக் கொடுங்கள். என் மாமா இங்கே சங்கீதம் கற்றுத் தேர்ந்து, பிறகு ஹிந்துஸ்தானி சங்கீதத்தைக் காசியில் சென்று படித்தார். அவர் அங்குள்ள ராகராகினியின் ஆரோஹண அவரோஹணங்களை இந்த காபியில் எழுதி வைத்திருக்கிறார் (அதைக் காட்டி) இதுவும் உங்களுக்கு ஏதாவது உபயோகமாக இருக்குமா என்று பாருங்கள். அவர் அவ்வாறு சொல்லிவிட்டு அந்த இரண்டு புத்தகங்களையும் எனக்குக் கொடுத்தார். வேலை முடிந்தபின் திருப்பித் தருவதாக ஒப்புக்கொண்டேன். தியாகய்யா மிகவும் எளிமையாகவும் வினயமாகவும் இருந்தார். அவர் திறந்த மனத்துடன் என்னுடன் பேசினார். தெற்கில் எட்டையாபுரம் என்னும் இடத்தில் சுப்பராம தீக்ஷிதர் என்பவர் இருக்கிறார் என்றார். அவரின் புகழ் மிகவும் அதிகம். நீங்கள் அவரைப் போய் சந்தித்தால் மிகவும் லாபகரமாக இருக்கும் என்றும் சொன்னார். இதற்குப் பிறகு அவர் தன்னுடைய புத்தகத்தில் உள்ள சில ராகங்களைப் பாடிக் காட்டினார். அந்த ராகங்களை அவர் சரியாகத் தான் பாடினார். அவரது முதுமையினால் என்னால் அதில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை.

கே: உங்கள் சென்னையில் சங்கீத சாஸ்திரம் அறிந்தவர் வேறு யாராவது இருக்கிறார்களா?

ப: இல்லை. ஆங்காங்கே சிற்சில நடைமுறை சங்கீதம் அறிந்தவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதன் நியமம் பற்றி எல்லாம் ஒன்றும் தெரியாது. நீங்கள் சிங்கராச்சார்யாரையும் சந்தித்தீர்களா?

கே: ஆம். அவரிடமும் நான் பேசினேன்.

அவர்: அப்போது இந்த ஊரில் வேறு யாரும் கேட்கத் தகுந்தவர்கள் இல்லை. கதை கீர்த்தனம் செய்பவர்களைத் தவிர கொஞ்சம் பாடத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் உங்களுக்குத் தேவையானவற்றைச் சொல்பவர்கள் இந்த நகரத்தில் கிடைக்க மாட்டார்கள்.

ஸ்ரீ நாயுடுவை மீண்டும் சந்திக்க முயற்சி

சாயங்காலம் ஐந்து மணிக்கு காஸ்மோபாலிடன் கிளப்பில் ஸ்ரீ நாயுடுவை மீண்டும் சந்திக்க ஏற்பாடு செய்தேன். அவர் தம் சமஸ்கிருத புத்தகங்களைக் கொண்டு வந்தால் அதைப் பற்றிப் பேசலாம் என்றும் தீர்மானம் செய்தோம். கிளப்பில் போய் ஒன்றரை மணி நேரம் உட்கார்ந்துக் கொண்டிருந்தேன் ஆனால் நாயுடு வரவில்லை. இது மிகவும் கஷ்டமாக இருந்தது. போக வர, என்று ஒரு முழு நாள் வீணாகி விட்டது, அதனால் கஷ்டமாக இருந்தது. மனம் கஷ்டப்பட இன்னொரு காரணம், புறப்படும் அவசரத்தில் டிராமில் ஏறும் சமயம், நான் கீழே விழுந்து அடி பட்டு விட்டது. தோல் உரிந்ததில், வேஷ்டியில் சில இடங்களில் ரத்தக்கறை பட்டு அசிங்கமாக இருந்தது. ஆனால் இன்றைய தினம் வீணாகிப் போகும், மேலும் காலில் வலி அதிகமானால் நிறைய நாள் வீட்டிலேயே உட்கார்ந்துக் கொண்டிருக்க வேண்டும், அதனால் பேச்சு வார்த்தைக்கான சந்தர்ப்பமும் போய்விடும், இந்த பயத்தால் கிளப்பிற்குப் போனேன். ஸ்ரீ நாயுடு தேர்தலின் சூட்டில் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் வருகிறேன் என்று சொல்லிவிட்டு அந்த வார்த்தையைக் காப்பாற்ற அவரால் முடியவில்லை என்பது நன்றாக இருக்கவில்லை. இருக்கட்டும்.

ஸ்ரீ நாயுடுவின் சமஸ்கிருத கிரந்தங்களைப் பற்றிய அறிவு கொஞ்சம் தான் இருந்தது, மேலும் அவற்றைப் பற்றிய அவரது ஞானமும் நன்கறிந்ததாக இல்லை என்பது எனக்கு முதல் பேச்சுவார்த்தையின் போதே தெரிந்தது. இந்த காரணத்துக்காகவே, இன்றைய பேச்சை தென்னிந்திய பத்ததியைப் பற்றி மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்றும் அதுபற்றிய விஷயத்தை அறிந்துக் கொள்ளலாம் என்றும் நினைத்தேன். ஆனால் அதற்கான யோகம் இருக்கவில்லை. அவருக்கு நான் கிரந்தங்களைப் பற்றிய விவாதத்தில் அவருடைய பலவீனங்களைச் சுட்டிக்காட்டுகிறேன் என்ற எண்ணம் வந்திருக்கலாமோ என்னமோ? ஆனால் அவ்வாறு செய்யும் உத்தேசம் எனக்குக் என்றும் இருந்ததில்லை. காரணம் எதுவாக இருந்தாலும் அவர் இரண்டு நாட்களாக, இரண்டு விதமாக தன்னுடைய பேச்சை உடைத்து விட்டார் என்பதும் உண்மை. இப்போது முடிந்தால் நாளை திங்கட்கிழமை மீண்டும் ஒரு முறை சந்திக்க முயற்சி செய்கிறேன், முடியவில்லை என்றால் அவர் பின்னே செல்வதை விட்டு விடுவேன். பல முறை "தூரத்தில் அடிக்கும் டோல் நன்றாக இருக்கும்" என்ற வழக்கு நினைவுக்கு வருகிறது மற்றும் சரியாகப் படுகிறது.

தெற்கின் சங்கீத பத்ததியை அறிந்துக் கொள்ள நாயுடு தான் தேவை என்பதும் இல்லை. என் ஆசை என்னவென்றால், அவர் வித்வானாக இருந்ததால், வரலாற்றைப் பற்றி அறிந்திருப்பார், மிகைப்படுத்தல் மற்றும் வாய்வழிச் செய்திகளை அதில் சேர்க்க மாட்டார் என்பது தான். நான் நாயுடுவிற்காகக் காத்துக் கொண்டிருந்த போது, அதே சமயம் இங்கிருக்கும் ஜஸ்டிஸ் ஐயரின் புதல்வர், ஸ்ரீ நாராயணஸ்வாமி ஐயர், கிளப்பிற்கு வந்தார். அவர் பேச்சுவாக்கில் சொன்னார்,

நீங்கள் எப்படியும் ராமேஸ்வரம் போகிறீர்கள், ஆகையால், எட்டையாபுரம் சென்று தீக்ஷிதரைச் சந்தியுங்கள். தெற்கில் அவரை மிஞ்சி ஒருவரும் கிடைக்க மாட்டார்கள். அவர் அங்கிருக்கும் ராஜாவிடம் இருக்கிறார். இந்த ராஜாவுக்கும் சங்கீதத்தில் மிகுந்த ஆர்வம் உண்டு. இவர் இரண்டு மூன்று மாதத்திற்கு முன்னர், ஒரு புத்தகம் பிரசுரித்திருக்கிறார். அது என்னிடம் இருக்கிறது, உங்களுக்குப் படிக்க வேண்டும் என்றால் இரண்டு மூன்று நாட்களுக்கு இரவல் தருகிறேன். நீங்கள் திங்கட்கிழமை இங்கே வந்தால் அதைக் கொண்டு வருகிறேன். 5.30 மணி வரை நாயுடுவின் வரவை எதிர்பார்த்து விட்டு, கிளப்பை விட்டு வெளியில் வந்தேன், ஒரு ரிக்ஷாவை வைத்துக் கொண்டு வீடு திரும்பினேன், கால்களுக்கு பிளாஸ்திரி போட்டுக் கொண்டேன். ஓரியண்டல் லைப்ரரி-யில் அட்வான்ஸ் 90 ரூபாய் அனுப்பி இருந்தேன், ஆனால் அலுவலகம் நாலு மணிக்கு மூடி விடுவதால் ரூபாய் சேரவில்லை. இன்று ஞாயிற்றுக் கிழமை அந்த புத்தக சாலை திறந்திருந்தது.

தென்னிந்திய கீர்த்தனைகளைப் பற்றி சில குறிப்புகள் ஞாயிற்றுக் கிழமை, 20 **நவம்பர்** 1904 **காலை** 10 **மணி**

இன்று காலை என் நண்பர், ரெவிந்யூ டிபார்ட்மெண்டில் வேலை செய்யும் ஒருவரை என் வீட்டுக்கு அழைத்து வந்து, இவர் தியாகராஜரின் கீர்த்தனைகளை நன்றாகப் பாடுவார் என்றார். அவர் பாட்டை நான் கேட்டேன். அவர் முதலில் ரீதிகௌளை ராகத்தில் ஒரு கீர்த்தனை பாடினார். அந்த ராகம் நம் "பாகேஷ்வரி" (பீலு கலந்த) போன்று இருந்தது. கீர்த்தனை ஒரு சிறந்த பாடல் படிவமாகக் கருதப்படுகிறது. நம் பக்கத்தில் க்யால் அல்லது துருவபதம் இருப்பது போல், இதையும் கருதுகிறார்கள். இதில் பல்லவி, அனுபல்லவி, மற்றும் சரணம் (ஸ்தாயி, அந்தரா, ஆபோக்) என்று இந்த க்ரமத்தில் பிரிவுகள் வருகிறது. இந்த பிரிவுகளின் ஸ்வர அமைப்பு கூட பொதுவாக, மேலே சொன்ன நம் பிரிவுகளைப் போல இருக்கும். தியாகராஜரின் பெயர் இங்கே வீட்டுக்கு வீடு, வாய்க்கு வாய் இருக்கும். நம் பக்கத்தில் தான்சென் எப்படியோ இங்கே தியாகராஜர் அப்படி. அந்த பெரும் சங்கீதக்காரர், கோவிந்த தீக்ஷிதரை மிஞ்சிய புகழை உடையவர். ஏனென்றால் இவருக்கு பாஷை மூலம் ஒரு நல்ல லாபம் கிடைத்தது. இந்த பாடல்கள் பிராக்ருத பாஷையில் இருப்பதால் வீடு தோறும் நுழைய முடிந்தது. “தியாகராஜரின்” சில பாடல்களை சிங்கராச்சாரியா தன் புத்தகத்தில் கொடுத்திருக்கிறார். இந்த ஊரில் சங்கீத பத்ததி தெளிவாகவும் நேரிடையாகவும் இருக்கிறது. மேளகர்த்தா அல்லது ஜன்ய ராகத்தை தெரிந்து கொண்டபின், மிகச் சுலபம். அதற்காக எல்லா மேளங்களும் வெகு பரிச்சயம் என்பதில்லை. ஆனால் மேளங்களைப் பற்றிய அறிவு நிறைய இருக்கிறது. “ஓரியண்டல் மியூசிக்” படித்து விட்டு இங்கு இருக்கும் சங்கீத பத்ததியை புரிந்துக் கொண்டு இங்கே வந்தேன். அது நல்லதாகவே ஆனது. இல்லையென்றால் இந்த பத்ததியைப் புரிந்துக் கொள்ள கொஞ்ச காலம் ஆகி இருக்கும். இங்குள்ள மக்களுக்கு நான் மேளங்களின் வகைப்பாடு பற்றியும் அவற்றின் வர்க்க ராகங்களைப் பற்றியும் அவர்களின் ஒரு ராகம் கூட பாடத் தெரியாத எனால் தெளிவாக விளக்க முடிகிறது என்பதைப் பார்த்து ஆச்சரியம்

உண்டாகிறது. ஆனால் இந்தப் பெருமை சின்னஸ்வாமி முதலியாருக்குரியது. அவருடைய சிறு புத்தகம் விலை மதிப்பற்றது. அதே போல காப்டன் டேயுடைய [Captain Day) புத்தகத்தில் கூட இந்த பகுதியின் சங்கீதத்தைப் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, இங்கேயுள்ள சங்கீதத்தைப் புரிந்துக் கொள்ள ஒன்றிரண்டு பாடம் கூட கேட்கத் தேவையில்லை. நான் மும்பையில் இருந்த போது, எழுதிய "ஸ்ட்ரே தாட்ஸ்" [Stray Thoughts] என்ற கட்டுரையில், இதைப்பற்றி எழுதினேன். இந்த காரணத்தினால், இங்கே நான் நடத்தும் பேச்சு வார்த்தைகளில் அந்தப்பகுதி (அதாவது ஆரம்பப் பகுதி) இல்லை. இதனால் ஆச்சரியப்பட்ட வேண்டியதில்லை. எதைப் பற்றி புரிந்துக் கொண்டுள்ளோமோ அதைப் பற்றிப் பேசுவதிலும், பிறரது சமயத்தை வீணடிப்பதிலும் பிரயோஜனம் இல்லை.

இங்கேயுள்ள 'பாரூட்[3]' போன்ற 72 மேளகர்த்தாக்கள், அவற்றின் பெயர், மற்றும் "கடபயாதி" ஃபார்முலே[formulae], அவற்றின் "ராரிரூ" "காகிகூ" சங்கேதங்கள், மற்றும் அதன் ஆறு சக்ரங்கள், மற்றும் அவற்றின் பெயர்கள், இவையெல்லாம், "ஓரியண்டல் மியூசிக்"-இல் எவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறதோ அதுபோல இங்கே வாய்வழியே ஒருவராலும் சொல்ல முடியாது. இந்த புத்தகம் சென்ற டிசம்பர் மாதம், ஷ்யாம் ராவ் விட்டல், மதராசிலிருந்து கொண்டு வந்து தந்தார். அதை நான் கவனமாகப் படித்தேன். அந்தப் புத்தகத்தை ஷ்யாம் ராவ் விட்டல் ஃபாதர் சைதருக்குக் காட்டுவதற்காகக் கொண்டுவந்தார். அது மிகவும் நன்றாகவும் உபயோகரமாகவும் எழுதப்பட்டிருக்கிறது என்பது என் கருத்து. ஸ்ரீ முதலியார் மிகவும் புத்திசாலியான நல்ல மனிதர். அவரைப் போல இருப்பவர்கள் மிக அரிது.

ஒருவிதத்தில் தெற்கின் சங்கீதம் பத்ததியைச் சார்ந்தது என்று சொல்வதில் தவறு இல்லை. ராகம் மற்றும் அதன் ஸ்வரங்களின் கடுமையான நியமங்களுக்குள் பாடுவது, அதுவும் அவற்றின் ஆரோஹ அவரோஹ பிரஸ்தாரத்திலும் வேறுபாடு இருக்கும் வகையில் பாடுவது என்று,ஒரு பத்ததிக்குள் கட்டுப்பட்டிருப்பது என்று சொல்வது நன்றாக இருக்கும். ஆனால் அது எவ்வளவுக்கெவ்வளவு பத்ததிக்குட்பட்டதோ அவ்வளவு கலையழகுடையதா என்பதையும் பார்க்க வேண்டும். சாதாரண ஸ்வரஞானம் கூட சில சமயம், ஸாமர்த்தியமாக இருக்கும், மற்றும் அவர்களின் ஸ்வரஞானமும், ஸ்வர அமைப்பும் அழகாக இருக்கும். நம் பக்கத்தில் இந்தக் கட்டுக்கோப்பு மிகக் குறைந்த அளவில் தான் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். நம் பக்கத்தில் பல பாடகர்கள் ஸ்வரத்தைப் பொறுத்தவரை அலட்சியமாகத் தான் இருக்கின்றனர். இங்கே அப்படி இல்லை. இங்கே பெண்களின் சங்கீதத்தில் கூட, ஸ்வரத்தின் அழகான அமைப்பு கொண்ட சில பகுதிகள் (சரிகம வடிவில்) இருக்கிறது. அளந்து பார்த்தோமானால், இந்த பத்ததி புதுமையானதாக இருக்கிறது என்று தோன்றுகிறது, மற்றும் இங்கே சமஸ்கிருத கிரந்தங்களின் அறிவு பரவலாக இருக்கிறது என்று சொல்வது தவறானதாக இருக்கும். நான் இதை மற்ற இடங்களிலும் பார்க்கவில்லை என்றாலும், சர்வ ஸ்ரீ நாயுடு, சிங்கராச்சாரியா, மற்றும் தியாகய்யா எல்லோரும் அனுபவசாலிகள்., அவர்களும் இவ்வாறு சொல்வதால், குறைந்த பட்சம் சென்னையைப் பொறுத்த வரையிலாவது அந்தப் புத்தகங்களைப் புரிந்து கொண்டவர் யாரும் இல்லை.

[3] [உருவக வடிவம் கொண்ட ஒரு மராட்டி பாடல் வகை]

இன்னொரு துரதிர்ஷ்டவசமான விஷயம், இங்கேயுள்ள சங்கீதத்தின் சாஸ்திரத்தைத் தெரிந்தவர்கள், வேறு யாரும் இங்கே கிடையாது என்பது தான். நம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய இன்னொரு விஷயம், இங்குள்ள சங்கீத பத்ததியில் கிரந்தங்களில் வர்ணிக்கப்பட்ட ராகங்களின் பெயர்கள் பல, ஆனால் இந்த பத்ததியைச் செய்தவர்கள் அந்தப் பெயர்களை என் வைத்தார்கள் மற்றும் அவற்றின் ஸ்வரூபங்களை கிரந்தங்களிலிருந்து எப்படி அர்த்தம் செய்துக்கொண்டு இயற்றினார்கள் என்பதை ஆராய்ந்தால் உபயோகமாக இருக்கும். ரத்னாகரத்தின் ராகங்களின் ஸ்வரூபம் இங்கேயுள்ள சில சில ராகங்களின் ஸ்வரூபத்தோடு பொருந்துமானால், கொஞ்சத்துக்குக் கொஞ்சம் ஆராய இடம் இருக்கிறது என்று புரிந்துக் கொள்ளா வேண்டும். இது பிரயோக ரீதியான கலை என்பதையும் மறக்கக் கூடாது. "ஓரியண்டல் மியூசிக்"-இல் ராகங்களின் வர்ஜ்ய-அவர்ஜ்யம் படித்துவிட்டதால், நமக்கு அந்த ராகங்கள் வந்துவிட்டன என்று எண்ணக் கூடாது. இங்கேயுள்ளவர்கள் பாடும் போது அவற்றின் ஸ்வரத்தை எவ்வாறு உச்சரிக்கிறார்கள், இதையும் ஏதாவதொரு அளவையினால் புரிந்துக் கொள்ளவேண்டும். காதால் முதலில் கேட்டு விட்டு, பிறகு ஆரோஹண அவரோஹணத்தை எவ்வாறு படிக்கிறார்கள் மற்றும் பாடத் தொடங்குகிறார்கள், இதைப் புரிந்து கொண்ட பின் தான், புத்தகத்தில் கொடுக்கப்பட்ட வர்ணனை உபயோகப்படும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஹிந்துஸ்தானி பாடகர்களுக்கு, வெறும் வர்ணனையை மட்டும் சொன்னால் , அவர்கள் பாடுவார்கள் ஆனால் கேட்காமல் அவர்களுக்கு எப்படி இந்த தேசத்தின் "வாணி" எப்படி வரும்? "வாணியின்" தத்துவத்தை புரிந்துக்கொள்ளவேண்டும். ஸ்ரீ நாயுடுவின் சொற்படி, இந்த பத்ததி இருநூறு முன்னூறு வருடங்களாக இருக்கிறது. ரத்னாகரம் பன்னிரண்டாம் / பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இரண்டு பத்ததியும் அருகில் தான் இருக்கின்றன. அவற்றில் ராகங்களின் வர்ணனைகளைப் பற்றிய தெளிவான அளவை கிடைக்கிறது ஆனால் இந்த இரண்டு பத்ததிகளிலும் ஏதாவது ஒற்றுமை இருக்கிறதா என்ற கேள்வி எழுவது சகஜம் தான். ஏதாவது ஒரு அளவையினால் இதை நிரூபிக்க முடியுமானால், இந்த பத்ததி ரத்னாகரத்தின் பத்ததியை விட வளமானதா என்பதை அறியலாம். இப்போது ரத்னாகரத்தின் பத்ததிக்குப் பிறகும் தேட வேண்டிய அவசியம் இருக்கிறது. இவ்விதத்தில் சங்கீத வரலாற்றை ஆராய்வது மிகவும் லாபகரமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. இது மிகவும் கடினம் மற்றும் நல்ல அறிவுடன் செய்யவேண்டிய வேலை, மேலும் இதில் வித்வான்களின் உதவியும் தேவை. ஆனால் என்னென்ன செய்திகள் கிடைக்கின்றனவோ அதை எல்லாம் சேர்த்து வைக்கலாம் என்று நான் நினைக்கிறேன். நல்ல சாஸ்திரம் அறிந்தவர் எவரேனும் இங்கே கிடைத்தால், அவரை நான் பம்பாய் அழைத்துச்செல்ல முடிந்தால், இப்படிப்பட்ட ஆராய்ச்சியைத் தொடங்க முயற்சிகளாவது செய்ய முடியும் என்பது என் எண்ணம். அதற்குப் பிறகு இறைவனின் செயல்.

நாளை என் வீட்டிருக்கு "தியாகராஜரின்" கீர்த்தனைகளைப் பாடுபவர் (பேர் பெற்றவர்) ஒருவரை அழைத்திருக்கிறேன். அவர் பாடுவதில் திறமை வாய்ந்தவர் என்று சொல்கிறார்கள். அவர் எப்படிப் பாடுகிறார் என்று பார்க்க வேண்டும். பாட்டுக் கேட்பதால் மட்டுமே பற்பல ராகங்களின் ஸ்வரூபத்தை என் நினைவாற்றலின் மூலம் பாம்பாய்க்கு கொண்டு செல்ல முடியும் என்பதில்லை. ஆனால் பாடப்பட்ட ராகம் எந்த ஹிந்துஸ்தானி ராகத்தின் சாயலில் இருந்தது என்பது நினைவில் இருக்கும். இன்னொரு விஷயம் என்னவென்றால், இந்த பிரதேசத்தின்

ஸ்வர உச்சாரண விதிகளை , அதாவது "வாணி" யை நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் தம் பாடலில் எந்த வகை அலங்காரம், மற்றும் என்ன ஸ்வரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது. பாட்டு ஆரம்பமானவுடன், ஏன் அது திராவிட [சங்கீதமாகத்] தோன்றுகிறது? அந்த பிரதேசத்தில் எந்த யுக்திகளை முக்கியமாக பிரயோகிக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதைத் தெரிந்துக் கொண்ட பின், நம் பக்கத்து ராகங்களில் இவற்றைப் பிரயோகித்தால் கர்நாடகமாகத் தொனிக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும். இப்படிச் செய்தால் இங்கேயிருக்கும் "வாணி" யின் சில அம்சங்களை அங்கே அறிமுகம் செய்ய முடியும் - ஆனால் அவற்றில் எது நன்றாக இருக்கிறது, எது நன்றாக இல்லை என்பதையும் பார்க்க வேண்டும். நன்றாக இல்லாததை விட்டு விட வேண்டும் நன்றாக இருப்பதை வைத்துக் கொள்ள வேண்டும்.

பஞ்சாபாகேஷ்ட [பஞ்சாபாகேச] ஐயருடன் விவாதம் 21 நவம்பர் 1904 காலை 8 மணி

இன்று காலை "தியாகராஜரின்" பரம்பரையில் கற்ற, கீர்த்தனை பாடுபவர் ஒருவர் வந்தார். அவர் பெயர் பஞ்சாபாகேஷ்ட ஐயர். அவர் திலூஸ்தான் [தில்லைஸ்தானம்] கிராமத்தில் இருப்பவர். அவரது குரு ராமையா ஐயங்கார் ஒரு பிரசித்தி பெற்ற பாடகர். இந்த ராமய்யா, தியாகராஜரிடம் நேரில் பயின்றவர். அவர் ஆரம்பத்திலேயே தான் வெறும் நடைமுறைப்பாடகர் என்று சொன்னார். நான் சாஸ்திரம் தெரிந்தவன் அல்ல. என் பாடலை எவ்வளவு வேண்டுமானாலும் கேளுங்கள். மேளகர்த்தா ராகங்கள் எல்லாம் எனக்கு தெரியும். ஆனால் சாஸ்திரத்தில் ஆழமாகச் செல்லவில்லை. "தியாகராஜரின்" முன்னூறு நானூறு கீர்த்தனைகள் எனக்குத் தெரியும். என்னைப் போல் இவ்வளவு [கீர்த்தனைகள்] தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை என்பது என் கருத்து. என்னைப் போல் இவ்வளவு கீர்த்தனைகளைப் பாடுபவர் தெற்கில் வேறெங்கும் உங்களுக்குக் கிடைக்க மாட்டார்கள்.

அவற்றைப் பாடுவதற்காக எனக்கு பலவிடங்களிலிருந்து அழைப்பு வருகிறது. இப்போது சென்னையிலேயே கூப்பிட்டபடியால் வந்திருக்கிறேன். நாலு நாட்களில் ஊருக்குத் திரும்ப வேண்டும். பாடித்தான் என் பிழைப்பை நடத்துகிறேன். தியாகராஜர் தன் கீர்த்தனைகளைத் தெலுங்கில் பல ராகங்களில் செய்திருக்கிறார், அவற்றை மக்கள் வீடுதோறும் தெரிந்த அளவில் பாடுகின்றனர். சிலர் இரண்டு, சிலர் நான்கு என்று எல்லோரும் அவற்றைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நான் அந்த கரானாவின் பிரதிநிதி. என் பாடல் உங்கள் நினைவில் இருக்கும். இவ்வாறு சொல்லிவிட்டு அவர் பாடத் தொடங்கினார். ஐந்தோ பத்தோ கீர்த்தனைகளை ஆசை தீரக் கேட்டேன். அவை வேறு வேறு ராகங்களில் இருந்தன, நன்றாகவே பாடினார். பாட்டு முடிந்த பின் நான்கு கேள்விகள் கேட்டேன். நான் கேட்டவை பின்வருமாறு:

கே: இன்று தஞ்சையில் நன்றாகப் பாடுபவர்கள் அல்லது சாஸ்திரம் அறிந்தவர் யார் இருக்கிறார்கள்?

நான் இங்கிருந்து அங்கே போகலாம் என்று நினைக்கிறேன். அதனால் தான் இதைக் கேட்கிறேன்.

ப: நான் முதன்மையானவர் என்று யாரையும் சொல்ல மாட்டேன், நான் பாடுவதைப் போல பாட அங்கே யாரும் இல்லை. ஏன் தெற்கிலேயே இல்லை, என்று தான் சொல்லவேண்டும்.

கே: சரி பாடுபவர்களை விடுங்கள். குறைந்த பட்சம் சாஸ்திரம் அறிந்தவர்கள் யாராவது அங்கே இருக்கிறார்களா?

ப: தர்மா தீக்ஷிதர் என்று ஒரு கிருஹஸ்தர் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். அவர் சாஸ்திரம் அறிந்தவர் என்றும் சொல்கிறார்கள். அவர் எங்கே இருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் தெற்கே எங்கேயோ இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர் தொண்டை மிகவும் மோசமாக இருக்கும், ஆனால் சாஸ்திர அறிவு அவருக்கு உண்டு. ராமநாதபுரத்தில் சினுஸ்வாமி ஐயங்கார் என்று ஒருவர் இருக்கிறார். அவர் பாடகர் கூட. ஆனால் நான் அவர் பாட்டைக் கேட்டதில்லை. ஆனால் மக்கள் அவரைப் புகழ்கிறார்கள்.

கே: நீங்கள் எட்டையாபுரத்தின் சுப்பராம தீக்ஷிதரின் பெயரைக் கேட்டிருக்கிறீர்களா?

ப: இல்லை. நான் எந்த தீக்ஷிதரின் பெயரை சொன்னேனோ அவரைப்பற்றித் தான் கேள்விப்பட்டிருக்கிறேன்,

கே: தியாகய்யா பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

ப: தியாகய்யா தஞ்சாவூருக்கு அருகில் உள்ள திரிவாடி [திருவடி - திருவையாறின் இன்னொரு பெயர்] யில் அமரர் ஆனார். அவர் அங்கே தான் இருந்தார். பல அரசர்கள் பிரபுக்கள் தம்மிடத்தில் வைத்துக்கொள்ள வேண்டு அவரைக் கூப்பிட்டனுப்பினார்கள் ஆனால் அவர் எல்லாவற்றையும் நிராகரித்து விட்டார். அவர் இறைவனின் பெரிய பக்தர் மற்றும் மிகவும் சாது. அவர் வேலை குறித்த கவலை இல்லாது, வீட்டில் அமர்ந்துக் கொண்டு ராமரை வழிபட்டுக் கொண்டிருந்தார். அவர் கீர்த்தனங்கள் ராமரின் புகழ் பாடுவன. சிற்சில, வேறு தெய்வங்கள் மீதும் இருக்கின்றன ஆனால் அவரது இஷ்ட தெய்வம் ராமன். அவர் கீர்த்தனைகளில் பக்திரசம் மிகுந்து இருக்கும், அவை அழகான தெலுகு பாஷையில் அமைந்தன. இத்தனை பிரசித்தி பெற்ற பாடகர், கடந்த இரு நூறு ஆண்டுகளாக இல்லை எனலாம். அவர் இறைவனின் திருவவதாரமே. தியாகராஜரின் குரு சுண்டி [சொண்டி] வ்யங்கடைய்யா, ராமய்யா ஆவார்கள்.அவர்களும் திருவடியில் தான் இருந்தார்கள். நீங்கள் திருவடிக்குச் சென்றால் தியாகராஜரின் வீட்டைப் பார்க்கலாம். அது மிக எளிமையாக இருக்கும். இப்போது அவர் குடும்பத்தில் பாட்டுத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை. அவருக்கு குழந்தைகள் கிடையாது.

கே: நீங்கள் ஹிந்துஸ்தானி த்ருவபதம் கேட்டிருக்கிறீர்களா? உங்கள் கீர்த்தனைகள் அவற்றைப்போல் இருக்கிறது என்று கொள்ளலாமா?

ப: நான் த்ருவபதம் கேட்டிருக்கிறேன். த்ருவபதத்தின் லயம் மிகவும் விளம்பகாலமாக இருக்கும். மேலும் அவற்றில் பல வகையான வர்ணனைகளும் ரசமும் இருக்கும். கீர்த்தனைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட சரணமும் இருக்கலாம். த்ருவபதத்தில் அதிகமாக ஆபோக் காணப்படுவதில்லை. த்ருவபதம் சுருக்கமாக இருக்கும் ஆனால் கீர்த்தனை பெரியது. கீர்த்தனம் பக்தி மார்க்கத்தில் தான் இருக்கும்.

கே: உங்கள் பகுதியில் பல்லவி, அனுபல்லவி முதலியவற்றின் ஸ்வர நியமங்கள் மற்றும் ஸப்தக நியமம் எப்படி இருக்கும்?

ப: அது எனக்குத் தெரியாது. நியமம் என்று இருக்கத்தான் செய்யும். நான் பல கீர்த்தனைகளைப் பாடுகிறேன். பல்லவி, அனுபல்லவி, சரணம் வேறு வேறு ஸ்வரங்களில் பாடப்படுவதைப் பார்க்கிறேன். பல்லவியை விட அனுபல்லவி மேல் ஸ்வரங்களில் அமைத்துப் பாடுவதைக் கேட்டிருக்கிறேன்.

கே: சரணம் தோறும் "தியாகராஜ" என்ற பெயர் வருமா?

ப: ஆம் ஒவ்வொரு கீர்த்தனையிலும் அது சரணத்தில் வரும் இதற்குப் பிறகு இவர் ஒரு பேர்பெற்ற பாடகராக இருப்பதால், அவருக்கு விடை கொடுத்த பின் அவர் கிளம்பினார். இங்கேயுள்ள பல்லவி, அனுபல்லவி, சரணம் நம் பக்கத்து ஸ்தாயி அந்தரா ஆபோக், என்று சொன்னால் பரவாயில்லை. பல்லவி மத்திய ஸப்தகத்தில், அனுபல்லவி தார ஸப்தகத்தில், மற்றும் சரணத்தில் இரண்டையும் சேர்த்துப் பாடுகிறார்கள் என்று தோன்றுகிறது. இதன் நியமங்கள் எங்கேயாவது கிடைத்தபின், இதை ஆராய வேண்டும். சின்னஸ்வாமி முதலியாருடைய "ஓரியண்டல் மியூசிக்" என்ற புத்தகத்தை நான் வாங்க வேண்டும். அதனால் புதுப்பெட்டியாவில் [Pudupet] அவர் வீட்டைத் தெரிந்துக்கொள்ளும் நோக்கத்துடன் ரொம்ப நேரமாக சுற்றிக் கொண்டிருந்தேன். ஆனால் வீடு கிடைக்கவில்லை மற்றும் மாலை நேரம் ஆகிவிட்டதால் திரும்ப வந்து விட்டேன்.

மீண்டும் நாராயண ஸ்வாமி மற்றும் நாயுடு

திரும்புவதற்கு முன் ஓரியண்டல் லைப்ரரிக்குப் போய், நகல் எடுக்கும் வேலை தொடங்கப்பட்டதா இல்லையா என்று பார்க்கப் போனேன். அது தொடங்கப்பட்டு விட்டது என்று தெரிந்துக் கொண்டேன். மூன்று வாரங்களுக்குப் பின் அவை கிடைக்கும் என்பதையும் தெரிந்துக் கொண்டேன். அங்கிருந்து காஸ்மோபாலிடன் கிளப்பில் தீக்ஷிதரின் புத்தகத்தை நாராயணஸ்வாமியிடம் பெற்றுக்கொள்ளச் சென்றேன். நாயுடுவை சந்திக்க முடிந்தால், தென்னிந்திய சங்கீதத்தைப் பற்றி அவரிடம் பேசலாம் என்பது என் இரண்டாவது நோக்கம்.

எதிர்காலத்தில் அது உபயோகப்படும். சமஸ்கிருத கிரந்தங்களின் பேச்சோ முடிந்துவிட்டது. அதனால், தென்னிந்தியாவில் வித்வான்கள் யாரெல்லாம் இருக்கின்றனர் என்று தெரிந்துக் கொள்ளலாம். ஸ்ரீ அய்யர் வரவில்லை அதனால் புத்தகம் கிடைக்கவில்லை. தெய்வாதீனமாக ஸ்ரீ நாயுடு வந்திருந்தார். அவர் சரியாக ஐந்து மணிக்கு வந்தார். அவர் வந்தவுடனேயே மனிப்பு முதலியன கேட்டுக் கொண்டு, "ஹிந்து அலுவலகம்" செல்ல வேண்டி இருந்ததால் சொன்ன நேரத்துக்கு வர முடியாமல் போனது என்றார். இதற்குப் பிறகு மேலே சென்று நாற்காலிகளை வராண்டாவில் வைத்துக்கொண்டு தனிமையில் பேசலாம் என்ற உத்தேசத்துடன் உட்கார்ந்தோம். ஒரு மணி நேரம் வரை எங்கள் உரையாடல் இவ்வாறு நிகழ்ந்தது : -

கே: ஸ்ரீ நாயுடு, நான் நேரிடையாகப் பேசுபவன், மற்றும் சங்கீத சாஸ்திரத்தில் ஈடுபாடுள்ள மாணவன், அதனால் தான் திறந்த மனத்துடன் உங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். ஒருவர் எவ்வளவு பெரிய வித்வானாக இருப்பினும், அவர் தன்னம்பிக்கையுடன் வித்தையில் சிறிது தான் முன்னேற முடியும். எனக்குப் புரியாத சில விஷயங்களைப் புரிந்து கொள்வதற்காக உங்களிடம் வந்தேன். எனக்கு என்ன தெரிகிறதோ அதை உங்களுக்குக் கபடமின்றி உங்களுடன் பகிர்ந்துக் கொள்வேன். அது உங்களுக்கு உபயோகமாக இருந்தால், அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.

ப: இது கேட்டு நான் சமாதானம் அடைந்தேன். நாம் ஒருவருக்கொருவர் உபயோகமாக இருந்தால் அதனால் மிகவும் லாபகரமாகும் என்று நான் நினைக்கிறேன்.

நான்: சமஸ்கிருத கிரந்தங்களின் சங்கீதத்தைப் புரிந்துக்கொள்ள என் பேராவல் திடமாக இருக்கிறது என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அன்று நீங்கள் சொன்னதைப் பார்த்தால் உங்களுக்கு அந்த கிரந்தங்களைப் படித்துச் சொல்லித்தர யாரும் கிடைக்கவில்லை என்று தோன்றுகிறது. நீங்கள் அந்த கிரந்தங்களைச் சிறிது கூட மதிக்கவில்லை என்பதும் அதனால் தான் என்று எனக்குத் தோன்றியது. ஸ்ருதி, மூர்ச்சனையைப் பற்றி உங்களிடம் கேட்டது எதற்கு என்றால் நீங்கள் கிரந்தங்களில் தரப்பட்டுள்ள ஸப்தகத்தை (ஸ்கேல்) புரிந்துக் கொண்டீர்களா என்று தெரிந்துக் கொள்ளவே. நீங்கள் அந்த விஷயத்தைப் புரிந்துக் கொள்ளவில்லை என்று எனக்குத் தோன்றியது, அதனால் உங்களுக்கே அது தெரியவில்லை என்றால் தெற்கின் மற்ற கற்றறிந்தவர்கள் அவற்றைப் புரிந்துக்கொண்டிருப்பது சாத்தியம் இல்லை. இதனால் எனக்குக் கொஞ்சம் அலுப்பு ஏற்பட்டது. இருக்கட்டும். நீங்கள் வித்வானாக இருப்பதால், அதனால் கிரந்தங்களைப்பற்றி என்னிடமிருந்து தெரிந்துக் கொண்டால் என்னை விட அதிகம் நீங்கள் அதை ஆராய்ச்சி செய்ய முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அதை நீங்கள் கேட்காமல் உங்கள் மேல் திணித்தால் அது ஒரு வகை டம்பமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டு நான் சும்மா இருந்து விட்டேன். நீங்களும் கிரந்தங்களைப் பற்றியும் இன்றைய சங்கீதம் எவ்வாறு உருவானது என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும் என்பது என் தீவிர ஆசை.

ப: நீங்கள் எனக்கு அந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லித் தந்தால், நான் உங்களுக்குக் கடமைப்பட்டவனாவேன். கிரந்தங்களின் பெருமையை நான் அறியவில்லை என்பது எனக்கு

அவற்றின் சாஸ்திரத்தைச் சொல்லித்தர யாரும் கிடைக்கவில்லை என்பதும் உண்மை. உங்களிடமிருந்து தெரிந்துக்கொண்டு நான் இந்த விஷயத்தைப் பற்றி மீண்டும் சிந்திக்கிறேன், மற்றும் நடைமுறையில் என் எண்ணங்களைப் பகிர்ந்துக் கொள்வேன். இதற்கு ஒருங்கிணைதல் அவசியம். என் கருத்து என்னவென்றால் மூலகிரந்தங்களின் ஸப்தகம் சங்கராபரணம். ஆனால் எங்கள் பக்கத்தில் மக்கள் முதல்முதலில் சங்கீதம் கற்றுக்கொள்ள "மாயாமாளவத்தை" தேர்ந்தெடுத்துள்ளார்கள்,

நான்: இது தான் தவறு. மூல சமஸ்கிருத கிரந்தங்களின் ஸப்தகம் "கரஹரப்பிரியா" ஆகும். (செமிடோன்ஸ்ஜப் பாருங்கள்) அதாவது 4, 3, 2, 4, 4, 3, 2 இந்த ஸ்ருதி அளவில் இருக்கிறது. (எல்லாவற்றையும் காகிதத்தில் எழுதி நன்றாக தெளிவாகப் புரிய வைத்தேன்)

ப: அட ஆமாம்! மிகச் சரி, எனக்கு இதெல்லாம் தெரியாமல் இருந்தது. இது புரிந்துக் கொள்ள மிகச் சுலபமாக இருக்கிறது. இது சங்காராபரணம் ஆக முடியாது. ஆனால் இதற்கு மூர்ச்சனையோடு என்ன சம்பந்தம்?

இதற்குப் பிறகு மூர்ச்சனை பற்றி விளக்கினேன். "ஐரோப்பாவின் மோட்ஸ்" -ஓடு அதன் ஒற்றுமையைக் காட்டினேன். பண்டைய காலத்தில் கிழக்கிலும் மேற்கிலும் மூர்ச்சனை ஒரே போல உபயோகிக்கப்பட்டது, என்பதை நன்றாக விளக்கினேன். ஸ்ரீ நாயுடு இவை எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்துக் கொண்டார். அவர் மேலும் "பாதகண்டே அவர்களே!" உங்கள் மூலமாக தெரிந்துக் கொண்ட விஷயங்கள் எனக்கு மிகவும் பிடித்தவை. எனக்கு இது போன்ற விஷயங்கள் கிரந்தங்களில் இருக்கும் என்பது தெரியாது. நீங்கள் இந்த அறிவின் மூலம் என் சிந்தனையில் ஒரு புதிய கண்ணோட்டத்தைக் கொடுத்து விட்டீர்கள் என்பதை நான் திறந்த மனத்துடன் சொல்கிறேன்.

இப்போது என்னிடமுள்ள புத்தகங்களை இந்த கண்ணோட்டத்துடன் படிப்பேன் மற்றும் என் முன்னேற்றத்தைப் பற்றி உங்களுக்கு எழுதுவேன். எப்படியும் உங்களுடன் கடிதப் போக்குவரத்து இருக்கத் தான் செய்கிறது. நீங்கள் ரத்னாகரத்தின் முக்கியப் பகுதிகளின் விளக்கத்தை அவ்வப்போது எழுதினால் பேருதவியாக இருக்கும். நாம் இருவரும் இது குறித்து சிந்திக்கலாம், மேலும் என்ன கண்டுபிடித்தோமோ அதை பிரசுரித்து மக்களுக்குத் தெரியப்படுத்தலாம். என் மனத்தில் சங்கீதம் பற்றிய “சப்த கோசம்” தயாரிக்கலாம் என்ற ஆசை இருக்கிறது. அது சங்கீதம் பயிலும் மாணவர்களுக்குப் பேருதவியாக இருக்கும். அப்படிபட்ட சப்தகோசத்தை தயாரிப்பதில் நீங்கள் எனக்கு உதவி செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் (நான் செய்கிறேன் என்று சொன்னேன்). பம்பாயின் வில்ஸன் காலேஜின் ஃபிரஞ்சு பேராசிரியருடன் எனக்குக் கடிதப் போக்குவரத்து உண்டு. அவர் என்னிடம் சங்கீத சம்பந்தமாக கேட்டுக் கொண்டிருப்பார். நான் அவரிடம் உங்களுடன் நடந்த உரையாடலைப் பற்றிச் கொள்கிறேன். ஏன் என்றால் நீங்கள் மும்பையிலேயே இருப்பவர், மற்றும் இந்த விஷயத்தைப் பற்றி என்னை விட அதிகம் சிந்தித்தவர் அதனால் அவருக்கு உங்களிடமிருந்து அதிக தகவல் கிடைக்கும். (நான் ஆகட்டும் என்றேன்) அவரிடமிருந்து என்ன எடுத்துக் கொள்ள வேண்டும் நீங்கள் அதை எடுத்துக் கொள்ளலாம் (நான் மிக நல்லது என்றேன்)

கே: ஸ்ரீ நாயுடு! நான் உங்கள் "திராவிட சங்கீத" பத்ததியின் சமஸ்கிருத ஸ்லோகங்கள் அடங்கிய புத்தகம் ஏதும் கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருக்கிறேன், கிடைத்தால் சொல்லுங்கள். ஏனென்றால், ரத்னாகரம் முதலிய கிரந்தங்களின் சங்கீதத்தோடு அந்த ஸ்லோகங்களால் ன் ஏதாவது பிரமாணமோ அல்லது தொடர்போ இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். நிச்சயம் அப்படி இருக்கும் என்று நான் சொல்லவில்லை. அது தெளிவு. ஆனால் என் கருத்து என்னவென்றால், இவ்வாறு நன்றாக ஒன்றைச் செய்த எழுத்தாளர், தனக்கு முன்னர் இருந்த சங்கீதத்தோடு ஏதாவது ஒரு தொடர்பையாவது ஸ்தாபித்திருப்பார். அவர் மனத்தில் தான் இவ்வாறு செய்யாதிருந்தால், மக்கள் தன்னால் செய்யப்பட்டதை நன்றாகப் புரிந்துக் கொள்ளமாட்டார்கள் என்ற எண்ணம் நிச்சயம் தோன்றியிருக்கும்.

ப: எட்டையாபுரத்தின் சுப்பராம தீக்ஷிதர் இப்படிப்பட்ட ஸ்லோகங்களைத் தன் புத்தகத்தில் கொடுத்திருக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது. அந்த புத்தகம் இப்போது பிரபலமாக இருக்கிறது மற்றும் அதன் விலை ஐந்து ரூபாய். உங்களுக்கு வேண்டுமென்றால் அதன் நகல் எடுத்து அனுப்புகிறேன்.

நான்: மிகவும் நல்லது. நான் தேடும் இன்னொரு புத்தகம், சின்னஸ்வாமி முதலியாரின் "ஓரியண்டல் மியூஸிக்". அதன் விலையும் ஐந்து ரூபாய் என்று கேள்விப்பட்டேன்.

ஸ்ரீ நாயுடு: : என்னிடம் ஒரே பிரதி தான் இருக்கிறது. ஆனால் உங்கள் பம்பாயில் ஒரு வக்கீல் ஸ்ரீ ஷ்யாம ராவ் விட்டல் என் நண்பர் ஸ்ரீ நாராயண ராவின் மூலம் சில தினங்களுக்கு இரவல் வாங்கி இருக்கிறார். இப்போது அந்தப் புத்தகம் என்னிடம் இல்லை.

நான்: ஸ்ரீ ஷ்யாமராவ், அந்தப் புத்தகத்தை உங்களிடம் நான் சொன்னேனே, அந்த ஃபாதர் சீதர், அவரிடம் கொடுப்பதற்காக வாங்கிக் கொண்டிருக்கிறார். அவர் முதலில் என்னிடம் வந்தார், அப்போது அதில் சில பாகங்களைப் படித்தேன். எனக்கு அது பிடித்தது, மற்றும் இப்படிப்பட்ட புத்தகம் என் சேர்க்கையில் இருக்கவேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டது.

ஸ்ரீ நாயுடு: நான் உங்களுக்கு வாங்கி அனுப்பிக்கிறேன். ஸ்ரீ முதலியார் நல்ல வித்வான். மேலும் அவர் அதை நன்றாக எழுதினார். அவர் புத்தகத்திற்குச் சேர வேண்டிய புகழ் சேரவில்லை. அவருக்கு யாரும் உதவ வில்லை. அவருடைய புத்தகத்தை வாங்க ஆளில்லை. பிறகு அவரது பணம் எல்லாம் தீர்ந்தபின், அவர் தன்னுடைய, ஏழ்மையின் காரணமாக, எட்டையாபுரத்திற்குச் சென்று ஏழ்மை நிலையில் இருந்தார். பிறகு அவர் மறைந்தும் போனார். அவர் புத்தகங்களை எடைக்கு வாங்கி, கடைக்காரர்கள் பொட்டலம் கட்ட எடுத்துக் கொண்டு போனார்கள் என்று சொல்கிறார்கள். எந்த வியாபாரி அதை வாங்கிப்போனார் என்று தெரிந்துக் கொண்டு நான் ஒரு பிரதியை வாங்கி அனுப்புகிறேன்.

தெளிந்த சிந்தனை:

இங்கே இரண்டு விதமான இசையை நான் கேட்டேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, எனக்கு அதன் மீது ஆழ்ந்த தாக்கம் ஏற்படவில்லை என்று தான் சொல்லவேண்டும். எனக்கு ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் கிடைக்கும் ஆனந்தம் இந்த இசையில் கிடைக்கவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம், ஆனால் என் அனுபவத்தை அளவையாக வைத்து எழுதுகிறேன். நான் இது வரை கொஞ்சம் தான் கேட்டிருக்கிறேன் என்பதும் உண்மை. எனக்கு நல்ல விஷயம் தெரிந்தவர்கள் கிடைத்திருக்காமலும் இருக்கலாம். எனக்கு இங்கே இருக்கும் பாஷை தெரியாததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இங்கேயுள்ள சங்கீதத்தைப் பற்றி ஒன்றிரண்டு விஷயங்கள் தெரிகின்றன - அவை என்னவென்றால்,ஒவ்வொரு பாடகரும் லயத்தின் மாத்திரைக் கணக்கிற்கேற்ப விரல்களை எண்ணிக்கொண்டே "ஸ்வரம்" படுகிறார்கள். இந்த "ஸ்வரங்களைப்" [தான்] பாடுகையில் சின்னச்சின்ன லய விஷயங்களுக்கு அனாவசியமான முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு தானிலும் சிறு சிறு மாற்றங்களைச் செய்து, கமகங்கள் முதலியவற்றைப் பாடி ஏதோ பெரிய சாதனை செய்வது போல ஆடம்பரம் காட்டுகிறார்கள் ஆதி தாளத்தின் லயத்தின் ஸ்வரத்தை எடுத்துக் கொண்டால், "யயயய" என்று இவ்வாறு சப்தங்களால் தாளத்தை நிரப்பிப் பாடுகிறார்கள். நம் பக்கத்தில் எப்படிப் பாடகர்கள் திறந்த குரலுடன் அனாயாசமாக ஆயிரம் ஸ்வரங்களைப் பாடுகிறார்களோ அதைப் போல் பாடுபவர் யாரையும் நான் இங்கே பார்க்கவில்லை. இங்கே பாடப்படும் ஸ்வரூபம் எனக்கு தொடக்கத்தில் மாணவர்களுக்கான எளிமையான பாட்டைப் போலத் தோன்றுகிறது. மேலும் இங்கே மீண்டின் [கமகம்] அளவு மிகக் குறைவு. தந்தி வாத்தியக்காரர் (சிங்கராச்சாரியா) அதை உபயோகித்தாலும், நம் பக்கத்தில் மீண்டை எடுக்கும் போது இருக்கும் அழகு இங்கே தெரிவதில்லை. இருக்கட்டும். இப்போது இன்னும் கொஞ்ச நாள் இருக்க வேண்டும் அதனால் திறந்த மனத்தோடு இருக்க வேண்டியதே நியாயமானது.

தென்னிந்தியாவின் சங்கீதம் அதிக பத்ததியைச் சார்ந்ததாக எவ்வாறு இருக்கிறது என்ற கேள்வியை மனத்தில் கொண்டு சிந்திப்பேன். இதற்கு 72 மேளகர்த்தாக்கள் முக்கியமாகக் கருதப் படுகிறது அவற்றின் விவகாரம், பெயர் இதையெல்லாம் நான் வேறிடத்தில் எழுதி வைத்திருக்கிறேன். நாயுடுவின் "கான வித்யா சஞ்சீவனி" யில் , கேப்டன் டே [Captain Day]-யின் பேர் பெற்ற புத்தகத்தில், சிங்கராச்சாரியாவின் வரிசைப்படுத்தப்பட்ட புத்தகங்களில், மற்றும், "காயக லோசனம்" என்ற புத்தகத்திலும் "ஜன்ய ராகம்" எவை என்று எழுதியிருப்பது தெரியவருகிறது. இங்கே பாடுபவர்களின் கவனம் எப்போதும் ஆரோஹண-அவரோஹணத்தில் தான் இருக்கிறது. எங்கேயாவது பாட்டு ஆரம்பித்தால் போதும், எந்த மேளம், என்று கேட்கத் தொடங்கிவிடுகிறார்கள், மற்றும் ஆரோஹண-அவரோஹணத்தை நெட்டுரு செய்து பாடுகின்றனர். ஆரோஹண-

அவரோஹணம் என்னும் யந்திரத்தனமான அமைப்பை (நான் கலையுணர்ச்சியற்றதாக அதைக் கருதுகிறேன்) செய்து வைத்ததால், ஒரு ராகம் இன்னொரு ராகத்தைச் சார்ந்தே இருக்க வேண்டும். எங்கேயாவது ஒரு அரை ஸ்வரம் மாறினால் மாறுதல் ஏற்பட்டுவிடும். இவ்வாறு ஆரோஹணம் அவரோஹணம் எழுதி வைத்திருக்கிறார்கள். சாஸ்திர ரீதியாகப் பாடுபவர்கள் அவற்றிலிருந்து சிறிது கூட வழுவுவதில்லை. இதை வைத்துக் கொண்டு (மதராசி வழியில் ஒரு ஆட்டம் மட்டும் ஒட்டத்துடன் கமகங்களின் எண்ணிக்கைப்படி) பாடும் போது, ராகத்தை காட்டியதாக ஒத்துக் கொள்கின்றனர். (ஆட்டம் / ஓட்டம் என்ற பிரயோகங்கள் வெறும் புதுமைக்காகச் சொன்னேன்) இங்கே தாளத்துடன் சேர்த்து மாத்திரைகளை விரல்களில் பிடித்துப் பாடுகின்றனர், அதனால் ஒரு வகையான ஆட்டம் தானாக வந்து விடுகிறது. நம் பகுதியிலிருக்கும் மக்களுக்கு இவ்விதமாகப் பாடுவது பிடிப்பதில்லை. நான் ஹிந்துஸ்தானி சங்கீதத்திற்கு மட்டுமே பக்தன் என்றும் சொல்வதற்கில்லை. ஆரோஹண - அவரோஹணத்தைத் தெளிவாகக் கொடுப்பதினால், ராகம் தவறாகப் போகும் பயம் போய் விடுகிறது.அதில் பிறகு இங்கேயுள்ள கமகத்தைப் பிரயோகிப்பது மட்டுமே மிஞ்சுகிறது.

ஸ்ரீ நாயுடு கூட வாதி-சம்வாதி எங்கள் பக்கத்தில் இல்லை என்றார். இதனால் ஒரு பெரிய பிரச்சனை தீர்ந்து விடுகிறது. இதனால் என்ன ஆகிறது என்றால் ஒவ்வொருவரும் தத்தம் அறிவுக்கேற்ப பிரயோகங்களை ரஞ்சகத்தோடு செய்கின்றனர். வாதி சம்வாதி நியமங்களைச் செய்யவில்லை, மேலும் அவ்வாறு சாஸ்திர ரீதியாக நியமங்கள் இருக்கிறதா இல்லையா என்றும் சொல்வதில்லை. ஆனால் இங்கே எல்லோருடைய பாட்டிலும் வெவ்வேறு இடத்தில் "பாசெஸ்" [pauses] (விஸ்ராந்தி) -யும் தெரிகிறது. எல்லா பாடகர்களும் ஏதோவொரு பிரமாணத்தின் மூலம், உரிய ராகங்களை உரிய ஸ்தானங்களில் குறைத்தோ கூட்டியோ நிறுத்துவதையும் பார்க்கிறோம். பிறகு இவற்றைக் கொண்டு நியமங்களை ஏன் செய்யவில்லை என்று புரியவில்லை. ராகங்களுக்கு சமஸ்கிருத கிரந்தங்களில் ஆதாரம் கிடைத்தால், இந்த விஷயத்தில் ஏதாவது செய்ய முடியும். குறிப்பிட்ட ராகங்கள் குறிப்பிட்ட ஸ்வரங்களின் அழகை உண்டு செய்கிறது என்ற ஹிந்துஸ்தானி கற்பனை மிகவும் கலையுணர்ச்சியோடு இருப்பதாக எனக்குப் படுகிறது.

அப்போது இப்படிப்பட்ட கற்பனை இங்கே ஏன் இல்லை என்று தான் புரியவில்லை. இங்கே ஒவ்வொரு பாடகரும் ஸ்வரஞானத்தைக் காட்டுவதில் ஈடுபடுகின்றனர். இவ்விதமாகப் பார்த்தால் தெற்கத்திய சங்கீதம் அதிகம் பத்ததியைச் சார்ந்ததாக இருக்கிறது என்று சொல்ல வேண்டும். ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது - இங்கே சிறிதளவே வித்தியாசம் இருக்கும் பல ராகங்கள் ரஞ்சகமாக இருக்கும் சாத்தியம் இல்லை. வெறும் பெர்ம்யுடேஷன்ஸ் [permutations] இன் ஆதாரத்தின் படி, ராகத்தை உண்டாக்கினால், மனத்தைப்போன்ற யந்திரத்தை சந்தோஷப்படுத்தும் ராகங்களே தோன்றும், மற்றவை எல்லாம் "கணித சங்கீத ராக ஸங்க்ரஹம்" ஆகக் கிடக்கும். நான் திரு. நாயுடுவிடம் உங்கள் பகுதியில் இருக்கும் ஆயிரக்கணக்கான ஜன்ய ராகங்கள் எல்லோரும் பிடித்தவையாக இருக்கின்றனவா என்று கேட்டேன். அவர் சிரித்தவாறு சொன்னார், "சீ, அப்படி இருப்பது சாத்தியமே இல்லை. அவற்றில் சுமார் 50/ 74 மட்டுமே லோகப்பிரியமாகி உள்ளன. மற்றவை எலாம் புத்தகத்தில் மட்டுமே

இருக்கும் ராகம் என்று தான் சொல்லவேண்டும். இது என்ன புரிந்துக் கொள்ள கஷ்டமான விஷயமா? எங்கெல்லாம் ஸ்வரங்களின் பெரிய இடைவெளி உண்டாகின்றனவோ அங்கே இயற்கையாக, அவை வெவ்வேறாகத் தெரிகின்றன, மற்றும் நன்றாகவும் இருக்கின்றன என்பது இயற்கை. மேலும் அவை மனத்தில் சீக்கிரம் இடம் பிடிக்கின்றன. வாதி-சம்வாதியின் பலத்தில் ராகம் மாறுவது மிகவும் அறிவுப்பூர்வமாக மற்றும் கலையுணர்ச்சியோடு ருசிகரமாகவும் இருக்கின்றது. தெற்கில் தாளம் ராகத்தின் இனிமையைக் குறைத்து விடுகிறது. பாடுபவர்கள் அவசியத்திற்கும் மேலாகத் தாளத்திற்கு அதிக முக்கியத்துவம் தருகின்றனர் என்றும் சொல்லலாம். தாளம் இல்லாமல் பாடுங்கள் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் எல்லாப் பாடலும், மாத்திரையின் அடிப்படையில், எவ்வளவு மாத்திரை இருக்கிறது அவ்வளவு "யயயய" ஆட்டத்துடன் பாடுவது அழகற்றது என்று நான் சொல்வேன். தாளத்தில் இரண்டு ஆவர்த்தனத்தில் எவ்வளவு மாத்திரைகள் இருக்குமோ அவ்வளவு "யயயய" நீங்கள் சொல்லத் தொடங்கி, மேலும் அங்கே ஒரு ஆட்டம் கொடுத்து இரண்டாவது ஆவர்த்தனத்திற்காகக் காத்துக் கொண்டிருந்து, அது வந்தவுடனே பூனைப்போல் அதன் மேல் பாய்ந்தால் அதை நான் முதல் தரமான சங்கீதம் என்று சொல்ல மாட்டேன். ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் (உழைப்பை விட்டுவிட்டால்) மீண்ட், கமகம், தான், நல்ல கதி ஆகியவையுடன் பாடுகின்றனர், மேலும் அதில் ஸ்தானத்திற்கு ஸ்தானம் கலையுணர்ச்சியைக் காட்டுகின்றனர். ஆனால் அங்கேயுள்ள பாடகர்கள் நியமங்களை லட்சியம் செய்வதில்லை. நீங்கள் நல்லாவிதமாகப் பாடினாலும், ஸ்வர நியமத்திற்குக் கட்டுப்படத்தான் வேண்டும். இல்லையென்றால் ஒரு நல்ல முறையான சங்கீதம் பாவமுள்ள சங்கீதமாக எப்படி ஆகும்? அதை எழுதி வைப்பது எப்படி? நான் புரிந்துக்கொண்ட இந்தக் கருத்தைக் கேட்டு சந்தோஷப்படக்கூடியவர்கள் யாரும் இல்லை, மேலும் எந்த தீய எண்ணமும் எனக்கு இல்லை. ஆனால் என்ன தெரிகிறதோ அதைச் சொல்லத் தான் வேண்டும். அவர்கள் தம் பாட்டு மக்களுக்கு மிகவும் பிடிக்கிறது, மற்றும் அவர்கள் மனத்தைக் கொள்ளை கொள்கிறது எனவும் சொல்லலாம். செய்தால் செய்துவிட்டுப் போகட்டும், அதனால் மட்டுமே அந்த சங்கீதம் உயர்ந்ததாகி விடாது.

இவ்வாறான மாற்றம் எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் இங்கேயிருக்கும் முறையும் நியமமும் எனக்குப் பிடித்திருக்கின்றன. அவை நல்ல விதமான மாற்றங்களுடன் இங்கேயுள்ள சங்கீததுடன் சேரவேண்டும் என்பது என் கருத்து. ஸ்ரீ நாயுடு , இங்கே ஹிந்துஸ்தானி சங்கீதம் வெகு பலமாக நுழைந்துக் கொண்டிருக்கிறது, என்றும், பாடகர்கள் தான், கமகம் முதலியவற்றைக் கையாளும் விதிகளை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார். மேலும் அவர்கள் ஆரோஹண அவரோஹண விஷயத்தில் கொஞ்சம் சுதந்திரம் எடுத்துக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். பாடும் பெண்களுக்கோ கொஞ்சம் ஹிந்துஸ்தானி சங்கீதம் வந்து தான் ஆகவேண்டும் மற்றும் கர்நாடக உருப்படிகளில் சந்தோஷத்திற்காக அந்தப் பக்கத்து 'தான்'-களை உபயோகித்தே ஆகவேண்டும்." எனக்கென்னமோ இங்கேயுள்ள சங்கீதம் முன்னேற்றத்துக்கான சீரிய பாதையில் புறப்படுகிறது என்று தோன்றுகிறது. இதனால் ஹிந்துஸ்தானி சங்கீதம் முதல் தரமாக இருக்க வேண்டும். நம் மஹாராஷ்டிரத்தில் படிக்காத பாமர மக்கள் வயலில் லாவணி பாடுகிறார்கள்,

சிந்த் பிரதேசத்தில் கா ்பி, குஜராத்தில் மாண்ட் போன்ற ராகங்கள் அல்லது பாடல்கள், இவையெல்லாம் இப்போது கர்நாடக வடிவத்தில் கேட்கக் கிடைக்கின்றன. இதனால் என்ன தெரிகிறதென்றால், இது முதல் படி. இதற்கு அடுத்ததாக, சங்கீதக்கலையை பாடுபவர்களுடையது. இவ்வாறு இவை நல்லமுறையில் கிளம்பியதால், [அதன் தாக்கம்] இங்கேயும் பலமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. இங்கேயுள்ள நியமமும் அங்கேயுள்ள கலையுணர்வும் சேர்ந்தால் (ரசாயனச் சேர்க்கை) என் மனத்திற்குப் பிடித்தமான விஷயம் நடந்து விட்டது என்று நினைத்துக் கொள்வேன். அது அழகாகவும் இருக்கும். ஸ்ரீ நாயுடுவின் கருத்து என்னவென்றால், இங்கேயுள்ள பத்ததி இப்போது சலிப்பேற்படுத்துகிறது, மற்றும் மக்களுக்கு அதன் சிக்கல்கள் தெரிகின்றன, அதனால் அவர்கள் கலையுணர்ச்சியின் பின் செல்கின்றனர். இவ்வகையான சீர்திருத்தம் நல்லது. நான் அவரிடம் என்ன சொன்னேன் என்றால், இது மாற்றத்தின் காலம், அதனால் இதனைப் பயன்படுத்தி, உங்கள் நல்ல எழுத்துக்கள் மூலமாக இங்கேயுள்ள சங்கீதத்தின் பத்ததியோடு ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் நன்மைகளைச் சேர்த்துக் கொள்ளச் சொல்ல வேண்டும். அது இப்போது பிடிக்கிறதோ இல்லையோ எப்போதாவது தன் அழகை வெளிப்படுத்தும். அதை நியமப்படுத்தவும் இது நல்ல சமயம். ஹிந்துஸ்தானி சங்கீதமும் சிலவிதங்களில் கிரந்தங்களின் அடிப்படையில் இருக்கிறது. கிரந்தங்களில் வாதி-விவாதி கொடுக்கப்பட்டுள்ளன. உங்கள் கருத்துக்களுக்கு சமஸ்கிருத ஆதாரம் எளிதாகக் கிடைக்கும். அவை கிடைத்தபின் அதற்கு மதிப்பும் கூடும். தியேட்டர் இங்கே வந்து உங்கள் சங்கீதத்தை ஆங்கில மயமாக்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு பதில் அது ஹிந்துஸ்தானியானால் அது எப்படித் தவறாகும்? அதனால் நீங்கள் முன் வந்து சில விஷயங்களைத் தொடங்குங்கள் [என்றேன்]. நாயுடு இது மிகவும் கடினமான வேலை. எனக்கே அங்கேயுள்ள சங்கீதம் அதிகம் தெரியாது. என்னால் தனியாக இந்தக் காரியம் எப்படி ஆகும்? ஆனால் இந்த விஷயத்தைப் பற்றி கண்டிப்பாக யோசிப்பேன் என்றார்.

ஸ்ரீ நாயுடுவின் இன்னொரு கேள்வி:

ஸ்ரீ நாயுடு பேச்சு முடிந்த பின் என்னிடம் , ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் புருஷ ராகம், ஸ்த்ரீ ராகத்தின் கல்பனை எந்த ஆதாரம் அல்லது எந்த தத்துவத்தின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது என்று ஒரு கேள்வி கேட்டார். இது முக்கியமான கேள்வி, ஆனால் இதற்கு திருப்தியான விடை அளிப்பது கடினம். ரத்னாகர-த்தின் காலத்தில் இப்படிப்பட்ட கல்பனை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அந்தப் புத்தகத்தில் அது இல்லை. அங்கே பத்து வித ராகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன, ஜன்ய ஜனக ராகங்களைப் போன்றவை இருக்கின்றன. இதை ஆதாரமாகக் கொண்டு ஏதாவதொரு பண்டிதர், (சிலர் பரத முனி என்கிறார்கள்) இதை செய்திருப்பதாகப் புரிந்துக் கொள்ளலாம். பல மத வித்யாசங்களினால் இதை ஆராய்ந்து சொல்வது கடினமாகி விட்டது. ஏதாவது ஒரு மதம் என்று இருந்திருந்தால், எந்த ஜன்யம் ஜனகத்திலிருந்து என்று ஒரு தெளிவான பகுதியைத் தேட முடியும். ஆனால் இந்த சித்தாந்தத்தை ஏற்படுத்தும் சமயத்தில், பலர் தத்தம் வழியில் ராக ராகினிகளை நிச்சயித்து விட்டார்கள். குறிப்பிட்ட ராகங்களின் ராகினிகள் ஏதாவதொரு வகையில் அந்த ராகத்தை ஒத்திருக்கும் என்று சிலர் சொல்கிறார்கள். மனைவி வேறு

குடும்பத்தவளாக இருப்பதால் அது முற்றிலும் வேறாக இருக்க வேண்டும். என்று மற்றவர்கள் சொல்கிறார்கள்.

இந்த விஷயத்தைப் பொறுத்தவரை ரத்னாகரத்தில் இருப்பது போல், ஜன்ய ராகங்கள் ஜனக ராகங்களை சில அம்சங்களிலாவது ஒத்திருக்க வேண்டும். ஆனால் இந்த இரண்டாவது கல்பனை வேறொரு தனிப்பட்டவரின் கருத்தாகப் படுகிறது. ராகத்தின் மேல் தன் புதுமையான கருத்தை எப்படியாவது புகுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு இதை அவர் செய்திருக்க வேண்டும். ஜன்ய-ஜனக ராகத்தின் சம்பந்தம், ஜாதி பிரகரணத்தின் கடைசியில் ரத்னாகரத்தின் முதல் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. ராகத்தைப் பற்றிக் கூறும் போது "அதிலிருந்து தோன்றிய" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ராகாங்கம், உபாங்கம், பாஷாங்கம், கிரியாங்கம் இந்த பெயர்கள் ரத்னாகரத்தில் உள்ளன. எல்லா வற்றையும் விளக்கி அவர்கள் ராகங்களின் மூலம் காட்டவில்லை, இதனால் கொஞ்சம் குழப்பம் நிலவுகிறது. மதபேதங்களும் இதன் காரணமாகத் தோன்றியிருக்கலாம். யாராவது ஒரு பண்டிதர் இதன் தத்துவத்தைத் தேடி, நன்றாகச் சொன்னால் பிரயோஜனமாக இருக்கும், நான் உயிரோடு இருந்தால் அப்படிச் செய்யலாம் என்ற ஆசை இருக்கிறது. ஸ்ரீ நாயுடுவும் இதைப் பற்றி யோசிப்பதாக இருக்கிறார்,

இங்கிருந்து இப்போது தஞ்சாவூர் செல்வதாக நிச்சயித்திருக்கிறேன். அங்கே இப்போது கேட்பதற்கு ஒன்றும் இல்லை என்று தோன்றுகிறது. தஞ்சாவூரில் பேலஸ் லைப்ரரி இருக்கிறது, அங்கே கிரந்தங்களைப் பார்க்க வேண்டும். இங்கே பிரயோகத்திலிருக்கும் தாளங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீ நாயுடு இங்கே இருப்பது போல நல்ல பாடகர்களும் சாஸ்திரக்காரகளும் வேறு எங்கும் இல்லை என்றார்.

"தியாகய்யா" வின் சில கருத்துக்கள்:

மதராசின் தியாகய்யா என்ற பாடகருடன் நடந்த சந்திப்பின் போது ஒரு விஷயத்தை எழுதிவைக்கவில்லை. அவர் என் கேள்விக்கு பிறகு, "ராகாங்கம், பாஷாங்கம், கிரியாங்கம், உபாங்கம்[4]" - இவற்றின் விளக்கங்களைக் கூறினார். அவருடைய பேரன், அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னார். அந்த மொழி பெயர்ப்பு இவ்வாறு இருந்தது -

1. ராகாங்கம் - சொல்லப்பட்ட மேளத்தின் ஸ்வரங்களில் மாற்றம் செய்வதால் கிடைக்கக் கூடிய ராகம்.

2. பாஷாங்கம் - ஒரே ராகம் வேறு வேறு விதமாக வேறு வேறு இடங்களில் மக்களின் பழக்க வழக்கங்களுக்கும் ருசிக்கும் ஏற்ப பரவி இருப்பது.

[4] [இவை ராகங்க, உபாங்க, பாஷாங்க என்ற சொற்களின் விளக்கங்களாகத் தோன்றவில்லை. அதிலும் குறிப்பாக, உபாங்கத்தின் விளக்கத்தை எடுத்துக் கொண்டால், அவற்றின் தோற்றம் , அவை எவ்வாறு உருவாகி இருக்கலாம் என்பது குறித்த சிந்தனையாகத் தோன்றுகிறது]

3. கிரியாங்கம் - ஒரு புதிய சாயை தோன்றும் வகையில், ராகத்தில் ஒன்றோ இரண்டோ ஸ்வரத்தை பாடுவது (ஆனாலும் மூலத்தின் ஸ்வரூபத்தை கெடாது அப்படியே வைத்தல்)

4. உபாங்கம் - ஒரு ராகம் ஏதாவதொரு விஷயத்தில் இன்னொரு ராகத்தை ஆதாரமாகக் கொள்வது. ஒரு ராகம் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இரண்டாவதைச் செய்தல். எப்படி ஆனந்த பைரவி யின் அடிப்படையில் ஹுசேனி.

இப்போது இந்த விளக்கங்கள் எவ்வளவு சரி என்பதைப் பார்க்க வேண்டும். மேற்கொண்ட என் தேடலில் மற்ற வித்வான்களிடம் இதே கேள்வியைக் கேட்க வேண்டும். எல்லோரும் கொடுக்கும் பதில்களை வீட்டுக்குப் போய், புத்தகத்தில் சேர்த்து எழுதுவேன். பிறகு எந்த விளக்கம் எனக்கு அதிகம் சரியாகப் படுகிறதோ அதை ஏற்றுக் கொள்வேன். ஓரின்டல் மியூசிக்கிலும் சில விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலே சொல்லப்பட்ட கிரியாங்கத்தின் விளக்கம் சரியாக இருந்தால், அதிலிருந்து "வாதி சம்வாதி" யின் தத்துவம் நிதர்சனமாகும் என்று தோன்றுகிறது. நான் தியாகய்யாவிடம் அதை விளக்குமாறு வேண்டினேன். ஆனால் அவருக்கு அவ்வாறு விளக்கத் தெரியாது என்றார். சரி, பிறகு பார்த்துக்கொள்கிறேன். என் மனத்தில் பிரபந்தம் மற்றும் ஸ்தாயா [டாயம்?] பற்றி சில விஷயம் தெரிந்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம். "தியாகய்யா" , அந்தப் பாடலை பாடவோ விளக்கவோ ஆள் கிடைப்பது கடினம் என்று சொல்கிறார். அவை பழைய பாடல் படிவங்கள் மற்றும் சமஸ்கிருதத்தில் இருக்கின்றன. அவற்றைப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு, அர்த்தம் சொல்லத் தெரியும் ஆனால் அவர்களுக்கு சங்கீதம் தெரியாது. பாடுபவர்களுக்கு ஒன்றுமே புரிவதில்லை.

நாயுடு கிளப்பில் தன் பேச்சை முடிக்கும் போது, நீங்கள் என்னுடைய நண்பரின் வீட்டிற்கு வாருங்கள். அங்கே முடிந்தால் "வீணா தனம்" என்ற பெயற்கொண்ட பிரசித்தமான ஒரு அம்மாளை அழைத்து , அவருடைய பாடலை உங்களைக் கேட்க ஏற்பாடு செய்கிறேன் என்று என்னிடம் சொன்னார். நான் சரி என்றேன். பிறகு சாவ்கார்பேட்டில் ஸ்ரீ நாயுடுவின் ஒரு நண்பர் வீட்டிற்கு நாங்கள் இருவரும் சென்றோம். பிறகு அந்த பாடகியை அழைத்து வர ஆள் அனுப்பினோம். அந்த பாடகி ராஜமுந்த்ரிக்கு பாடுவதற்காகச் சென்றிருக்கிறார் என்று தெரிய வந்தது. அதனால் ஒன்றும் நடக்கவில்லை. ஆனாலும் அவர் வீட்டிலிருந்து இரண்டு பெண்கள் ஒரு "சுரஸோடா" [தம்புரா] எடுத்துக் கொண்டு வந்தனர். ஸ்ரீ நாயுடு பல வகைப்பட்ட ராகங்களைக் கேட்டுப் பாட வைத்தார். சில ஹிந்துஸ்தானி உருப்படிகளைக் கூட அவர்கள் பாடினார்கள். இருவரின் குரலும் நன்றாக இருந்தது. பூர்வி, ஹரிகாம்போஜி. கல்யாணி, வசந்த், பரஜ் , நாதராமக்ரியா, முதலியவை எனக்கு நன்றாக இருந்தது. அவர்கள் பாட்டு சாதாரணமாக இருந்தது. இங்கேயுள்ளவர்கள் நம் ஹிந்துஸ்தானி பாடகர்களின் உழைப்பை அடைய முடிவதில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. இன்னும் போகப் போக எனக்கு இன்னும் தெளிவு கிடைக்கலாம். இங்கே "வீணா தன"த்திற்கு நல்ல புகழ் இருக்கிறது என்று தோன்றுகிறது. அவர் வெவ்வேறு ராகங்களில் தானே "ஸ்வரம்" எழுதுகிறார்களாம், மற்றும்

பாடல் கூட அமைக்கிறார்களாம் ,இவ்வாறு சொல்கிறார்கள். ஆனால் அதைக் கேட்கும் வாய்ப்பு வரவில்லை.

ஸ்ரீ திருமலய்யா நாயுடுவின் நேர்காணலின் முக்கிய அம்சங்கள்:

1. தெற்கத்திய சங்கீத பத்ததி ஏதாவது சமஸ்கிருத கிரந்தத்தையோ அல்லது வேறு ஏதாவதையோ அடிப்படையாகக் கொண்டுள்ளதா? நீங்கள் அப்படிபட்ட புத்தகம் அல்லது புத்தகங்களைப் படித்திருக்கிறீர்களா?

2. உங்கள் எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களைப் பற்றிய விவரம் எங்கே இருக்கிறது? அது வெறும் கற்பிக்கப்பட்ட பத்ததியா? அது ரத்னாகரத்தை விடப் பழமையானதா? இதன் தோற்றம் ரத்னாகரத்திலிருந்து தான் என்று சொல்ல முடியுமா?

3. வைதிக காலத்தின் ஸப்தகம் எது? அதிலிருந்து ஏழு ஸ்வரம் கொண்ட ஸப்தகத்தை யார் உருவாக்கினார்கள்? ஸ்வரங்களின் பெயர்கள் மிருகங்களின் பெயர்களோடு ஏன் சம்பந்தப்படுத்தபட்டிருக்கின்றன? அதன் வண்ணங்கள் எவை?

4. ஸ்ருதிகள் 22. உங்கள் பத்ததியில் ஏன் பன்னிரண்டு தான் இருக்கிறது? மற்றவைகளை என்ன செய்வது? அவற்றின் பிரயோக நியமங்கள் எவை?

5. கிராமம் மற்றும் மூர்ச்சனையின் உபயோகத்தை விளக்க முடியுமா?

6.சமஸ்கிருத கிரந்தங்கள் படித்த ஏதாவது சில பண்டிதர்களின் பெயர்களைச் சொல்லுங்களேன்

7. பண்டைய ஸ்வர ஸப்தகத்திற்கும் ஆரம்பகால ஐரோப்பிய சர்ச் மோட்ஸ்-ற்கும் [ChurchModes] ஏதாவது ஒற்றுமை இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

8. ஆலாபனை, பல்லவி இவற்றை எல்லாம் பாடும் நியமத்தை (தெளிவாக்க) முடியுமா?

9. பொதுவாக இங்கே என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன? அவற்றின் விசேஷங்கள் என்ன? அவற்றின் நியமங்களைக் குறித்து எந்த புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறது?

10. நீங்கள் உங்கள் "கான சஞ்சீவனி"-க்காக எந்த சமஸ்கிருத கிரந்தங்கள் அல்லது பிரதேச கிரந்தங்களை அத்யயனம் செய்தீர்கள்?

11. 12 ஸ்வரங்களை மட்டும் கொண்டு செய்யப்பட இன்றைய சங்கீதத்தினை எளிமைப் படுத்தியதற்கு வீணை புழக்கதிற்கு வந்தது ஒரு காரணமாக இருக்குமா?

12. வாத்தியங்களில் 22 வீணை வலிக்கட்டுக்களைக் [frets] கொண்டு அவற்றை வாசிப்பது கடினமாக இருந்தது. ஒவ்வொரு ஸப்தகத்திலும் 12 ஐ ஸ்தாபித்து , மற்றும் நடுவில் உள்ள இடைவெளிகளை வாத்ய சங்கீதத்தின் மூலம் வெவ்வேறு கிரியைகளால் ஒலிக்கப் பட்டன[5].

அறிவிப்பு: இந்த அம்சங்களை ஆதாரமாகக் கொண்டு கேள்விகள் கேட்டு, ஸ்ரீ நாயுடு அவர்கள் கொடுத்த தகவல்களை ஒன்று சேர்க்க முடிவு செய்திருக்கிறேன்.

13. பண்டைய ஸ்வர ஸப்தகத்தையும் ஹிந்துஸ்தானியோடு ஒப்பு நோக்குதல்

14. கொடுக்கப்பட்ட மூர்ச்சனையின் உதவியால் ரத்னாகரத்தின் குறைந்த பட்சம் ஒரு ராகத்திற்கான முறையை புரிந்துக் கொள்ள முயற்சி செய்வது

15. ரத்னாகரத்தின் காலத்தில் எழுதப்பட்டதன் மூலம் "கிராம ராக"-த்தின் பிரசாரம் ஆகி இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

16. நீங்கள் "மூர்ச்சனாப் பிரஸ்தாரம்" , "சுத்த தானத்துடன்" சம்பந்தப்பட்டது என்று ஒத்துக் கொள்கிறீர்களா?

17. ரத்னாகரத்தின் ராகங்கள் நாடகத்தோடு ஏன் சம்பந்தப்பட்டுள்ளது?

18. "மார்க்க தாளம்" இன்றும் புழக்கத்தில் இருக்கிறதா? இங்கே எத்தனை மற்றும் என்ன தாளங்கள் புழக்கத்தில் இருக்கின்றன ?

19. கமகத்தைப் பற்றிய விளக்கங்களில், நீங்கள் ஸ்வரம், மற்றும் காலத்தின் சிறு பகுதிகளைக் காட்டுகிறீர்கள், அது ஸ்ருதியை சுட்டிக் காட்டுகிறதா?

20. மூர்ச்சனையை உங்கள் 72 மேளங்கள் ஒன்றுடனாவது பொருத்திக் காட்டக் கூடிய எழுத்தாளர் யாரையாவது அறிவீர்களா?

கிளம்புவதற்கு முன் சிங்கராச்சாரியாருடன் மீண்டும் பேச்சு 24 **நவம்பர்** 1904

நேற்று, ஸ்ரீ நாயுடு மாலை ஐந்தரை மணி வரை வரவில்லை. அவர் ஐந்து மணிக்கு வருவதாகச் சொல்லி இருந்தார். இங்கே மக்கள் சொன்ன நேரத்திற்கு, வருவதைப் பெரிதாக எண்ணுவதில்லை போல இருக்கிறது. நான் ஆறு மணி வரை வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தேன் , பிறகு என்னுடன் வந்த சிலருக்கு பாஜார் பேட்டையில் ஊரைச் சுற்றிக் காட்ட கூட்டிக் கொண்டு போனேன். வீட்டுக்கு வந்ததும் வேலையாள் ஸ்ரீ நாயுடுவின் கார்டைக் [Card] கொடுத்தான் - ஏழு மணிக்கு வந்து பார்த்து விட்டுப் போய்விட்டார் என்றும் சொன்னான். சரி. அவரைப் பார்க்க முடிந்தால், மேளகர்த்தாவின் விசேஷங்களைப் பற்றி சில கேள்விகள் கேட்க வேண்டி இருந்தது. இங்கேயுள்ள சில மேளகர்த்தாக்களின் (கனகாங்கியைப் போல்)

[5] [பண்டித பாத்கண்டே இங்கே ரத்னாகரத்திலும் நாட்டிய சாஸ்திரத்துக்குப் பிறகு வந்த பிற நூல்களிலும் சொல்லப்பட்ட ஸ்ருதி வீணை போன்றவற்றைக் குறிக்கிறார்.]

ஸ்வரங்கள் - ரி மற்றும் ரி, த மற்றும் த - இவ்வாறும் இருக்கின்றன. இந்த ஸ்வர க்ரமத்தைப் பாடினால் (கணித ரீதியாக ராகம் தோன்றினாலும்) இனிமை என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் நன்றாக இருக்காது என்று எனக்குத் தோன்றுகிறது. ஒன்று ஆரோஹணத்திலும் மற்றது அவரோஹணத்திலும் இருக்கலாம், ஆனால் ஒன்றுக்குபின் ஒன்று வந்தால் நன்றாக இருக்காது. ஆனாலும் கனகாங்கி மேளகர்த்தா ராகம் மற்றும் சம்பூர்ணம். அது சுத்தம் அதனால் ஸ்வரங்கள் க்ரமமாக வரத்தான் வேண்டும். இது குறித்து ஸ்ரீ நாயுடு என்ன சொல்கிறார் என்று தெரிந்துக் கொள்ள விரும்பினேன். ஆனால் அவர் வராததால் அவரிடம் கேட்க முடியவில்லை. இன்று காலை ஸ்ரீ சிங்கராச்சாரியாரிடம் போய், நான் வாங்கி வைத்திருக்கும் அவரது "காயக லோசனம்" புத்தகத்தில் ஒன்றிரண்டு விஷயங்களைத் தெரிந்துக் கொள்ள வேண்டும். இப்போது அவருடன் மற்ற எந்த பேச்சு வார்த்தையும் வேண்டாம். இந்த எண்ணத்துடன் சட்டையை மாட்டிக்கொண்டு வெளியில் கிளம்பினேன். தெய்வாதீனமாக அவர் படி இறங்கிக் கொண்டிருந்தார் , அவரை சந்திக்க முடிந்தது. நமஸ்கரித்து விட்டு, ஐயா, உங்களிடம் ஒன்றிரண்டு சந்தேகங்களை நிவர்த்தி செய்துக் கொள்ள வந்தேன், ஆனால் நீங்கள் வெளியில் கிளம்பிக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது என்றேன். பிறகு அவர் என்னை வராண்டாவில் பென்ஞ்சில் உட்கார வைத்து சந்தேகங்களைக் கேட்க அனுமதித்தார். நான் மேலே எழுதிய கனகாங்கியைப் பற்றிய கேள்வியைத் தான் கேட்டேன். அவர் இப்படிப்பட்ட ராகங்களை எங்கள் பக்கத்தில் பாடுகிறார்கள். பிறகு அதன் ஸப்தகத்தைக் கொண்டு கொஞ்சம் பாடிக் காட்டினார் (hum). தீவ்ர "ரி"யை "க" என்று சொல்கிறார்கள், என்றார். அதனால் தோஷம் ஓரளவுக்கு குறைகிறது. ஆனால் இந்த மேளம் அதிகம் பிரசாரத்தில் இல்லை, ஜனரஞ்சகமானதாகவும் இல்லை. (எனக்கும் அப்படித்தான் தோன்றியது அதனால் அந்த ஸந்தேஹம் நிவர்த்தி ஆனது).

சிங்கராச்சாரியாரிடம் மேலும், நீங்கள் உங்கள் புத்தகத்தில் சுமார் 108 தாளங்களை சங்கேதங்களுடன் கொடுத்திருக்கிறீர்கள். அதை எப்படிப் புரிந்துக் கொள்வது என்று கேட்டேன். ஏதாவது ஒரு தாளத்தை எடுத்துக் கொண்டு, கையில், மாத்திரைகளை எண்ணிப் போட்டுக் காட்டுங்கள். அவர் உடனே அதைக் காட்டினார். பக்கம் 120-இல் 'நந்தன' தாளம் இருக்கிறது, அது ||oos என்று எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு "லகு, லகு, த்ருதம் த்ருதம் ப்லுதம்" என்ற குறிகள் உண்டு, இதில் ஐந்து பகுதிகள் என்று வைத்துக் கொள்ளுங்கள் அதாவது - 4,4,2,2,12 இந்த மாத்திரை அளவில் அவை கொடுக்கப்பட்டுள்ளன. (எனக்கு அவ்வாறே தோன்றியது) ஆனால் அதை நிச்சயித்துக் கொள்ள வேண்டியிருந்தது, செய்தாகி விட்டது. எவ்வாறு சில ராகங்கள் ஜனரஞ்சகமாக இல்லாமல் இருக்கிறதோ அதே போல் சிற்சில தாளங்கள் கணித ரீதியாக உருவாக்கப்பட்டவை ஆனால் உபயோகத்தில் இல்லை. பிறகு சிங்கராச்சாரியார், தம் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒன்றிரண்டு ஸ்வரபிரஸ்தாரங்களை விளக்கினார், அதையும் ஓரளவு சரியாகத்தான் புரிந்துக் கொண்டிருக்கிறேன். வீட்டுக்குப் போய் அப்பியாஸம் செய்து அதை தெரிந்துக் கொண்டு அதை எழுதி வைத்துக் கொள்வேன். பிறகு சிங்கராச்சாரியாருக்கு நேரமாகி விட்டதால், வீட்டுக்குக் கிளம்பி விட்டேன். வழியில் தெலுங்கு தெரிந்தவர்கள் கிடைப்பார்கள், அவர்களை வைத்துப் புத்தகத்தைப் படிக்கச் செய்வேன் மற்றும் விவரம் தெரிந்துக் கொள்வேன். தெரிந்ததை இதில் எழுதி வைப்பேன்.

சங்கீத ஸ்தலம் தஞ்சாவூர் **வெள்ளிக்கிழமை** 25 **நவம்பர்** 1904

நான் நேற்று மாலை சென்னையிலிருந்து புறப்பட்டு இன்று காலை சுமார் ஐந்து மணிக்கு இங்கே வந்து சேர்ந்தேன். இங்கே வரப்போகிறேன் என்ற எண்ணம் மனதிற்கு மகிழ்ச்சி அளித்தது. ஏனென்றால், பம்பாயில் இருக்கும் போது தெற்கில் சங்கீதத்தின் பிறப்பிடம் தஞ்சாவூர் மற்றும் மைசூர் என்று எப்போதும் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த இரண்டு நகரங்களில் ஒன்றிற்கு வந்து சேர்ந்து விட்டேன். இறைவன் என்ன அனுபவத்தைக் கொடுக்கிறான் என்று பார்ப்போம். ஆசை நிறைய இருக்கிறது. சென்னையில் கிடைத்த செய்தியின் படி, தெற்கில் உள்ள சங்கீதம் 72 மேளகர்த்தாக்களின் அடிப்படையில் உள்ள சங்கீதம் தான் என்பது நிச்சயமாகத் தெரிந்தது. இப்போது எழும் ஒரு கேள்வி என்னவென்றால் மேளகர்த்தா பத்ததி நம் ரத்னாகரத்திற்கு முந்தையதா, அதற்குப் பிறகு தோன்றியதா என்பது. இந்தக் கேள்வியின் விடையினால் பல விஷயங்கள் தெளிவடையும். அதனால் இந்த ஊரில் இது பற்றி தகவல் சேகரிக்கலாம் என்று எண்ணி இருக்கிறேன். என்னுடைய சொந்த கருத்து என்னவென்றால், இந்த பத்ததி ரத்னாகரத்திற்கு முன்னர் என்று சொல்ல முடியாது மேலும் அதற்கு முன்னர் இது ரத்னாகர காலத்தது என்று ஸ்தாபிக்கக் கூடிய பண்டிதர் இங்கே கிடைப்பது கடினம். எந்த விஷயம் இல்லை என்று ஆகிறதோ, அது கூடிய சீக்கிரம் தெரியப் போகிறது. அந்த விஷயத்தைப் பற்றி மட்டும் விவாதித்துக் கொண்டிருந்தால், அவர்களிடம் இதையே கேட்டுக் கொண்டிருந்தால் என்ன பிரயோஜனம் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், கிடைத்த ஒவ்வொரு பண்டிதரிடமும் இதை கேட்டுக் கொண்டிருப்பேன், மேலும் எல்லாருடைய பதிலையும் திரட்டி என் சித்தாந்தத்தை நிச்சயம் செய்துக் கொள்வேன். ரத்னாகரத்தின் சங்கீதமும் மிகவும் பழமையானதாகத் தெரிகிறது. ஐரோப்பிய சங்கீதத்தின் வரலாற்றைப் படிக்கையில், அதன் பழைய சங்கீதத்தின் மீது நம் கவனம் எப்படிப் போகிறதோ, அதே போலத் தான், ரத்னாகரத்தின் சங்கீதமும் தென்படுகிறது. இந்த மேளகர்த்தாவின் கணித சாஸ்திர ஆதாரத்தைக் கொண்டு செய்யப்பட அழகிய முறை, அதன் ஸ்வர அமைப்பைப் பார்க்கையில் மிகவும் புராதனமாக இருப்பதாகத் தெரியவில்லை. எங்கேயாவது எப்படியாவது இந்த மேள பத்ததியின் மொத்த சமஸ்கிருத கிரந்தங்களின் ஆதாரம் கிடைத்து விட்டால், கூட இது அநாதி காலமாக இருந்து வருகிறது என்று சொல்வது கடினம். இது தான் என்னுடைய கருத்து. ரத்னாகரத்தின் ஸ்வர ஸப்தகம், மற்றும் ராகம் மிகவும் பழமையானது மற்றும் நீண்ட காலமாக இருந்து வருவதாகத் தெரிகிறது.அந்த விஷயம் இந்த மேளகர்த்தாப் பத்ததியில் இல்லை. ஆகட்டும்.

வரவு:

ஸ்டேஷனில் இறங்கிப் பார்த்தால் என்னை அழைத்துச் செல்ல ஒருவரும் வர வில்லை என்று தெரிந்தது. மதராசில் என் போஷகர் ஸ்ரீ ரங்கநாத தாகூர் ,தஞ்சாவூரின் வெஸ்ட் மெயின் ஸ்ட்ரீட்டிலுள்ள சதாசிவ ராவ் தவே-யிற்கு கடிதம் எழுதுகிறேன், நீங்கள் அங்கே

சென்றிறங்கியதும் உங்களை நன்றாக கவனித்துக் கொள்வார் என்று சொல்லி இருந்தார். அதனால் அவருடைய ஆள் யாராவது ஸ்டேஷனுக்கு வந்திருப்பார்கள் என்று நினைத்தேன். தங்குவதில் பிரச்சினை ஏற்படும் என்ற பயம் முதலில் ஏற்பட்டது. ஆனால் பயணியர் பங்களாவைப் பற்றி ஆங்காங்கே விசாரித்துக் கொண்டு அங்கே போய் விட்டேன். அங்கே வசதியாக இருந்தது என்று சொல்வதற்கு அவசியமே இல்லை. இப்படியாக சுமார் ஏழு மணி ஆகிவிட்டது. பிறகு டீ யெல்லாம் குடித்து விட்டு பிறகு எனக்கு விருப்பமான விஷயங்களைத் தேடிப் புறப்பட்டேன். முதலாவதாக சவுத் மெயின் ஸ்ட்ரீட் [South Main South] -டில் நுழைந்தேன். கொஞ்சம் முன்னே சென்ற பின், ஒரு வீட்டு வாசலில் ஒரு ஆசிரியர் இரண்டு மூன்று குழந்தைகளுக்கு "சரிகம" பாடச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த வீட்டின் முன் நின்றுக் கொண்டு கொஞ்ச நேரம் பாட்டை கேட்கும் பாவனையில் நின்றேன். இவ்வாறு நின்றுக் கொண்டிருந்த என்னைப் பார்த்து தெருவில் இரண்டொருவர், கூடினார்கள். அவர்கள் என்னைப் பற்றி விசாரித்தனர். பேச்சுக் கொடுக்கும் இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்து, நான் விஷயம் தெரிந்துக் கொள்ள முயற்சி செய்தேன். என்னைப் பார்த்து பேச்சுக் கொடுத்த மனிதரின் பெயர் கிருஷ்ணஸ்வாமி பிள்ளை, கலெக்டர் ஆபீஸில் வேலை செய்கிறார் என்று சொன்னார். இந்த மனிதர் எளிமையாக மற்றும் மரியாதைப்பட்டவராக இருந்தார். என் கேள்விகளுக்கு மிகவும் மகிழ்ச்சியோடு பதில் சொன்னார். நான் அவரிடம் எனக்கு சங்கீத சாஸ்திரத்தில் மிகவும் ஈடுபாடு உள்ளது என்றும் அதைப்பற்றிய தகவல் திரட்டும் நோக்கத்துடன் இந்த பிரதேசத்திற்கு பிரயாணம் மேற்கொண்டிருக்கிறேன். அதனால் சங்கீதத்தில் பிரசித்தி பெற்ற உங்கள் ஊரில், மிகவும் பிரபலமான சங்கீத சாஸ்திரியாகக் கருதப்படுபவர் யார் என்று சொல்ல முடியுமா? என்று கேட்டேன். அவர், "துரதிர்ஷ்டவசமாக, இங்கே மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு முக்கியமான சங்கீதக்காரரான மற்றும் மிருதங்கம் வாசிப்பதில் நிபுணரான ஸ்ரீ நாராயணஸ்வாமி மறைந்து விட்டார். அவரை விட தஞ்சாவூரில் பெரிய வித்வான் யாரும் இல்லை என்று சொல்வதில் எந்தத் தவறும் இல்லை. எனக்கு அதிகம் சங்கீதம் புரியாது ஆனால் மக்களது கருத்தைச் சொன்னேன். சரி அவர் இப்போது போய் சேர்ந்து விட்டார். ஆனால் அவருக்குப் அடுத்தபடியாக வித்வான் "தேவ கோஸ்வாமி" இன்னும் உயிரோடு தான் இருக்கிறார். அவர் மகாராஷ்ட்ரத்து பிராமணர், மற்றும் மராட்டி பேசுவார். அவருக்கு சங்கீத சாஸ்திரத்தில் நல்ல ஞானம் உண்டு. எந்த வாத்தியத்தையும் அவர் நன்றாக வாசிப்பார் என்று சொல்கிறார்கள்" என்றார். நீங்கள் அவர் வீட்டைக் காட்டினீர்கள் என்றால் மிகவும் நன்றாக இருக்கும் என்றேன். உடனே, கிருஷ்ணஸ்வாமி பிள்ளை பக்கத்திலிருந்த ஒரு வீதிக்கு அழைத்துச் சென்று, அவரை நான் சந்திக்க ஏற்பாடு செய்தார். இந்த தேவ கோஸ்வாமி நடுத்தர வயதுள்ளவர் மற்றும் மிகவும் எளிமையானவராக இருந்தார். நமஸ்காரங்களைச் சொல்லிவிட்டு ஒருவருக்கொருவர் அறிமுகங்கள் செய்துக்கொண்டு, நான் என் யாத்திரையின் நோக்கத்தை அவரிடம் சொன்னேன், தயவு செய்து இந்த விஷயத்தைக் குறித்து நீங்கள் அறிந்தவற்றைச் சொல்லுங்கள் என்றேன்.

நான் மகாராஷ்டிர தேசத்தைச் சேர்ந்தவன், அதிலும் ஒரு பிராமணன் என்றவுடன் அவர் மிகவும் மகிழ்ந்தார், மேலும், அவர் வீட்டில் இன்று லக்ன காரியம் இருக்கிறது - அது ஒன்றிரண்டு நாட்களில் முடிந்து விடும் என்றார், அது முடிந்த பின் ஞாயிற்றுக் கிழமை வாருங்கள் என்றார். எனக்குத் தெரிந்தவற்றை உங்களுக்குச் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்றார். இதற்குப் பிறகு, அதை ஏற்றுக்கொண்டு ஞாயிற்றுக் கிழமை வர நிச்சயம் செய்துக் கொண்டு கிளம்பினேன். இதற்கு நடுவில் திரு கிருஷ்ணஸ்வாமி என்னிடம் கிருஷ்ண ராவ் நாயக் என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு சங்கீதத்தில் மிகவும் ஈடுபாடு மேலும் இவரைத் தெரிந்துக் கொண்டால், உங்களுக்கு இந்த ஊரில் ஒவ்வொரு வித்வானையும் தெரிந்துக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என்றார். அவர் இவ்வாறு சொன்னது எனக்கு சரியாகப் பட்டது, ஏனென்றால் நான் தஞ்சாவூரில் ஒவ்வொரு வித்வானையும், அவருக்கு என்னென்ன தெரியும் என்று புரிந்துக்கொள்ளாமல் திரும்பி போகக் கூடாது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவர் சொன்ன பிரகாரம், அந்த பெரியவர் நாயக்கின் வீட்டிற்கு நான் போனேன். போனவுடன், அவர் நேரம் கழித்துத் தான் எழுந்துக் கொள்வார், எழுந்தவுடன் திருவடிக்குக் கிளம்புகிறார் என்று தெரிந்தது. இது தெரிந்தவுடன் அவரைச் சந்திப்பது ஒன்றிரண்டு நாட்கள் தள்ளிப் போடப்பட்டது. வழியில் இன்னொருவரைச் சந்தித்தேன். இங்கே வியங்கட ராவ் என்ற பெயர் கொண்ட பிரசித்தி பெற்ற ஃபிடில் வாசிப்பவர் இருக்கிறார் என்று தெரிய வந்தது. அவர் வீட்டுக்குப் போனவுடன் அவர் ஊரில் இல்லை என்று தெரிய வந்தது. கிருஷ்ண ராவ் நாயக் நாளை வருவார் என்று தெரிந்துக் கொண்டபின் அவர் வீட்டிருக்கு நாளை செல்லத் தீர்மானித்தேன்.

சரஸ்வதி மஹால் நூலகம்

மாலையில், இங்கே பிரசித்தி பெற்ற சரஸ்வதி மஹால் நூல்நிலையத்திற்குச் சென்றேன். கேப்டன் டே [Captain CR Day] தன் புத்தகத்தில் சங்கீத கிரந்தங்களின் பெயர்கள் மற்றும் அவை கிடைக்கும் இடங்கள் பற்றிய தகவலில், தஞ்சாவூர் நூல் நிலையத்தைப் பற்றியும் எழுதி இருந்தார். அதனால் அந்த கிரந்தங்கள் எவை, மற்றும் என்ன என்பதையும், வேறு ஏதாவது கிரந்தங்கள் இருக்கின்றனவா என்றும் பார்ப்பதற்கு அங்கே செல்ல நிச்சயித்தேன். அங்கே கிருஷ்ணய்யா என்ற நூலகர் இருந்தார். அவர் மிகவும் நல்லவராக இருந்தார்.

இவ்வாறு வெளியூர்க்காரர்கள் வந்தால், அவர்களுக்குக் சுற்றிக் காட்டுவார், மற்றும் உபயோகமானவற்றைச் சொல்வார், அவர் நூலகத்தின் கேட்டலாகை என் முன் வைத்து, "சங்கீத கிரந்தம்" என்று எழுதப்பட்டிருந்ததை எனக்குக் காட்டினார். மொத்தமாகச் சேர்த்தால், சுமார் 29 கிரந்தங்கள் இருந்தன. இவற்றில் சில கிரந்தங்களின் பிரதிகள் நிறைய இருக்கின்றன. கேட்டலாக் மிகவும் நன்றாகச் செய்யப்பட்டிருந்தது. அதை டா. பர்னே [Dr. Burnell's Classifed Catalog] செய்திருக்கிறார் என்றும் தெரிய வந்தது. அவற்றில் கிரந்தங்களின் பெயர், மற்றும் அவற்றின் பிரதிகளின் எண்ணிக்கை, அவற்றின் விஷய சுருக்கம், அந்த கிரந்தத்தின் நிலை (கிழிந்த, பொடிப்பொடியாக, முழுமையற்ற, மொத்த சுவடிகளின் எண்ணிக்கை, எந்த லிபி, எவ்வகைச் சுவடி) முதலியவை எல்லாம் குறிக்கப்பட்டிருந்தது. இதனால் ஒருவரும் கேள்வி

கேட்கத் தேவையே இல்லை. ஸ்ரீ கிருஷ்ணய்யா, "இதற்கு முன் தஞ்சாவூரில் மராட்டிய அரசர்கள் ஆட்சி செய்தார்கள். இப்போது அவர்கள் அப்புறப்படுத்தப்பட்ட பின், இந்த நகரம் ஆங்கிலேயர்களின் ஆட்சியில் இருக்கிறது. இந்த நூலகம் ராஜாவின் பொறுப்பில் இருக்கிறது. ராஜா ராணிகளுக்குள் நிர்வாகத்தைப் பற்றிய சர்ச்சை வந்ததால் அது கோர்ட் வரை சென்றதால், கோர்ட் ஸ்ரீ ஆலிவரை [Oliver] "ரிஸீவர் டு பேலஸ் எஸ்டேட்ஸ்" [Mr.Geo. T. Oliver, Receiver and Manager of the Tanjore Palace Estates] ஆக நியமித்தது. இப்போது இந்த நூலகம், "ரிஸீவர்" என்ற பொறுப்பில், அவர் மேற்பார்வையில் இருக்கிறது. யாருக்காவது இங்கிருந்து ஏதேனும் நகல் வேண்டும் என்றால், அவர் "ஸ்ரீ ஜி.டி. ஆலிவர், ரிஸீவர் அண்ட் மேனேஜர், பேலஸ் எஸ்டேட்ஸ்"-ற்கு ஒரு விண்ணப்பம் தர வேண்டும். அப்படிச் செய்த பின், அந்த விண்ணப்பத்தை என்னிடம் கொடுத்து, "காபியிங்க் ஃபீஸ்" [Copying Fees] தயார் செய்யச் சொல்லுவார்கள். நான் அதைத் தயார் செய்து ரிஸீவரிடம் அனுப்புவேன். அதற்குப் பிறகு எஸ்டிமேட் [estimate] -ற்கு ஏற்ப, பணம் வசூலிக்கப்படும் மற்றும் அதற்கு ரசீது கொடுக்கப்படும். அந்த கிரந்தத்தை நான் அலுவலகத்திற்கு அனுப்புவேன். அங்கே உட்கார்ந்து எழுத்தர்கள் அதைப் பிரதி எடுப்பார்கள், பிறகு கேட்டவர்களுக்குத் தபால் மூலம் அது அனுப்பப்படும்" என்றார்.

இந்த ஏற்பாட்டைக் கண்டு எனக்கு மிகவும் சந்தோஷம் உண்டானது. நம் பக்கத்தில் அரசர்களின் அரண்மனையில் இவ்வாறு பூர்வீக கிரந்தங்களை இவ்வாறு ஒன்று சேர்த்து நூலகத்தில் பாதுகாத்து அவற்றை மாணவர்களுக்கு அவர்கள் சொந்த செலவில், பிரதி செய்து கொடுத்தால் எத்தனை நன்றாக இருக்கும். இது போன்ற பல உபயோகமுள்ள கிரந்தங்கள் வேவேறு கிராமங்களில் வெவ்வேறு மனிதர்களிடம் மறைந்திருக்கின்றன. ராஜா தன் சொந்த செலவில் அவற்றை ஒன்று திரட்டி, பிரதி செய்யக் கேட்கும் ஃபீஸின் மூலம் அந்த செலவை மீட்க வழி செய்திருப்பதில் கெடுதல் ஏதும் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகட்டும். புதிதாக அறிமுகமான என் நண்பர் கிருஷ்ணஸ்வாமி பிள்ளை ஏழ்மையான நிலையில் இருந்தாலும் அவர் மிகவும் குணவானானதால், அவருக்கு இந்த ஊரின் நான்கு பெரிய மனிதர்களின் சிநேகிதம் இருந்தது. அவர் ஊரின் சில மக்களிடம் என் ஆர்வத்தை பற்றிக் கூறினார். சங்கீதம் தெரிந்த சில வித்வான்கள் சிலரிடம் என் வீட்டிற்கு வர ஒப்புதலும் வாங்கித் தந்தார்.

மிருதங்காச்சாரியா தாஸஸ்வாமி **சனிக்கிழமை** 26, **நவம்பர்** 04

இன்று காலை பத்து மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணராவ் இரண்டு மனிதர்களுடன் பயணியர் பங்களாவிற்கு வந்தார். நான் அவர்களை வரவேற்றேன். இந்த ஊரிலுள்ள ராமதாஸ் ஸ்வாமி மடத்தில் அவர் ஒரு மடத்தின் அதிபதி என்று தெரிய வந்தது. அவரது பெயர்கள், "ராமண்ணா ஸ்வாமி" மற்றும் " தாஸ ஸ்வாமி". தாஸ ஸ்வாமி மிகவும் நன்றாக மிருதங்கம் வாசிப்பவர், ராமணா ஸ்வாமி மிகவும் நன்றாக சரோட் வாசிக்கக்கூடியவர். சில மாதங்களுக்கு முன்பு பிரசித்தி பெற்ற நாராயண ஸ்வாமியின் மறைவுக்குப் பிறகு தஞ்சாவூரில் அவருக்கடுத்தபடியாக மிருதங்கம் வாசிக்கக் கூடியவர்கள், சேதுராமன் மற்றும் தாஸ ஸ்வாமி

என்று மக்கள் சொல்கிறார்கள். அவர்களில் இவர் தாஸ ஸ்வாமி. தாஸஸ்வாமி மிகவும் எளிமையான உள்ளம் படைத்தவராக இருந்தார். அவருடன் என் உரையாடல் இவ்வாறாக நடந்தது:

கே: நீங்கள் மிருதங்கம் வாசிக்கிறீர்கள். அதன் விஷயமாக ஏதேனும் புத்தகத்தில் சாஸ்திரக் கல்வி கற்றீர்களா? இல்லை குருவிடம் நடைமுறையில் எப்படி கற்றீர்களோ அப்படி வாசித்து அதன் விஷயமாக சாஸ்திரீய அறிவைப் பெற முயற்சி செய்யவில்லையா?

ப: நான் சிறிது சாஸ்திரீயக் கல்வியைக் கற்றிருக்கிறேன்.

கே: ரத்னாகரத்தின் தாள அத்தியாயத்தை நீங்கள் படித்தோ கேட்டோ இருக்கிறீர்களா?

ப: இல்லை

கே: தாளத்திற்கு ஆதாரமாக எந்த கிரந்தத்தைக் கருதுகிறீர்கள்? உங்கள் குரு யார்?

ப: "நந்தீபரதம்" மற்றும் "தாள லக்ஷணம்" (த3ர்பணம் ?) இந்த கிரந்தங்களை நான் ஆதாரமாகக் கொள்கிறேன், அதற்கேற்ப வாசிக்கிறேன்.

கே: இந்த கிரந்தங்கள் உங்களிடம் உள்ளனவா? அப்படி அவை இருந்தால், எனக்குக் காட்டி, அதை பிரதி எடுத்துக் கொள்ள என்னிடம் தர முடியுமா?

ப: ஆம் இருக்கிறது. அதனை நீங்கள் பிரதி எடுத்துக் கொள்ள விரும்பினால், எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. உங்களைப் போன்றவர்களின் கையில் இந்த கிரந்தங்கள் நன்றாக உபயோகப்படும் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

கே: நீங்கள் இந்த கிரந்தங்களின் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?

ப: இவற்றில் 108 தாளங்களின் அங்கங்கள் மற்றும் லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கின்றன.

கே: உங்கள் ஊரில் சங்கீத கிரந்தம் படித்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா?

ப: ஆம். இருக்கிறார்கள். உங்களுக்கு நேரம் எவ்வளவு இருக்கிறது?

கே: நான் இங்கே எல்லா சிறிய-பெறிய வித்வான்களுடனும் பேசாமல் திரும்பிப் போகக் கூடாது என்று நிச்சயம் செய்து விட்டேன். நீங்கள் அப்படிப்பட்டவர்களுடன் எப்போது அறிமுகம் செய்து வைக்க முடியும் என்றால் சொல்லுங்கள். அவர்கள் என்னைப்பார்க்க வருவார்கள் என்றால் அழைத்து வாருங்கள் இல்லையேல் என்னிடம் சொன்னால் அவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே செல்ல நான் தயார்.

ப: மிகவும் நல்லது, அவ்வாறே செய்கிறேன்.

கே: உங்கள் ஊரில் மேளகர்த்தா பத்ததி மட்டும் தான் பிரசாரத்தில் இருக்கிறதா? மேளகர்த்தா பற்றிய பொதுவான செய்திகள் எந்த கிரந்தத்தில் கிடைக்கும் என்று சொல்ல முடியுமா?

ப: இந்த விஷயம் உங்களுக்கு "சங்கீத சாராம்ருத" கிரந்தத்தில் கிடைக்கும். இந்தப் புத்தகம் சரஸ்வதி மஹாலில் இருக்கிறது. தாள விஷயங்களைப் பற்றிய செய்திகள் நான் சொன்ன நந்தீ பாரதம் மற்றும் தாள த3ர்பணத்தில் கிடைக்கும். அதனை நீங்கள் பிரதி செய்துக்கொள்ள நான் ஒப்புதல் தந்துள்ளேன். இதைத் தவிர உங்களுக்கு எந்த புத்தகத்தைப் பற்றியும் அறிய அவசியமே இல்லை.

இதற்குள் அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டிய சமயம் வந்து விட்டது, அதனால் கிளம்பி விட்டார்கள்.அவர்கள் பம்பாய் செல்ல இருப்பதாகவும் சொன்னார்கள். என்னோடு அறிமுகம் ஆனது சௌகரியமாகி விட்டது என்று சொன்னார்.பிறகு அவர்கள் "சாயங்காலம் மீண்டும் சந்திக்கலாம்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார்கள்.

"அறிவின் மூலம் அறிவைப் பெறுதல்"

தஞ்சாவூர் சங்கீதத்திற்குப் பெயர் பெற்ற ஊர். வடக்கில் க்வாலியர் எப்படியோ இங்கே அப்படித் தஞ்சாவூர். அதனால், இங்கே நான்கு நாட்கள் அதிகம் இருக்க வேண்டும் என்றால் இருக்கலாம் என்று நிச்சயம் செய்துள்ளேன். யாரையும் விட்டுவிட்டோம் என்று ஆக விட மாட்டேன். என்னைப் போன்ற நடுத்தர வர்க்கத்து மனிதனுக்கு இது போன்ற யாத்திரையை மீண்டும் மீண்டும் செய்வது கடினம் என்று எண்ணி இவ்வாறு செய்ய முடிவு செய்திருக்கிறேன். சென்னையை விட, இந்த ஊரில் மக்களுக்கு சங்கீதத்தில் ஆர்வம் அதிகம் இருக்கிறது என்று தோன்றுகிறது. இந்த காரணத்தினால் என் மனம் இவ்வாறு என்னிடம் வேண்டிக்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் எனக்கு இந்த சங்கீதத்தைப் பற்றிய ஞானம் குறைவு. இவர்களால் பாடப்படும் ராக ராகினிகளின் பெயர்கள் எனக்கு எதுவும் சொல்ல முடியாது .மேலும் கீழுமாக அப்பிரசித்தமான தாளங்கள் எனக்குத் தெரியாது. ஆனாலும் விவாதம் செய்ய மட்டும் நான் தயாராக இருக்கிறேன். வினோதமாக இருக்கிறது இல்லையா? ஆகட்டும். ஆனாலும் எனக்கு என்ன தெரியவில்லையோ அதைத் தெரியாது என்று ஒத்துக் கொண்டு அதைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துக் கொள்வேன். இதில் சங்கோசத்திற்கோ வெட்கத்திற்கோ இடம் இல்லை. தாஸஸ்வாமியின் கூற்றுப்படி, இந்த பகுதியில் முக்கியமான ஏழு தாளங்கள் மற்றும் அவற்றின் முப்பத்தைந்து ஜாதிகள் பற்றிய அறிவு சர்வ சாதாரணமாகத் தெரிந்திருக்கிறது. அவர் பக்காவாஜ் வாசிப்பதில் மற்றும் அதன் சாகித்யத்தில் நிஜமாக நிபுணராக இருப்பின், அவரிடமிருந்து இந்த விஷயத்தைத் தெரிந்துக் கொண்டு எழுதி வைப்பேன்; அவரை மாலையில் எப்படியும் சந்திப்பேன் அதற்கு நிச்சயம் சந்தர்ப்பம் கிடைக்கும். அவர் "நந்தீ பாரதம்" மற்றும் "தாள த3ர்பணம்" ஆகிய புத்தகங்களைக் கொண்டு வரப் போகிறார். அதைப் படித்து எனக்குப் போதுமானவரை விஷயம் தெரிந்துக் கொள்ளலாம். இந்த விஷயம் தெரிந்தால், இதைப் பற்றி விவாதம் செய்யத் தயாராகி விடுவேன். எப்போதும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், சமஸ்கிருதம் தெரியாதவர்கள் , எவ்வளவு வேண்டுமானாலும் சாஸ்திரம் தெரிந்தாலும், புத்தகங்களைப் பற்றி அவர்களால் விவாதம் செய்ய அவர்களுக்கு ஒரு விட பயம் இருக்கும். அதனால் இங்கே பரவியுள்ள புகழைக் கொண்டு பயந்து விடக் கூடாது. "கற்றுக் கொள் இல்லையென்றால் கற்றுக் கொடு"

என்பதற்கேற்ப நடப்பதாக முடிவெடுத்திருக்கிறேன். இதனால் பணம் செலவாகும் சாத்தியம் சிறிதளவு தான் இருக்கிறது. இங்கே இருக்கும் குணவான்களுக்குப் பணம் கொடுத்து இதை செய்வதில் பயன் இல்லை. "அறிவின் மூலம் அறிவைப் பெறுதல்"[6] என்ற நியாயத்தின் படி செய்ய முடிவெடுத்திருக்கிறேன்.

ஓலைச்சுவடிகள்:

"பேலஸ் லைப்ரரி" [Palace Library]யில் சங்கீத விஷயம் குறித்த புத்தகங்கள் இருந்தன. அவற்றின் பெயர் பின்வருமாறு:

1.சங்கீத சாராம்ருத
2.சங்கீத முக்தாவலி
3. ராக ரத்னாகரம் (வெறும் பெயரும் படங்களும் கொடுக்கப்பட்டிருந்தன)
4. அபிநய த3ர்பணம் (வெறும் நிருத்ய)
5. அஷ்டோத்தரசத-தாள-லக்ஷணம்
6. தாள பிரஸ்தாரம்
7. தாள லக்ஷணம்
8. தாள தீபிகா
9. ராக பிரஸ்தார
10.தாள தசபிராண தீபிகா
11. ராக லக்ஷணம்
12. தத்தில கோஹலீயம் (என்னிடம் இருக்கிறது , நிருத்யம் பற்றியது)
13. சங்கீத மகரந்தம் (என்னிடம் இருக்கிறது, நிருத்யம் பற்றியது)
14. சத்வாரிம்ஶத் சத ராக நிரூபணம் (வர்ணனைகள் மற்றும் படங்கள், சமீபத்தியது)
15. சங்கீத த3ர்பணம் (என்னிடம் இருக்கிறது)
16. சங்கீத ரத்னாகரம் (என்னிடம் இருக்கிறது)
17.
18. } என் உபயோகத்திற்காகாது. இதன் பெயர்களை மறந்து விட்டேன்.
19.

ஸ்ரீனிவாச சாஸ்திரி

இன்று மதியம் என்னைப் பார்க்க, ஸ்ரீனிவாச சாஸ்திரி பயணியர் பங்களாவிற்கு வந்தார். இவரை எனக்குப் பரிச்சயம் இல்லை. ஆனால் மும்பையிலிருந்து இவருடன் கடிதப் போக்குவரத்து இருந்தது. இவர் வித்வான் என்றும் இவர் சங்கீத கிரந்தங்களை பிரதி செய்து

[6] [गुरु शुश्रूषया विद्या पुष्कलेन धनेन वा
अथ वो विद्यया विद्या चतुर्थी न उपलभ्यते]

எனக்குக் கொடுப்பார் என்று இவரைப் பற்றி எனக்கு மும்பையில் வேதாச்சாரியா ஸ்ரீதர சாஸ்திரி நாசிக்கார் சொல்லி இருந்தார். அதனால் அவருக்கு நான் எழுதி இருந்தேன், அதே போல் அவரும் மூன்று கிரந்தங்களை எனக்கு அனுப்பிக் கொடுத்தார். அவை 1.சங்கீத மகரந்தம் 2. சத்வாரிம்ஶத்ராக நிரூபணம் 3. தத்தில கோஹலீயம் ஆகியவை. இந்த நல்ல மனிதருக்கு நான் சென்னையிலிருந்தே கடிதம் எழுதி இருந்தேன். ஆனால் அவர் ஊரில் இல்லாததால், சற்று தாமதமாக வந்திருக்கிறார். இருக்கட்டும். இவரை நேரில் பார்த்து பரிச்சயம் செய்துக் கொண்டது நல்லதாகப் போய் விட்டது. இவர், "தஞ்சாவூரின் எடுகேஷனல் இன்ஸ்பெக்டர் [educational inspector] , நாகோஜி ராவ் பெரிய மனிதர். அவர் பி.ஏ. படித்திருகிக்கிறார் மற்றும், சங்கீத சாஸ்திரத்தில் மிகவும் நிபுணர். அவர் இந்த சங்கீதத்திற்காக முயற்சிகள் பல மேற்கொள்கிறார். அவரிடம் ஸ்ரீ சோமநாத ஐயர் என்று ஒரு பிரசித்தி பெற்ற பாடகர் இருக்கிறார், மற்றும் அவர்கள் முதல்நிலைப் பள்ளிகளில் சங்கீதம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார். அந்த கண்ணோட்டத்துடன் ஒன்றிரண்டு எளிமையான சுருக்கமான புத்தகங்களை எழுதி இருக்கிறார். மொத்தத்தில் இந்த மனிதரைச் சந்திப்பது மிகவும் நல்லது மற்றும் உபயோகமாகவும் இருக்கலாம்" என்றார். இதைச் சொன்னவுடனே நான் அவரைப் பார்ப்பதற்குத் தயார் என்றேன், அவர் நாகோஜீராவிடம் சொல்லக் கிளம்பிவிட்டார். பிறகு ஒரு மணி நேரத்திற்குள் திரும்பி வந்து, ஸ்ரீ நாகோஜி ராவ் தான் வேலைகளை முடித்துக் கொண்டு மூன்றரை மணிக்கு எனக்காக காத்துக் கொண்டிருப்பார் என்று சொன்னார்.

ஸ்ரீ நாகோஜி ராவுடன் சந்திப்பு

பிறகு மூன்றரை மணிக்கு, ஸ்ரீனிவாச சாஸ்திரியுடன் நாகோஜீராவைச் சந்திக்க அவருடைய அலுவலகத்திற்குச் சென்றேன். சொன்ன பிரகாரம் அவர் எல்லா வேலைகளையும் முடித்து விட்டு கைக்கு அருகில் ஹார்மோனியப் பெட்டியை வைத்துக் கொண்டு எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார். இதைத் தான் உண்மையான நன்னடத்தை என்பது. இந்த மனிதர் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் அதிகாரியாக இருந்தாலும் தனக்குப் பிடித்த விஷயத்தில், சிறு பிள்ளைபோன்ற அவரது ஆர்வத்தைப் பார்த்து எனக்குப் பேரானந்தமானது. உபசாரத்திற்காகப் பரிச்சயம் செய்துக்கொண்டபின், நாகோஜி ராவ் நான் எந்த விஷயத்தைப் பற்றி ஆராய இங்கே வந்தேன் என்றும் அவர் அதற்கு எவ்வாறு உதவி செய்ய முடியும் என்றும் கேட்டார். இதன் பிறகு எங்கள் சம்பாஷணை பின்வருமாறு நடந்தது:-

நான்: ஸ்ரீ நாகோஜீராவ்! நீங்கள் இந்த விஷயத்திற்காக பல நாட்கள், மிகவும் முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றும் நீங்கள் சங்கீத விஷயம் பற்றி "ப்ரைமர்ஸ்" [primers] முதலிவை எழுதி இதைப் பள்ளிகளிலும் பரப்பி இருக்கிறீர்கள். இந்த விஷயம் வரலாற்றில் மூதாலான தஞ்சாவூரின் "ரிக்கார்ட்ஸில்" [records] எப்போதும் இருக்கும் என்று சொல்வதில் தடை எதுவும் இல்லை. எங்கள் பக்கத்தில் இதுபோன்ற முயற்சிகளில் வெற்றி கிடைக்க இன்னும் நிறைய நாட்கள் ஆகும். ஏனென்றால் அங்கே இருக்கும் பத்ததியைப் பற்றி இது போன்ற நியமங்களை எழுதுபவர்கள், மற்றும் ஆர்வத்துடனும் உத்ஸாகத்துடனும் வேலை செய்ய அதிகாரிகள் இன்னும் முன் வரவில்லை. அந்த சங்கீதத்திற்காக, இது போன்ற நல்ல பிரைமர்கள் யாரும்

எழுதக்கூட இல்லை. எங்கள் பக்கத்தில், மேளகர்த்தாக்கள் மற்றும் அவற்றின் உரிய ஸ்வரங்களைப் புத்தகத்தை வைத்து அந்த மேளங்களின் ஜன்ய ராகங்கள், மற்றும் ஆரோஹணம் அவரோஹணம் முதலியவைப் பரவலாக இல்லாததனால் இந்த வகையில் முன்னேற்றம் ஆக சாத்தியம் இல்லை. இவ்வாறு நடப்பது நல்லது, நடந்துக் கொண்டு தான் இருக்கும். அங்கேயுள்ள வித்வான்களுக்கு இங்கே இருப்பது போன்ற ஆர்வம் வந்தால் அதன் பரிணாமம் நன்றாகத் தான் இருக்கும். அங்கே இருக்கும் ராக-ராகினிகளின் சரியான வகைப்படுத்தல், மற்றும் அவற்றின் வர்ஜ்யங்கள், ஆரோஹண-அவரோஹணம் முதலிய நியமங்கள் சரிவர அமைந்தாலே நல்ல பாதை கிடைத்ததாகி விடும். சரி, நான் உங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன் - நீங்கள் இந்த புத்தகங்களை எல்லாம் எழுதியிருக்கிறீர்கள், மற்றும் ராகத்தின் நியமங்களைக் காட்டியிருக்கிறீர்கள், பரப்பி இருக்கிறீர்கள், இவற்றுக்கெல்லாம் ஆதாரமாக உள்ள கிரந்தம் எது? அந்த கிரந்தம் சமஸ்கிருதத்தில் இருக்கிறதா அல்லது தேசீ பாஷையில் இருக்கிறதா?

ப: நான் முதலில் இந்த விஷயத்திற்காக, பல சமஸ்கிருத புத்தகங்களை தலை கீழாகப் படித்தேன். ஆனால், அதனால் எந்த வித லாபமும் இருக்கவில்லை. நான் இன்றைய சங்கீதத்திற்கும், பண்டைய சங்கீதத்திற்கும் எந்த விட சம்பந்தமும் இல்லை என்ற மதத்தைச் சாரந்தவனாகிவிட்டேன். இது அதிலிருந்து வந்ததா இல்லையா என்பது பற்றி எதுவும் தெரியாது. அது முற்றிலும் வீணான பாண்டித்யம். ஏதாவதொரு பண்டைய அறிஞரை, மரியாதையோடு ஒரு கலாச்சார ரீதியாகப் பார்ப்பதில் ஆர்வமிருந்தால் அதை ஆராயலாம். ஆனால் சாஸ்திரீய திருஷ்டியில், அதற்கு ஒரு உபயோகமும் இல்லை என்று நான் சொல்ல முடியும்.அதை எல்லாம் வைத்துப் பார்த்தால் எங்கள் தெற்கத்திய வகைப்பாடு உத்தமமானது என்று கருதுகிறேன்.

கே: அது உத்தமமானது என்று நானும் சொல்வேன். ஆனால் அந்த சமஸ்கிருத கிரந்தங்களைப் பற்றிய பிராசீன சங்கீதத்தைப் பற்றியும் உங்களின் மதிப்பின்மை என்னை சற்றே சங்கடப்படுத்துகிறது என்று சொல்ல உங்கள் அனுமதி வேண்டுகிறேன். நான் முடிவாக ஒரு கேள்வி கேட்கிறேன், நீங்கள் சங்கீத ரத்னாகரம் படித்திருக்கிறீர்களா? அதில் உள்ள ஸ்ருதிகளானால் ஆன ஸப்தகங்களை நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்களா?

ப: அவற்றை எல்லாம் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் யாரும் அந்த ஸ்ருதிகளை உபயோகிப்பதில்லை. எங்கள் 12 ஸ்வரங்களாலான ஸப்தகங்களே எங்களுக்கு நன்றாக இருக்கிறது

நான்: ஆனால் ஐரோப்பியர்கள் உங்கள் ஸப்தகங்களின் வடிவங்களை எங்களிடமிருந்து தான் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் இங்கே வந்த பின், எங்களதைப் பார்த்து உங்களவருள் ஏதாவதொரு பண்டிதர் இந்த வகைப்பாட்டை செய்திருக்கிறார் என்றால், இதற்கு நீங்கள் ஏதேனும் பதில் கொடுக்க முடியுமா? அப்படி கொடுக்க முடிந்தால் அது எந்த கிரந்தத்தின் ஆதாரத்தில் இருக்கும்?

ப: என்னால் இதற்கு சரியான பதில் சொல்வது இயலாது.

கே: சமஸ்கிருத கிரந்தங்களின் சுத்த ஸ்வரங்களின் ஸப்தகம் எது? அதாவது அவற்றை வைத்துக் கொண்டு நீங்கள் எந்த மேளத்தை அமைப்பீர்கள் ?

ப: அதை என்னால் சொல்ல முடியாது. ஆனால் இங்கே "மாயாமாளவ" த்திலிருந்து தான் பயிற்சி தொடங்கப் படுகிறது. ஆனால் கிரந்தங்களில் என்ன இருக்கிறது? ரத்னாகரத்தில் என்ன இருக்கிறது?

நான்: பாரிஜாதத்தின் ஆதாரத்தின் படி, அது கரஹரப்ரியா என்று முடிவாக சொல்ல முடியும். (இதற்குப் பிறகு, காகிதத்தில் படம் வரைந்து, அவை எப்படி இருந்தது இந்த விஷயத்தை அவருக்கு விளக்கினேன்). சரி மூர்ச்சனையைப் பற்றி நீங்கள் ஏதும் அறிவீர்களா? நீங்கள் அவற்றின் உபயோகத்தைப் பற்றி யோசித்தீர்களா?

ப: இல்லை அது எனக்குத் தெரியாது. நான் காகிதத்தை எடுத்து, அதையும் விளக்கினேன். அதற்குப் பிறகு அவர் அதிசயித்து, தான் இது வரை புத்தகத்தை இந்த கண்ணோட்டத்துடன் படிக்க வில்லை என்று ஒத்துக் கொண்டார்.

அப்போது உங்களுக்கு அவை முற்றிலும் உபயோகமற்றவை, வெறும் பாழடைந்த கட்டிடங்கள் போன்றவை என்று சொல்ல என்ன அதிகாரம் இருக்கிறது? இடம் மற்றும் காலத்திற்கேற்ப, ராகங்களில் மாற்றங்கள் வந்துள்ளன. ஆனால் அதன் வளர்ச்சி எவ்வாறெல்லாம் நடந்தது, மற்றும் முதலில் எந்தப் பகுதி இருந்தது, எது எவ்வளவு மாறியது, இதைப் பார்ப்பது உபயோகமற்றது என்று என்னால் சொல்ல முடியாது. உங்களைப் போன்ற வித்வான்களும் அப்படிச்சொல்லக்கூடாது என்று நான் நினைக்கிறேன். எல்லா கிரந்தங்களின் ஸப்தகமும் "கரஹரப்ரியா" அல்ல. உண்மை என்னவென்றால் அது பாரிஜாதத்தின் படி மட்டும் தான்.

நாகோஜி - நான் முதலில் ஒரு முறை இதைத்தான் அனுமானம் செய்தேன் (தன்னுடைய எழுத்தரிடம்) என்ன கொஞ்ச நாட்கள் முன்னர் யாரோ கேட்டபோது நான் "கரஹரப்ரியா" என்று இந்த ஸப்தகத்தின் பெயரை நான் சொன்னேன், நினைவிருக்கிறதா. (எழுத்தர் - ஆம்) ஆனால் அது வெறும் அனுமானம் மட்டுமே. இப்போது நீங்கள் ஆதாரத்துடன் விளக்கியது நன்றாகப் போய் விட்டது. இதே போல் கிராமத்தைப் பற்றியும் நான் அனுமானம் செய்திருக்கிறேன். ஆனால் நீங்களே அதையும் விளக்குங்கள். அதனால் நான் மேலும் அதைப்பற்றி சிந்திக்க முடியும்.

கே: நீங்கள் சமஸ்கிருத கிரந்தங்களை சரிவர புரிந்துக் கொள்ளவில்லை என்று இப்போது தோன்றுகிறது. அதனால் தான் அதனை உபயோகப்படுத்த முடியவில்லை. ஸப்தகங்களைப் புரிந்துக் கொண்டால், ராகத்தின் வர்ணனைகளைப் புரிந்துக் கொண்டால், ராகத்தின் ஸ்வரூபங்களைப் பற்றிக் கற்பனை செய்வது சாத்தியமாகும். ஆனால் அதே பெயருள்ள அநேக ராகங்கள் உங்களது ஜனக-ஜன்ய ராகங்களில் உள்ளன என்றால் பண்டைய மட்டும் இன்றைய

ராகங்களை ஒப்பாராய்வது முடியாதா என்ன? இவ்வாறு செய்வது லாபகரமாகத் தான் ஆகும், குறைந்த பட்சம் சங்கீதத்திற்கு ஒரு நல்லவிதமான வரலாறு கிடைக்கும் அளவா?

ப: ஆம். அது உண்மை. இந்தத் தேடல் நல்லது. நான் சொல்வது என்னவென்றால், இன்று மேள பத்ததி மனத்திற்குப் பிடித்ததாகவும் பரவியும் இருக்கிறது. பிறகு பண்டைய காலத்து விஷயங்களைத் தேடிச்செல்ல என்ன அவசியம்?

நான்: சரி. இது குறித்து நான் மேலும் ஒன்றும் சொல்லப்போவதில்லை. இது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது. உங்கள் மேளங்கள் தேசத்தில் அனைவருக்கும் பிடிக்கும் என்று உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா? உங்கள் ஊரிலேயே இவை எல்லோருக்கும் பிடித்தமானவையா?

ப: இல்லை. எல்லா மேளங்களும் ஒரே போல ஜனரஞ்சகமானவை அல்ல. மேலும் அவை மக்களுக்குப் பிடித்தவையும் அல்ல. உதாரணம் - கனகாங்கி மற்றும் சில ராகங்கள் மக்களுக்குப் பிடிப்பதில்லை. இதை நான் மட்டும் சொல்லவில்லை, கிரந்தக்காரர்கள் கூட அப்படித்தான் சொல்கிறார்கள்.

கே: எந்த கிரந்தக்காரர்?

ப: எட்டையாபுரத்தில் சுப்பராம தீக்ஷிதர் என்ற பெயர் கொண்ட, பிரசித்தி பெற்ற வித்வான் இருக்கிறார். அவர் தமது "சங்கீத ஸம்ப்ரதாய பிரதர்சினி" என்ற புத்தகத்தில் இவ்வாறு தெளிவாகக் கொடுத்திருக்கிறார். இந்த பத்ததியை உண்டாக்கியவர் தான் க்ரம எண்ணிக்கை [permutations] யின் சுருங்கிய சித்தாந்தத்தின் படி, எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்தார், ஆனால் ஜனரஞ்சகமாக எவை இருக்கக் கூடுமோ அவை மட்டுமே ஜனரஞ்சகமாகின்றன.

கே: உங்கள் பக்கத்தில் எந்த மேளங்கள் மற்றும் ஜன்ய ராகங்கள் மிகவும் லோகப்பிரியமானவை?

ப: ஆம். அதைச் சொல்கிறேன்.

வரிசை எண்	மேளத்தின் பெயர்	ஜன்ய ராகம்
8.	தோடி	1. ஆசாவரீ 2. தன்யாஸ்ரீ 3. புன்னாகவராளி 4.பூபாளம் 5. கண்டா (கமலீ ப்ரிய)
15	மாயாமாளவ	1.கௌள 2. நாதராமக்ரி 3. சாவேரி 4. பரஜ்
16	சூர்யகாந்த	1.லலித் 2. வசந்த் 3.சௌராஷ்ட்ர
20	நடபைரவி	1.ஆனந்த பைரவி 2.பைரவி 3. முகாரி 4.ரீதிகௌள
22	கரஹரப்ரியா	1.கானடா 2. காஃபி 3. ஸ்ரீ 4. தரபார் 5.நாயகி 6. மத்யமாவதீ 7. ஹுஸேனி
28	காம்போஜி	1.ஜிஞ்ஜோடி 2.கமாஜ் 3.காமோதி 4. கேதாரகௌள 5. ஷஹானா 6. நாடகுறஞ்சி 7. பிஹாகடா 8. மோஹனம் 9. ஸோரடி
29	சங்கராபரணம்	1.சங்காராபரணம் 2. அடா3ணா (அடாணா) 3. ஆரபி 4. குறஞ்சி 5.கேதார 6. சாவேரி (சுத்த சாவேரி) 7.தேவகாந்தாரி 8. நவரோஜ் 9. நீலாம்பரி 10. பிஹாக் 11. பிலஹரி 12. ஹம்ஸத்வனி
51	காமவர்த்தனி	(நம்முடைய பூர்வீ)
53	பூர்வீகல்யாணி	1. பூர்வீ (மார்வா தாட்)
65	மேசகல்யாணி	1. கல்யாண் 2. சாரங்

இந்த மேளங்களும் ஜன்யங்களும் எங்கள் தெற்கில் ஜனரஞ்சகமானவை. இதன் மூலம் இங்கேயுள்ளவர்களின் ருசியை நீங்கள் புரிந்துக் கொள்ள முடியும்.

கே: நேற்று உங்கள் ஊரின் ராமதாஸ் ஸ்வாமி மடத்தின் அதிபதி என்னைப் பார்க்க பயணியர் பங்களாவிற்கு வந்திருந்தார். அவர் சமஸ்கிருத கிரந்தங்கள் படித்த மற்றும் புரிந்த வித்வான்கள் பலர் தஞ்சாவூரில் இருக்கிறார்கள் என்று சொன்னார். நீங்கள் அவரைச் சந்தித்து இது குறித்து பேசியிருக்கிறீர்களா?

ப: எனக்குத் தெரிந்து, இந்த ஊரில் அப்படி ஒருவரும் கிடையாது . சிலர் அங்கே-இங்கே ஏதாவது ஸ்லோகங்களை ஏதாவதொரு புத்தகத்திலிருந்து மனனம் செய்திருக்கலாம், அது பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் இங்கே கிரந்தங்களைப் புரிந்துக் கொண்டவர்களைப் பார்த்ததும் இல்லை, அவர்களைப் பற்றிக் கேட்டதும் இல்லை. சங்கீத கிரந்தங்களைப் பற்றிய விவாதம். உங்கள் ஊரில் நடப்பது போல, அங்கே இங்கே எதுவும் இல்லை. எங்கள் செய்த-

செய்யப்பட மேளங்கள் , ஜன்ய ராகங்கள் இவற்றைத் தவிர வேறு எதுவும் அறிவதில்லை. இந்த ஊரில் இது மட்டுமே பிரசாரத்தில் இருக்கிறது.

கே: உங்கள் ஊரின் ராகங்களின் ஸ்வரூபங்களில் மதபேதம் இருந்து வந்திருக்கிறதா?

ப: மதபேதங்கள் நிறைய இருந்திருக்கின்றன. பெயரில் ஒற்றுமை இல்லை. ஆனால் ரூபத்தில் அதாவது வர்ஜ்ய அவர்ஜ்ய ஸ்வரங்களில் , மற்றும் ஆரோஹ, அவரோஹணத்தில் பாடுபவர்கள் ஜனரஞ்சகத்திற்காக சிற்சில மாற்றங்கள் செய்வதுண்டு, அவை மக்களுக்குப் பிடிக்கிறது.

கே: பிறகு பாடுபவர்களுக்குள் மதபேதம் வந்தால், எந்த கிரந்தத்தைப் பிரமாணமாகக் கொண்டு அதை நிர்ணயிக்கிறார்கள்? அது சமஸ்கிருதத்தில் இருக்கிறதா பிராகிருதத்தில் இருக்கிறதா?

ப: யாரும் எந்த பிரமாணக் கிரந்தத்தையும் வைத்துக் கொண்டாதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தன்னுடைய மதத்தை முன் வைக்கிறார்கள். ஆனால் நல்லவேளையாக, எட்டையாபுரத்தின் தீக்ஷிதர் ஒரு பெரிய கிரந்தத்தை பிரபலப்படுத்தி இருக்கிறார். இது போன்ற விவாதங்களை நிர்ணயிப்பதற்காக அந்த கிரந்தம் பெரிய ஆதாரமாக இருக்கும் என்று தோன்றுகிறது, அதில் தீக்ஷிதர் ஜன்ய ஜனக ராகங்களின் ஸ்லோகத்தைக் கொடுத்திருக்கிறார். கிரந்தம் நன்றாகச் செய்யப் பட்டிருக்கிறது. என்னுடைய ஆசை அது சீக்கிரம் மக்களால் ஏற்கப்படவேண்டும் என்பது தான்.

கே: மேளகர்த்தா பத்ததி எவ்வளவு பழமையானது என்பதைக் கூற முடியுமா? அதைக் செய்தவரைப் பற்றி பொதுவான விஷயங்கள் எங்கே கிடைக்கும்?

ப: என்னுடைய கருத்துப்படி, அது 15-16 ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது. நான் கேள்விப்பட்டது என்னவென்றால், கோவிந்த தீக்ஷிதரின் ஸம்ப்ரதாயத்தில் வந்த வேங்கடமகி என்ற சிஷ்யர் தான் இதைச் செய்தார். இது நல்ல முறை என்பதில் சந்தேகமே இல்லை. உங்களுக்கு சுப்பராம தீக்ஷிதரின் புத்தகத்தில் இது பற்றிய தகவல் கிடைக்கும். கோவிந்த தீக்ஷிதரும் தஞ்சாவூரைச் சேர்ந்தவர். சுப்பராம தீக்ஷிதர் தன்னுடைய புத்தகத்தில் சமஸ்கிருத ஸ்லோகங்களுடன் ராகத்தைக் கொடுத்திருக்கிறார். அந்த புத்தகம் தெலுங்கு லிபியில் இருக்கிறது.

இந்த பேச்சு வார்த்தை முடிந்தபின், என் முயற்சி வேறு திசையில் இருப்பதாலும், உங்கள் சமஸ்கிருத கிரந்தங்களில் ஈடுபாடின்மையின் காரணமாகம், நமக்குள் வேறு எதுவும் விவாதிப்பதில் பயன் இல்லை என்று சொன்னேன். நீங்கள் சொன்னபடி இந்த ஊரில் எனக்குத் தேவையான விஷயம் கிடைக்கும் சாத்தியம் மிகவும் குறைவாகப் படுகிறது. ஆனால் என் மனம் இந்த ஊரில் எல்லா பிரசித்தி பெற்ற சங்கீத ஸ்தலங்களையும் நேரில் சென்று பார்த்து, என்ன கிடைக்கிறது என்று பார்க்க ஆவலாக இருக்கிறது.

மேளகர்த்தா நன்றாகவே இருக்கிறது, அதைப் பற்றி தகவல் கிடைப்பது எளிதாக இருக்கிறது. சின்னஸ்வாமி முதலியார் தன் "ஔரியண்டல் மியூஸிக்" என்ற புத்தகத்தில் நன்றாகச் சொல்லி

இருக்கிறார், மேலும் சென்னையில் சிங்கராச்சாரியார் தன் சிறு புத்தகத்தில் எழுதி இருக்கிறார். அந்த ராகங்கள் கேட்பதற்கு எப்படி இருக்கிறது, மற்றும் அதன் கமகங்கள் எவை மற்றும் அவற்றின் பெயர்களில் வழங்கப்பெறுகிறது, அந்த ராகங்களைப் பாடும் போது எப்படி , எங்கெங்கு நிற்கிறார்கள், இவற்றையெல்லாம் மட்டும் அறிந்துக்கொள்ள வேண்டும். உங்கள் பகுதியின் ஆயிரக்கணக்கான ராகங்கள், அவற்றின் கிரந்தங்களில் கொடுக்கப்பட்ட பெயர்களிலேயே வழங்கினால், பிறகு கிரந்தங்களில் கொடுக்கப்பட்ட ராகங்கள், மற்றும் உங்கள் ராகங்களின் ஸ்வரூபங்களில் என்ன ஒற்றுமை, என்ன வேற்றுமை என்பதை ஆராயந்து, அது எப்படி எவ்வாறெல்லாம் என்பதையெல்லாம் இருக்கின்றன என்று யோசிக்கவேண்டும் என்பதே என்னுடைய இந்த முயற்சியின் நோக்கம். இன்றைய ஸ்வரூபம் கிரந்தங்களில் கொடுக்கப்பட்ட ஸ்வரூபத்தோடு ஒத்துப் போகிறதா இல்லையா என்பதையும் பார்க்க வேண்டும். ஆனால் இப்போது இது பற்றிப் பேசுவது சாத்தியம் இல்லை. நாகோஜிராவ் தன்னுடைய மனத்தில் ஒரு பெரிய ஆராய்ச்சி செய்யும் ஆவல் இருக்கிறது என்றும் அதை சுருக்கமாக எனக்குச் சொன்னார். எங்களுடைய பத்ததியில் ஒவ்வொரு ராகத்திற்கும் ஆரோஹணம், அவரோஹணம் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆரோஹண-அவரோஹணங்கள் கொடுக்கப் பட்டிருந்தாலும், வெறும் ஆரோஹண-அவரோஹணத்தினால் மாத்திரம், ராகத்தின் ஸ்வரூபம் உங்கள் முன் நன்றாக தோன்றுவதில்லை. அதில் ஆங்காங்கே நிற்க வேண்டியிருக்கிறது. சில ஸ்வர ஸமூஹங்கள் ஒன்றுக்கொன்று ஓரளவு ஒரே போல் இருக்கின்றன. இதையெல்லாம் கவனித்தபின், இது போன்றவற்றிற்கு சாஸ்திர ரீதியாக ஏதேனும் காரணம் இருக்கும் என்று நான் சிந்தித்தேன். இரண்டு சதுஷ்கங்கங்களை (tetrachord) அவ்வப்போது ஒரே போலச் செய்கிறோம். அதனால் குறிப்பிட்ட ஸ்வரங்களுக்கு குறிப்பிட்ட ஸ்வரங்களோடு சம்வாதாத்மக சம்பந்தம் இருக்கிறதா என்று ஆராய வேண்டும். இவ்வாறு இன்று சிற்சில ஸ்தானங்களில் ஏன் நிற்கிறார்கள் என்று புரியும், மற்றும் அதன் நியமங்களை வரையறுக்க முடியும்.

இதற்கு முன்னரும், ஏதேனும் ஒரு சங்கீதம் பிரசாரத்தில் இருந்திருக்கும் என்று தான் நான் எப்போதும் ஒத்துக் கொண்டிருக்கிறேன். மேலும், "சர்வைவல் ஆஃப் தி ஃபிடஸ்ட்" [Survival Of the fittest] என்ற நியமத்திற்கேற்ப, எந்த ராகம் பிரசாரத்தில் இருக்க முடியுமோ அவற்றை எந்தப் பண்டிதராவது - அவர் கோவிந்த தீக்ஷிதரோ அல்லது "மகியோ" (வேங்கட), இந்த அழகான முறையை வகைப்படுத்தியதால் அது இன்று வரை பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. இது என்னுடைய ஊகம் (hypothesis). பின்னர் என்னுடைய கருத்து என்னவென்றால் இவற்றின் ஆரோஹண அவரோஹணத்தின் வடிவில் இவற்றிற்கு என்ன ரூபம் இருக்கிறது அதை ஏதாவதொரு சித்தாந்தத்தின் அடிப்படையில் நிச்சயித்திருக்க வேண்டும். இதற்குப் பிறகு ஸ்வரங்களின் அமைப்பு, சாதுர்யம் இதில் கவனம் செலுத்தி இருக்க வேண்டும். ஒவ்வொரு ராகத்திலும் மேலே செல்லும் போதும், கீழே வரும் போதும், எங்கெங்கே நிற்க வேண்டும், எந்த ஸ்வரத்தை நீண்ட நேரம் பிடிக்கலாம், எங்கே வேகமாகப் பிடிக்கவேண்டும், இதை முன்னோர்கள் நன்றாகக் கவனித்திருக்கிறார்கள்.

இவ்வாறு பார்த்தபின், எந்த ஸ்வரங்களுக்குள் 8 அல்லது 6 செமிடோன்ஸ் [semitones] இடைவெளி இருக்கிறதோ அவை பரஸ்பரம் சம்வாதியாகத் தெரிகிறது என்று எனக்குப்

புரிந்தது. இதை ஒரு உதாரணத்தால் புரிந்துக் கொள்ளலாம். அது எவ்வாறெனில்: க ம க மற்றும் த நி த - இவை ஒரே போல இருக்கிறது, ஏனெனில் "த" என்பது "க" வை விட 6 செமிடோன்ஸ் தள்ளி இருக்கிறது. நி என்பது ம வின் அதே பிரமாணத்தில் இருக்கிறது. மீண்டும் க என்ற ஸ்வரம் நி-யுடன் சம்வாதியாக இருக்கும், ஏனெனில் அவற்றின் இடைவெளி 6 செமிடோன்ஸ். எல்லா ஆரோஹண-அவரோஹண ராகங்கள் பாடும் போது அவற்றின் வெவ்வேறு ஸ்வர ஸமூஹங்கள் இந்த சித்தாந்தத்தின் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறு பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு ராகங்களில் இவ்வாறு ஸ்வர ஸமூஹங்களைப் பார்த்து ஒரேபோல, "ஸரிகம பதநிஸ" என்றவாறு ஒரே வேகத்தில் ஸ்வரங்களில் மேலே சென்றால் ராகம் உண்டாகாது, அவற்றின் சிறுசிறு பகுதிகளாகச் செய்து, குறிப்பிட்ட ஸ்தானத்தில் நின்றால், ராகம் அடையாளம் காணும் படி இருக்கும் என்று யோசித்திருக்கிறேன். இதன் தத்துவம் என்ன? இதைத் தேடத் தேட, ஒரு முறை இவ்வாறு நின்றால், ஸ்வரஸமூஹத்தின் அமைப்பு ஒரே மாதிரி, மற்றும் கீழேயுள்ள ஸ்வர சமூகத்தின் குறிப்பிட்ட அளவையில் ஆகிவிடுகிறது என்று தோன்றியது. இந்த அளவை 8 அல்லது 6 செமிடோன்ஸ்-ஆக இருக்கலாம் என்று தோன்றியது. இதனால் ராகத்தைத் தேடுவது சாத்தியமாகிறது என்று எனக்குப்பட்டது. நான் இதன் உதவியால் புழக்கத்தில் இருக்கும் எல்லா ராகங்களைப் பற்றியும் நன்றாக சிந்தித்துப் பார்க்கலாம் என்றிருக்கிறேன். மேலும் ஒரு நோட்புக்கில் என்னுடைய அனுபவத்தை எழுதப் போகிறேன். இது குறித்த என் எண்ணத்தை நான் ஸஹஸ்ரபுத்தேவிடம் கடிதம் மூலம் தெரிவித்தேன். ஆனால் அவரிடமிருந்து பதில் வரவில்லை. நீங்கள் சிந்தித்து வைத்ததோடு சமஸ்கிருத வாதி-சம்வாதி நியமத்தை ஒப்பிட்டுப் பார்த்தீர்களா என்று கேட்டேன். ஏனெனில் நம் கிரந்தங்களில் வாதி-சம்வாதியில் ஸ்வரங்களில் சம்பந்தம் இதே போலத் தான் சொல்லப்பட்டிருக்கிறது. உங்கள் சித்தாந்தத்தோடு அந்த நியமங்களையும் சேர்த்துக் கொண்டால் அதற்கு ஒரு புதிய பரிணாமம் கிடைக்கும். அவர் அந்த வாதி-சம்வாதி என்ன என்று விளக்கும்படி கேட்டார்.

நானும் அப்படியே செய்தேன். அவர் நான் நம் கிரந்தக்காரர்களின் கருத்தை நன்றாகவே விளக்கினேன், ஆனால், அவர் சொன்னது அவருடைய சொந்தக் கருத்து என்றார். (அறிவிப்பு - நாகோஜீராவ் முன்னரே சொன்னார், அவர் சமஸ்கிருத கிரந்தங்களைப் பார்த்த பின் அவை உபயோகமற்றவை என்று விட்டு விட்டார்) துரதிஷ்ட வசமாக, எங்கள் பக்கத்தில் ஆரோஹண-அவரோஹண சம்பந்தமாக மிகவும் குழப்பங்கள் இருக்கின்றன, மேலும் இங்கே இருப்பது போல நன்றாக விளக்கப்பட, நல்ல முறையில் வகைப்பாடு இல்லை. அதனால் இந்த சித்தாந்தம் எங்கள் பத்ததிக்கு எவ்வளவு தூரம் உபயோகப்படும் என்பதை நான் தேடிப் பார்க்கிறேன் பிறகு உங்களுக்கு எழுதிச் சொல்கிறேன். அது வரை உங்களது இந்த எண்ணத்தின் மீது எந்த விட உரிமையும் கொண்டாட மாட்டேன் என்று நான் சொன்னேன்.

ஸ்ரீ நாகோஜீராவ் - எனக்கு இந்த கருத்தைச் சொன்னவன் என்ற உரிமை வேண்டாம். நான் ஒரு கருத்திற்கேற்றவாறு பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். இங்கே முக்கால்வாசி கிரந்தங்கள் படிக்கப்படாமலிருப்பதால், எனக்கு அதைப்பற்றிய தகவல் சொல்லித்தர யாரும் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்திருந்தால், என் கருத்தை வளர்த்தியிருக்கலாம்.

உங்களுக்கு சிரமமாக இருந்தாலோ முடியவில்லை என்றாலோ நான் இந்த இன்றியமையாத கிரந்தங்களின் பாகங்களை விளக்குகிறேன். ஒரு முறை நீங்கள் புரிந்துக் கொண்டுவிட்டால் உங்கள் முயற்சிகளோடு அவை உங்களுக்கு உபயோகமாக இருக்கும் என்றேன்.

நா- எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். நீங்கள் மூல ஸ்வரஸப்தகமாக எதைக் கருதுகிறீர்கள்?

நான் - "பாரிஜாதத்தின்" ப்ரமாணத்தின் படி "கரஹரப்ரியா" என்பேன்.

நா - இதோ பார் (தன்னுடைய எழுத்தாரிடம்) நான் அந்த மனிதருக்கு என்ன சொன்னேனோ அது சரியாகவே போய்விட்டது. நான் கிரந்தத்தைப் படிக்காவிட்டாலும் ஒரு ஊகமாகச் சொன்னேன். இதைக் காகிதத்தில் விளக்கினால் நன்றாக இருக்கும். (நான் ஸ்ருதிகளை எழுதி அவருக்கு விளக்கினேன்) இப்போது அது எனக்குப் புரிந்தது. என் சித்தாந்தத்திற்கு இது மிகவும் உதவியாக இருக்கும் என்று தோன்றுகிறது. உங்கள் மூர்ச்சனைகளை எனக்கு விளக்குங்கள். (இதையும் விளக்கினேன் மேலும் ஐரோப்பிய சங்கீதத்தோடு இதன் தொடர்பையும் விளக்கினேன். அதன் சிறப்பையும் விளக்கினேன்.) இந்த விஷயங்கள் எங்கள் பக்கத்தில் யாருக்கும் தெரியாது. எங்கள் பக்கத்தில் பிரயோகரீதியாகத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் - அவர்கள் பாடுவதில் நிபுணர்கள். ஆனால் அவர்களுக்கு சாஸ்திரம் தெரியாது. தம் வேலையைச் செய்யத் தெரியும். அவர்களைப் பாடச் சொல்லி உங்களைக் கேட்க வைக்கிறேன், அவர்களுள் ஒருவர் நாளை மறுநாள் திங்கட்கிழமை (தேதி. 28 நவம்பர்) அன்று வரப்போகிறார். அவர் இந்த விஷயமாக சமஸ்கிருத புத்தகமும் வாசித்திருக்கிறார் என்று சொல்கிறார்கள்.

நான் : மிகவும் நல்லது. அவரைச் சந்தித்துப் பேசும் பாக்கியம் எனக்கு கிடைத்தால் உபயோகமாக இருக்கும். என்னுடைய கருத்து என்னவென்றால் முன்னர் இருந்த கிரந்தங்களைப் படிக்காமல் அவற்றை வீண் என்று சொல்வதை விட, படித்து விடுவது அதிக லாபகரமாக இருக்கும் என்பது தான். கிரந்தங்களின் சங்கீதம் இப்போது இல்லை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இல்லாவிட்டாலும், அவை இப்படி இருந்தன, மற்றும் இவ்வாறு இருக்கிறது என்று நிர்ணயிப்பது தீயதா என்ன?

நா: உங்கள் முயற்சி மிகவும் போற்றத்தக்கது. எனக்கு அவ்வளவு நேரம் கிடையாது. உங்கள் ஹிந்துஸ்தானி ராகத்தின் ஆரோஹண-அவரோஹணம் எனக்குக் கிடைத்தால் அதையும் என் சித்தாந்தத்தில் சேர்த்துக் கொள்வேன்.

நான்: நான் வீட்டுக்குச் சென்று, முனைந்து காகிதத்தில் எழுதி அனுப்பிக்கிறேன், அதற்குப் பிறகு இந்த விஷயமாக எது சரி, எது சரியல்ல என்பதைப் பற்றி எழுதுங்கள்.

நா: உங்களுக்கு இங்கே எங்கெல்லாம் உதவி தேவையோ சொல்லுங்கள். நீங்கள் சொன்னால் உங்கள் இருப்பிடத்திற்கான ஏற்பாட்டைக் கூடச் செய்கிறேன். உங்கள் அடுத்த கட்ட பயணத்திற்கு என் நண்பர்களுக்குக் கடிதம் தருகிறேன். நீங்கள் இங்கேயிருக்கும் வரை நாம் இந்த விஷயத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கலாம்.

நான்: நன்றி . எனக்கு எல்லா ஏற்பாடும் இருக்கிறது. அப்புறம் தேவை என்றால் கடிதம் எழுதுகிறேன்.

ஞாயிற்றுக்கிழமை 27-11-1904

இன்று மதியம் (26-11) ஒன்றரை மணிக்கு இன்ஸ்பெக்டர் நாகோஜிராவ் பயணியர் பங்களாவிற்கு வந்தார். கணித ரீதியாக ஹிந்து ஸ்வர ஸப்தகம் சரியாக இருக்கிறதா இல்லையா என்று பார்க்கத் தொடங்கினார். இந்த ஆய்வு சாஸ்திரீய முறையில் தான் இருக்கிறது, ஆனாலும் புத்தகங்களில் இவ்வாறு செய்யப்படவில்லை. அதனால் அவரிடம் கணிதவியல் எண்ணிக்கைகளின் படி நான் ஸப்தகங்களின் யோக்கியதை மற்றும் நிலையைப் பார்த்ததில்லை என்றேன். ஆனால் தஞ்சாவூரில் ஐரோப்பாவின் ஒரு வித்வான் எழுதிய புத்தகத்தில் அவ்வாறு எழுதப் பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தை நான் உங்களுக்கு அனுப்புகிறேன் என்றேன். அவ்வாறே செய்யப்போகிறேன்.

வக்கீல் கோபால ராவுடன் பேச்சுவார்த்தை:

இன்று மாலை வக்கீல் கோபாலராவின் ஒரு நண்பர் வீட்டில் ஹரிகீர்த்தனத்திற்குச் சென்றேன். கீர்த்தன் முற்றிலும் நம் பக்கத்து வழக்கப்படி இருந்தது. எப்படி நம் ஹரிதாஸர்கள், "ஆதௌ மஹாராஜ் பிரதமாரம்பி" என்றவாறு குறிப்பிட்ட ஸ்வரங்களுடன் ஆரம்பிப்பார்களோ, அதே போல இங்கேயும் செய்கிறார்கள். இது மட்டுமல்ல ஆர்யா, திண்டி, பதம், அபங்க், கடாவ், எல்லாவற்றையும் நம் ராகங்களில் பாடுகிறார்கள். இதைக்கேட்டு நான் கோபாலராவிடம் - இந்த ராகங்கள் உங்கள் பக்கத்தில் முன்பிலிருந்தே இருந்தனவா என்று கேட்டேன். அவர் இவற்றில் சிற்சில உங்கள் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்கே சுமார் 10-15 வருடங்களாக உபயோகத்தில் இருக்கின்றன என்றார். ஆனால் அவை எங்கள் ராகங்களை விட சிலருக்கு அதிகம் பிடித்துப் போனது. இதைக்கேட்டதும் இனி இந்த இரண்டு சங்கீதமும் ஒன்றாகும் காலம் சமீபத்தில் தான் உள்ளது என்று திருப்தி அடைந்தேன். நம் சங்கீதத்தை அசாஸ்திரியமாகவும், பிடிக்காததாகவும், குழந்தைத்தனமாகவும் எண்ணிக்கொண்டிருந்தவர்கள், அதை நன்றாக இருப்பதாக ஏற்றுக்கொண்டு தம் சங்கீதத்தில் ஒன்று சேர்க்கிறார்கள். ஆனாலும் நம்முடைய மீண்ட் இது வரை இங்கே வரவில்லை. மேலும் "தான்" பாடும் முறையும் வரவேண்டும். நான் இங்கே என் வீட்டில் தம்பூராவைக் கையில் வைத்துக் கொண்டு, சில ஹிந்துஸ்தானி ராகங்களின் ஸ்வரூபத்தைப் பாடிக் காட்டி, மற்றும் இங்கேயுள்ள பாடகர்களை அதன் தென்னாட்டுப் பெயர்களைச் சொல்லச்சொலி, எந்தப் பகுதி அவர்கள் ராகத்தைப் போல் தோன்றுகிறதோ அதை எனக்குச் சொல்லுமாறு ஒரு முயற்சி மேற்கொள்ளலாம் என்று இருக்கிறேன். பிறகு, புத்தகத்தில் ஆரோஹண-அவரோஹணத்தைப் பார்க்கவேண்டும். இந்த ராகத்தைக் காட்டும் போது வெவ்வேறு "ஸ்ருதிகளின்" விவகாரங்களைப் பாடிக் காட்டி, இங்கே வெவ்வேறு "மீண்ட்" கமகத்தையும் காட்ட வேண்டும். இவற்றில் அவர்களுக்கு என்ன பிடிக்கிறது என்று பார்க்க வேண்டும்.

நாகோஜீராவோடு செய்த விவாதத்தின் மூலம் தெரிந்துக் கொண்டவை:

ஸ்ரீ நாகோஜீராவ் மிகவும் புத்திமான் மற்றும் தொழிலில் ஆழ்ந்தவரும் ஆவார். நம் பக்கத்தில் "தாரபூரே" எப்படியோ அப்படி இங்கே இவர் என்று சொல்வதில் எனக்கு எந்தவித தயக்கமும் இல்லை. அவர் மிகவும் உயர்ந்த உத்யோகத்தில் இருக்கும் பெரிய மனிதராக இருப்பினும், தன் அரசு உத்யோகத்தை கவனித்துக் கொண்டே, தனக்குப் பிடித்த விஷயங்களைப் பற்றி சிந்திக்கிறார். அவர் மிகவும் புத்திசாலித்தனமாக ஒன்றிரண்டு விஷயங்களைச் சொன்னார். அவர் புத்தகத்தின் உதவியின்றியே 8 அல்லது ஆறு செமிடோன்ஸ் இடைவெளியுள்ள ஸ்வரங்கள் ஒன்றுக்கொன்று கொண்டுள்ள தொடர்பை ஆராய்ந்திருக்கிறார் என்று சொன்னார். இன்று தான் அவரிடமிருந்து கடிதம் வந்தது. அதில், நாம் பூர்வீக கிரந்தக்காரர்கள் வாதி சம்வாதியை வைத்து ராகங்களை நிறுவி அதை எழுதி வைத்தார்கள். அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் வாதி சம்வாதி-யைப்போல் அனுவாதி ஸ்வரம் எந்த பிரமாணத்தில் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகவில்லை என்றார். அதைப் பற்றி அவர்கள் எதையும் சிந்திக்கவில்லை. ராகத்திற்கு மூன்று வகை ஸ்வரங்கள் அவசியம் வரும் என்று நாம் அறிவோம். ஆனால் வாதி, சம்வாதி யின் அளவையும் அவற்றின் இடைவெளியைச் சொல்லி விட்டு, அனுவாதியை மட்டும் எப்படி வேண்டுமானாலும் வளர்த்தினால், பாடல் நன்றாக இருக்கும், என்பது நிச்சயம் இல்லை. அதனால் இது பற்றியும் ஏதாவது நியமத்தைக் செய்வது அவசியம். அவர் சொல்வது என்னவென்றால், அவருடைய சித்தாந்தத்தின் படி, இதையும் தெளிவாக்க முடியும் என்பதால் அவர் அது பற்றிய ஒரு புதிய சிந்தனையை வைத்திருக்கிறார் என்பதே. எனக்கு இந்த சிந்தனை யோசிக்கத்தக்கதாகத் தோன்றுகிறது. நம் நியமத்தின் படி, ராகத்திற்கு 5 ஸ்வரங்கள் அவசியம். அதனால் இரண்டு ஸ்வரங்களை மட்டும் சொல்லி நிறுத்துவது சரியல்ல என்று தோன்றுகிறது. ரத்னாகரத்தில் அனுவாதி ஸ்வரத்தைப் பற்றிய விளக்கம் முழுமையாற்றதாய் அதன் சரியான நிலையைப் புரிந்துக் கொள்ள சாத்தியமில்லாமலும் இருக்கிறது. கிரந்தக்காரர்கள் இதைப் பற்றிச் சொல்லவே இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அதன் நியமம் தெளிவாக எழுதப்படவில்லை என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

நாகோஜீராவ் , அனுவாதி ஸ்வரம் வாதியிலிருந்து மூன்றாவதாக இருக்கும், மேலும் வாதிக்கும் அனுவாதிக்கும் இடைவெளி ஸ-விலிருந்து க அல்லது ஸ-விலிருந்து க-வாக மட்டுமே இருக்கும் என்கிறார். அவர், அவருடைய சாஸ்திரத்தின் பிரமாணத்தினால் ஒவ்வொரு ராகத்திலும் ஆரோஹணம்-அவரோஹணம் பாடும்போது, வெவ்வேறு இடங்களில் நிற்க வேண்டி இருக்கிறதே அந்த ரகசியம் தெரிந்தவுடனே அது தெளிவாகிவிடும் என்கிறார். அவர் சொல்வது என்னவென்றால், ஐரோப்பிய "ஹார்மனி"-யின் சாஸ்திரத்துடன் அவருடைய சாஸ்திரம் ஒத்துப் போகிறது என்பது. இது அவருடைய ஒரு திடமான ஊகம் மட்டுமே. நான் இதுவரை ஹார்மனியைக் கற்கவில்லை என்பது வருந்தத்தக்கது. ஆனால் ஃபாதர் ஸீதரின் உதவியோடு நான் இந்த பகுதியைப் பற்றி யோசிக்கப்போகிறேன்.

இப்படிப்பட்ட நியமத்தை நிஜமாகவே செய்ய முடிந்தால், இது உபயோகமாக இருக்கும், மேலும் அதன் படி, இன்றைய சங்கீதத்தில் தோன்றும் பல சந்தேகங்கள் தீரும் என்று எனக்குத் தோன்றுகிறது. உண்மையில் நம் பாட்டிற்கு ஏதாவதொரு பிரமாணத்தின் படி இப்படி ஒரு

நியமம் செய்ய வேண்டும் என்று எனக்கும் விருப்பம். எப்படி ஏதாவதொரு ராகம் பாடும் போது, நம் மக்கள் வெவ்வேறு ஆனால் குறிப்பிட்ட ஸ்தானங்களில் விஸ்ராந்தி கொடுக்கிறார்கள் (pause) மற்றும் இந்த விஸ்ராந்திகளினால் ஒரு ராகத்வம் தோன்றச் செய்கிறார்கள். அதனால் இந்த இடத்தில் இந்த விஸ்ராந்தியின் நியமம் என்ன என்பது புரிபடும். அதன் விளக்கம் மட்டும் முழுமையாக இல்லை. நாகோஜீராவின் நியமத்தை அமைக்க முடியுமானால், அவற்றை ஒவ்வொரு ராகத்திலும் பொறுத்த முடியுமானால், நல்ல முறையில் அது ஒரு புதிய ஆய்வாக்கும். எனக்கு அவரிடம் இது பற்றி இன்னும் நிறைய பேசி, விவாதித்து, ராகங்களின் நியமத்தை நேரடியாக வைத்துப் பார்த்தால் சரியாக இருக்கும் என்று தோன்றுகிறது. அவர் 28ஆம் தேதி காலை கூப்பிட்டிருக்கிறார், நான் போகப்போகிறேன். நம்முடைய ஹிந்துஸ்தானி பாடகர்கள் ஆரோஹண-அவரோஹணத்தில் எதை இழந்தார்களோ அதுவும் கொஞ்சம் முன்னேறும் என்று எண்ணுகிறேன். நாகோஜீராவ் நடைமுறைப் பாடகர் அல்ல. ஆனாலும் அவர் இவ்வளவு யோசித்திருக்கிறார், மற்றும் நிறைய புதுமையாய்ச் செய்திருக்கிறார் என்பது பாராட்டற்குரியது. நாகோஜீராவ் ஒவ்வொரு ராகத்திற்கும் ஒரேயொரு அனுவாதி இருக்க வேண்டும் என்று புரிந்துக் கொண்டிருக்கக்கூடாது என்ற பயமும் இருக்கிறது.

24 நவம்பர் காலை 7 மணி

நாகோஜீராவைச் சந்தித்தேன். அவர் தன்னுடைய பழைய ஸ்வர ஸப்தகம் அதாவது "மாயாமாளவகௌட" (பைரவ்) என்று நிரூபிக்க எண்ணினார். போனவுடன் தான் உண்மையைக் கண்டுபிடித்துவிட்டேன் என்று மிகவும் அவசரமாகப், பேச ஆரம்பித்தார். எங்கள் பிராசீன ஸ்வர ஸப்தகம் கிரந்தத்தில் இருப்பது தான். அவர் ஒரு முறை "மாயாமாளவகௌட" யின் 22 ஸ்ருதிகளைப் படமாக்கி விவாதம் செய்தார் பிறகு அது அப்படி இல்லை என்று ஒத்துக் கொண்டார். அவர் தன்னிடம் சுப்பராம தீக்ஷிதரின் தெலுகு புத்தகத்தை வைத்துக்கொண்டு, அதன் உதவியோடு, இந்த விஷயத்தை நிரூபித்துக் கொண்டிருந்தார். அதை என்னிடம் காட்டினார். நான் பார்த்த போது, "ச்யுத ஸ" அல்லது "ச்யுத ம" இந்த ஸ்தானங்களில் "காகலீ நீ" மற்றும் "அந்தர க" காணப்பட்டது. இதைப் பார்த்தவுடன் நான் இந்த ஸ்தானங்கள் சங்கீத ரத்னாகரத்துடையது அல்ல என்றேன். பிறகு விவாதம் தொடர்ந்த போது சுப்பராம தீக்ஷிதர் கொடுத்த அந்த ஸ்தானம் தவறு என்பது தெரிய வந்தது. குறைந்த பட்சம் அது மிகவும் பழமையான ஸ்வர ஸப்தகம் அல்ல என்பது உண்மை. விவாதம் தொடரந்தது, "கரஹரப்ரியா" வின் மேல் பேச்சு வந்து நின்றது. அவர் விகிதக் கணக்குப் படி [ratio] ஆராய்ந்து எனக்கு சொல்கிறேன் என்று சொன்னார். நான் சரி. ஆனால் இந்த ஆய்வைச் செய்வதில் உங்கள் உத்தேசம் என்ன என்றேன். அவர் முந்தைய ஸ்வர ஸப்தகம் உபயோகமற்றது என்று நீரூபிப்பது என்றார். தன்னுடைய கருத்துப் படி, அவர் கணக்குப் போட்டு, எனக்காக மதியம் ஒரு காகிதத்தில் தன் அபிப்ராயத்தை எழுதினார் (கடிதம் எண். 3). வீட்டுக்குச் சென்று இதைப் பற்றி யோசித்து , தத்தம் மதங்களைப் பற்றிய கருத்துக்களை கடிதம் மூலமாக பரிமாறிக் கொள்ளலாம் என்று தோன்றியது.

ஸ்ரீ ஜகன்னாத பட்ட கோஸ்வாமியுடன் விவாதம்

ஸ்ரீ கோபாலராவ் இந்த ஊரில் சாஸ்திரம் தெரிந்தவர் என்று பெயர்பெற்ற ஜகன்னாத பட்ட கோஸ்வாமி திரும்பி விட்டார் என்று சொன்னார். அவரை என்னிடம் சாயங்காலம் அனுப்பப் போகிறார். இதன் படி, அவர் கடிதம் எழுதி இருந்தார். அவர் சொன்ன பிரகாரம், அவருக்கு சாஸ்திரம் அதாவது கிரந்தங்களைப் பற்றி ஒன்றும் தெரியாதாம். ரத்னாகரம் முதலிய கிரந்தங்களை அவர் ஒரு போதும் பார்த்ததில்லையாம். கேள்வி-பதில் முன்னர் நடந்தது போலவே நடந்தது. பிறகு அவர் நான் நடைமுறை சங்கீதக்காரன். இங்கேயுள்ள முறைப்படி வாத்தியம் வாசித்து, உங்கள் முறைப்படி ஸ்வரங்களை வாசிக்கிறேன், மேலும் கொஞ்சம் மீண்ட் வாசிப்பதையும் செய்கிறேன் (பீன்கார்) , அதை மக்கள் மிகவும் விரும்புகிறார்கள். மீண்ட் வாசிக்கும் போது உங்கள் ஸ்வர நியமத்திற்கேற்ப வாசிக்கிறீர்களா அல்லது எங்களது ஸ்வர நியமங்களுக்கேற்ப வாசிக்கிறீர்களா என்று கேட்டேன்.

ப: எங்கள் நியமத்தின் படி. நான் உங்கள் பக்கத்தை விட எங்கள் பக்கத்தில் ராக விஸ்தாரம் நன்றாக இருப்பதாகக் கருதுகிறேன்,

கே: இதைத் தெளிவாக்க முடியுமா? என் கண்ணோட்டத்தில், உங்கள் பகுதியில் ரி மற்றும் த , இந்த ஸ்வரங்களை இழுத்து, மற்றும் நடு-நடுவே, "ப" மற்றும் "ஸா" இவற்றின் மீது தீர்க்கமாக விஸ்ராந்தி (நியாசம் கொடுப்பது) அதிகம் காணப்படுகிறது. இவ்வகைப் பாட்டை நான் உயர்ந்ததாகக் கருத மாட்டேன். இது விரைவில் சலிப்பு ஏற்படுத்தி விடும். எனக்கு தம்பூராவைக் கொடுங்கள், நான் உங்களுக்கு எங்கள் முறைப்படி ராக விஸ்தாரம் செய்துக் காட்டுகிறேன். (பாடிக் காட்டினேன்) அவருக்கு வெவ்வேறு விதமாக "த" "ரி" "ம" "நி" இவற்றை உபயோகித்துக் காட்டியவுடன் அவர் மிகவும் சந்தோஷம் அடைந்தார். பிறகு, இது போல இங்கே யாருக்கும் செய்ய முடிவதில்லை என்றார். மேலும் இதைப் புரிந்துக்கொண்டு செய்த முதல் ஆள் நான் தான். இது வாத்தியத்தில் முடியும், ஆனால் தொண்டையில் மிகவும் கடினம்.

ப: என் மனத்தில் உங்கள் முன் தாஊஸ் (பால சரஸ்வதி) [மயூர வீணை - ஒரு வகை வாத்தியம்] வாசிக்க வேண்டும் என்று இருக்கிறது. வீணையும் வாசிப்பேன். நாங்கள் ஒன்றிரண்டு மணிநேரம் வாசிப்போம். நாளை வாருங்கள். நாளை மாலை நேரத்தை நிச்சயிக்கலாம். அவர்கள் பெட்டி, பீன் மற்றும் தாஊஸ் வாசிக்கப் போகிறார்கள்.

கே: உங்களிடம் மேளகர்த்தா சம்பந்தமாக, சமஸ்கிருத புத்தகம் இருக்கிறதா? அல்லது மிருதங்க கல்வி அல்லது தாள சம்பந்தமாக ஏதாவது இருக்கிறதா?

ப: ஆம். இருக்கிறது. நாளை அதைக் காட்டுகிறேன். நீங்கள் எழுதிக் கொள்ளுங்கள். நான் உங்களை வேற்று மனிதனாக ஒரு போதும் நினைக்க மாட்டேன். எனக்கு என்ன தெரிகிறதோ அதை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

கே: எனக்கு இங்கேயுள்ள 7 X 5 = 35 தாளங்களின் நல்ல விவரம் தேவை. உங்களால் தர முடியுமா?

ப: நாளை எதையும் மறைக்காமல் விளக்குகிறேன். கவலைப் படாதீர்கள். இதைத் தவிர 108 தாளங்களைப் பற்றிய பழைய புத்தகமும் என்னிடம் இருக்கிறது, அதையும் காட்டி விளக்குகிறேன். உங்களிடம் அது இருந்தால் (அது உபயோகமாகும்),தமிழ் மக்களுக்கு நான் திறந்த மனத்துடன் எப்போதும் சொல்லிக் கொடுத்ததில்லை. ஏனென்றால் இவர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகள். கற்றுக் கொண்ட பின் நன்றியோடு இருக்க மாட்டார்கள். என்னிடம் எந்த கிரந்தம் இருக்கிறதோ அது உங்களுடையதும் தான்.

நான் - சரி. நாளை அவற்றைக் கொண்டு வாருங்கள். மேலும் நான் நாளை என் வேலையாளை அனுப்பி உங்கள் வாத்தியத்தைக் கொண்டு வரச் செய்கிறேன். நீங்கள் வந்து அதை வாசியுங்கள், அதன் பிறகு தாளத்தைப் பற்றி விளக்குங்கள்.

ப: நிச்சயம் வருகிறேன். எனக்கு சமஸ்கிருதத்தில் சில ராகங்களின் போக்கைக் கட்டுங்களேன்?

நான் பாரிஜாதத்தை முன்னால் வைத்துக் கொண்டு, அதில் உள்ள தனாஸ்ரீ, கௌரி முதலியவற்றை பாடிக் காட்டினேன். அவர் அதைப் பார்த்து சந்தோஷம் அடைந்து, இந்த ஸ்வரூபங்கள் அழகாகவும் நன்றாகவும் இருக்கின்றன என்றார்.

நான்: என் மனத்தில் தெற்கத்திய மற்றும் வடக்கத்திய பத்ததிகளை ஒன்று சேர்க்கும் ஆர்வம் இருக்கிறது. உங்கள் நியமத்தின் படி ஆரோஹண-அவரோஹணத்தை முக்கியமாகக் கொண்டு, அதற்கேற்ப, ஹிந்துஸ்தானி ராகத்தைப் பாடுவதை அமைக்க வேண்டும். இப்படிச் செய்தால் இரண்டு பகுதியின் சங்கீதமும் எல்லோருக்கும் பிடிக்கும், அதற்கு நல்ல சாஸ்திரிய அடிப்படையும் கிடைக்கும்.

ப: மிகச் சரி. இவ்வாறு நடப்பது மிகவும் நல்ல காரியம். நான் தாஊஸி-ல் இவ்வாறு கொஞ்சம் முயற்சிகள் செய்து பார்த்தேன் அது இங்கே மிகவும் பிடித்துப் போனது.

தாளம் பற்றிய தெளிவான சிந்தனை

தஞ்சாவூர்
30 நவம்பர் 1904, காலை

காலத்தின் இயக்கம் அனாதியானது என்று சொல்வது பொருத்தமற்றதாக இருக்காது என்றாலும், காலத்தின் அளவையை நிச்சயம் செய்வது மற்றும் நம்முடைய அவசியத்திற்கேற்ப அதனை உபயோகிப்பது மனிதர்களின் செயல். நாம் அதன் மேல் கவனம் செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும் காலம் அது பாட்டுக்கு போய்க் கொண்டே தான் இருக்கும். நாம் நம் வசதிக்காக, "மெதுவாக", "வேகமாக" என்று சொற்களைச் செய்து வைத்திருக்கிறோம். இவற்றை உபயோகிப்பதால் நாம் காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட இயக்கத்தைக் கொடுக்க முடிவதில்லை. இவ்வாறு அதன் இயக்கத்தில் சென்று கொண்டிருக்கும் "காலப்போக்கிற்கு" சங்கீதத்தின் கண்ணோட்டத்தில் பிரத்யக்ஷமாகப் பார்க்க

முடியாது , மற்றும் அதன் போக்கைப் பற்றி சிந்திக்கவும் முடியாது. ஒவ்வொரு மனிதனும் தன் பேச்சிலும் பாட்டிலும் , நடப்பதிலும் தன்னுடைய ஒரு கதியைக், காலத்திற்கு அளவையாகக் கொள்கிறான். அவன் தன்னுடைய சொற்களாக "மெதுவாக" அல்லது "விரைவாக" என்பவற்றைச் சொல்கிறான். "மெதுவாக" "விரைவாக" இந்த சொற்கள் சார்புடையன. ஒரு முறை நாம் "வேகமான கதி" யை நிச்சயம் செய்து விட்டால், அதை வைத்து "மெதுவான கதி" நிச்சயம் செய்யப்படுகிறது. இவை சார்பற்றவை [absolute] அல்ல. ஒருவரின் "விரைவு" மற்றொருவரின் "மெதுவாக" ஆகிவிடுகிறது. இரு மனிதர்கள் விரும்பினால், ஒரே கதியில் போக முடியும். சங்கீதத்தில் இந்த "செல்வது" அல்லது "பேசுவதை", "லயம்" என்று சொல்கின்றனர். ஆங்கிலத்தில் இதன் அர்த்தம் "ஸ்பீட்" [Speed] ஆகும். ஆங்கில சங்கீதத்திலும் இது "ஸ்பீட்" அல்லது "மூவ்மெண்ட்" [Movement] தான். ஏனென்றால் இந்த "வேகமாக", மற்றும் "மெதுவாக" என்ற சொற்கள் அங்கேயும் வரும். நாம் எதையும் பேச ஆரம்பிக்கையில், அதன் அக்ஷரம் ஒன்றுக்குப் பிறகு ஒன்று வந்து, மேலும் ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் உச்சரிப்பதற்கு, ஏதேனும் ஒரு காலம் ஆகும். அந்த பேச்சில் மொத்தமாக ஒரு விதமான கதி இருக்கும். நாம் சிற்சில அக்ஷரங்களை வேகமாக உச்சரிப்போம், சீக்கிரம் போனால், சற்று மெதுவாக உச்சரிப்போம்.இவ்வாறு சொற்கள் காலத்தோடு தொடர்பு கொண்டுள்ளன. காலத்தின் கதியில் நம் பேச்சின் சொற்களை ஏதோவொரு வகையில், அளக்கும் வழி என்று எடுத்துக் கொண்டால் இது எளிதில் புரியும். காலத்தைப் புரிந்துக் கொள்வதற்கு இதற்கு மேலும் ஆழமாகச் செல்ல அவசியம் இல்லை. இதெல்லாம் நம் பாட்டிலும் வாத்தியத்திலும் கூட இருக்கிறது. நாம் பாடலின் அக்ஷரம் அல்லது நாதத்தை ஒரு வகையான கதியில் பாடுகிறோம். இது வேகமாக அல்லது மெதுவாக செய்ய்ப்படுகிறது என்பது பொதுவான அனுபவம்.இந்த கதியை, ஒரு வகையில் அளத்தல் அல்லது அளக்கும் முறைகள் செய்யப்படுகின்றன. ஆங்கில சங்கீதத்தில் "கிரேவர்" [quaver] முதலியவை உபயோகப் படுத்தப்படுகின்றன. நம் சங்கீதத்திலும் இப்படிப்பட்ட முறை ஏற்கப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:

8 கண (க்ஷணம்) - 1 லவம்

8 லவம் - 1 காஷ்டம்

8 காஷ்டா - 1 நிமிஷம்

8 நிமிஷம் - 1 கலை

4 கலை - 1 அனுத்ருதம்

2 அனுத்ருதம் - 1 த்ருதம்

2 த்ருதம் - 1 லகு

2 லகு - 1 குரு

3 லகு - 1 ப்லுதம்

4 லகு - 1 காகபதம்

ஸ்ரீ முதலியாரின் ஓரியண்டல் மியூசிக் கில் கொடுக்கப்பட்ட காலக்கணக்கீட்டு குறியீடுகள்:

அக்ஷரம்	இந்தியப் பெயர்	மேற்கத்திய குறியீடு	மாத்திரை
$\frac{1}{32}$	512 கணம் (கூழணம்)		$\frac{1}{128}$
$\frac{1}{16}$	128 லவம்		$\frac{1}{64}$
$\frac{1}{8}$	32 காஷ்டம்		$\frac{1}{32}$
$\frac{1}{4}$	8 நிமிஷம்		$\frac{1}{16}$

$\frac{1}{2}$	2 கலை		$\frac{1}{8}$
1	அணுத்ருதம்		$\frac{1}{4}$
2	த்ருதம்		$\frac{1}{2}$
3	த்ருதவிராமம்		$\frac{3}{4}$
4	லகு		1

5	லகுவிராமம்		$1\frac{1}{4}$
6	லகுத்ருதம்		$1\frac{1}{2}$
7	லகுத்ருத விரா [மம்]		$1\frac{3}{4}$
8	குரு		2
12	ப்லுதம்		3

16	காகபதம்		4

அடிக்குறிப்பு:

[கைராகர் இந்திரா விஸ்வ வித்யாலயம் வெளியிட்டுள்ள புத்தகத்தில், மேற்கத்திய இசைக் குறியீடுகள் ஏ.எம்.சின்னஸ்வாமி முதலியாருடைய புத்தகத்தில் கொடுக்கப்பட்டவாறு இல்லை. இது அச்சியந்திரத்தில் அந்தக் குறியீடுகள் கிடைக்காமையால் இருக்கலாம். கீழே ஓரியண்டல் மியூசிக்கில் கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.]

காகபதம் - ப்லுதம் - லகுத்ருதம் -

இந்த வரையறை மிகச் சிறிதான அதித்ருத பிரமாணத்திலிருந்து அதி விளம்பமான பிரமாணம் வரை இருக்கிறது. நாம் பேசுவதில் அவசரமாகப் பேசும் சொற்கள் அதித்ருதமாக இருந்தால், அதன் ஒவ்வொரு அக்ஷரம் "கணம்" போன்று வேகவேகமாகப் பேச வேண்டியிருக்கும். "கண"-த்தின் முற்கால கற்பனை இவ்வாறு உருவகப்படுத்தப் பட்டுள்ளது, 100 தாமரை இலைகளை ஒன்றன் மேலோன்றாக வைத்து, அதன் நடுவே ஊசியைக் கோர்ப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகுமோ அது "கணம்" ஆகும். இது மிகவும் கற்பனை மயமாக உள்ளது என்பது உண்மை. இவ்வளவு சூக்குமமான அளவையோடு பாடுவது, வாசிப்பது என்பது நடக்காது. ஆனால் இது காகிதத்தில் அமைத்து எழுதப்பட்டிருக்கிறது. இன்று, நடைமுறையில் உள்ள ஒரு அளவையை எடுத்துக் கொண்டு விரைவான கதி என்று கொண்டால், இரண்டாவது அளவையை எடுத்துக் கொண்டு, அக்ஷரங்களை மிகவும் வேகமாக உச்சரித்தால், அந்த குறிப்பிட்ட அக்ஷர காலத்தை

"அணுத்ருதம்" என்று அழைக்கின்றனர், அதன் உதவியால் நாம் மற்ற அளவைகளை உபயோகிக்க முடிகிறது. அணுத்ருதத்தை விட குறைவான அளவையை எடுக்காமல் போனால் என்ன ஆகி விடும்? அதனால் வேகமான அக்ஷரகாலமாக அணுத்ருதத்தையே கொள்கின்றனர். இரண்டு அக்ஷரத்தை சொல்ல எவ்வளவு காலம் ஆகுமோ அது "த்ருதம்" ஆகும். பிரசாரத்தில் இந்த சொற்கள் மட்டுமே உள்ளன.

அணுத்ருதம் - 1 அக்ஷரம் ¼ மாத்திரை
குறிப்பு:- ஒரு மாத்திரைக்கு இரண்டு அக்ஷரம், ஒரு அக்ஷரத்தில் அரை மாத்திரை

த்ருதம் - 2 அக்ஷரம் ½ மாத்திரை

லகு - 4 அக்ஷரம் 1 மாத்திரை

குரு - 8 அக்ஷரம் 2 மாத்திரை

ப்லுதம் - 12 அக்ஷரம் 3 மாத்திரை

காகபதம் - 16 அக்ஷரம் 4 மாத்திரை

இந்த அமைப்பைகக் காகிதத்தில் படித்தவுடனேயே படித்தவர்களுக்கு இது புரிவதற்கு மிகவும் கடினமானது என்ற பயம் ஏற்பட்டு விடுகிறது. ஆனால் உண்மையில் அப்படி இல்லை. நேரடியாகப் பார்த்தால், ஒரு சிறு குழந்தைக்குக் கூட ஒரு நிமிஷத்தில் புரியக் கூடிய விஷயம் இது. "க" - இது சாதாரணமான தீர்க்க அக்ஷரம் முதலில் சொல்லப்படட்டும். இதன் காலம் இரண்டு அக்ஷரமாக, "கக" என்று சொல்லலாம். பிறகு அதே சமயத்தில் "கக்கக" 4 அக்ஷரமாகச் சொல்லலாம். "க" அக்ஷரத்தை இரண்டு விநாடியாகக் கொண்டால் , அதே சமயத்தில் 4 அக்ஷரத்தைச் சொன்னால், ஒவ்வொரு அக்ஷரமும் 1/4 வினாடி ஆகாதா என்ன? இப்போது ஒரு வினாடியை ஒரு "லகு" என்று சொன்னால், 1/2 வினாடியில் சொல்லும் அக்ஷர காலம், "த்ருதம்" ஆகும், மேலும் 1/4 வினாடியின் அக்ஷர காலம், "அணுத்ருதம்" ஆகும். இது சுலபமாகப் புரியக் கூடியது. முக்கியமான, அளவை (யூனிட்) [unit] நிர்ணயிக்கப்பட்டால், மற்றவை எல்லாம் தானாகவே நிர்ணயம் செய்துக் கொள்ளப்படும். தெற்கில் முக்கியமான தாளங்கள் 7 என்று கொண்டு, இவற்றில் ஒவ்வொன்றிலும் 5 ஜாதிகள் கொள்ளப்படும். இவ்வாறு, 7 X 5 = 35, முக்கியமான தாளங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இந்த 7 தாளங்கள் இந்த 35-ற்கு அப்பாற்பட்டவை என்று ஒரு போதும் புரிந்துக் கொள்ளாதீர்கள். முதலில் பார்க்கும் போது இந்த 35 தாளங்கள் கடினமானவை என்ற தவறான அபிப்ராயம் தோன்றக் கூடும். ஆனால் நன்றாகப் புரிந்துக் கொண்டால் அவை எளிதாகி விடும். ஒவ்வொரு தாளத்திற்கும் ஒரு வகையான அங்கம் உள்ளது. அங்கம் என்றால், அந்த தாளம் எத்தனை லகு-குரு வால் காட்டப்படும் என்பது.

இங்கே அங்கம் வெறும் சின்னங்களால் காட்டப்படும். லகு-குரு இவற்றின் சின்னங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கேற்ப, தாளங்களின், அங்கத்தை எழுதி வைக்கிறார்கள். அதாவது |o|| , இது த்ருவ தாளத்தின் சின்னம் (அங்கம்) , இதில் செங்குத்தான கோடு லகு,

சூனியம் - த்ருதம். இதில் த்ருவதாளத்தில் முதல் லகு, பிறகு த்ருதம், பிறகு இரண்டு லகு, இவ்வாறு நிரணயிக்கப்பட்டுள்ளது. தாளத்தில் இந்தக் குறியீடு எவ்வளவு இருக்கிறது அதற்கேற்ப அதன் பெயர் மாறும், ஆனால் எத்தனை குறியீடுகள் இருக்கின்றனவோ அதற்கேற்ப தாளத்தில் அவ்வளவு தட்டுக்கள் இருக்கும் என்று புரிந்துக் கொள்ளுங்கள். எப்படி த்ருவ தாளத்தில் நாலு குறியீடுகள் இருக்கின்றவோ அவ்வளவு தட்டுக்கள் இருக்கும். இதற்குப் பிறகு இந்தத் தாளம் எவ்வளவு மாத்திரை என்று பார்க்கவேண்டும். தாளங்களில் பலவித ஜாதிகள் ஏற்படுத்துவதால் பாடுவதில் புதுமை ஏற்படுகிறது என்பது புரிந்துக் கொள்ளவேண்டிய ஒன்று. மாத்திரை அளவு ஒரே போல இருந்தாலும், தட்டு வெவ்வேறு ஸ்தானத்தில் விழும் ஸ்வரங்களின் அமைப்பு மீண்டும் மீண்டும் ஏற்பட்டு ஒரு வகையான ஆனந்தம் ஏற்படுகிறது என்பது சிறிது பாடிப் பார்த்தால் புரியும்.

தாளத்திற்கு 5 ஜாதிகள் என்று ஒரு வகை நியமத்தைச் செய்திருக்கிறார்கள் - இதைப் பற்றி பிறகு சொல்வேன். முக்கிய தாளங்களாக, 7 ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவை பின்வருமாறு:

1. த்ருவ தாளம் 2. மட்ய 3. ரூபக 4. ஜம்ப 5. அட 6. ஏக தாளம் 7. ஆதி தாளம்

லகு-குருவின் உதவியுடன், குறியீடுகளால் தாளங்கள் எழுதப் படுகின்றன. இந்தக் குறியீடுகளைத் தான் தாளத்தின் அங்கங்கள் என்று சொல்கிறார்கள். இந்தக் குறியீடுகளில் மிகவும் முக்கியமானது லகு, லகுவின் மாத்திரைகள் குறிப்பிட்ட தாளத்திற்கேற்ப மாறும். த்ருவத்தின் அங்கம் | o | | இவாறு எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறு 4 + 2 + 4 + 4 = 16 மாத்திரைகள் ஆகும். அதாவது, இவ்வகையில் "லகு" வின் கணக்கு 4 மாத்திரைகள் என்று கொள்வதால், இந்த தாளம் "சதுஸ்ர ஜாதி த்ருவ தாளம்" என்று அழைக்கப்படும். மீண்டும் லகுவின் கணக்கை 3 மாத்திரைகளாகக் கொண்டால் த்ருவதாளம் 3 + 2 + 3 + 3 = 11 மாத்திரைகள் ஆகும். இந்த தாளம் முற்றிலும் வேறாக இருக்கும். இப்போது லகு மூன்று மாத்திரைகளாக இருப்பதால், இந்த தாளத்தை "திஸ்ர ஜாதி த்ருவம்" என்று அழைக்கின்றனர். லகுவின் அளவை 7 மாத்திரைகளாகக் கொண்டால், "மிஸ்ர ஜாதி த்ருவம்" ஆகும். 5 மாத்திரைகளாகக் கொண்டால் "கண்ட ஜாதி த்ருவம்" ஆகும். 9 ஆகக் கொண்டால் "சங்கீர்ண ஜாதி த்ருவம்" ஆகும். இவ்வாறு ஒரு த்ருவதாளத்திற்கு 5 ஜாதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முக்கியமான 7 தாளங்கள் மற்றும் ஒவ்வொன்றிற்கும் மேலே சொன்னவாறு லகுவின் அளவு மாறுவதால் 5 ஜாதிகள் மற்றும் அவற்றால் உண்டாகும் 35 தாளங்கள், அவற்றின் பெயர்கள் கீழ்க்கண்டவாறு:

தாளம்	அங்கம்	சதுஸ்ரம்	திஸ்ரம்	மிஸ்ரம்	கண்டம்	ஸங்கீர்ணம்
மட்யம்	|o|	சம தாளம் மாத்திரை 10	ஸார 8	உதீர்ண 16	உதய 12	சப 20
ரூபகம்	|o	பத்தி 6	சக்ரம் 5	குல 9	ராஜ 7	பிது 11

ஜம்ப	|uo	மதுர 7	கதம்ப 6	சுர 10	தண 8	கர 12
த்ரிபுட	|oo	ஆதி 8	சங்க 7	லீல 11	துஷ்கர 9	பாக 13
அட	||oo	லேக 12	குப்த 10	லோய 8	விக 14	தீர 22
ஏக	|	பான 4	சுத 3	ராக 7	ரதி 5	வசு 9

ஜகன்னாத பந்தின் நோட்டுப் புத்தகம் 1 டிசம்பர் 1904

சொன்னபடி இன்று ஜகன்னாத பந்த் பட்ட கோஸ்வாமி தன் சிறு நோட்டுப்புத்தகத்தை அனுப்பி இருந்தார். அதைத் திறந்து பார்த்த போது தெரிய வந்தது, அதில் வெவ்வேறு இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில சிறு சிறு உதாரணங்கள் எழுதப்பட்டிருந்தன. ரத்னாகரத்தின் "நாத" ஸ்லோகம், முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட ராகம் முதலியவற்றின் விளக்கம் இது போன்ற சிறுசிறு செய்திகள் அப்படியே எழுதப்பட்டிருந்தன. எழுதியவரின் நோக்கம், சங்கீத சாஸ்திரத்தை அத்யயனம் செய்திருக்கிறார் என்று தோன்றும் படி இருக்கவேண்டும் என்பது போல இருந்தது. அதில் பாட்டு, எப்போது, எப்படி பாட வேண்டும் இது குறித்த ஸ்லோகங்கள் எனக்குப் பிடித்திருந்தன, அதனால் அதை எழுதி வைத்துக் கொள்ளப் போகிறேன். 72 மேளங்களுடைய சமஸ்கிருத ஸ்லோகங்கள், ஆரோஹணம், அவரோஹணம், ஜன்ய ராகங்களின் பெயர் மற்றும் விளக்கம் அடங்கிய இந்த புத்தகத்தின் இரண்டாம் பாகம் உபயோகமானதாகத் தெரிந்தது. இதை எல்லாம் எடுத்து எழுதி வைத்திருக்கிறேன். இந்த மேளங்கள், "சதுர்தண்டிப்ரகாசிகை" என்ற கிரந்தத்தின் அடிப்படையில் செய்யப்பட்டவை என்று கேள்விப்பட்டேன். அந்த புத்தகத்தில் குறைந்த பட்சம் இதெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அது எட்டையாபுரம் சுப்பராம தீக்ஷிதரிடம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். சிலர் அவர் இந்த ஊர் நூலகத்திலிருந்து அதை எடுத்துச் சென்று விட்டார் என்றும் சொல்கிறார்கள்[7]. இந்த ஊரின் நூலகத்தின் பழைய கேட்டலாக்கில் அதன் பெயர் இருக்கிறது ஆனால் புதிய கேட்டலாக்கில் அது இல்லை. நான் தீக்ஷிதரை நேரில் சென்று பார்க்கப் போகிறேன். பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று. இந்த ஸ்லோகங்களை தீக்ஷிதர் தன்னுடைய புதிய தெலுங்கு புத்தகத்தில் கூட பதிப்பித்திருக்கிறார் என்று சொல்கிறார்கள். அந்த புத்தகத்தை நான் வாங்க இருக்கிறேன்.

தஞ்சாவூரில் வடக்கு-தெற்கின் சேர்க்கை

எனக்கு இந்த ஸ்லோகங்கள் மிகவும் உபயோகமாக இருக்கும் என்று தோன்றுகிறது. அதில் ராகத்தின் மேளங்கள்,வர்ஜ்யா வர்ஜ்யம் இவை அனைத்தைப் பற்றியும் தகவல் இருக்கிறது. நம் ஹிந்துஸ்தானி பாடகர்களிடம் இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லி, அவர்கள் மூலம் புதிய-

[7] [சுப்பராம தீக்ஷிதரிடம் கிடைத்த இரண்டு சதுர்தண்டிப் பிரதிகள் பற்றிய விவரம் ஓரியண்டல் மியூசிக்கில் அவர் சின்னஸ்வாமி முதலியாருக்கு எழுதிய கடிதங்களில் காண்க]

புதிய ராகங்களைத் தயார் செய்யப் போகிறேன். பாட்டில் ஹிந்துஸ்தானி பத்ததி மற்றும் தெற்கத்திய நியமங்கள் ஒன்று சேர்ந்தால் ஒரு புதிய சங்கீதம் தோன்றும். இந்த மேளம் இங்கே எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், அதன் மேல் ஹிந்துஸ்தானியின் அழகைக் கூட்டினால் மிகவும் நன்றாக இருக்கும் , இங்கேயுள்ளவர்கள் சொல்வதற்கேற்ப அவர்களுக்கும் மனோரஞ்சகமாக இருக்கும். என் அனுபவத்தின் படி, இங்கேயுள்ளவர்களுக்கு ஹிந்துஸ்தானி கமகம் மற்றும் ஸ்வரம் தான் மிகவும் பிடித்திருக்கிறது. அதனால் இந்த இரண்டு சங்கீதங்களின் சேர்க்கை சமத்காரமாக இருக்கும். வடக்கில் பாடகர்களுக்குப் புதிய புதிய உருப்படிகள் செய்ய உத்ஸாஹம் இருந்தாலும் அவர்களுக்கு மூல சாஸ்திர அடிப்படை இல்லாமையால், புதிதாக ஏதேனும் செய்தால் கூட அது புதுமை என்று சொல்லிக் கொள்வதற்கு தைரியம் இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு இந்த ஸ்லோகங்களினால் ஏதேனும் நியமங்கள் கிடைத்தால், அவர்கள் புதிய உருப்படிகளை மிகவும் புத்திசாலித்தனமாகச் செய்வார்கள் என்று தோன்றுகிறது. இங்கே வந்து இது போன்ற பாட்டை இங்கேயுள்ள ஆரோஹண- அவரோஹணத்தின் படி பாடினால், இங்கேயுள்ளவர்களின் வாயையும் அடைக்கலாம். முதலில் பாஷை வேறு என்று சொல்வார்கள் ஆனால் அது பழகிய பின், அதே அழகு இங்கேயும் வரும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் சங்கீதத்திற்கு மிகுந்த லாபம். இதை செய்து பார்க்க வேண்டும் என்பது என் ஆசை. மேலும் அதிர்ஷ்டவசமாக, "காயன் உத்தேஜக் மண்டலி"யின் பாடகர்கள் நான் சொன்னபடி செய்யப் போகிறார்கள். அவர்களைக் கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக, பாட்டை எழுத வைத்து அவர்களின் சிஷ்யர்கள் மூலம் ஊரில் பிரசித்தம் அடையச் செய்ய வேண்டும். நல்ல குரலில் பாடினால், அதுவும் குறிப்பாகப் பெண்களின் குரலில் பாடினால், ராகம் சீக்கிரம் பிடித்து விடும். இங்கேயுள்ள மக்களிடத்தில் "ஸ ர க ம" வின் பத்ததி அதிகமாகக் காணப்படுவதால் இங்கே ராகத்தை அதன் ஆரோஹண-அவரோஹண பிரமாணம் இல்லாமல் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்பது தெளிவு. இங்கேயுள்ள ஸ்வரம் பாடும் முறை நேராக, எளிதாக மற்றும் ஒரேயடியாக மாத்திரைகளை எண்ணுவதாக இருக்கிறது. இதனால் பாடகர்களின் தனி பாணி தெரிய வரும் என்பது உண்மை. நான் சென்னையில் நிராசை அடைந்தேன் ஆனால் தஞ்சாவூரில் எனக்கு மிகவும் சந்தோஷம் ஆனது என்று சொல்ல முடியும். இங்கே மராட்டி மக்கள் நிறைய இருக்கிறார்கள். மஹாராஷ்ட்ர பிராமணர்களின் வீடுகள் சுமார் முன்னூறு-நானூறு இருக்கின்றன என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நான் மஹாராஷ்ட்ர பிராமணன் ஆனாதால் இங்கேயுள்ளவர்கள் தன்னுடையவனாக எண்ணி எனக்காக அவர்களால் இயன்ற வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

நான் மஹாராஷ்ட்ர தேசத்தவனானதால், பரஸ்பரம் அன்பு பந்தம் இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். நான் சங்கீத சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்பவன், ரசிகன் என்று தெரிந்தவுடனே, அவர்கள் இங்கேயுள்ள சங்கீதத்தைக் கேட்க வைக்க பல வித முயற்சிகள் செய்தார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு நான் கடமைப்பட்டவனாவேன். தஞ்சாவூரில் பிரசித்தமான வக்கீல் ஸ்ரீ கோபாலராவ் மிகவும் அன்பானவர் மற்றும் உதவி செய்யும் மனப்பான்மை உடையவர். அவர் எனக்கு ஒரு நல்ல வசதியுள்ள வீட்டை , தன் வீட்டிற்கு மிக அருகே எனக்குத் தந்து தங்க வைத்திருக்கிறார். அந்த வீடு ஊரின் நடுவில் இருப்பதால் அங்கே

நண்பர்கள் வந்து சேர மிகவும் வசதியாகப் போய் விட்டது. இந்த பயணம் ராமேஸ்வரம் செல்ல மற்றும் சங்கீத ஞானம் இவை இரண்டிற்கு மட்டுமே ஆனதால் இங்கேயுள்ள கோர்ட், தர்பார் இவற்றைப் பார்க்கும் முயற்சியில் நான் நிச்சயமாக இறங்க மாட்டேன் என்று முடிவு செய்திருக்கிறேன். நாள் முழுவதும் வருபவர்கள், பாடுபவர்களிடம் சங்கீதத்தில் சங்கீத விஷயத்தில், விவாதம் செய்வது மற்றும் வீட்டில் இருப்பவர்களுக்கு ஊரின் பார்க்க வேண்டிய இடங்கள், கோவில்கள் இவற்றைக் காட்டுவது என்று மட்டுமே செய்துக் கொண்டிருக்கிறேன்.

கிருஷ்ண ராவ் நாயக் -

இந்த கிராமத்தில், கிருஷ்ண ராவ் நாயக், என்ற ஒழுக்கமான நல்ல பிராமணரை சில நண்பர்கள் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர் வீட்டிற்குப் போன போது, சங்கீத சம்பந்தமாகப் பேச்சு நடந்தது, அதில் ஹிந்துஸ்தானி மற்றும் கர்நாடக சங்கீதத்தின் சேர்க்கை பற்றியவை நன்றாக இருந்தது. நீங்கள் விஷயம் தெரிந்த மகாராஷ்ட்ரிய மக்களை வாரத்திற்கொரு முறை ஒன்று திரட்டி, ஹிந்துஸ்தானி பாட்டை ஏற்பாடு செய்தீர்களானால் அந்தப் பாடல் இங்கேயுள்ள தமிழ் பாட்டில் நுழையாமல் இருக்காது என்று நான் அவர்களிடம் சொன்னேன். அவர் நான் இன்றே ஒரு மராட்டா கிளப் [Maratha கிளப்] ஐ உருவாக்குகிறேன். என்றார். அதில் எல்லா மராட்டி பேசுபவர்களுக்கு மட்டும் வர அனுமதி உண்டு , மேலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு, ஹிந்துஸ்தானி சங்கீதம் பாடப் படும். இவ்வாறு செய்வதால் சங்கீதத்தைத் தவிர மற்ற விஷயங்களைப் பற்றியும் பேச வசதியாக இருக்கும். இங்கேயுள்ளவர்களின் முன்னோர் மஹாராஷ்ட்ர தேசத்தை விட்டு இங்கே மராட்டா ராஜ்ஜியத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களிடத்தில் இருக்கும் பரஸ்பர அன்பைப் பார்த்து எனக்கு மிகவும் சந்தோஷம் ஆனது. மராட்டி பாஷையை வாழ வைப்பதில் இருக்கும் உத்ஸாஹத்தைப் பார்த்து மிகவும் ஆனந்தம் அடைந்தேன். அவரக்ள், நாங்கள் பல வருடங்களாக இங்கே இருப்பதால், எங்களுடைய உச்சரிப்பு மற்றும் பாஷையில் இங்கேயுள்ள தமிழ் உச்சரிப்போடு சேர்ந்ததால் மராட்டி பாஷை காதில் கேட்பதற்கு எவ்வளவு நன்றாக இருக்க வேண்டுமோ அவ்வளவு நன்றாக இல்லை என்று என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். அதனால் இந்த புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட எங்களது கிளப்பில், நீங்கள் கொஞ்சம் பேச வேண்டும் என்பது எங்கள் ஆசை. எங்களுக்கு தாய்நாட்டின் செம்மொழியைக் கேட்டால் தான் திருப்தியாகும். நிஜமாகவே இதைக் கேட்டு நான் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். ஆனால் நேரம் இல்லாததால், மற்றும் இவர்கள் முன்னிலையில் எதைப் பற்றி பேசுவது என்று தெரியாததால், என்னால் இயலாது என்று சொல்ல வேண்டியதாயிற்று. இவர்களுக்கு ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் மிகுந்த ஈடுபாடு இருக்கிறது என்பது இயற்கையின் அதிசயம். பல வருடங்களாகி விட்ட பின்னும் அவர்கள் மனத்தில் தாய்நாட்டின் பாஷை குறித்த மற்றும் சங்கீதம் பற்றிய ஈடுபாடு உள்ளது. அங்கேயுள்ள தமிழர்களுக்கு தமிழ் வழக்கப்படி ஸ்வரம் (தான்) மற்றும் மிருதங்கத்தின் சொற்களோடும் சங்கதியோடு ஒன்றிய ஸ்வரம் மிகவும் பிடிக்கிறது. அதே காரணத்தால், தேவ கோஸ்வாமியின் மடத்திற்கு க்வாலியாரிலிருந்து வந்த ஒரு ஹரிதாசர் நேற்று முன் தினம் நடத்திய கீர்த்தனில் , இதைக் காண முடிந்தது. ஹரிதாஸர் மிகவும் த்ருத லயத்தில் ஸ்வரங்கள் பாடிய போது தமிழ் மக்கள், "பலே பலே"

என்று சொல்ல ஆரம்பித்தனர், மற்றும் "மீண்ட்" முதலியவற்றைப் பாடியபோது மஹாராஷ்ட்ரிய மக்களுக்கு மிகவும் ஆனந்தம் அடைந்தனர்.

பஞ்சாப கேஷி அய்யர்

என் நண்பர்கள் எல்லா விதமான சங்கீத வித்வான்களிடமும் என்னை அறிமுகப் படுத்திவிட்டனர் என்று சொல்லத் தான் வேண்டும். இங்கேயுள்ள வாத்தியம் அதாவது ஃபிடில் , சாரங்கி, தாஊஸ், சரோத், வீணை, மிருதங்கம் இவையாகும். நேற்றிரவு, இங்கே இருக்கும் பிரசித்தி பெற்ற ஃபிடில் வாத்தியக்காரர் , "பஞ்சாபகேஷி அய்யர்" என்ற பெயர் கொண்ட ஒரு திராவிட பிராம்மணரின் வாசிப்பு நடந்தது. இவர் வாத்தியத்தில் மிகவும் திறமைசாலி என்பதை ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும். (இந்த ஊரில் ஸிதார் வாத்தியம் இல்லவே இல்லை) இது போன்ற ஃபிடில் வாத்தியக்காரர் நம் பகுதியில் இல்லாமையால், இந்த வாத்தியத்தில் இதெல்லாம் செய்ய முடியும் என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர் பல கர்நாடக ராகங்களை வாசித்தார். அதன் பிறகு பிஹாக், தர்பாரி கானடா, சோரட, கேதார், காபி முதலிய ராகங்களை ஹிந்துஸ்தானி வழியில் வாசிக்க முயற்சி செய்தார். இந்த முயற்சி சுமாராகத் தான் இருந்தது. ஏனென்றால் இந்த ராகத்தைப் பற்றிய விவரம் அதிகம் தெரியாமல் இருப்பது இயற்கை தான். கேட்டுக்கேட்டு என்ன தெரிந்ததோ அதன் படி வாசித்தார். ஆனாலும் அவரது முயற்சியைக் கேட்டு ஆனந்தம் அடைந்தேன். எனக்குக் கர்நாடக ராகங்கள் பிடிக்காது என்றில்லை. ஆனால் அவற்றின் முன்னேற்றம் ஹிந்துஸ்தானி அம்சத்தினால் தான் ஏற்பட வேண்டும். இது என்னுடைய கருத்து. அன்றொரு நாள் ஒரு இளவயது தெலுங்கு பிராமண சிறுவன் கடம் வாசித்தான், அதைக் கேட்டு அதிசயமும் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தேன். கட வாத்தியம் என்பது ஒரு பெரிய பானையை மிருதங்கத்திற்கேற்ப வாசித்தல். அதில் வரும் ஸ்வரங்களை தம்பூரா முதலியவற்றுடன் சேர்ந்திசைக்கிறது. இவர் பல எளிதான மற்றும் கடினமான தாளங்களை மிகத் தெளிவாக வாசித்தார், என்பதால் அனைவருக்கும் ஆச்சரியம் ஏற்பட்டது. மிருதங்கத்தின் ஆயிரம் சிறு சிறு சொற்கள் மற்றும் கதியை இவ்வளவு தெளிவாக வாசித்ததால் அதன் இடத்தில் மிருதங்கத்திற்கு அவசியமே ஒரு கணமும் மனத்தில் ஏற்படவில்லை. அவருடைய ஒவ்வொரு மயிர்க்காலிலும் லயம் ஊறி இருந்தது. பானையை மேலே வீசி தாளத்திலேயே அதைப் பிடித்தார். பக்கத்தில் கையால் தட்டிக் கொண்டே சரியான இடத்தில் தாளத்திற்குத் டேக்கா கொடுத்தும் காட்டினார். எப்படி நினைவில் இருந்தது என்று அதிசயிக்கும் படியாக ஆச்சரியம் தோன்றும் படியாக எடுத்த லயத்தைப் பிடித்தார். நல்ல சாதகமின்றி , அதன் தாளம் மற்றும் லயத்தைக் கையில் வாசிப்பது மிகவும் கடினம். இதற்கு முன்னர் பார்த்திராத இந்த அதிசயத்தைப் பார்த்து மிகவும் திருப்தியாக இருந்தது, மேலும் இதை மும்பாயிலுள்ள நண்பர்களும் பார்க்கவேண்டும் என்றிருந்தது. என் இந்த ஆசையை கோபால ராவிடம் சொன்னேன். அவர் அடுத்த மாதம் விடுமுறையின் போது மும்பை செல்கிறார்களாம். அந்த சமயம் அந்த சங்கீத வித்வானை மும்பைக்கு அழைத்து வருவாராம். அவர் மும்பைக்கு வந்தால் அங்கே எல்லோரும் பிரமித்து விடுவார்கள் என்பதில்

சந்தேகமே இல்லை. பானையில் இவ்வளவு கடினமாக அவர் வாசித்தும் அது எப்படி உடையாமல் இருக்கிறது என்பது ஆச்சரியம் தான். அந்த தட்டு மிருதங்கத்தின் மேல் எப்படி விழுகிறதோ அதே போல இதன் மேலும் விழுகிறது.

இதை வெறுமனே காகிதத்தில் எழுத முடியாது. இந்த பகுதியில், மிருதங்கத்தின் வெவ்வேறு ஃபரன்-கள் புழக்கத்தில் இருக்கின்றன மற்றும் மக்கள் மிருதங்க வாத்யத்தை நன்றாகப் புரிந்துக் கொள்கிறார்கள். இங்கே தாளம் போதும் பத்ததி நம் பக்கத்தை விட கொஞ்சம் வேறு மாதிரியாக இருக்கிறது. மற்றும் தாளத்தின் பெயர் மற்றும் மாத்திரையும் வேறாக இருக்கிறது. ஆனாலும் கூட அதைப் புரிந்துக் கொள்வது கடினம் அல்ல. தாளம் போதும் போது யாராவது பாடுகிறார்கள் மற்றும் அவர் விரலால் மாத்திரையை எண்ணிக் கொண்டே இருக்கிறார்கள். இங்கே தாள வாத்தியக்காரர்கள் பாடகர்களின் மீது தங்கள் ஆளுமையைக் காட்டுகிறார்கள் என்பதே என் கருத்து. பாடுபவர் தன்னுடைய ஸ்வரங்கள் அல்லது வாத்தியக்காரர்கள் தன்னுடைய வாத்தியம் எப்போதும் பெரும்பாலும் பக்காவாஜுடைய மொஹரா மற்றும் ஃபரன் இவற்றை வாசிக்கிறார்கள். இவ்வாறு வாசிப்பில் ஆனந்தம் இருக்கிறதோ இல்லையோ எல்லா வாசிப்பும் ஒரே மாதிரி ஆகி விடுவதால் சலிப்பு ஏற்பட சாத்தியம் உள்ளது. அதனால் தான் சொல்கிறேன் இதில் முன்னேற்றம் தேவை. இங்கே ஸ்வர ஞானம் நிறைய இருக்கிறது. அங்கே நம் பாடகர்களுக்கு எவ்வளவு ஸ்வர ஞானம் இருக்கிறதோ இங்கே சாதாரண மக்களுக்கு அவ்வளவு இருக்கிறது. இங்கேயுள்ள பாட்டில் , வெறும் 12 ஸ்வரங்கள் இருக்கின்றன எப்படியென்றால், "ஸ" மற்றும் "ப" அசல [ஸ்வரங்களாகவும்]. மற்றும் மற்றவை இரண்டிரண்டாகச் சேர்த்துப் பத்து , அதாவது இங்கே மேற்கத்திய "க்ரோமேடிக் ஸ்கேல்" [Chromatic Scale] உள்ளது. நான் கையில் தம்பூராவை வைத்துக் கொண்டு இடையில் இருக்கும் ஸ்வரங்களை நம் "கண்"[8] ஐப் போன்றோ அல்லது முன் நிறுத்தியோ பாடப்படுகிறது என்று குரலில் பாடிக் காட்டினேன், மற்றும் [அப்ப்டிப் பாடுகையில்] ராகத்தின் போக்கு எப்படியெல்லாம் மாறுகிறது என்பதையும் காட்டினேன். அதைக் கேட்டு அவர்கள் மிகவும் ஆச்சரியம் அடைந்தார்கள் ,உடனே ஸ்வரத்தை இப்படி யாரும் பாடிக் கேட்டதே இல்லை என்றார்கள். இவை வீணையில் வாசிக்கலாம் ஆனால் குரலிலும் சாத்தியம் என்பதை அவர்கள் அறிந்ததில்லை. இவ்வாறு ஸ்வரங்களைப் பாடுவதால் ராகத்தின் போக்கு மாறுகிறது என்பது தெளிவாகிறது ஆனால் இந்த முறை அவர்களிடத்தில் இல்லை. அவர்களின் எல்லா மேளங்களும் 12 ஸ்வரங்களின் அடிப்படையில் செய்யப்படுகின்றன,அதனால் இதன் தேவை பற்றி யாரும் கவனம் செலுத்தியதில்லை. அவர்கள் பாட்டிலும் வந்த போதிலும் அதன் ஸ்தானங்களின் மாற்றங்களைப் பார்ப்பதன் அவசியத்தை யாரும் புரிந்துக் கொண்டதில்லை. அந்த முயற்சியை நாம் செய்வோம். நான் சொன்னபடி, இந்த விஷயம் நம் பக்கத்தில் சர்வ சாதாரணமானது. ஒவ்வொரு ஸ்வரத்தின் பரிணாமமும் வெவ்வேறு என்ற மர்மத்தைப் புரிந்துக் கொண்டால், இவ்வாறு ஸ்வரத்தின் ஸ்ருதிகளும் வெவ்வேறு விதமாக எடுக்கும் பரிணாமமும் வெவ்வேறாக இருக்கும். முக்கிய ஸ்வரங்கள் பன்னிரண்டு கிரோமேடிக்-காக எடுத்துக்

[8] [கண், மீண்ட் முதலியவை ஹிந்துஸ்தானி கமக வகைகள். கண் என்பது ஒரு ஸ்வரத்தை இன்னொரு ஸ்வரத்தின் சாயையுடன் பாடுதல்]

கொண்டால், நடைமுறையில் அவற்றுக்கு நடுவில் இருக்கும் ஸ்ருதிகளும் உபயோகிக்கப் படவேண்டும், உபயோகிக்கப்படுவதையும் காண்கிறோம். நீங்கள் பாடும் போது கூட வாசிக்கும் ஹார்மோனியம் அதே ஸ்வரத்தை உற்பத்தி செய்ய முடியாவிட்டால், உங்கள் குரலில் குறிப்பிட்ட ஸ்ருதிகளின் உச்சரிப்பு நடக்கிறது என்பது தெரிகிறது. அது கமகத்தின் ரூபத்திலோ அல்லது வேறு ஏதாவது ரூபத்தில் இருந்தாலும் சரி. அது அவ்வாறு ஒலிக்காவிடில் ராகத்தின் ஸ்வரூபம் கிடைத்தது போல இருக்காது. நாமும் நம் பக்கத்தில் முக்கியமான 12 ஸ்வரங்களை ஒத்துக் கொள்கிறோம் ஆனால் இந்த அழகை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் குறிப்பிட்ட ராகத்தில் குறிப்பிட்ட ஸ்ருதிகளை நிர்ணயிக்கிறோம். இது சங்கீதத்தின் சிறப்பேயாகும்.

இங்கேயுள்ள பாடல்/வாசிப்பில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், ராகத்தில் வாதி-சம்வாதி ஸ்வரங்களுடைய விஷயங்களைத் தெரிந்து செய்தது போல இல்லை. அதற்காக அவர்களின் பாடலில் அது இல்லை என்றோ பாடகர் வெவ்வேறு இடங்களில் குறைவாகவோ அதிகமாகவோ நிற்பதில்லை என்பதில்லை. ஆனால் குறிப்பிட்ட ராகத்தில் குறிப்பிட்ட ஸ்வரம் அதிகம் புழங்குகிறது, அதற்குப் பிறகு ஸ்வர அளவில் தன் மகத்துவத்தைக் காட்டுகிறது என்று இவ்வாறு நம்பும்படியாக நியமம் எதுவும் செய்யப்படவே இல்லை. நாகோஜி ராவ் இதற்கு இவ்வளவு முயற்சி செய்துக் கொண்டிருக்கிறார்(ஆனாலும்) வாதி-சம்வாதியின் அமைப்பு அவருக்குப் புரிபட வில்லை. நம் பக்கத்தில் கோபால ராவ் அனுப்பிய ஜகன்னாத பந்த் கோஸ்வாமி - அவர் இங்கே சங்கீதத்தின் பெரிய அதிகாரியாகப் போற்றப்படுகிறார். அவர் தினமும் என்னிடம் வந்து இரண்டு-மூன்று மணி நேரம் அமர்ந்துக் கொண்டு பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அவர் இது குறித்து இந்த விஷயத்தை என்னிடமிருந்து கற்றுக் கொண்டார், நானும் அவருக்கு சந்தோஷமாக அதைக் கொடுத்தேன். ஆனாலும் ஒரு நாள் தைரியமாக, "எங்கள் திராவிட பிராந்தியத்தில் வாதி-சம்வாதியின் மேல் யாரும் கவனம் செலுத்துவதில்லை என்று என்னிடம் சொன்னார். நான் பல இடங்களில் பார்த்திரருக்கிறேன், அதனால் இந்த விஷயம் எனக்குப் புரிந்தது. நான் உங்கள் முன்னர் என் வாத்தியம் அதாவது, "பாலஸரஸ்வதி" அல்லது (ஸ்வரவத்) சரோத் கொண்டு வந்து இந்த வாதி-சம்வாதி வாசித்துக் காட்டுகிறேன் - நீங்களே பாருங்கள்" [என்றார்]

ஜகன்னாத பட்ட கோஸ்வாமியின் வாசிப்பு

கே: நீங்கள் எந்த விதியின் படி அதைக் காட்டுவீர்கள்?

ப: ஒரு ராகத்தை ஆரம்பிக்கும் போது, அதில் ஒரு முறை "ரி"யை வாதியாக்குகிறேன், அதற்குப் பிறகு "ம"வை வாதியாக்குகிறேன்,பிறகு மற்றொன்றை வாதியாக்குகிறேன். இதன்படி ஒரு ராகத்தில் வெவ்வேறு ஸ்வரங்களை வாதியாகி வண்ணம் கொடுக்கிறேன். இதைக் கேட்டு உங்களுக்கு மிகவும் சந்தோஷமாகும்.

மற்றொரு நாள் , அவர் தன் வாத்தியத்தைக் கொண்டு வந்து வாசித்தார். "பாலசரஸ்வதி" அதாவது தாஊஸ்[9] மற்றும் ஸ்வரவத் அதாவது சரோட். இந்த வாத்தியம் தெற்கில் வாசிக்கப்படுவது போல் இங்கே வாசிக்கப்படுவதில்லை என்பதை யார் வேண்டுமானாலும் ஒத்துக் கொள்வார்கள். சரோதில் பகாவாஜ்ஜின் சொற்களை வாசித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஹிந்துஸ்தானி சரோட் வாசிக்கும் உயர்தர கலைஞர்கள் இங்கே யாரையும் நான் பார்க்கவில்லை, அதனால் அந்த விஷயத்தில் கருத்து சொல்ல முடியாது. இங்கேயுள்ள சரோத் வாசிப்பவர்களைப் பற்றிய நல்ல அபிப்ராயம் என் மனத்தில் உருவாகவில்லை என்று மட்டும் சொல்ல முடியும். இரண்டாவது வாத்தியம் தாஊஸ். இங்கே தஞ்சாவூரில் மட்டுமல்லாது தெற்கில் முழுவதும் "தாஊஸ்" க்காரர் கோஸ்வாமி மட்டுமே என்று அவர் சொன்னார். ஒன்றிரண்டு உதராணம் தன்னைப்பற்றியதாக அவர் சொன்னதாவது:

நான் மைசூர் மஹாராஜாவிடம் சென்றேன். அங்கே ஒரு வங்காள தேசத்தவர் - மிகவும் பிரசித்தமான வாத்தியக்காரர் இருந்தார். வாசிக்கும் நேரம் வந்த போது, தாஊஸ் வாசிக்கும் போது தடவி வாசிப்பதன் மூலம் மீண்ட் வாசிக்கும் முறை அவருக்குத் தெரிந்திருக்க வில்லை. அவர் தந்தியை இழுத்து மீண்ட் வாசித்தார், அதனால் ஒவ்வொரு முறையும் தந்தி [ஸ்ருதி] இறங்கியது அதை சேர்த்துக் கொள்வதற்காக வாசிப்பதை நிறுத்திக் கொண்டிருந்தார். இதனால் மக்கள் சலித்துப் போய் உட்கார்ந்துக் கொண்டிருந்தனர். என் முறை வந்த பின் , அவர் நான் மீண்ட் இழுத்து வாசித்ததைப் பார்த்தபோது நேராக முன்னே வந்து சொல்ல ஆரம்பித்தார், "ஆஹாஹா! இவ்வாறு வாசிப்பவர் ஒருவரைத் தான் நான் பார்த்திருக்கிறேன். நான் இந்த முறையை இவரிடம் கற்றுக் கொண்டேன் மேலும் என் வாசிப்பிலும் அதைப் புகுத்தி வாசிப்பேன்.

கே: அவர் தொழில்முறைக் கலைஞரா அல்லது குடும்பஸ்தரா?

ப: பெரிய தொழில்முறைக் கலைஞர். தினம் மூன்று ரூபாய்க்கு வாசிப்பவர்.

கே: அங்கே கேட்பவர்கள் யார் இருந்தனர்?

ப: வைணிகர் சேஷண்ணாவும் இருந்தார். அவரும் என் வாசிப்பை புகழ்ந்தார். அவர் பெரிய இசை வல்லுனர் மற்றும் வித்வான். அவரைப் போன்ற பெருமை வாய்ந்தவர் இன்று தெற்கில் இல்லை என்று சொல்வது மிகையாகாது. எனக்கென்னவோ என்னுடைய தேர்ச்சியை அவரும் ஏற்றுக் கொண்டார் , அதனால் அன்றிலிருந்து அவர் என்னை மிகவும் மதிக்கத் தொடங்கினார். அவரை நான் மீண்டும் சென்னையில் சந்தித்தேன் (சென்னையிலா இல்லை வேறெங்காவதா என்பதை மறந்து விட்டார்) . அப்போது ஹை கோர்ட் ஜட்ஜ் மணி ஐயரின் வீட்டில் திருமணம், அதில் அவருக்கு ஒரு கச்சேரிக்கு 200 ரூபாய் கொடுத்து அழைக்கப்பட்டிருந்தார். என்னைப் பார்த்தவுடன் அவருக்கு மிகவும் சந்தோஷம் ஆனது , மேலும் எனக்கும் இந்த மனிதருக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்றும் சொல்லத் தொடங்கினார். ஒன்று தான் இருக்கிறது.

[9] [தாஊஸ் வட இந்தியாவைச் சேர்ந்த வில்லால் வாசிக்கப்படும் ஒரு வகை தந்தி வாத்தியம், மயில் போன்ற உடலும் கழுத்தும் இருபது வலிக்கட்டுகளும் 28-30 தந்திகளும் இருக்கும்].

என்னிடம் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி பால சரஸ்வதி வாசிக்கச் சொன்னார். எல்லோரும் அதைக் கேட்டு மகிழ்ந்தனர்.

இந்த வாத்தியத்தைப் பூனாவின் பலவந்த ராவ் ஸஹஸ்ரபுத்தே எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். சென்னையின் பச்சையப்பா கல்லூரியில் ஒரு பெரிய விழா இருந்தது. கர்னல் ஆல்கார் [Colonel Olcott] உடைய பேச்சு இருந்தது. அந்த சமயத்தில் யதேச்சையாக இந்த வாத்தியத்தை வாசிக்க வேண்டினார்கள். நான் என் வாழ்க்கையில் இந்த வாத்தியத்தைக் கையில் எடுத்ததே இல்லை என்றேன். ஆனால் சரோத் மற்றும் வீணை வாசித்தவனாதலால் , பலவந்த ராவ், விழாவை இன்னும் சிறப்பாக ஆக்கவாவது நீங்கள் இந்த வாத்தியத்தை வாசிக்க வேண்டும் என்றார். இறைவனின் செயல் - நான் வாத்தியத்தை கையிலெடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். அதன் இனிமையான தொனி, கேட்பவர்கள் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆற்றியது. பிறகு இந்த வாசிப்பிற்காக 200 ரூபாய் இனாம் கிடைத்தது.

கே: தாஊஸ் வாசித்ததற்கா?

ப: இல்லை. சரோத் வீணை முதலியவற்றிற்காக. இங்கே என்னை விட்டால் இந்த வாத்தியத்தை வாசிக்க வேறு யாரும் இல்லை.

கே: வாத்தியம் மிகவும் விலை குறைந்ததாக இருக்கிறது, மக்களுக்கும் இவ்வளவு பிடித்திருக்கிறது, பிறகு ஏன் இந்த நிலை வந்தது?

ப: இந்த வாத்தியம் அவர்களுக்கு யார் கொடுத்தார்கள்? நான் எல்லோருக்கும் வாசிப்பதில்லை. இங்கே இது இதற்கு முன் பார்த்திராத ஒன்று. இந்த வாத்தியத்தை எனக்கு பலவந்த ராவ் அன்பளிப்பாகக் கொடுத்தார்.

நம் பக்கத்தில் அவர் வாசித்த வாசிப்பிற்கு மும்பையில் வாசிப்பவர்களுக்குள் அவருக்கு மூன்றாவது இடம் கூட கிடைக்காது. அவருடைய மகன் அவருக்கு பகாவாஜ் வாசித்தார். பையன் நன்றாக வாசித்தான். இங்கே அவனுக்கு நல்ல மதிப்பு கிடைக்கவில்லை.

சேதுராமின் பகாவஜ் மற்றும் தேவ கோஸ்வாமியின் சரோட்:

அடுத்த நாள், என் வீட்டில் இன்னொரு பாடகரின் கச்சேரி நடந்தது. அதில் இங்கே பல சிறந்த பாடகர்கள் மற்றும் ஹிந்துஸ்தானில் காற்று வந்தவரான ஒரு வயதானவரான "பய்யா சாஹிப்" கூட இருந்தார். க்வாலியாரின் மோர்காவ்கர் ஹரிதாசரும் இருந்தார். தஞ்சாவூர்க்காரரான சேதுராம் என்ற முதல் தர பக்காவாஜ் வாத்தியக்காரரும் இருந்தார். இரண்டு மணி நேரம் ஆனந்தமாக இருந்தது. முதலில் இங்கேயுள்ள ராமதாஸ் மடத்து அதிபதி, "தேவகோஸ்வாமி" சரோட் வாசித்தார். அதற்குப் பிறகு ஹிந்துஸ்தானி பாட்டு நடந்தது. ஹரிதாசர் வயதில் இருபது-முப்பதான இளமையான குடும்பஸ்தர். அவர் அங்கே க்யால் முதலியவை கற்றிருந்தார். அவர் பூரியாவில் ஒன்றிரண்டு க்யால் பாடினார். அதற்கப்புறம் கானடா பாடினார். அதில் திடீரென தீவ்ர தைவதத்தை பிரயோகித்து பாகேஸ்வரி ஆக்கி விட்டு அதை தர்பாரி

கானடா என்று சொன்னார். பைய்யா சாஹிப் 80 வயதான முதியவர். அவர் தன் வயதிற்கேற்ப தர்பாரியில் ஒரு க்யால் நன்றாகப் பாடினார். அதற்குப் பிறகு "ககரியா ஃபோடி ரே" என்று டுமரி பாடினார். மொத்தத்தில் அன்றிரவு சில அம்சங்களில் சரோட் மற்றும் பகாவஜ் நன்றாக இருந்தது. இரண்டு மணி நேரம் ஆனந்தமாகக் கழிந்தது. எல்லோரிடத்திலும் நட்பு உருவானது. காலை வேளைகளில் இவர்களில் பலர் இது குறித்து விவாதம் செய்வார்கள். ஒருவர் என்னிடம் வந்து சொன்னார் என் வருகையால் , இந்த ஊரின் சங்கீதம் அறிந்தவர்கள் மத்தியில் ஒரு உத்வேகம் கிளம்பி இருக்கிறது என்றார், மேலும் என் கேள்விகளுக்கு பதில் யாராலும் சொல்ல முடிவதில்லை என்ற எண்ணம் உருவாகியிருக்கிறதாம். இவ்வாறு விஷயம் புரிந்த ஒருவர் இங்கு இதற்கு முன் வந்ததே இல்லை என்ற எண்ணமும் இருக்கிறதாம். இதைக் கேட்டதும், மனித சுபாவத்திற்கேற்ப எனக்கு சிறிது பெருமையாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

முத்தையா பாகவதர் மற்றும் தாஸஸ்வாமி

ஒரு நாள் திருநெல்வேலியிலிருந்து முத்தையா பாகவதர் வந்தார். அவரை அழைத்துக் கொண்டு தாஸஸ்வாமி என்ற முதல் தர பகாவஜீ வந்தார். நான் பேச்சுவாக்கில் சமம், அதீதம், அநாகதம் இவற்றின் முறைகளைப் பற்றி விளக்கச் சொல்லிக் கேட்டேன். அப்போது ராமநாத ஸ்வாமி, தாசஸ்வாமி, பாகவதர் மற்றும் ஜகன்னாத பட் பீன்கார், இவர்கள் அனைவரும் இருந்தனர். தமிழ் மற்றும் மராட்டி பாஷையில் நன்றாகப் பேச்சு நடந்தது. ஜகன்னாத பந்த் அதிகம் முயற்சி செய்யாமல் பேசுவதில் மிகவும் தேர்ந்தவராக இருந்தார். அவர் ஒரு முன்சீப்பைப் போன்ற தோரணையோடு பாகவதரிடம் பேசினார். பாகவதர் ஒரு வரியை எடுத்துக் கொண்டு, கையில் த்ரிதாளம்[10] போட்டுக் கொண்டு 'ஆடீ[11]' லயத்தைக் காட்டினார். தாசஸ்வாமி நன்றாக பகாவஜ் வாசிக்கக் கூடியவர் ஆனால் அவருக்கு சாஸ்திர ஞானம் இல்லை. விவாதம் முற்றுப் பெறாமல் தொடர்ந்துக் கொண்டிருந்தது. ஒருவருக்கொருவர் கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை. பட்டர் அவர்களுக்குத் தன் மீதே நம்பிக்கை இருக்கவில்லை. இந்த நிலைமையைக் கண்டு, நான் சொன்னேன் "அய்யா இப்படிச் செய்யாதீர்கள்". "தா தா3 தின் தா" என்ற "சௌதால்[12]" உங்கள் எல்லோருக்கும் வரும் அதனால் அதை எடுத்துக் கொள்ளுங்கள். இதோடு பாடல் வரிக்கு பதில் "தக தக தக தக" என்று வெறும் பன்னிரண்டு சொற்களைச் சொல்லுங்கள், ஒவ்வொருவரும் தாளம் போதும் போது "டாஹ[13]" லயத்தில் அதீதம், அநாகதம் இவற்றை எடுத்துக் காட்டுங்கள். இதற்குப் பின் தாஸஸ்வாமி

---

[10] [நான்கு நான்கு மாத்திரைகளாக வகுக்கப்பட்ட 16 மாத்திரைகள் கொண்ட ஒரு ஹிந்துஸ்தானி தாளம்

தா தின் தின் தா | தா தின் தின் தா
தா தின் தின் தா | தா தின் தின் தா]

[11] [1 ½ பங்கு கதி]

[12] [பன்னிரண்டு மாத்திரை கொண்ட தாளம் தா3 தா3 | தின் தா | கிட தா3 | தின் தா | தி1ர கிட கதி3 கின]

[13] [ஆதார லயம்]

மற்றும் பட்டஸ்வாமி தங்களால் அவ்வாறு செய்ய முடியாது என்று சொல்லிக்கொண்டு பின்னே நகர்ந்து விட்டார்கள். பாகவதர் மட்டும் முன்வந்து, பாடல் தாளத்தின் பிரமாணத்தின் அதே லயத்தில் வைத்துப் பாடினால் அது சமம், மற்றும் அதன் லயத்தின் "ஆட்" ஸ்வரூபம்[14] விஷமம் ஆகும் என்று விளக்கினார். விஷம லயத்தின் இரண்டு வகை - அதீதம் மற்றும் அநாகதம் ஆகும். இதைச் செய்து காட்ட தாளத்தைப் போட்டு "தக தக" வை ஆரம்பித்து 12 அக்ஷர மாத்திரைகளோடு நிறுத்தி ஆவர்த்தனத்தை முடித்தார். மீண்டும் அதே இடத்தில் அதாவது தாளத்தின் முதல் மாத்திரையின் இடத்தில் "த" வந்தது. இதன் பெயர் "அதீத" கிரஹம் என்றார். அதே கிரஹத்தை அநாகதமாக்க,"த" என்ற அக்ஷரத்தை தாளத்திற்கு மாத்திரைக்கு முன்னர் வைக்க வேண்டும். இதைக் கேட்டு மற்ற ஸ்வாமிகள் இந்த விளக்கம் சரியாக இருக்கிறது என்றார்கள். அதனால் அதை இங்கே எழுதி வைக்க வேண்டும். பிறகு வேறு யாராவது மூலமாக இரண்டாவது விளக்கம் கிடைத்தால் அதையும் குறித்துக் கொள்வேன்.

ஞாயிறு 3 டிசம்பர்

இன்று ஒரு வைணிகர் எங்கள் வீட்டிற்கு வந்தார். இங்கே வீணை என்றால் நாம் எதை ருத்ரவீணை என்று சொல்கிறோமோ அது. அந்த வைணிகர், பல்வேறு கர்நாடக ராகங்கள் வாசித்துக் காட்டினார். அவர் மைசூரில் கற்றிருந்தார். அவர் மைசூரின் "சுப்பணா" மற்றும் "சேஷண்ணா" நன்கு சங்கீதம் அறிந்தவர்கள் என்றார். அதே போல் கரிகிரிராவ் என்ற சங்கீத சாஸ்திரி பெரியபேட்டை மைசூரில் இருக்கிறாராம். அவரைச் சந்திக்குமாறு சொன்னார். நான் அவ்வாறு செய்யத்தான் போகிறேன். இன்று மாலை இங்குள்ள ஜகதீஸ்வரனின் பெரிய கோவிலைப் பார்க்கச் சென்றேன். கோவில் மிகவும் பெரிதாக்கவும் பார்க்கத் தகுந்ததாகவும் இருந்தது. இந்தியாவில் பார்க்கத் தகுந்த கோவில்களில் இதுவும் ஒன்று. இங்கே வந்து ஐரோப்பியர்கள் மீண்டும் மீண்டும் புகைப்படம் எடுத்துக் கொண்டு செல்கின்றனர்.

கிரந்தங்களைச் சேகரித்தல்

இங்கே சரஸ்வதி மஹாலில் சில சங்கீத புத்தகங்கள் இருக்கின்றன என்று முன்னரே எழுதி இருந்தேன். அவற்றில் "சங்கீத சாராம்ருதம்" (ஸ்வராத்யாயம், ராகாத்யாயம், மற்றும் தாளாத்யாயம்) மற்றும் "ராகலக்ஷணம்" இந்த இரண்டு கிரந்தங்களை நான் கேட்டிருக்கிறேன். அவற்றைப் பிரதி செய்ய பன்னிரண்டரை ரூபாய் கொடுத்திருக்கிறேன். பிரதியெடுக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டது. "ராக ரத்னாகரம்" முதலிய மற்ற கிரந்தங்களையும் பார்த்தேன். ஆனால் அவற்றில் வெறும் ராகம், அதன் மனைவி , மகன் ஆகிய குடும்பம், அவற்றின் பெயர், வர்ணனைகளைத் தவிர வேறு ஒரு விஷயமும் இருக்கவில்லை. அதனால் இந்த தடவை இந்த கிரந்தத்தை எடுத்துக் கொள்ளவில்லை. இது போன்ற பெயரை மட்டும் குறிப்பவை என்னிடம் பல இருக்கின்றன. அவற்றால் எந்த பிரயோஜனமும் இல்லை. இந்த காரணத்தால் இவற்றை மட்டும் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்தேன். இங்கே தாளத்தைப் பற்றி, "நந்தீபரதம்"

[14] [வெவ்வேறு பங்கு வேகம்]

மற்றும் "தாளத3ர்பணம்" ஆகியவை உள்ளன என்று தாசஸ்வாமி கூறுகிறார். இந்த கிரந்தங்கள் "திருவாடி" கிராமத்தில் (இங்கிருந்து 8 மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமம்) இருக்கின்றன என்றும் சொன்னார் , ஆனாலும் அவற்றை இது வரை பார்க்க முடியாதது வருந்தத்தக்கது. முடிந்தால் நிச்சயம் அவற்றைப் பெறுவேன். அவற்றில் தாளங்களும் அவற்றின் அங்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

தாளம் பற்றிய விவரம்

ஒவ்வொரு கிரந்தத்திலும் தளத்திற்கு 10 "பிராணங்கள்" ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளன. "பிராணம்" என்ற இந்தப் பெயரின் ரகசியம் என்னவென்றால் ஒவ்வொரு தாளத்திற்கும் இந்த 10 விஷயங்கள் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றன. இந்த பத்து விஷயங்களை ஒவ்வொரு ஜாதியின் தாளத்திலும் பொருத்திப் பார்க்கவேண்டும் மற்றும் அந்த தாள சம்பந்தமாக அது புரிந்தால், அந்த தாளம் நன்றாக அமைந்தது என்று சொல்ல முடியும். எவ்வாறு "கீதம்", "வாத்யம்" மற்றும் "நிருத்யம்" இவற்றில் "மார்க்கம்" , "தேசி" என்று இரண்டு பாகுபாடுகள் செய்யப்பட்டனவோ அதே போல் தாளத்திற்கும் இரண்டு பாகுபாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது , 1) மார்க்க தாளம் 2. தேசீ தாளம். இதைத் தவிர இன்னொரு வகையான பாகுபாடும் உண்டு. 1. சுத்த 2. ஸாலக 3. ஸங்கீர்ண (தாளம்) ஆகியன. இந்த மூன்று பாகுபாடுகள் ராகத்திற்கும் உண்டு, மற்றும் அந்த சொற்களின் அர்த்தம் இரண்டிலும் ஒரே போலத் தான் இருக்கின்றன. மற்றொரு இடத்தில் "மார்க்கம்" மற்றும் "தேசி" பற்றி நான் எழுதி இருக்கிறேன். அதை இன்னொரு தடவை எழுத வேண்டாம். "மார்க்கம்" என்ற சொல்லின் அர்த்தம் இங்கே, முன்னர் இருந்த சாஸ்திரிய நியமங்களில் கட்டுப்பட்டு, அந்த நியமங்களிலிருந்து கொஞ்சமும் வழுவாமல், இருக்கிறதோ அந்த சங்கீதம் மார்க்கம் என்ற பெயருடன் வழங்கப்படுகிறது என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இந்த நியமம் தாள விஷயத்திலும் உண்டு. எந்த தாளங்கள் பண்டைய சாஸ்திரத்தில் வர்ணிக்கப்பட்ட நியமங்களின் படி அமைக்கப்பட்டிருக்கிறதோ, அதை "மார்க்கதாளம்" என்று புரிந்துக் கொள்ளவேண்டும். எங்கே நியமங்களிலிருந்து சுதந்திரம் எடுத்துக் கொள்ளப்படுகிறதோ, தேசம், இடம் , மற்றும் ருசிக்கேற்ப, ஜனரஞ்சகத்திற்காக எவற்றில் சில மாறுதல்கள் செய்தால் தவறில்லையோ அவற்றை "தேசிதாளம்" என்று புரிந்துக் கொள்ளவேண்டும். எவ்வாறு "தேசி கீதத்தில் சாஸ்திரத்தின் ஸ்ருதி மூர்ச்சனை கிராமம் ஆகியவற்றின் நியமத்தில் மாற்றங்கள் செய்கின்றனரோ அதே நிலை இந்த தேசி தாளங்களுக்கும் பொருந்தும் என்பது சுலபமாகப் புரிந்துக் கொள்ளக்கூடிய ஒன்று. தாளத்திற்கு "தசபிராணம்" சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றை நன்றாகப் பார்த்தோமானால், இவை மார்க்க தாளங்களுக்கானவை[15]. இதே காரணத்தால் தேசி தாளங்களின் தொகுத்து அந்தத் தலைப்பில் முதலில் கொடுக்கப்பட்டுள்ளது. சங்கீத ரத்னாகரம் முதலிய புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு அதன் தாளாத்யாயத்தைப் படித்தால், முதற்கண் பயம் ஏற்பட்டு விடுகிறது. இதில் "ஸஸப்த க்ரியா" மற்றும் "நிஸப்த க்ரியா" ஆகியவற்றின் வர்ணனைகள் மிகவும் குழப்பம் உண்டு பண்ணக் கூடியது. ஆனால் அந்த பகுதியை நிதானமாகப் படித்தால் பல விஷயங்கள் தெளிவடைகின்றன. இந்த அத்தியாயத்தில்

[15] [அடிக்குறிப்பு 16-ஐப் பார்க்கவும்]

முதல் குழப்பம் "மார்க்கதாள" விஷயத்தில் தான். "சச்சபுடம்", "சாசபுடம்", முதலியவை மார்க்கதாளங்களாகக் கணக்கிடப்படுகின்றன. இது தொடர்பாக பல கடினமான நியமங்கள் முதலியவை சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த தாளங்கள் இப்போது புழக்கத்தில் இல்லை என்று சொல்லலாம். பிரசாரத்தில் என்ன தாளங்கள் இருக்கிறதோ, அதுவும் குறைந்த பட்சம் சார்ங்கதேவரின் சமயத்தில் இருந்தவை, அவற்றை தேசி தாளம் என்ற தலைப்பில் வைத்து, அவற்றின் அங்கம், சின்னத்தோடு, சுலபமாக எழுதப்பட்டுள்ளது. இந்த அங்கங்கள் தெளிவான சின்னங்களோடு கொடுக்கப்பட்டதால், இந்த தாளங்களைப் பார்த்தவுடனே கைகளில் மாத்திரைகளை எண்ணிக்கொண்டு தாளம் போட்டு, நேரடியாகப் புரிந்துக் கொண்டு காட்ட முடியும். இந்த தேசி தாளங்களின் கழுத்தில் "தசப் பிராணத்தின்" கடினமான லக்ஷணம் என்ற கயிறு அவசியம் இல்லை. இவற்றில் சில தானாகவே தெளிவாகி விடுகின்றன. அதற்காக எல்லா நியமங்களின் படி, கடுமையாக அதைப் பின் பற்ற வேண்டும் என்பதல்ல.

சுத்த, சாலக, சங்கீர்ண - இந்த சொற்கள் தாளத்தைக் குறித்தும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதன் விளக்கம் என்னவென்றால், சுத்த தாளம் சுத்த ராகத்தைப் போல, மற்ற தாளங்களின் உதவியின்றி மகிழ்விக்கக் கூடியவை. எவ்வாறு இரண்டு ராகங்களின் சேர்க்கையினால் ஒரு ராகம் உருவாகி சுகத்தை உண்டு பண்ணுகிறதோ அதை நாம் சாலக ராகம் என்று சொல்கிறோம்., அதே போல இரண்டு தாளங்களைச் சேர்த்து, ஒரு புதிய தாளத்தை உருவாக்கி, புழக்கத்திற்குக் கொண்டு வந்தால் அதை சாலகம் என்று சொல்வார்கள். இரண்டுக்கும் மேற்பட்ட தாளங்கள் சேர்ந்து ஒரு தாளம் உருவானால், அதை சங்கீர்ண ஜாதி தாளம் என்று சொல்கிறார்கள். சுத்த, சாலக, சங்கீர்ண, இவை புதிய தாளங்களின் பேர்கள் அல்ல பாகுபாடுகள் என்ற அளவில் புரிந்துக் கொண்டால் போதும். எப்படியும் பேர் வேறு இருக்கும். (மார்க்க) தாளங்களிற்கு பத்து பிராணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன[16], அவை இவ்வாறு :-

कालोमार्गः क्रियाङ्गानि ग्रहो जाति कला लयः

यत्तिः प्रस्तारकाश्चेति ताले प्राणाः दशः स्मृताः

இவ்வாறு இந்த "தசபிராணங்கள்" சொல்லப்பட்டு, இதற்குப் பிறகு கிரந்தத்தில் ஒவ்வொன்றுக்கும் லக்ஷணம், மற்றும் உபயோகம் சொல்லப்பட்டிருக்கிறது. பிராக்ருத கிரந்தக்காரர்களுள் இந்த விஷயத்தைப் பற்றிப் படிக்கக்கூடிய தகவல், "சங்கீதகலாதர" என்ற குஜராதி புத்தகத்தை எழுதியவர் கொடுத்திருக்கிறார். அவர் இந்த தாளப் பிராணங்களைப் பற்றிக் கொடுத்துள்ளவை படிக்கத் தகுந்ததாக இருக்கிறது. ஆனால் அவர் தன்னுடைய தகவல் எந்த சமஸ்கிருத கிரந்தத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லவில்லை. இதன் காரணம் தெளிவாகத் தெரிகிறது - ரத்னாகரத்தின் ஐந்தாவது அத்தியாயத்தில் தாளத்தைப் பற்றிய விவாதம் இருக்கிறது. அதில் தசபிராண ஸ்லோகம்

[16] [தசபிராணம் என்ற தொடர் பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது. நாட்டிய சாஸ்திரத்தில் கிரியா இல்லை. கிரியா என்ற தொடரை நாட்டியசாஸ்திரத்துக்கு உரை எழுதிய அபிநவகுப்தர் தான் முதன்முதலில் உபயோகிக்கிறார்.பண்டிட் பாத்கண்டே ரத்னாகரத்தில் தசபிராணம் கொடுக்கப்படவில்லை என்றும் சொல்கிறார், அதே சமயம் மார்க்கதாளங்களுக்கானவை தசபிராணங்கள் என்றும் சொல்கிறார்.]

அப்படியே கொடுக்கப்படவில்லை. ஆனால் அங்கே இதில் பல விஷயங்களைப் பற்றிய செய்திகள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்லோகம், த3ர்பணத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. நான் அதை "சங்கீத சார ஸங்க்ரஹம்" என்ற டேகோரின் [Tagore] புத்தகத்திலிருந்து எடுத்துள்ளேன். ரத்னாகரத்தில் தாளாத்யாயத்தின் இரண்டு பாகங்கள் உண்டு. 1. மார்க்க தாளம் 2. தேசி தாளம்

மார்க்க தாளத்தைப் பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏனெனில் அந்த தாளங்களின் நேரிடை உதாரணம் நம் பார்வையில் வர முடியாது. அவை மிகவும் பண்டைய காலத்தவை. நான் இவ்வாறு எழுதுவதால் எனக்கு முதல் பாகத்தின் தத்துவம் புரியாததால் தான் அதன் முக்கியத்துவத்தைக் குறைவாக மதிப்பிடுகிறேன் என்ற எண்ணம் ஏற்படக் கூடும். நான் அவற்றில் சொல்லப்பட்ட பல கீதங்கள் - அதாவது மார்க்க தாளத்தின் அடிப்படையில் எழுதப்பட்டவை, அவற்றை என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை என்பதைத் தாழ்மையுடன் ஒத்துக் கொள்கிறேன், இந்த கீதங்களின் பெயர்கள் கூட இந்த கிரந்தங்களில் முதன்முதலில் பார்க்கிறோம்.

एते प्रकरणाख्यानि तालैर्याविजगु बुधाः |

तानि गीतानिवक्ष्यामः तेषामाद्यम् तु मन्द्रकम् ||

अपरान्तकमुल्लोप्यं प्रकर्योवेणकं तथा |

रोविन्दकोत्तरे सप्तगीतकोनित्यवादिषुः ||

இந்த ஸ்லோகங்களில் சொல்லப்பட்ட ஏழு வகை கீதங்களையும் அவற்றின் வித்தியாசங்களையும் இன்று யாருக்காவது தெரியுமா[17]? மார்க்க தாளத்தையே யாரும் பாடாத போது, தாளாத்யாயத்தின் முதல் பாதியை (அதாவது இவ்விவற்றின் உபயோகத்தின் வடிவம்) புரிந்துக் கொள்ள கடினமாக இருக்கிறது. இந்த மார்க்க தாளம் அதில் சொல்லப்பட்ட க்ரியைகள் மூலம் செய்தால் பிடிக்கவும் பிடிக்காது. இதற்காக நான் அந்த பாகத்தை விட்டு விட வேண்டும் என்றோ அதை அப்யாஸம் கூட செய்ய வேண்டாம் என்றோ சொல்லவில்லை. அதை நன்றாகப் படிக்க வேண்டும் மற்றும் சாஸ்திரம் அறிந்த பண்டிதர்களின் உதவியுடன் அதைப் புரிந்துக் கொள்ளவேண்டும். நான் அப்படிச் செய்யத்தான் போகிறேன். இந்த எழுத்தில் அதன் லக்ஷணம் முதலியவற்றின் முழுமையான விவரம் ஆகியவற்றைக் கொடுக்க முடியாது என்று மட்டுமே சொல்ல விரும்புகிறேன். இன்று வரை அந்த கீதம் மற்றும் அதன் லக்ஷணம் பற்றிய முழு விவரம் எனக்குக் கிடைக்கவில்லை. சிலர் அந்த தகவல் எனக்கு வைதிகர்களிடம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். நான் தெற்கில் யார்யாரிடமோ இது

[17] [1950 க்குப் பிறகு அபிநவபாரதி போன்ற கிரந்தங்கள் வெளிவந்ததன் பிறகு இந்த கீதங்கள் பற்றிய சில விவரங்கள், மற்றும் ஆய்வுகள் நிகழ்ந்திருக்கின்றன]

குறித்துக் கேட்டுப் பார்த்தேன் ஆனால், அங்கே சமஸ்கிருத கிரந்தங்களைப் பற்றிய விவாதம் இல்லவே இல்லை. ரத்னாகரத்தைத் தவிர மற்றவைகளின் பெயரைக் கூட ஒருவரும் சொல்வதில்லை. ரத்னாகரத்தையும் வெறும் பெயர் தான் கேள்விப்பட்டிருக்கின்றனர்.

ஸமய ஸாரிணி - தாளங்களில் காலம் பற்றிய அளவீடு

ஆஞ்சநேய மதத்திலிருந்து

पद्मपत्र शतैकत्र छेदनात्तु क्षणः स्मृतः ।

लवः क्षणैरष्टभिः स्यात् काष्टा स्यादष्टभिर्लवैः ॥

स्यान्निमेषोऽष्ट काष्टा भिर्निमेषैरष्टभिः कला

कलंद्वयाच्चतुर्भागः स एकः श्रुटि रुच्येते ॥

चतुर्भादद्वयेन्नैव विद्वद्धैं परिकीर्तितम् ।

अणुद्वयात् द्रुतं प्रोक्तं तद्वयाच्च लघुः स्मृतः ॥

लघुद्वयात्तु वक्रः स्यात् तत् त्रयेण प्लुतो मतः ।

इतिकाल गतिः प्रोक्ता तालज्ञैः पूर्व सूरिभिः ॥

இந்த ஸ்லோகத்தில், காலத்தின் அளவீடு அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. இதை முன் பக்கத்தில் நான் கொடுத்துள்ளேன் அதனால் மீண்டும் சொல்லவில்லை.

மார்க்க தாள லக்ஷணம் -

மார்க்க தாளம் முக்கியமாக ஐந்து, ஆனால் அதன் பேதங்கள் பல.

1. ச$_1$ச்$_1$ச$_1$பு1ட1ம் 2. சா1ச1பு1ட1ம் 3. ஷ2ட்1பி1தா1 பு1த்1ரக1: 4.ஸம்ப1ர்க்கேஷ்2டா1க1:

4. உத்3க4ட்1ட1:

என்று ஐந்து. "த3ர்பணத்தில்" இதன் லக்ஷணம், இவ்வாறு: - புராணங்களில் இவை முதன்முதலில் மஹாதேவனின் ஐந்து முகங்களிலிருந்து வந்தன என்று சொல்லப்பட்டிருக்கிறது.

1.சச்சத்புட

ताले चच्चत्पुटेः ज्ञेयं गुरूर्द्वेद्वे लघुः प्लुतुः ।

सद्योम्द्वः शुक्लवर्णः चच्चत्पुटोऽष्ट मात्रकः ॥

அர்த்தம்:

சச்சத்புட தாளத்தில் இரண்டு குரு, ஒரு லகு, ஒரு ப்லுதம் இவ்வாறு அங்கங்கள் அல்லது ஸ்வரூபம் உள்ளது. இந்த தாளம் மஹாதேவனின் "ஸத்3ய" முகத்திலிருந்து வந்தது. அதன் நிறம் வெண்மை. மாத்திரை எட்டு. குரு - 2 மாத்திரை, லகு- ஒரு மாத்திரை ப்லுதம் - 3 மாத்திரை. கு கு ல ப்லு மொத்த எண்ணிக்கை - எட்டு மாத்திரை

2. சாசபுடம்

ताले चाचपुटे ज्ञेयो भगणो गुरूरेव च |

वामदेव मुखाज्जातः षण्मात्रः पीतवर्णकः ||

(அர்த்தம்) சாசபுடத்தில் "பகணம்", குரு. வாமதேவ முகத்திலிருந்து தோன்றியது. ஆறு மாத்திரை அளவானது. நிறம் மஞ்சள் நிறமாகச் சொல்லப்பட்டிருக்கிறது

3. ஷட்பிதாபுத்ரகம்

षद्वितापुत्रके त्र्यस्र भेदे पौगौ गुरूर्गलौ ।

ईषानजो रक्तवर्णो मात्रा द्वादशभिर्युतः

அர்த்தம்: இதில் ஒரு ப்லுதம், மூன்று குரு, ஒரு ப்லுதம் என்பது கிராமம். இதில் மூன்று வகை. ஈசான முகத்திலிருந்து தோன்றியது. மாத்திரை 12. நிறம் சிவப்பு.

ப்லு கு கு கு ப்லு - 3 + 2 +2 + 2 + 3 = 12

4. ஸம்பர்கேஷ்டகம்

संपर्केषाकके भेदाः षद्वितापुत्रकस्य च |

तद्वद्यथाक्षरे कार्यः प्लुताद्यंताक्षरस्तथा ||

अघोराख्य मुखाज्जातो नीलवर्णोयमीरितः ||

இந்த தாள வகை ஷட்பிதாபுத்ரகத்தைப் போன்றது. (சின்னத்தின் படி இருந்தாலும், யதாக்ஷரமாகக் கொள்ள வேண்டும் அதாவது, அக்ஷரத்தின் க்ரமத்தின் படி (தீர்க்கம் ஹ்ரஸ்வம் முதலியவை) இருக்கிறது, அப்படியே போட வேண்டும், மற்றும் ஆரம்பத்திலும் முடிவிலும் ப்லுத அக்ஷரங்களை அமைக்க வேண்டும். அகோர முகத்தினின்று தோன்றியது. நீல நிறம்.

5.**உத்கட்டம்**

गुरूत्रय समायुक्तः उद्घटः संप्रकीर्तितः ।

तत्पुरूषात्समुद्भूतो बहुवर्णोयमीरितः ||

அர்த்தம்: இந்த தாளத்தில் மூன்று குரு சொல்லப்பட்டிருக்கிறது. தத்புருஷ முகத்திலிருந்து தோன்றியது. பல நிறங்களுடையது.

இவ்வாறு இந்த முக்கிய ஐந்து தாளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளை ஒன்று கலந்தால் பல விதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நான் இந்த அம்சத்தை விளக்குகிறேன். அதனால் அது தெளிவாகப் புரியும்.

अथ तालस्य दशप्राण निरूपणम्

कालोमार्गः क्रियाङ्गानि ग्रहो जातिः कला लयः

यति प्रस्तार इत्येते तालप्राणाः दशः स्मृताः

(1) காலம் - பத்து விதம் . இவ்வாறு: 1 க்ஷணம் 2. லவம் 3. காஷ்டா 4. நிமிஷம் 5. கலா

6. த்ருதம் 7. லகு 8. குரு 9. ப்லுதம் 10. காகபதம்

8 க்ஷணம் = 1 லவம் 8 லவம்=1 காஷ்டா

8 காஷ்டா = 1 நிமிஷம் 8 நிமிஷம் = 1 கலா

4 கலா = 1 அணுத்ருதம் 2 அணுத்ருதம் = 1 த்ருதம்

2 த்ருதம் = 1 லகு 2 லகு = 1 குரு

3 லகு = 1 ப்லுதம் 4 லகு = 1 காகபதம்

(2) **மார்க்கம் ஏழு விதம் இவ்வாறு:**

1. தக்ஷிண 2. வார்த்திக 3. சித்ர 4. சித்ரதர 5. சித்ரதம 6. அதிசித்ரதம

இவைகளின் மாத்திரைகள் :

மாத்திரை - 8 ஸ - 1 கலா அல்லது 1 தக்ஷிண

மாத்திரை - 4 ஸ - 1 வார்த்திக

மாத்திரை - 2 ஸ - 1 சித்ர

மாத்திரை - 1 ஸ - 1 சித்ரதர

மாத்திரை - 1/2 ஸ - 1 சித்ரதம

மாத்திரை - 1/4 ஸ - 1 அதிசித்ரதம

(3) க்ரியா இரண்டு வகை . 1. மார்க்க க்ரியா 2. தேசீ க்ரியா.

तत्र मार्गक्रिया द्विविधाः यथाः

1. ஸஸப்த க்ரியா 2. நிஸப்த க்ரியா நிஸப்த க்ரியையில் நான்கு விஷயம் உண்டு :-

1. ஆவாப[18]: (விரல்களை மடக்குதல்)
2. [விக்ஷேப][19] விரல்களை நீட்டல்
3. பிரவேஸ[20] (தெலுங்கு பாஷையில் குடிவம் ககுதெச்சுட)
4. நிஷ்க்ராம[21] (தெலுங்கு பாஷையில் பொடவுகா ஜூபூடா)

ஸஸப்த க்ரியையில் நான்கு விஷயம் உண்டு :-

1. த்ருவ (சொடுக்குப் போடுதல்)

2. ஷப்ப[22] - இடது கையால் வலது கை மேல் தட்டுதல்[23]

3. தாள - வலது கையால் இடது கை மேல் தட்டுதல்

4. ஸன்னிபாத: - இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டுதல்

तत्र देशीक्रिया अष्टविधाः यथा

1.த்ருவகா 2. சற்பிணி 3. க்ருஷ்யா 4. பத்மினி 5. விஸர்ஜிதா

[18] [உள்ளங்கையை மேல்நோக்கி வைத்துக் கைவிரல்களை மடக்குதல்]

[19] [உள்ளங்கையைக் கீழ் நோக்கி வைத்து கைவிரல்களை மூடி வலது புறம் நகர்த்தல்]

[20] [உள்ளங்கையை கீழ் நோக்கி வைத்து கையைப் பின்னே நகர்த்தல்]

[21] [உள்ளங்கையைக் கீழ் நோக்கி வைத்து கைவிரல்களை மூடுதல்]

[22] [சம்ய]

[23] [சம்ய மற்றும் தாள ஸஸப்த க்ரியைகள் இங்கே தெளிவாக இல்லை மற்றும் சற்றே மாறி உள்ளன]

6. விக்ஷிப்தா 7. பதாகா 8. பதிதா

एतत् शास्त्रेण ज्ञेयं

(4) அங்க षड्विधानि यथा: (**சின்னங்களுடன்**)

அணுத்ருத	த்ருத	லகு	குரு	ப்லுத	காகபத
U	o	|	s	3	+

(5) க்ரஹ - चतुर्विधा यथा :- 1.அதீதம் 2.அனாகதம் 3.சம 4. விஷம

1.அதீதம் - அதாவது பாடல் முடிந்த பின்னும் தாளம் தொடரும்.
(பாடலின் சமத்திற்குப் பிறகு தாளத்தின் சமத்தைக் காட்டுதல்)

2. அநாகதம் - அதாவது தாளம் முடிந்த பின்னும் பாடல் இருக்கும்

(தாளத்தின் சமத்திற்குப் பிறகு பாடலின் சமம் தொடங்குதல்)

3.சம - அதாவது பாடலும் தாளமும் சமமாக ஒன்றாய்ச் செல்லுதல். (தாளம் மற்றும் பாடலின் சமம் ஒன்று சேர்தல்)

4. விஷம - அதாவது மேலே சொல்லப்பட்ட மூன்றும் இல்லாதது

(6) ஜாதி ஐந்து வகை. இவ்வாறு:

1. சதுரஸ்த்ர 2. த்ர்யஸ்த்ர 3. மிஸ்ர 4. கண்ட 5. சங்கீர்ண
ப்ராம்மண க்ஷத்ரிய வைஸ்ய சூத்ர ஸங்கீர்ண

(7) கலா त्रिविधा, यथा

1.ஏக கலா 2. த்விகலா 3. சதுஷ்கலா
लघुः गुरूः संयुक्ताद्य दीर्घ मित्यादिना लघु गुरू विवेकः

(8) லய விளம்ப, மத்ய , த்ருத

(9) யதி ஆறு வகை , இவ்வாறு:

1. விஷம 2. ம்ருதங்க 3. சம 4. வேதமத்ய 5.கோபுச்ச 6. ஸ்த்ரோதோவாஹ

(10) ப்ரஸ்தார

1.நஷ்ட 2.உத்திஷ்ட 3. பாதாள 4. த்ருத மேரு 5. லகு மேரு 6. குரு மேரு 7. ப்லுத மேரு 8. சம்யோக மேரு 9. கண்ட பிரஸ்தார 10. யதி பிரஸ்தார

முன்னர் [இருந்த] கிருஷ்ணா பாகவதர் மூலமாக எனக்கு ஜகன்னாத பட்டர் அவர்கள் கொடுத்த சில விவரங்கள்

உதாரணத்துடன் கொடுத்த இந்த அம்சங்கள் எனக்கு ஜகன்னாத ஸ்வாமியின் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இவற்றில் சிலவற்றின் விளக்கங்களை நான் அவரிடம் நேராகக் கேட்டேன். எவ்வாறு "மார்க்கம்" நான்கு வகை என்று சொல்லப்படுகிறது (த்ருத, சித்ர, வார்த்திக, தக்ஷிண) இது எவ்வாறு? க்ரியா "ஸஸப்த, நிசப்த க்ரியா வின் படி, "ஆவாப, நிஷ்க்ராம, விக்ஷேப, மற்றும் ப்ரவேஸ" எவ்வாறு? முதலியன. ஆனால் இது குறித்து அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. தெற்கில் இந்த விவரம் கிடைக்காது. இவை மிகவும் பண்டைய காலத்தவை. நாம் பாடும்போது இந்த கிரியைகள் உண்டு என்ற அளவில் தெரிந்துக் கொண்டிருக்கிறோம்.ஆனால் இந்த சின்னங்கள், பேர், ஊர் இவற்றின் விஷயங்களோடு தெரிந்துக் கொள்ளும்போது தான் மனம் நிம்மதி அடைகிறது. நாம் செய்வதிலெல்லாம் தாளத்தின் எல்லா பிராணமும் வருகின்றன என்பது உண்மை தான். ஆனால் அதைப் புரிந்துக் கொண்டு செய்தால் நன்றாக இருக்கிறது. சங்கீத த3ர்பணக்காரர் , ரத்னாகரத்தின் மார்க்க தாளத்தின் கடினமான அம்சங்களின் விவரங்கள் மற்றும் பல கீதங்களை அந்த தாளங்களோடு (ஸ்வரலிபியின்றி) காட்டியிருக்கிறார். த3ர்பணத்தில் சொல்லப்பட்ட அம்சங்கள் இங்கே விடப்பட்டுள்ளது. அவருடைய சமயத்தில் இந்த விவரங்கள் புழக்கத்தில் இல்லை என்று தோன்றுகிறது. அவர் "தச பிராணத்தின்" லக்ஷணத்தை சுருக்கமாக எளிமையான முறையில் கொடுத்திருக்கிறார். அதை நினைவில் கொண்டால் நல்லது.

பட்டர் அவர்களின் கையெழுத்துப் பிரதியிலிருந்து

ஸ்ரீ முரஜாக்ஷர மாலிகா

ம்ருதங்கத்தில் விசேஷமாக வரும் சொற்கள்

க வர்க்கத்தில் - க1, க3, ஞ
ச சர்க்கத்தில் - நிருத்யத்தில் மட்டும் உபயோகிக்கப்படும்
ட வர்க்கத்தில் - ட1 , ட3 , ண
த வர்க்கத்தில் - த1 த2 த3 த4 ன
ப வர்க்கத்தில் - ம
யகாரம் முதல் க்ஷ வரை - ர, ல

க1 க3 ஞ ட1 ட3 ண த1 த2 த3 த4 ன ம ர ல மொத்தம் - 14

விசேஷக் குறிப்பு: இதைப் படித்து நான் சில முடிவுகள் செய்துள்ளேன். அதன் அர்த்தத்தை வேறிடத்தில் செய்து வைத்திருக்கிறேன்.

த்ருவ தாளம் - மாற்றம் அடைந்த அட தாள அக்ஷரம் - 14 தாளத்தின் சின்னம்: | o | | , சொல் தட்டுடன் [stroke, aaghaat] 1, 5, 7, 11 அல்லது 1, 3, 7, 11

சொல்லின் மாத்திரை - சொல் தட்டுடன்

1		3			7			11			
தி4	த்1ருக்	தீ4னா	தோ1	ன்னா	க1	த்தா1	தீ4	தீ4னா	தீ4	தீ4	னா
X		|			2			3			

மட்ட தாளம் - அக்ஷரம் 10, சொல் தட்டு 1-5-7 அல்லது 1-8-9

கதி மாத்திரை - சொல் தட்டுடன்

1				5					
தா4	தி4ன்	த1க்1	தே4த்1	தி4ன்	த1க்	கி1ட்1	த1க்	க3தி3	க3ன்
X				X		X			

த்ரிபுட - தேவ்ரா[24] அக்ஷரம் 7, (இரண்டாம் பகுதியில் ரூபகம்) சொல் தட்டு 1-4-6 அல்லது 1-3-5 அல்லது 1-3 சொல்லக்ஷர மாத்திரை சொல் தட்டுடன்

1		4		6		
தா4	கி1ட1	தி1டி1	க1த1	க3தி3	க3ன

ரூபக - அக்ஷரம் சொல் தட்டு 6 , 1-3

சொல் அக்ஷரம் : தி4ம் தி4ம் தி4ம் தி4ம் தி4ம் த1 அல்லது தி1ம் தி1ம் தி1ம் தி1ம் தி1ம் ன

சதுரஸ்த்ர ஜாதி

	கண	சொல்கட்டு	ம்ருதங்க	விஷ்ணுநாமம்	சிவ
1	மானஸ	தா3தி3ட3	த1க்1கி1ட1	கேசவ	சங்கர

[24] [ஒரு பழைய பகாவாஜ் தாளம்]

2	ஜபா4ன	தி3டா3த3	தி4நாத1	உபேந்த்ர	மகேச
3.	ஸலக3	தி3ட3தா3	த1க1தோ2ம்	முரஜித்	புரஜித்

திஸ்த்ர ஜாதி

4	மாதா1ரா	தா3தா3தா3	த1தி4ந்த3தோ1	ஸ்ரீக்ருஷ்ண	ஹேசம்போ
5	நஸல	தி3ட3த3	கி1ட3த1	மதன	கிரீஷ

கண்ட-மத்வரே அ. 5

கண	**சொல்கட்டு**	**ம்ருதங்க**	**விஷ்ணுநாமம்**	**சிவ**
6	தா1ராஜ	தா3த3ட3	தீ4ம்தோ1ன	கோவிந்த	புஜேஷ
7	ராஜபா4	தா3தி3டா3	தீ4த1னோம்	தைத்யஹன்	காலஹன்
8	யமாதா1	உதா3தா3	த1தீ4ம்தீ4ம்	சுகீர்த்தி	பினாகின்

மிஸ்ர ஜாதி அ. 7

திஸ்ரத்துடன் சதுரஸ்த்ரத்தைச் சேர்த்தால் இந்த ஜாதி உண்டாகும்

ஸங்கீர்ண

சதுரஸ்த்ரத்தோடு கண்டம் சேர்ந்தால் இந்த ஜாதி உண்டாகும்

ச. தே1கதி4ன் மி. த1கி1ட1 க2ம் த1க தா1கி1ட1

தி. த1கதி4ன் த1கிட3 ஸம். த1க1தி4ன் த1க த1கி1ட1

சௌதாலா

டுகடா சமத்திலிருந்து ஆரம்பித்து 3 ஆவர்த்தனத்திற்குப் பிறகு மீண்டும் சமத்தில்

1. த1க த1தீ3ம் கி3ணதோ1ம் கி1ட3 த1க1 க3னி க3ன தா4

   x o 2 0 3 4 x

2. த்1ரிகி1ட1 த1க்தா1 க1த்1 த்1ருகி1ட1 த1க்தா1 க1த்1 கி1ட1த1க்1 க3தி3க3ன தா4 கி1த்1தா1 (கோலாபூர்) அனந்த் புவா

   x 0 2 0 0 3 4 x

   அவர்களின் முக்டா | துக்டா || பேலகாவில்

   1. (<u>த்1ரிகி1ட</u>3 த1க்1தா1 <u>தி1ட1</u> கித <u>க3தி3க3ன தா4</u>) 3 ஆவர்த்தனத்துக்கு வாசிக்க வேண்டும்
   2. (<u>க்1ட3 தே4த்1தா1 கி1ட3</u> த1க1 <u>க3தி3க3ன</u> தா4) 3 ஆவர்த்தனத்துக்கு வாசிக்க வேண்டும்
   3. (<u>கி1ட3னக</u>1 தி1ட1க1த1 <u>தி4னத</u>1க1 <u>க3தி3க3ன</u> தா4) 3 ஆவர்த்தனத்துக்கு வாசிக்க வேண்டும்

      x

   4. க1டா3ந்தா4 க1டா3ந்தா4 க1டா3ந்தா4 3 ஆவர்த்தனத்துக்கு வாசிக்க வேண்டும்
   5. (க3தி3க3ன த1க1தி4ரி கி1ட3த1க1 <u>க3தி3க3ன</u> தா4) 3 ஆவர்த்தனத்துக்கு வாசிக்க வேண்டும்
   6. (தா4 கி1ட1த1க1 து4ம கிடதக க3தி3க3ன தா4) 3 ஆவர்த்தனத்துக்கு வாசிக்க வேண்டும்

      x 2 0 3 x

   7. க3தி3க3ன தா4 (3)
   8. க3தி3க3ன தா4 கி1ட1தா4ன தா4 (3)
   9. தி1ரகி1ட3 த1க்1தா1 தி1டி1 கி1த1 க3தி3க3ன தா4 தா1) 3 ஆவர்த்தனத்துக்கு வாசிக்க வேண்டும்
   10. க1ட3தே4த்1தா1 தி4த்1தா1 க1ட3தா4ன தா4) 3
   11. த4க3த்3தி3க3ன த4க3த்3தி3க3ன தா4 3
   12. தி4ட1தி4ட த4கி3தி1ட1 க1த்1தா1 னக3த1ர க1த்1தா1 க1ட3தே4த்1தா1 கி1ட1 த4க3த்3தி3க3ன னக3 தி1ட1க1த1 க3தி3க3ன த4கி1ட1 த4கி1ட1 தா1கி1ட1 க1ட3 - தே4த்1தா1கி1ட1 த1க1 [க1ட3தே4த்1தா1னதி4த்1தா1 க1ட்3 தா4ன தா4] 3

நான் ஜகன்னாதரிடம் ஏகதாளத்தின் விசித்திரத்தின் காரணமாக எங்கள், கிளைப்பின் பாடகர்களுக்காக,தயார் செய்யப்பட உருப்படி, "ஹே ஜகபாலா அதிசய சுந்தர தாலா" என்றவாறு அக்ஷரத்தைக் காட்டி, மேலும் இந்த தாளத்தின் "டேகா" சொல்லுங்கள் என்றேன். அவர்

நன்றாகச் சொன்னார், மற்றும் அடுத்த நாள் கீழே எழுதப்பட்டவாறு டேகா சொன்னார் :-

ஜகபால தாள மாத்ரா || அங்கம் | U o o o)

ஸ்தாயி - தா4 தி4னனக1 து2ங்கா3 | து4 மகி1ட1 | தி1ரகி1ட1 | க3தி3க3ன |
சந்தரா - தா4 த1க1 தி4னத1க1 தி4ட1 | தி4ட1 தா4கி3 | தி1ட1 தோ1ம் | க3தி3க3ன

X - - 2 3 4

2 அந்தரா:- தா4 தா4 | கி1ட1 தா4 | கி1ட1 | க1த்1த1 க3ன க3த | க1ண்டா1 க1ண்டா1 தி4ம்

X 2 3 4

இந்த டேகா-வை அவரது பையன் வாசித்துக் காட்டினான் - சரியாகவே வாசித்தான். இதை செய்யும் யுக்தியை எனக்கு அவர் சொல்லிக் கொடுத்தார் ஆனால் ம்ருதங்கம் என் துறை இல்லாததால், என்னால் ம்ருதங்கத்திற்காக கதிகள் இயற்ற முடியும் என்று சொல்வது சரியாக இருக்காது.

ஏழு முக்கிய தாளங்கள் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றன.

| o | | | o | o| | u o | o o | | o o |

1.த்ருவ 2.மட்ய 3.ரூபகம் 4.ஜம்ப 5.த்ரிபுட 6.அட 7.ஏக

ஸ்ரீ

35. தாளங்களின் பெயர்கள் குறித்த ஸ்லோகம்

१. श्रीकरश्च समश्चैव पत्तिर्मधुर एवच ।
आदिलेखौच मानश्च सप्त संज्ञा: प्रकीर्तिताः ॥
एते चतुस्र जातीयाः कथिताश्च ध्रुवादयः ॥

२. माणिसारौच चक्रश्च कदंब शंख एवं च ।
गुप्त सातः सुधो ज्ञेयः सप्त संज्ञाः प्रकीर्तितः ॥
एते तु तिस्र जातीया इत्यादि ॥

३. पूर्णोदीर्णो कुलश्चैव सुरोलील स्ततः परं ।

लोय रागौहि विख्यातौ सप्त संज्ञाः प्रकीर्तितः ॥

एतेज मिश्र जातीयाः इत्यादि ॥

४. प्रमाण उदयो राजस्वण्में दुश्कर एवच ।

विदकश्च रतः श्चैव सप्त संज्ञा प्रकीर्तिताः ॥

एतेच खंडा जातीयाः इत्यादि ॥

५. भुंवनश्च ततो रावः बिंदुश्चकर एवच ।

भोगधी रौव सुह्श्चैव सप्त संज्ञाः प्रकीर्तिताः ॥

एते संकीर्ण इत्यादि ॥

"முரஜாக்ஷர மாலா" விலிருந்து

मृदङ्गस्य वर्णान् विजानी हि विद्वन् ।

कगौ धसौटश्च डणौ प्रसिद्धौ ।

त वरगश्य पूर्णः म वर्णश्च रेफः ।

ह्कार: क्विचत कश्यते गान विघ्निः

विष्णुर्निनाद मुरजं तधिदत्वं नौ दिवौकसां सदसि ।

सौतीव पार्वतीशं मृदंग नादेन माधवः श्रुतिवित् ॥

சதுஸ்ர ஜாதியின் தாளம்:

1. ஸ்ரீகர - | o | | - அக்ஷரம் 14 (4,2,4,4,)
   தா4 க3க1 தீ4 னா து2ம்கா3 க1த்1தா1 தீ4 தீ4 னா தீ4 தீ4 நா
   X 0 2 3
2. சமதாளம் - | o | - அக்ஷரம் 10 (4,2,4)
   னா தி4ம் தி4ம் னா தீ4 னா னா தி1ம் தி1ம் னா
   X 0 2

3. பத்தி தாளம் o | அக்ஷரம் 5 (1,4) [25]
   தா4தி1 தா4 கீ3 தூ1 னா அல்லது தா4 த1க1 தீ4 தீ4 னா
   X 2 x 2

திஸ்த்ர ஜாதியின் தாளம்

1. மணி ou o ou ou அக்ஷரம் 11 - (3,2,3,3,)
   தா தி ட கிட தாகிட தகிட
   x 0 2 3

2. மார ou o ou அக்ஷர காலம் 8 [3,2,3]
   தா4 கி1ட1 த1க1 தெள2ம்கி1ட1
   X 0 2

3. சக்ர o u |[26] அ. 5 (1,4)
   தீ4ட3 தா4 கி1ட1
   S 2

மிஸ்ர ஜாதியின் தாளங்கள்

1. பூர்ண | o | | அ. 23 (7,2,7,7)
   தீ4 ட3 தா4 கி1 ட1 கி1 ட3 தி4 ட1
   X 0
   தா1 தே4 ட3 தே4 ட3 த்1த1 ட3 | தா1 கி1 ட1 கி1 ட தா ட
   2 3 3

2. உதீர்ண | o | அ. 16 (7,2,7)
   தா4கி1ட1 கி1ட1 தி4ன தி1ர தா1கி3ர த1க1தி4ன
   x 0 2

3. குல சம்ஞ o அ. 9 (2,7)[27]
   தீ4ம்ட3 தா4 கி3ன தி1ட1க1த1
   x 2

[25] [கைராகர் வெளியீட்டில் கொடுக்கப்பட்டவாறு இருந்தால் 6 அக்ஷர காலம் ஆகிவிடும். இதன் சரியான அங்கம் u |]

[26] [கைராகர் வெளியீட்டில் கொடுக்கப்பட்டவாறு இருந்தால் 6 அக்ஷர காலம் ஆகிவிடும். இதன் சரியான அங்கம் u |]

கண்ட ஜாதியின் தாளங்கள்:-

1. பிரமாண தாளம் | o | | [அ.17] (5,2,5,5)
   தீ4ம் தா4 கி1ட1 கி1ட3 தா1கி3ட1 த1க1 தீ4 நாகி3னா த1க1
   x 2 3 4

2. உதய | o | அ. 12 (5,2,5)
   தா1 தே4 S தி4த3ட1 தி4ட1 தா1 தா4 S தி1ட1 அல்லது தா4கி1ட1 தீ4 S த1க1 தா1கி1ட1 தி4ம் S
   x 2 3 X 2 3

3. ராஜ [0 |] அ. 7 (2,5)
   தீ4 - தி4ட1 தா4கி3ட1
   x 2

ஸங்கீர்ண ஜாதி

1. புவனதாளம் [| 0 | |] அ. 29 (9,2,9,9)
   1 o 1 3 0 1 S
   தா4 S தி4ட1 தி4ட1 தா4 | கி3ட1 தி4ன தை4 தி4ட1 தி4த1
   X 2 3

   1
   தா4 | கி1ட1 தை1 த்1ரிட1 த்1ரிட1 தா1கி1ட1
   4

2. ராவ. | o | அ. 20 (9,2,9)

   | o |
   தா4 - கி3ட1 தி4ட1 தா4 தி4ட1-தே1-தா1-தி1ட1-த்1தே4 தி1த்1ரிட1
   X 2 3

3. பிந்து o | அக்ஷர. 11 (2,9)

   0 |

---

[27] [கைராகர் வெளியீட்டில் சரியாகக் கொடுக்கப்படவில்லை.. இதன் சரியான அங்கம் o |]

தா4-தி4ட1 தா4கி3ட1 கே3 கி3ட1
X 2

முக்கிய ஏழு தாளங்கள் இவ்வாறு:

ध्रुवो मट्ठ्यो रूपक्श्च झंप त्रिपुट एवच ।

अटताल एक तालश्च सप्त तालाः प्रकीर्तिताः ॥

இந்தக் காகிதத்தில் மொத்த விவரமும் ஜகன்னாத பட்டரின் புத்தகத்திலிருந்து கிடைத்தது, என்பது மிகவும் நல்லதாகப் போய்விட்டது. என்னால் இப்போது இந்த தாளத்தை, நாம் பக்கத்து பாடகர்களுக்குச் சொல்லிக் கொடுக்க முடியும், இதனால் அவர்கள் தம் தாளங்களைப் பாடுவதிலும் வாசிப்பதிலும் ஏதாவது அடிப்படை கிடைக்கக்கூடும். எனக்கு அடிப்படையோடு இருக்கும் பாட்டு-வாசிப்பில் மிகவும் மதிப்பு உண்டு. இவ்வாறு செய்வதால் நம் பத்ததியை எப்போதாவது, எவ்விதமாவது ஒரு சாஸ்திரிய அடிப்படைக்குள் கொண்டு வரலாம். எனக்கு முதலிலிருந்தே நாம் சங்கீதம் அதன் வரலாற்றுக் க்ரமத்திற்கேற்ப இருப்பது பிடிக்கும் என்று சொன்னால் சரியாகத் தான் இருக்கும். பழையனவற்றை எல்லாம் விட்டுவிட்டு, புதிதாக சுதந்திரமாகக் செய்து வைப்பது எனக்குப் பிடிப்பதில்லை.

பட்ட கோஸ்வாமியின் புத்தகத்திலிருந்து

वेदेतु - उदात्तानुदान्तस्वरिता इति त्रिस्वराः । तेभ्यः षड्जादि सप्तस्वराः । तत्र उदत्तात् निगौ । अनुदात्तात् रिधौ । स्वरितात् समपा । । तस्मात् संगीतस्य वैदिकक्रत्वमुक्तम् ।

दशविध गमकाः ।

आरोहमवरोहंच ढालु स्फुरित कंपिताः ।

आहतः प्रत्याहतश्चैव त्रिपुच्चांदोल मूर्छनाः ।

1. ஆரோஹ - ஸரிகமபதநிஸா, ஸாரிக, ஸாரிகமப, முதலியவை
2. அவரோஹ - (சுலபம்) ஸாநிதா, ஸாநிதப, முதலியவை

3. டாலு - ஸப, ஸம, ஸக, மற்றும் ஸாத, ஸாம முதலியவை
4. ஸ்ஃபுரிதம் - ஸாஸா, ரிரி, கக, மம
5. கம்பிதம் - பா ப் ப ப ப ப , மா ம் ம ம ம ம
6. ஆஹதம் - ஸாரி, ரிக, கம (முந்தைய ஸ்வரத்துடன் வெவ்வேறு ஸ்வரத்தைச் சேர்த்தல்)
7. ப்ரத்யாஹதம் - ஸாநி, நீத, தப (அவரோஹணத்தில் முந்தைய ஸ்வரத்துடன் வெவ்வேறு ஸ்வரங்களைச் சேர்த்தல்)
8. த்ரிபுச்ச - ஸாஸாஸா, ரீரீரீ, ககக, மமம (த்ருத லயத்தில் பாடும் போது)
9. ஆந்தோல - ஸாரீகமக, ஸாரீபப, முதலிய
10. மூர்ச்சனா - ஸாரீகமபதநீ, ரீகமபதநீஸா, கமபத, முதலியவை | (இவை வேகமாக மற்றும் நியமமின்றி பாடும் ஸ்வரங்கள் சாதாரண அப்யாசத்தில் கேட்கக்கூடியவை)

आलापक्रमः

मध्यषड्जम् समारभ्य मण्द्रषड्जावधिक्रमात् । सम्यगालापनं कृत्वा मध्य षड्ज समापयेत् । एषा विदारिका प्रोक्तायडुपीय्तभिधीयते । इति विदाः ? मंद्र मध्यषड्ज मध्ये रागवर्धनमारभ्Eत् । गत्वां तानंतराकान्तं मध्य षड्जे समापेयेत् ॥ मंद्र पंचमयेमध्ये आरभत्-तानमुत्तमं । मध्य षड्जे समापयेत् मुक्ता इत्युच्यते बुधैः । अथ स्थायीभेदाः ॥ मन्द्र षड्ज मध्य षड्जं ऋषभं ऋषभान्तिकं । गांधारचोर्ध्वं गांधार मध्यममण्य मावधि ॥ पंचमं पंचमांतंच धैवतम् धैवतान्तिक । निषादोर्ध्व निषादात्तु षड्जं द[ष]ड्जांतिकं क्रमात् ॥ एवमेवावरोहेतु षोडषस्थायि संज्ञकाः । अशेष कृत्वा तत्स्थायिंच प्रदर्शयेत् ॥ एवं त्रिवारमालापुअ चतुर्थ्E मंद्रतार्कं । दर्शयुत्वा मध्यषड्जे समापनंच कारयेत् ॥ एषानाम्नामकरणीत्युक्तन्वान् नारदो (भरतो) मुनिः । यत्र कापि समारभ्य मध्यषड्जे समापयेत् ॥ स्वेच्छासंचारतो नाम्ना संचारीति प्रकीर्त्यते ॥

तालप्रकरणे नष्टोद्दिष्ट प्रकारः

तिर्यग् रखात्रयंरूत्वा रेखाः कोश्टानि कारयेत् ।
अग्त्रश्रेणीमूर्ध्वं कोष्टे संख्या श्रेणीमधो लिखेत् ॥
अणुद्रुतानूर्ध्व कोष्टे वर्धयित्वा विलेखयेत् ।
चतुरगेचांग श्रेण्यां द्रुतपूर्वविवर्धयेत् ॥
शरागंच तिस्र मिश्र खण्ड संकीर्ण जातिषु ।

अनुद्रुतं पुरस्कृत्य वर्धयेत् पंच जातिषु ॥

अंग श्रेणी लेखन क्रमः

अथ संख्या श्रेणी

प्रस्तार पूर्व संख्यांक तद्गृहं तु विसर्जयेत् । वामस्थ ग्रहमारभ्यांत्योपांते चतुर्थकम् ॥ षट्वंख्यात्य ग्रह संख्या द्रुतकध्वंत मुच्यते ॥ गुर्वतंच प्लुतांतंच नष्टोदिष्टेषुयोजयेत् । संख्या श्रेणी ॥

अथ शरांगम्

अंत्योपांत्ये चतुर्थच अष्ट द्वादश संज्ञकं । संख्या श्रेणी शरांगेतुप्रतिकोष्टे विलेखयेत् ॥ संख्या श्रेणी ॥

॥अथानुद्रुत द्रुतलघुगुरू प्लुन्तांतानि ॥

अंत्योपांते तृतीयंच बाणा ब्रांणा ब्रहन् त्रयोदश । अनुद्रुत द्रुत लघु गुरु प्लुत विलोमतः ॥ एवं हेतनि विज्ञेयं नष्टोद्दिष्ट प्रदर्शने ॥ इति शरांग ॥

॥ अथत्र्यश्रजाति ॥

अंत्योपांते त्रिषण्भोभ्यां संख्या कोश्टे नियोजयेत् ।

संख्या श्रेण्यां त्र्यश्रजात्यां संख्या पूर्ति विलेखयेत् ॥ संख्या क्रमः ॥

॥ अनुद्रुताद्युच्यन्ते ॥

अंत्योपांते तृतीयंच चतुर्गिरि दशक्रमात् । अनुद्रुत द्रुतलघु गुरुप्लुत विलोमतः ॥ एवं त्वेतानि विज्ञेयं नष्टोद्दिष्ट प्रदर्शने ॥

॥ मिश्रजाति ||

अंत्योपांते सप्तमंच चतुर्थश्चैक विंशतिः । संख्या श्रेणी मिश्रजात्यां क्रमात्कोष्टे विलेखयेत् ॥

॥ अनुद्रुताद्युच्यन्ते ॥

अंत्योपांते त्र्यष्टं पंचदश द्वाविंशति क्रमात् । अनुद्रुत द्रुतलघुगुरुप्लुत विलोमत । एतानि इति मिश्रजाति ॥

॥ खंडजाति ॥

अंत्योपांते बाणदिशः पक्षसंख्यामनुक्रमात् । संख्या श्रेणी खंड जात्यां प्रति-कोष्टे विलेखयेत् ॥

॥ अनुद्रुतादि ॥

अंत्योपांते त्रिषट् चैकादशषोडशक्रमात् । अनुद्रुत द्रुत लघुगुरूप्लुतमनुक्रमात् ॥ एवं त्वेतानि ॥

॥ संकीर्ण ॥

अंत्योपांते नवंचैव अष्टादश सुयोजयेत् । सप्तविंशति संख्या श्रेणीषु योजयेत् ।

॥ अनुद्रुतानि ॥

अंत्योपांते तृतीयं च दंशचैकोन विंशति । अष्टविंशति संख्य च अनुद्रुत द्रुत क्रमात् ॥ एवंत्वेतानि -सर्व जातिषु नष्टोद्दिष्ट प्रकरणं सांग समर्थिनम्

॥ अंग श्रेणी ॥

L 1	o 2	n0 8	1 4	1 5	9 6	6 7	S 8	N 9	N 10	N 11	த 12	த 13	+ 16

॥ संख्या श्रेणी ॥

1	1	2	4	8	16	32	64	128	256	512	624	1248	2496	4992	9984	19968

॥ पाताल श्रेणी ॥

1	3	9	27	81	243	729	2187

குறிப்பு:

ரத்னாகரத்தில் கொடுக்கப்பட்டுள்ள பட்டியல், மற்றும் பேரா.சிங்கராச்சார்யாரின் "காயகலோசனத்தில்" கொடுக்கப்பட்டதையும் ஒப்பு நோக்கவேண்டும். ரத்னாகரத்தின் சமஸ்கிருதத்தைப் புரிந்துக் கொள்ள உதவி தேவையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை, ஆனாலும் அங்கே கொடுக்கப்பட்ட எண்ணிக்கைகளை கூர்ந்து கவனித்தால் புரிந்துக் கொள்ளலாம். நம் வட இந்திய சங்கீதக் கலைஞர்களுக்கு இது பற்றிய புரிதல் இல்லை, ஆனால் நீங்கள் தஞ்சாவூர் அல்லது மதுரை போன்று எந்த சங்கீதம் முக்கியமாகக் காணப்படும் நகரத்திற்குச் சென்றாலும், அங்கே இவ்விஷயம் தெரிந்தவர், கிடைக்கலாம், அது உங்களுக்கு உடனே புரியலாம். நான் பிறகு ரத்னாகரத்தின் தாளாத்யாயத்தை மொழி பெயர்த்து இந்த விஷயத்தைக் குறித்துத் தெளிவாக விவாதிப்பேன்.

க்ருஷ்ண அய்யங்காருடன் பேச்சுவார்த்தை **மதுரை, 5 டிசம்பர் 04**

நான் தஞ்சாவூரை விட்டு காலை 10:20 வண்டியில் கிளம்பி மதுரைக்கு மாலை 6-30 மணிக்கு வந்தேன். ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமியின் நண்பர் ராமஸ்வாமி பிள்ளை, இன்கம் டேக்ஸ் இன்ஸ்பெக்டர் [Income-Tax Inspector],
அவருடைய சிப்பாயை ஸ்டேஷனுக்கு அனுப்பி இருந்தார். அவர் மேரியாட் ஸ்ட்ரீட்டில் தேவராஜ முதலியார் வீட்டில் இறங்க ஏற்பாடு செய்திருந்தார். வீடு சிறிதாக இருந்தது ஆனால் தனியாக இருந்ததால் வசதியின்றி இருக்கவில்லை. இரவு நேரமாகி, இருட்டி விட்டதாலும், பிரயாணக் களைப்பினாலும் வீட்டிலிருந்து வெளியே செல்லவில்லை. காலை ஏழு மணிக்கு வெளியே கிளம்பினேன், சங்கீதத்தைப் பற்றிய விவரம் கேட்கத் தொடங்கினேன். அதிலிருந்து இந்த ஊரில் கிருஷ்ணா ஐயங்கார் என்ற பெயரில் ஒரு நல்ல பாடகர் இருக்கிறார், மற்றும் சுப்பிரமணிய ஐயர் என்ற வக்கீல் இந்த விஷயத்தில் அத்யயனம் செய்திருக்கிறார், அவர் எழுத்தாளரும் நல்ல ஆழ்ந்த வித்வானும் கூட என்று தெரிய வந்தது. அதே போல் "பஞ்சநதம்" என்ற பெயர் கொண்ட ஒரு பிரசித்தமான மிருதங்கக்காரர் இருக்கிறார் என்று தெரிய வந்தது. நான் இருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு நல்ல கிருஹஸ்தர் இருக்கிறார். ஸ்ரீ ராமஸ்வாமி அவர்களிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார். அந்த நல்ல மனிதர், கிருஷ்ணா ஐயங்காரை மாலையில் அழைத்து, அவரது பாடலைக் கேட்க ஏற்பாடு செய்தார்.

சுப்ரமணிய ஐயர் எங்கள் வீட்டிற்கு அருகில் தான் இருக்கிறார். அவர் வீட்டிற்கு நாளை செல்லத் தீர்மானித்திருக்கிறேன். ராமஸ்வாமி வருவதாகத் தான் சொன்னார், ஆனால் அவரால்

வர இயலாவிட்டால், நானே போய் சந்திப்பேன், ஏனென்றால் நேரம் வீணாகி விடும். முனைந்து செய்பவர்களிடம் இயல்பாகவே ஒரு நட்பு இருக்கும், இதன் படி அறிமுகப் படுத்துவது என்பது தேவையே இல்லை.உணவு எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு ஊரைப் பார்க்கப் போனேன். இந்த ஊர் தஞ்சாவூரை விட நன்றாக இருந்தது. நன்றாக அமைக்கப்பட்டிருந்தது. கோவிலின் நான்கு திசைகளிலும் வாயிலின் மேல் கோபுரம் மிகவும் உயரமாக இருந்தது, அதில் சிற்பவேலைப்பாடு அருமையாக செய்யப்பட்டிருந்தது. இந்த கோவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது என்று சொல்கிறார்கள். அதில் மீனாக்ஷி என்ற பெயர் கொண்ட தேவி குடிகொண்டிருக்கிறாள். ராமேஸ்வரத்திக்கு யாத்திரை செல்லும் போது இங்கே சென்று விட்டுத் தான் போவது வழக்கம். கிருஷ்ணா ஐயங்காரின் பாடலின் காரணமாக இரவு 7-30/8.00 க்கு அழைப்பு வந்ததால் அங்கே சென்றேன். இவர் சுமார் 45-50 வயதான கிருஹஸ்தர். குரல் மிகவும் இனிமையாக இருக்கவில்லை. முதலில் "எனக்கு ஒன்றும் தெரியாது" என்று சொல்லிவிட்டுப் பிறகு, "எனக்கு நிகராக யாரும் இல்லை" என்று சொல்பவராக இருந்தார். அவர் என்னை சென்னையில் சந்தித்ததாகக் கூறினார். அப்போது காங்கிரஸில் சொற்பொழிவு இருந்ததாம். நான் அவரிடம் இந்த பிரதேசத்திற்கு இதற்கு முன் வந்ததே இல்லை என்றேன். அப்போது அவர் சொன்னார், "அங்கே வந்தவரின் பெயர் வக்கீல் நாராயண ராவ். அவர் கொஞ்சம் ஹிந்துஸ்தானி பாடல் பாடக் கூடியவராம். அவர் டெலிகேடாக [delegate] வந்திருந்தார். நான் அவரை சென்னையின் பிரசித்தமான "வீணா தனம்" என்ற பெயர் கொண்ட பாடகி மற்றும் வீணை வாதகியைக் கேட்க அழைத்துச் சென்றேன். அவரது கட்டையான ஆண் குரலாக இருந்ததால் அவருக்கு அது பிடிக்கவில்லை. அதனால் அவருக்கும் கஷ்டமாக ஆனதால், பாடல் பிடிக்காததால் அவரிடம் பணம் வாங்க வில்லை." எனக்கு நாராயண ராவை நன்றாகத் தெரியாது என்றேன். ஒன்றிரு முறை பார்த்திருக்கிறேன், ஆனால் அவர் பாடுவார் என்பது தெரியாது. இருக்கட்டும். இதற்குப் பிறகு, கிருஷ்ணா ஐயங்கார் பாட்டைத் தொடங்கினார். "தியாகய்யா"வின் சில கிருதிகளைப் பாடினார். பாட்டு மிகவும் ருசிகரமாக இருக்கவில்லை. மற்ற இடங்களில் கேட்டது போலத்தான் இங்கேயும் இருந்தது. ஐந்து-பத்து முறை "வாஹ்-வாஹ்" என்றவுடன் அவர் வாய் திறந்தது, பேச ஆரம்பித்தார்,"நான் சாஸ்திரம் எல்லாம் கற்கவில்லை. சுயமாகக் கற்றவன். ஆனால் நீங்கள் என் பாடலையும் பிறர் பாடலையும் கேட்டால் நான் எவ்வளவு சுத்தமாகப் பாடுகிறேன் என்று தெரிந்துக் கொள்வீர்கள். நான் உங்களுக்கு சாஸ்திர ஞானம் இன்மையால் எப்படி சுத்தம் அசுத்தம் என்பதை அறிவீர்கள் என்று கேட்டேன். அவர் ராகத்தில் ஆரோஹண- அவரோஹணம் எப்படி சொல்லப்பட்டிருக்கிறதோ அதை அப்படியே பாடுவேன் என்றார். இதற்குப் பிறகு விஷயம் தெரிந்துக் கொள்வதற்காக, எங்கள் கேள்வி-பதில் இவ்வாறு நடந்தது.

கே: அய்யா, நீங்கள் மேளகர்த்தா பத்ததியின் படி தான் பாடுகிறீர்களா?

ப: ஆம். இதைத் தவிர்த்து எனக்குக் கொஞ்சம் ஹிந்துஸ்தானி சங்கீதமும் தெரியும். நான் மைசூரில் உங்கள் பக்கத்து பாஸ்கர ராவின் பாட்டு கேட்டிருக்கிறேன். அவரது கான்ஹடாவின் சில ஸ்வரங்களை எடுத்துக் கொண்டேன். அது இவ்வாறு. (சிறிது பாடிக் காட்டுகிறேன்)

கே: இதில் "ஸா நீ த ப" என்றவாறு அவரோஹணத்தில் சில இடங்களில் பாடுகிறீர்கள். இவ்வாறு செய்யாதீர்கள். இவ்வாறு செய்தால் எங்கள் ஆஸாவரீ கேட்க ஆரம்பித்துவிடும். "நீ ப" இவ்வாறான ஸ்வர ஸமூஹத்தை எங்கள் கானடாவில் பாடுவோம். இதைத் தவிர வேறு எந்தெந்த ஹிந்துஸ்தானி ராகங்களை எடுத்துக் கொண்டீர்கள்?

ப: (பயந்துக் கொண்டு) இல்லை. அவை எனக்குப் பாடும் அளவுக்கு வராது.

கே: எங்கள் பக்கத்தில் த்ருவபதம், க்யால், டுமரீ, போன்றவை உள்ளன. உங்கள் பகுதியில் என்னென்ன உருப்படிகள் இருக்கின்றன?

ப: எங்கள் பக்கத்தில் தியாகய்யாவின் கிருதிகளை சிறந்த சங்கீதமாகக் கருதுகின்றனர். பதம். கீதம் மற்றும் நிறைய கீர்த்தனம் இருக்கின்றன.

கே: பல்லவி அனுபல்லவியின் ஸ்வர நியமங்கள் என்ன?

ப: பல்லவி மத்ய ஸப்தகத்தில் தொடங்கும். மேலும் மந்த்ர பஞ்சமத்தின் கீழே செல்லாமல், மத்ய, மற்றும் மந்த்ர ஸப்தகத்திலேயே பாடப்படும். அனுபல்லவியில் மத்ய ஸப்தகத்தின் நடுப்பகுதியில் ஆரம்பித்து, தார பஞ்சமம் வரை விஸ்தாரம் செய்வார்கள். சரணத்தில் மூன்று ஸப்தகமும் உபயோகிக்கப்படும்.

கே: உங்கள் கீர்த்தனைகளில் ஒரே சரணம் இருக்குமா?

ப: இது அதன் விஷயத்திற்கேற்ப இருக்கும். விஷயம் அல்லது கற்பனை அவ்வளவில் முடிவு பெறாவிட்டால் ஓரிரு சரணங்கள் அதிகம் எடுத்துக் கொள்வார்கள். ஆனால் அதில் ஸ்வர, அமைப்பு வெவ்வேறாகவும் புதிதாகவும் இருக்கும்

கே: இங்கே பெரிய வித்வான் என்று யாரைக் கருதுகிறார்கள்?

ப: இதை நான் என்னவென்று சொல்வது? - "இந்த ஊரில் இந்த விவரம் உங்களுக்குக் கிடைக்காது, அதிகம் சொல்லப்போனால், இந்த பிரதேசத்தில் இவ்வளவு சுத்தமாக ராகம் பாடுபவர்கள் ஒருவர் தான் இருப்பார்)

கே: நீங்கள் சுப்பராம தீக்ஷிதரை அறிவீர்களா?

ப: அவர் பெரிய வித்வான். அவரை நான் பார்த்ததில்லை. அவர் பாட்டு உங்களுக்குப் பிடிக்காது.

கே: ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் உங்களுக்கு என்ன பிடிக்கும்? என்ன பிடிக்காது?

ப: அவர்கள் பாடலில் ஸ்வரம் தெளிவாக, திறந்தவாறு பாட மாட்டார்கள். மேலும் அவர்கள் பாடல் விளம்ப லயத்தில் இருப்பதால் இந்த பிரதேசத்து மக்களுக்குப் பிடிப்பதில்லை. அவர்களுடைய ஸ்வரம் சுத்தமாக இல்லை.

கே: ஒவ்வொரு ஸ்வரத்தின் பரிணாமம் வேறாக இருக்குமா?

ப: ஆம். அது தான் உண்மை.

கே: சரி, மாயாமாளவகௌளையின் ஸப்தகத்தை எடுத்துக் கொள்வோம். இரண்டு விதமான கோமள ரிஷபத்தை இரண்டு முறை வெவ்வேறாகப் பிடிப்பதால் ராகம் மாறுமா இல்லையா (பாருங்கள்)

ப: (யோசித்துக் கொண்டு) ஆனால் எங்கள் பக்கத்தில் அப்படிப் பாடுவதுல்லை , அதை ஏற்றுக் கொள்வதும் இல்லை. அவர்கள் ஸ்வரத்தில் 12 மட்டுமே ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் இதை நாங்கள் வீணையில் வாசிக்கிறோம், அல்லது வாசிக்க முடியும்.

கே: அதை எப்படி வாசிப்பார்கள், அல்லது எந்த நியமத்தின் படி வாசிப்பார்கள்? இந்த விஷயம் உங்கள் பக்கத்து புத்தகம் எதிலாவது எழுதப்பட்டிருக்கிறதா?

ப: எனக்கு அது தெரியாது. நாங்கள் வெறும் கேள்வி ஞானத்தால் , மற்றும் ருசிக்கேற்ப, பாடுகிறோம். நியமத்தைப் பார்த்து அல்ல.

கே: ஆனால் இவ்வாறு பாடினால் மக்களுக்கும் உங்களுக்கும் பிடிக்கிறதா? மேலும் இவ்வாறு பாடாவிட்டால் ராகம் பரிமளிக்காது என்று தோன்றுகிறதா?

ப: ஆம் அது உண்மை ஆனால் நீங்கள் குரலில் பாடிக் காட்டினீர்களே, அப்படித்தான் உங்கள் பக்கத்தில் நடைமுறையில் அதன் ரூபத்தைப் பாடுகிறார்களா?

நான்: ஆம். அவை எங்கள் பக்கத்தில் எப்போதும் அப்படித்தான் பாடப்படுகின்றன. மேலும் இந்த ஸ்ருதி வேறுபாட்டால், ராகத்தை வெவ்வேறாகக் கொள்கிறார்கள். ஆனால் அதை குறைந்த ஸ்வரம் என்றோ ஸ்ருதி வேறுபாடு என்றோ சொல்லலாம்.

கே: ஹிந்துஸ்தானி பாடகர்கள் மிகவும் விளம்ப காலத்தில் மற்றும் அவர்கள் மீண்ட் அதிகமாகப் பாடுவதால் அது ஏன் உங்களுக்குப் பிடிப்பதில்லை?

ப: ஒரு ஸ்வரத்தைப் போல அடுத்த ஸ்வரத்தை எடுத்து, ஸ்வரம் பாடும் போது, ஸ்வரம் சரியாக இருப்பதில்லை (உதாரணம் காட்டுகிறார்), இவ்வாறு செய்வதால் “சரிகம” ஆவதில்லை. அதனால் எங்கள் பாடல் மத்ய மற்றும் த்ருத லயத்தில் இருப்பதால் அது மக்களுக்குப் பிடிக்கிறது

கே: ஏன் விளம்ப கால சங்கீதம் பாட அதிக ஸாமர்த்தியம் வேண்டுமல்லவா?

ப: அது இருக்கலாம். ஆனால் அது இங்கே பிடிப்பதில்லை. ஐரோப்பியர்களுக்கும் எங்கள் பாடல் மிகவும் பிடிக்கிறது, அவர்கள் அதை எழுதிச் செல்கிறார்கள் மற்றும் அதைப் புகழவும் செய்கிறார்கள்.

கே: நீங்கள் ஹிந்துஸ்தானி த்ருத பாடல்களை நன்றாகக் கேட்டிருக்கிறீர்களா? அவர்கள் எவ்வளவு வேகமாக “தான்”களைப் பாடுவார்களோ அவ்வாறு உங்களவர்களால் செய்யமுடியுமா முடியாது என்ற கேள்வியும் இருக்கிறது என்பது என் கருத்து.

ப: நான் அதைக் கொஞ்சம் மைசூரில் கேட்டிருக்கிறேன், ஆனால் அந்த விஷயத்தைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

கே: உங்கள் எல்லா பாடல்களிலும் ரிஷபம் மற்றும் தைவதத்தின் மேல் .இவ்வளவு இழுவை ஏன் செய்கிறார்கள் (பாட்டிக்காட்டி)

ப: (சிரித்துவிட்டு) நீங்கள் சொல்கிறீர்களே அதில் உண்மையில் ஒரு அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது, ஆனால் இவ்வாறு இங்கே பழகி விட்டது மேலும் அது நன்றாக இருக்கிறது, எங்கள் பாடலில் நாங்கள் எவ்வாறு ஸ்வரம் பாடுகிறோம் என்பதை உங்கள் பக்கத்தவர்கள் புரிந்துக் கொள்வது கடினம்.

கே: அவை 12 ஸ்வரங்களுக்கு அப்பாற்பட்டு எதுவும் இல்லை, அப்போது ஏன் அப்படி?

ப: ஆனாலும் பாருங்கள் (மெதுவாகப் பாடி)

நான்: சரிகம சரியாகவே இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மேலும் கீழுமாக நீட்டி இழுத்து பாட ஆரம்பித்தார்.

கே: அய்யா, எனக்கு ஸ்வரம் தெரியும் என்று தீர்மானம் ஆன பின் , அதைக் குரலில் பாட முடியும், இவ்வாறு மேலும் கீழுமாக, சீக்கிரம் சீக்கிரமாகப் பாடி "ஹகாரம்" பாடி பிறகு அதன் ஸ்வரம் தேடுவதில் என்ன ஆகர்ஷணம் இருக்கிறது? இப்போது இது ஒரு சின்ன ஹிந்துஸ்தானி ஸ்வர ஸமூஹமாக, "மியா மல்ஹார்" நான் பாடுகிறேன். உங்களால் அதை ஸ்வரப்படுத்த முடியுமா?

ப: கொஞ்சம் கொஞ்சமாகப் பாடினால் முடியும்

கே: ஆனால் கொஞ்ச நேரத்துக்கு முன், நீங்கள் நடுவில் காரணமின்றி வேகமாக ஏன் பாடினீர்கள்? சரி அது கிடக்கட்டும். முதல் ஸப்தகம் எது?

ப: மாயாமாளவகௌள, ஏனென்றால் அதைத் தான் முதலில் கற்றுக் கொடுப்பார்கள்.

கே: உங்கள் பக்கத்தில் பாடுபவர்கள் எல்லோருமே மேளத்தின் அடிப்படையில் தான் பாடுவார்களா?

ப: இல்லை அதை ருசிக்கேற்ப எப்போதும் நியமங்களை நீக்கி, வர்ஜ்ய ஸ்வரங்களைப் பாடுவார்கள். நான் சுத்தமாகப் பாடுவேன்.

கே: எனக்கு சிங்கராச்சாரியாரின் புத்தகத்தில் சொல்லப்பட்ட லய ப்ரஸ்தாரத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். உங்களுக்கு அது தெரியுமா?

ப: ஆம். எனக்கு எல்லா ப்ரஸ்தாரமும் தெரியும். சிங்கராச்சாரியாரிடம் நிறைய கல்வி இல்லை. அவரது சகோதரர் சிறந்தவர். இந்த புத்தகத்தை (காயகலோசனம்) அவர் எழுதினார்.

கே: சரி அதை விடுங்கள். தாளத்தின் "தசபிராணம்" சொல்கிறார்களே, அதில் "மார்க்கம்" சித்ர, த்ருவ, தக்ஷிண, என்று சொல்லப்பட்டிருக்கிறதே அவை யாவை என்று உங்களுக்குத் தெரியுமா?

ப: ஆம் இருக்கிறது. நான் நாளை வந்து உங்களுக்கு இதையெல்லாம் விளக்குகிறேன். தாளத்தின் 35 ஜாதிகள் எப்படி இருக்கின்றன என்பதைச் சொல்கிறேன்,

கே: அதற்கு அவசியம் இல்லை. தஞ்சாவூரில் ஒரு பண்டிதர் அதை விளக்கினார். எனக்கு "மார்க்கம்", "யதி", "ப்ரஸ்தாரம்", "லகுமேரு" குருமேரு - இவற்றைப் புரிந்துக் கொள்ளவேண்டும்.

ப: சரி. நீங்கள் சொல்வதையே விளக்குகிறேன். ஆனால் இதையெல்லாம் எதற்காக ஆய்வு செய்கிறீர்கள்?

கே: என் மனத்தில் வடக்கு மற்றும் தெற்கின் சங்கீதத்தை ஒன்று கலக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. இதற்குப் பிறகு என் எண்ணத்தை அவர் கொஞ்சம் புரிந்துக் கொண்டார். பிறகு கொஞ்சம் பாடல்கள் பாடிய பின் கச்சேரி முடிந்தது.

கருத்து: இந்த மனிதர் தஞ்சாவூரின் ஜகன்னாத பட்டரைப் போன்றவராக இருக்கிறார். செய்வதை விட சொல்வது அதிகமாக இருக்கிறது. குரல் இனிமையாக இல்லை. பிறர் பாடலின் குறைகளை சுட்டிக் காட்டுபவராக, நடுநடுவே சாஸ்திரிய ஞானத்தைக் குறை சொல்பவராக இருக்கிறார். ஒரு சமஸ்கிருத கிரந்தத்தையும் பார்த்ததில்லை. மேளகர்த்தா பற்றிய சமஸ்கிருத ஸ்லோகம் இருக்கிறதா இல்லையா என்பதைக் கூட அறியவில்லை.

ஸ்ரீ சுப்ரமணிய அய்யருடன் சந்திப்பு புதன்கிழமை 4/12/04

இன்று காலை எழுந்தவுடன், ஸ்ரீ சுப்ரமணிய ஐயரின் வீட்டைத் தேடிக் கண்டு பிடித்தேன், பிறகு அவரை சந்திப்பதற்காக நானே அறிமுகம் செய்துக் கொண்டேன். கேள்வி-பதில் இவ்வாறு நடந்தது:-

நான்: நான் ஒரு சங்கீத மாணவன், ராமேஸ்வரம் சென்றுக் கொண்டிருக்கிறேன். எனக்கு சாஸ்திரத்தில் அதிக ஈடுபாடு உண்டு. நீங்கள் இந்த விஷயத்தில் உங்களுக்கு ஈடுபாடு உண்டு என்றும் நீங்கள் இது குறித்து சில மாதங்களுக்கு முன்னார் செய்தித் தாள்களில் கட்டுரை எழுதினீர்கள் என்றும் அவை சிறப்பாக இருந்தன என்ர்ய்ம் நேற்று விசாரிக்கையில் தெரியவந்தது. நான் இந்த ஊருக்குப் புதியவனாதலால் அந்த எழுத்துக்களைப் படிக்கவில்லை. ஆனால் உங்களுக்கு தேதி நினைவிருந்தால் அதை பிரேஸ்ஸிலிருந்து பெற்று செவ்வாய்க்கிழமை நிச்சயம் படிப்பேன். நான் கற்றவர் யாராவது இந்த விஷயத்தில் சாஸ்திர

ரீதியாக ஏதாவது முயற்சி செய்திருந்தால், அவரக்ளை சென்று சந்தித்து அதைப் பற்றிக் கலந்துரையாடுவது என்று தீர்மானித்திருக்கிறேன். உங்களுக்கு காலை வேளையில் நேரம் இருப்பது சாத்தியம் இல்லை என்று நன்றாகத் தெரியும். அதானால் உங்களிடம் ஒரு நேரத்தைக் குறித்துக் கொண்டு அந்த சமயத்திற்கு வருவேன், மற்றும் உங்களிடமிருந்து ஒன்றிரண்டு விஷயங்கள் தெரிந்துக் கொள்வேன்.

ஐயர்: (நான் அனுப்பிய அறிமுகக் கடிதம் அவர் கையில் இருந்தது , அதைப் பார்த்து விட்டு), எனக்கு உங்களைப் போன்றவர் இந்த விஷயத்தில் ஈடுபாட்டு காட்டுகிறீர்கள் என்பதைக் கண்டு மிகவும் சந்தோஷம். (பரஸ்பர வாழ்த்துக்களுக்குப் பிறகு), இந்த விஷயத்திற்காக, நான் நேரம் நிறைய செலவிட்டிருக்கிறேன், மற்றும் நிறைய ஆராய்ந்திருக்கிறேன். எனக்கு சமஸ்கிருதம் தெரிந்ததால், மற்றும் வேதாந்தத்தில் ஆர்வம் இருந்ததால் , சங்கீதத்தின் தத்துவத்தை ஆராய்ந்திருக்கிறேன். நம் முன்னோர்கள் சங்கீதத்தை இல்லற சுகத்துக்காகச் செய்யவில்லை, பரமேஸ்வரனுடன் ஆத்மாவைக் சங்கமிப்பதற்காக, சங்கீதத்தை உபயோகித்திருக்கிறார்கள். இன்று இதன் உபயோகம் தீய விஷயங்களுக்காகச் செய்யப் படுகிறது என்பது துரதிர்ஷ்டவசமானது.

கே: உங்கள் பக்கம் மேளகர்த்தா பத்ததி பிரசாரத்தில் இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதற்கும் ரத்னாகரத்திற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? அதாவது புத்திசாலியானவர்களின் முயற்சியால், ரத்னாகரத்தின் வழியில் ஒரு பின்னர் வந்த கிரந்தமாக மேளங்களை உண்டு செய்திருக்கிறார்கள் என்பதை பிரமாணமாக எடுத்துக் கொள்ளமுடியுமா?

ப: நிச்சயமாக. நான் ரத்னாகரம் படித்திருக்கிறேன், அது என்னிடம் இருக்கிறது (கொண்டு வரச் சொல்லி), மேளகர்த்தா பத்ததி ரத்னாகரத்திக்கு ஒப்பானது. நான் ஸ்வரங்களின் அமைப்பை வேத காலம் வரை ஆய்ந்திருக்கிறேன்.

கே: ஆஹா! இது மிகவும் சந்தோஷமான செய்தி. இந்த விஷயத்தில் இவ்வாறு முயற்சி செய்பவர்கள் மிக அவசியம். நீங்கள் மிகத் தொலைவில் இருப்பதால் உங்கள் எழுத்துக்களைப் பற்றி எனக்குதித் தெரியவில்லை. இது போன்ற சாஸ்திரிய விஷயம் நம்மால் பிரஸ்ஸில் பிரசித்தப்படுத்தப் பட்டால் அது லாபகரமாக இருக்கும் என்பது என் விண்ணப்பம். நீங்கள் 72 மேளங்களின் அமைப்பு ரத்னாகரத்தில் இருக்கிறது என்று சொன்னீர்களே. என் போன்ற ஆய்வாளர்களுக்கு ஒரு பெரிய கேள்வி, ஆதி ஸ்வர ஸப்தகம் எது என்பது. இந்த கேள்வி குறித்து உங்கள் கருத்து என்ன என்று தயவு செய்து சொல்ல முடியுமா?

ப: ஆம். மிகவும் சந்தோஷமாக. நாம் வைதிக ஸ்வர ஸப்தகம் சங்கராபரணம் என்று நான் நிரூபித்திருக்கிறேன். நான் இந்த ஏழு ஸ்வரங்களை வைதிக ஸ்வரங்கள் வரை கொண்டு செல்கிறேன் மற்றும் அதைச் சுலபமாக விளக்குவேன்.

கே: இது கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. ஐரோப்பியர்கள் கொண்டுள்ள, இது அவர்களுடைய ஸப்தகம் என்ற தவறான எண்ணம் போய் என்று நிச்சயமாகி விடும். வேதம் எவ்வளவு, என்னென்ன ஸ்வரங்களால் பாடப்படும் என்பதையும் கேட்க வேண்டும்.

ப: முதலில் ஓம் ஸ்வரம் இருந்தது. அதிலிருந்து உதாத்தம், அனுதாத்தம், மற்றும் ஸ்வரிதம் ஆகிய ஸ்வரங்கள் தோன்றின என்பதை நான் என்னுடைய எழுத்தின் மூலமாகக் காட்டி இருக்கிறேன். நான் ஐந்து கட்டுரைகள் எழுதி இருக்கிறேன், மற்றும் ஆறாவதைத் தயார் செய்துக் கொண்டிருக்கிறேன்.

கே: மிகவும் விரிவாக விளக்கும் சிரமத்தை உங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று தீர்மானித்திருக்கிறேன். ஏனென்றால், நீங்கள் பிலீடர் [pleader] ஆக இருப்பதால் உங்கள் நேரத்தின் அருமை எனக்குத் தெரியும், மேலும் உங்கள் கால் வலிக்கும் பிரச்சினை இருக்கிறது (அதனால் உங்களால் நீண்ட நேரம் அமர்ந்திருக்க முடியாது)

ப: இல்லை. இல்லை. நான் உங்களுக்கு மேளகர்த்தாவின் 12 ஸ்வரங்கள், நம் பூர்வீகர்கள் எவ்வளாவு சுலபமாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதைக் காட்டுகிறேன். (வீட்டில் வீணையைக் கொண்டு வரச் சொல்லு முன்னே வைத்து). உங்கள் முன் இருக்கும் இந்த ஷட்ஜத்தின் தந்தி யின் நீளம் 24 என்று வைத்துக் கொள்ளுங்கள், இதை இரண்டு பாகமாகச் செய்தால், நடுவே மேலே தார ஷட்ஜம் கிடைக்கும், அதாவது மேருவின் மேல் இருக்கும் ஸா மத்ய ஸப்தகத்த்ட்டுடையதாக்கும். இதற்குப் பிறகு, நடுவில் இருக்கும் "ஸா" தார ஸப்தகத்துடையது. மேருவிலிருந்து கொஞ்சம் கீழே அதாவது 3/4 பகுதியில் தோன்றும் ஸ்வரம் "மத்யமம்". தந்தியின் 2/3 பகுதியின் ஒலி "பஞ்சமம்" ஆகும். இந்த மூன்று ஸ்வரங்களை நிர்ணயிக்கும் வேலை முடிந்தது. 12 ஸ்வரங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக உடனே நிர்ணயிக்க முடிகிறது.

உதாரணம்:-



முதல் ஸா வின் தந்தி - இதன் நடுவில் தார “ஸா”
2/3 தந்தியில் பஞ்சம ஸ்வரம் இருக்கிறது.
¾ தந்தியில் மத்யம ஸ்வரம் இருக்கிறது,
பஞ்சம ஸ்வரத்தில் நாம் இரண்டாவது தந்தியைச் சேர்த்தோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், அங்கே 2/3 இடைவெளியைத் தேடி வாசித்தால், கிடைக்கும் ஸ்வரம் ரிஷபம்

முதல் தந்தியில் ரிஷப ஸ்வரத்திற்கும் 2/3 இடைவெளி தள்ளித் தேடினால் மீண்டும் பஞ்சமம் கிடைக்கும்.

இவ்வாறு பேச்சுத் தொடர்ந்துக் கொண்டே மணி 10 ஆகி விட்டது, அவருக்கு கோர்ட்டுக்குச் செல்ல நேரமாகி விட்டது. அதனால் அடுத்த பகுதி நின்று விட்டது. இந்தப் பேச்சினால் உங்களுக்குத் தொந்தரவு இல்லையென்றால் உங்களுக்கு எப்போது நேரம் கிடைக்கிறதோ அப்போது வருகிறேன் என்றேன். அவர் தனக்கு மிகவும் பிடித்த விஷயமானதால், இந்தப் பேச்சினால் ஒரு தொந்தரவும் இல்லை என்றார். சாயங்காலம் வரச்சொன்னார். மாலை ஏழு மணிக்கு மேல் சந்திக்கத் தீர்மானமானது.

வீட்டுக்கு வந்த பின், அவர் கொடுத்திருந்த பத்திரிகையில் பிரசுரம் செய்த எழுத்துக்களைப் படித்தேன். அவர் மூன்று கட்டுரைகளைக் கொடுத்திருந்தார், அவற்றில் இரண்டு பாடலின் சிறப்பைப் பற்றி இருந்தது என்று சொல்லலாம். ஒன்றில், இசை எதற்கு உத்பத்தியானது மற்றும் அதன் உபயோகங்கள் என்ன என்பது பற்றி இருந்தது. இரண்டாவதும் இதே போல் உபரி தகவல்கள் கொடுத்தன. என் கருத்து என்னவென்றால் இதன் சிறப்பைச் சொல்வதால் மட்டும் சாஸ்திரத்தின் ஆழம் வெளிப்படுவதில்லை என்பதே. பக்திமார்க்கத்தில் பாட்டின் உபயோகம் ஸ்தோத்திர வடிவில் இருந்தது. இதைச் சொல்வதற்கு ஐயர் தேவை இல்லை. எந்தக் கட்டுரையில் கொஞ்சம் சாஸ்திரிய ரீதியாகத் தகவல் சொல்லும் முயற்சி இருந்ததோ, அந்தக் கட்டுரையை கவனமாகப் படித்தேன். அதில் ஐயர் ரத்னாகரத்தை எவ்வளவு தூரம் புரிந்துக் கொண்டிருந்தார் என்பது விந்தையாக இருந்தது. ஏனென்றால், எந்த ஸ்வரத்துக்கு எவ்வளவு ஸ்ருதி என்பதை அவர் புரிந்துக் கொள்ளவில்லை. அவர், "க நி" இந்த ஸ்வரங்களுக்கு 3, 3 ஸ்ருதி என்றும் "ரி த " ஆகியவற்றிற்கு 2, 2 ஸ்ருதி என்று ரத்னாகரத்தில் இருக்கிறது என்கிறார். முதலில் ஓம் .ஸ்வரம் தோன்றியது, அதற்குப் பின்னர், அதிலிருந்து ஸ்வரம், ஸப்தகம், உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம், இவ்வாறான ஸ்வரங்கள் தோன்றின. இவ்வாறு சிறிது "ஃபிலாஸஃபி" [philosophy] பேசி, ஸப்தகத்தை தோற்றுவிக்கத் தொடங்கினார். இவ்வாறு "ஃபிலாஸஃபி" சொன்ன, நான் இதற்கு முன்னர் சந்தித்த ஒரு பண்டிதர் சொன்னது நினைவுக்கு வந்தது. "ஓம்" என்ற சொல்லில், "அ + உ + ம்" என்ற படங்கள் இருக்கின்றன, அதில் அ = அனுதாத்தம், உ= உதாத்தம், ம் அதாவது இதற்கிரண்டிற்கும் நடுவில் இருப்பது ஸ்வரித ஸ்வரம்.இதன் கீழேயுள்ள ஸ்வரம் இதற்கு மேலேயுள்ள ஸ்வரத்துடன் சேர்ந்து, ஆரம்பத்தில் மூன்று விதமான ஸ்வரங்கள் தோன்றின. இதனால், ஸா, நி, ரி என்ற ஸ்வரங்கள் கிடைத்தன. அதில் ஒவ்வொன்றிற்கும் ஐந்தாம் ஸ்வரத்துடன் "ஹார்மனி" [harmony] இருப்பதால், அதை வைத்துக் கொண்டு "ஸா" விலிருந்து "பா", "ரி"யிலிருந்து த, மற்றும் "நி"-யிலிருந்து "க" ஆகியவை காணப்பட்டன. இவ்வாறு மத்யம

ஸ்வரத்தை நடுவில் ஆய்ந்தறிந்ததால் , இரண்டு டெட்ரா கார்ட்ஸ் [tetrachords] ஏற்பட்டன. இதற்கு மேல் செல்வது சாத்தியமில்லை ஏனென்றால், மேலேயுள்ள ஸ்வரம், கீழேயுள்ள ஸ்வரத்தின் ஜாதி தான் ஆனாலும் இரண்டு விதமாக உத்பத்தியாகின்றன. அது ஒன்று போல இருக்கிறது. அந்த பண்டிதர், இவ்வாறு ஸ்வரோத்பத்தியை விளக்கினார். ஆனால் அவர் வைதிக காலத்தில் இந்த எல்லா ஸப்தஸ்வரமும் இன்றைய பிரமாணத்தின் படி, இருந்ததா என்பதைத் தீர்மானமாகச் சொல்லவில்லை. இதை ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் தீர்மானமாகச் சொல்கிறார்.அவர் ஐரோப்பிய மேஜர் மோட் [major mode] தான் நம் ஸ்வர ஸப்தகம் என்றும், இதுவே வைதிக காலத்திலும் இருந்தது என்று கருதுகிறார். இந்தக் கட்டுரையைப் படித்த பின் அய்யரின் சாஸ்திரத்தில் நிச்சயமாகத் தவறு இருக்கிறது என்று தெரிந்தது. ஆனால் நான் அவருடன் இன்னும் சிறிது பேசி, மேலும் அவருக்கு தான் சாஸ்திரத்தை நிரூபிக்க அவகாசம் கொடுத்த பின், கடைசியில் இது குறித்த கருத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வர தீர்மானித்திருக்கிறேன்.

மதியம் இந்த ஊரின் பிரசித்தமான, மிருதங்கக்காரர், பஞ்சநதத்தை ஸ்ரீ ராமஸ்வாமி என் வீட்டிற்கு அழைத்து வந்தார் அவர் இரண்டாம் வகை தாளங்களுக்கு கதி, மொஹரா, ஃபரண் ஆகியவற்றை வாயில் சொன்னார். அவை மிகவும் அழகாக இருந்தன. சொற்கள் வெவ்வேறு லயத்தில் மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருந்தன. இந்த ஊரில் மிகச் சாதாரணமான பாடகர்கள், வாத்தியக்காரர்கள் கூட, மிருதங்கச் சொற்கள் விஷயத்தில் ஏதாவது தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று முன்னமே சொன்னேன். இந்த பஞ்சநதத்தின் "சொற்கள்" எனக்குப் பிடித்திருந்தன. அவர் சமம், விஷமம், அதீதம், அநாகதம். இவற்றின் இரண்டாம் வகையைச் சொல்லி , கையில் தாளம் போட்டுக் காட்டினார். தஞ்சாவூரில் முத்தையா பாகவதர் விஷமம் என்று தனியாக ஒன்று இல்லை, அதீதம் அநாகதம் தான் விஷமம் என்று சொன்னார். மற்றபடி அதீத, அநாகதத்தின் வகைகளை பாகவதர் எப்படிச் செய்தாரோ அப்படித் தான் பஞ்சனதமும் காட்டினார், ஆனால் இவரால் சொல்லப்பட்ட தாளத்தில் அமர்த்தப்பட்ட சொற்கள் நன்றாக இருந்தன. நான் அவரிடம் உங்களது இந்த சொற்களை மிருதங்காக்ஷரத்துடன் நான் எழுதிக் கொள்கிறேன் என்று கேட்டுக் கொண்டேன். அவர் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். இதற்குப் பிறகு முக்கியமான 35 தாளங்களைப் பற்றிய பேச்சு வந்தது. அவர் ஒவ்வொரு தாளத்தின் கதிக்கேற்ப சொற்களை சொல்ல ஆரம்பித்தார். நடுநடுவே எனக்கு அவர் தாளத்தின் அங்கத்தின் சின்னத்திற்கேற்ப, உடனே மிருதங்கத்தின் அக்ஷரங்களைத் தயார் செய்கிறார் என்று தோன்றியது. இதைப் பார்த்தவுடன் நான் நீங்கள் ஜாதிக்கேற்ப சொற்களைச் சொல்கிறீர்களா? என்று கேட்டேன். அவர் ஆம் என்றார். நான் தினமும் வாசித்து வாசித்து, சதுஸ்ரம், திஸ்ரம் ஆகிய ஜாதிகளின் "டுக்டா"க்களை நினைவில் வைத்துக் கொள்கிறேன்,அவற்றைத் தான் சின்னத்திற்கேற்ப உபயோகிக்கிறேன். நான் அவரிடமிருந்து இந்த 35 தாளங்களுக்கான வெவ்வேறு கதிகளின் சொற்களை - விளம்ப, மத்ய மற்றும் த்ருத லயத்தில் கேட்டேன். அவர் நான் எழுதித் தருகிறேன் என்றார். (இது மாதிரியானவர்களின் மேல் நம்பிக்கை வைப்பது சரியல்ல, ஏனென்றால் இவர்கள் மிகவும் மறைக்கும் புத்தியுடையவர்கள், எப்போதும் அவர்கள் முயற்சி வித்தையை மறைப்பதில் தான் இருக்கும்). ஜகன்னாத் புவா கொடுத்த விவரங்களை வைத்துக் கொண்டு, எங்கள் கிளப்பின் தபலா வாத்தியக்காரர்களை வைத்து, இவற்றை

அமைக்க முடியும் என்று தோன்றுகிறது."பஞ்சநதம்" சொல்வது போன்ற, சமத்காரமான "சொல்லக்ஷரங்கள் நன்றாக இருக்கின்றன, மிகவும் சாஸ்திரியமாகவும் அழகாகவும் கூட இருக்கின்றன. ஆனால் அவர் கொடுக்கவில்லை என்றால் வேறென்ன வழி இருக்கிறது? நான் இது போன்ற இந்த விஷயத்தில் உபயோகப்படும் சொல் அக்ஷரங்களைப் பற்றிய புத்தகத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன், ஸ்கந்தஸ்வாமி என்ற இன்னொருவர், தமிழில் எழுதிய இன்னொரு புத்தகம் எனக்குத் தென்பட்டது. அதை நான் வாங்கி வைத்துக் கொள்வேன். பஞ்சநதம் "ஸிம்ஹநந்தனம்" என்ற பெயர் கொண்ட தாளத்தை வாயில் சொல்லிக் காட்டினார். அது நீளமாகவும் அதன் அமைப்பு சமத்காரமாகவும் இருந்தது. அதில் நிறைய விதமான "அங்கங்கள்"/(அக்ஷரங்கள்?) எண்ணப்பட்டது போல இருந்தது. அந்த தாளம் ரத்னாகரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாயினால் ஜாதிகளைச் சொல்லி, கையில் சிம்மத்தின் அசைவைப் போலச் சைகை செய்து, (காலை ஊன்றிப் பதுங்கிப் பாய்ந்து முதலியன செய்து) தாளத்தை முடித்தார், இதெல்லாம் பார்ப்பதற்கு சுவாரஸ்யமாக இருந்தது. நான், ஐயா இந்த தாளத்திற்கு ஸிம்ஹநந்தனம் என்ற பெயர் அர்த்தத்தோடு தான் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டேன். அவர் ஆம் என்றார். இந்த தாளத்தின் போக்கு சிங்கம் நடப்பதைப் போன்று இருக்க வேண்டுமாம். இவ்வாறு ஆகிவிடுவது தான் முறை. இதில் எத்தனை உண்மை என்பதை யார் அறிவார்கள்? தாளத்தின் பெயர்கள் யதார்த்தமானவை. ராகத்தின் பெயர்களும் அவ்வளவே,பல [பெயர்கள்] ஒன்று போலத் தான் இருக்கின்றன. ஸிம்ஹநந்தனம் போடும் போது சிங்கத்தைப் போல் குறுக்கும் நெடுக்குமாகக் கையை ஆட்டிக் காட்ட முடிந்தால் கூட, ஒவ்வொரு தாளத்திக்கும் அதன் பெயருக்கேற்ப "ஆக்ஷன்" [action] செய்வது பிடிக்கும் அல்லது பிடிக்கிறது என்று சொல்வது சரியான படி இருக்காது, மொத்தத்தில் ஒரு மணி நேரம் நன்றாகக் கழிந்தது என்று சொல்லலாம்.

பஞ்சநதம் அவர் சகோதரர் நன்றாக ஃபிடில் [fiddle] வாசிப்பார் என்றும் தான் நன்றாக பகாவாஜ் வாசிப்பேன் என்றும் சொன்னார்.தன் சகோதரரை நான் கேட்க வேண்டும் என்பது அவர் ஆசை, மேலும் அவர் "சங்" [கஞ்சீராவைப் போன்ற உலோகத்தினாலான வாத்தியம்] என்ற சிறிய உலோகத்தினாலான வாத்தியத்தை எப்படி வாசிக்கிறார் என்று காட்ட வேண்டும் என்பது. அவர் அதில் சிறிய ராகத்தின் உருப்படிகள், மற்றும் மிருதங்கத்தின் ஆயிரம் ஃபரண்கள் எவ்வாறு வாசிக்கிறார் என்பதையும் பாருங்கள் என்றார். இது நிஜமாகவே ஆச்சரியமாக இருந்தது. நம் பக்கத்தில் சிறு குழந்தைகள் இது போன்ற "சங்" -ஐ ஒரு பைசா கொடுத்து வாகி அதில் "டொண் டொண்" என்று வாசித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அதில் இவ்வளவு வேலை செய்ய முடியும் என்று நான் கேட்டதில்லை. நேற்று என் பக்கத்து வீட்டில் ஒரு எட்டு வயதுச் சிறுவன், மீண்டும் மீண்டும் பாட்டைப் போன்ற சத்தங்கள் நல்ல லயத்துடன் செய்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். ஆனால் வேண்டுமென்றே அந்தப் பக்கம் என் கவனம் செலுத்தவில்லை. பஞ்சநதத்தின் கச்சேரி நடந்தால் இதெல்லாம் பார்க்க வேண்டும் என்று இருக்கிறது.

கிருஷ்ணஸ்வாமி ஐயங்காருடன் விவாதம்

இதற்குப் பிறகு நேற்று எனக்கு லயப்பிரஸ்தாரம் சொல்லிக் கொடுக்க ஒப்புக் கொண்ட கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரை என் எதிர் வீட்டில் இருக்கும் நண்பர், ஸ்ரீ கோபாலஸ்வாமி நாயுடு என்னிடம் அனுப்பி வைத்திருந்தார்.அவர் முன் "காயகலோசனம்" என்ற பெயர் கொண்ட புத்தகத்தை வைத்து அவரிடம் இதில் எந்த அடிப்படையில் லயப்பிரஸ்தாரம் செய்யப்பட்டிருக்கிறது என்று விளக்க வேண்டினேன். இந்த புத்தகம் தெலுங்கு பாஷையில் எழுதப்பட்டிருந்தது. இதில் பிரஸ்தாரம் எப்படிச் செய்வது என்பது உதாரணத்தோடு விளக்கப்பட்டிருந்தது. சிங்கராச்சாரியார் எனக்கு சில விவரங்கள் கொடுத்திருந்தார். அதன் உதவியோடும், தஞ்சாவூரின் சுப்ரமணிய சாஸ்திரியின் உதவியோடு கொஞ்சம் புரிந்துக் கொண்டிருந்தேன். கிருஷ்ணா ஐயங்காரால் புத்தகத்திலிருந்து புரிந்துக் கொள்ள இயலவில்லை. அவருக்கு தெலுங்கு நன்றாகத் தெரியாத காரணத்தால், புத்தகத்தில் எழுதி இருந்ததைப் புரிந்துக் கொள்ள முடியவில்லை. அதனால் நான் எனக்குத் தெரிந்ததை முன்வைத்து, புத்தகத்தின் இந்த பிரஸ்தாரம், ஸ்வரபிரஸ்தாரத்தின் அடிப்படையில் தான் செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்டேன். அதைப் பார்த்து விட்டு இதற்குப் பெயர் பிரஸ்தாரம் தான், நீங்கள் புரிந்துக் கொண்டது சரி தான் என்றார். இருக்கட்டும். அதற்குப் பிறகு இந்தப் புத்தகத்தில் வெவ்வேறு மேரு படம் போட்டிருந்ததை விளக்கச் சொன்னேன். இந்த மேருவைப் பற்றி இதற்கு முன் இவர் எதுவும் பார்த்ததோ அல்லது கேட்டதோ இல்லை என்பது போலத் தோன்றியது. அவர் ஒரு நடைமுறைப் பாடகர், இங்கே இது போன்ற பாடகர்கள் இல்லாததாலும், பிறரைக் கேள்வி கேட்டுவிட்டு அவர்களை கேலி செய்வதாலும், மக்கள் இவரைக் கண்டு பயப்படுகிறார்கள். ஆனால் நான் அவர் முன் புத்தகத்தை வைத்து, அவற்றை விளக்கும் படி கேட்டவுடன், அவர் இது சாஸ்திர விஷயமானதால், அவருக்குத் தெரியாது என்றார். இந்த மேருவை நான் கற்றுக் கொள்ளவில்லை. இதோடு அது தொடர்பான பேச்சு முற்றுப் பெற்றது. அவர் இங்கே இதையெல்லாம் உங்களுக்கு விளக்க என்னை விட வேறு யாரும் கிடைக்க மாட்டார்கள் என்றும் சொன்னார். இப்போது எனக்கே இது புரியாததால் உங்களுக்கும் புரியாது என்றார். நான் மனம் திறந்து பேசுபவனாதலால் இங்கே இது குறித்து ஆராய்பவர் யாரும் வந்ததே இல்லை என்று ஒத்துக்கொள்கிறேன் எங்கள் பக்கத்துப் பாடல் மற்றும் ராகம் முதலியவற்றை உங்களுக்குப் பாடிக் காட்டட்டுமா? எங்கள் பக்கத்தில் மிருதங்கம் எப்படி வாசிப்பார்கள் என்பதையும் பாருங்கள். ஆனால் தெற்கில் உங்களுக்கு சாஸ்திரம் நன்கு அறிந்தவர் கிடைப்பார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. சென்னையில் சில சாஸ்திரக்காரர்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள் - திருமலய்யா போன்றவர்கள். அவர் கட்டுரை எல்லாம் எழுதுகிறார். அவருக்கு இது தெரிந்திருக்கக் கூடும்" என்றார். நான் ஸ்ரீ நாயுடு என் நண்பர் அவரிடம் பேசி முடித்தாகி விட்டது என்றேன். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, அப்போது இந்த மேரு பற்றிய தகவலைத் தெரிந்துக் கொள்வதில் என் கவனம் இருக்கவில்லை. அங்கே கிரந்தகர்த்தாக்களும் இருந்தார்கள். எவ்வாறு பிரஸ்தாரத்தைப் பற்றிக்கேட்டுச் சிறிது தெரிந்துக் கொண்டேனோ, அது போல, முன்னாலேயே தெரிந்துக் கொண்டு இன்னும் ஓரிரண்டு நாட்கள் தங்கியிருந்து இதையும் தெரிந்துக் கொண்டிருந்திருக்கலாம். சரி அது போகட்டும், இப்போது வேறு வழி எதுவும் இல்லை. எனக்கு

இந்த மேருவைப் புரிந்துக் கொள்ளவேண்டும், அதை மராட்டியில் எழுதி வைத்துக் கொள்ளவேண்டும். முடிந்தால் சுப்பராம தீக்ஷிதரிடம் இதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாமா என்று பார்க்கிறேன். கிருஷ்ண ஐயங்கார் தனக்கு சுப்பராம தீக்ஷிதரிடம் நன்கு பரிச்சயம் உண்டு என்றார். ஆனால் அவரது மொழி உங்களுக்குப் புரியாது என்றார். சங்கீதம் தெரிந்த த்விபாஷி [மொழி பெயர்ப்பாளர்] கிடைப்பது கடினம். அவரம் பழைய சங்கீதக்காரர்கள் மற்றும் தீக்ஷித ஸம்ப்ரதாயத்தின் அபிமானி. அவர் தியாகய்யாவிடம் துவேஷம் கற்பிப்பவர் என்று கூட சொல்வேன் என்றார். அவர் தன்னுடைய மதம் மிகவும் உயர்ந்தது என்று கருதுகிறார். அவரை நீங்கள் நிச்சயம் சென்று பாருங்கள், அவரைப் பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது என்று எனக்குச் சொல்லுங்கள் என்றார். ஹிந்துஸ்தானிக்காரர், எந்தவொரு விஷயத்தையும் எப்படி ஆராய்கிறார்கள் என்பது இப்போது தான் எனக்குப் புரிகிறது. நாங்களும் இனி இந்த விஷயத்தைப் பற்றி ஆராய்கிறோம். எங்கள் பக்கத்தில் ஸ்ரீ சுப்ரமணிய ஐயர் என்ற பெரிய பண்டிதர் இருக்கிறார் அவரை நீங்கள் சந்தியுங்கள். நான் இன்று காலை அவரைச் சந்தித்து இது பற்றிக் கொஞ்சம் பேசியும் ஆயிற்று என்று சொன்னேன். ஆனால் இன்று காலை தனியாகப் பேசுவதற்கு ஸ்ரீ அய்யரிடம் நேரம் கேட்டிருந்தேன். இப்போது எட்டு மணிக்கு அங்கே போய் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் விவாதம் செய்யப் போகிறேன்,

கிருஷ்ண அய்யங்கார்: நீங்கள் அங்கே போகிறீர்கள் என்றால், நானும் உங்களோடு வந்து உங்கள் உரையாடல்/ விவாதத்தைக் கேட்கலாமா?

நான்: எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் என்னோடு நீங்கள் வந்தால் அவருக்கு நான் ஏதோ வேண்டுமென்றே வேடிக்கைக்காட்ட அழைத்து வந்தது போல் இருக்கக் கூடும்.

கிருஷ்ண: அவர் எனக்கு மிகவும் பரிச்சயமானவர். அவருக்கு நான் தான் முதலில் மேளகர்த்தா பற்றிச் சொல்லிக்கொடுத்தேன். அதனால் அவர் தப்பாக நினைக்க மாட்டார். ஆனாலும் நான் அங்கே 20-25 நிமிடத்திற்குப் பிறகு வருகிறேன். இவ்வாறு தீர்மானித்த பின் நான் சொன்ன நேரத்திற்கு அய்யரைப் பார்க்கப் போனேன். எனக்குப் பிறகு சிறிது நேரம் கழித்து ஸ்ரீ அய்யங்காரும் வந்தார்.

ஸ்ரீ அய்யர் வீட்டில் இருக்கவில்லை. அவர் சுமார் 8-30 மணிக்கு வந்தார். நேரம் ஆனதற்கு மன்னிப்பெல்லாம் கேட்ட பின், பேச்சு தொடங்கியது. எங்கள் இருவரையும் சேர்த்து அவரைச் சந்திக்க வந்தவர்கள் மொத்தமாக 7-8 பேர் இருந்தார்கள்.

நான்: நான் உங்கள் மூன்று கட்டுரைகளையும் நன்றாக கவனமாகப் படித்து விட்டேன். அதில் சாஸ்திரிய விஷயமாக ஒன்று மட்டுமே இருந்தது.

அய்யர்: அவை உங்களுக்குப் பிடித்திருந்ததா? நான் இந்த விஷயத்தின் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்த உபயோகமானவற்றை எல்லோருக்கும் தெரியப்படுத்துகிறேன்.

நான்: நாம் இருவரும் நண்பர்கள் ,என்ற காரணத்தால் பயமின்றிப் பேச அனுமதி கேட்கிறேன். இரண்டு கட்டுரைகள் சங்கீதத்தின் பெருமையைப் பற்றி இருந்ததால், எங்கள் பக்கத்தவர்களுக்கு அது அதிக முக்கியமாக இருக்காது. சங்கீதத்தினால் நமக்கு மோக்ஷம் கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்பது பற்றி நாம் விசாரம் செய்யாவிட்டாலும் போகிறது. நம் இன்றைய பண்டிதர்களுக்கு, அதாவது இன்றைய மாணவர்களுக்கு (இதில் ஆர்வம் இருப்பவர்களுக்கு 1. சங்கீதம் எப்படி இருந்தது 2.எப்படி இருக்கிறது 3. எப்படி இருக்க வேண்டும் - இவ்வாறு மூன்று பகுதிகளாகப் பிரித்து தெரிந்த விஷயங்களை முழுமையான கட்டுரைகளாக எழுத வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. கட்டுரையைப் படித்து நாம் எதையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற தகவல் கிடைக்க வேண்டும். அது கிடைத்தால் படிப்பவர்களுக்கு சந்தோஷம் கிடைக்கும்.

அய்யர் - விஷயத்தைப் பொறுத்த வரை என் கட்டுரையைப் பற்றி உங்கள் கருத்து?

நான் - நீங்கள் ரத்னாகரத்தை நன்றாகப் படித்திருக்கிறேன் என்று சொன்ன போதிலும், அதைப் புரிந்துக் கொள்வதில் உங்களுக்கு ஏதோவொரு தவறு ஏற்பட்டிருக்கிறது என்று எனக்கு பயமாக இருக்கிறது, ஏனென்றால், அ + உ + ம் - இதிலிருந்து சங்கீதத்தின் ஸ்வரங்கள் தோன்றின என்று வைத்துக் கோண்டாலும் ரத்னாகரத்தின் ஸ்ருதி - ஸ்வர அமைப்பை நீங்கள் சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை என்று தோன்றுகிறது.

அய்யர்: அப்படித் தோன்றுவதற்கு என்ன காரணம்?

நான்: நீங்கள் ரி த இவற்றிற்கு 2, 2 ஸ்ருதி , க நி இவற்றிற்கு 3, 3 ஸ்ருதி என்று எழுதி இருக்கிறீர்கள்.இது ரத்னாகரத்திற்கு முற்றிலும் மாறுபட்டது. உதாத்த, அனுதாத்த, இவற்றின் ஸ்தானங்கள் மற்றும் இதன் அர்த்தத்தை நீங்கள் தலைகீழாக எடுத்து கொண்டிருக்கிறீர்கள். ரத்னாகரத்தில் க நி இரண்டு ஸ்ருதியளவில் உள்ள ஸ்வரங்கள், மற்றும் ரி த மூன்று ஸ்ருதி அளவுள்ள ஸ்வரங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்வரிதத்திற்கு மேலே உதாத்த,கீழே அனுதாத்த இவ்வாறு எல்லா இடங்களிலும் புரிந்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அய்யர் : இருக்கலாம், ஸ்ருதி எண்ணிக்கை விஷயத்தில் நான் சொன்னது தவறாக இருக்கலாம். ஆனால் அதனால் என்ன கஷ்டம் உண்டாகிறது?

நான்: நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன் - அதாவது ஷட்ஜம், மத்யமம், பஞ்சமம் - அவற்றின் 4/4 ஸ்ருதிகளின் அர்த்தத்தை நீங்கள் எங்கே, எதிலிருந்து, எவ்வாறு புரிந்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்ல வேண்டும். கருத்தை ஒப்பிடுவதற்காகக் மட்டும் தான் இதை நான் கேட்கிறேன் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

அய்யர்: இவ்வாறு ரத்னாகரத்தில் மிகவும் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது சொல்கிறது, இரண்டு வீணைகளை "சத்ருஷே கார்யே" அதாவது ஒரே போல ஓசை கொண்டதாகச் செய்யுங்கள். ஒன்றில் இருபத்திரண்டு தந்திகளைச் அமைக்கவும். அதற்குப் பிறகு 1-2-3-4 என்று எண்ணி நாலாவது இடத்தில் ஸ ஸ்வரம் உள்ளது. இதன் அர்த்தம் என்னவென்றால், முதல்

நான்கு தந்திகளை ஒன்று போல வாசித்து அதன் ஒரே போன்ற ஓசை இருக்கிறதே, அது "ஸ" ஆகும். அதாவது "ஸா" ஸ்வரத்தில் முதல் மூன்று ஸ்ருதிகள் உள்ளடங்கி இருக்கும். இதே போல, ரி-யின் இரண்டு தந்திகள், மற்றும் கா-வின் மூன்று என்று இந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. இது மிகவும் ஆழமானது. இதன் உள்ளடக்கத்தை நன்றாகப் புரிந்துக் கொள்ளவேண்டும்.

நான்: ஸ்ரீ அய்யர்! யாரோ விஷயம் தெரியாதவர்கள் உங்களுக்குத் தவறான விஷயத்தை சொல்லி இருக்கிறார்கள் என்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது. இந்த ஸ்ருதியின் அமைப்பில் எந்த குழப்பமும் இல்லை. ஸப்தகத்தை 22 துண்டாகச் செய்து அதற்கு 22 வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த தவறான புரிதலால் தான் நீங்கள் சங்கராபரணத்தை ஆதி ஸப்தகம் என்று கொண்டிருக்கிறீர்கள். அது நிச்சயமாக ஆதி ஸப்தகமே இல்லை. அதனால் தான் உங்களிடம் நான் ரத்னாகரத்திலிருந்து ஒன்றிரண்டு ராகங்களை எடுத்துக் கொண்டு அதன் ஸப்தகத்தைக் கேட்க எண்ணி இருந்தேன். நான் உங்களை விஷயம்-புரியாதவர் என்று குறை கூறவில்லை. நீங்கள் இந்த விஷயத்தில் இவ்வளவு நேரம் செலவிடுகிறீர்கள் என்பதே மிகவும் பாராட்டுதற்குரியது. இவ்வாறு தனியாக வேலை செய்யும் போது தவறுகள் நிகழக்கூடும்.. ஆரம்பத்தில் எனக்கும் அடிக்கடி அப்படித் தான் நடந்தது. அதை மற்ற சிலர் திருத்தினார்கள். உங்கள் அனுமதி இருந்தால், சமஸ்கிருத ஸப்தகத்தை நான் ஒரு நொடியில் விளக்க முடியும். மேலும் இது மிகவும் சுலபமாக எளிமையாக இருக்கிறது என்று நீங்களே சொல்லவேண்டும் என்பது என் ஆசை. (கா்பி தாட்டை-சாஸ்திரரீதியாக நிரூபிக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு சொல்லி விட்டேன்)

அய்யர்: நான் நிச்சயம் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டேன். மேலும் நல்ல முறையில் தகவல் கிடைத்தால் அது எனக்கும் உபயோகமாகத் தான் இருக்கும். பிறகு நான் சிறிது நேரத்தில், அதன் அமைப்பை விளக்கி, ரத்னாகரம் முதலிய கிரந்தங்களின் ஸ்வர ஸப்தகம், "கரஹரப்ரியா" மேளத்துடையது தான் என்று காட்டினேன். அதைக் கேட்டுப் புரிந்துக் கொண்டு, அவருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது, அவர் நிஜமாகவே நான் ரத்னாகரத்தை உங்களைப் போலப் புரிந்துக் கொள்ளவில்லை. நீங்கள் சொன்ன விஷயம் மிகவும் முக்கியமானது, மேலும் நான் அந்தப் புத்தகத்தை இந்த கண்ணோட்டத்தோடு மீண்டும் கவனத்துடன் படிப்பேன். நான் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான்: நீங்கள் சங்கராபரணத்தின் ஸப்தகத்தை எவ்வாறு ஆதி ஸப்தகமாக நிர்ணயித்தீர்கள் என்பதைத் தெரிந்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவ்வாறு நிலைநிறுத்த முடிந்தால், நம் மேற்கத்தியர்களுக்கு மிகவும் நல்லதாகி விடும்.

அய்யர்: நம் ஸப்த ஸ்வரங்களின் அமைப்பு, "ஸா" மற்றும் அதன் ஐந்தாவது ஸ்வரத்தின் ஆதாரத்தில் இருப்பதாகக் கண்டேன். உங்களுக்கு 12 செமிடோன் தேவை. அவை எல்லாமே இவ்வாறு கிடைத்து விடுகின்றன. ஸா-விலிருந்து ஐந்தாவதாக ப. பாவை ஸா வாகக் கொண்டால், அதிலிருந்து ஐந்தாவது ரி - ரியின் ஐந்தாவது த முதலியன. இவ்வாறு செய்துக்

கொண்டே போனால், மற்றும் "ஸ - ம" இதன் சம்பந்தத்தில் 12 செமிடோன் களை நிர்ணயித்தேன், மேலும் உதாத்தம் முதலியவை வேதத்தில் இருப்பதால், "சங்கராபரண என்ற இன்றைய ஸ்வர ஸப்தகம், நம் வைதிக காலத்தில் இருந்தது என்று நிர்ணயித்தேன். ஆனால் நீங்கள் சொல்வதில், நிறைய உண்மை இருக்கிறது. நான் அதைப் பற்றிச் சிந்திக்கிறேன், பிறகு உங்களுக்கு எழுதுகிறேன். இவ்வாறு புரிதலோடு நான் ரத்னாகரத்தைப் படித்ததில்லை. அந்தப் புத்தகம் மிகவும் கடினமாக இருக்கிறது, எனக்கு சரியாகப் புரியவில்லை என்று நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். இந்த ஆய்வு மிகவும் முக்கியமானது என்பதையும் ஒத்துக் கொள்கிறேன். இங்கே வித்வான்கள், இந்த விஷயத்தின் சாஸ்திரத்தின் மேல் கவனம் செலுத்துவதில்லை. இதனால் நிறைய ஆய்வுகள் நிகழ்வதில்லை.இவை அவர்களுக்கு மிகவும் வறண்ட(விஷயமாகப்) படுகிறது.

நான்: உங்களைப் போன்ற 2 - 4 வித்வான்கள், இங்கே கிடைத்தால் மிகவும் லாபகரமாக இருக்கும், ஐரோப்பியர்கள் இந்த விஷயத்தின் மேல் கவனம் செலுத்துகிறார்கள். அவர்களோடு இதைப் பற்றி நான் பேசியபோது, எவ்வாறு நம் பக்கத்தில் "கரஹரப்ரியா" ஆதி ஸ்வர ஸப்தகமாக இருக்கிறதோ, அதே போல் அவர்களின் முதல் ஸ்வர ஸப்தகமும் (டோரியன் மோட்) [Dorian mode] என்பதைப் பார்த்து அவர்களுக்கு ஆச்சரியம் உண்டானது. நம் பகுதியில் உபயோகத்திலிருக்கும் மூர்ச்சனைகள், அவர்கள் பக்கத்திலும் அப்படித் தான் இருந்தது. (விளக்கினேன்). அவர்கள் எல்லோரும் நம் சங்கீதத்தின் ஸ்வர ஸப்தகத்தை மிகவும் புராதனமானதாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள், மற்றும் ஹிந்துஸ்தானத்திலிருந்து, அங்கே சென்றது என்று முழு மனத்தோடு ஒத்துக் கொள்கிறார்கள். ஆனாலும் இப்போதும் நாம் அதை நிரூபிக்க வேண்டி இருக்கிறது.

அய்யர்: எனக்கு உங்களோடு ரத்னாகரம் பற்றி மற்றும் பழைய சங்கீதத்தைப் பற்றியும் பொதுவாக விவாதம் செய்வது முடியாது என்று தோன்றுகிறது. ஏனென்றால் என் ஆரம்ப அறிவே தவறுகள் நிறைந்தது.

நான்: நான் சொல்வது தவறாகவும் இருக்கலாம். நீங்கள் உங்கள் புரிதலுக்கேற்ப ரத்னாகரத்தின் ராகங்களைப் பற்றி யோசித்தீர்களா? அவற்றில் குறைந்த பட்சம் "கிராமராகம்" ஜாதி பிரகரணத்திலாவது சேர்க்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் ஜாதிகளைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

அய்யர்: நான் அவற்றைப் படித்துப் பார்த்திருக்கிறேன், ஆனால் அவை மிகவும் கடினமாக இருந்தது என்று சொல்வதில் எந்தவித தயக்கமும் இல்லை. எனக்கு அவை ஒன்றுமே புரியவில்லை.

நான்: நீங்கள் சுப்பராம தீக்ஷிதரைப் பார்த்திருக்கிறீர்களா?

அய்யர்: ஆம், ஆனால் அவருக்கு சமஸ்கிருத கிரந்தங்களைப் பற்றித் தெரியாது. அவரால் மேளகர்த்தா விஷயத்தைப் பற்றித் தகவல் சொல்ல முடியும்.

நான்: நீங்கள் மேளகர்த்தா விஷயத்தைப் பற்றி ஏதேனும் சமஸ்கிருத புத்தகம் படித்திருக்கிறீர்களா? அது போன்ற ஒரு புத்தகம் ஒன்றாவது கிடைக்குமா என்று நான் தேடிக் கொண்டிருக்கிறேன்.

அய்யர்: இல்லை. ஆனால் அது உங்களுக்கு எதற்கு?

நான்: மேளகர்த்தாக்காரர் தன்னுடைய பத்ததியை எந்த கிரந்தத்திலிருந்து பெற்றிருக்கிறார், மற்றும் அவற்றை ஏதாவதொரு அளவையில், ரத்னாகரத்துடன் ஒப்பிட முடியுமா இல்லையா என்று பார்க்க விரும்புகிறேன். இந்த பத்ததி மிகவும் அருமையாக, எளிமையாக மற்றும் சுலபமாக இருப்பதால், ஏதோவொரு பெரிய அறிஞர் இதைச் செய்திருக்க வேண்டும். அவர் ரத்னாகரத்தை ஆதி கிரந்தமாகப் பார்த்திருக்கிறாரா, அல்லது அதன் அடிப்படையில், ஆனால் தன் சொந்த வழியில், மேளங்களை ஏற்படுத்தும் வழியை எழுதி இருக்கிறாரென்றால், அது சங்கீத ரத்னாகரத்தினின்று தோன்றியதால், இந்த பெரிய பரம்பரைக்கு ஒரு வரலாற்றுப் பூர்வமான அடிப்படை கிடைத்து விடும். சில ஐரோப்பிய பண்டிதர்கள் அவர்களின் வருகைக்குப் பிறகு தான், அவர்களின் சிறப்பைப் பார்த்து, நம் கணிதத்தின் உதவியோடு இது செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். என் மனத்தில் இந்த ஆட்சேபனையை விளக்க வழி செய்ய வேண்டும் என்ற எண்ணமும் உண்டு.

அய்யர்: இந்த முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. எங்கள் பகுதியில் உங்களைப் போன்ற முயற்சிகள் செய்ய யாரேனும் கிளம்பினால், மிக்க சந்தோஷமாக இருக்கும். இவ்வாறு நடந்த பேச்சிற்குப் பிறகு, உபசாரத்திற்காக வாழ்த்துக்களைச் சொல்லிவிட்டு எங்கள் பேச்சு முற்றுப்பெற்றது. அங்கே கிருஷ்ண அய்யங்காருக்கு ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரின் நிலைமையைப் பார்த்து சந்தோஷமாக இருந்தது போலத் தோன்றியது. ஸ்ரீ அய்யர் மிகவும் நல்ல கிருஹஸ்தர். அவர் புத்திசாலியாகவும் இருப்பதோடு பதவியிலும் இருப்பவர். எங்களுடைய இந்த விஷயத்தில் விசாரிப்புகளுக்காகவும், உதவிக்காகவும் கடிதம் முதலியவற்றைக் கொடுப்பதாகக் கூறினார். நானும் மிகவும் கடமைப்பட்டவனாவேன் என்று சொன்னேன். அவர் என்னைச் சந்திக்க வருவதாவாகவும் சொன்னார். இவ்வாறு பேச்சுவார்த்தை முடிந்தது.

பஞ்சநதத்துடன் தாளம் பற்றிய விவாதம் வியாழன், காலை 10 மணி

இன்று பஞ்சநதம் வந்தார். அவருடன் த்விபாஷி வராததால், ஒன்றும் விவாதிக்க முடியவில்லை. ஆனால் அவருடைய தாளங்களின் சொல்கட்டுக்களை சைகையின் மூலம் எழுதிக்கண்டேன். அவை இன்னொரு காகிதத்தில் இருக்கின்றன. இன்று மதியம் அவருடைய மற்றும் அவரது சகோதரரின் பாட்டு-வாசிப்பு நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வந்தால் என்னென்ன நம் முன் வைக்கப்படுகிறது என்று பார்க்கலாம். மதியம் நிச்சயித்தபடி, பஞ்சந்தம் அவரது சகோதரரை அழைத்துக் கொண்டு வந்தார், மற்றும் வாத்தியம்-பாடல்

தொடங்கப்பட்டது. சகோதரர் ஃபிடில் வாசித்தார், பஞ்சநதம் மிருதங்கம் வாசித்தார். இந்த ஊரில் இவர்கள் சிறந்தவர்கள் என்று மதிக்கப்படுகிறார்கள், ஆனால் தஞ்சாவூரின் பஞ்சாபகேசி மற்றும் சேதுராமுக்குச் சமமான வித்வான்கள் அல்ல என்று எனக்குத் தோன்றியது. ஃபிடிலை மூன்றாம் தரமாக மதிப்பிடுவேன், பஞ்சநதம் பரவாயில்லை. அவர் கணேச தாளம், பார்வதீலோசனம், மற்றும் ஆதி தாளம் வாசித்தார். ஆனால் இந்த தாளங்கள் நிருத்யத்தில் அதிகம் உபயோகப்படுபவையாகத் தோன்றியது. இந்த தாளங்கள் கீதத்திற்கு மிகவும் சிறப்பாக இருப்பதில்லை. இதைப் பொறுத்தவரை, - ஏழு தாளங்களும் அவற்றின் முக்கிய 35 ஜாதிகளும் இங்கே பாடகர்களுக்கு உபயோகமாக உள்ளன மற்றும் அவற்றில் பாடல்கள் எழுதப்படுகின்றன, மற்ற தாளங்கள் (108 முதலியவை), அவற்றின் நீண்ட அங்கங்கள், இவையெல்லாம் நிருத்யத்திற்கு உபயோகப்படுபவை என்றும் கூட ஒரு கருத்தை முன்வைக்கலாம். பஞ்சநதம்,"கும்ப தாளம்", “ஸிம்ஹநந்தன தாளம்”, இவற்றின் சொல்கட்டுக்களைச் சொன்னார், இவை தெரிந்துக் கொள்வதற்காக உபயோகப்படும். வடக்கில் சாஸ்திரிய நிருத்யம் , பின் தங்கி விட்ட காரணத்தால், இஸ்லாமியர்கள் இந்தத் தாளம் கிரந்ததில் இருப்பது என்று சொல்லத் தொடங்கினார்கள். இதில் பாடல் இயற்றலாம் ஆனால் அதில் வெறும் ஆவர்த்தனத்திற்கு மேல் ஆவர்த்தனம் சொல்லவேண்டியிருக்கும். மற்ற எல்லாம் நின்று விடும், அதாவது தான் பாடுவது நின்றுவிடும் என்பது உண்மையாக இருக்கக் கூடும்.

பஞ்சநதத்தால் சொல்லபட்ட சில தாளங்களின் சொல்கட்டுக்கள்

ஸ்ரீகண்ட

விளம்ப - த்1க நக1 நக1 ஜ1க1 ணம் த1க1 த1ரீ த1க1 ண

o

த்1க த1ரீ கி1ட1 த1க1

மதாள - தா1 கு2த4ணாகு2 ஸிணாகு2 த1ரேகு2 த1கு1 த1க1

| o |

பத்தி - தா1 தீ4 தா1 க1 த1 ஜ2ம் தா1டி1

o - 1 2 3 4

மணி - த்ருவ திஸ்ர ஜாதி | o | |

தா4தீ4 தா1 க1 த1 ஜ2ம் தீ4 தா1 க1 த1 ஜ2ம் க1த்1தி1த1 த1ட்1டி1க1த1

ஸார - | o | மட்ய திஸ்ர ஜாதி

தா1 தீ4 ணு த்1ர தி4 மி தா1 க1 த்1த1 ஜ2ம் த1 ட்1டி1

1 முதல் 4 0 த்ருத 2 3 4

சக்ர - o | - ரூபக திஸ்ர

த1க1 நக1 ஜ2ம் த1ட்1டி1 த1 க1

o த்ருத 1 2 3

லகு

பூர்ண - மிஸ்ர த்ருவ | o | |

தா1 க1 த்1ர ஜ2ம் த1 ட்1டீ1 தா1 தா1 ஜ2ம் த1 த1ட்1டீ1 கி1த்1த1 த1க1 த1த்1ரா க1த்1த1

உதீர்ண

தா4 ணு த்4த3 நம் த1ட்1டீ1 | தா4 (அ) ணு த்4தா3னம் த1ட்1டீ1 | (-) மூன்று முறை

த1க்1கு1 தா1கி1 கி1ட1 த1க்1

குல - ரூப மிஸ்ர o | அங்கம்

தா1 த்1த1 டி4ங்கு3 த1 க1 த1 டி4ங்க்3கு3 த1 டி4ங்க்3கு3 த1க1

கண்ட ஜாதி த்ருவ | o | |

ரி த்1தா1 த்1தா1 ரி த்1தா1 ரத்1தா1 நோ ணு த்1தா1 ரி த்1தா1 தி4ம் த1க1

உதய தாளம் | o 1 கண்ட

தீ4 த்1த1 க1 ணம் த1ட்1டீ1 தா1 - த1 க்1க1 ணம் த1ட்1டி1 த1க1 - க4டி1 கி1த1 த1க்1க1

ராஜ தாளம் o | கண்ட

ஜம் த1ட்1டீ1 த்1ரக1ணம் த1டி1 கி1ட1 த1க1

த்ருவ ஸங்கீர்ண | o | |

தா4 தீ4 தா1 , க்1ர த்1ர ஜ2 த1டி1 க்1க1ணம் த1கி1த1 க1 த1க1 தீ4

கணேச விநாயக

தா1டி4 மித1 டி4ம்sகு1 கு1 தா1டி4ம்sகு1 தா1sss | த1 டி4ம்sகு3 த ணம்s த3

| o o | o

கே1 தி4sத1 தா4sss | க3 ஜ மு க2 தா1s ளம் s அ ந க3 ல

| o o |

க ல ப்லு த பு லு இ த கோ sஇன ஹாs தம் sகீ sகி ட் த க | தீs க்கு த்தா ||

o | o | o
| o

பார்வதீலோசன தாளம்

தி4 த்4தி3 த்1த்1யை த்1யை யயம் த்1த1 தி4 த்4தி3 த்1தா1 தா1 தை2ம் த்1யை த1 த்1த1 த்1தா1 த1 க1 தா1 தீ4ம்க3 ணம் த்1தா1

| | | | o |
| | o |

ஷடச கச்சா பந்த (நீண்ட விஸ்ராந்தி)

தா4 தீ4 த1 க1 தீ4 தா4 தீ4 ந்ந தா1

| o | | | | - o

ஸிம்ஹனந்தன = 128 அக்ஷரம், 32 மாத்திரை

கும்ப தாளம்

தி4 தி4 தி4 தி4 த்1யை (-) தி4 த்1யை தி4 த்1யேம் த்1யை யுத1 த்1த1 த்1த1

| | | | | | |
o

தை2 தை2 து2 த1 த்1த1 த்1த1 தா தை2 தை2ம் மு த1 த்1த1 த்1தா1 |

| வேகம் o வேகம் நீண்ட நீண்ட நீண்ட

பஞ்சநதம் இந்த தாளத்தை வாயால் படித்து, மற்றும் அழகான ஹஸ்த முத்திரைகளோடு காட்டினார். இதை வெறுமனே காகிதத்தில் எழுதுவதால் நேரில் பார்த்த அனுபவம் போல் அதிகம் இருக்காது அதனால் அவ்வாறு செய்யவில்லை. இந்த முத்திரைகளுக்கு அவசியமும் இல்லை. எப்படியோ ஒரு முறையில் வடிவில், கையில் தாளம் போட்டால் வேலை ஆகிவிடும். நன்றாகச் சொல்லவேண்டுமானால் , பாடல் காதால் கேட்பதற்கு நன்றாக இருக்கிறது என்றால், நெடில் - குறில் அக்ஷரங்களைச் சொல்லும்போது கவனமாகச் சொன்னால் அசுத்தமாக இருக்காது. இந்த தாளத்தை ரத்னாகரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. எவ்வாறு ராக-ராகினியில் வித்தியாசம் இருக்கிறதோ, அதே போல, தாளங்களிலும் இருக்கத் தான் செய்யும். இந்த வித்தியாசத்தைப் பிறகு தேடி எழுதுவேன்.

காலை என் வீட்டிற்குப் பஞ்சநதம் வந்தார், அதனால் அவர் வருகையை உபயோகப்படுத்திக் கொண்டு சில சொல்கட்டுக்களை எழுதி வைத்துக் கொண்டேன். அவரை மீண்டும் சந்திக்க முடியாவிட்டால் இது பிரயோஜனப்படும் என்று தோன்றியது. வெவ்வேறு தாளங்களின் கதியின் டேக்காக்களின் சொல்கட்டுக்களை வாசிக்க முடிந்து விடும் என்றில்லை ஆனால் எங்கள் கிளப்பின் தாள வாத்தியக்காரருக்கு அவை உபயோகமாகுமானால் அவர்களுக்கு

அதைச் சொல்வேன். அவற்றில் சிறிய பெரிய மாற்றங்கள் எவ்விதமாகச் செய்யப்பட வேண்டும் என்பது நன்றாகப் புரிந்து விட்டது. அதனால் அவற்றை உபயோகித்து நல்ல சொற்களைகட்டி, எழுதி வைப்பதால் எப்போதாவது யாருக்காவது உபயோகப்படும். அதாவது பஞ்சநதம் சொல்வது போல அழகாக என்னால் சொல்ல முடியாது. ஆனால் ஏதாவதொரு புத்திசாலி தபலா வாத்தியக்காரரிடம் இது சென்றடைந்தால், அதை அவர் செய்வாரா இல்லையா என்று பார்க்க வேண்டும்.

சொற்கள்

தை3 த4 ண த3 ண த3 ண த3 ண தா3 (அல்லது) தா4

த1க1 த3ணத்1 த3ணத்1 த1ண ஜு2ணு தா1 |

ஜு2ணுத1 ஜு2ணுத1 ஜு2ணுத1 ஜு2ணு தி1மிதா1 (அல்லது) தா4 |

தி3மி தி3மித1 தி3மித1 தி3மித கிட1த1க1

(வேகமாக) கட் (தா) தம் ஜகணக ஜகணேஸா |

ஸ்ரீ தஞ்சபூரீ ஜகதீஸா

ம ஹா (க) பஞ் ச ந பஞ்சந தீஸா

ஜய பாண்ட்யராஜ ஸந்தேஸா

மலர பஞ்ச நடன நடராஜா

சுங்க கண்டணி அணயம் த்யாகேசா

சிவ ரஞ்சிதா ஷ்வைத வநீ ஸா

(மதுரை - பஞ்சனதம் சொல்லும் போது இதைச் சொன்னார்)

புத்தகத்தின் பெயர் - 'சவுத் இந்தியன் மெலோடீஸ் அண்ட் தெயர் கேரெக்டாரெஸ்டிக்ஸ்' [South Indian Melodies

and their characteristics] மஹாவைத்யநாத ஸம்ப்ரதாயத்தில் தமிழிலிருந்து,

1. அடணா

ஆ. ஸா ரி ம ப த நீ ஸர் | அ. ஸர் நி ஸர் த ப ம க ரி ஸ

ஸ க ப த

நி –ஸா— ரி ம ப தா – – – பமாப ஸர் நி.ஸா நி ஸர் .ரிம் .ரி .ஸ் நி ஸ் .ரி ஸர்

நி ஸ் ரி ஸர் நிஸா தா – – – ப த நி தாநிப மபகா – – காரிஸா

நிஸ தநி ஸாரிஸ நிஸரிம – – – ப தா ப ம ப்ஸதா – – –

தநி ஸரிகாஸா நிரீஸா பதாப மபமகா – – – – ரீஸா

குறிப்பு: தஞ்சாவூரின் ஜகன்னாத பட்டர் பேச்சு வாக்கில், "ஸ்ரீ நாகோஜீராவ் மற்றும் ஸாமநாத ஐயர், சங்கீத பாரிஜாதத்தின் ராகங்களின் ஸ்வரங்களை உபயோகித்து ஒரு சிறு புத்தகம் தயார் செய்திருக்கிறார்கள். அவர்கள் என்னை உதவிக்காக அழைப்பார்கள், நான் அங்கே போவது வழக்கம், அதனால் தான் அவர்களின் இந்த முயற்சியை நான் பார்த்தேன். என்றார். சரி இதை நான் பாரிஜாதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கப் போகிறேன்.

2. அஸாவேரி - ஸரிகபத

ஆ. ஸாரிமப தஸ் அ. ஸ் நீ துப மக ரி ஸ
– – – –

ஸ்வரூபம்: ஸா – ரிமபதா – – – பமபத ஸர் ரீகர்ரீ ஸர்ரீ ஸர் நிஸர்

பதாப , மபத நீதப மதப , மபமகா – – – ரீஸா , நீஸாதா

த ஸரிகாரீஸ மபகா – – – ப மா – – பதாப ம ப த ப மபாமகா – – –

ரீஸ , நீஸரீஸா ரீநிஸா மபதபாகமபமகா – – – ரீஸா ।

3. ஆனந்த பைரவீ

ஆ. ஸா க ரீ க ம ப நீ ஸ் அ. ஸா நி த ப ம க ரீ ஸ
– – – – –

வி. – ஸ்வரூபம் – ஸா – நி ஸ காரி கம பா. ம ப ஸர் நீஸர்நி ஸர் ,
– – –

ரீம் க்ரீ காரீஸ், ஸர்நிதநீஸா நி ஸ் ரீஸா நிதபா பாநீபா ஸா
– – –

ம கா – – – க ம ப த ப ம க ரீ , காமா கமபகாநீஸா , ஸர்ரீ ஸர்ரீ
– – – – –

த பா ம க ரி கா பா, பாமகாம , காமாபமாபகாரீநீ, காரீஸா, ஸாரி
– – – – – – –

ஸநி – – – – ஸநிதாப, நிஸா , ஸாமகாரி , ஸரிகாரீ, காரீஸ, நி நி ஸா ।
– – – – – – – –

குறிப்பு: சின்னங்களைப் பின்பற்றி இந்த ராகம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் - இந்த சின்னம் கோமள ஸ்வரங்களுக்கானது. இவற்றை நான் இவ்வாறு - எழுதுகிறேன். ஸ் இது போன்ற சின்னம் தார ஸப்தகத்திற்கானது.

ஸ - இந்தச் சின்னம் மந்த்ர ஸப்தகத்திற்கானது. மத்ய ஸப்தகத்திற்குச் சின்னம் இல்லை. வி - ராகத்தின் விஸ்தாரம் இவ்வாறு செய்ய்யப்படும். எங்கே நெடில் எழுத்து இருக்கிறதோ அங்கே நீண்ட நேரம் நிற்க வேண்டும், எங்கே ஸ்வரங்களுக்கு முன் - - - இவ்வாறு கோடுகள் கொடுக்கப்பட்டுள்ளனவோ,அங்கே ஆ ஆ ஆ என்ற ஸ்வரங்களை அகாரமாகப் பாடவேண்டும். ஒரு முறை "ரி" மற்றும் "தா" வில் ஆந்தோளனம் எவ்வாறு செய்கின்றனர் என்று கற்றுக் கொண்டால், மற்றவை எல்லாம் எளிதாகி விடும்.[28]

ஸ்ரீ நாகோஜீராவ் இந்தப் புத்தகத்தைப் பாடகர்களின் உதவியோடு எழுதி வைத்திருக்கிறார், அவர் எனக்கு இதை அன்பளிப்பாகக் கொடுத்தார். இதில் 100 கர்நாடக ராகங்களின் ஸ்வரூபம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு முறை "ஸரிகமபதநி" தமிழ் மொழியில் படிக்கத் தெரிந்து விட்டால், மற்ற விவரங்களுக்கு எந்த அவசியமும் இல்லை. அப்போது ராகங்களின் ஸ்வரூபத்தை மெதுவாகப் படித்துப் படித்துப் பாடிவிடலாம். நான் இந்த ஏழு எழுத்துக்களைக் கற்றுக் கொண்டு விட்டேன், அதனால் இந்த நூறு ராகங்களை "நாகரி" எழுத்துகளில் விஸ்தாரமாக எழுத வில்லை. மேலும் இவ்வாறு செய்ய எனக்கு நேரம் இல்லை. எதிர்காலத்தில் என் உத்தேசம் என்னவென்றால், இந்தச் சிறு பகுதிகளை எடுத்துச் சென்று ஹிந்துஸ்தானி வழியில் சரி செய்து, பாடகர்களின் மூலம் பாடவைத்து ஒப்புதலைப் பெற்றால் எப்படி இருக்கும் என்று பார்க்கவேண்டும். நன்றாக இருந்தால்,அதை அப்படியே வைத்துக் கொண்டு ஒவ்வொரு ராகத்தின் ஹிந்துஸ்தானி ஸ்வரூபத்தையும் எழுத வேண்டும், நாகோஜீ ராவைப் போல, ஒரு சிறிய புத்தகம் "ஃபீசர்ஸ் ஆஃப் ஹிந்துஸ்தானி மெலாடீஸ்" [Features of Hindustani Melodies] தயார் செய்ய வேண்டும். இதைப் பார்த்தவுடன் இங்கே இருக்கும் மக்களுக்கு அந்த சங்கீதத்தைப் பற்றிப் புரியும். இரண்டு சங்கீதத்தையும் ஒன்று சேர்க்கும் நோக்கத்துடன் முயற்சி செய்ய வேண்டும். நான் இங்கேயுள்ள சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். சிற்சில விஷயங்கள் பிடிக்கின்றன, ஆனால் ஹிந்துஸ்தானி வழி எளிதாக இருக்கிறது. நேற்று ஸ்ரீ அய்யர் (மதுரை) கூட, இங்கே ஹிந்துஸ்தானி சங்கீதம் பொது ஜனங்களை ஈர்க்கிறது என்று சொன்னார். யார் கர்நாடக சங்கீதத்தின் அதிகாரிகளாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு இது பிடிப்பதில்லை. நான் இந்த பிரதேசத்தின் வழியை என் கருத்தோடு சேர்த்துப் பார்க்கிறேன்.

[28] [கைராகர் பதிப்பில் இந்த இடத்தில் சின்னங்களைப் பொறுத்தவரை சில அச்சுப் பிழைகள் இருக்கின்றன. அவை இங்கே திருத்தம் செய்து பண்டிட். பாத்கண்டேவின் நோடேஷனுக்கேற்ப கொடுக்கப்பட்டுள்ளன].

மதுரை. வெள்ளி 1 டிசம்பர் 04

ஒரு தெளிவான சிந்தனை

நான் மும்பையில் இருக்கும் போது என் நண்பர்கள் நான் தெற்கு நோக்கிச் சென்றால், எனக்கு நம்முடைய பண்டைய சங்கீதத்தின் விவரங்கள் முழு வடிவில் கிடைக்கும் என்றார்கள். அங்கே எல்லாமே சாஸ்திரத்தின் படி அவர்கள் அமைத்து வைத்திருக்கிறார்கள். இதைக் கேட்டு என் மனம் மிகவும் உற்சாகம் அடைந்தது, நான் முடிந்தால் எங்கே சென்று ஆழ்ந்து ஆராய்ந்து எனக்குக் கிடைக்கும் விஷயத்தை என் நண்பர்களிடம் சொல்ல முடியும் என்று எண்ணினேன். இப்போது "தூரத்தில் கேட்கும் டோல் இனிமையாக இருக்கும்" என்றவாறு ஆகிவிட்டது என் நிலைமை. இங்கே மக்களுக்கு சமஸ்கிருத சங்கீத சாஸ்திரத்தின் வாசனை கூட இல்லை. ஒவ்வொருவரும் எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களுக்குப் பிறகு வந்தவற்றைத் தான் பேசுகிறார்கள். இந்த மேளகர்த்தாக்களுக்கு சமஸ்கிருத ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. "ஸ்ருதி (அதாவது கீநோட் [keynote] வரை, மற்றும் மூர்ச்சனையின் அர்த்தம் ஸ்வரத்தின் ஒரு வகையான (வழி) முறை (ஆபரேஷன் [operation]) என்பது வரையில் அவர்களின் அஞானம் இருக்கிறது. கிராமம் - சிலர் இந்த சொல்லைக் கேட்டது கூட இல்லை. வாதி ஸம்வாதி - இதன் உபயோகத்தை விளக்குவேன். அதோடு, "ஜாதி பிரகரணம்" என்ற இந்த சொல் கூட எந்த புத்தகத்தில் இருக்கிறது என்று அறிவதில்லை. எனக்கு தஞ்சாவூரில் தகவலின் பொக்கிஷமே கிடைக்கும் என்று சொல்லப்பட்டது, ஆனால் அங்கே கூட இதே நிலை தான். இதையெல்லாம் பார்த்துவிட்டு மனத்தில் பெருத்த சோர்வு ஏற்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. எல்லோரும், திருநெல்வேலிக்கு அருகிலுள்ள எட்டையாபுரத்தில் சுப்பராம தீக்ஷிதர் இருக்கிறார், அவரைச் சந்தித்தால், சங்கீதத்தின் மிகப் பெரிய சிகரத்தைப் பாரத்தது போலாகிவிடும் என்று சொல்கிறார்கள். அதனால் முடிந்தால், அவசியம் ஏற்பட்டால், அங்கேயும் திருவாங்கூருக்கும் போகலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். பரமேஸ்வரன் என்னவெல்லாம் காட்டப் போகிறான் என்று தெரியவில்லை.

சாஸ்திரரீதியான அறிவை சிறிது பெறுவதற்கு இதைச் சொல்லவேண்டியிருக்கிறது என்பது துரதிர்ஷ்டவசமான நிலை. இங்கே வரலாற்று மற்றும் சாஸ்திர ரீதியான கண்ணோட்டம் அலட்சியப் படுத்தப் படுகிறது. நல்ல நல்ல பாடகர்கள் கிரந்தங்களின் பெயரைக் கூட கேள்விப்பட்டதிலை. இங்கேயுள்ள அலட்சியப் பாடகர்களின் நடைமுறை சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தால், பம்பாயின் சங்கீத நண்பர்களுக்கு நான் எந்த சாஸ்திரத்தைக் கொடுக்க முடியும்? மேளகர்த்தா பத்ததியை பதினைந்து நிமிடங்களில் நான்கு முறை விளக்கிவிடலாம், இதற்குப் பிறகு, உடனே தாளம் பற்றிய தகவலையும் சொல்லலாம். இப்போது மிச்சம் இருக்கும் வேலை இங்கேயுள்ள பாடலை, வாசிப்பை அங்கேயுள்ளவர்களின் பார்வைக்குக் கொண்டு வருவது, ஸ்ரீ கோபால ராவ் இதைச் செய்வதாக ஒத்துக் கொண்டிருக்கிறார், ஆனால் நான் இதைச் செய்வதாக வாக்குக் கொடுக்கவில்லை. அதுவும் செய்ய முடியாவிட்டால் என் குற்றம் இல்லை. பூனாவில் அண்ணா ஸாஹிப் தாரபூரேவிடம் நான் சாஸ்திரிய கேள்விகள் கேட்டேன். அவர்கள், அதற்குப் பதில் கொடுக்கவில்லை. ஆனால்

அவர் அந்த கேள்வியைத் தன் நண்பர், ஸ்ரீ பனஹட்டிக்கு காட்டினார். அதைப் பார்த்து ஸ்ரீ பனஹட்டி சொன்னார், திரு பாத்கண்டே தெற்கின் சங்கீதத்தைப் பார்த்ததோ கேட்டதோ இல்லை, அவர் அங்கே போய்ப் பார்த்தால், அப்போது உடனே அதில் கிரந்தங்களுக்கேற்ப எவ்வளவு கடைபிடிக்கப்படுகிறது, மற்றும் பழைய நியமங்களின் அழகை அவர்கள் எவ்வாறு பாதுகாத்து வைத்திருக்கிறார்கள் என்பது புரிந்து விடும்.

ஸ்ரீ பனஹட்டி சொன்னதன் அர்த்தம் , இந்த இருபதாம் நூற்றாண்டில் பண்டைய சங்கீதத்தைத் தேடுவது மடத்தனம், மற்றும் தெற்கின் சங்கீதத்தைப் பார்த்து, இன்றைய சங்கீதத்தில் கிரந்தங்களின் வாசனை கூட இல்லை என்று நான் முழுமையாக சமாதானம் ஆவேன் என்றால் அது முற்றிலும் உண்மை தான்! ஆனால், இதனால் என் கேள்விகளுக்கு சரியான பதில் என்று ஆகிவிடாது. அண்ணா தாரபூரே என் கேள்விகளுக்குத் தன்னால் பதில் சொல்ல முடியவில்லை என்றாவது தெளிவாகச் சொல்லிவிட்டார். நான் இது வரை சந்தித்தவர்களில், அண்ணா தாரபூரேவை விட இது குறித்து அதிகம் யோசித்தவர்கள் கிடையாது. ஆனால் இதனால் காரியம் நடக்காது. அவருக்கும் சிக்கல்களைச் சமாளிக்க வேண்டி இருந்தது. அவ்வாறு இல்லை. ரத்னாகரத்தின் சில ராகங்கள் "ஜாதி பிரகரணத்துக்கேற்ப, தெளிவாக அதே ஸப்தகத்தில் பாடி வாசித்துக் காட்ட முடியுமா? சரி ரத்னாகரத்திற்கு ஒப்பான, அல்லது வேறு ஏதேனும் கிரந்தத்தின் படி, "ரி த" எங்கேயாவது இருக்கிறதா? அல்லது ராகவிபோதத்தின் மூர்ச்சனை அல்லது ஜாதி பிரகரணத்தில் ஏன் இல்லை? மேலும், அதில் "தீ" [தா] யின் கோமள விக்ருதியின் குறிப்பு ஏன் சொல்லப்பட்டது? இந்த சங்கீதம் தெற்கத்திய சங்கீதமா? ராகவிபோதத்தின் சுத்த ஸப்தகம் தெற்கத்தியது என்று சொல்லலாமா? மூல ஸப்தகம் (வைதிக) எவ்வளவு, எந்த ஸ்வரங்களால் ஆனது மற்றும் அவை எவ்வாறு வளர்கின்றன, இதன் வரலாறு எங்கே கிடைக்கும்? கிராமத்தின் வெவ்வேறு வகைகளைச் செய்ததன் உத்தேசம் என்ன? அவை எந்த சிக்கல்களால், பின் தங்கு விட்டன? அவற்றின் அவசியம் பிற்காலத்தில் ஏன் இருக்கவில்லை? முதலிய முதலிய. இவ்வாறான கேள்விகள், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை, இவற்றின் மேல் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். நம் முதல் முதல் "சர்ச் மோட்" [church mode] கா◌ிபியோ அல்லது பைரவியோ, தெற்கத்திய கரஹரப்ரியாவோ தோடியோ, இவை எல்லாம் மேற்கத்திய டோரியன் ஸ்கேல் [dorian scale]தான் என்ற விஷயம் நம்மிடையே இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு நாம் கிரேக்க சங்கீதத்தோடு நாம் பண்டைய கிரந்தங்களைப் பார்த்தால், நாம் சமஸ்கிருத சங்கீதத்தின் சில சிக்கல்களுக்கு விடை காண முடியும் என்று தோன்றுகிறது. இங்கே தெற்கில் இவ்வாறு ஒரு எளிதான வழி தேடிக் கொண்டு, எங்கள் 72 மேளங்கள் அனாதியானவை மற்றும் எல்லா இடங்களின் சங்கீத சாஸ்திரமும் அதிலிருந்து சங்கீத தத்துவத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். இவ்வாறு சொல்வதில் சாமர்த்தியமோ புத்திசாலித்தனமோ இல்லை என்பது சுலபமாகப் புரிந்து விடும். பழைய தத்துவங்களில் மட்டுமன்றி, இன்று புழக்கத்திலிருக்கும் சங்கீதம் என்ன காரணத்தால் வளர்ந்தது, எந்த காரணத்தால் இன்று இவ்வாறு இருக்கிறது என்பதும் அந்த சங்கீதத்தின் பண்டைய புத்தகங்களிலிருந்து (கிரந்தங்கள்) உண்டாகி இருக்கத்தான் வேண்டும்.

தேசத்திற்கு வந்துள்ள வெளிநாட்டு அரசர்களின், பெருமை, சமூகத்தில் நடவடிக்கைகள் மற்றும் சிந்தனைகளில் உண்டான மாற்றங்கள், அவர்களால் சங்கீதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இவற்றின் பரிணாம வளர்ச்சி எவ்வாறெல்லாம் நடந்தது என்பதை ஆராய்ந்தால், ஒரு தெளிந்த நல்லவகையான வரலாற்றை எழுத முடியும். அப்போது தான், நமக்கு சங்கீதத்தைப் பற்றிய சரியான அறிவு கிடைத்தது என்று சொல்ல முடியும் என்பது என் கருத்து. இந்த திசையில், மேற்கத்தியர்கள் எவ்வளவு, முயற்சிகள் செய்கிறார்கள் என்று பாருங்கள், அதற்கு மாறாக நம் மக்கள் அலட்சியத்தில் மூழ்கி, நம் சங்கீதம் ஏதோ மறைவான ரகசியமான, விஷயம் என்று சொல்வதே அழகு என்று நினைக்கிறார்கள். மேற்கத்திய பேராசிரியர்கள், நாம் நம் சங்கீதம் புராதனமானது என்பது நிரூபிக்க வேண்டும் என்று கேள்வி கேட்கிறார்கள். நாம் அவர்களுக்கு எங்கள் சங்கீதம் பழமையானது ஆனால் அது என்ன என்பதை நீங்கள் உங்கள் முயற்சியால் தேடுங்கள் என்று இவ்வளவு தான் பதில் சொல்ல முடிகிறது. நாங்கள் அவற்றை வீசி விட்டு, உங்கள் சங்கீதத்தை மட்டும் கற்று, உங்கள் புத்தகத்தின் அடிப்படையில் பண்டிதர்கள் ஆவோம். தெற்கில் பல அறிஞர்கள் இருக்கிறார்கள், ஆயிரக்கணக்கான மாணவர்கள் இருக்கிறார்கள், இசையார்வத்தின் பேரில் தியாகய்யாவின் பாடல்கள், கீர்த்தனைகள் பாடப்பட்டோ அல்லது, யாருக்கெலாம் சாரீரம் (குரல்) நன்றாக இல்லையோ அவர்கள், வீணையை எடுத்து, அதில் ஐந்து- பத்து ராகங்களின் ஸ்வரங்களை வாசிப்பது என்பது மட்டுமே இருக்கிறது. இங்கே சமஸ்கிருத மொழியறிவு நிறைய பேருக்கு இருக்கிறது, ஆனால் தஞ்சாவூர் போன்ற பிரசித்தமான இடங்களில் சங்கீதத்தின் பேரில் எவ்வளவு புத்தகங்கள் இருக்கின்றன என்று நான் தான் சொல்லவேண்டியிருக்கிறது. நான் பேலஸ் லைப்ரரியில், ரத்னாகரத்தின் ஹிந்துஸ்தானி மொழிபெயர்ப்பு இருந்த ஒரு பெரிய கட்டைப் பார்த்தேன். அதன் ஸ்வராத்யாயம், ராகாத்யாயம், மற்றும் தாளாத்யாயம் இவற்றை நான் கேட்கப் போகிறேன்.(பிரதி எடுத்துக் கொள்ளப் போகிறேன்). அந்த புத்தகம் ஹிந்தியில் இருக்கிறது, மேலும் இங்கே யாருக்கும் ஹிந்துஸ்தானி புரிவதில்லை அதனால் அது உபயோகமற்று இருக்கிறது. அந்த புத்தகத்தில், சமஸ்கிருதத்தின் ஹிந்தி மொழி பெயர்ப்பு இருந்தது ஆனால் தெளிவாக எழுதப்பட்ட உரை பார்த்தேன். இதை நன்றாகப் படித்து விட்டு எழுதுகிறேன். தெற்கில் மக்கள் அவர்களுடைய சங்கீதத்தின் மேல் நிறைய அபிமானம் கொண்டு, சொல்கிறார்கள், அய்யா உங்கள் வடக்கத்திய சங்கீதத்தில் சாஸ்திர ரீதியான நியமங்கள், முறைகள் இவை எல்லாம் இல்லை. அது நன்றாக இல்லை என்று சொல்வதற்கு அவர்களுக்குத் துணிவு இருப்பதில்லை. ஏனென்றால் அவர்களே ஹிந்துஸ்தானி சங்கீதம் பொது ஜனங்களுக்குப் பிடிப்பதால் இங்கே பாடகர்கள் சாஸ்திரிய சங்கீதத்தில் விதவிதமான மாறுதல்கள் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஐரோப்பியர்கள் அவர்கள் வந்த பின், அவர்களது சங்கீதத்தைக் கேட்டு, உங்களுடைய கணிதம் அறிந்த ஒருவர், இந்த மேள பத்ததியைச் செய்தார் என்று ஆட்சேபனை தெரிவித்தால் நீங்கள் உங்கள் சங்கீதம் பண்டைய சங்கீதத்தின் அடிப்படையில் இருக்கிறது என்று எப்படி நிரூபிப்பீர்கள் என்று கேட்டேன். தியாகய்யாவின் கீர்த்தனைகள் இங்கே சாஸ்திரிய சங்கீதம் ஆகிவிட்டன, தீக்ஷிதரைப் பொறுத்தவரையில், பேர் மட்டுமே மிஞ்சி இருக்கிறது. அவர் என்ன பாடுவார், அவர் பாட்டு எப்படி இருந்தது என்று அவர்களுக்கே தெரியவில்லை. "தியாகய்யா"

மறைந்து 50 வருடங்கள் தான் ஆகி இருக்கின்றன. இதற்குள் மேளகர்த்தாவின் சிறப்பு மற்றும் புராதனத்தைப் புகழ இவர்களுக்கு அதிகாரம் எப்படி இருக்கிறது? இந்த புகழ்ச்சிக்கும் என்ன அளவுகோல்? மேளங்களைச் செய்தவர் மிகவும் புத்திசாலியாக இருந்திருக்கலாம் ஆனால், முதலில் இருந்ததை ஒதுக்கி, பண்டைய கிரந்தத்திலிருந்து புதியவற்றைச் செய்து, எப்படி உருவானது ,அல்லது அதனுடன் என்ன தொடர்பு என்பதை மறைத்து வைத்து மேள பத்ததியை நானே செய்து விட்டேன் என்று சொல்லிக்கொள்பவரின் புகழைப் பாடுவது நன்றாக இல்லை. வேங்கடமகி இதைச் செய்தாராயின், அவர் எந்த கிரந்தத்தின் அடிப்படையில் செய்தார், மற்றும் ராகங்களுக்குப் பழைய பெயர்களை ஏன் கொடுத்தார், இதைத் தெளிவுபடுத்த முடிந்தால் அவரை மிகவும் புகழலாம். இதனால் நான் தேடுவதற்குக் கிளம்பியிருக்கும் இந்த சங்கீத யாத்திரை அது சொல்லும்படி வெற்றிகரமாகவில்லை என்று தெரியவரும். எங்கே போனாலும், இதைத் தான் கேட்கிறேன், "அடடா இங்கே எந்த பெரிய வித்வானும், சாஸ்திரம் அறிந்தவர்கள் மிஞ்சியவர்கள் யாரும் இல்லை" என்று தான் சொல்கிறார்கள் (மேலும் சாஸ்திரத்தை ஸாஹித்யம் என்கிறார்கள்) முற்காலத்தில் பெயர் சொல்லக்கூடிய, எண்ணக்கூடியவர்கள் இருந்தார்கள். இது போன்றவற்றால் என்ன காரியம் நடக்கும்? தஞ்சாவூரின் நாராயண ஸ்வாமி அப்பா என்ற பெயருடைய ஒரு மராட்டி கிருஹஸ்தர் மற்றும் மிருதங்க வாத்தியக்காரரைப் போன்று யாருமில்லை என்ற புகழ்ச்சியை கேள்விப்பட்டேன். மஹாவைத்யநாதன் என்ற பெயருடைய பாடகர் சில வருடங்களுக்கு முன் மறைந்தார் மற்றும் அவரைப் போன்ற பாடகர் தியாகய்யாவிற்குப் பின் யாரும் தோன்றவேயில்லை. முடிந்த இந்த கதையை நாம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும், மற்றும் தெற்கில் தியரியை [theory] அறிந்தவர்கள் இப்போது யாருமில்லை என்று புரிந்துக் கொள்ளவேண்டும். அதிலும், சென்னையிலிருந்து இங்குவரை சுப்பராம தீக்ஷிதரின் புகழை ஒரே கக் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். இறைவனின் தயவால் அவரைச் சந்தித்து ஏதாவது விஷயம் கிடைத்தால் கிருதக்ஞனாவேன். மைசூரில் சேஷண்ணா மற்றும் சுப்பண்ணா என்ற பெயருடைய பிரசித்தி பெற்ற, சங்கீத அறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தெற்கு வடக்கு இரண்டு சங்கீதமும் தெரியும் என்று சொல்கிறார்கள். இப்போது எனக்கு இன்றைய புழக்கத்திலிருந்தும் எந்தப் பத்ததியையும் ரத்னாகரத்துடன் தொடர்பு படுத்த முடியாது என்று போகப் போகத் தோன்றுகிறது. ரத்னாகரமே தேசி சங்கீதத்தின் புழக்கம் அதிகமானதால், மார்க்கி சங்கீதம் (அதாவது கடுமையான சமஸ்க்ருத நியமங்களுடன் கூடிய) வழக்கொழிந்து போய் விட்டது என்கிறது. அதைப் பாடுபவர்களும் யாரும் இல்லை.

யேஷாம் ஸ்ருதி ஜாத்யாதேர நியம: தே தேசீ ராக:

ரத்னாகரத்தின் காலத்தில் கூட, ஸ்ருதி அல்லது ஜாதியைப் பற்றிய விஷயங்கள் பின் தங்கி விட்டன என்றால் இப்போது அவை முழுவதும் அழிந்திருக்கத் தான் செய்யும், இது எளிதாகப் புரிந்துக் கொள்ளக் கூடியது. பின்னர் வந்தவர்களுக்கு மிகவும் கடினமான, நியமங்கள் பிடிக்காமல் போனதால், பாஷா, விபாஷா, அந்தரபாஷா போன்ற நான்கு அங்கங்களுடைய மக்களுக்குப் பிடித்தமான பாடல்கள் பிரசாரத்தில் வந்தது. இதற்கும் பிறகு காவியத்தில் ஆர்வமுள்ள ஏதேனும் ஒரு வித்வான், ராகத்தின் குடும்பங்களை உருவாக்கி விட்டார், பிறகு

"பரத உவாச" முதலியவற்றை சேர்த்து விட்டார். இங்கே தெற்கில். வேங்கடமகியும் அவர்களில் ஒருவர். புராணம் மற்றும் கதைகள் பிடித்தவர்களுக்கு அந்த குடும்ப விவகாரம், மிகவும் ஆகர்ஷிக்கும்படியாகவும், மனம் கவரும்படியாகவும் இருந்ததால் ரத்னாகரம் பின் தங்கி விட்டது. ஆனாலும், முழுமையான விவரங்கள் நிரம்பிய ஒரு பெரிய கிரந்தத்தை, வீசி எறிந்து விட முடியாது. அதனால் பிற கிரந்தக்காரர்கள், ஸ்வராத்யாயத்தை அப்படியே தம் கிரந்தங்களில் சேர்த்து பிறகு, "मनः पूतं समाचरेत्"[29] என்ற நியாயத்தின் படி, புழக்கத்திலிருந்த ராகத்தை எப்படி வேண்டுமோ மாற்றி விட்டார்கள். இஸ்லாமிய ராகமான "ஹிஜாஜ்" முதலியவற்றின் நுழைவும் இந்த நியாயத்தின் படி தான் நடந்திருக்கிறது. இந்த ராகங்களின் மேல் ஜாதி பிரகரணம் எப்படி பொருத்தப்பட்டது என்று தெரிந்துக் கொள்வது சாத்தியமா? அதனால் தங்கள் கிரந்தங்களிலிருந்து அவற்றை அப்படியே எடுத்து விட்டார்கள். கிராமத்தின் பிரபலம், ரத்னாகரத்திலே இல்லாமல் செய்யப்பட்டு விட்டது, என்னும் போது அதே நியாயத்தின் படி, பிறகு வந்த கிரந்தக்காரர்கள் ரத்னாகரதை முன்மாதிரியாகக் கொண்டு, வேலை செய்தனர், என்பதில் என்ன ஆச்சரியம் இருக்கப் போகிறது? இதனால் மக்கள் வழக்கொழிந்த சங்கீத்தை ஏன் ஆராய வேண்டும் என்று கேட்கின்றனர், ஆனால் பதில் என்னவென்றால், மனிதர்களின் விழைவு முன்னேறி, ஏதாவதொருவர், "சங்கீதத்தின் வரலாற்றை"க் கையிலெடுத்தால், இந்த ஆய்வெல்லாம் அவர்களுக்கு உபயோகப்படும், என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள்.

திடப்படுத்திக் கொள்ளல் தேதி 20 டிசம்பர் 1904

இந்த வெளிப்பாடு சாஸ்திர ஆராய்ச்சியின் கண்ணோட்டத்தின்படி நிராசையில் முடிந்ததாகத் தோன்றுகிறது. ஆனாலும் நல்ல காலமாக, எட்டையாபுரத்தின் தீக்ஷிதருடனான உரையாடலைப் படித்தால், இந்த விஷயத்தில் ஆர்வம் இழக்காமல், ஆழமாக விசாரம் செய்ய வேண்டும் என்று தோன்றுகிறது. பரிணாம வளர்ச்சியின் படி, பண்டைய மற்றும் இன்றைய சங்கீததின் அம்சங்களின் மாற்றம், அமைப்பு இவற்றை நிர்ணயித்தாலே ஒரு பெரிய வேலை ஆகும். இப்போது நான் இதை நிறைவு செய்வேன் என்று தோன்றுகிறது. இன்றைய ராகங்களின் ஸ்வரூபம் வரை பெரிய மாற்றங்கள் நடந்துள்ளன என்பதையெல்லாம் ஒத்துக் கொள்ளத் தான் வேண்டும்.

ஆனால், வேத காலத்தில் குறிப்பிட்ட ஸ்வரங்கள் இருந்தன, அதன் உதாத்த, அனுதாத்த, ஸ்வரித ஸ்வரங்களின் பாகுபாடு குறித்த நியமங்கள், மூல ஸப்தகம் எவ்வாறு உருவானது, எப்போது உருவானது, அதிலிருந்து 18 ஜாதி மற்றும் ராகம் அல்லது மேளம் (?); வேங்கடமகி இந்த 18 ஜாதி அல்லது ராகங்களிலிருந்து (முக்கியமான) தன் 72 மேளத்தை எந்த அடிப்படையில் செய்தார்; இதிலிருந்து தோன்றிய 1000 ராகங்கள்; இந்த வரிசையில்

[29] [दृष्टिपूतं न्यासेत्पादं वस्त्रपूतं पिबेज्जलम्
शास्त्रपूतं वदेद्वाक्यं मनः पूतं समाचरेत् - चाणक्य नीति - **செயலைச் சிந்தனையால் சுத்தமாக்கு**]

ஆராய்ந்தால், அல்லது விடை கண்டால், வரலாற்றுக்கு என்ன குறைந்த திசையா கிடைத்து விடும்? மும்பாய் போன்ற ஊரில், "நேட்டிவ் ஜெனரல்" லைப்ரரியில் [Native General Library] இந்திய சங்கீத விஷயமாக சேர்க்கப்பட்ட கிரந்தங்களின் பிரதிகளை ஒரு அலமாரியில் யாராவது தானமாகக் கொடுத்தால் இந்த வேலை மிகவும் முக்கியமானதாகிவிடும். சென்னையில் ஓரியண்டல் லைப்ரரி, தஞ்சாவூர் மற்றும் திருவாங்கூரில் பேலஸ் லைப்ரரிகள், மற்றும் பிகானேரின் பேலஸ் லைப்ரரி ஆகிய இத்தனை இடங்களில் கிரந்தங்களின் ஸங்க்ரஹம் இருக்கிறது - அதைப் பற்றி நான் இந்த ரிபோர்ட்டில் வெவ்வேறு இடங்களில் கொடுத்திருக்கிறேன்.

தெளிவான சிந்தனையில் மாற்றம் **ராமேஸ்வரம், ஞாயிறு 10 டிசம்பர்**

தஞ்சாவூரின் ஸ்வராவத் வாசிக்கும் ஸ்ரீ ஜகன்னாத பட் மற்றும் மதுரையில் பகாவஜ் வாசிக்கும் ஸ்ரீ பஞ்சநதம், இவ்விருவரும் அவர்களுக்கு மிருதங்கத்தின் வெவ்வேறு தாளங்களின் சொற்களை எளிதாகக் கட்ட வரும் என்று சொன்னார்கள். இதற்கு முன் எனக்கு ஆச்சரியமாக இருந்தது, ஆனால் அவ்வாறு இருக்கத் தேவை இல்லை. அவர்களை என் முன் அமர்த்தி அது போன்ற சொற்களைத் தயாரிக்கச் சொன்னேன், அப்படியே அவர்கள் எப்படி இதைச் செய்கிறார்கள் என்று கவனித்தேன். ஜகன்னாத பட் "முரஜாக்ஷர மாலிகா" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட அக்ஷரங்களிலிருந்து எடுத்து விட்டு, தம்மிடம் இருக்கும் பல மூல அக்ஷரங்களிலிருந்து, குறிப்பிட்ட வர்க்கத்தின் (வேறு பக்கத்தில் பார்க்கவும்), அக்ஷரங்களை மட்டும் மிருதங்கத்தில் வாசிக்கப்படும் என்று ஒரு ஸம்ப்ரதாயம் இருக்கிறது என்று சொன்னார். நாம் கிரந்தங்களில் ஒவ்வொரு சாஸ்திரத்தையும் ஏதோவொரு தெய்வத்தோடு சேர்த்தல் வழக்கம். அதற்கேற்ப, சங்கீத சாஸ்திரத்தின் மூலம் மஹாதேவன் என்று கொள்கிறார்கள். மஹாதேவனின் ஐந்து முகங்களைச் சொல்லி, அவருடைய ஐந்து முகங்களில் முரஜாக்ஷரங்கள் பங்கீடு செய்யப்பட்டுள்ளன. இதே விஷயத்தை நான் ரத்னாகரத்தில் வாத்யாத்யாயத்தில் பக்கம் xxஇல் சிறிது படித்திருக்கிறேன். அதை நான் அவரிடம் காட்டினேன், அதை ஜகன்னாத பட் (என் புத்தகத்திலிருந்து) எழுதிக் கொண்டார்.

இந்த விஷயத்தினால் எனக்கு நேரடியாக எந்த பிரயோஜனமும் கிடையாது. முரஜத்தின் அக்ஷரங்கள் நிர்ணயிக்கப்பட்டவை, மேலும் அவை ஏறக்குறைய எல்லா வாத்தியக்காரர்களுக்கும் தெரிந்திருக்கிறது. இருக்கட்டும். க வர்க்கம், க வர்க்கம், ட வர்க்கம், முதலிய வர்க்கங்களில் மிருதங்கத்தின் அக்ஷரம் எது எப்படி இருக்கின்றன - இதை வைத்து முரஜாக்ஷரம் நிச்சயிக்கப்படுகிறது, மற்றும் அந்த சொல்லைக் கட்டினால் அந்தந்த அக்ஷரங்கள் வருகின்றன. டேக்கா அல்லது சொல் தயார் செய்யுங்கள் என்று நான் சொன்னவுடனே, அந்த தாளத்திற்கு என்ன அங்கம் என்று அவர்கள் கேட்டார்கள். (அதாவது த்ருவ தாளம் - ।o।।, ரூபகம் o।) , இவ்வாறு சின்னங்களுடன் அங்கத்தின் எண்ணிக்கைகளை நான் முன்னமே எழுதி வைத்திருக்கிறேன்), அது கிடைத்தவுடன் ஜாதி என்ன (அதாவது சதுஸ்ர, திஸ்ர, மிஸ்ர, முதலியவற்றில் எது) என்று கேட்டார். ஜாதி தெரிந்தவுடனே, அக்ஷரத்தின் எந்த அமைப்பு

அழகாக இருக்கிறது, என்பதைச் செய்வதில் எண்ணம் சென்றது. உதாரணம் த்ருவ தாளத்தின் அங்கம் | o | | என்பது இருக்கவே இருக்கிறது, ஆனால் சதுஸ்ர ஜாதி எடுத்துக் கொண்டால், லகுவின் சின்னம் எதுவோ , அதன் அளவு 6 மாத்திரை அல்லது அக்ஷரம் ஆகும். இந்த சாவியை வைத்துக் கொண்டு த்ருவ சதுஸ்ர ஜாதி என்று சொன்னதால், |o|| , அதாவது, 4,2,4,4, இன் க்ரமத்தில்

1.2.3.4. 5-6 7-8-9-10 11-12-13-14

--- --- --- ---

4 0^{30} 4 4

இவ்வாறு மாத்திரைகள் உண்டானது. முதல் மாத்திரையில் சமம் என்று வைத்துக் கொண்டால், இவ்வாறு நாலு பகுதிகள் கொண்ட எண்களால் செய்ய வேண்டும். இப்போது சொற்களை அமைப்பதில் 4 மாத்திரைக்கு,

தா4 தி4ன் நக்1 த1 அல்லது தா திரி கி ட அல்லது

1 2 3 4 1 2 3 4

தா4 தா4 தி3ம் தா1 தா4 தி4 த்3தி4 தோ1ம் தி1ட்1 கி1த்1 கி1த்3 கி3ன் இவ்வாறு பகுதிகளை அமைக்கலாம்.

இரண்டு மாத்திரைக்காக,

தி4ம் தா4 தா4 தி4ன் தி1ட் தி1ர் கி1ட்1 த1க்1 தி4ன் நக்1 தா1 கி1ட்1

1 2 1 2 1 2 1 2 1 2

1 2

இவ்வாறு பகுதிகளை உபயோகிக்கிறார்கள். மொத்தத்தில், யார் அதிக புத்திசாலியோ அவர்களால் அதிக அழகான சொற்களை செய்ய முடியும். இதில் பெரிய வித்தை இல்லை. சொல் நமக்கு முன்னால் இருக்கிறது. மாத்திரை ஜாதி ஆகியவற்றிலும் இருக்கிறது. தன் யுக்தியால், அதை உபயோகிப்பது ஒரு கலைஞனின் வேலை. இங்கே எல்லா சிறிய பெரிய வாத்தியக்காரர்களுக்கு ஜாதி மற்றும் அங்கத்தைப் பற்றிய விஷயம் தெரிந்திருக்கிறது. இங்கே புழக்கத்தில் ரூபகம் த்ரிபுட, ஜம்ப, ஆதி தாளங்களின் உபயோகம் அதிகம் இருக்கிறது. இந்த ரூபக தாளம் நமக்கு மேற்கேயுள்ள ரூபக தாளத்திலிருந்து வேறு பட்டது. இது அதன் அங்கமான "o |" இலிருந்து தெளிவாகும்.

2.4

1.2

[30] [2] கைராகர் பதிப்பில் இவ்விடம் அச்சுப் பிழை

இவ்வாறு 6 மாத்திரை மற்றும் இரண்டு தட்டு தட்டி இங்கே அதிகமாகப் பாடுகிறார்கள். தியாகய்யா பல ராகங்களிலும் தாளங்களிலும் உருப்படிகள் செய்திருக்கிறார். தெலுங்கு பாஷை சங்கீதத்திற்கு மிகவும் ஏற்றது என்ற கருத்து நிலவுகிறது. அதனால் இந்த மொழியில் தான் சாஸ்திரிய சங்கீதம் இருக்கிறது என்று கூட சொல்லலாம். தாளத்தின் சொற்களைக் கட்டும் விதத்தை ஜகன்னாத பட்டர் காட்டினார். அதையே பஞ்சநதமும் காட்டினார். இது எளிமையாக இருந்ததால் எளிதில் புரிந்துக் கொள்ளக் கூடியது. இதன் உதவியோடு நஜரே கான், மற்றும் பாண்டு என்ற தபலா வாத்தியக்காரர்களைத் தயார் செய்யுமாறு கேட்கலாம் என்று நிச்சயித்திருக்கிறேன். இந்த அறிவு அவர்களுக்கு அதிகம் உபயோகப்படும். பாண்டு தன் நடைமுறை ஞானத்தால் நன்றாக சொற்களை அமைப்பார்.

சமஸ்கிருத கிரந்தங்களின் ஸ்வர ஸப்தகத்தோடு கர்நாடக ஸ்வர ஸப்தகத்தோடு ஒப்பீடு

	சமஸ்கிருதம்	கர்நாடக
1.	.....	
2.	.....	
3.	.....	காகலீ நீ
4.	..... ஸா	ஸா
5.	.....	சுத்த ரிஷபம்
6.	.....	
7.	.....ரீ	சது: ஸ்ருதி ரீ
8.	.....	ஷட் ஸ்ருதி "ரீ"
9.	..... [க]	சாதாரண காந்தாரம்
10.	.....	
11.	.....	அந்தர காந்தாரம்
12.	.....	
13.	.....[ம]	சுத்த மத்யமம்
14.	.....	
15.	.....	ப்ரதி மத்யமம்
16.	.....	
17.	..... ப	சுத்த பஞ்சமம்
18.	.....	சுத்த தைவதம்
19.	.....	
20.	..... த	சது: ஸ்ருதி தைவதம்
21.	.....	
22.	..... நி	கைசிக நிஷாதம், ஷட்ஸ்ருதி தைவதம்
23.	.....	
24.	.....	
25.	.....	காகலீ நி
26.	..... ஸ்	ஸ்

இருபத்திரண்டு ஸ்ருதிகளின் ஏழு ஸ்வரங்களுக்குள் பங்கீட்டைக் காட்டும் ஸ்ருதி மண்டலம் :-



இந்த படத்தில் வலது பக்கம் பிரதட்சணமாக., வந்தால், 4,3,2,4,4,3,2 இந்த வரிசையில் இந்த ஸ்ருதிகளின் இடைவெளியில் ஸ்வரங்கள் அமைந்திருப்பது தெளிவாகும். ஸ்ருதிகளின் அமைப்பை சீக்கிரம் புரிந்துக் கொள்வதற்காக, மற்றும் மனதில் பதிவதற்காக, இந்தப்படம் ரத்னாகரத்தின் உரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் சங்கீதத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கர்நாடக சங்கீதத்தில் ஐரோப்பிய க்ரோமேடிக் ஸப்தகத்தை வைத்துக் கொண்டு எல்லா ராக ராகினிகளும் அமைக்கப்பட்டுள்ளது, இது தான் ஐரோப்பிய டெம்பர்ட் ஸ்கேல் [tempered scale]

இது மிகவும் சமீபத்தியதானதால், நாம் அவர்களின் ஸ்வர ஸப்தகத்தை எடுத்துக் கொண்டு சங்கீதத்தைச் செய்திருப்பதாக எண்ணுகிறார்கள். நம் சமஸ்கிருத ஸ்வர ஸப்தகத்தை அவர்கள் என்ஹார்மானிக் [enharmonic] என்று சொல்கிறார்கள். மேலும் ஐரோப்பாவில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி அதிகமாக இருப்பதால், அங்கே "வைப்ரேஷன்ஸ்" [vibrations] இன் அடிப்படையில், மற்றும் ஹார்மனியின் அடிப்படையில் கிரோமேடிக்-ஐ நிர்ணயித்திருக்கிறார்கள். கர்நாடக சங்கீதத்தில் ஐரோப்பிய சங்கீதத்தின் பாதிப்பு சீக்கீரம் ஆகி விட்டது என்று ஒத்துக் கொள்ள வேண்டியிருக்கும், ஏனெனில், ஐரோப்பிய தேசத்து மக்கள் அங்கே முதலில் வந்து காலிகட்டிற்கு அருகில், வந்து சேர்ந்தனர் என்று வரலாறு கூறுகிறது. இரண்டாவது விஷயம், நன்றாக இல்லாததொன்று, தெற்கில் பாட்டிற்கு உடன் வாசிப்பு வயலின் தான் (ஐரோப்பிய வாத்தியமான) அங்கே சாரங்கியைப் பார்க்க முடிவதில்லை இதனால் ஐரோப்பிய பண்டிதர்களுக்கு கர்நாடக சங்கீதத்தின் புராதனத்தைப் பற்றி ஒன்றும் விளக்க முடியாது. நான் இதைப் பண்டைய சங்கீதத்தோடு தொடர்பு செய்யாமல் இருந்தால் இந்த அழகிய பத்ததி, முற்றிலும் சமீபத்தியதான, மற்றும் ஐரோப்பிய கிரோமாடிக் ஸ்கேலின் அடிப்படையில் அமைந்ததாகி விடும்.

இந்த ஸ்வர ஸப்தகத்தை ஏற்பதற்கு முன்னர், இந்தியாவில் சங்கீதம் இருந்தது, இதனால் க்ரோமேடிக் ஸ்கேலை அனாதியாகக் கொள்ள முடியாது. ஏனெனில் உலகத்தின் வரலாற்றைப் பார்க்கையில், இந்த ஸ்வர ஸப்தகம் மிகவும் சமீபத்தியதாகத் தெரிகிறது. ஐரோப்பிய சங்கீதத்தின் வரலாற்றைப் படிக்கையில் இவ்வாறு தெரிகிறது.

பார்வதி கோவிலில் சங்கீதக்காரர் ஸ்ரீ எம். ஆர். சுந்தரம் அய்யரிடம் பெற்றுக் கொண்ட தாளத்தைப் போடும் விதி.
ராமேஸ்வரம் 10. டிசம்பர் 1904

தஞ்சாவூரின் சங்கீதக்காரர்கள் சொன்னது போலத்தான் ஏக தாளம் இருந்தது.

உண்டேதி ராமுடு ஒக்கட உரக சண்டி போகே மனஸா | பல்லவி
(அ) சண்ட மார்த்தாண்ட, மத்ய மண்டலமுன | அனுபல்லவி (எண்ணிக்கை ஆரம்பம்)
தமஸா திகுணா ரஹிதுண்டு தர்மாத்முடு ஸ்வமுடுக்ஷம கருண்டு தியாகராஜ சித்த ஹிதுடு ஜகமுனிண்டி (சரணம்)

இன்று இந்த பாடகரை என்னிடம் (ஸ்ரீ தேவதார் -ஆசிரியரான இவர் வீட்டில் நான் தங்கி இருக்கிறேன்) அழைத்து வந்தார். தேவதர் இவர் ஒருவர் தான் இங்கே பாடகர் என்றார். அவரது பேச்சிலிருந்து அவர் சங்கீதத்தின் பெரிய கிரந்தமான, "காயக லோசனமும்" வெங்கட சாஸ்திரியின் "மியூஸிக் செல்ஃப் இன்ஸ்ட்ரக்டர் [music self instructor] ஆகிய தெலுங்கு புத்தகத்தையும் பார்த்திருக்கிறார் என்று தெரிந்தது. நடைமுறையில் இங்கே இருப்பவர்கள் வழியில் பாடுகிறார் என்பதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும். இங்கே இந்த விஷயத்தில் உயர்ந்த தரத்தினைக் கற்பிப்பவர்கள் யார் இருக்கிறார்கள்? அவருக்கு 7 ரூபாய் மாதச் சம்பளம் கிடைக்கிறது. அவரிடம் வெங்கட சாஸ்திரியின் தெலுங்கு புத்தகமான "மியூஸிக் செல்ஃப் இன்ஸ்ட்ரக்டர்" இருக்கிறது. இந்தப் புத்தகத்தை நாகோஜி ராவ் புகழ்ந்தார். அதனால் நான் அதை வாங்கி இருந்தேன். அதில் பிரயோஜனமான விஷயம் ஏதும் இல்லை. ராமநாத[புரத்தின்] சீனய்யா அய்யங்காரையும் அவர் புகழ்ந்தார், மேலும் அவர் மெட்ரிகுலேஷன் வரை ஆங்கிலத்தில் படித்தவராதலால், அவர் உங்களுக்கு ஆங்கிலத்தில் விளக்குவார் என்றும் சொன்னார். தேவதார் சீனய்யா அய்யங்காருக்கு பாஸ்கர் பக்ளே என்ற ஒரே ஒரு பாடகரைத் தான் பிடித்தது என்றார். அவர் ஹிந்து வானதால் அவர் மேல் மதிப்பு இருக்கிறது என்றார். முஸ்லிம் பாடகர்களின் பாட்டை அவர் அதிகம் விரும்புவதில்லை. எப்போது விருப்பு வெறுப்பின் அடிப்படையில் புகழ் இருக்கிறதோ அங்கே விவாதம் செய்வதில் அர்த்தமே இல்லை. இந்த பெரும் பாடகர் வெளியில் பிற சங்கீதத்தை அதிகம் கேட்டதில்லை என்றும் அவர் சொன்னார். இந்த காரணத்தால் கிணற்றுத் தவளை போல அவருடைய கண்ணோட்டம் சுருங்கியதாக இருக்கிறது, இதில் அவரது தவறொன்றும் இல்லை. இவர் சுபாவத்தில் ஏழ்மையுள்ளவர் போலவும், உடலில் ஆரோக்கியமானவராகவும் தெரிந்தார் மற்றும் திறந்த மனத்தோடு பேசினார்.

ஸ்ரீனிவாச ஐயங்காருடன் சந்திப்பு மற்றும் விவாதம் ராமநாதபுரம் , 24 டிசம்பர்

இன்று மதியம் 1 மணிக்கு நாங்கள் ராமேஸ்வரத்திலிருந்து கிளம்பி இங்கே வந்தோம். என்னிடம் இருந்த சிபாரிசுக் கடிதத்தை ராமநாதபுரத்தின் சப் மேஜிஸ்ட்ரேட் ஸ்ரீ வெல்லூர்ஸ்வாமியின் பேரில் இருந்தது, ஆனால் அது உபயோகப்படவில்லை, ஏனென்றால் அவர் வேலை விஷயமாக வெளியில் சென்றிருந்தார் என்று ஸ்டேஷனில் தெரிய வந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் மிகவும் கருணையுள்ளவராக இருந்ததால், அவர் தன் சிப்பாயை என்னுடன் அனுப்பி ஊரில் அழகான ஒரு வீட்டில் தங்க வைத்தார். இப்போது நிம்மதியாக இருக்கிறேன். அங்கே போனவுடன் என்னை பார்ப்பதற்காக வாசலிற்கு அருகில் சிலர் கூடினார்கள். அவர்களில் ஒரு கிருஹஸ்தர் என்னிடம் நான் யார், எங்கிருந்து வந்தேன் என்று கேட்க முன் வந்தார். அவர்களிடம் நான் சங்கீத வித்வான் ஸ்ரீனிவாச ஐயங்காரைப் பற்றி விசாரித்தேன். நல்ல காலமாக அவர் ஊரில் தான் இருக்கிறார் என்றும் எனக்கு அடுத்த தெருவில் இருக்கிறார் என்றும் தெரிய வந்தது. இந்த சந்தோஷமான செய்திக்காக இறைவனுக்குக் கடமைப்பட்டவனாவேன். நான் அந்த மனிதரிடம் ஸ்ரீ ஐய்யங்காரைச் சந்திப்பது என் நோக்கம் என்றேன். அவருடைய புகழை நான் சென்னையிலேயே கேட்டிருக்கிறேன். அய்யங்கார் அந்த மனிதருடைய நண்பர் என்று தெரிய வந்தது அதனால் அவர் அரை மணி நேரத்திற்குப் பிறகு சுமார் 4 மணிக்கு மீண்டும் வந்து அய்யங்கார் தானே 5 மணிக்கு என்னை இங்கே வந்து பார்ப்பதாகச் சொன்னார். இந்த விஷயம் நல்லதாகப் போனது.

மாலை 5 மணி

ஸ்ரீ அய்யங்கார் நிஜமாகவே சொன்ன சமயத்திற்கு ஒரு சிஷ்யனைக் கூட்டிக் கொண்டு என்னிடம் வந்தார். உபசார வார்த்தைகளுக்குப் பிறகு அவர் என் வரவைப் பற்றி, தஞ்சாவூரிலிருந்து அவருக்கு ராமண்ணா ஸ்வாமியின் கடிதம் வந்தது என்றும், என் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் என்றும் சொன்னார். இதற்குப் பிறகு அவர் தனக்குத் தெரிந்தவற்றை எனக்குச் சொல்வதாகவும், வேண்டுமானால் பாடியும் காட்ட முடியும் ஆனால் அவருக்குத் தொண்டையில் கொஞ்சம் வலி இருப்பதால் மருந்து வாங்கிக் கொண்டிருந்தால் அங்காங்கே கொஞ்சம் பாடிக் காட்டுவார் என்றார். நான் எனக்குத் தியரி [theory] பற்றிய விஷயம் அதிகம் வேண்டும் என்றார். நடைமுறை விஷயங்கள் கொஞ்சம் அங்கே இங்கே முடிந்த அளவு காட்டினால் கூட போதும். சிறிது பேச்சு நடந்தது, ஆனால் அது அதிகம் சங்கீத சம்பந்தமானதாக இருக்கவில்லை. நான் மும்பை சென்றவுடன், அவர் எனக்குக் கடிதம் எழுதுவதாகவும் எனக்கு வேண்டிய தகவலைக் கொடுப்பதாகவும் சொன்னார். இரவில் வேலை முடிந்த பின் நேரம் கிடைத்த போது மீண்டும் வருவதாகச் சொன்னார். வீட்டில் நாங்கள் எல்லோரும் ஊர் சுற்றிப் பார்க்க நடந்து சென்றோம். ஸ்ரீ அய்யங்கார் இரவில் வரவில்லை. காலை அதாவது வியாழன் ஏழு மணிக்கு, நான் அவருக்கு நேரம் கிடைத்தால் அவரைப் பார்க்க விரும்புவதாக அவர் வீட்டுக்கு சொல்லி அனுப்ப ஒரு பையனை அனுப்பினேன். அவர் தானே வருவதாகச் சொல்லி அனுப்பினார். அதற்கேற்ப, அவர் வந்தார், எங்கள் பேச்சுவார்த்தை இவ்வாறு நடந்தது:

கே: ஸ்ரீ அய்யங்கார்! நீங்கள் ரத்னாகரத்தையோ அல்லது வேறு எந்த கிரந்தத்தையோ படித்திருக்கிறீர்களா?

ப: ஆம். எனக்கு சமஸ்கிருதம் தெரியாது, ஆனால் அதை நான் கேட்டுப் புரிந்துக் கொண்டிருக்கிறேன். அதில் ராகம் மற்றும் தாளப் பிரகரணம் எனக்கு உபயோகமாக இருப்பதால், அதை நான் புரிந்து கொண்டுள்ளேன்.

கே: அதில் எத்தனை ராகங்கள், எப்படி மற்றும் எந்த ஸ்வர ஸப்தகத்தின் ஆதாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?

ப: அதில் 400-க்கும் மேற்பட்ட ராகங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன, அவை ஸ்லோகத்தோடு எளிமையான முறையில் விளக்கப் பட்டுள்ளன. இதில் ஸ்வரங்களுக்கான மூர்ச்சனைகள் மிகவும் அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலிருந்து ராகங்கள் வெவ்வேறாகக் காணப்படுகின்றன.

கே: ஸ்வரங்களின் மூர்ச்சனைகள் எவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது?

ப: சங்கராபரணத்தின் ஸப்தகத்தில் தேவகாந்தாரமாக எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதில் மத்யமத்திலிருந்து ரிஷபம் வரை செல்லும் பொது, ஸ்வரங்கள் (பாடிக் காட்டுகிறார்) இவ்வாறு கிரியை செய்ய வேண்டும். இந்த கிரியை வெவ்வேறு விதமாகச் செய்தால் வெவ்வேறு ராகங்கள் கிடைக்கும். நான் மூர்ச்சனை என்றால் ஸ்வரங்களில் ஒரு விதமாக கமகம் கொடுப்பது என்று அர்த்தம் செய்துக் கொண்டிருக்கிறேன். அது போல இந்த விஷயங்கள் அந்த புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கே: என்னிடம் உள்ள ரத்னாகரத்தின் பிரதியில், அதில் 264 ராகங்கள் ராகினிகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று தோன்றுகிறது.

ப: என் புத்தகத்தில் 400 க்கும் அதிகமாக உள்ளது. நான் அதை உங்களுக்குக் காட்டுகிறேன். அது தெலுங்கு லிபியில், ஆனால் சமஸ்கிருத மொழியில் இருக்கிறது. அதில் எல்லா ராகத்தைப் பற்றிய விவரமும் ஸ்லோகங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

கே: உங்கள் குரு யார்?

ப: என் குரு பட்டணம் சுப்ரமணிய அய்யர். அவர் தஞ்சாவூருக்கு அருகில் "திருவாடி" என்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் இருந்தார். ராமநாதபுரத்தின் முந்தைய ராஜா இரண்டு மூன்றாயிரம் செலவு செய்து, என்னை சங்கீத வித்யையைக் கற்றுக் கொள்வதற்காக திருவாடிக்கு அனுப்பி வைத்தார். நான் அங்கே தான் படித்தேன். என்னிடம் ராமதுர்க்கா-விலிருந்து ஒரு தெற்கத்தியர் இங்கே சங்கீதம் கற்று நன்றாக ஸ்வரஞானம் பெற்று திரும்பப் போனார். அவரிடம் நானும் ஹிந்துஸ்தானி ராகத்தைப் பற்றித் தெரிந்துக் கொண்டேன். அவர் க்வாலியரில் பெயர் பெற்ற சங்கர பண்டிட்.

கே: இது பற்றிய சமஸ்கிருத புத்தகம் பார்த்திருக்கிறீர்களா?

ப: ஆம், என்னிடம் சங்கீத ரத்னாகரம் இருக்கிறது. அதை தேவநாகரி லிபியில் நகல் எடுத்து உங்களுக்குக் கொடுக்கிறேன், இதே போல ராக தாள சூடாமணி[31] என்ற பெயரில் ஒரு அழகிய புத்தகம் என்னிடம் உள்ளது. தெலுங்கு புத்தகமும் இருக்கிறது. சுப்பராம தீக்ஷிதரின் புதிய புத்தகமும் உள்ளது.

கே: உங்களைத் தவிர, வேறு யார் சாஸ்திரம் அறிந்த வாழும் சங்கீத வித்வான் என்று நினைக்கிறீர்கள்?

ப: எட்டையாபுரத்தின் தீக்ஷிதர் பெரிய வித்வான். அவருக்கு நன்றாகப் பாட வராது. ஆனால் அவர் நன்றாக தியரி தெரிந்தவர்.இதைத் தவிர எனக்குத் தெரிந்த வரை வேறு யாரும் சாஸ்திரக்காரர் இல்லை.

கே: தீக்ஷிதரின் புத்தகத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: அது மிகவும் நன்றாகச் செய்யப்பட்டிருக்கிறது, நான் அதை முழுவதுமாகப் படித்திருக்கிறோம். அதில் தப்பு கண்டுபிடிக்க எதுவும் இல்லை. அதை நான் முழுவதும் ஒத்துக் கொள்கிறேன்.

கே: இங்கே தீக்ஷிதர் மற்றும் தியாகய்யா என்று இரண்டு ஸம்ப்ரதாயத்தை ஒத்துக் கொள்கிறார்கள். இதில் முக்கியமான வித்தியாசம் என்ன?

ப: தீக்ஷிதரின் படைப்புக்கள் சமஸ்கிருதத்தில் இருக்கின்றன மற்றும் அவை நன்றாக இருக்கின்றன, ஆனால் மொழியின் காரணத்தால் அவை மிகவும் பிரசித்தமாகவில்லை. அவர் பெரிய வித்வான் மற்றும் பண்டிதர். அவருடைய பாடல்கள் ஹிந்துஸ்தானி சாஸ்திரிய த்ருவபதத்தைப் போல விளம்ப காலத்தில் மிகவும் கடினமான நியமங்களுடன் செய்யப்பட்டிருக்கின்றன. அவை எல்லாம் பிராசரத்தில் வராததால் நிறைய அழிந்து விட்டது. அதிலும் இருப்பவை கொஞ்சம் பேருக்கு மட்டுமே தெரிந்திருக்கிறது. அதன் கருத்து மிகவும் கம்பீரமாக இருக்கும்.

கே: இங்கே கர்நாடக சங்கீதத்தைப் பற்றி மிகவும் பழமையான புத்தகம் என்று எதைக் கருதுகிறார்கள்?

ப: நான் ராகதாள சிந்தாமணியைத் தான் அவ்வாறு கருதுகிறேன். அதில் 72 மேளங்கள் மற்றும் அதன் 1000 ராகத்தின் ஸ்லோகத்தோடு அழகான முறையில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த புத்தகத்தை நான் உங்களுக்குக் காட்டுவேன், மற்றும் தேவைப்பட்டால், அதை உங்களுக்கு தேவநாகரி லிபியில் நகல் செய்து மும்பாய்க்கு அனுப்பித் தருவேன்.

கே: நீங்கள் சதுர்தண்டிபிரகாசிகா என்ற புத்தகத்தைப் பார்த்திருக்கிறீர்களா?

[31] [ராக தாள சிந்தாமணி தெலுங்குப் புத்தகம். ஸ்ரீனிவாச அய்யங்காரின் சிஷ்யரான அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் தம் குருவிடம் ஸங்க்ரஹ சூடாமணி இருந்தது என்று எழுதி இருப்பது, இது ஸங்க்ரஹ சூடாமணி என்று என்ன இடம் அளிக்கிறது. ஆயினும் ஸங்க்ரஹ சூடாமணியில் தாளப் பகுதி இல்லை.]

ப: இல்லை

கே: மேளகர்த்தா எப்படி நம் க்ரோமாடிக் ஸ்கேலை எந்த ஆதாரத்தின் படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்ல முடியுமா?

ப: அவர்கள் 72 மேளங்களை எவ்வாறு அமைத்திருக்கிறார்கள் என்பதை அறிவேன். ஆனால் இந்த 12 ஸ்வரங்களை எப்படி நிர்ணயம் செய்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது.

கே: உங்கள் கருத்தின் படி, மிகவும் பழமையான ஸ்வர ஸப்தகம் எத்தனை ஸ்வரங்களால் ஆனது மற்றும் எது?

ப: இதை என்னால் சொல்ல முடியாது

கே: உங்கள் பக்கத்தில் ஸாமவேதம் பாடுபவர்கள் இருக்கிறார்களா? அவர்களிடம் அவர்கள் பாடும் போது எத்தனை மற்றும் எந்த ஸ்வரங்களைப் உபயோகிக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறீர்களா?

ப: இல்லை, ஆனால் கேட்டுச் சொல்கிறேன்.

கே: தெற்கில் உங்களைத் தவிர பெயர்பெற்ற பாடகர்கள் வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள்?

ப: அனந்தராமன் மற்றும் முத்தையா பாகவதர் இவர்கள் நன்றாகப் பாடுபவர்கள். ஆனால் அவர்கள் நடைமுறை சங்கீதம் அறிந்தவர்கள். மேலும் திருநெல்வேலியில் இருக்கிறார்கள். கேட்கத் தகுந்தவர்கள்.

கே: நீங்கள் ஹிந்துஸ்தானி சங்கீதம் கேட்டிருக்கிறீர்கள் என்கிறீர்கள், பிறகு அதில் என்ன குறைகள் இருப்பதாக உங்களுக்குத் தோன்றியது?

ப: நான் ஸ்ரீ பாஸ்கர ராவ் பக்ளே மற்றும் என்னிடம் ராமதுர்க்காவிலிருந்து வந்த மாணவரை மட்டும் தான் கேட்டிருக்கிறேன். இவர்களுக்கு நல்ல ஸ்வர ஞானம் இல்லை. மற்றும் அங்கே உள்ள பாடகர்களுக்கு நல்ல ஸ்வர ஞானம் இல்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

கே: ஆனால் அவர்களின் பாட்டு உங்களுக்குப் பிடித்ததா?

ப: மிகவும் பிடித்தது. அதைக் கற்றுக் கொள்ள நான் ஆவலாக இருக்கிறேன். சிற்சில உருப்படிகளை நானும் கற்றிருக்கிறேன் (பாடிக் காட்டுகிறார்). அந்த சங்கீதம் இங்கேயுள்ளவர்களுக்கும் பிடிக்கிறது ஆனால் இப்போதும் அதன் அமைப்பின் சிறப்பை இங்கேயுள்ளவர்கள் நன்றாகப் புரிந்துக் கொள்ளவில்லை. அதாவது அதன் நியமங்களை இவர்கள் அறிவதில்லை (நான் புரிந்துக் கொண்டவர்கள் வடக்கிலும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதை யார் அறிவார்கள் என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டேன்). உங்கள் பகுதியின் பூரியா-வில் அமைந்த க்யால் "ப்யார் தே" எனக்கு மிகவும் பிடிக்கும். நான்

அதைப் பாடினால் மக்கள் மிகவும் விரும்புகிறார்கள். நீங்கள் எனக்கு சில ஹிந்துஸ்தானி உருப்படிகளைச் சொல்லுங்கள்.

இவ்வளவு பேச்சுக்குப் பிறகு, ஸ்ரீநிவாச அய்யங்கார் அரசவையில் உத்தியோகத்திற்குச் செல்ல வேண்டும் என்றார்.10 மணிக்கு மேல் நேரம் கிடைக்கும். அப்போது உங்களிடம் வந்து என்ன விஷயம் வேண்டும் சொல்கிறேன்.நான் மிகவும் நல்லது என்றேன். அவர் இங்கே என்னென்ன மேளங்கள் பிரசாரத்தில் இருக்கின்றன, மற்றும் ஜனரஞ்சகமாக இருக்கின்றன என்றும் சொன்னார். அவர் சொல்வதன் படி, மகாவைத்யநாதரின் புத்தகத்தில் நான் குறித்துக் கொண்டேன். ஸ்ரீ அய்யங்கார் 11 மணிக்கு வந்தார், மீண்டும் பேச்சு தொடர்ந்தது - நடுநடுவில் குரலில் பாடிக் காட்டி விளக்கவும் செய்தார் மற்றும் நான் கேட்ட கேள்விகளுக்கு நடைமுறை ரீதியாக தகவலும் தந்தார். அது இவ்வாறு தொடர்ந்தது :

கே: நீங்கள் லக்ஷண கீதம் என்ற சில உருப்படிகளைப் பாடுகிறீர்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன், அதை எனக்குக் கிடைக்குமா?

ப: ஆம். என்னிடம் அவை கையெழுத்துப் பிரதியில் தெலுங்கு லிபியில் உள்ளன. அதன் நகல்களை உங்களுக்குத் தருகிறேன். அதை நீங்கள் பிரசுரித்தாலும் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. லக்ஷணகீதம் நிறைய இருக்கின்றன - ஏன் ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. நான் இந்த லக்ஷணங்கள் நிறைந்த பாடல்களை யார் செய்தார்கள் என்று சொல்ல முடியாது, ஏனெனில் அவை ஓலைச் சுவடியில் எழுத்து வடிவத்தில் மட்டும் தான் இருக்கின்றன. அதைச் செய்தவர் பெயர் விவரம் எல்லாம் எழுதப் படவில்லை. என் கருத்துப் படி இந்த கீதங்கள் மேளகரத்தாவின் சம காலத்தினதாக இருக்கும். எந்த சமயத்தில் மேளகர்த்தா மற்றும் அதன் ஜன்ய ராகங்கள் நிர்ணயம் ஆனதோ, அதே சமயத்தில் அதன் நியமங்களை சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது, அதனால் லக்ஷண கீதங்களை எழுதி இருப்பார்கள் என்று எண்ணுகிறேன். சில இந்த லக்ஷண கீதங்களை கோவிந்த தீக்ஷிதர் செய்தார் என்கிறார். ஆனால் இதை நான் ஒத்துக் கொள்வதில்லை, ஏனென்றால் அவர் இதற்கும் முன்னர் இருந்திருப்பார். கோவிந்த தீக்ஷிதர் சஞ்சாரி கீதம் எழுதி இருக்கிறார். இந்த சஞ்சாரி கீதத்தில், இடம் காலம் விருப்பம், மாற்றம் இதற்கேற்ப, ஆரோஹண அவரோஹணத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மாற்றங்கள் நல்லது, மற்றும் மக்களுக்குப் பிடித்தும் இருக்கின்றன.

கே: உங்கள் பகுதியில் "பல்லவி" என்படைப் பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கிறேன். இந்த பல்லவியைப் பற்றி நீங்கள் ஏதேனும் சொல்ல முடியுமா?

ப: அது மிகவும் எளிமையானது. சுருக்கமாகச் சொல்லப் போனால் உங்கள் பக்கம் த்ருவபதம் மற்றும் கியாலில் ஸ்தாயி எப்படியோ அப்படி இங்கே பல்லவி. பல்லவியில் ராகத்தின் ஸ்வரூபம் வார்த்தைகளோடு (பாடலின் வார்த்தைகளோடு) மற்றும் ஆலாபனை மற்றும் ஸ்வரங்களால் தெளிவாகக் காட்டப் படுகின்றன. ஆலாபனையில் பல்லவி மட்டும் பாடப்படுகிறது, ஆனால் அதில் வார்த்தைகள் இல்லை. பாடலின் முதலில் பல்லவி, அதற்குப்

பிறகு அனுபல்லவி மற்றும் பிறகு சரணம் என்ற முறை இருக்கிறது. இந்த முறை உங்கள் பக்கத்திலும் இருக்கிறது. அதன் எழுதப்பட்ட நியமம் என்று என்னால் எதுவும் காட்ட முடியாது. ஆனால் பல்லவியில் தார ஸப்தகத்தின் ஸ்வரங்கள் உபயோகிக்கப் படுவதில்லை, மேலும் அதன் விஸ்தாரம் மந்தர மற்றும் மத்திய ஸ்தாயியில் மட்டும் செய்யப்படுகிறது. அனுபல்லவியில் முக்கியமாக தார ஸப்தகத்தின் ஸ்வரங்கள் தான் இருக்கின்றன. சரணத்தில் மூன்று ஸ்தாயிகளின் ஸ்வரங்கள் வந்தாலும் தப்பில்லை. ஆலாபனையில் இது மூன்றும் கலந்து வரும். ராகத்தின் விஸ்தாரம் மேற்சொன்ன விதிகளின் படி தான், ஆனால் "அ-காரமாக"ச் செய்கின்றனர். மத்ய லயத்தில் தானம் முதலியவை பாடும் போது ஆதாரமாக, "அனந்த" போன்ற பதங்களை உபயோகிக்கிறார்கள்.

கே: உங்கள் பக்கத்தில் பாட்டில் என்னென்ன உருப்படிகள் பாடுகிறார்கள்?

ப: கீதம், பிரபந்தம், ஸ்வரஜதி, கீர்த்தனம், பதம், ஜாவளி. பிரபந்தங்கள் பாடுதல் இங்கே மிகவும் குறைந்த அளவில் இருக்கிறது. அவற்றில் "ஜாதிப் பாடல்" நிறைந்திருக்கிறது. கீர்த்தனத்தில், அழகான வார்த்தைகளுடன் அர்த்தப் பூர்வமான வார்த்தைகளாக அமைந்திருக்கின்றன. பிரபந்தம், ஸ்வரஜாதி முதலியவற்றில் ஸ்வரங்களின் பெயர், மிருதங்கத்தின் சொல் மற்றும் வார்த்தைகள் இருக்கின்றன. உங்கள் பக்கத்தில் எவ்வாறு "சதுரங்" இருக்கிறதோ அதே போல் இதை வைத்துக் கொண்டால் தவறொன்றுமில்லை. கீதத்தில் "கபதம" என்ற குழப்பங்கள் இருக்காது. இந்த பாடல்கள், வெறும் பாட்டின் அழகைக் காட்ட மற்றும் பாடகரின் சாதுர்யத்தை வெளிப்படுத்த இருக்கிறது, இது எளிதில் புரியும். இதே போல உங்கள் பக்கத்தில், "ஸர்கம்" முதலியவையும் எங்கள் பத்ததியின்படி இருக்கிறது.

கே: ராகாங்கம் பாஷாங்கம் , கிரியாங்கம் உபாங்கம் இவற்றை விளக்க முடியுமா?

ப: இந்த பதங்களை நான் இவ்வாறு புரிந்துக் கொண்டிருக்கிறேன்.

1. பாஷாங்கம் என்றால் எந்த ராகம் சாஸ்திரிய அடிப்படையில் அதிகம் இல்லாமல் இருப்பது. ஆனால் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வழிகளை தனக்குள் எடுத்துக் கொண்டுள்ளதோ, உதாரணமாக சௌராஷ்ட்ர ராகம். இந்த ராகம் எந்த சாஸ்திரிய ராகத்தின் அருகில் இருக்கிறதோ அதன் பாஷாங்கமாகக் கொள்ளப்படும். இது போன்ற ராகங்கள், முக்கால்வாசி, அந்தந்த பிரதேசத்தின் பெயரைக் கொண்டிருக்கும்.

2. ராகாங்கம்

   அதாவது சுத்த சாஸ்திரிய ராகம். எது சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஆரோஹண-அவரோஹணத்தின் படி பாடப்படுகிறதோ அது. இந்த ராகங்கள் முதல் தரமானதாக ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

3. க்ரியாங்கம்

அதாவது சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நியமங்களை வைத்துக் கொண்டு, (அதிலும் அவரோஹணத்தில்) சில வர்ஜ்ய ஸ்வரங்களின் பிரயோகங்களின், பிரமாணங்கள், சிற்சில, வித்தியாசங்கள், ஜனரஞ்சகத்திற்காகச் செய்யப்படுகிறது. உண்மையைச் சொல்லப்போனால், இது ராகத்தை மாற்றுவது. உங்கள் ஹிந்துஸ்தானி ராகத்தில், எவ்வாறு, ராகங்களில் முஸ்லிம்கள் சாதுர்யத்தைக் காட்டுகிறார்களோ, அதை அங்கே மக்கள் அதிகம் விரும்புகிறார்கள் என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். நான் அவ்வாறு செய்வது தவறு என்று நினைப்பதில்லை. எல்லா சங்கீதமும் ஆனந்தத்தை கொடுப்பதற்குத் தான், அவ்வாறு செய்வதால் சமூகத்திற்கு அதிக ஆனந்தம் கிடைத்தால், இவ்வாறு எந்த சாஸ்திரிய ராகத்தின் அடிப்படையில் நாம் இவ்வாறு செய்வதால், அதை கிரியாங்க ராகம் என்று சொல்கிறோம் என்றால் சரியாக இருக்கும். உதாரணத்திற்காக, எங்கள் "ஸாரங்க்" ராகம் சாஸ்திர ரீதியாக, "ஸ ரி க ம ப த நீ சா (பிரதி மத்யமம்) இந்த தாட்டில் அமைந்திருக்கிறது. இதில் ஆரோஹணம் ஸம்பூர்ணம். ஆனால், அவரோஹணத்தில் அல்பமாக சுத்த மத்யமமும் வரும். அது மக்களுக்கு இனிமையாகவும் இருக்கிறது.

[4.] உபாங்கம் - இங்கேயும் கிரியாங்கத்தைப் போல ராகத்தை மாற்ற வேண்டும். ஆனால் வித்தியாசம் என்னவென்றால், கிரியாங்கத்தில், சுத்த ஸ்வரூபத்தை வைத்துக் கொண்டு, புதிய ஸ்வரத்தை நுழைக்க வேண்டும். உபாங்கத்தில் சரியான ஸ்வரத்தை வர்ஜ்யப்படுத்தி , வெறும் அழகுக்காக, வர்ஜித்த ஸ்வரத்தைக் காட்டலாம். உதாரணமாக, பைரவி (நம் பக்கத்து) இந்த ராகத்தில் சுத்த தைவதம், சரியான ஸ்வரமாகக் கொண்டாலும், சிலர் அந்த ஸ்தானத்தில், சதுஸ்ருதிக தைவதம் (தீவ்ர த) வைத்துப் பாடுகிறார்கள்.

கே: மஹாவைத்யநாதரின் புத்தகமான "மேளராகமாலிகா" வை நீங்கள் பார்த்திருப்பீர்கள் இல்லையா?

ப: ஆம். அதை நான் பார்த்திருக்கிறேன். அவரும் மிகவும் நல்ல சாஸ்திரக்காரர் மற்றும் நடைமுறை இசைக் கலைஞர். அவர் "ஆனைய்யாகாரி" யின் சிஷ்யர். எங்கள் குரு அவருடைய கரானாவைச் சேர்ந்தவர். மஹாவைத்யநாதர் இப்போது தான் ஐந்து-பத்து, வருடத்திற்கு முன் அமரரானார். அவரை நானும் கேட்டிருக்கிறேன். அவருக்குக் குரல் மிகவும் நன்றாக இருக்கும். அதனால் அவருக்கு மிகவும் புகழ் கிடைத்தது. அவரும் திருவாடியில் இருந்தார்.

கே: அவருடைய புத்தகத்தில் (புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு) எந்தெந்த விஷயத்தைப் பற்றி எவ்வாறெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது என்று எனக்குச் சொல்ல முடியுமா?

ப: ஆம். (புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு) முதலில் ஒவ்வொரு மேளகர்த்தாவை எடுத்திக் கொண்டு ஒவ்வொன்றிலும் ஒரு சிறு பாடலைத் தயார் செய்திருக்கிறார். அதில் முதல் பகுதியில் ராகத்தின் பெயர் இருக்கிறது. அதற்குப் பிறகு, அதில் "ஸ்வரம்" வைக்கப் பட்டுள்ளது. ஆனாலும் அதில் ராகத்தின் நியமங்களைச் சொல்லாமலும் அதில் வரும்

ஸ்வரங்களைச் சொல்லாமலும் பாட முடியாது, அதனால் பிறகு ஒரு அட்டவணை வடிவமாக, நோடெஷனோடு அதே பாடல் எழுதப் பட்டிருக்கிறது. பிறகு வெவ்வேறு விதமான பாடல்கள் நோடேஷனுடன் கொடுக்கப்பட்டுள்ளது. தாளம் ஆதிதாளம் மற்றும் அதற்கேற்ப எழுதப்பட்ட பாடலை அமைத்து எழுதி இருக்கிறார்கள்.

கே: உங்கள் பகுதியில் கமகம் எவ்வளவு மற்றும் அவை எவ்வாறு? அதற்கு சிறிது உதாரணம் கொடுக்க முடியுமா?

ப: ஆம். எங்கள் கமகங்கள் பத்து வகை. அவை இவ்வாறு - 1. ஆரோஹ 2. அவரோஹ 3. டாலூ 4. ஸ்ஃபுரிதம் 5. கம்பிதம் 6. ஆஹதம் 7. பிரத்யாஹதம் 8. ஆந்தோளம் 9. த்ரிபுச்சம் 10. மூர்ச்சனா. இதில் ஆரோஹ அவரோஹ தெளிவாகப் புரிந்து விடக் கூடியது.

இதில் ஆரோஹ அவரோஹ தெளிவாகப் புரிந்து விடக் கூடியது. டாலு - "ஸ ப - ஸ் - க" - இவ்வாறு செல்லும் போது, அதைப் பாடுவார்கள். (பல்லக்குத் தூக்குபவர்கள் எப்படிப் கூவுகிறார்களோ அப்படி) அதில் மீண்டைப் போல இழுத்துக் கொண்டு போக மாட்டார்கள் (பாடிக் காட்டினார்) ஸ்ஃபுரிதம் - இதில் இரண்டு ஸ்வரங்களை மட்டும் ஆரோஹண கிராமத்தில் பாடுவார்கள். கம்பிதம் - ஒரு ஒரு ஸ்வரத்தையும் ஆட்டி ஆட்டிப் பாடுதல். இவ்வாறு மொத்தம் 10 கமகங்கள் உள்ளன.

குறிப்பு: ஜகன்னாத பந்தின் புத்தகத்தில் எவ்வாறு கொடுக்கப்பட்டிருந்ததோ அதையே தான் இவரும் சொன்னார். ஆனால் இந்த கமகங்களின் தகவல் சுப்பராம தீக்ஷிதரின் புத்தகத்தில் நன்றாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதை அவரே நன்றாக விளக்கி விடுவார்.

கே: தானம் மற்றும் அலங்காரத்திற்கிடையே நீங்கள் என்ன வித்தியாசத்தை ஒத்துக் கொள்கிறீர்கள்?

ப: தானம் வெறும் "ஆ ஆ ஆ" என்று இவ்வாறு இஷ்டப்படி பாடுவார்கள். அலங்காரத்தில் ஸ்வரங்கள் குறித்த நியமத்தில் கட்டுப்பட்டு இருக்கும், மேலும் அவற்றை வெவ்வேறு பெயர்களோடு உச்சரிக்க வேண்டும். எங்கள் பக்கத்தில் 35 தாளங்களில் வெவ்வேறு ஸ்வராலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன - அதைத் தான் நாங்கள் பாடுகிறோம்.

கே: லகு மேரு, குரு மேரு முதலியவை சொல்லப்பட்டிருக்கிறது., அதன் விவரத்தைச் சொல்ல முடியுமா?

ப: நான் சொல்ல முடியும் ஆனால் புத்தகம் இங்கே இல்லை. அதில் பெரிய கடினமான விஷயம் ஒன்றுமில்லை. பிரஸ்தாரத்தில், ஒவ்வொன்றிலும், எவ்வளவு வகை இருக்கின்றன என்று ஓரிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பிரஸ்தாரம் செய்வது உங்களுக்குத் தெரிந்தது தான். அதனால் இந்த மேருவின் எண்களைப் பார்த்தால் உடனே தெளிவடைந்து விடும். அது வெறும் எண்ணிக்கைக்காகத் தான். கண்ட மேருவின் படம் மற்றும் அதன் உபயோகத்தை நீங்கள் பார்த்துத் தான் இருக்கிறீர்கள். அதே போல் இதைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். ஆனாலும் நீங்கள் மும்பை சென்ற பின் எனக்கு

எழுதினால் நான் இதை ஆங்கிலத்தில் எழுது அனுப்பித் தருகிறேன். இதோடு பேச்சு வார்த்தை முடிந்தது.

ஸ்ரீ அய்யங்கார் என்னிடம் இரண்டு புத்தகங்களை சுவடியில் எழுதி இருந்ததைக் காட்டினார். அவை 1. ராக தாள சூடாமணி 2. சங்கீத ஸார ஸங்க்ரஹம். இவை நன்றாகத் தெளிவாக எழுதப்பட்டிருந்தன. இந்த புத்தகங்கள் சமஸ்கிருத மொழியில் இருந்ததால், அதன் நகல்களை நான் நாகரி லிபியில் எழுதித்தருமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன். மேலும் அய்யங்காரிடம் தாள சம்பந்தமாக மற்றும் மூர்ச்சனை பிரஸ்தாரம் பற்றியும் சிறு சிறு புத்தகங்கள் இருக்கின்றன. அதன் நகல்களையும் அவர் கொடுப்பதாகச் சொன்னார். மொத்தத்தில் ஸ்ரீ அய்யங்கார் ஒரு நல்ல சுபாவமுள்ள மனிதராக இருந்தார். அவர் உதவி செய்யத் தயாராக இருந்தார். திறந்த குரலில் பாடிக் காட்டாவிட்டாலும், திறந்த மனத்தோடு பேசினார். சொன்னபடி அவர் நகலெடுத்து அனுப்பினால் மிகவும் உபகாரமாக இருக்கும். நகல்கள் எப்படி இருக்கின்றன என்பதை அவை நேரில் கையில் வந்து அதைப் படித்த பிறகு தான் புரியும். மற்ற இடங்களில் இருக்கும் பாடகர்களை விட ஸ்ரீனிவாச அய்யங்கார் புத்திசாலியாக இருந்தார். அவருடைய ஸ்வரஞானம் நன்றாக இருந்தது, இங்கே இருக்கும் கண்ணோட்டத்தின் படி, தொண்டையும் நன்றாக இருந்தது. அவரிடம் அவரைத் தவிர இங்கே யார் இருக்கிறார்கள் என்று கேட்டதற்கு, அவர் சுப்பராம தீக்ஷிதர், அவரைத் தவிர திருக்கோடி ராமகிருஷ்ணய்யா மற்றும் திருவம்ஶல்லு நரசிம்மய்யங்கார் என்றார். இவ்விரண்டு பேரும் கும்பகோணத்தில் இருக்கிறார்களாம். ஆனால் அவர்கள் பாடுவதில் தேர்ந்தவர்கள் என்று சொல்ல வேண்டும். மாயாவரத்தில் வீணை வைத்யநாத அய்யர் என்ற கிருஹஸ்தரும் பெயர் பெற்றவர். அவர் சாஸ்திரமும் அறிந்தவர் என்கிறார்கள்.

எனக்கு ராமநாதபுரத்தில் தங்க அதிக நேரம் இல்லாததால், வெள்ளிக்கிழமை (15-12-1904) மதியம் ஒரு மணி வண்டியில் கிளம்பினேன். இங்கேயுள்ள சங்கீத வித்வான்கள் சமஸ்கிருத கிரந்தங்களை சிறிது கூடப் படித்ததில்லை. இவர்களின் மேளகர்த்தாவின் அடிப்படையில் பல சமஸ்கிருத கிரந்தங்கள் இருக்கின்றன, ஆனால் அவற்றைப் பற்றியும் பொதுவான அறிவில் கிடைப்பதில்லை. அந்த புத்தகங்களை வைத்திருப்பவர்களுக்கு சமஸ்கிருத மொழி தெரியாததால், அதனை உபயோகிக்க முடிவதில்லை. சங்கீதத்துக்கு இப்படி ஒரு நிலை இங்கே ஏற்பட்டிருக்கிறது. இங்கே வெறும் மேற்கத்திய க்ரோமேட்டிக் ஸ்கேல் பிரசாரத்தில் உள்ளது, மற்றும் அதில் ராகங்களை வெவ்வேறு ஆரோஹ-அவரோஹணங்களை அமைத்திருக்கிறார்கள். அதனால் பொதுவாகப் பார்த்தால், ஹிந்துஸ்தானி சங்கீதம் எப்படி சாஸ்திரத்தோடு சம்பந்தம் இருப்பது போன்ற மாயை மற்றும் குழப்பங்கள் இருக்கிறதோ அது இங்கே இல்லை. வாதி சம்வாதி போன்றவை இங்கே கொஞ்சம் கூட இல்லை என்றாலும், தாளத்தின் விஷயங்கள் அதிகம் இருந்தாலும், நல்ல மிருதங்க வாத்தியக்காரர்களும் கூட மத்ய மற்றும் த்ருத லயத்தில், வாசிக்கும் சாதகம் இருக்கிறது. நான் ஒன்றிரண்டு இடங்களில் விளம்ப காலத்தில் சௌதாலில் அமைந்த ஒன்றிரண்டு த்ருவபதம் பாடி, அதற்கு வாசிக்கச் சொன்னேன். அப்போது வாசிப்பவரின் கை மிகவும் சாதாரணமாக இருந்தது. நம் பக்கத்தில் எப்படி தபலா

வாசிப்பவர்கள், எப்படி வேகமான லயத்தில் விதவிதமாக வாசிப்பார்களோ அப்படி, இங்கே மிருதங்கத்தில் வாசிக்கிறார்கள். ஆனால் இங்கே மக்கள் அதிகம் உழைக்கிறார்கள் என்று சொல்லத் தான் வேண்டும். ராக ஆலாபனை மட்டும் செய்பவர்கள், நிறைய பேர் இருக்கிறார்கள். ஸ்வரம் போடும் போது, இவர்களின் ஒரு கம்பித ஸ்வரத்தை உச்சரிக்கும் விதி எல்லா முதல்நிலைப் பாடகர்களுக்கும் தெரிந்திருக்கிறது. அவர்களிடம் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் கலையழகு அதிகம் இருக்கிறது என்று சொன்னால் பொதுவாக அவர்களுக்குக் கோபம் வருகிறது.

இவர்களுக்கு ஆரோஹண அவரோஹணத்தை மனத்தில் கொண்டு, ஜாக்கிரதையாக ஆட்டி ஆட்டி வேகமாகப் பாடுவதில் தான் அதிக சாமர்த்தியம் இருப்பதாகத் தோன்றுகிறது. இவர்களுக்கு இன்னும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் அழகு எங்கே, ஏன் என்பது புரிவதில்லை. ஹிந்துஸ்தானி பாடகர்கள், ஸ்வரத்தின் "கபதப" என்ற ஸ்வரங்கள் குறைவாக, ஆனாலும் பாட்டில் அதிகமாகக் காட்டுகிறார்கள். அதனால் இவர்கள் அதன் பெருமையை மறந்து விடுகின்றனர்.

ராமநாதபுரம் ராஜ்மஹால் வித்வான் ஸ்ரீனிவாச அய்யங்காரிடம் பெற்றுக் கொள்ள வேண்டிய தகவல்கள்:

1. நீங்கள் ரத்னாகரத்தையோ அதன் பகுதியோ படித்திருக்கிறீர்களா அல்லது புரிந்துக் கொண்டிருக்கிறீர்களா?

2. நீங்கள் ஹிந்து சங்கீதத்தைப் பற்றி வேறு ஏதாவது சமஸ்கிருத கிரந்தத்தை மூலத்தில் படித்திருக்கிறீர்களா? ஆம் என்றால் அது எது?

3. உங்கள் ஸம்ப்ரதாயம் எது? உங்கள் குரு யார்? மேலும் படித்த புத்தகங்களில் ஆதாரமான கிரந்தம் எது?

4. நீங்கள் ஏதேனும் தெலுங்கு அல்லது தமிழ் கிரந்தத்தைச் சார்ந்திருக்கிறீர்களா? எது?

5. நீங்கள் இது குறித்து, எந்த சமஸ்கிருத மற்றும் தெலுங்கு கிரந்தங்களைச் சேகரித்து வைத்திருக்கிறீர்கள்?

6. இங்கே இந்த பிரெஸிடென்ஸியில், எந்த சிறந்த சாஸ்திரீயமான சங்கீதக்காரர் உயிரோடு இருக்கிறார்?அவர்களைப் பற்றிய உங்கள் அனுபவம் மற்றும் கருத்து என்ன?

7. தீக்ஷிதரால் பிரசுரிக்கப்பட்ட, "சங்கீத ஸம்ப்ரதாய பிரதர்சினி" படித்திருக்கிறீர்களா? அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

8. தியாகய்யா மற்றும் தீக்ஷிதரின் கிருதிகளில் அவ்வவற்றின் முக்கிய விசேஷம் என்ன?

9. இந்த பகுதியில், மிகவும் பழமையான கிரந்தம் என்று எதைக் கருதுகிறார்கள்? அதாவது அதாவது 72 மேளகர்த்தாவுக்கும் ஆதாரமாக இருப்பது.

10. கர்நாடக சங்கீதத்தின் ஆதார கிரந்தமாகக் கருதப்படும சதுர்தண்டிபிரகாசிகையை, நீங்கள் படித்திருக்கிறீர்களா அல்லது அதைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா?

11. இப்போது நவீனமாக வந்த க்ரோமேடிக் ஸ்கேல் எப்படி கர்நாடக பத்ததிக்கு ஆதாரமாக அமைந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

12. உங்கள் கருத்துப்படி, நம் சங்கீதத்தின், சுத்த ஸ்வர ஸப்தகம் எது? நீங்கள் உங்கள் சுத்த ஸ்வர ஸப்தகத்திலிருந்து, வந்த மேளத்தை அதன் (ரத்னாகரத்தின் சுத்த ஸ்வர ஸப்தகத்தில்) எப்படி அமைப்பீர்கள்?

13. நீங்கள் ஹிந்துஸ்தானி பாடகர்கள் - வாத்தியக்காரர்களைக் கேட்டிருக்கிறீர்களா? ஆம் என்றால் அந்த பத்ததியில் என்ன தவறு இருப்பதாகத் தெரிந்தது? எது பாராட்டக் கூடியது அல்லது பிடித்தது?

14. லக்ஷண கீதம் என்றால் என்ன? அவற்றை எல்லாம் எனக்குக் கொடுக்க முடியுமா? சமஸ்கிருதத்தில் இதை யார் செய்தார்கள்? அதன் உபயோகத்தை விளக்க முடியுமா?

15.பல்லவி, அனுபல்லவி மற்றும் சரணத்தின் சரியான நியமம் என்ன? அவை ஏதேனும் சமஸ்கிருத கிரந்தத்தின் அடிப்படையில் அமைந்திருக்கின்றனவா? இதை எங்கள் ஸ்தாயி, ஆபோக் முதலியவற்றுடன் ஒப்பிடுங்கள்.

16. ஆலாபனை பாடுவதன் நியமங்கள் என்ன? அவற்றை நீங்கள் எந்த கிரந்தத்திலிருந்து எடுத்திருக்கிறீர்கள்?

17. இந்த பிரதேசத்தில், பாடப்படும் எல்லா பாடல் படிவங்களின் பெயரையும் சொல்லுங்கள். சுருக்கமாக, அவற்றின் அமைப்பின் ரகசியத்தை விளக்குங்கள். அதற்குச் சமமான ஹிந்துஸ்தானி பாடல் படிவங்களையும் சொல்லுங்கள்.

18. ராகாங்கம், பாஷாங்கம், கிரியாங்கம், உபாங்கம் ராகங்கள் என்பன யாவை? இதனைத் தெளிவாக விளக்கவும்

19. மஹாவைத்யநாதரின் "மேள ராக மாலிகா" விலிருந்து சில விளக்கங்களைப் படியுங்கள் (நான் அதைக் கொடுக்கிறேன்)

20. இங்கே எத்தனை கமகங்களை ஏற்றுக் கொள்கிறார்கள்? அதன் விளக்கம் மற்றும் ஆதாரம், அதன் பிரயோக ரீதியான உதாரணங்களைச் சொல்லுங்கள்.

21. நீங்கள் சமஸ்கிருத கிரந்தங்களின் ஏதாவது அலங்காரத்தைப் படித்துப் பாட முடியுமா? இதை "தான"மாகவும் கமகமாகவும் மீண்டும் பாடுங்கள்.

22. 35-இல் எந்த தாளம் மக்கள் மத்தியில் அதிக லோகப்ரியமாக இல்லை?

23. இந்த பிரதேசத்தில் தாளபிரஸ்தாரம் சாதாரணமாக, எல்லோருக்கும் தெரிந்திருக்கிறதா, மற்றும் அதன் நடைமுறை உபயோகத்தில் இருக்கிறதா?

24. ஸ்வரப்பிரஸ்தாரத்தின் அவசியம் என்ன? இதை எந்த கிரந்தம் விளக்குகிறது?

25. தாளமேருவின் அக்ஷரம் மற்றும் எண்ணிக்கையை விளக்குங்கள். தாளத்தின் 10 பிராணங்களில் மார்க்கம், யதி, க்ரியா ஆகியவற்றை உதாரணத்துடன் விளக்குங்கள்

27. [26]. 35 தாளங்கள் அனைத்தின் மிருதங்கச் சொற்கள் கொடுக்கப்பட்டு, சமஸ்கிருத ஸ்லோகங்களும் காணப்படும் ஏதேனும் புத்தகத்தை நீங்கள் படித்திருக்கிறீர்களா?

28. [27] தேசீதாளங்கள் என்ற தலைப்பில் 108 அல்லது 120 தாளங்கள் இருக்கின்றன என்று கேள்விப்படுகிறோம். இங்கேயுள்ள சங்கீதக் காரர்களுக்கு இவை எல்லாம் தெரியுமா, அவற்றை எல்லாம் பாடுவார்களா?

29. [28] எனக்கு ராகங்களின் ஆரோஹண அவரோஹணம் காணப்படும் சில தெலுங்கு புத்தகங்கள் கிடைத்தன. [ராகத்தில்] இவ்வளவு தான் இருக்கிறதா? இல்லையென்றால் அதைப் பாடுவதற்கு வேறு என்னென்ன அவசியம்?

30. உதாத்தம் , அனுதாத்தம், ஸ்வரிதம் ஆகியவற்றை விளக்குங்கள், மற்றும் நம் ஸ்வரங்களோடு இவற்றை உபயோகியுங்கள்.நீங்கள் மூல 7 ஸ்வரங்கள் எப்படி நிர்ணயிக்கப்பட்டன என்பதை விளக்க முடியுமா?

31. இங்கே எந்த மேளம் மிகவும் அதிகமாக பிரசாரத்தில் உள்ளது?

32. நீங்கள் மூர்ச்சனை, மற்றும் கிராமத்தை எப்படிப் புரிந்துக் கொண்டிருக்கிறீர்கள்?

33. சமம், விஷமம், அதீதம், அநாகதம் ஆகியவற்றை நீங்கள் எப்படிப் புரிந்துக் கொண்டிருக்கிறீர்கள்?

விநாயக அல்லது கணேச தாளம்

गगगा ललपागश्च ललपन्तु समन्वितं ।

सर्व विघ्नोपशांत्यर्थ भवेत्तालो विनायकः ॥

34. நிருத்யம் ஒரு சாஸ்திரமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறதா? இதற்காக ஏதேனும் புத்தகம் படிக்கப்படுகிறதா?

35. சங்கீதத்தில் பாடல்களை அமைப்பதில் ஸாஹித்யத்தின் முக்கியத்துவம் என்ன?

யதி

கே: யதியைப் பற்றிச் சொல்வீர்களா?

ப: ஆம்.

8 | | 8 - பி பீ லி கா யதி
8 | o u - கோபுச்ச
8 u | o 3 - விஷம
| | | | - ஸம

இவ்வாறு காகிதத்தில் எழுதி என்னிடம் கொடுத்தார். ஸ்ரீனிவாச ஐயங்காரின் யதி பற்றிய விளக்கம்:

ஸ்ரீனிவாச அய்யங்கார், யதி என்றால் இதில் தாளங்களின் சாதாரணமான அமைப்பு எவ்வாறு இருக்கிறது என்று காட்டுவது. பிபீலிகா யதியில் முதலில் பெரிய பகுதி, நடுவில் சிறிய பகுதி, பிறகு பெரிய பகுதி இருக்கும். இவ்வாறே எந்த தாளத்தில் முதல் ஸ்தானத்தில் குரு, நடுவில் லகு, அல்லது த்ருதம், இவற்றைப் போட்டு, பிறகு குருவை வைத்தால், இந்த அமைப்பை [தாளத்தை] பிபீலிகா யதி என்று சொல்கிறார்கள். இதில் ஒன்றும் பெரிய சங்கீத ரகசியம் இல்லை. சங்கீதம் அறிந்த கவிஞரின் பறக்கும் கற்பனை மட்டுமே. வெறும் தாளத்தின் பார்க்கப்படும் ரூபத்தை வெளிப்படுத்தும். பாடல்களில், முதலில் தீர்க்க அக்ஷரங்களை வைப்பதன் அர்த்தம் என்னவென்றால், அக்ஷரங்களில் பெரிய இடைவெளி வைக்க வேண்டும் என்பது. நடுவில் சிறிய பாகத்தின் அர்த்தம் என்னவென்றால் கொஞ்சம் விரைவாகச் சொல்லும் [பாடும்] பகுதி இங்கே வரும் , மீண்டும் கடைசியில் பெரிய பாகம் வரும்.

கோபுச்ச யதி - மாட்டின் வாலைப் போன்று ஒரு தாளத்தின் போக்கில் அமைப்பு. அதாவது முதலில் பருத்து, பிறகு மெது மெதுவாகக் குறைந்துக் கொண்டு வருவது

ஸம - எல்லா அங்கமும் ஒரே போல

விஷம - கலந்து வருதல் அதாவது லகு, குரு, த்ருதம், லகு முதலிய முதலியவை. மார்க்க சங்கீதத்தில் சித்ர, தக்ஷிண , வார்த்திக, முதலியவை சொல்லப்பட்டிருக்கிறது. அக்ஷரங்களின் காலத்தை எண்ணிக்கை மற்றும் அந்த அக்ஷரங்களை எவ்வாறெல்லாம் எடுக்க வேண்டும் என்ற விஷயத்தைப் பற்றிய விவரம் இதில் இருக்கிறது. நாம் ஏதாவதொன்றைப் பாடும்போதோ வாசிக்கும் போதோ, ஏதாவதொரு வகையில் மார்க்கம் அல்லது யதி போன்ற எல்லாப் பிராணங்களும் வரத்தான் செய்கின்றன. அது இல்லாமல்

பாடுவதென்பது முடியாது. வித்வான்கள் இந்த வெவ்வேறு அமைப்புக்களை அவற்றின் விசேஷமான பெயர்களால் அடையாளம் கண்டு கொள்வதற்காக, மீண்டும் மீண்டும் அவ்வாறு அமைப்புக்களை ஏற்படுத்தும் நோக்கத்தோடு இந்தச் சொற்களை உபயோகித்திருக்கிறார்கள். என்னிடம் 35 தாளங்களில் இவ்வாறு எல்லா அலங்காரத்தையும் எழுதப்பட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் நகலை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் மும்பை சென்றடைந்த பின் எனக்கு எழுதுங்கள். நீங்கள் என்னவெல்லாம் கேட்கிறீர்களோ அதையெல்லாம் நாகரி லிபியில் எழுதித் தருகிறேன். அலங்காரம் முதலியவற்றால் பாட்டில் வேறுபாடுகள் தோன்றுகின்றன, மற்றும் ஸ்வர ஞானம் ஏற்படுகிறது. ஒரு முறை ஸ்வர ஞானம் நன்றாக வந்து விட்டால், பிறகு அலங்காரங்களின் தேவை அதிகம் இருப்பதில்லை. அந்த மனிதன் தான் கற்பனையினால் புதிய நல்ல அலங்காரங்களைச் செய்துக் கொள்ள முடியும். பாடகர்களுக்கு கேட்பவர்களுக்கு என்ன பிடிக்கும் என்று நன்றாகத் தெரிந்திருக்கிறது, மீண்டும் மீண்டும் சாதகத்தினால் முதலில் அலங்காரத்தை தயார் செய்துக் கொள்வதால் ஸ்வர ஞானம் நன்றாக வரும், என்பது சாதாரணமாகப் புரிந்துக் கொள்ளக் கூடிய விஷயம். அலங்காரத்தை மனனம் செய்து வைத்துக் கொள்வதால், நடுநடுவே அதை உபயோகித்துக் கொண்டிருக்கலாம். அவையே ஸ்வரம் போடும்போது பிரயோஜனப்படுகிறது.

கே: உங்கள் பகுதியில் 35 தாளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.இந்த எல்லா தாளங்களும் பிரசாரத்தில் இருக்கின்றனவா?

ப: நன்றாகப் பாடுபவர்களுக்கு இந்த தாளங்கள் தெரியும். ஆனால் பிரசாரத்தில் எல்லா தாளங்களும் இல்லை. முக்கியமாக பிரசாரத்தில் இருக்கும் தாளங்கள் என்றால் 1. சதுஸ்ர திரிபுட 2. சதுஸ்ர ரூபகம் 3. மிஸ்ர ஜாதி ஜம்ப 4. கண்ட ஜாதி அட தாளம் 5. சதுரஸ்ர ஏக தாளம் இவை மட்டுமே.

கே: உங்கள் பகுதியில் சமத்தை என்ன சொல்கிறார்கள்? மேலும் அது எந்த விரலில் வரும்?

ப: அதை "பதகர்ப்பம்" என்கிறார்கள், மற்றபடி அது உங்களுடையதைப் போலவே தான்

கே: உங்கள் பக்கத்தில் தாள பிரஸ்தாரத்திற்கு அதிக முக்கியத்துவம் இருக்கிறது. இந்த பிரஸ்தாரத்தை உபயோகித்து பெரும்பாபாலான பாடகர்கள் தாளத்தின் வெவ்வேறு வகைகளைச் செய்கின்றனரா? அந்த பிரஸ்தாரத்தைப் பற்றிய விஷயம் எல்லாருக்கும் சாதாரணமாகத் தெரிந்து இருக்கிறதா?

ப: எல்லா பாடகர்களாலும் இதைச் செய்ய முடியாது. இதைச் செய்வது கடினம். கொஞ்சம் நிறைய எண்கள் இருக்கின்றன அதனால் பெயர் பெற்றவர்களால் மட்டும் இதைச் செய்ய முடியும். பிரஸ்தாரத்தைப் பற்றிய அறிவு மிகக் குறைந்தவர்களுக்கே இருக்கிறது.

கே: புத்தகங்களில் 108 அல்லது 120 தாளங்கள் காணப்படுகின்றன. இவை எல்லாம் பாட்டுக்கான தாளங்கள் மட்டுமே என்று நினைக்கிறீர்களா?

ப: இல்லை. அவை எல்லோருக்கும் தெரிந்தும் இருப்பதில்லை, மேலும் இத்தனை [தாளங்களைப்] பாடவும் புடியாது. அவற்றில் சிற்சில வெறும் புத்தத்தோடு நிற்கின்றன. சில வெறும் மிருதங்கத்தில் வித்தியாசங்களைக் காட்டக் கூடியவை. இவ்வாறு சில நீண்ட, சிறிய மற்றும் கடினமான தாளங்களில் சிலர் தங்கள் சந்தோஷத்திற்காக, உருப்படிகளை அமைக்கிறார்கள். உதாரணமாக, ஸிம்ஹனந்தனம் பெரிய நீண்ட மற்றும் சமத்காரமான அங்கங்களுடன் கூடிய தாளம். அதில் எனக்கு ஒரு தில்லானா தெரியும் (பாடிக் காட்டுகிறார்), இவ்வாறான தாளங்களில் அமைந்த உருப்படிகளை சிலர் பாடவும் செய்கிறார்கள். ஆனால் இதனால் இவை சகஜமாக பாட்டில் உபயோகப் படும் தாளம் என்று சொல்லி விட முடியாது. இவ்வாறு நீண்ட மற்றும் சிறிய தாளத்தில் ஸ்வரம் போடுவது என்பது நடக்காது. ஒன்று மாற்றி ஒன்று வெறும் சொற்களைச் சொல்ல வேண்டியிருக்கும். அதை விட்டு ஸ்வரம் கொஞ்சம் வெளியில் போய் விட்டால், நமக்கு இடத்திற்கு வர கடினமாகி விடும். சில தாளங்கள் பூஜை அர்ச்சனை செய்வதற்காக , மற்றும் மிருதங்கத்தில் வாசிப்பதற்காக இருக்கின்றன.

கே: 35 தாளங்களின் வடிவங்களில் ஜாதியால் ஏற்படுத்தி, 108 தாளங்களை சுதந்திரமான வடிவத்தில் எழுதி இருப்பதன் தத்துவ ரீதியான ரகசியம் என்ன?

ப: 35 தாளங்களில் லகுவின் வெவ்வேறு எண்ணிக்கைகளைக் கொண்டு அவை செய்யப் பட்டிருக்கிறது. அதாவது லகு சதுஸ்ர ஜாதி என்றால் நாலு அக்ஷரங்கள் எதில் இருக்கிறதோ அந்த தாளம். இந்த நியமங்கள்108 தாளங்களுக்கு இல்லை. அவை தனி.

கே: இந்த தாளங்களின் மிருதங்கத்திற்கான சொற்கள் இருக்கும் ஏதேனும் ஒரு புத்தகத்தின் பெயரைச் சொல்ல முடியுமா?

ப: எனக்கு நினைவில்லை, ஆனால் தெலுங்கு புத்தகமொன்றில் எழுதி இருக்கிறது. அதன் நகலைக் கொடுக்கிறேன். சில தாளங்கள் திசைகளின் பூஜைக்காக, - கும்பம். சமதாளம், விஷம பூர்ணசந்திர முதலியவை. இவை பாட்டில் அதிகம் வராது.

கே: உதாத்தம், அனுதாத்தம் போன்ற சொற்களை நீங்கள் அறிவீர்களா?

ப: இல்லை,அவை வைதிக விஷயம்.

கே: நீங்கள் மூல ஸப்தகம் எது என்பதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

ப: இல்லை

கே: ஸ்ருதி மூர்ச்சனை கிராமம் முதலியவற்றைப் புரிந்துக் கொண்டிருக்கிறீர்களா?

ப: என்னிடம் மூர்ச்சனா பிரஸ்தாரம் என்ற பெயரில், தெலுங்கு லிபியில் எழுதப்பட்டுள்ள ஒரு சிறு புத்தகம் இருக்கிறது.நான் அதன் நகலை அனுப்புகிறேன். நீங்கள் சந்தோஷமாக அதை எல்லாம் பிரசுரித்துக் கொள்ளலாம். இந்த விஷயங்கள் எல்லாம் இப்போது வெளியில் வரத் தான் வேண்டும். இதற்குள் நேரமானதால், ஸ்ரீ அய்யங்கார் திரும்பிப் போவதற்காக எழுந்து நின்றார். இன்னொரு அரை நாள் தங்குங்கள். நான் உங்களிடமிருந்து சில ஹிந்துஸ்தானி ராகங்களின் ஸ்வரூபங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்ல ஆரம்பித்தார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, என்னால் ஒரு நாள் கூட தங்க முடியாமல் போனது. அதனால் இல்லை என்று சொல்ல வேண்டியதாயிற்று.

ஸ்ரீநிவாஸ அய்யங்கார் சில கிடைத்தற்கரிய கையெழுத்து பிரதியில், சில கிரந்தங்கள் இருக்கின்றன. அவை:

1. ராக தாள சூடாமணி 2. சங்கீத ஸார ஸங்க்ரஹம் 3. மூர்ச்சனா பிரஸ்தாரம் 4. 33 தாளங்களின் ஸ்லோகங்கள் மற்றும் சொற்கள் 5. தாள பிரஸ்தாரம் மற்றும் ஸ்வர பிரஸ்தாரம் 6. மூர்ச்சனா பிரஸ்தாரம்

ஸ்ரீ அய்யங்கார், இந்த கிரந்தங்களை தேவநாகரியில் பிரதி எழுத வைத்து அனுப்பித் தருகிறேன் என்றார். இந்த கிரந்தங்கள் எல்லாம் தெலுங்கு லிபியில் எழுதப் பட்டிருக்கின்றன, நான் இவற்றை மிகவும் முயற்சி செய்து திரட்டி இருக்கிறேன். என் மனத்தில், உங்களுக்கு இந்த விஷயத்தில் அதிக ஈடுபாடு இருப்பதால், உங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று தோன்றுகிறது. நீங்கள் மும்பை சென்றவுடன் எனக்கு எழுதினால், நான் இதன் நகல்களை உங்களுக்குத் தருவேன். இதனால் அந்த கிரந்தங்கள் ஏதாவதொரு முறையில் உபயோகப்படும். மக்களுக்கும் அது உபயோகப்படும். நான் அவருக்கு மிகவும் நன்றியுள்ளவனாவேன் என்றேன் மற்றும் மும்பை சென்றவுடன் எழுத ஒத்துக் கொண்டேன். நகல் செய்வதற்காக பணம் கொடுக்க ஆரம்பித்தேன் ஆனால் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் தன்னிடம் ஒரே ஒரு ஓலைச்சுவடி - அதாவது சங்கீத சூடாமணியைக் கொண்டு வந்திருந்தார். அதிலிருந்து அவர் சில ஸ்லோகங்கள் மேளகர்த்தாவைப் பற்றி சமஸ்கிருதத்தில் படித்துக் காட்டினார். நான் தஞ்சாவூரில் ஜகன்னாத கோஸ்வாமியின் புத்தகத்தில், சில ஸ்லோகங்களை எடுத்துக் கொண்டேனே, அதைப் போல இருந்தன இந்த ஸ்லோகங்கள். புத்தகம் கிடைத்த பின், இதில் வேறு என்னென்ன இருக்கிறது என்று பார்த்துக் கொள்கிறேன்.

இங்கே தேவநாகரி லிபி மிகவும் குறைவாக புழக்கத்தில் இருக்கிறது என்பது தெளிவாகிறது. எல்லா சமஸ்கிருத கிரந்தங்களும் தெலுங்கு லிபியில் இருந்தன. சென்னை பகுதியில் முக்கிய மொழி தமிழ், ஆனாலும் சங்கீத கிரந்தங்கள் தெலுங்கில் ஏன் இருக்கின்றன என்று நான் பலரிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் தெலுங்கு பாஷை சங்கீதத்திற்கு மிகவும் உசிதமானது என்று சொன்னார்கள். அது உச்சரிப்பதற்கு மிகவும் மிருதுவாகவும் இனிமையாகவும் இருக்கிறது. தமிழைப் போல இல்லை. இரண்டாவது காரணம், இங்கே சங்கீதம் முதலில் தெலுங்கு நாட்டிலிருந்து வந்தது. தெலுங்கு பகுதி

என்றால் வடக்குப் பகுதி என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் ராஜதானி விஜயநகரமாக இருந்தது. அங்கே சங்கீத வளர்ச்சியும் அதிகம் இருந்தது. விஜயநகரத்தின் மஹாராஜா இப்போது தான் அமரரானார், அவர் சங்கீதத்தின் பேரில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்ற அளவுக்கு அந்நாட்டின் புகழ் இருந்தது. இங்கே இன்றைய சங்கீத கிரந்தக்காரர்கள் கூட, தம் சங்கீத புத்தகங்களை தெலுங்கு மொழியில் எழுதுகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஸ்ரீ தீக்ஷிதரின் "சங்கீத பிரதர்சினி" என்ற பெரிய புத்தகமும் தெலுங்கு மொழியில் தான் இருக்கிறது. எனக்கு இப்போது தெலுங்கு மொழி தெரியாது, அதனால் அது சங்கீதத்திற்கு எவ்வளவு ஏற்றது இல்லை என்று சொல்வது சாத்தியம் இல்லை. ஆனால் இப்போது தான் மொழியைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்திருக்கிறேன், எப்படி இருக்கிறது என்று பிறகு எழுதுவேன். ஆனாலும் பெரிய பெரிய வித்வான்களும் இக்கருத்தை வைத்திருப்பதால், அந்த மொழி இனிமையாகத் தான் இருக்க வேண்டும் - இதைச் சந்தேகிக்க அவசியம் இல்லை.

ஸ்ரீ ஸ்ரீனிவாச ராவ் [அய்யங்கார்?] சுபாவத்தில் இனிமையானாவராக இருந்தார், மேலும் நான் சொன்னவுடன் அதிகம் பிகு செய்யாமல் நகலைக் கொடுக்கத் தயாராக இருந்தார் என்பதும் சிந்திக்க வேண்டிய விஷயம். அதனால் இதில் உண்மையும் இருக்கக் கூடும். அவருக்கு மும்பையிலிருந்து எழுதினால் என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். நகல்கள் கிடைத்தால் நல்ல உபயோகமாக இருக்கும், இல்லையென்றால் அவர் மேல் நமக்கென்ன அதிகாரம் இருக்கிறது?

தெளிவான சிந்தனை 8 மணி காலை, மதுரை சத்திரம் திரும்பும் யாத்திரை

ஒரு தமாஷான விஷயம் என்னவென்றால் சிந்து நாட்டில் சாதாரணமாகப் பாடப்படும் கா◌ி (உருப்படிக்களை) நாம் பாடினால் இவர்களுக்கு அது கர்நாடக ராகம் போலத் தோன்றுகிறது. இவ்வாறே, குஜராத்தின் "மாண்ட் ராகம்" ஸ்வரங்களை கம்பிதமாக அசைத்துச் சொன்னால் இதுவும் அவர்களது ராகமாகத் தோன்றிவிடுகிறது. நம் பக்கத்தில் பாமர மக்கள் ஜோராக லாவணி பாடும் போது கூட, அதிலும் கம்பித ஸ்வரம் பாடினால், தம்முடையது என்ற பாவனையில் இவர்கள் ஒத்துக் கொள்ளத் தயாராகி விடுகிறார்கள். இதனால் என்ன தெரிகிறது என்றால் ஹிந்துஸ்தானி பாட்டின் வழி என்பது ஒரு திருத்தமான, எதிர்காலத்தை நோக்கிய கலையழகுடன் கூடிய வழி என்பதே. அதிலும் சில விஷயங்களை நீக்கி விட வேண்டி இருக்கிறது. ஆனால் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், என் மனம் அந்தப் பாடலை உயர்ந்ததாகக் கருதுகிறது. அங்கேயுள்ள பாடகர்கள், ஸாதகம் செய்து எந்த அளவுக்குத் தங்கள் குரல்களைத் தயார் படுத்திக் கொள்கிறார்கள், அந்த அளவு வரை இங்கே யாருமே வந்ததை பார்க்க முடியாது என்பதை யாராலும் சொல்ல முடியும். விளம்ப காலத்தில் பாடுவது என்பது இங்கே யாருக்கும் முடிவதில்லை, மேலும் அதை விரும்புவதும் மிகக் குறைவு. அவர்களுக்கு ஸ்வரத்தை அசைக்கும் பழக்கம் இருப்பதால், மற்றும் விரல்களில் லகு, குருவின் அக்ஷரங்களை எண்ணிக் கொண்டே பாடும் பழக்கம்

இருப்பதால் மிகவும் சங்கடமான நிலைக்கு ஆளாகின்றனர். விளம்ப காலத்தில் பாடுவதென்பது அதிக சாமர்த்தியம் கொண்டதாக, அதிக திறமை வேண்டிய மற்றும் கடினமானதும் கூட. "த்ருத மத்ய விளம்ப பத" என்ற க்ரமத்தின் படி தான் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் பொருந்தும். சாதாரண மக்களுக்கு த்ருதமாகப் பாடுவது சீக்கிரம் பிடிக்கிறது என்பது அனுபவ ரீதியாக நாம் அறிந்தது. நான் ஆய்யங்காரிடம் அதி விளம்ப காலத்தில் ஏதாவது பாடச் சொன்னேன், ஆனாலும் அவர் முயற்சி செய்தார், அப்போதும் மாண்ட் ராகம் பாடும் பொது, குஜராத்தி மக்கள் எப்படி ஸ்வரங்களை அசைக்கிறார்களோ அப்படி அவரும் அசைத்துக் கொண்டிருந்தார். அவருக்கு அப்படிப் பாடிப் பழக்கம் இல்லை. அவருக்கோ அல்லது இங்கேயுள்ளவர்களுக்கோ அப்படிப் பாடுவது சாத்தியமில்லை என்று நான் சொல்ல வரவில்லை. அவர்களின் பழக்கத்தை வைத்து அவ்வாறு பாட முடிவதில்லை. ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாமல், இது சுவையாக இல்லை, என்று மாற்றிச் சொல்வது அவர்களின் அஞானம் என்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஹிந்துஸ்தானி கமகம், மீண்ட் மற்றும் விளம்ப காலத்தில் பாடுவது நிச்சயம் ஏற்றுக் கொள்ளத் தக்கது. இவர்கள் ஹிந்துஸ்தானி இசையை நிச்சயம் கேட்க வேண்டும்,அப்போது அது தானாக வரும். கர்நாடக சங்கீதம் குறைந்த காலத்தில் வந்து விடக் கூடியது. எனக்கு இங்கேயுள்ள ஸ்வர ஞானத்தைக் கண்டு மிகவும் திருப்தியாக இருக்கிறது. நான் இங்கேயுள்ள பாட்டை நிந்திக்கிறேன் என்பதல்ல, எனக்கு அதுவும் பிடித்திருக்கிறது, ஆனால் ஹிந்துஸ்தானி சங்கீதத்தை நான் வாழ்க்கை முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கிறேன், அதனால் அதைப் பற்றி அதிகம் தெரியும். இந்த காரணத்தால் என் மனம், சுபாவமாக நடுநிலைமையோடு இருக்க முடியாது. இங்கேயுள்ளவர்கள் ஸ்வரம் பாடும் போது (மூர்ச்சனையில் ரி மற்றும் தா) ஸ்வரம் பாட அவர்கள் விரும்பும் வழு, என் கருத்தின் படி, கொஞ்சம் நன்றாக இல்லாமல் சில சமயம் மூழ்கடித்து விடுகிறது. ஹிந்துஸ்தானி மீண்ட் , கமகம் மற்றும் ஸ்வரம் முயற்சி இல்லாமல் சாதாரணமாகப் பாட முடியாது, அதில் கலையம்சம் அதிகம் இருக்கிறது. இங்கே ஸ்வரத்தில் மற்றும் ராகத்தில் லயத்தை நாடுவது அதிகம். ஆனால் நான் இது என் கருத்தை திடப்படுத்தும் ஒரு விஷயம் என்று சொல்வேன். இந்த சங்கீதத்தின் உதவியால் முன்னர் இருந்த எல்லா சங்கீதத்தின் சிற்சில விஷயங்கள் தென்படுகின்றன என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்டது.

இருக்கட்டும். என்னுடைய இந்த கருத்து தெற்கில் பரம்பரையாகத் தேர்ந்து பாடுபவர்களுக்கு நன்றாக இருக்காது என்பதை ஒத்துக் கொள்கிறேன், மேலும் என் கருத்துக்களால் அவர்களுக்குக் கோபம் வரும் என்பதும் உண்மை. ஆனால் ஹிந்துஸ்தானி ராகத்தின் ஒரு சிறு பகுதியை எடுத்துக் கொண்டு, ரீ தா வை சமத்காரமாக அவர்கள் காட்டினால், அப்போது அவர்களுக்கே சிரிப்பு வந்தது, இது நிச்சயம் தெற்கின் ஒரு விசித்திரமான உண்மை தான் ஆனால், இவ்வளவு செய்வதால் உங்கள் ஒட்டு மொத்த ராகமும் சுத்தமாகி விடாது என்று பிறகு சொல்ல ஆரம்பித்தார்கள். நான் உங்களுக்கு சங்கீதத்திலுள்ள விசேஷத்தை மட்டும் காட்டுகிறேன், சுத்தத் தன்மையை அல்ல என்றேன். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து. இரண்டாவது ஒரு விசேஷம் மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும், என்னவென்றால் இங்கே "ஆரதி" அதாவது தமிழ் மொழியில்

ஹரிகீர்த்தனை செய்பவர்கள், மராட்டி சொற்களை உபயோகிக்கிறார்கள், அது கேட்பவர்களுக்குப் புரிகிறது. கேட்பவர்கள் மனத்தில், பாகவதர் ஒரு பெரிய சமஸ்கிருத ஸ்லோகத்திற்கு "ஆரதியில்" அர்த்தம் சொல்கிறார் என்பது போல எண்ணுகிறார்கள். இவர்கள் மராட்டி ஸ்லோகத்தை மராட்டி வழியிலேயே சொல்ல முயற்சிக்கிறார்கள், மேலும் அவர்கள் அறியாமலேயே, மக்களுக்கு இரண்டு சங்கீதமும் ஒன்று சேர்க்கும் முயற்சி ஏற்பட்டு விடுகிறது.

ஒரு ஹரிதாஸர் என்னிடம் சில ஸ்வயம்வரங்களின் கதைகளை அங்கிருந்து அனுப்புமாறு வேண்டினார். இங்கே கீர்த்தன் மக்களுக்கு மிகவும் பிடிக்கிறது. அதில் ஹிந்துஸ்தானி வழி இல்லாவிடில் மக்கள் சந்தோஷம் அடைவதில்லை. அவற்றை உபயோகிப்பவர்கள் பெரிதும் மதிக்கப்படுகிறார்கள். இதிலிருந்து இங்கே ஹிந்துஸ்தானி சங்கீதம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்று அறிகிறோம். அது அதிகம் பிடித்துப் போனால், அதை அதிகம் கலையுணர்ச்சியுள்ளதாக ஏற்றுக் கொள்வதில் பெரிய தவறொன்றும் கிடையாது. அங்கிருந்து மக்களின் வரவு இங்கே ஏற்பட ஏற்பட்ட, இந்த முன்னேற்றத்தின் பரிணாம வளர்ச்சியும் இங்கேயுள்ள சங்கீதத்தின் மேல் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

சுப்பராம தீக்ஷிதரின் தரிசனம் 27 திசம்பர் 1904, எட்டையாபுரம்

தெற்கின் பல நகரங்களின் நான் கேள்விப்பட்டதென்னவென்றால், இந்த விஷயத்தின் எல்லா முக்கிய விஷயங்களும் எனக்கு எட்டையாபுரத்தின் தீக்ஷிதரிடம் கிடைக்கும். இந்தப் பகுதி முழுவதிலும் அவரைப் போன்ற பெரிய வித்வான் யாரும் உயிரோடு இல்லை. அவர் சங்கீத சம்பிரதாய பிரதர்சினி என்ற பெயரில் ஒரு பெரிய புத்தகம் எழுதி இருக்கிறார். அவருக்கு எல்லா சமஸ்கிருத கிரந்தமும் தெரியும், மேலும் அவை எல்லாம் அவரிடம் உள்ளன. அவர் தீக்ஷித ஸம்ப்ரதாயத்தின் மிகப் பெரிய அபிமானி. அவர் மிகவும் வயதானவர், அவருக்கு அரசரின் ஆதரவு இருப்பதால் சுகமாக இருக்கிறார். நீங்கள் அவரை நிச்சயம் சென்று சந்தியுங்கள், அப்போது தான் உங்களது இந்த சங்கீத யாத்திரை வெற்றி அடைந்தது எனலாம், என்பது. இதனால் நான், இந்த ஊருக்கு விசேஷமாகச் சென்று தீக்ஷிதரைப் பார்ப்பேன், மற்றும் அவருடன் இவ்விஷயமாக கொஞ்சம் பேசுவேன். இந்தத் தீர்மானத்திற்கேற்ப, இன்றைய தேதி 27 டிசம்பர் அன்று இந்த ஊரில் ரயில்வண்டியில் சென்று, அங்கிருந்து, எட்டையாபுரம் வரை 8 மைல், வரை குதிரை வண்டி வைத்துக் கொண்டு வந்தேன். இந்த கிராமத்தின் திவான் ஸாஹிப்பிற்காக, அவருக்கு சிபாரிசுக் கடிதம், எனக்கு தஞ்சாவூர் மற்றும் மதுரையில் கிடைத்திருந்தது, அதை நான் முன் தினமே அனுப்பியிருந்தேன். கிராமத்திற்கு வந்தவுடன், நேராக திவான் ஸாஹிப்பின் பங்களாவிற்கு வந்தேன். அவருடன் அறிமுகம் முதலியவை, ஆன பின் அரசு பயணியர் விடுதியில்

எங்களைத் தங்க வைத்தார். வீடு அழகாக இருந்தது. ஆனால் அங்கே போனபின், அவர் வீட்டு வராந்தாவில் உட்கார்ந்து கொண்டிருந்தேன், அவர் ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதரை.அங்கேயே கூப்பிட்டனுப்பி, அவரிடம், மும்பையிலிருந்து சங்கீதத்தைக் தேடி ஒரு விருந்தாளி வரப் போகிறாரே, அவர் தான் இவர்,அவருக்கு என்ன தகவல் வேண்டுமோ அதை நீங்கள் கொடுங்கள் என்றார். அப்போது மணி 5 ஆகிவிட்டது, நானும் யாத்திரையின் சிரமத்தால் களைத்திருந்தேன் அதனால் இரவு 8 மணிக்குப் பேசலாம் என்று தீர்மானித்து நாங்கள் கெஸ்ட் ஹவுஸ் போய் விட்டோம்.

ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் வயதில் முதிர்ந்தவராக இருந்தார், அவரது உருவம் முதிர்ந்த ஆனால் தேஜசுடன் கூடிய ஒரு ரிஷியைப் போல இருந்தது. அவர் வாழ்நாள் முழுவதும் சங்கீதத்திற்காக மிகவும் உழைத்திருக்கிறார் என்று தெரிந்தது. தஞ்சாவூரின் நாகோஜீ ராவ், மற்றும் இங்கேயுள்ள தீக்ஷிதருக்குமிடையில் பரஸ்பரம், நல்ல மரியாதை இருந்தது. ஒவ்வொரு ஊரிலும் யாரையெல்லாம் சந்தித்தேனோ, அவர்கள் எல்லோரும் தீக்ஷிதர் மீது மிகவும் மதிப்பு வைத்திருந்தார்கள், அவரும் அப்படித் தான் இருந்தார் என்று சொல்லலாம். அவர் தமக்கு ஒரு உத்தம சிஷ்யரின் வடிவில் ஸ்ரீ சின்னஸ்வாமி முதலியார் கிடைத்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அவர் மறைந்து விட்டார், அதன் காரணத்தால் இந்த கலைக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டது, என்று சொல்வதில் எந்தவித தயக்கமும் இல்லை. ஸ்ரீ முதலியாருக்கு இந்த விஷயத்தின் மேல் உண்மையான ஈடுபாடு இருந்தது. அவர் மிகவும் புத்திசாலி மற்றும் வித்வான் ஆக இருந்த காரணத்தால், அவர் இந்த கலைக்காக, பெருஞ்செலவு செய்து இதைப் பரப்ப ஆரம்பித்தார். ஆனால் இப்போது அது எல்லாம் நின்று போய் விட்டது என்று சொன்னார். நானும் ஸ்ரீ முதலியாரின் புத்தகத்தின் நகலை என் நண்பர் காட்டினார், மற்றும் அவரது வித்வத்தின் மேல் எனக்கும் மதிப்பு வந்தது என்றேன். அவரது புத்தகத்தின் ஒரு நகலைப் பெற நான் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறேன் என்றேன். ஆனால் எனக்கு இது வரை கிடைக்கவில்லை. இரவு சட சடவென்று மழை பெய்ய ஆரம்பித்தது, அந்த காரணத்தால் ஸ்ரீ தீக்ஷிதர் வரவில்லை. அதனால் அந்த தினம் வீணானது என்று சொல்ல வேண்டும். இருக்கட்டும்

திங்கட்கிழமை

தேதி 28 டிசம்பர் 1904

காலை மழை வந்துக் கொண்டு தான் இருந்தது, அதனால் இதன் காரணமாக, ஸ்ரீ தீக்ஷிதர் எங்கே வராமல் போய் விடுவாரோ என்று நானே அவர் வீட்டுக்குச் சென்றேன். காலை சுமார் 8 மணி இருந்தது, தீக்ஷிதர் வீட்டில் தனியாக அமர்ந்திருந்தார். நமஸ்காரம், வரவு, நல்வரவு எல்லாம் ஆனது. இதற்குப் பிறகு அவர் மருமகன் வெங்கடராவ், (இங்கே ஸ்கூலில் ஆசிரியராக இருப்பவர்) வரவழைக்கப்பட்டார். ஸ்ரீ தீக்ஷிதருக்கு மராட்டி மற்றும் ஆங்கிலம் சுத்தமாகத் தெரியாது. அதனால் வெங்கடராவ் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பாளரின் வேலையைச் செய்தார். எங்கள் உரையாடல் இவ்வாறு நடந்தது:

நான்: ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களே! இந்தப் பகுதி மொத்தத்திலும் ஒவ்வொருவரின் வாயிலும் உங்கள் பெயர் இருக்கிறது. உங்கள் புகழை இதற்கு மேலும் வேறு அதிகமாக புகழ்ச்சி செய்ய அவசியமில்லை என்பதால் இதைச் சொல்கிறேன். நான் சங்கீதத்தின் மாணவன், மற்றும் மும்பையிலிருந்து வந்து இந்த ஊரில் இது குறித்த விஷயங்களைத் திரட்ட யாத்திரை செய்து கொண்டிருக்கிறேன்.

தீக்ஷிதர்: எனக்குத் தெரிந்ததெல்லாம் உங்களது தான்.

நான்: உங்கள் நேரத்தைத் தேவைக்கு அதிகமாக வீணடிக்கக் கூடாது என்று தீர்மானித்து, உங்களிடம் கேள்வி கேட்டு அதற்கு பதிலைச் சுருக்கமாகக் கேட்கலாம் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அதற்கேற்ப, நேற்றிரவு காகிதத்தில் எழுதி வைத்த சில கேள்விகளைக் கொண்டு வந்திருக்கிறேன்.

தீக்ஷிதர்: இந்த விஷயம் மிகவும் விசாலமானது. இது குறித்து தகவல் தர பல நாட்கள் ஆகும். நீங்கள் சில நாட்கள் இங்கே இருந்தால் நான் உங்களுக்கு எல்லா விஷயங்களையும் சொல்வேன்.

நான்: எனக்கு இங்கே எப்படி நிறைய நாட்கள் இருக்க முடியும்? நான் காங்க்ரெஸ் சமயத்தில் வீட்டிற்குப் போகத் தீர்மானித்திருக்கிறேன். பிறகு கோர்ட்டிற்குச் செல்ல வேண்டியிருக்கும். ஆனால் நான் புதிதாகப் பயிலும் மாணவனாக இல்லாத காரணத்தால் கொஞ்ச காலத்தில் நிறைய கற்றுக் கொள்வேன் என்பது மட்டும் சொல்கிறேன். அதனால், அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.

தீக்ஷிதர்: சரி. கேளுங்கள்

கே: தீக்ஷிதர் குடும்பத்தின் வரலாற்று மற்றும் தேதிகள் எங்கே கிடைக்கும்? கோவிந்த தீக்ஷிதர், வேங்கடமகி தீக்ஷிதர் முதலியவர்கள் உங்களுக்கு என்ன ஆக வேண்டும், மற்றும் எப்படி என்பதை அறிந்துக் கொள்ள ஆவலாக இருக்கிறேன்.

தீக்ஷிதர்: இது குறித்த முழு விவரமும் நான் "சங்கீத ஸம்ப்ரதாய பிரதர்சினி" என்ற பெயரில் எழுதிய புத்தகத்தில் சுருக்கமாக எழுதி இருக்கிறேன். (புத்தகத்தைக் கொண்டு வந்து) இது என் புத்தகத்தின் ஐந்தாவது பக்கத்தில் இருக்கிறது. இந்தப் புத்தகம் இரண்டு பாகங்களாக இருக்கிறது. அதில் முதல் பாகத்தின் ஐந்தாவது பக்கத்தில் இருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், எங்கள் முன்னோர் கோவிந்த தீக்ஷிதர், தஞ்சாவூரின் முதலமைச்சராக இருந்தார். அந்த சமயம் "நாயக்க" மன்னரின் ஆட்சி இருந்தது. கோவிந்த தீக்ஷிதரின் காலம் 1499-1530 என்று சொல்லலாம்.

(குறிப்பு - அதாவது ராஜா பான்[32] இன் காலம்)

[32] [ராஜபுத் அரசர் இவர் காலம் சுமார் 1455 AD]

வேங்கடமகி அவரது மகன். இந்த குடும்பம் சங்கீத வித்யையில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தது. வேங்கடமகி இந்த 72 மேளகர்த்தாவின் கல்பனை தன்னுடையது என்கிறார்.

கே: நாம் மேளகர்த்தாவைச் செய்தது வேங்கடமகி என்பதை ஒத்துக் கொள்கிறோம், ஆனால் அவரது தந்தை கோவிந்த தீக்ஷிதர் எந்த சங்கீதத்தைப் பாடினார்? அப்போது ஏதேனும் ராகம் இருந்ததா, மேளம் இருந்ததா அல்லது ஏதேனும் பத்ததி இருந்ததா? இருந்திருந்தால் அதைப் பற்றி வேங்கடமகி ஏதும் எழுதி இருக்கிறாரா?

ப: இந்தக் கேள்விக்கு பதில் சொல்வது கடினம். ஆனால் வேங்கடமகி தன் "சதுர்தண்டிபிரகாசிகையில்" ஒவ்வோரிடத்தில் "तल्लक्षणं तु संगीत सुधानिधौ प्रदर्श्यते" என்று சொல்கிறார். இதனால் நாம் அவர் அந்த கிரந்தத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளார் என்பதை அறியலாம் அல்லவா? (குறிப்பு - சு. நி [சுதாநிதி] ஒரு புதிய பெயராக இருக்கிறது, இந்த சொல் "கலாநிதியாக" இருக்கலாம்.வயதானதால் மறந்திருக்க சாத்தியம் இருக்கிறது)

கே: நீங்கள் "சங்கீதசுதாநிதி" என்ற இந்த கிரந்தத்தை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? அல்லது அது எங்கேயாவது கிடைக்கும் என்று
கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆம் என்றால், அதைப் பெற எல்லா முயற்சிகளும் செய்வேன்.

ப: இல்லை. அது அழிந்து விட்டது.

கே: உங்களுக்கு சமஸ்கிருதம் தெரியுமா?

ப: நன்றாகத் தெரியும் என்று சொல்ல முடியாது. எனக்கு அனுபவம் இருப்பதால் , மற்றும் ஸ்லோகங்கள் மனனம் செய்திருக்கிறேன். ஆனால் முறைப்படி சமஸ்கிருத மொழியைக் கற்றவன் என்று சொல்ல மாட்டேன்.

கே: நீங்கள் ரத்னாகரத்தைப் படித்ததுண்டா? அல்லது அதைப் புரிந்துக் கொண்டிருக்கிறீர்களா?

ப: நான் நேராகப் படிக்கவில்லை. ஆனால் அதில் விவரிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றித் தெரிந்துக் கொண்டிருக்கிறேன். என் புத்தகத்தில் ரத்னாகரத்திலிருந்து சில வாக்கியத்தின் அம்ஸங்களைக் கொடுத்திருக்கிறேன்.

கே: (க்ரோமேட்டிக் ஸ்கேலைக் குரலில் பாடி) நான் உங்கள் சங்கீத பத்ததியின் ஆதாரம் இந்த 12 ஸ்வரங்கள் என்று தான் புரிந்துக் கொண்டிருக்கிறேன். இதன் அடிப்படையில் தான் 72 மேளங்களும் அமைந்திருக்கின்றனவா? இதைத் தவிர, மேளகர்த்தாவின் ஆதார ஸ்வரூபமாக, வேறு நாதமோ அல்லது ஸ்வரமோ இருக்கிறதா?

ப: இவை தான் எங்கள் 12 ஸ்வரங்கள், இதன்படி தான் எங்கள் எல்லா மேளங்களும் அமைந்திருக்கின்றன.

கே: வேங்கடமகி தீக்ஷிதர் இதைச் செய்திருப்பாராயின், இந்த அமைப்பு மற்றும் இவர் கோவிந்த தீக்ஷிதரின் காலத்திருக்குப் பிறகு இருந்தவர் ஆனதால் மேளகர்த்தாவின் காலம் மிகவும் சமீபத்தில் வந்து விடும்.

ப: அந்தக் காலம் 1530-1562 ஆக இருக்கும்.

கே: அந்தக் காலத்திற்கு முன் சங்கீதம் எப்படி, எவ்வாறு இருந்தது என்பதைத் தெரிந்துக் கொள்ள வழி என்ன?

ப: எதுவுமில்லை. ஆனால் ரத்னாகரம் முதலிய கிரந்தங்களின் படி சங்கீதம் இருந்திருக்கக் கூடும்

கே: நீங்கள் சங்கீத வித்வான் என்ற முறையில் பிரசித்தி பெற்றவர். அதனால் உங்களுக்கு எந்த சங்கீத சம்பிரதாயத்தை ஆதாரத் தூணாக கொள்ளலாம் என்பீர்கள்?

ப: வேங்கடமகியின் சம்பிரதாயத்தை. "சதுர்தண்டிபிரகாசிகை" கிரந்தத்தில் சொல்லப்பட்ட பத்ததியை.

கே: கிரந்தகர்த்தா சதுர்தண்டிபிரகாசிகை என்ற இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட விஷயங்களை ரத்னாகரத்துடன் தொடர்பு படுத்தி ஸ்தாபித்திருக்கிறாரா? அதாவது வேங்கடமகி தன் மேளங்களைக் குறிப்பிட்ட விஷயங்களின் அடிப்படையில் அமைக்கிறேன் என்று எழுதி இருக்கிறாரா?

ப: இல்லை. இவ்வாறு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் நான் கேள்விப்பட்டது என்னவென்றால், வேங்கடமகியின் காலத்தில் 18 மேளங்கள் இருந்தன, மற்றும் அவர் அதை 18 X 4 = 72 உற்பத்தி செய்தார். என்னிடம் தெலுங்கு மொழியில் சதுர்தண்டி பிரகாசிகையின் மீது செய்யப்பட்ட உரை இருக்கிறது. அதில் இவ்வாறு தெரிகிறது.

கே: நீங்கள் இந்த 18 மேளங்கள் என்ன என்று சொல்ல முடியுமா?

இந்த கேள்வியைக் கேட்டபின் தீக்ஷிதர் சொல்லலாமா வேண்டாமா என்று யோசிப்பதில் மூழ்கியிருந்தது போலத் தெரிந்தது. சொன்னால், ஒரு பெரிய ரகசியமான விஷயம் போய் விடும். சொல்லா விட்டாலோ, ஒரு வினயமான பிளீடர், திவான் ஸாஹிபின் சிபாரிசுடன் பேச, வந்தவர், அவரிடம் சொல்ல மாட்டேன் என்றால் நன்றாக இருக்காது. அதனால் அவர் புத்தகத்தைப் பார்க்க வேண்டும். நேராக பதில் சொல்வது கடினம், உங்களுக்கு நேரம் அதிகம் இல்லை. என்று ஏதோ சாக்குபோக்கு சொல்ல ஆரம்பித்தார்.

.நான் "அய்யா தீக்ஷிதரே! நீங்கள் உங்கள் மனத்தில் என் விஷயத்தைக் குறித்து சிறிதும் சந்தேகப் பட வேண்டாம். நான் சங்கீதத்தின் உண்மையான சேவகன், உங்களிடம் கிடைத்த தகவலை உங்கள் பெயரிலேயே, பிரசித்தி செய்வேன். இதனால் உங்களுக்குப் புகழ் கூடும். என்னிடம் சுயநலம் சிறிதளவும் இல்லை. உங்களுக்கு எல்லா மேளங்களும் நினைவில் இல்லாமல் போனால் ஒன்றிரண்டைச் சொன்னாலும் போதும். நிச்சயம் சொல்லுங்கள்.

ப: இதைச் சொன்னவுடன், உள்ளே போய், கையில் எழுதப்பட்ட ஒரு காபியைக் கொண்டு வந்து, ஒரு பெயர், "காந்தாரோதீச்யவா", இன்னொன்று, "ஷட்ஜகைசிகி" என்றும் இருக்கிறது என்றார். இது போன்று 18 மேளங்கள் முதலில் இருந்தன. அவற்றைக் கொண்டு அவற்றின் உதவியால், வேங்கடமகி, தன் எழுபத்திரண்டு மேளங்களை அமைத்தார்.

இந்த பதிலைக் கேட்டவுடனே எனக்குக் கிடைத்த ஆனந்தத்தை விவரிக்க முடியாது. நான் பல நாட்களாக இதை ஆராய்ந்துக் கொண்டிருக்கிறேன் - இந்த தெற்கத்திய பத்ததி பண்டைய கிரந்தங்களோடு சம்பந்தப்படுத்த முடிந்தால், எவ்வளவு லாபகரமாக இருக்கும். தீக்ஷிதரின் பதில் பிரமாண ரீதியாக எவ்வளவு உண்மையோ இல்லையோ, ஆனால் ஆராய்ச்சியில் முன்னேற குறைந்த அளவு ஒரு திசையையாவது காட்டியது. மேலே சொல்லப்பட்ட பெயர்களைக் கேட்டவுடன், ரத்னாகரத்தின் பதினெட்டு ஜாதி (ஷாட்ஜி முதல் நந்தயந்தி) வரை சொன்னேன்.

இந்த எல்லா பெயர்களையும் கேட்டவுடனே, ஸ்ரீ தீக்ஷிதரின் முகம் பிரகாசம் அடைந்தது. அவர் என்னைப் போல ஒருவர், அவரிடம் ஒரு வருட காலம் இருந்தால், அவருடன் ரத்னாகரம் படித்தால், சில முக்கிய தகவல்களைக் கொடுத்தால், அவரது அனுபவத்தை உபயோகித்துக் கொண்டால், ஒரு பெரிய காரியம் நடந்து விடும். அவருக்கு சமஸ்கிருத மொழியறிவு நன்றாக இல்லை ஆனால் வெறும் சிந்தனையினால் நிறைய யோசித்திருக்கிறார்.

நான், "அய்யா தீக்ஷிதரே! நீங்கள் திசையைக் காட்டினால் அதை வைத்துக் கொண்டே நான் நிறைய யோசித்து விசாரம் செய்வேன். இன்று நீங்கள் எனக்கு மிகவும் ஒரு முக்கியமான ஒரு சாவியைக் கொடுத்திருக்கிறீர்கள். அது உபயோகப்பட்டால் அவசியம் அதைச் செய்வேன். இதைச் சொன்னவுடன் தீக்ஷிதர் இது மிகவும் ரகசியமான ஒரு விஷயம் மற்றும் இதை தன் உயிரைப் போலப் பாதுகாத்துக் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னார்.

கே: ரத்னாகரத்தில் 22 ஸ்ருதிகள் சொல்லப்பட்டிருகிக்கின்றன, ஆனால் அவற்றில் வெறும் 12 மட்டும் உங்கள் பக்கத்தில் உபயோகப்படுத்தப் படுகின்றன என்று தெரிகிறது. நீங்கள் படித்த அல்லது கேட்டவற்றில் மற்றவற்றின் உபயோகம் என்ன எவ்வாறு எங்கே என்று தெரிகிறதா? "சதுர்தண்டிபிரகாசிகை" யில் உங்கள் இந்த ஆதாரப் பூர்வமான, கிரந்தத்தில் இந்த விஷயம் பற்றி ஏதேனும் சொல்லப்பட்டிருக்கிறதா?

ப: இருபத்திரண்டில் வெறும் 12 ஸ்ருதி தான் எங்கள் சங்கீதத்தில் உபயோகத்திற்கு என்று கொள்ளப்படுகிறது என்பது உண்மை. மற்றவற்றை என்ன செய்வது என்பது பற்றி வேங்கடமகி எங்கேயும் சொன்ன மாதிரி எனக்குத் தெரியவில்லை.

நான்: எனக்கு உங்கள் "சதுர்தண்டிபிரகாசிகை" யின் நகலைப் பெற வேண்டும் என்ற அவா இருக்கிறது. நீங்கள் தயவு செய்து அதன் நகலை என் செலவில் தர முடியுமா? நீங்கள் உங்கள் சமஸ்கிருதம் ஸாதாரணமானது என்று சொல்கிறீர்கள். அதனால் என்னைப்

போன்றவரின் கையில் அது இருந்தால் அதை நன்றாக உபயோகிக்க முடியும் என்று தோன்றுகிறது.

என்னுடைய இந்த வேண்டுகோள் அவருக்கு முதலில் நன்றாக இருக்கவில்லை என்று தோன்றியது. அதனால் அவர், என் புத்தகத்தில் சில பகுதிகள் நஷ்டமாகி விட்டன என்று சொல்லத் தொடங்கினார். சில பக்கங்கள் கிழிந்து விட்டன. நான் அவற்றைப் படித்துக் காட்டுகிறேன். ஆனால் நகலைக் கொடுப்பதற்காக நான் மிகவும் வற்புறுத்தியதால் அவரால் ஆம் இல்லை என்று இரண்டையும் சொல்ல முடியவில்லை.

நான்: அய்யா தீக்ஷிதரே, நீங்கள் பதில் சொல்லச் சிறிது தயங்குகிறீர்கள் போல இருக்கிறது. இது குறித்து, நாம் பிறகு பேசலாம். ரத்னாகரத்தின் ராகப் பிரகரணத்தில் ராகங்கள் பத்து விதமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. அதாவது - கிராம ராகம், உபராகம், ராகம், பாஷா, விபாஷா, முதலியவை. ஆனால் உங்கள் பக்கத்தில் வெறும் ராகாங்கம், பாஷாங்கம், கிரியாங்கம் மற்றும் உபாங்கம் என்ற நான்கு சொற்களை மட்டுமே கேட்டிருக்கிறேன். ஏன் இப்படி?

தீக்ஷிதர்: வேங்கடமகி முதலில் இருந்த ஆறு வகைகள் இல்லாமல் போனதால் அவற்றை விட்டுவிட்டதாகக் கூறுகிறார்.

கே: "ராக விவேக" த்தில் ஐந்து ரீதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன (புத்தகத்தை எடுத்து அதிலிருந்து படித்து, விளக்கி) அது குறித்து உங்களால் ஏதும் சொல்ல முடியுமா?

ப: ஆச்சரியம் அடைந்தது, இந்த பெயர்களை நான் கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனால் இந்த விஷயம் கடினமானது, மற்றும் அதைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

கே: ஜாதி லக்ஷணங்கள் பதிமூன்று சொல்லப்பட்டிருக்கின்றன. (அவற்றைப் படித்து) உங்கள் வேங்கடமகி அவற்றில் எவற்றை உபயோகிக்கிறார், மற்றும் மற்றவற்றை ஏன் விட்டு விடுகிறார்?

ப: நீங்கள் இந்த விஷயத்தில் இவ்வளவு ஆழமாகச் சென்றிருக்கிறீர்கள் என்பதைப் பார்த்து எனக்கு மிகவும் ஆச்சரியமும் ஆனந்தமும் உண்டாகிறது. இவ்வாறு என்னிடம் யாருமே இதுவரை கேள்விகள் கேட்டதில்லை. எனக்கு நீங்களும் நானும் கொஞ்ச நாட்கள் சேர்ந்திருக்க வேண்டும் என்று மிகவும் ஆசையாக இருக்கிறது. நான் ஒரு வயது முதிர்ந்தவன். எனக்குத் தேவைகள் மிகக் குறைவு. உங்களுடன் வந்து என்னை இருக்க விடுங்கள். குறைந்த பட்சம் ஒரு வருஷம் இப்படிச் செய்தால், பிறகு நான் காசி யாத்திரை முடித்துக் கொண்டு மீண்டும் வீடு திரும்புவேன். ரத்னாகரத்திலிருந்து நீங்கள் படித்துச் சொன்ன அந்த ரகசியங்கள், அதில் சிலவற்றை என் குருவின் மூலமாகக் கேட்டிருக்கிறேன். சில சந்தேகங்களுக்கு நானாக பதில் தேடிக் கொண்டேன். ஆனால் இவ்வாறான மறைந்த விஷயங்களைப் பற்றி இது வரை யாரிடமும் பேசியது கூட இல்லை. ஏனென்றால், எங்கள் பகுதியில் சங்கீத வித்வான்கள் என்னுடைய எல்லா பேச்சையும் கேட்டுவிட்டு, என்னிடமே

பேச்சை மாற்றி அவர்கள் குரு இந்த எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு முதலிலேயே சொல்லி இருந்ததாகக் கூறி விடுவார்கள். உங்களுடைய ஞானத்தைப் பார்த்து எனக்கு மிகவும் சந்தோஷம் உண்டாகிறது. நீங்கள் என் அனுபவத்தை சரியான முறையில் உபயோகம் செய்வீர்கள் என்று தோன்றுகிறது. எனக்குப் பல விஷயங்கள் பரம்பரை வழியாகத் தெரியும். ஆனால் அந்த ரகசியங்களை வெளிப்படுத்த எனக்கு நல்ல யோக்யமான பாத்திரம் கிடைக்கவில்லை. நீங்கள் ரத்னாகரத்திலிருந்து தகவல் கொடுக்கிறீர்கள். அந்த புத்தக அறிவோடு அனுபவப்பூர்வமான அறிவு, என்னிடம் கிடைக்கும். எனக்குப் பணத்தினால் எந்த வித லாபமும் இல்லை. இப்போது என் தீவிர ஆசை என்னவென்றால் என் புகழ் யோக்யமான மனிதர்களின் மூலமாகப் பரவ வேண்டும் என்பது. எனக்கு வயதாகி விட்டது. நான் இப்போது நடைமுறையில் பாடுவதோ வாசிப்பதோ எப்படிச் செய்ய முடியும்? ஆனால் நான் சாஸ்திரம் பற்றி உங்களுக்குச் சொல்வது உங்களுக்கு வேறெங்கும் கிடைக்காது என்று தோன்றுகிறது. நான் உங்களை என் புதல்வனுக்குச் சமமாகக் கருதி, எல்லாவற்றையும் சொல்வேன், பிறகு நான் இந்த உடலை விட்டு விடவும் தயாராகி விடுவேன்.

இந்த வார்த்தையைக் கேட்டு எனக்கு நிஜமாகவே தொண்டை அடைத்தது. தீக்ஷிதரின் அந்த பூஜிக்கத்தக்க உருவம் அப்படியே ராவ்ஜி புவாவைப் போல - வாயில் ஒரு பல்லும் இல்லை, தலை மீது முடி எதுவும் இல்லை, உடலில் குளிர்ச்சியான மெலிதான சட்டை, காதில் குண்டலம் இவற்றைப் பார்த்து அப்படித் தோன்றியது. நட்பு, ஒன்றான அனுபவம், மற்றும் மதிப்பு இவை கலந்த ஒரு பாவம் மனத்தில் தோன்றியது. இருக்கட்டும். அவர், உங்களிடம் இருந்து ரத்னாகரத்தைக் கேட்கிறேன், மேலும் எங்கெங்கே எனக்கு என்னுடைய சொல்லவேண்டிய விஷயங்கள் தெரிந்தால் அங்கே உங்களுக்கு விளக்குகிறேன். என்னுடைய அறிவும் வளரும், நம் சந்தேகங்களுக்கு விடையும் கிடைக்கும். நாம் இருவரும் சேர்ந்து இந்த மகத்துவமான விஷயத்தைப் பற்றி ஆராயலாம்.

நான்: அய்யா தீக்ஷிதரே! உங்களைப் பற்றி என் மனதில் மிகவும் பூஜிக்கத்தக்க மற்றும் அன்பான உணர்ச்சி எழுகிறது. என்னுடன் நீங்கள் இருப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஐந்து வருடம் இருந்தாலும் எனக்குக் கவலை ஒன்றும் இல்லை. எனக்கும் இப்படி ஆகவேண்டும் என்று தான் இருக்கிறது. எனக்கும் சில சந்தேகங்கள் இருக்கின்றன, அதற்கு விடை தேடித் தான் நான் நான்கு திசைகளிலும் அலைந்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் எனக்கு சாஸ்திரம் அறிந்த விஞ்ஞானத்தின் பக்தர்கள் இப்போதும் யாரும் கிடைக்கவில்லை. உங்களைப் பார்த்தவுடன் எனக்கு பரம சந்தோஷமாயிற்று. வீட்டுக்குப் போய், நான் உங்களை அங்கே அழைத்துச் செல்வதைப் பற்றி நிச்சயம் யோசிக்கிறேன். ஒன்றிரண்டு பிரச்சனைகள் எனக்குத் தோன்றுகின்றன, அவை : 1. நீங்கள் வயதானாவர், மற்றும் உடல் நிலை நன்றாக இல்லாதவர் 2. அங்கே முற்றிலும் தனியாக 3. அங்கே சமூகம் வேறு மாதிரியானது 4. எனக்குத் தெலுங்கு மொழி தெரியாது மற்றும் உங்களுக்கு வேறு மொழி தெரியாது

தீக்ஷிதர்: நீங்கள் இந்தக் கஷ்டங்களை மனத்தில் கொள்ளாமல் என்னை அழைத்துக் கொள்ளுங்கள். நான் கொஞ்சம் முயற்சி செய்து எனக்குத் தெரிந்தவற்றைப் பிரசுரிக்க வேண்டும் என்பது எனக்குள் இப்போது இருக்கும் ஆசை. எனக்குச் சின்னஸ்வாமி முதலியார் கிடைத்தார். அவரை நான் சத்பாத்திரமாக, புத்திமானாகக் கருதி, சிலவற்றைச் சொல்ல ஆரம்பித்தேன், அதற்குள் அவர் மறைந்து விட்டார். இதனால் நான் நிராசை அடைந்தேன். ஆனால் தெய்வாதீனமாக, அவரை விட புத்திசாலியான நண்பரை சந்திக்க நேர்ந்தது என்று நினைக்கிறேன். ஸ்ரீ முதலியார் கூட இவ்வளவு ஆழமாக இதில் சென்றிருக்கவில்லை. என்னிடம் இருக்கும் கிரந்தம் எல்லாம் உங்களுடையதும் தான். என்னிடம் ஓலைச் சுவடியில் நிறைய புத்தகங்கள் இருக்கின்றன. அவை தெலுங்கில் இருக்கின்றன. அவற்றையும் நான் உங்களுக்குக் கொடுத்து விளக்குகிறேன்.

இருக்கட்டும். இவ்வாறு பரஸ்பரப் புகழ்ச்சிக்குப் பிறகு, நான் அவரை மும்பை அழைத்துச் செல்ல ஒத்துக் கொண்டேன். சங்கீத ஆராய்ச்சிக்காக சில வருடம் நான் வடக்கு நோக்கிச் செல்லலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். அப்போது இவருடைய தீர்த்த யாத்திரையும் ஆகி விடும். இவருக்கு பணத்தினால் எந்த லாபமும் இல்லை. எனக்கு ஞானம் புகட்ட வேண்டும் என்ற இந்த நல்ல புத்தி இவருக்குள் தோன்றியது இறைவனின் செயல் என்பது ஆச்சரியம் தருகிறது (பேச்சு வார்த்தை மீண்டும் தொடர்கிறது)

கே: அய்யா தீக்ஷிதரே. நீங்கள் எனக்கு அதிமுக்கியமான , மிகவும் நல்ல சிந்தையுள்ள, மற்றும் உண்மையை அறியக்கூடிய வெளிவராத ஒரு சாவி போன்றதைச் சொன்னீர்கள். நான் இவ்வளவு முயற்சிகள் எடுத்து, கிடைத்திருக்க வேண்டும் ஆனாலும் கிடைக்க வில்லை என்பதை ஒத்துக் கொள்ளத் தான் வேண்டும். இப்போது அதைப் பற்றி நான் யோசிக்கப் போகிறேன். இதனால் சரியான பரிணாமம் கிடைத்தால், நான் பாரதத்தின் சங்கீதத்திற்கு வரலாற்றுப் பூர்வமான மற்றும் ஒன்றிணைக்கக் கூடிய ஒரு பெரிய வழி கிடைத்ததென்று வைத்துக் கொள்வேன். இதன் முழுப் புகழும் உங்களைச் சாரும் என்று நான் எண்ணுகிறேன்.

தீக்ஷிதர் - அப்படி என்ன பெரிய விஷயம் நான் சொல்லி விட்டேன் என்கிறீர்கள்?

நான் - நீங்கள் வேங்கடமகி தனக்கு முன் இருந்த பூர்வபிரசித்த 18 மேளங்களிலிருந்து தான் மேளங்களைச் செய்தார் மற்றும் அந்த 18 மேளங்களின் பெயர், காந்தாரோதீச்யவா ஷட்ஜமத்யமா, ஷாட்ஜீ முதலியவை என்றீர்கள். இன்று வரை ரத்னாகரத்தைப் படித்து இந்த 18 மேளங்கள் வரை நான் புரிந்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஜாதி "மேளத்தின் ஒரு சாவி" மற்றும் அதிலிருந்து வேங்கடமகி, தன் 72-ஐ வேறு ஏதோவொரு யுக்தியால் செய்தாரா என்ற இரண்டாவது சாவி எனக்குக் கிடைக்கவில்லையே. இதற்கு மேல் தெளிவாக அந்த புத்தகத்தில் நான் பார்ப்பேன்.

தீக்ஷிதர்: நான் விநயத்தோடு சொல்கிறேன், நீங்கள் என்னை இத்தனை உச்சாணியில் ஏற்றி வைக்காதீர்கள். வேங்கடமகி தெளிவாக இவ்வாறு எங்கேயும் சொல்லவில்லை (எப்படி

மாற்றி விட்டார் விஷயத்தை). அவர் 18 இலிருந்து 72 செய்தார் என்பது நான் சொன்னது. அதன் பெயர் மற்றும் லக்ஷணங்கள் நான் கொடுத்தது தான். அதன் வர்ணனைகள் சங்கீத ரத்னாகரத்தின் ஜாதிகளைப் போல எனக்குத் தோன்றியதால், நான் அவை தான் இந்த 18 மேளங்கள் என்று தீர்மானித்தேன். இது குறித்து நான் எப்படி யோசித்தேன், அதில் எனக்கு என்னென்ன சிரமங்கள் வந்தது, ரத்னாகரத்தின் ஜாதி பிரகரணத்தின் உதவியைத் தேட நான் உங்களுக்கு என்னென்ன உதவி செய்ய முடியுமோ அதை செய்து நாம் இருவரும் ஒன்றாய் இருந்தால் அதை நான் விளக்குகிறேன், ஆனால் வேங்கடமகிக்கு இருந்த அறிவு எனக்கில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் நான் எப்போதுமே, பண்டைய, மற்றும் இன்றைய சங்கீதத்தை எப்படியாவது எங்கேயாவது ஒன்று சேர்க்க வேண்டும் என்று வாதம் செய்துக் கொண்டு தான் இருக்கிறேன். இன்று நீங்களும் இதைப் பற்றி ஆராய புறப்பட்டிருக்கிறீர்கள் என்பதைப் பார்த்ததும், எனக்கு ஏதோ ஒரு ஆப்தரைப் பார்த்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

கே: உங்களிடம் "சதுர்தண்டிபிரகாசிகை"யின் நகலை எதற்குக் கேட்கிறேன் என்பதை உங்களுக்குச் சொல்கிறேன். வேங்கடமகி தன்னுடைய மேளங்களின் வரலாற்றை எந்த சமஸ்கிருத வார்த்தைகளால் கூறிகிறார், மற்றும் அவை ரத்னாகரத்தின் எந்தப் பகுதியோடு பொருந்துகிறது. உங்களுக்கு சமஸ்கிருத மொழியறிவு சிறிதளவே இருப்பதால், சில விஷயங்கள் தெளிவாகத் தெரிந்திருக்க முடியாது. ரத்னாகரத்தில் ஜாதி கொடுக்கப்பட்டுத் தான் இருக்கிறது, ஆனால் ஒவ்வொரு ஜாதிக்கும் குறிப்பிட்ட ராகமும் ஆங்காங்கே தெரிகிறது. இதனால் நான் வேங்கடமகி தனக்கு மின் இருந்த பண்டைய 18 ராகங்களாக எதை எண்ணுகிறார், என்பதைப் பார்ப்பது மிகவும் அவசியமாகிறது.

தீக்ஷிதர்: இந்த விஷயம் சரி தான். இதை ஆராய்வதற்காக நான் பல முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதனால் தான் நாம் இருவரும் ஒன்று சேர்ந்து இதைப் பற்றி யோசிக்கலாம் என்று நினைக்கிறேன். ரத்னாகரத்தின் "ஜாதி" பற்றிய தெளிவான ஸ்வரூபத்தை நானும் புரிந்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்கள் இந்த முறை குறைந்த பட்சம் எட்டு நாட்கள் என்னுடன் இருக்க முடிந்தால், நமக்கு பரஸ்பரம் பேருதவியாக இருக்கும். நான் என் புத்தகத்தில், நான் பரம்பரை வழியாகக் கற்ற ஜாதி லக்ஷணத்தையும் அதன் உபயோகத்தையும் காட்டுவதாகத் தான் இருந்தேன். ஆனால் உங்களுக்கு அவகாசம் இல்லை என்பது துரதிர்ஷ்ட வசமானது. நீங்கள் "சதுர்தண்டிபிராகாசிகை" புத்தகத்தை நல்ல முறையில் உபயோகிப்பீர்கள் என்று இப்போது நம்பிக்கை ஏற்படுகிறது. அதனால் அதன் நகலை உங்களுக்குக் கொடுக்கிறேன். ஆனால் நீங்கள் திவான் சாஹிப்பிடம் கேட்டால், அவர் நாகரி லிபியில் எழுதித்தர யாரிடமாவது சொல்லி இந்த வேலையைச் செய்து முடிப்பார். ஆனாலும் இன்னொரு விஷயம் இந்தப் புத்தகத்தின் நகல் கிடைத்தால் மட்டும் வேலை ஆகாது. அதனுடன் வேங்கடமகியின் இன்னொரு புத்தகமான, "ராகப்பிரகரணமும்" வேண்டும். ஒரு சிறு சைகை போலத் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் , என் சங்கீத சம்பிரதாயப் புத்தகத்தில், "ராகப்பிரகரண" ப்புத்தகத்திலிருந்து நிறைய பகுதிகளின் ஸ்லோகங்களை லக்ஷணங்களுடன்

கொடுத்திருக்கிறேன், ஆனாலும் , “சதுர்தண்டி” புத்தகத்தின் பகுதிகளைப் போடவில்லை. இதை சிறிது கபட பாவம் என்றும் நீங்கள் சொல்லலாம். ஆனால் திவான் ஸாஹிப் புத்தகத்திற்காக மிகவும் அவசரப் படுத்தினார், இந்த காரணத்திற்காக அவ்வாறு செய்ய முடியவில்லை, என்பதும் ஒரு காரணம் என்று சொல்ல முடியும். இந்த விஷயத்தை என் உண்மையான நண்பர் என்பதால் சொல்கிறேன்.

நான்: எனக்குச் சதுர்தண்டிப் பிரகாசிகைப் புத்தகம் கிடைத்த பிறகு, உங்கள் புத்தகத்திலிருந்து ஸ்லோகங்களில் கொடுக்கப்பட்ட விஷயங்களைச் சேர்த்துக் கொண்டு அது எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கிறேன். ஆனால் “ராகப்பிரகரணத்தின்” ஆரம்ப அறிமுகப் பகுதிகளின் ஸ்லோகங்கள் எனக்கு வேண்டும்.

தீக்ஷிதர்: நான் அதை எழுதி அனுப்புகிறேன். “ராகப்பிரகரணத்தில்” ராகாங்கம், பாஷாங்கம், முதலியவற்றின் ஸ்லோகங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அவற்றையும் அனுப்புகிறேன். ஆனால் அவற்றைப் படித்து அவற்றை உபயோகிக்கும் சமயம், நானும் அங்கே இருக்க விரும்புகிறேன், இது என்னுடைய தீவிர ஆசை.

நான்: மிகவும் நல்லது, இறைவனின் விருப்பம் அதுவானால் அதுவும் நடக்கும். வீட்டுக்குப் போய் தெலுங்கு கற்றுக் கொள்வேன், பிறகு ஒரு மொழிபெயர்ப்பாளர் கிடைத்த பின், உங்களை அழைத்துக் கொள்கிறேன், அப்போது நீங்கள் வாருங்கள். இதற்கு இரண்டு மூன்று மாதத்தில் ஆகும்.

தீக்ஷிதர்: என் அரசர் எனக்கு அனுமதி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், நான் அப்படியே வந்து விடுகிறேன். ஏனென்றால் இது என்னுடைய மிகப் பெரிய தீவிரமான ஆசை, இவ்வாறான மகத்துவமான விஷயத்தை தெளிவுபடுத்துவது என்னுடைய கையால் அல்லது என்னுடைய உதவியால் ஆக வேண்டும்.

கே: உங்கள் புத்தகத்திலிருந்து தஞ்சாவூரின் நாகோஜீராவ் ஸ்ருதி ஸப்தக படங்களை எடுத்து எனக்குக் காட்டினார். அதில் ரத்னாகரத்தின் ச்யுத மத்யமம், மற்றும் ச்யுத ஷட்ஜம் இந்த ஸ்வரங்களின் மேல் அந்தர காகலீ எழுதப் பட்டிருக்கிறது. அதைப் பார்த்தவுடன் இதன் காரணத்தை உங்களிடம் கேட்க வேண்டும் என்று நான் குறித்து வைத்துக் கொண்டேன்.

தீக்ஷிதர்: ஆம். அது உண்மை. ஆனால் வேங்கடமகி இதைத் தெரிந்து தான் செய்திருக்கிறார் என்று தோன்றுகிறது. புழக்கத்தில் இருக்கும் சங்கீதத்தில், இவ்வாறு பிரயோகம் இருந்ததால் அவ்வாறு செய்திருக்கக் கூடும். நான் என்னுடைய புத்தகத்தில் அவருடைய ஸ்லோகத்தைக் கொடுத்திருக்கிறேன்:

च्युत मध्यम गांधार च्युत निषाद को क्रमात् अंतर काकल्यौ ..

ராமாமாத்யரின் ஸ்வர மேள கலாநிதியிலிருந்து இந்த ஸ்லோகத்தை "மகி" எடுத்துக் கொண்டிருக்கிறார்.[33]

கே: ஸ்ரீ மகி , ராமாமாத்யரின் கிரந்தமான "கலாநிதி" யை ஆதாரமாகக் கொள்கிறாரா?

ப: இல்லை. ஆங்காங்கே அதைக் கண்டனம் செய்கிறார்.

நான்: இந்த கிரந்தத்தை நான் சென்னையின் ஓரியண்டல் லைப்ரரியிலிருந்து வரவழைத்தேன், கூடிய சீக்கிரம் அது எனக்குக் கிடைக்கப் போகிறது. அது கிடைத்தால், நான் இந்த இரண்டு புத்தகங்களின் மதத்த்தின் ஒற்றுமை-வேற்றுமைகளை நிர்ணயிக்க முயற்சி செய்வேன்.

தீக்ஷிதர்: கண்டனத்தின் ஒருதாரணம், என்னவென்றால் ராமாமாத்யர் தன் காலத்திலிருந்த மொத்த, 25 மேளங்களை ஒத்துக் கொள்கிறார், அவற்றிலிருந்து எல்லா ராக-ராகினிகளை உத்பத்தி செய்கிறார். ஸ்ரீ மகி, இந்த 25-இல் 8 மேளங்கள் கொடுக்கப்பட்ட ரூபத்திலிருந்து வேறல்ல என்று காட்ட விரும்புகிறார். அவர் 18க்குள்ளேயே அடங்கும், அதனால் தான் 18-ஐ மட்டும் ஏற்றுக் கொள்கிறார் (இது மிகவும் முக்கியமான எண்ணிக்கை)

கே: சங்கீத ரத்னாகரத்தில், ஜாதி அல்லது மேளத்தின் வெவ்வேறு அம்சங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜாதிக்கும் ஏழு அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறு பல ஸ்வரங்கள் "அம்சம்" ஆகுமா? அதிலும் ஒரே ஜாதிக்கு? இதிலிருந்து என்ன புரிந்துக் கொள்வது?

தீக்ஷிதர்: அம்சத்தை ஜீவ ஸ்வரமாகக் கொண்டால், ஒரே மேளத்திற்கு நான்கு, ஒரு மேளத்திற்கு ஐந்து கூட இருப்பதை எங்கள் பக்கத்தில் ஏற்றுக் கொள்கிறோம். சில சமயம் விஸ்தாரம் செய்யும் போது ஒரு முக்கிய ஸ்வரத்தைக் கற்பனை செய்துக் கொண்டு, அதன் இடத்தில் மீண்டும் மீண்டும் நின்று வெவ்வேறு ஸ்தானங்களில் விஸ்ராந்தி கொடுப்போம், அதனால் அந்த ஸ்வரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். இவ்வாறு செய்வதற்கு [உதாரணமாக] என் புத்தகத்தில் பைரவி ராகத்தில் நீங்கள் பார்ப்பீர்கள். ரத்னாகரத்தில் மறைந்திருக்கும் ரகசியம் எனக்குத் தெரியாது (இந்த விவாதம் மிகவும் முக்கியமானது)

கே: அவர் தன் ஸ்வரங்களின் பெயர்களை எப்படி நிர்ணயித்திருக்கிறார் என்று வேங்கடமகி தன் புத்தகத்தில் எங்கேயாவது எழுதி இருக்கிறாரா? பாருங்களேன். அவருடைய சுத்த ரிஷபம் அதாவது மேற்கத்திய ஃப்ளேட் [flat] ரி ஆனது, அதே தான் எங்கள் கோமள ரி ஆகிறது. சமஸ்கிருத கிரந்தத்தில் சுத்த ரிஷபம் அதாவது உங்களுக்கு சது: ஸ்ருதிக ரிஷபம் ஆகிறது. (பாரிஜாதத்தைப் பாருங்கள்) இது ஒரு குழப்பம் ஆகி விட்டது. இதை

[33] [ஸ்வரமேள கலாநிதி [வீணாபிரகரணம் 4. 70
1906 வருடம் வெளிவந்த, ஸ்வரமேளகலாநிதி கும்பகோணம் பதிப்பில் , நாராயணஸ்வாமி ஐயரின் குறிப்பின் படி, அவருக்குக் கிடைத்த மூன்று சுவடிகளில், சுப்பராம தீக்ஷிதரிடம் இருந்த ஸ்வரமேள கலாநிதியின் சுவடியும் ஒன்று. மற்றும் அவர் மூலமாக ஆசிரியருக்கு அனுப்பித் தரப்பட்டது. மேலும் ஸ.ஸ.பி, 1904 லக்ஷண ஸங்க்ரஹம் - அந்தர காந்தார காகலி நிஷாத நிரூபணம்]

அமைப்பது-தகர்ப்பதென்பதை அவர் எப்படிச் செய்தார் என்பதைப் புரிந்துக் கொள்ள எனக்கு ஆவலாக இருக்கிறது. அல்லது இந்த பெயர்கள் முற்றிலும் புதிதாக / அல்லது அவர் வழி என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமா? (என் பேச்சு இங்கே சிறிது தெளிவற்றதாக ஆகி விட்டது)

ப: இதைப் பற்றி எதுவும் சொல்வது கடினம். என்னால் இதைச் சரி வர புரிந்துக் கொள்ள இயலவில்லை. அதனால் அதை அவர் வழி என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது. ஆனால் இதன் ஆய்வில், கண்டுபிடிப்புகளில் உங்களுக்கு ஏதேனும் கிடைத்தால், எனக்கும் சொல்லுங்கள். எனக்கு அது உபயோகப்படும்.

கே: கிராமங்களைப் பற்றி ஸ்ரீ மகி என்ன சொல்கிறார்?

ப: அவர் அப்போது ஷட்ஜ கிராமம் மட்டுமே இருப்பதாக எழுதுகிறார். இந்த விஷயத்தை என் புத்தகத்தில் பக்கம் 12 இல் பார்க்கலாம்

கே: நீங்கள் "ராகவிபோதம்" படித்திருக்கிறீர்களா?

ப: படித்ததில்லை. அது நல்ல கிரந்தம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அது குறித்து நீங்கள் என் கேட்கிறீர்கள்?

ப: அதில் மேளங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 23 பிரசித்தமாக இருப்பதால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ மகியின் இந்த கிரந்தம் சமீபத்திய காலத்தது. அதில் 170 வகைகளாக, 15 விக்ருதி ஸ்வரங்களிலிருந்து மற்றும் 2 சுத்த ஸ்வரங்களிலிருந்து செய்வது சொல்லப்பட்டிருக்கிறது. உங்கள் பக்கத்தில் கூட 170 ஜன்ய ராகங்கள் முதலியவை சொல்லப்பட்டிருப்பது தெரிகிறது. இதனால் இதோடு தொடர்போ அல்லது தொடர்பின்மையோ ஸ்தாபிக்க முடியும் என்று மனத்தில் தோன்றியது.

தீக்ஷிதர்: அதில் இது போன்ற விஷயங்கள் இருப்பது நிச்சயம் ஆய்வுக்குரியது. அந்தக் கிரந்தம் என் பார்வைக்கு வந்தது. ஆனால் இப்போது அதைப் புரிந்துக் கொள்ளும் ஆசை நிறைய இருக்கிறது. அதில் உள்ள 23 மேளங்கள் எவை? (நான் அவற்றையெல்லாம் படித்துக் காட்டினேன், அதைக் கேட்ட பின்), என் புரிதலின் படி இந்த கிரந்தகாரர் ராமாமாத்யரின் ஸ்வரமேளகலாநிதிக்கேற்ப தான் ராகங்களை அமைத்திருக்க வேண்டும். இவை வேங்கடமகியின் மேளங்கள் அல்ல. அவர் ஒத்துக் கொள்ளும் 18 இவை தான்:

1. முகாரி = சுத்த மேளம்

2. ஸாமவராளீ = காகலீ நீ + சுத்த ஸ்வரம்

3. பூபாளம் = ஸாதாரண காந்தாரம் + தோடீ மேளம்

4. ஹிஜேஜ = அந்தர காந்தாரம் + மற்றவை சுத்தம்

5. வஸந்தபைரவீ = அந்தர காந்தாரம் + கைசிக நிஷாதம்

6. கௌரீ = அந்தர காந்தாரம் + காகலீ நிஷாதம்

7. ஆஹிரீ = பஞ்ச ஸ்ருதிக ரி + கைசிக நிஷாதம்

8. ஸ்ரீ = பஞ்ச ஸ்ருதிக ரி + ஸாதாரண க + பஞ்ச ஸ்ருதிக த + கைசிக நிஷாதம்

9. காம்போஜீ = பஞ்ச ஸ்ருதிக ரி + அந்தர க + பஞ்ச. த + கைசிக நீ

10. ஸாமந்த = பூர்வாங்கம் சங்கராபரணம் + த ஷட் ஸ்ருதிக + காகலீ நி

11. தேஷாக்ஷி = ஷட். ரி + அந்த. காந்தாரம் + பஞ்ச. த + காகலீ நிஷாதம்

12. நாட = ஷட். ரி + அந்த. க + ஷட். த + காகலீ நி

13. வராளீ = சு. ரி + சு. க + ச்யுத ம அல்லது பிரதி ம | சு. த + கா. நி

14. பந்துவராளீ = சு. ரி + சாதா. க + சுத்த தைவதம் + காக. நீ (தவறுதலாக இப்போது அவை அந்தர காந்தாரமாக இருக்கிறது)

15. சுத்த ராமக்ரியா = மாயாமாளவ கௌளையோடு சு.ரி + அ.க + சு.த + கா. நீ

16. ஸிம்ஹரவம் = (புதிய மேளம், இதனை அவரே செய்ததாக அவர் கூறுகிறார்)

ஸாதா. க + வராளீ ம + பஞ்ச. த + கை. நி

17. கல்யாணீ = சங்கராபரண பஞ்ச. ரி +. ஸாதா. க + பிரதி ம.

18. பைரவீ - பஞ்ச ரி + ஸாதா. கா + சுத்த தை + கை நி.

இந்த பதினெட்டு மேளங்கள் வேங்கடமகிக்கு முன்னரும் இருந்தன, அதனால் அவர் அந்த மூல மேளங்களிலிருந்து 18 X 6 = 72 செய்தார், மேலும் 20 மேளங்களை நன்கறிந்த ஜன்ய ராகங்களுக்காக எடுத்துக் கொண்டார். என் புரிதலின் படி அவர் அப்படித் தான் சொல்கிறார். நீங்கள் அவர் புத்தகத்தைப் பார்க்கும் போது உங்களுக்கு இது தெரிய வரும்.

நான்: நீங்கள் இந்த அமைப்பை எனக்குச் சொன்னீர்கள், அதானால் நான் இந்தக் கண்ணோட்டத்துடன், இதை மீண்டும் பார்க்கிறேன். ஆனால் மேளங்களுக்கான இந்த ஸ்வரங்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டன?

ப: வேங்கடமகியின் "ராகப்பிரகரணப்" புத்தகத்திலிருந்து. அதில், ராகாங்கம், பாஷாங்கம், முதலியவற்றின் வர்ணனை நன்றாகக் கொடுக்கப்பட்டுள்ளது, மேலும் அவற்றின் ஸ்லோகமும் உள்ளன. அதையும் நான் உங்களுக்குத் தருகிறேன்.

கே: நீங்கள் சோமநாதரால் இயற்றப்பட்ட புத்தகத்தையோ அல்லது பாரிஜாதம் என்ற கிரந்தத்தையோ பார்த்தோ அல்லது கேட்டிருக்கிறீர்களா??

ப: கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனால் பார்த்ததில்லை. நான் தீக்ஷித ஸம்ப்ரதாயத்தின் பிரதிநிதி. மற்ற மதங்களை நான் ஏற்றுக் கொள்வதில்லை.

கே: வேங்கடமகி ராகத்தின் பாகுபாட்டை எந்த ஆதாரத்தின் படி செய்திருக்கிறார்?

ப: ராகாங்கம், பாஷாங்கம், உபாங்கம் ஒரு பாகுபாடு. இரண்டாவது, கனராகம், ரக்தி ராகம், தேசீ ராகம். அதன் பெயர் மற்றும் எண்ணிக்கை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. வேங்கடமகியை நன்றாகப் புரிந்துக் கொள்ள, சதுர்தண்டி மற்றும் ராகப்பிரகரணம் - இந்த இரண்டு புத்தகங்களையும் படித்து உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

கே: உங்கள் பெரிய புத்தகத்தில் எப்படி எழுதியிருக்கிறீர்கள் என்று விளக்குவீர்களா?

ப: ஆம். இதோ பாருங்கள். (புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு), ஆரம்பத்தில் இந்த ஆறு சக்ரங்களில், இது எந்த சக்ரம் என்பது சொல்லப்பட்டிருக்கிறது, அதற்குக் கீழே, உள்ள பத்தியில், மேளங்களின் எண் எவை என்பதை ஸம்யுக்த சப்தங்களால் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகு ராகாங்கம், பாஷாங்கம் முதலிய ராகங்கள் எப்படி எவ்வாறு உண்டானது என்பது கூறப்பட்டிருக்கிறது. இதையடுத்து, ராகங்களின் பெயர், பிறகு ராக பிரகரணத்திலிருந்து ராகத்தின் ஸ்லோகம், அவற்றின் மூர்ச்சனை, ஆரோஹணம். அவரோஹணம், தீவ்ர, கோமளம் இவற்றின் ஸங்கேதங்களோடு கொடுக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பு: முக்கியமான கேள்வி என்னவென்றால் அவர் எழுபத்திரண்டை உற்பத்தி செய்வதற்காக எடுத்த அந்த 18 எவை என்பது. ரத்னாகரத்தின் 18 ஜாதிகள் தான் அந்த 18 மேளங்களா? எவ்வாறு? இங்கே நடுவில் ஏதோவொரு முக்கியமான விஷயம் விடுபட்டிருக்கிறது. சுப்பராமர் தன் அனுமானத்தில் சொன்னது சரியா? (பேச்சு முன்னே தொடர்ந்தது)

இவற்றை எல்லாம் எழுதிய பின் மேற்சொன்ன, சுருக்கமான ஸங்கேதமான விஷயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக நானே எழுதி இருக்கிறேன். அவற்றின் பெயர், விவரம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகு தீக்ஷிதரின்[34] பிரசித்தி பெற்ற லக்ஷண கீதம் சேர்க்கப்பட்டிருக்கிறது, இதன் சரணம் இதன் முதல் அக்ஷர ஸ்வரம் எது என்பதைக் குறிக்குமாறு அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு தகவல்களினால் ராகம் நன்றாகப் புரிந்து விடுகிறது. நான் இதற்குப் பிறகு தானம் மற்றும் அதன் விஸ்தாரம் எவ்வாறு செய்வது என்பதற்காக "தான வர்ணம்" போட்டுக் காட்டி இருக்கிறேன். இத்தனை விஷயங்கள் ஒவ்வொரு ராகத்திற்கும் அவசியமாகிறது என்று தோன்றுகிறது. ஸ்லோகங்களின் உதவியால் குறிப்பாகச் சொல்லப்பட்டவற்றை நேரடியாக ஸ்வரத்தில் எழுதிக்

[34] [குடும்பப் பெயர் - கோவிந்த தீக்ஷிதர் / வேங்கடமகி தீக்ஷிதர்]

குறிப்புகளுடன் கொடுத்திருக்கிறேன். எல்லா ஸ்வரங்களும் எவ்வாறு இருக்கும் என்பதை ஒரு முறை புரிந்துக் கொண்டபின், நம் இஷ்டத்திற்கேற்ப வேலை முடிந்து விடுகிறது. இதற்குப் பிறகு எங்கள் பரம்பரையின் தெலுங்கில் எழுதப்பட்ட அழகான கீர்த்தனைகள் ஸ்வர லிபியுடன் எழுதப்பட்டுள்ளன.

கே: நீங்கள் சென்னையில் உள்ள என் நண்பர் ஸ்ரீ திருமலய்ய நாயுடுவை அறிவீர்களா?

ப: ஆம். அவரை எனக்குத் தெரியும். அவருக்கு இதைப் பற்றி அதிகம் ஒன்றும் தெரியாது. ஆனாலும் என் நோக்கத்தைப் புரிந்துக் கொள்ளாமல், என்னிடம் ஏதேனும் சொல்லத் தயாராக இருப்பார். அவரது ஞானம் மேலோட்டமானது.

கே: உங்கள் பகுதியில் வாதி-சம்வாதி விதிகள் ஏதேனும் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா?

ப: ஆம். உள்ளது. இது குறித்து வேங்கடமகி, ரத்னாகரத்தில் சொல்லப்பட்டவற்றிலிருந்து வேறுபட்டு. சில மாற்றங்களைச் செய்கிறார். அவர் தம் சமயத்தில் சங்கீதத்தில் நடந்த மாற்றங்களுக்கேற்ப இதைச் செய்திருப்பார். பாடகர்களுக்கு எப்போதும் புழக்கத்தில் இருக்கும் உலக வழக்கைப் பார்க்க வேண்டியிருக்கிறது எனபது அனுபவத்தில் அறிவது. சங்கீதம் எவ்வளவு புராதனமானதாக இருப்பினும் சரி, தேசம், காலம், நிலைக்கேற்ப மாற்றங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இதே காரணத்திற்காக, வேங்கடமகி முற்றிலும் புதிதாக பத்ததியை ஏற்றுக் கொண்டு, புதிய வழியில் இதையெல்லாம் செய்திருக்கிறார்.

கே: இப்படி இருப்பது உண்மையானால், ஸ்ரீ தீக்ஷிதரே, நீங்களும் உங்கள் மதத்தில் சில மாற்றங்கள் செய்ய என் ஒத்துக் கொள்வதில்லை? நீங்கள் செய்வதிலெல்லாம் கூட சிறிது மாற்றம் செய்ய ஒத்துக் கொள்ள வேண்டுமல்லவா?

ப: எங்கள் பத்ததி முற்றிலும் உத்தமமானது மற்றும் முழுமையானது, அதில் முன்னேற்றம் ஏதும் அவசியம் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

கே: உங்கள் தெற்கில் மற்ற சங்கீதக்காரர்கள், உங்களின் எந்த கருத்துக்களிலிருந்து வேறுபடுகிறார்களா? அவர்கள் சதுர்தண்டியை ஒத்துக் கொள்வதில்லையா? அவர்கள் வேறு ஏதாவதொரு கிரந்தத்தை ஆதாரமாக ஏற்றுக் கொள்கிறார்களா?

ப: இப்போது கிரந்தங்களின் ஆதாரத்தில் பேசக்கூடிய ஒன்றிரு பேர்களையாவது எனக்குக் காட்டுங்கள். வெறும் பரம்பரையில் கற்றவர்களான நடைமுறைக் கலைஞர்கள் மட்டுமே கிடைப்பார்கள். சதுர்தண்டியைப் பார்த்தவர்கள் ஒருவரும் கிடைக்க மாட்டார்கள். அதற்குப் பிறகு அவர்களுடன் மத பேதம் செய்வதால் என்ன கிடைக்கும்? என் புத்தகம் பிரசுரமானதால் குறைந்த பட்சம் ராகப்பிரகரணமாவது மக்கள் முன்னிலையில் வந்திருக்கிறது. சதுர்தண்டியின் தரிசனம் கூட இன்னும் கிடைக்கவில்லையே. இப்போதும் என்னால் என் புத்தகத்தில் சரியான விவரம் கொடுக்க முடியவில்லை, ஏனென்றால் திவான் ஸாஹிப் புத்தகத்தை பிரசுரிக்க அவசரப்படுத்தினார், அதனால் இந்த பாகம்

பிரசுரிக்க முடியாமல் போனது. நான் இறந்து போனால், இந்த விஷயத்தைச் சொல்லக் கூடியவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள். அதனால் நீங்கள் உங்களுடன் என்னைக் கூட்டிச் செல்லுங்கள் என்று நான் சொல்கிறேன். உங்களிடம் நான் எதையும் மறைக்க விரும்பவில்லை, மேலும் எந்த விட லாபமுமின்றி, வெறும் பெயர்/புகழுக்காக உங்களுக்கு பக்தி பாவத்துடனும் ஆத்மார்த்தமாகவும் சொல்வேன்.

நான்: நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாவேன். தெலுங்கு மொழிபெயர்ப்பாளர் கிடைத்தவுடன் உங்களை அழைத்துக் கொள்வேன்.

கே: நீங்கள் ஸ்வரமேளகலாநிதிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா?

ப: எப்போது வேங்கடமகியே அதை ஏற்றுக் கொள்கிறாரோ, பிறகு நான் அதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். மேளங்களைப் பற்றி அதிலிருந்து வேங்கடமகிக்கு கருத்து வேறுபாடு உண்டு. ஆனால கிரந்தகாரரின் அறிவைப் பொறுத்தவரை இல்லை. அந்த கிரந்தம் வேங்கடமகிக்கு முற்பட்டது. அதை நான் படித்ததில்லை. ஆனால் அதைப் புரிந்துக் கொள்ள ஆசைப் படுகிறேன். அதிலிருந்து ஏதேனும் உபயோகமான விஷயம் வெளிவரக்கூடும். அவர் தான் 26 அல்லது 25 மேளங்களை ரத்னாகரத்துடன் எப்படி சேர்த்திருக்கிறார் என்பதை நான் பார்க்க வேண்டும்.

நான்: அந்த கிரந்தம் சென்னை புத்தகாலயத்தில் இருக்கிறது, மற்றும் அதன் நகல் எனக்கு சீக்கிரம் கிடைக்கப் போகிறது. அது கிடைத்தபிறகு அதில் இதைப் பார்த்துவிட்டு உங்களுக்குச் சொல்கிறேன்.

கே: கிரியாங்க ராகம் - இந்தப் பெயரை எதற்குக் கொடுப்பீர்கள்?

ப: வேங்கடமகி “கிரியாங்க” ராகத்தை ஒத்துக் கொள்வதே இல்லை, மூன்றைத் தான் ஏற்றுக் கொள்கிறார் - பாஷாங்கம், ராகாங்கம், உபாங்கம்.

கே: எனக்கு இந்தச் சொற்களுக்கு நீங்கள் சொல்லும் அர்த்தம் வேண்டும்.

ப: ரத்னாகரத்தின் “தசவித” ராகங்களில், இந்த மூன்று மட்டும் தான் வேங்கடமகியின் காலத்தில் புழக்கத்திலிருந்தன, என்று தெரிகிறது. முதல் ஆறான அதாவது ராகம், உபராகம், கிராம ராகம் முதலியவை பின் தங்கி விட்டன.

ராகாங்க ராகம் - அதாவது மிகவும் சுத்தமான, சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட, ஆரோஹண அவரோஹணத்துடன், எல்லா நியமங்களுடன் கூடிய ராகம், இதைத் தாய் ராகம் என்றும் சொல்லலாம். எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களின் மூல ராகம் என்று சொல்வது தான் மிகச் சரியாக இருக்கும்.

உபாங்கம் - மேற்சொன்னப்பட்ட ராகங்களின் ஸந்தானங்கள். ஸம்பூர்ணத்தன்மையை வைத்துக் கொண்டு, கொஞ்சம் வக்ரமாக ஆரோஹணத்தையோ, அவரோஹணத்தையோ பாடுவது, ஆனால் அதே ஸ்வரங்களை வைத்துக் கொள்வது.

பாஷாங்கம் - வெளியிலிருந்து வந்த தத்துவங்களைக் கலக்கி சுத்தத்தை நஷ்டப்படுத்துதல். இது ஜனங்களின் விருப்பத்தை ஆதாரமாக கொள்கிறது.

கே: ஸ்ரீ தீக்ஷிதரே! நீங்கள் உங்கள் புத்தகத்தில் கமகங்களைப் பற்றிய தகவல் நன்றாகக் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். இது பற்றி நான் வேறு யாரிடமும் எதுவும் விசாரிக்கவில்லை. ஏனென்றால் உங்களுடைய புத்தகம் என்னிடம் இருக்கவில்லை. இது குறித்து கொஞ்சம் எனக்குச் சொல்லுங்கள்.

ப - எனது இந்தப் (பெரிய) புத்தகத்தில் நான் எழுதி இருக்கிறேன், அதை நீங்கள் பார்ப்பீர்கள். அதிலும் நான் 162 ஆம் பக்கத்தில் எழுதி இருக்கிறேனே, இந்த "பைரவி" ராகம், அதையே எடுத்துக் கொண்டு எல்லா கமகங்களோடு உங்களுக்குப் பாடிக் காட்டுகிறேன், இதனால் "கமகம்" உங்களுக்குப் புரிந்து விடும். எவ்வளவு எழுதினாலும் கூட கமகத்தை எழுதுவதென்பது கடினம் என்று தான் சொல்லவேண்டும். அதை நன்றாக அடையாளம் காட்டக் கூடிய ஸ்வர சின்னங்கள் இப்போது கூட பரிச்சயமாகவில்லை. பாட்டில் விசேஷத்தன்மை கொடுக்கக் கூடிய கமகங்கள் என்று சொன்னால் அவை, ஸ்ஃபுரிதம் மற்றும் உல்லஸிதம் இவை தான். ஆரோஹி , அவரோஹி, மூர்ச்சனா[35] ஆகியவை இருக்கத் தான் இருக்கிறது, ஆனால் அவற்றைப் புரிந்துக் கொள்வதோன்றும் கடினமில்லை.

பிறகு தீக்ஷிதர் ஸ்ஃபுரிதம் மற்றும் உல்லஸித கமகங்களை வாயில் பாடிக் காட்டினார். அதை "ம ம்மா" அதாவது இரண்டாவதில் பலமாக, மற்றும் அழுத்தம் கொடுத்துப் பாடுவது, "பப்பா" இவ்வாறு (கொஞ்சம் ஹகாரம் கலந்து) பாடிக் காட்டினார். ஸ்ஃபுரிதத்தில் மூன்று வகை சொன்னார்.

1. முதல் அக்ஷரத்திற்குப் பலம் கொடுத்து
2. இரண்டாவது அக்ஷரத்திற்குப் பலம் கொடுத்து
3. மும்மூன்று ஸ்வரங்களை அழுத்தம் கொடுத்து

உல்லஸித கமகம் அதாவது அவரோஹணத்தில் தார ஷட்ஜத்திலிருந்து கீழே, கொஞ்சம் மீண்ட் போல மற்றும் அழுத்தம் கொடுத்து பாடிக் காட்டினார் - இவ்வாறு நான் புரிந்துக் கொண்டேன் மற்றும் தேவைப்பட்டால் நேரடியாகக் செய்து காட்ட முடியும். (மறக்கவில்லையென்றால்) இங்கே எழுதி விளக்குவது கடினம். "ப்ரத்யாஹத" கமகம் வாத்தியத்திற்கு உபயோகப்படும். அவர் இது பாட்டில் வராது என்றும் சொன்னார்.

கே: உங்கள் பகுதியில் மேளம் மற்றும் ஜன்யத்தின் வர்ணனைகளை நான் பார்க்கும் ஸ்லோகங்களில், அதில் பல ராகங்களின் முன் (ஒன்றில் மூன்று பங்கு) "सन्यासं सांशकं ग्रहं" என்றவாறு ஒரு வாக்கியம் கிடைக்கிறது. ஏன் இப்படி? இந்த எல்லா ராகங்களுக்கும் 'ஸ'

[35] ஸ.ஸ.பி-யில் சுப்பராம தீக்ஷிதர் கொடுக்காத அல்லது பெயர் சொல்லாத, அவர் காலத்தில் பிரபலமாக வழங்கிய தசவித கமகப் பட்டியலில் வரும் ஆரோஹி, அவரோஹி, மற்றும் மூர்ச்சனா என்பதைப் பற்றி அறிந்திருப்பதாக இதிலிருந்து தெரிய வருகிறது.]

அம்சம். 'ஸ' கிரஹம், 'ஸ' நியாசம் என்று ஏன் இருக்கிறது? ஏன் எல்லா ராகங்களுக்கும் இந்த ஸ்வரங்கள் வெவ்வேறாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை, ஆனாலும் அதிகப்படியான ராகங்களுக்கு ஏன் இப்படி இருக்கிறது?

ப: (விளக்கத்தை கவனியுங்கள்) ஆம் இது உண்மை. ஆனால் ஷட்ஜ கிராமம் ஒன்றை மட்டும் ஒத்துக் கொள்வதால், அதில் ஷட்ஜம் எல்லா ஸ்வரங்களுக்கும் முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. இதே காரணத்தால், அதன் மேல் இந்த எல்லாவிதமானவற்றையும் ஏற்றிச் சொல்வது மக்களுக்கு நன்றாக இருந்தது. ஆனாலும் ஆங்காங்கே, "க" கிரஹம், "தா அம்ஶகம்" என்று இவ்வாறு அல்லது வேறு ஏதேனும் ஸ்வரமும் சொல்லப்பட்டிருப்பது காணக்கிடைக்கும். இவ்வாறு இருப்பதன் பாவார்த்தம் என்னவென்றால், அந்த ஸ்வரத்தை ஆதார ஸ்வரமாக (கீ நோட்) [key note] என்று கொள்ளவேண்டும். எவ்வாறு த கிரஹம் என்பதன் அர்த்தம் என்னவென்றால், "த" வை ஸா வாகக் கொண்டு பாடவேண்டும் என்பது. என் புத்தகத்தில் இது போன்ற விளக்கங்களை நான் சிற்சில இடங்களில் எழுதி வைத்திருக்கிறேன்.

குறிப்பு:- **பக்கம் 162** **தெலுங்குப் புத்தகம்**

ரீதிகௌள - தாய் ராகம் - பைரவி பாஷாங்கம்

வேத ஶ்ரீ - மூர்ச்சனை - ஆரோஹண அவரோஹணம் - பாடக்கூடிய ஸ்வரங்களுடன்

லக்ஷண விவரணம் - பாஷாங்க ராகம்

ஸம்பூர்ணம், தைவத கிரஹம், அதாவது தைவத ஸ்வரத்தை ஸா-வாகக் கொண்டு பாட வேண்டும். ஸப்த ஸ்வர ஜீவம். இதன் அர்த்தம் என்னவென்றால், எந்த ஸ்வரத்தையும் ஜீவா ஸ்வரமாகக் கொள்ளலாம். அதே போல் எந்த ஸ்வரத்திலும் நியாசம் செய்யலாம்.

இந்த ராகத்தில் "ரிகம" என்ற ஸ்வரம் மிகவும் ஆனந்தம் கொடுக்கக் கூடியது. ஆரோஹணத்தில் ஒவ்வொரு ஸ்வர ஸமூஹத்திலும் கடைசியில் ஜீவ ஸ்வரத்தை வைப்பது அதிக அழகைக் கொடுக்கும். இந்த ஸ்வர அமைப்பை நான் புத்தகத்தில் உதாரணமாகக் காட்டி இருக்கிறேன். ஆரம்பத்தில் சில ஸ்வர ஸமூஹங்களில், ரி கடைசியில், பிறகு சிலவற்றில், க கடைசியில், பிறகு ம கடைசியில், என்று கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ராகத்தில் எல்லா ஸ்வரங்களும் இவ்வாறு உபயோகப்படுத்தப் பட்டுள்ளது, அதனால் அது மிகவும் புகழப் பட்டுள்ளது. இதை ஸந்த்யா காலத்தில் பாட வேண்டும்.

கே: எங்கள் பக்கத்தில் அதைக் காலையில் பாடுவார்கள்.

ப: "ஸந்த்யாகாலே" என்பதன் அர்த்தம், இந்த ராகம் எந்த சமயம் ஒளியும் இருளும் சந்திக்கிறதோ, அந்த சமயத்தில் பாட வேண்டும் என்பது. அதனால் காலையிலும் பாட

முடியும். கமகங்களின்றி அல்லது த்ருத லயத்தில் பாடவில்லை என்றால் சில ராகங்கள் சுத்தமாக இருக்காது. பைரவியை மிகவும் மந்த கதியில் பாடினால், ராகமே நஷ்டமாகி விடும்.

கே: நீங்கள் மதுரையில் கிருஷ்ணா அய்யங்காரைப் பார்த்திருக்கக் கூடும். அவர் என்னிடம் [உங்களை] ஒரு கேள்வி கேட்கச் சொன்னார். அது என்னவென்றால், "பிரக்ருதிராகம் மற்றும் விக்ருதி ராகம்" - இவற்றில் என்ன வித்தியாசம்?". எனக்கு பிரக்ருத ராகம் என்றால் ஒன்றுமே புரியவில்லை.

ப: பிரக்ருத ராகம் விக்ருத ராகம் என்று ஒன்றும் சொல்லப்படவில்லை. இந்த சொற்கள் ஸ்வரங்களுக்கானவை. அதாவது பிரக்ருத ஸ்வரம் மற்றும் விக்ருத ஸ்வரம். இதன் அர்த்தம் நீங்கள் அறிந்திருப்பதே. இப்போது பிரக்ருத ராகம் என்றால் எதில் சுத்த ஸ்வரம் இருக்கிறதோ அது, விக்ருத ராகம் என்றால் எதில் அதிகம் விக்ருத ஸ்வரம் இருக்கிறதோ என்று ஒரு அர்த்தம் எடுத்துவரும். ஆனால் இதில் ஒன்றும் பெரிய சாஸ்திர ரகசியம் இருப்பதாக எனக்கொன்றும் தெரியவில்லை.

கே: உங்கள் பகுதியில் ஆதி ஸப்தகமாக கொள்ளப்படுவது எது?

ப: இதை என்னால் சொல்ல முடியாது. ஆனால் அனுபவப் பூர்வமாகச் சொல்ல வேண்டுமானால், இங்கே மாணவர்கள் முதலில் மாயாமாளவகௌளை கற்றுக் கொள்கிறார்கள்.

கே: மாயாமாளவகௌளை இந்த 15 ஆவதாக இருந்தால் முதலில் இருக்கும் கனகாங்கியை விட்டு க்ரமத்தில் பின்னர் இருக்கும் வேறொன்றை ஏன் பிரதான ஸப்தகமாகக் கொள்கிறார்கள் என்பதற்கு ஏதேனும் காரணம் சொல்ல முடியுமா?

ப: இதில் இன்னொரு விஷயம் இருக்கிறது அதையும் சொல்கிறேன், உங்களுக்கு மட்டும் தான் சொல்கிறேன். வேங்கடமகி எழுபத்திரண்டு மேளங்களைச் செய்தார் என்று ஒத்துக் கொள்கிறோம், மற்றும் இது தான் அவர் எண்ணம் மற்றும் சூளுரை. ஆனால் இது பற்றி நான் ஒரு அனுமானம் செய்திருக்கிறேன். முதலில் 18 மேளங்கள் இருந்தன - அதிலிருந்து தான் நான் எழுபத்திரண்டு மேளங்களைச் செய்தேன் என்று தான் அவரும் சொல்கிறார். இந்த பதினெட்டு மேளங்களுக்கு பெயர் வகை எல்லாம் நான் கொடுத்திருக்கிறேன். வேங்கடமகிக்கு இந்த பதினெட்டு பழைய மேளங்களை தன் பத்ததியில் வைக்கத் தான் வேண்டும். ஆனால் அவற்றின் "கடபயாதி" எண்ணிக்கை அவற்றின் நியமத்திற்கேற்ற பெயர்களுடன் ஒத்துப் போக வில்லை. அதனால் அந்த பழைய மேளங்களின் ஆரம்பத்தில் அவர் ஒரு இடைச்சொல்லைச் சேர்த்தார் - அதாவது : மாயா + மாளவ கௌட; ஹரி + காம்போஜீ; சுப + பந்துவராளி ; மேச + கல்யாணி;
கேய + ஹிஜாஜ் ; வாரீ + வசந்த முதலியவை.[36] இப்படிப்பட்ட முன்னிடைச் சொற்கள் எந்த

[36] இவ்விடத்தில் கனகாம்பரி பட்டியலில் சொல்லப்படாத , மேச கல்யாணி, ஹரிகாம்போஜி, கனகாங்கி பட்டியலில் உள்ள சில பெயர்கள் இடம் பெற்றுள்ளன. கனகாங்கி பட்டியலின் பெயர்களைப் பிற இடத்தில் கண்டனம் செய்துள்ள தீக்ஷிதர் இவற்றை உதாரணமாகக் கொடுத்திருப்பது சாத்தியமில்லை. முதல் உதாரணமான மாளவகௌளைக்குப் பிறகு இது பண்டிட். பாத்கண்டேயின் குறிப்பாக இருக்கக் கூடும்.

மேளங்களுக்கு முன் இருக்கிறதோ அவை பூர்வப் பிரசித்த புராதனமான மேளங்கள் என்பது என் அனுமானம். (?) இந்த முன்னிடைச் சொற்கள் அவர் பத்ததியின் பட்டியலைப் பூர்த்தி செய்ய அதாவது கடபயாதி கணிதத்திற்காக. க்ரம எண்ணிக்கை நியமப்படி, அவர் இந்த 72 மேளங்களைச் செய்தாலும், "ராரிரூ, காகிகூ" இந்த கிரமத்தின் அழகிய வரிசை மற்றும் சக்ரத்தில் பொருத்தினாலும், இந்த வாதி-ஸம்வாதி நியமங்கள் இறைவன் செய்ததால் அதை அதிலிருந்து எடுத்து விட முடியவில்லை. கனகாங்கி போன்ற சக்ரத்தின் மேளம், முதலில் அதற்குப் பிறகும், விரும்பக்கூடியதாகவும் ரஞ்சகமுள்ளதாகவும் இருக்க முடிவதில்லை. உண்மையில் அவை ஆகவும் இல்லை. மக்களிடையே மாளவகௌட, பிரியமானதாக மற்றும் ஒன்றிணைந்து விட்ட ஸ்வர ஸப்தகமானதால், அது அப்படியே இருந்து விட்டது. கணிதத்தினால் "ராரிரூ" காகிகு" என்ற பெயர்களால் அதன் க்ரமம் 15-ஆனாலும், அது அதன் பழைய எண்ணிக்கை அல்ல. ஹார்மனியின் நியமங்கள் பழைய நியமங்களோடு பொருந்துகின்றன. அதற்கு விரோதமாக வேங்கடமகியால் எப்படிப் போக முடியும்? சுத்த ரீ மற்றும் சுத்த க இந்த இரண்டும் ஒன்றுக்குப் பின் ஒன்று வந்தால் சுகமான சங்கீதப் பரிணாமம் இல்லை என்பது இயற்கை நியமத்தால் தீர்மானமாகிறது. நீங்கள் அதை வேண்டுமானால் சது: ஸ்ருதிக ரி என்று சொன்னாலும் அல்லது சுத்த க என்று சொன்னாலும் அது ஒன்று தான். அதனால் முதலிலிருந்து புழங்கி வந்த மாயாமாளவகௌளையே முதலில் கற்றுக் கொள்ள, கற்றுக் கொடுப்பதற்காகச் செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பு: சுப்பராமரின் இந்த சிந்தனை வழி சமாதானம் அளிக்கக் கூடியதாக இல்லை. ஆனாலும் அவருடைய தர்க்கத்தின் படி யோசிக்கத் தான் வேண்டும். ஸ்ரீ நாயுடு இந்த ஸ்வர ஸப்தகத்தின் மூலம் வைதிக ஸப்தகத்தில் உள்ளது, அதில் ரி கோமளம் என்று சொன்னார். இந்த கேள்வியை நன்றாக ஆழ்ந்து ஆராய வேண்டும்.

கே: அய்யா ஸ்ரீ தீக்ஷிதரே! கோமள ரி க்கு சுத்த ரி என்ற இந்தப் பெயர் ஏன் வைத்தார்கள்? இதன் சாஸ்திரிய காரணம், தெரிந்தால் உபயோகமாகும். (ஸ்வரத்தின் இனிமையின் படி பெயர்களின் தனித்தன்மையைக் காட்டக்கூடியவாறு இருப்பதாக முதலில் தோன்றுகிறது இது)

ப: நம் மனத்திருப்திக்காக, ஏதாவது காரணம் தேட வேண்டுமென்றால், சது: ஸ்ருதிக ரிஷபம் வேறு இடத்தில் சுத்த காந்தாரத்தின் ரூபத்தைப் போல, இன்னொரு பெயருடன் விளங்குகிறது என்று சொல்லலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.ஆனால் கோமள ரிஷபத்தின் உண்மையான பெயர் எப்போதும் விக்ருதி ஆகாது. அதனால் அதை சுத்தம் என்று சொல்லலாம். ஆனால் பெயர்களின் காரணத்தால் நமக்கு என்ன கஷ்டம் ஏற்படும்? (சுத்த க வைப் பொறுத்தவரை என்ன சொல்வீர்கள்? அதற்கும் இரண்டு-இரண்டு பெயர்கள் இருக்கின்றன)

கே: ஒரு பிரச்சனை என்னவென்றால் இந்த ராகவிபோத புத்தகத்தில், பிரக்ருத மற்றும் விக்ருத ஸ்வரங்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அதில் கொடுக்கப்பட்ட வர்ணனைகளின் படி ஸப்தகத்தைச் செய்து பார்த்தால், உங்கள் பக்கத்து சுத்த "ரி த" இவற்றின் ஸ்தானத்தில் (கோமள ரி த) வின் இடம் காலியாக இருக்கிறது. அதாவது அந்த ஸ்வரங்களில்

இது எப்போதும் உபயோகப்படுவதில்லை. அதிலும் 23 மேளங்கள் மற்றும் அதன் ஜன்யங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேளம் முதலியவற்றின் பெயர்கள், இங்கே உங்களுடையதைப் போலத் தான். ஜன்யங்களும் அதே போலத் தான். ஆனால் மேலே சொல்லப்பட்ட இந்த இரண்டு ஸ்வரங்களிலும் குழப்பம் இருக்கிறது. சுத்த ரி மற்றும் த, வை உங்கள் கோமள ரி மற்றும் தா-வாக வைத்துக் கொண்டால், முகாரி, ஸ்ரீ போன்ற ராகங்களில் சுத்த ரி மற்றும் சுத்த த என்று சொல்லப்பட்டிருக்கின்றன. நீங்கள் கோமள ரி மற்றும் தா வுடன் இந்த ராகங்களைப் பாடுவதில்லை. அதனால் இந்த சுத்த ரி இந்த கோமள ரி அல்ல என்பது அனுபவப்பூர்வமாகத் தெரிகிறது. இதே காரணத்தால், இந்தக் கேள்வி முக்கியமானது என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் இதற்கு இன்று வரை எனக்கு பதில் கிடைக்கவில்லை. (உண்மையில் என்னுடைய இந்தக் கேள்வி உசிதமானதல்ல, அவரே என்னிடம் "ராக விபோதத்தைப் பார்த்ததில்லை" என்று சொன்னதால், சுப்பராமர் இதற்கு பதில் சொல்வதென்பது முடியாது)

ப: இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. அந்த கிரந்தத்தை நான் பார்த்ததில்லை. (சரி தான்).

ராகாங்கத்தின் விளக்கத்தை மொழிபெயர்ப்பாளர் இவ்வாறு கொடுத்தார். "மூல ராகத்தைப் பின்பற்றி, அதன் எல்லா கடினமான நியமங்களையும் வைத்துக் கொண்டு, அது சம்பூர்ணமாக இருக்கும் ஒரு ராகம். நீங்கள் அதன் ஸ்வரங்களில் வாதி-சம்வாதி-விவாதியை அவசியத்திற்கேற்ப சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் ஏழு ஸ்வரங்களையும் உபயோகிக்க வேண்டும். (அதனால் எனக்கு 72 மேளங்களை அப்படியே சொல்வது சாத்தியம் இல்லை என்று தோன்றுகிறது)

உபாங்கம் - இந்த ராகம், தாய் ராகத்திலிருந்து தோன்றிய போதிலும், அதில் வக்ரத்வம், லங்கணம் முதலிய சில மாற்றங்களைச் செய்ய முடியும். உதாரணமாக ஸ்ரீராகம் உபாங்க ராகம்[37].

பாஷாங்கம்- தன் தாய் ஸ்வர ஸப்தகத்தின் ஸ்வரங்களோடு, விவாதி அல்லது வேற்று ஸ்வரங்களை ஆரோஹணத்தில் நுழைப்பது. பாடகர்கள் மற்றும் கேட்பவர்களுக்கு மனத்தைக் கவர்வதற்காக, நியமித்த ஸ்வரங்களைத் தவிர, சில ஸ்வரங்களை சேர்த்துக் கொள்வதால், இவ்வாறு பாஷாங்க ராகம் தோன்றுகிறது.

கிரியாங்கம் - வேங்கடமகி இதனைப் பெயரளவில் குறித்து முன்னே சென்று விடுகிறார். அவர் இதன் மாற்றமடைந்த ரூபத்தைச் சொல்கிறார். த3ர்பணக்காரரின் பரிபாஷையின் படி எனக்குத் தெரிந்த வரை, இதன் உபயோகம் யுத்த வர்ணனைகளில் மற்றும் இறைவனை வழிபடுவதில், அல்லது துக்கத்தை வெளிப்படுத்த செய்யப்பட்டும்.

[37] [இது மொழிபெயர்ப்பாளரின் கருத்தாகவோ, அல்லது பண்டிட். பாத்கண்டேயின் குறிப்பாகவோ இருக்கக் கூடும். ஸ.ஸ.பி, மற்றும் சுப்பராம தீக்ஷிதரின் ஸம்ப்ரதாயத்தின் படி ஸ்ரீராகம் ராகாங்க ராகம், உபாங்கம் அன்று]

கே: நீங்கள் ரத்னாகரத்தின் சாராம்சத்தை உங்கள் புத்தகத்தில் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னீர்களே?

ப: ஆம். அவை 8 முதல் 25 ராகம் வரையில் உள்ள பக்கத்தில் இருக்கிறது. அதை நீங்கள் படித்து, உங்கள் கருத்தை எனக்கும் சொல்லுங்கள் (எனக்குத் தெலுங்கு தெரியாது என்பதற்காக வருந்துகிறேன்)

கே: வேங்கடமகி ரத்னாகரத்தின் ராகங்களைப் பற்றி என்ன சொல்கிறார்?

ப: ரத்னாகரத்தின் எல்லா 264 ராகமும் பிரசாரத்தில் இல்லை. அவற்றில் நிறைய வழக்கொழிந்து போய் விட்டன, என்று சொல்கிறார்.

கே: குறிப்பிட்ட ராகங்களுக்குக் குறிப்பிட்ட ரூபம் ஆகிவிட்டது என்று காட்ட அவர் முயற்சிக்கிறாரா?

ப: அது எனக்குத் தெரியாது, ஆனால், அவ்வாறு செய்ததாக நான் கேள்விப்படவில்லை.

கே: ரத்னாகரத்தின் ஜாதி - மேளத்திலிருந்து தான் முதலில் வந்த ஆதி மேளங்களாக இருக்க வேண்டும் என்று உங்களுக்கு ஏன் தோன்றுகிறது?

ப: காரணத்தைக் குறிப்பிட்டுக் கூறுவது கடினம். ஆனால் ஒரு தமாஷான விஷயம் சொல்கிறேன். எங்கள் பக்கத்தில் ஸ்மார்த்த மற்றும் வைஷ்ணவ மடங்கள் நீண்ட நாட்களாக இருந்து வருகின்றன. அவற்றின் கோவில்களில் பூஜாரிகள் பரம்பரையிலிருந்து வழுவி, ஏதோ சில ஸ்லோகங்களை அப்படி-இப்படிப் பாடுகிறார்கள். அதில் வெறும் பக்தியும் ஸ்துதியும் தான் இருக்கும். அந்தப் பாடலை நீங்கள் கேட்டால், உங்களுக்குக் கொஞ்சம் கூட பிடிக்காது. ஆனால் அவர்களின் பத்ய ஸங்க்ரஹப் புத்தகங்களில் (ஓலைச்சுவடிகளில்) ராகங்களின் இடத்தில் பார்த்தாலோ, "கந்தாரோதீச்யவா" , "ஷட்ஜகைசிகீ", "காந்தாரீ" ஆகிய பெயர்கள் காணப்படும், மேலும் அதை அவர்கள் அப்படியே தான் நினைத்துக்கொண்டு பாடுகிறார்கள். எனக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது, அதனால் நான் இவற்றைத்தான் 18 மூல மேளங்களாக கொள்கிறார்கள் என்று அனுமானித்தேன். ஜாதியும் 18 இருக்கின்றன. இந்த பஜனைகளில் ராகத்தின் இடத்தில் ஜாதியின் பெயர் போடப் பட்டுள்ளது. மிகப் பழமையான காலமுதல் நடந்துக் கொண்டிருக்கிறபடியால், இவ்விரண்டிற்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருப்பது போலத் தோன்றியது. (இது முக்கியமான ஆராய வேண்டிய விஷயம்)

நான் - உங்கள் கருத்தை திடப்படுத்தும் நோக்கத்தோடு சொல்கிறேன், ரத்னாகரத்தின் ஒரு சிற்றுரையாசிரியரும், ஷாட்ஜி என்றால் ஸ்ரீ ராக மேளம் என்று சொல்லி இருக்கிறார். அதாவது குறிப்பிட்ட ஜாதிக்கு நேராக குறிப்பிட்ட ராகத்தை உத்பத்தி செய்யும் மேளம் என்று அர்த்தமாகி விடுகிறது. இவ்வாறு தான் சிலவற்றும் இருப்பதாகத் தோன்றுகிறது.

குறிப்பு:

இங்கே விசாரித்ததில் எல்லா சங்கீத சாஸ்திரிகளும் ஒருமித்த கருத்தாக, தெற்கில் ஆரம்பிக்க சுபமாக இருக்கும், எப்போதும் சொல்லிக் கொடுக்க ஏற்றவாறு உள்ள ஸ்வர ஸப்தகம் மாயாமாளவகௌளை என்கிறார்கள் என்று தெரிய வந்தது. நான் எட்டையாபுரத்தின் சுப்பராம தீக்ஷிதரிடம், ஏன் இந்த ஸ்வரஸப்தகம் முதன்மையானதாகக் கொள்ளப்படுகிறது என்று கேட்டேன். அவர் கொடுத்த பதிலை நான் மேலே எழுதியும் இருக்கிறேன். இரண்டாவதாக ஒரு வாதம் என் மனத்தில் தோன்றுகிறது - வேங்கடமகி தன் புத்தகத்தில் , தான் 18 மூல மேளங்களிலிருந்து 72ஐ அமைத்ததாக எழுதி இருந்தால், அவருடைய முதல் மேளம் எது என்பதைப் பார்ப்பது அவசியமாகிறது. தீக்ஷிதர் சொன்ன ஒரு குறிப்பு என்னவென்றால், ரத்னாகரத்தில் ஜாதி பிரகரணத்தில் 18 ஜாதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை தான் இந்த 18 மேளங்கள் - அதிலிருந்து தோன்றிய ராகங்களின் பெயரால் அவை பிரசித்தி பெற்றிருக்கும். இந்த குறிப்பில் ஏதேனும் உண்மை இருக்குமாயின், ஷாட்ஜீ ஜாதியானது முதல் மேளத்தின் வடிவில் ரத்னாகரத்தில் தெரிகிறது. ஏனென்றால், 18 ஜாதிகளில் அது முதலாவதாகக் கொள்ளப்படுகிறது. மேலும், ஷாட்ஜீ ஜாதிக்கு கொடுக்கப்பட்ட விளக்கத்தில், "தைவத மூர்ச்சனை" என்று எழுதப்பட்டிருக்கிறது. தைவத மூர்ச்சனா ஸப்தகத்தில் சரியாகக் கோமள ரிஷபம் வருகிறது. இந்த ஜாதியில் காகலீ நிஷாதம் இருக்கிறது என்பதும் அறிந்ததே. அப்போது இந்த ஜாதி, அந்தர காந்தாரத்தைத் தவிர்த்து மற்ற ஸ்வரங்களில் மாயாமாளவகௌளையின் ஸப்தகம் ஆகும் என்று சொல்லலாமா? ராகங்களின் குடும்ப விவகாரத்தை ஏற்றுக் கொள்ளும் கிரந்தங்களில் (ஹனுமத்மதம் முதலியன) கூட "பைரவீ ராகம்" முதல் ராகமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த ராகத்தின் ஸ்வர ஸப்தகமும் "மாயாமாளவகௌளை" தான். இந்த விஷயம் முதலிலேயே நமக்குத் தென்பட்டுவிடுகிறது. நான் அதைப்பற்றி வீட்டுக்குச் சென்றபின் ஆழமாக சிந்திக்கப் போகிறேன். இதனால் இங்கே வேங்கடமகி ஒரு அசாதாரணமானவராக, பெருமையுடன் கூடியவராகி விட்டார். வடக்கில் ஹிந்துஸ்தானத்தில் தான்ஸேன் போன்றவர்கள் இருந்தார்கள். அவர்களுடைய கிருதிகள் (பாடல்கள்) பரம்பரையாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவை உண்மையானாலும் கூட , தான்ஸேன் வெங்கடமாகியின் வித்வத்தை அடைய முடியாது என்று சொல்லலாம். மனிதருடைய புகழைப் பாடுவதைத் தவிர, ஆழ்ந்தறிந்து ஒரு மதத்தை உண்டு செய்தல் இன்னும் நன்றாக இருக்கிறது. தான்ஸேனால் செய்யப்பட்ட ராகங்கள் நன்றாகவும் இனிமையாகவும் இருக்கலாம். அவர் அருமையான பாடகராகவும் இருக்கலாம். ஆனால் அவர் எப்படி இருந்தார் என்பது பற்றி யாரேனும் நம்மைக் கேட்டால், நாம் என்ன பதில் சொல்ல முடியும்? தான்சேனின் பெயரில் வழங்கப்படும் பதங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகத் தான் இருக்கின்றன, அதனால் தான்சேனுக்கு சமஸ்கிருதம் நன்றாக வரும் , அவர் கிரந்தங்களை நன்கு புரிந்துக் கொண்டவர், என்பதை ஒத்துக் கொள்ள அவருடைய கிருதிகளிலிருந்து ஆதாரம் எங்கே, எப்படிக் கிடைக்கும்? இன்றைய முஸ்லிம் பாடகர் எவ்வளவு தேர்நாதவர்களோ அதே போலத் தான்ஸேனும் இருந்தார். முடிந்தால் அவர்களை விட நூறு பங்கு அதிகம் சாதகம் செய்தவர் என்றும் புரிந்து கொள்ளுங்கள். ஆனால் அவர் பெரிய வாக்கேயக்காரர் அல்லது பண்டிதர் என்பதற்கான பிரமாணம் எனக்கு மும்பையில் இன்று வரை கிடைக்கவில்லையே.

தான்ஸேன் என்ற, சொந்தப் பெயருடைய ஒரு பிராமணன், இருந்ததால், அவர் கொஞ்சம் சமஸ்கிருதம் அறிந்தவராகவும் இருந்திருக்கலாம், ஆனால் இது போன்ற அறிவினால் கிரந்தம் எழுதுவது சாத்தியம் இல்லை. சங்கீதத்தின் தத்துவம் நிறைந்த சில த்ருவபதங்கள் இருக்கலாம் என்று யார் வேண்டுமானாலும் சொல்லலாம், இருக்கின்றன என்றும் சொல்கிறார்கள். நான் படித்த, அல்லது கேட்ட வரை இது வரை அப்படி ஒரு த்ருவபதமும் கிடைக்கவில்லை. உத்தம, மத்யம, கனிஷ்ட, விவாதி, அனுவாதி, ஸம்வாதி, ஸ்ருதி, மூர்ச்சனா, கிராமம், ஆகிய சொற்களை - புத்தகங்களில் ஆரம்பத்தில் கொடுக்கப்படும் அருஞ்சொற்பொருளைப் போல, உருப்படிகளில் வெறுமனே நடுவில் போடுவதால் அவை புரிந்து விட்டது என்று நிரூபிக்க முடியாது, அப்படிப் போடுவதால் ஒருவர் பெரிய வித்வான் என்றும் ஆகிவிட மாட்டார்கள். வேங்கடமகியின் விஷயம் அப்படி அல்ல. அவருடைய பத்யங்கள் ஒரு சங்கீத பத்ததியே ஆகும். அவர் 18 மேளங்களை கணித ரீதியாக 72-ஆகச் செய்தார், "கடபயாதி" எண் வடிவத்தைச் செய்து வைத்தார். ஜன்ய ராகங்களை இவ்வாறு நன்றாக உருவாக்கினார்,[38] இதனால் அவை ஒன்றோடொன்று சேர முடிந்தது. ஸ்வரக் குறிப்புக்களால் அவர் நல்ல கீதங்களை உருவாக்குதல் முதலியன, முதலியன. இப்படிப்பட்ட மனிதன், உலகப் புகழ் பெற யோக்யதை உள்ளவனாக இருப்பான் . சென்னை முழுவதிலும் இன்று கூட வேறு எந்த பத்ததியையும் யாரும் அறியாவண்ணம் அவர் சங்கீதத்தை அப்படி ஒன்றிணைத்திருக்கிறார். இப்படிப்பட்ட மனிதனின் பெருமையை யார் தான் பேச மாட்டார்கள்? இந்தப் பத்ததியின் சரியான பிரதிநிதி சுப்பராம தீக்ஷிதர் மட்டுமே என்று நான் எழுதித்தான் இருக்கிறேன். நான் வடக்கின் ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் அபிமானி, மற்றும் அதைப் போற்றுபவன் என்பது உண்மை. ஆனால் இரண்டு பத்ததிகளை ஒன்று சேர்த்து வேங்கடமகிக்கு ஹிந்துஸ்தானி உடை அணிவிக்கவும் எனக்கு ஆசை. சதுர்தண்டிபிரகாசிகை ஒரு முக்கியமான கிரந்தம் என்று நான் ஒத்துக் கொள்ள ஆரம்பித்திருக்கிறேன். தீக்ஷிதர் அதை எனக்குக் கொடுக்கப் போகிறார். அது கிடைத்தபின் மிகவும் ஆனந்தம் அடைவேன் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

நம் பக்கத்தில் புழக்கத்திலுள்ள ஹிந்துஸ்தானி ராகங்களிலும் இப்படிப்பட்ட கீதங்களை எழுதி அமைக்க வேண்டும் என்பது என் எண்ணம். ஆனால் நான் கவி அல்ல, அதனால் சொற்களின் அமைப்பு எப்படி அமையும் என்பது ஒரு பிரச்சினை. ராகங்களின் தாட், வர்ஜ்யம், அவர்ஜ்யம், வாதி, விவாதி முதலியவை முடிந்தால் நேரிடையாக குறிப்பாக, குறைந்த பட்சம் இவையாவது ஒவ்வொரு கீதத்திலும் வரத் தான் வேண்டும். இத்தகைய கீதங்கள் ராக

[38] [சுப்பராம தீக்ஷிதர் பரம்பரை வழிச்செய்தியாக, கடபயாதி ஸங்க்யைக்கேற்பவுள்ள பேர்களை வேங்கடமகி தான் செய்தார் என்று நம்புகிறார். அவர் காலத்தில் இத்தகைய நம்பிக்கை இருந்தது. பின்னர் வந்த அறிஞர்கள் வேங்கடமகியின் வழித் தோன்றலான முத்துவேங்கடமகி இந்தப் பெயர்களையும், ராகலக்ஷணம் என்று வழங்கப்படும் ராகப்பிரகரணத்தையும் செய்ததாகக் கருதுகிறார்கள்.]

ஸம்பந்தமான எழுத்து-அமைப்பு ஆகியவற்றைக் காட்ட அதிக உபயோகமாக இருக்கும், மேலும் இவற்றைக் குழந்தைகள் கூட மகிழ்ச்சியாகக் கற்றுக் கொள்ள முடியும்.

தெளிந்த சிந்தனை - எட்டையாபுரம்

பெயரைச் சொன்னவுடன் இந்தப் பகுதியில் உள்ள ஒவ்வொரு சங்கீத வித்வானும் நமஸ்காரம் பண்ணக்கூடிய ஒரு மனிதர் இங்கேயிருக்கும் சுப்பராம தீக்ஷிதர். இவருடைய கீர்த்தி எல்லாப் பெரிய நகரங்களிலும் பரவியிருக்கிறது. அவருடைய பெயரை எல்லாரும், அதிலும் குறிப்பாக சங்கீதத்தில் ஆர்வம் உள்ளவர்கள், எப்போதும் பெரிதும் மதிக்கிறார்கள். நான் நடத்திய பேச்சுவார்த்தையின் மூலம் இந்த மதிப்புக்கு அவர் பாத்திரமாகத் தகுதியானவர் தான் என்று எனக்குத் தோன்றியது. இந்த தீக்ஷிதர் என்னிடம் திறந்த மனத்தோடு பேசினார், சங்கீதத்தின் ஒளிவுமறைவுள்ள ரகசிய விஷயங்களைப் பற்றிக் கூட பேசினார் என்பதைக் கேட்டபோது இங்கேயுள்ள தீவான். ரா.அ. ஜகன்னாத செட்டி மிகவும் ஆச்சரியம் அடைந்தார். அவர் சின்னஸ்வாமி முதலியார் கூட ஆரம்ப காலத்தில், தீக்ஷிதரை மிகவும் வற்புறுத்த வேண்டியிருந்தது , ஏனெனில் அவர் [தீக்ஷிதர்] மிகவும் பழைய காலத்து எண்ணம் கொண்டவர், வெளிப்படையாகப் பேசவும் மாட்டார் என்றார். பிறகு எப்படி இந்த மாற்றம் ஏற்பட்டது என்று நான் தெளிவான மனத்துடன் உட்கார்ந்து யோசித்தேன். எனக்கு ஓரளவு வரை சுப்பராம தீக்ஷிதரை திராவிட சங்கீதத்தின் ப்ரோஃபஸர் [professor] எனலாம் என்று தோன்றுகிறது. ஆனாலும் அவர் ரத்னாகரம் முதலிய கிரந்தங்களின் ரகசியங்களை நன்றாகப் புரிந்துக் கொண்டு உபயோகிக்கக் கூடியவர் அல்ல, ரத்னாகரம் முதலிய கிரந்தங்களை நேராகப் படித்திருக்கிறார் என்றும் சொல்ல முடியாது, ஏனெனில் அவருக்கு சமஸ்கிருதம் நன்றாக வராது. வெறும் பரம்பரையில் கற்ற ஸ்லோகங்களை மனனம் செய்திருக்கிறார், அதன் அர்த்தத்தைப் பிறர் மூலம் புரிந்துக் கொண்டிருக்கிறார். ரத்னாகரத்தில், புரிந்துக் கொள்ளக் கடினமான அம்சங்கள் இவருக்கும் கடினமானதாக இருக்கிறது. அவர் பயந்து பயந்து ஷாட்ஜீ முதலிய ஜாதிகளை மேளங்களாக அறிவித்தவுடன், நான் பதினெட்டு ஜாதிகளின் பெயர்களைப் புத்தகத்திலிருந்து படித்துக் காட்டினேன், ஆங்காங்கே அவற்றின் லக்ஷணங்களையும் விளக்கினேன். எனக்கு அவர் இந்த விஷயங்களைக் கேள்விப்பட்டதே இல்லை என்று தோன்றியது, ஏனென்றால், நான் இதைச் சொன்னவுடன் மிகவும் ஆச்சரியம் அடைந்தார். வேங்கடமகியின் பூர்வப்பிரசித்த பதினெட்டு மேளங்கள் உண்மையில் ஜாதிகளாகத் தான் இருக்கலாம். இந்த அனுமானத்தை இதே காரணத்திற்காகக் தான் என்னிடம் சொன்னார். இந்த பதினெட்டு மேளங்களோடு அந்த ஜாதிகளை எப்படி சம்பந்தப் படுத்த வேண்டும் என்பது அவருக்கும் புரியவில்லை. ஜாதிகளின் சரியான ஸ்வரூபத்தை சொல்வதும் அவருக்கு சாத்தியமாகாது. எனக்குத் தெலுங்கு பாஷை புரியாது. அதனால் அவருடைய புத்தகத்தில் இந்த ஜாதிகளைப் பற்றி, வேறு என்னென்ன எழுதப்பட்டிருக்கிறது என்று பார்ப்பது சாத்தியமில்லை. ஆனால், எங்கள் பேச்சின் போது, இது குறித்து அவரிடம் ஏதேனும் விசேஷமான மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை. எந்த இடம் வரை போய் அதற்குப் பின்னர், நல்ல மாணவர்கள்

போய் அகப்பட்டுக் கொள்கிறார்களோ, அதே இடத்தில் ஸ்ரீ தீக்ஷிதரும் சிக்கிக் கொண்டு, அதிலிருந்து விடுபட வழி தேடிக் கொண்டிருக்கிறார் என்று தோன்றியது. பூனாவின் அண்ணா தாரபூரேயும் இதே இலக்கை நோக்கிப் பறந்திருந்தார். படிப்பவர் என் கர்வத்தை மனிப்பாராயின், நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஓரளவு சில விதங்களில் இந்த விஷயத்தைப் பற்றி நான் அதிகம் சிந்தித்திருக்கிறேன், மேலும் எனக்கு இந்தக் கஷ்டங்களிலிருந்து வெளிவர வழியும் புலப்படுகிறது. ஆனால் சில முக்கியமான குறிப்புகள் கிடைப்பதற்கு முன்னர், முழுதும் முடிவடையாத நிலையில் என் எண்ணங்களை மக்கள் முன்னிலையில் வைத்து அவர்கள் சிரிப்பதற்கு இடமளிப்பது புத்திசாலித்தனம் அல்ல என்று கருதுவதால், நான் பேசாமலிருக்கிறேன். ஸ்ரீ தீக்ஷிதர் ஸ்ருதி ஸ்வரத்தின் ரூபங்களைத் தன் புத்தகத்தில், படமாகப் போட்டுக் காட்டி இருந்தாலும், எந்த சமஸ்கிருத கிரந்தத்தின் படியும் அந்த "கரஹரபிரியாவின்" மேளத்தின் அந்த சுத்த ஸ்வரத்தின் ஸப்தகமாகத் தோன்றவில்லை. அவருடைய பகுதியில் வேறுபட்ட சுத்த ஸ்வரங்கள் பிரசாரத்தில் இருந்ததால், அவருக்கு அந்த சுத்த ஸப்தகம் புரியவில்லை, அதனால் எது பண்டைய ஸப்தகம் (சுத்த ஸ்வரங்களினால் ஆனது) என்பது சரியாகத் தெரியவில்லை, அவர் கிரந்தங்களில் கொடுக்கப்பட்ட ராகங்களின் பின் செல்லவில்லை என்பது தெளிவாகிறது. அந்த ராகங்களைப் பொறுத்த வரை அவரது அஞ்ஞானம் தெளிவாகத் தெரிந்தது. இருக்கட்டும். தீக்ஷிதருக்கு என்னுடன் பேசுவது நன்றாக இருந்தது. அவர் தன்னுடைய அனுபவம் மற்றும் என்னுடைய கிரந்த அறிவு இரண்டும் சேர்ந்தால் பல சந்தேகத்திற்குரிய , பெரும் விஷயங்களை சரியாக நிர்ணயிக்க முடியும், புதிய விஷயங்களைத் தேடவும் முடியும் என்று யோசித்தார். தீக்ஷிதரின் புத்தகத்தை நான் இன்னும் நன்றாகப் படிக்கவில்லை. ஆனால், அதில் எந்தெந்த விஷயங்களைப் பற்றிய தகவல் இருக்கிறது என்பதைப் புரிந்துக் கொண்டேன். நானும் தீக்ஷிதரை என்னுடம் ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை வைத்துக் கொள்ளலாம் என்று யோசிக்கிறேன். பாஷை தான் ஒரு பிரச்சனை என்பது உண்மை. தீக்ஷிதரின் பேச்சுக்களில் சிலவற்றை எழுத முடியாது என்பதும் உண்மை. ஆனால் எவ்வளவு முடியுமோ, அவருடன் நடந்த பேச்சுவார்த்தையை கேள்வி-பதில் வடிவத்தில் எழுதி வைத்திருக்கிறேன். தீக்ஷிதருக்கு என் மேல் எவ்வளவு அன்பு இருந்தது என்றால், என்னுடன் வருவதில் அவருக்கு உண்டாகும் எந்தவித கஷ்டங்களையும் அவர் மனதில் கொள்ளவே இல்லை. அவர் வயதில் 60-க்கும் மேற்பட்டவர் என்று நான் சொல்லி இருக்கிறேன். ஆனாலும் இளைஞரைப் போல் புதிய விஷயங்களைத் தேடுவதில் ஆர்வம் காட்டுகிறார். அவர் தன்னுடைய ராஜா ஒத்துக் கொள்ளாவிட்டாலும், நான் கூப்பிட்டால் வரத் தயங்க மாட்டார் என்பதுவரை தெளிவாகச் சொல்லி விட்டார். நாம் இருவரும் ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை ஒன்றாக இருக்கத் தான் வேண்டும். எனக்கு உங்கள் பணம் காசு பற்றி எந்தவிதக் கவலையும் இல்லை. இந்த வார்த்தையை ஒரு வயது முதிர்ந்தவர் சொன்னார் யாருக்குத் தான் தொண்டையை அடைக்காது? இதைத் தான் கல்விமேல் பற்று என்று சொல்வார்கள். நான் தீக்ஷிதரின் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கையில், அவர் ரத்னாகரத்திலிருந்து ஸ்ருதி, மூர்ச்சனா, கிராமம் முதலிய வெவ்வேறு அம்சங்களை அவற்றின் அர்த்தத்தோடு தெளிவாக எழுதித் தான் இருக்கிறார் என்பது தெரிந்தது. ஆனால் அவற்றைச் சரியாக சேர்த்து அவர் எழுதியதாகத் தெரியவில்லை. ஸ்ருதி பற்றிய படம் போட்டுக்

காட்டியிருக்கிறார், ஆனால் ரத்னாகரத்தின் மூல ஸப்தகம் , சுத்த ஸ்வரங்களோடு கூடிய "கரஹரப்ரியா"வா அல்லது வேறொன்றா என்பது அவருக்குப் புரிந்ததாகத் தெரியவில்லை. அவருடைய படங்களாலும் இது தான் தெரிந்தது. ஆனால் நான் வேண்டுமென்றே அதைப் பற்றிக் கேள்விகேட்டேன். அவர் பாவம், "ராரிரூ, காகிகூ" விலேயே சிக்கிக் கொண்டிருந்தார். இதே காரணத்திற்காக அந்த படம் மற்றும் அதன் அர்த்தம் அருங்காட்சியகத்தில் வைக்கும் சித்திரம் போலத் தோன்றியது. "பிராசீன பத்ததி" என்ற தலைப்பின் கீழ் அவர் இதையெல்லாம் எழுதி இருக்கிறார். அதன் உபயோகம் படிப்பவர்களுக்குத் தான் வெளிச்சம். நான் அவரிடம் இது குறித்து நேராக விவாதம் செய்ய ஆரம்பித்த போது, அதுவும் அவர் புத்தகத்தைப் பார்க்காமலேயே, சங்கீத ரத்னாகரத்தைக் கையில் வைத்தவாறு பேசிய பொது, அவருக்கு இது போன்றவரிடம் திறந்த மனத்துடன் பேச வேண்டியது அவசியம் என்று தோன்றியது. ஆனால் முக்கியமான விஷயங்களைப் பற்றி ஸ்ரீ தீக்ஷிதர் கூட சந்தேகத்தில் ஆழ்ந்து தான் இருக்கிறார் என்பதையும் அறிந்தேன். அவரால் வேங்கடமகி, தனக்கு முன்னர் இருந்த பதினெட்டு மேளங்களிலிருந்து எப்படி , எந்த அடிப்படையில் தன்னுடைய கற்பனை மாளிகையை நிர்மாணித்தார் என்பதைச் சொல்ல முடியவில்லை. அவர் அந்த மூல, பதினெட்டு மேளங்களை எனக்கு எழுதிக் கொடுத்தார், ஆனால் பதினெட்டு ஜாதிகளுடன் அவற்றின் தொடர்பை எப்படி நிலைநிறுத்துவது என்பது ஒரு பெரிய ரகசியமாக இருக்கிறது. இந்த விஷயம் பற்றித் தெளிவு பெற வேண்டியது அவசியமாகிறது. அவருக்கு ஸ்வரமேளகலாநிதியில் சொல்லப்பட்ட அந்த இருபத்தாறு மேளங்கள் எவை என்பது சரியாகத் தெரியவில்லை. நான் தீக்ஷிதரிடம், அவர் சதுர்தண்டிபிரகாசிகைப் புத்தகத்தை எனக்குக் கொடுத்தால், அவருடைய அனுபவத்தின் உதவியால் நான் வேங்கடமகியின் சிந்தனையின் வடிவத்தைப் புரிந்துக் கொள்வேன் என்று ஆர்வத்தைத் தூண்டினேன். அவர் இந்த உத்தேசத்தோடு அதை எனக்குக் கொடுக்க ஒத்துக் கொண்டார். வெவ்வேறு மேளங்களின் ஜாதி லக்ஷணங்களை அவர் புத்தகத்தில் சில வித்தியாசங்களோடு , அதன் அர்த்தத்தையும் தெலுங்கு மொழியில் கொடுத்திருக்கிறார். ஆனால் அதற்குப் பிறகு இதெல்லாம் என்ன ஆனது? அதற்குப் பிறகு பார்த்தால் அதே திராவிட பத்ததியின் வர்ணனை. அதாவது இந்தப் புத்தகமும் நம் பக்கத்துப் புத்தகங்களைப் போலத் தான் கொள்ள வேண்டும். பழைய ஸ்லோகங்களை மொழி பெயர்த்துக் கொண்டே இருக்க வேண்டியது, பிறகு கடைசியில் அந்த ஸ்லோகங்களுக்கு சம்பந்தமே இல்லாத சங்கீதத்தை எழுதுவதா?. ஆனாலும் இந்த வயது முதிர்ந்த மனிதர் இந்த விஷயத்தைப் பற்றி நிறைய யோசித்திருக்கிறார். அந்த ஸ்லோகங்களின் அர்த்தத்தைப் புரிந்துக் கொண்டிருக்கிறார். தன் புத்தகத்தில் சேர்த்தும் ஜாதிப் பிரகரணத்தை திராவிட பத்ததியில் எவ்வாறு, எவ்வளவு உபயோகிக்க வேண்டும் என்று சொல்லி இருக்க வேண்டும்.

ரத்னாகரத்தின் "தசவித" ராகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன, ஆனாலும் அவற்றில் நான்கு தான் இங்கே மிஞ்சி இருக்கிறது. ஆனால் நல்லதோ கேட்டதோ, எப்படி இருக்கிறதோ பாட்டு பிடித்ததோ அல்லது பிடிக்கவில்லையோ, இந்தப் பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு வடிவத்தில் ஒரு பத்ததி இருக்கிறது, மற்றும் அதன் சாஸ்திரத்தின் புத்தகத்தை எழுத முடிகிறது, அதை தீக்ஷிதர் எழுதியும் இருக்கிறார். மூர்ச்சனைகளின் உபயோகம், கிராமங்களின் உபயோகம், முதலியவற்றை தீக்ஷிதர் நன்றாக விளக்கி இருப்பதாகத் தெரியவில்லை. இதையும் மனத்தில்

வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பிரதேசத்தில் இவ்வளவு ஆழமாக இந்த விஷயத்தில் சென்ற வேறெவரையும் நான் பார்க்கவில்லை. சிலருக்கு இந்தப் பெயர்கள் கூடத் தெரியவில்லை. தீக்ஷிதர் தன் புத்தகத்தில் இந்தப் பழைய பத்ததியைப் பற்றி பலமாக அலசியிருக்கிறார், அது இங்குள்ள வித்வான்களுக்கு ஒன்றும் தெரியாததால், அவர்கள் ஆச்சரியம் அடைந்து விட்டார்கள். முடிவாக தீக்ஷிதர் வேங்கடமகியின், "ராரிரூ-காகிக்கூ" பத்ததியில் வந்து ஒட்டிக் கொண்டு விட்டார், இதில் தன்னுடைய கோட்டையைக் கட்டியும் இருக்கிறார். அவர் பண்டைய பத்ததியை கொஞ்சம் அத்யயனம் செய்திருக்கிறார். ஆனால் இந்த காரணத்தை மட்டும் வைத்துக் கொண்டு வேங்கடமகியின் பத்ததியில் அவருக்கு ஆளுமை இருக்கத் தான் செய்கிறது என்று சொல்வது தவறு. இவ்வாறு சொல்வது நல்லதும் அல்ல. யாராவது ஒருவர், அவர் ரத்னாகரத்தை அத்யயனம் செய்திருக்கிறார், அதனால் ஹிந்துஸ்தானியில் இன்றைய சங்கீதத்தின் எல்லா நியமங்களையும் அவரே செய்ய வேண்டும் என்று சொல்வது சரியாக இருக்காது. அது போலத் தான் இதுவும். நான் எங்கள் உரையாடலின் போது, மற்ற பாடகர்கள் பாடுவதைப் பற்றி உங்கள் கருத்து என்ன என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், அவர்கள் ராகங்களின் ஆரோஹண- அவரோஹணத்தை சரியாகப் பாடுவதில்லை என்றார். பாடுபவர்களுக்கு தங்கள் இஷ்டப்படி பாடுவது மிகவும் பிடிக்கிறது.எந்த ஸ்வரத்தை சதுர்தண்டியில் எப்படிப் பாட வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறதோ, அவர்கள் அப்படிப் பாடுவதில்லை, அதனால் அவர்களை மதிப்பதில்லை என்று சொன்னார். கமகங்களைப் பொறுத்த வரையிலும் நான் தனித்தன்மையைக் காத்துக் கொள்கிறேன் முதலிய முதலிய. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் எந்த விஷயங்களிலும் மாற்றங்கள் தேச கால நிலைகளுக்கேற்ப, நடந்துக் கொண்டு தான் இருக்கும் என்பதே. எந்த ராகத்தை எந்த ஸ்வரங்களில் பாடினால் வேங்கடமகிக்குப் பிடித்து , சரியாக இருந்ததோ, அதே ஸ்வரங்களின் இன்று முன்னூறு வருடத்திற்குப் பிறகுள்ள சங்கீதப் பிரியர்களுக்கும் பிடித்திருக்கத் வேண்டும் என்று சொல்வது மிகவும் தவறாகும். ருசிக்கேற்றவாறு மொழியில் மாற்றங்கள் வந்தன, ஆகாரத்தில் வந்தது, சுகமாக நம்மை வைக்கும் சாதனங்களில் வந்தன, அப்போது சங்கீதத்தில் ஏன் ஏற்படக் கூடாது? நான் தீக்ஷிதரிடம் அவர் புத்தகத்தில், "பிராசீன பத்ததி" என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள செய்திகள் இன்றைய திராவிடப் பத்ததிக்கு எவ்வளவு உபயோகப்படும் என்ற கேள்வியை எழுப்பினேன். இதற்கு எளிமையான பதில் எதுவும் அவரால் கொடுக்க இயலவில்லை. அதுவும் சரி தான். அந்தப் பத்ததிகள் இன்றைய சங்கீதத்தில் இல்லாத போது, அந்தப் பண்டைய பத்ததியின் நடைமுறை வடிவத்தைப் பற்றி என்ன சொல்ல முடியும்? நான் , சங்கீத ரத்னாகரத்தில் குறைந்த பட்சம், ஐந்து கிராம ராகங்களை, ஜாதி லக்ஷணத்தின் உதவியுடன், பாடிக் காட்டுங்கள் என்று அண்ணா தாரபூரேயிடமும் கேட்டேன். ஆனால் அவரால் ஒன்றைக் கூடப் பாட முடியவில்லை. இந்த கண்ணோட்டத்தில் பார்த்தால், நாகோஜீராவ் சொன்னது போல, அதன் அம்சங்களைப் பொறுத்தவரை பண்டைய சங்கீதம் வெறும் பாழடைந்த கட்டிடங்களைப் போல நின்றுவிடுகின்றன. ஆனால் என் முயற்சி இது போன்றதல்ல. நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்பதைத் தெளிவாகவே எழுதி இருக்கிறேன். அதை இங்கே மீண்டும் எழுத மாட்டேன். சுப்பாராம தீக்ஷிதரின் புத்தகத்தை நான் வெவ்வேறு இடங்களில் உள்ளவர்களிடம் அதைப் படித்து அதன் பாஷையை விளக்கும் படி

கேட்டேன். ஆனால் அதை யாராலும் செய்ய முடியவில்லை. சென்னைப் பகுதியில் தெலுங்கு மொழி மக்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது, என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நம் பக்கத்திலும் ஏறக்குறைய இந்த நிலைமை தான். மக்களுக்கு கிரந்தங்களைப் பற்றிய எந்த கவலையும் இல்லை. இதனால் பழைய சங்கீத கிரந்தங்களை விட்டுவிட்டு, முன்னே நகர்ந்து விட்டனர். அவற்றில் புதிய வழிகளில், புதிய சிந்தனைகளை நுழைத்திருக்கிறார்கள். சுப்பராம தீக்ஷிதரை நான் இவ்வாறு உபயோகிக்கலாம் என்று நான் நினைக்கிறேன்: அவருக்குத் தெரிந்த லக்ஷண கீதங்கள் மற்றும் பாடல்களை நான் கற்றுக் கொள்வேன். அவருக்கு என்னென்ன நினைவிருக்கிறதோ, அவற்றை அவர் வாயாலேயே பாடச்செய்து அதன் அர்த்தங்களுடன் புரிந்துக் கொள்ளவேண்டும். எங்கெல்லாம் அவருக்கு உதவி செய்ய முடியுமோ அதை நான் செய்வேன், மற்றும் புதிதாக ஏதேனும் கிடைத்தால் அதை எல்லாம் எழுதி வைப்பேன். நான் இங்கே ஒவ்வொரு நகரத்திலும் ஒரு சமயம் ஒன்றோ இரண்டோ நாட்கள் தான் தங்குவேன், அதனால் இங்கேயுள்ள விசேஷமான பாடல்களைக் கற்று நன்றாக சாதகம் செய்ய முடியவில்லை. எனக்கு இங்கேயுள்ள சங்கீதத்தின் அமைப்பின் ரகசியம் புரிந்து விட்டது. இங்கேயுள்ள "பாணி"யின் விஸேஷம் புரிந்து விட்டது. அதனால் அதிக எண்ணிக்கையில் உருப்படிகளைக் கற்றுக் கொள்வதன் பெருமை போய்விட்டது. இறைவனின் அருளால், சுப்பராம தீக்ஷிதர் இங்கு வந்தால், நன்றாக இருக்கும். இந்தப் பாடல்களை நான் அவரிடமே கற்று, மக்களுக்குச் சொல்லித் தருமாறு அவரிடமே சொல்வேன். சுப்பராம தீக்ஷிதரின் புத்தகத்தைப் பார்த்தால், அதில் சாஸ்திரீய ரீதியான தகவல்களின் முதற்பகுதி கொஞ்சம் தான் இருக்கிறது போலத் தோன்றுகிறது. புத்தகத்தில் இரண்டு பாகங்கள் இருந்தாலும், அதில் அதிகமான அளவு பாடல்களை ஸ்வர லிபியில் கொடுத்திருக்கிறார். இந்தப் பாடல்கள் நன்றாக இருக்கின்றன.

சில விடங்களில் திராவிட பத்ததியின் லக்ஷணகீதங்களின் அமைப்பையும் காட்டுகிறார் ஆனால் சாஸ்திரிய விஷயங்ககளை முதல் பாகத்தின் தொடக்கத்தில் மட்டும் சொல்லியிருக்கிறார். அதே பகுதியில், முதல் ஐம்பது பக்கங்களில் சங்கீதக்காரர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கொடுத்திருக்கிறார். இந்தப் பகுதி வரலாற்று ரீதியாக நன்றாக இருக்கிறது, நான் அதை மொழிபெயர்த்து வைக்கப் போகிறேன். இதற்குப் பிறகு சங்கீதத்தின் பிராசீன பத்ததி பற்றி, 7-8 பக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் சில சமஸ்கிருத ஸ்லோகங்களை எடுத்துக் கொண்டு அதன் அர்த்தம் விளக்கப்பட்டிருக்கிறது. அதிலொன்றும் விசேஷமாக இல்லை. மூன்றாம் பக்கத்தில் படம் வரைந்து சோமநாதரின் (ராகவிபோதம்) மற்றும் சார்ங்கதேவரின் ஸ்வர அமைப்பு காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் முக்கியமாக - அதிலும் எனக்குத் தெளிவில்லாத பகுதி - சார்ங்கதேவரின் கோமள ரி த க நீ" ஆகிவற்றின் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர தன் புத்தகத்தில் இதன் உபயோகத்தை எவ்வாறு சொல்லி இருக்கிறார்? இது குறித்து தீக்ஷிதர் ஒன்றும் சொல்லவில்லை. நான் இது பற்றி அவரிடம் கேள்வியும் கேட்டேன் ஆனால் அவரால் பதில் சொல்ல இயலவில்லை. தீக்ஷிதரின் புத்தகதைப் பற்றிய மதிப்பீட்டை ஹிந்து நாளிதழில் ஸ்ரீ சுந்தரம் அய்யர் செய்திருக்கிறார். அவரும் சோமநாதர் மற்றும் அவருடைய ஸ்வரங்களைப் பற்றி சூசகமாகச் சொல்லி இருக்கிறார். ஆனால் இந்த விஷயம் பற்றி அவரும் எதுவும் எழுதவில்லை. வெறுமனே ஸோமநாதரின் ஸ்வரங்களின் பெயர் மட்டும் கொடுத்திருக்கிறார். நான் வீட்டுக்குச் சென்ற

பின் இது குறித்து அவரிடம் கேட்கப் போகிறேன். முடிந்தால் திருமலய்ய நாயுடுவின் உதவியோடு கேட்பேன், இதனால் அவர்கள் இருவருக்கும் இது பற்றிப் பேச ஸந்தர்ப்பம் கிடைக்கும். இருக்கட்டும். எனக்கு ரத்னாகரம் மற்றும் ராகபோதத்தின் ஸ்வர பிரகரணத்தில் என்ன தொடர்பு இருக்கிறது என்று பார்க்கவேண்டும்.) புத்தகத்தின் ஏழாவது பக்கத்தில் வாக்கேயக்காரர்களின் லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன, அவை ரத்னாகரத்தின் பிரகீர்ண அத்தியாயத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன. நான் தீக்ஷிதரிடம், பிரகீர்ண அத்யாயத்தில் வெவ்வேறு "ஸ்தாயா" முதலியவை சொல்லப்பட்டிருக்கிறதே, அது பற்றி சிந்தித்திருக்கிறீர்களா? என்று கேட்டேன். அவர் இல்லையென்றார். அடுத்த அத்தியாயம், "சங்கீத லக்ஷண ஸங்க்ரஹ சங்கீத பிரகரணம்". இதில் முக்கியமாக ரத்னாகரத்தில் ஸ்ருதி, மூர்ச்சனை, கிராமம், அலங்காரம் இவை குறித்த ஸ்லோகங்களை எடுத்து அதன் அர்த்தம் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் நடைமுறை பிரயோகம் பற்றி தீக்ஷிதர் மௌனமாக இருந்து விடுகிறார். நான் இது போன்ற புத்தகத்தில் சுட்டிக் காட்டும் தவறு என்னவென்றால், கிரந்தக்காரர் நல்ல உபயோகமுள்ள தகவல் தருவதிலிருந்து பின் வாங்கி விடுகிறார், மற்றும் நேரடியாக தனக்குத் தெரியாது என்றும் சொல்வதில்லை. இன்றைய சங்கீதத்திற்கு கிராமம். மூர்ச்சனை ஆகியவற்றோடு சம்பந்தம் இல்லாவிட்டாலும் , பிராசீன சங்கீதத்தில் அவற்றின் உபயோகம் என்ன என்பதையாவது விளக்குவது அவர்களின் கடமை அல்லவா? வெறுமனே மொழிபெயர்த்துக் கொண்டு உட்கார்ந்து விடும் கிரந்தக்காரர்களை நான் புகழ முடியாது. அந்த பண்டைய காலத்தில் சங்கீதத்தை எப்படிப் பாடுவார்கள், அவற்றின் நியமங்கள் எப்படி இருந்தன, இவற்றைப் புத்தகத்தில் தெளிவாக்க வேண்டும். ஆனால் அந்த விஷயங்கள் தீக்ஷிதருக்கே தெரியாத போது பாவம், அவரால் கிரந்தத்தில் எப்படி எழுத முடியும்? ஸ்லோகங்களின் உதவியால் இருபத்திரண்டு ஸ்ருதிகள் எழுதப்படலாம், அவற்றின் மேல் ஸ்வரத்தை நிர்ணயிக்க முடியும், ஆனால் இவ்வளவு போதாது. அந்த ஸ்வரங்களின் மூர்ச்சனைகள், கிராமம், ராகம், ஜாதியோடு சம்பந்தத்தை நிர்ணயிக்க வேண்டும், பிறகு அதே மேளங்களாக இன்றைய சங்கீதத்தில் எவை, எப்படி, ஏன் என்பதையும் காட்ட முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் அவரை இந்த நூற்றாண்டின் உத்தமமான கிரந்தக்காரர் என்று சொல்வது அழகாக இருக்கும். இருக்கட்டும். தீக்ஷிதரால் கொடுக்கப்பட்ட அளவு விவரங்கள் கூட இன்று வரை ஒருவரும் கொடுக்கவில்லை. இந்த கோணத்தில் இந்தப் புத்தகத்தைப் பார்த்தால், தீக்ஷிதரின் புகழின் உண்மை விளங்கும். எனக்கு இப்போது கூட தெலுங்கு தெரியாது, புரிந்த பின், புத்தகத்தைப் பற்றி இன்னும் அதிகாரப் பூர்வமாக எழுத முடியும். என் நண்பர் திருமலய்ய நாயுடு தீக்ஷிதர் கமகப் பிரகரணத்தை நன்றாகக் கொடுத்திருக்கிறார் என்று சொன்னார். அவர் எனக்காக இந்தப் பகுதியை மொழிபெயர்த்துத் தரப் போகிறார். அது கிடைத்தபின் பார்ப்பேன்.

தெளிவான சிந்தனை :-
சார்ங்கதேவரின் வம்சாவளி - தெற்கு-வடக்கின் சேர்க்கையின் கனவு

திருநெல்வேலி **செவ்வாய்க்கிழமை**
தேதி 20 டிசம்பர்

குறிப்பு: சுப்பராம தீக்ஷிதர் தன்னை வேங்கடமகியின் பரம்பரையாகப் பாவிக்கிறார், அது மட்டுமன்று, தன்னை அவர் வம்சத்தில் வந்தவர் என்றும் நினைக்கிறார். வேங்கடமகியின் மருமகன் அவருக்குச் சொல்லிக் கொடுத்ததாகச் சொல்கிறார். வேங்கடமகியின் தந்தை கோவிந்த தீக்ஷிதர் பிரசித்தி பெற்ற தானப்பாச்சார்யாரின் சிஷ்யர். தானப்பாச்சாரியாரின் குரு சார்ங்கதேவர்., இவ்வாறு தன் பரம்பரையை தீக்ஷிதர் சொல்கிறார். இவ்வாறு இருக்கலாம் கூட. ஹிந்துஸ்தானீ சங்கீதத்தை முன்னேற்றம் அடையச் செய்வதில் சதுர்தண்டிப்பிரகாசிகையை உபயோகிக்க முடிந்தால், நமக்கு ஒரு பெரிய கௌரவமான பரம்பரை கிடைக்கக் கூடும். ஆனால் ரத்னாரத்தோடு சதுர்தண்டியின் தொடர்பை நல்ல விதமாக காட்ட முடிய வேண்டும். இப்போதும் தேசம் முழுவதும் பிரயாணம் செய்து, வெவ்வேறு வித்வான்களைச் சந்திக்க வேண்டும். என் மூலமாக இன்னும் என்னென்ன சேவைகளை இறைவன் வாங்கிக் கொள்ளப் போகிறானோ என்று எனக்கென்ன தெரியும்? என் கையால் வடக்கத்திய சங்கீதத்தின் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆழமான ஆசை இருக்கிறது, தேச முழுவதிலும் முக்கியமான பன்னிரண்டு ஸ்வரங்கள் ஒரே போல இருந்தால், தெற்கின் சாஸ்திரிய சங்கீதத்தின் சித்தாந்ததத்தை குறிப்பாக வேங்கடமகியின் எண்ணத்தை நிச்சயம் உபயோகிக்க முடியும். இங்கேயுள்ள ராகங்கள் வேறாக இருந்தாலும், பாடும் ரீதி வேறாக இருப்பினும், எல்லா இடங்களிலும் அடிப்படை தத்துவம் ஒன்றாக இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வதில் என்ன கஷ்டம் இருக்க முடியும். வடக்கில் இதை விட அதிக சாஸ்திரத்துவம் தெரிந்தால் அதைப் பற்றியும் சிந்திப்பேன், ஆனால் அவ்வாறு இல்லையென்றாலும் கூட, வேங்கடமகியை என் குருவாகக் கொள்வதில் எனக்கு எந்த சங்கோசமும் இல்லை. மொத்தத்தில், தேச முழுவதிலும் ஒரு பத்ததியை நிலைநிறுத்த அது ஒரு முயற்சியே ஆகும். என் பணிக்கு முதலில் எதிர்ப்பும் இருக்கும். ஆனால் சில காலம் சென்ற பின்,

என் மூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த வழி , எதிர்காலத்தில் அதிலும் குறிப்பாக படித்த சமூகத்திற்கு ஏற்றதாக இருக்கும், என்பது என் ஆசை. ராஜா டேகோரும் முயற்சி செய்திருக்கிறார். ஆனால் அவர் வடக்கின் ஹிந்துஸ்தானி சங்கீதத்திற்கு நல்ல பத்ததி கொடுத்திருக்கிறார் என்று நான் ஏற்றுக் கொள்ளவில்லை. எனக்கென்னவோ அவர் பண்டைய சமஸ்கிருத கிரந்தக்காரர்களின் பத்ததியை மீண்டும் நிலை நிறுத்த மட்டும் முயன்றிருக்கிறார். என்னிடம் இப்போதும் போதிய கருவிகள் இல்லை. ஆனால் என்னென்ன விஷயங்கள் தேவை என்பது குறித்த எண்ணம் எனக்குத் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. இதை இறைவனருளால் நினைவில் கொண்டு, இந்தப் பணியைச் செய்ய முடிந்தால் இது பெரும் பொறுப்பும் கூட. இறைவன் என்னை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவித்திருக்கிறான், இதுவும் ஒரு விதத்தில் அவனுடைய அருள் என்று தோன்றுகிறது. வங்காளம் மற்றும் வட இந்தியாவில் சாஸ்திர ரீதியாக என்னென்ன கிடைக்கக்கூடும் என்பதைப் பார்க்காமல், எதையும் தீர்மானிக்க முடியாது என்பதும் தெளிவாகிறது. எந்த இறைவன் என்னை இங்கே அழைத்து வந்திருக்கிறானோ அவனுக்கு மீதியுள்ள திசைகளில் என்னைக் கூட்டிச் செல்ல என்ன தடை இருக்கும்? எதிர்காலத்தில் உள்ள பணியை அவன் கையிலேயே ஒப்படைப்பது தான் சரி. ஆனால்

தெற்கின் ஸ்வர ஸப்தகத்தை வடக்கிலுள்ள பத்ததியில் போடுவது மட்டும் உசிதமானதாக இல்லை. இங்கே எப்படி மாயாமாளவம் ஆதி ஸப்தகமாக இருக்கிறதோ, அதே போல, பிலாவல் நம் பக்கத்தில் இருக்கிறது என்பதை எப்போதும் மறக்க்கக் கூடாது. நம் பக்கத்துப் பத்ததியை அதே சுத்த ஸ்வர ஸப்தகத்தின் அடிப்படையில் நிலை நிறுத்த வேண்டும். முதலில், இங்கே ராகங்களுக்கான நியமங்களைத் தீர்மானம் செய்திருக்கிறார்களே, அது போல நம் பக்கத்திலும் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். அதை நிர்ணயிக்க, வடக்கிலுள்ள அருமையான ஸம்ப்ரதாயப் பாடல்களைச் சேர்த்து, அவற்றைப் பற்றி சிந்தித்து மனனம் செய்ய வேண்டும். இந்தப் பாடல்களை உரிய நபர்களிடம் பெற வேண்டும். இந்தப் பாடல்களின் உதவியுடன், நியமங்களை நிர்ணயித்து, பத்ததியைச் செய்ய வேண்டும். அவை பிரசுரமான பின், அவற்றை மக்கள் விரும்பும் வண்ணம் செய்ய வேண்டும், மேலும் அதை நிலை நிறுத்த சேர்த்து வைத்த எல்லா ஸம்ப்ரதாயமான பாடல்களையும் பிரசுரிக்க வேண்டும். இவ்வாறு செய்த பின்பத்ததி மற்றும் பிரசாரம் அதாவது லக்ஷ்யம் மற்றும் லக்ஷணம், இவை ஒன்றிணைந்து அதற்கு மதிப்பு கிடைக்கும். ரத்னாகரம் முதலிய பழைய கிரந்தங்களோடு தொடர்பை நிலைநிறுத்தும் முயற்சி, பரம்பரையின் உன்னதத்தைத் தீர்மானிப்பதற்காகத் தான். இவ்வாறு தொடர்பைக் காட்டினால், ஆயிரம் வருடத்து வரலாறு தயாராகிவிடும். ஆர்ய மற்றும் திராவிட பத்ததிகள் முற்றிலும் வெவ்வேறாக இருந்தனவா? அவற்றில் ஒரே போல இருக்கும் பகுதிகள் எவை மற்றும் எப்படி இருந்தன? தேசமுழுவதிலும் பன்னிரண்டு ஸ்வரம் ஒரே போல எப்போது இருந்தது, எப்படி ஆனது என்ற கேள்வியும் சிந்திக்க வேண்டிய ஒன்று. திராவிட கலாச்சாரம் வடக்கிற்கும் வந்தது என்பது நாம் அனைவரும் படித்தது தான். அதன் மூலம் வடக்கின் பத்ததியின் மேல் ஏதேனும் பரிணாமம் ஆனதா இல்லையா? எப்போது, எப்படி? இதையும் பார்த்தால் நன்றாக இருக்கும்.

திருநெல்வேலி **செவ்வாய்க்கிழமை**

தேதி 20 டிசம்பர்

நாங்கள் எட்டையாபுரத்திலிருந்து கிளம்பி, இந்த இடத்திற்கு மாலை ஐந்து மணிக்கு வந்து சேர்ந்தோம். தங்குவதற்கான ஏற்பாடு எளிதாக இருக்க, எட்டையாபுரத்தின் தீவான் ஸாஹிப் அதாவது ஜகன்னாத செட்டி திருநெல்வேலியில் தன் பங்களாவின் குமாஸ்தாவிற்குக் கடிதம் கொடுத்திருக்கிறார். மதுரையிலுள்ள என் நண்பர் ராமஸ்வாமி பிள்ளை அவர்களும் ---- வேங்கட ஸ்வாமிக்குக் கடிதம் கொடுத்திருக்கிறார். நாங்கள் எட்டையாபுரத்து பங்களாவில் தான் தங்கினோம். மாலை கொஞ்ச நேரம் கழித்து தாமிரவர்ணி நதியைப் பார்க்கச் சென்றோம். எட்டையாபுரத்தின் சுப்பராம தீக்ஷிதர், சதுர்தண்டிபிரகாசிகையின் நகலைப் பெற வேண்டுமானால் நீங்கள் திருநெல்வேலியின் கிருஷ்ணஸ்வாமி அய்யரைச் சந்தியுங்கள் என்று சொல்லி இருந்தார். அவர் நாகரி லிபியில் எழுதித் தர ஆட்களை அழைத்து பிரதி எடுத்துக் கொடுத்து உங்களுக்கு அனுப்புவார். அவர் அறிவுரையின் படி, இன்றே ஏ. கிருஷ்ணஸ்வாமி-யைக் கண்டுபிடிக்க ஆள் அனுப்பியிருக்கிறேன். இவர் மிகவும் தார்மீகமானவர். ஐம்பது வருடத்திற்கும் மேற்பட்ட, புத்திசாலியான, பிரசித்தி பெற்ற பெரிய வக்கீல். அவர் நாளை காலை எட்டு மணிக்கு பங்களாவிற்கு வருவதாக பதில் அனுப்பினார். மாலை ஒன்றும் செய்ய

இயலவில்லை. எனக்குக் கிடைத்த தகவலின் படி, திருநெல்வேலியின் சங்கீதக்காரர்களில் முத்தையா பாகவதர் என்ற பெயருள்ள ஒருவர் இருக்கிறார் என்று தெரிந்தது. அவர் இங்கிருந்து கொஞ்சம் தொலைவிலுள்ள, ஒரு ஊரில் இருக்கிறார் என்று ஒருவர் சொன்னார். ஆனால் அவருடைய புகழ் சாஸ்திரம் அறிந்தவர் என்பதில் இல்லை. அங்கே போவதற்கு ரயில் வசதி இல்லாததால், போகும் எண்ணத்தைக் கை விட்டு விட்டேன். நான் தஞ்சாவூரில் இருந்த போது, அங்கே முத்தையா பாகவதர் என்ற பெயரில் இன்னொருவரைச் சந்தித்தேன். அவர் எனக்குப் பாடிக் காட்டி, 'அதீத அநாகத; விஷயத்தின் விளக்கமும் கொடுத்தார். அவரும் இந்த ஊரில் இருப்பதாக என்னிடம் சொன்னார். அவர் எனக்குச் சின்னஸ்வாமி முதலியாரின் 'ஓரியண்டல் ம்யூஸிக்' புத்தகத்தைத் தர ஒப்புக் கொண்டிருந்தார். அதனால் அவருடைய இடத்திற்கு நாளை போவதாகத் தீர்மானித்திருக்கிறேன்.

புதன்கிழமை
தேதி 21 டிசம்பர்

இன்று காலை ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யர் வந்தார். அவருடன் பெரிதாகப் பேச்சு வார்த்தை நடந்தது. நான் அவரிடம் என் உத்தேசம் முதலியவற்றைச் சொன்னேன்., இந்த மனிதர் மிகவும் மரியாதைப்பட்டவராக இருந்தார். இவர் சுப்பராம தீக்ஷிதரை மிகவும் புகழ்பவர். இவர் தெலுங்கு மொழியில் கவிதை முதலியவற்றை எழுதியிருக்கிறார். அவருக்கு சங்கீத ஞானம் இல்லாததால், அவருடனான பேச்சு வார்த்தையின் ஸாரத்தை இங்கே எழுதத் தேவையில்லை. அவர், "திருவனந்தபுரம் நகரத்தில் ராமசாந்த்ர பாகவதர் ஒரு மிகவும் பிரசித்தி பெற்ற வைணிகர், அவரை அவசியம் கேளுங்கள், அங்கே பழைய கிரந்தங்களின் நூலகமும் இருக்கிறது, அதனால் அங்கே உங்களுக்கு உபயோகமான சில ஓலைச்சுவடிகள் கிடைக்கும் சாத்தியம் இருக்கிறது" என்றார். அவர் திருவனந்தபுரத்தின் தீவானுக்கும், ஸ்ரீ கேரளவர்மாவுக்கும் கணபதி சாஸ்திரிக்கும் அறிமுகக் கடிதமும் எழுதிக் கொடுத்திருக்கிறார். நான் அதை உபயோகிக்கப் போகிறேன். மாலை நான் தஞ்சாவூரில் சந்தித்த முத்தையா பாகவதரின் வீட்டைக் கண்டுபிடித்தேன். மேலும் அவரிடம் புத்தகத்தைப் பற்றிக் கேட்டேன். அவர் நாளை புத்தகத்தை வரவழைத்து உங்களுக்கு திருவனந்தபுரத்திற்கு அனுப்பித் தருகிறேன். எனக்காகப் பாடுவதற்கு அமர்ந்தார், ஆனால் எனக்கு நேரமில்லாத காரணத்தால், மறுத்து விட்டேன்.

ஸரஸ்வதி மஹால் புத்தகாலயம் திருவனந்தபுரம் திருவாங்கூர் திருவனந்தபுரம், ராஜ சாத்திரம்

வெள்ளிக்கிழமை 23 டிசம்பர் 1904

நாங்கள் படகில் சவாரி செய்து , கொல்லம் போகும் பாதையில் சென்று இன்று காலை ஐந்து மணிக்கு 40 மைல் கடந்து, திருவனந்தபுரம் வந்தடைந்தோம். இங்கே வருவதற்கு முன், தஞ்சாவூர் வக்கீல் ஸ்ரீ கோபாலராவுடைய கடிதம் இங்கே வெங்கடராவிடம் வந்திருந்தது. அவர் எங்களுக்காக ராஜா சத்திரத்தில் நல்ல வீட்டை ஏற்பாடு செய்து வைத்திருந்தார்.

தங்குவதற்கான ஏற்பாடு நன்றாக ஆனது. சாப்பாட்டை முடித்துக் கொண்டு இரண்டு மணிக்கு இந்த ஊரின் மஹாராஜா கேரள வர்மாவின் முதல் ராணியின் சொந்தக்காரரான ஒரு பெரிய வித்வானுடன் சந்திப்பு நடந்தது. இவருக்கு திருநெல்வேலியின் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அறிமுகக் கடிதம் கொடுத்திருந்தார். கடிதம் மற்றும் கார்டை அனுப்பியவுடன், உடனே அழைப்பு வந்தது. பேச்சுவார்த்தையின் போது, இங்கே சங்கீதக் கிரந்தங்களைச் சேர்க்கும் நோக்கத்துடன் வந்ததாகத் தெரிவித்தேன். நான் சென்னையிலும் தஞ்சாவூரிலும் இருந்தபோது, இங்கே பேலஸ் நூலகம், பிரசித்தி பெற்றது,அங்கே சில கிரந்தங்கள் கிடைக்கும் என்று கேள்விப்பட்டேன். இரண்டாவது நோக்கம் உங்களுடைய இந்த ஊரில் ராமசந்த்ர மற்றும் மஹாதேவ பாகவதர் என்ற பெயரோடு இரண்டு சங்கீத வித்வான்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாட்டைக் கேட்டுவிட்டு, இது விஷயமாக சில தகவல்கள் பெறுவது. அவர், ராமசந்திர பாகவதர் கிராமத்திற்குச் சென்றிருக்கிறார் என்றார். அவரிடம் கணபதிசாஸ்திரி என்ற ஒரு பெரிய சமஸ்கிருத வித்வான் இருக்கிறாராம். ஆனால் விடுமுறை ஆனதால், இரவே திருநெல்வேலிக்குச் சென்று விட்டாராம். அவர் இருந்தால் பேலஸ் நூலகத்தின் கிரந்தங்களைப் பற்றிய தகவல் நன்றாகக் கொடுக்க முடிந்திருக்கும். இருக்கட்டும். இதற்குப் பிறகு அவர் தன் எழுத்தரை அழைத்து, பேலஸ் நூலகத்தின் கேட்டலாக்கை வரவழைத்து, என்னிடம் கொடுத்து, அதில் புத்தகத்தைப் பார்த்துக் குறித்துக் கொள்ளுங்கள் என்றார். நானும் அதற்கேற்ப குறித்துக் கொண்டேன், அதை நேராகச் சென்று பார்ப்பதற்காக நாளை மதியம் 2 மணிக்குச் செல்லத் தீர்மானித்தேன். இதற்குப் பிறகு அவரிடம் பிரதிகளைக் கேட்பேன். நகல்களை என் செலவில் சந்தோஷமாகக் கொடுப்பதற்கு அவர் தயாராக இருந்தார். ஸ்ரீ கேரள வர்மா மொழிகள் நன்கறிந்தவராக இருந்ததால் மிகவும் பெயர் பெற்றவராக இருந்தார். அவர் மிகவும் அறிவுள்ளவர். மக்கள் அவருக்கு வீணை வாசிக்கத் தெரியும் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர் எனக்கு வாசித்துக் காட்டவில்லை. அவருக்கு சங்கீத சாஸ்திர ஞானம் மிகக் குறைவே என்று சொன்னார். இதை அடுத்து அவர் சுப்பராம தீக்ஷிதரின் புத்தகம் பிரசுரமானது பற்றிச் சொன்னார். அந்தப் புத்தகம் எனக்கு எட்டையாபுரம் மஹாராஜா மூலம் கிடைத்திருந்தது, என்று நான் சொன்னேன். அந்தப் புத்தகத்தைப் பற்றி அவர் கருத்து என்ன என்பதை அறிய தீக்ஷிதர் ஆசைப்படுகிறார் என்றும் சொன்னேன். ஸ்ரீ கேரள வர்மா, நான் அந்தப் புத்தகத்தை யாரிடமாவது காட்ட வேண்டும் என்றார். அதற்குப் பிறகு நான் அவருக்கு எழுதுகிறேன். புத்தகம் மிகவும் பெரிதாக இருக்கிறது. இதற்குப் பிறகு மற்ற நகரங்கள், மற்றும் சீதோஷண நிலை பற்றிய பேச்சோடு அந்தப் பேச்சு வார்த்தை முடிந்தது. அவர் கொடுத்த கேட்டலாக்கில், நான் கீழ்க்கண்ட புத்த்கங்களைக் குறித்துக் கொண்டேன்.

1. சங்கீத சூடாமணி 2. சங்கீத சிந்தாமணி 3. சங்கீத ஸுதா 4. சங்கீத சுதாகர 5. ஸப்தஸ்வர லக்ஷணம் 6. ஸ்வரதாளாதி லக்ஷணம் 7. ஸ்வர சிந்தாமணி 8. சங்கீத ஸர்வார்த்த ஸார ஸங்க்ரஹம் 9. சபாரஞ்சனம்

சனிக்கிழமை 3 மணிக்குப் பிறகு

தீர்மானித்தபடி, இன்று ஸரஸ்வதி மஹால் நூலகத்தைப் பார்க்கப் போனேன். அங்கே பார்த்த ஒரு விந்தையான பழக்கம் இவ்வாறாக இருந்தது. நூலகத்தின் எழுத்தர் ஹரிராய் என்ற மஹாராஷ்டிர பிராமணர் அழைக்கப்பட்டிருந்தார். அவர் , நூலகத்தில் சரஸ்வதி வாசிப்பதால், எவ்வளவு அவசியமோ அவ்வளவு மட்டுமே துணி போட்டுக் கொள்ளவேண்டும், காட்டிய வேட்டி மற்றும் சரீரத்தை மறைக்க ஒரு துண்டு என்ற இரண்டு வஸ்திரங்களை மட்டும் போட்டுக் கொள்ளவேண்டும் - நீங்களும் அப்படியே செய்யுங்கள் என்றார். ராஜாவின் அரண்மனையில் இவ்வாறு திறந்த உடம்புடன் செல்வது சற்று விசித்திரமாக இருந்தது. ஆனால் வேறு வழியில்லை. காலில் செருப்பு போட்டுக் கொள்ளவில்லை. வெறும் இரண்டு வஸ்திரங்களோடு உள்ளே சென்றேன். அங்கே ஹிஸ் ஹைனஸ் கேரள வர்மா தன் எழுத்தர்களை முதலிலேயே அனுப்பிக் கொடுத்திருந்தார், அவர் எனக்காக, சில ஓலைச்சுவடிகளை முன்னதாகவே அனுப்பி மேஜை மேல் வைத்திருந்தார், தஞ்சாவூரோடு ஒப்பிட்டால் இந்த நூலகம், அவ்வளவு பெரிதல்ல என்பது விரைவிலேயே தெரிந்தது. அங்கேயுள்ள புத்தகங்களின் கேட்டலாகும் என்னிடம் இருக்கிறது. இதை விட தஞ்சாவூர் நூலகம் இருபத்தைந்து மடங்கு பெரிது. சங்கீதத்தைப் பற்றி நான் குறித்து வைத்துக் கொண்ட புத்தகங்களுள், சங்கீத சிந்தாமணி அதிகம் உபயோகமாக இருக்கவில்லை. நிருத்யத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

(2) சங்கீத சூடாமணி - இந்த சிறிய புத்தகம் தாளபத்திரத்தில் இருந்தது. இதன் முழு பிரதியைக் கேட்டிருக்கிறேன்

(3) சங்கீத சுதாகர - இதில் இரண்டாவதான தாளாத்யாயம், ஜாதி லக்ஷணம் மற்றும் ராக லக்ஷணம் ஆகிய 10 பக்கங்களைக் கேட்டிருக்கிறேன்.

4. சங்கீத சுதா - இந்த கிரந்தத்திலிருந்து 66 முதல் 82 வரையான 16 பக்கங்களைக் கேட்டிருக்கிறேன்.

5. ஸ்வரதாளாதிலக்ஷணம் - இதிலிருந்து சமஸ்கிருத ஸ்லோகங்களை மட்டும் கேட்டிருக்கிறேன்.

இதைத் தவிர "சங்கீத ஸர்வார்த்த ஸார ஸங்க்ரஹம்" என்ற பெயருள்ள புத்தகம், நூலகத்தின் இரண்டாவது கட்டிடத்தில் இருக்கிறது. அதைப் பார்க்க நாளை செல்ல இருக்கிறேன். மொத்தத்தில், இவ்வளவு தெரிந்தது. என்ன தான் திருவாங்கூர், மிகவும் பழைய சமஸ்தானமாக இருந்தாலும், இங்கே இது குறித்து சாஸ்திரிய விஷயம் கிடைக்கும் சாத்தியம் இல்லை. இங்கேயுள்ள பிரசித்தி பெற்ற சங்கீதம் அறிந்த பாகவதர்கள் இருவரும் ஊரில் இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. அவர்கள் விரைவில் வருவார்கள் என்பது தெரியாததால், அவர்களைக் கேட்பது இப்போது சாத்தியம் இல்லை. இங்கே இது பற்றிப் பேசுபவர்கள், வேறு யாரேனும் கிடைத்தால், நான் நிச்சயம் பேசுவேன். என்ன கிடைக்கிறது என்பதைப் பார்ப்போம்.

மேலே சொல்லப்பட்ட புத்தகங்கள் மலையாளம் லிபியில் எழுதப் பட்டிருந்ததால், மஹாராஜா கேரள வர்மா தன்னுடைய எழுத்தரை அதைப் படிக்கச் சொல்லி இருந்தார். அவர் படித்ததிலிருந்து, அதில் பல விஷயங்கள் அப்படியே ரத்னாகரத்திலிருந்து எடுக்கப் பட்டிருந்தது என்று தெரிந்தது. ஆங்காங்கே அமைப்பும் சரியாக இருக்கவில்லை. ஜாதி பிரகரணத்திற்குப் பிறகு கிராம ராகம் போன்றவை. பிரகீர்ணகாத்யாயம், மற்றும் வாத்யாத்யாயத்தில், வெவ்வேறு விதமாக அதே வீணைகளின் அதே போன்ற வர்ணனைகள். இதன் மூலம் இந்த எல்லா கிரந்தங்களும் ரத்னாகரத்திற்குப் பின்னர் வந்தது என்பது தெரிந்தது. யார் கண்டார்கள் அதற்கு முன்னரும் இருந்திருக்கலாம். ஆனால் ரத்னாகரத்தைப் போன்ற விஷயங்கள் அவற்றில் இல்லை, அதனால் அப்படிச் சொன்னேன். நிருத்யாத்யாயம் மற்றும் வாத்யாத்யாயம் எனக்கு இப்போது தேவை இல்லை. வாத்யாத்யாயம் மற்றும் நிருத்யாத்யாயம் இல்லை அதனால் அந்தப் பகுதிகளைப் படிக்கவே இல்லை.. ஸ்வரம்,ராகம் , மற்றும் தாளத்தின் பகுதிகள் ஆங்காங்கே பிடித்திருந்தன. இங்கே தெளிவாக எளிதாக எழுதுபவர்கள் அதிகம் இல்லை. நூலகத்தின் எழுத்தர் ஹரிபந்த்-திற்கு சமஸ்கிருதம் நன்றாக வருவதில்லை, இந்த துரதிர்ஷ்டவசமான நிலையால், கையில் என்னென்ன கிடைக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நம் பக்கத்தில் ரத்னாகரம் பிரசித்தி பெற்றதாக இருப்பதால் இந்த மற்ற கிரந்தங்களுக்கு பெரிதாக முக்கியத்துவம் இல்லை. ஒரு கிரந்தத்தில் முக்கியமான பதினைந்து மேளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்தது ஒரு லாபகரமான விஷயம். அந்த கிரந்தம் சங்கீத ஸுதா. அதில் ராகப் பிரகரணம், ஜாதிப் பிரகரணம், முதலியவை இருக்கிறது மற்றும் 18 மேளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன, அவற்றின் பெயர்கள் பின்வருமாறு: -

1. வராடி 2. குர்ஜரீ 3. வராளீ 4. ஸ்ரீ 5. பைரவீ 6. சங்கராபரணம் 7. ஹரிகாம்போஜி 8. வசந்தபைரவி 9. சாமந்த 10. காம்போதி 11. முகாரீ 12. சுத்தராமக்ரியா 13. கேதார கௌள 14. ஹிஜேஜ் 15. தேசாக்ஷீ

ரத்னாகரத்தில் இது போன்ற அமைப்பு இல்லாததால், இந்த கிரந்தம் அதற்குப் பின்னர் வந்தது என்று கொள்ளலாம் என்று சொல்கிறேன். மேளப் பிரகரணம் மிக முக்கியமானது, ஏனெனில் நமக்கு வேங்கடமகியோடு தொடர்பை நிரூபிக்க வேண்டும். வேங்கடரின் அமைப்பு புதியது என்பதும் விவாதத்திற்கப்பாற்பட்டது.. ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் தன் புத்தகத்தில் ஆறாம் பக்கத்தில் அவருடைய சரித்திரத்தை எழுதி வைத்திருக்கிறார். ஜாதி மற்றும் மேளத்தின் பரஸ்பரத் தொடர்பை நிலைநிறுத்த வேண்டியது மிக உபயோகமான ஒன்று. ஜாதியிலிருந்து மேளங்கள் தோன்றின என்று நாம் எதிர்காலத்தில் வேங்கடமகியை ஏற்போம், ஏனெனில் அந்த பத்ததி, உயிரோடு , மற்றும் முழுமையானதாக இருக்கிறது. உதாத்தம், அனுதாத்தம் ஆகியவற்றின் விவரம் எங்கெங்கே இருக்கிறது , எவ்வாறு இருக்கிறது என்பதை ஆராய வேண்டிய திக்கு இப்போது எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. ஆனால் இறைவனருளால், "சங்கீத சிந்தாமணி என்ற கிரந்தத்தின், ஏறக்குறைய 100 ஓலைகளைப் பார்க்க முடிந்தது. உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் இந்தச் சொற்களின் பிரயோகத்தைப் பற்றிய ஒரு முழுமையான கிரந்தம் பார்க்க முடிந்தது. குறிப்பிட்ட மனிதர், ஆணையிட்டால், ஸ்வரம் மேலே சொல்லப்படுவதால், குறிப்பிட்ட ஸ்வரம் ஆகிவிடுகிறது; குறிப்பிட்ட மனிதர் மெதுவாகப் பேசுவதால், குறிப்பிட்ட ஸ்வரம் வெளிவருகிறது, இவ்வாறு இந்த விஷயம் அதில் இருக்கிறது. எனக்கு அது பிடிதிருந்தது. ஆனால்

நகலின் செலவு கூடி விடுமோ என்பதால் அதை இன்றே அதைக் கேட்கவில்லை. பின்னர் ஒரு நாள் அதை வாங்கிக் கொள்ள வேண்டியது தான். அங்கே ஒரு சமஸ்கிருத சாஸ்திரி அமர்ந்திருந்தார், அவர் இந்தப் புத்தகத்தின் இந்த அம்சம், வையாகாரணிகளுடையது, உங்கள் பக்கத்திலும் கிடைக்கும் என்றார். எப்படியோ, அதை நான் வாங்கிக் கொள்ளவில்லை, புத்தகத்தின் பெயர் "சங்கீத சிந்தாமணி" என்றிருக்கிறது, அதை அங்கே பரத கிரந்தம் என்ற தலைப்பின் கீழ் வைத்திருக்கிறார்கள் என்பது சிந்தனைக்குரியது. .ஒரு வேளை உதாத்தம், அனுதாத்தத்தின் விளக்கத்தினால், நம்முடைய ஸப்தஸ்வரத்தின் ஸப்தகம் எவ்வாறு உண்டானது என்பதை அதிலிருந்து வெளிக்கொணர முடியும்.

ரத்னாகரத்தின் ஜாதி பிரகரணத்தில், முதல் எட்டு ஜாதிகளை விளக்கும் போது, "वराटी दृश्यते" என்று எழுதப்பட்டிருக்கிறது, இதனால் அந்த சமயத்தில் என்னென்ன ராகங்கள் இருந்தன என்று தெரிகிறது. (சங்கீத சுதா கிரந்தத்தில் முதல் மேளம் வராடி) ஆனால் இதை மட்டும் வைத்து திருப்தி அடைய முடியாது. சுப்பராம தீக்ஷிதரின் சொற்படி, வேங்கடமகி தனக்கு முன் இருந்த பூர்வப்பிரசித்த மேளங்களின் தெளிவான பெயர்களை எழுதி அதைத் தன் பத்ததியில் காட்டியிருக்கிறார். இப்போது கூட ஜாதிக்குப் பிறகு "கபால" த்தின் அமைப்பு ஏன் செய்யப்பட்டது என்ற விஷயத்தைப் பற்றிய விளக்கம் சொல்லக் கூடிய வித்வான் யாரும் இங்கே கிடைக்க மாட்டார்கள். இங்கே ரத்னாகரத்தைப் பார்த்தவர்களே கிடைக்காத பொது, இது பற்றிய அறிவு எங்கிருந்து வரும்? எனக்கு ராமாமாத்யர் மற்றும் வேங்கடமகியின் புத்தகங்களின் உதவியால் பதினெட்டு ஜாதிகளிலிருந்து முக்கிய மேளங்களை எடுக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. அவ்வாறு செய்ய முடிந்தால், என்னால் ஒரு பெரிய வேலை ஆனது என்று நினைத்துக் கொள்வேன். "வராடி" என்ற பெயர் இங்கே கேட்கிறோம். ராம்புர் நவாப் வந்த பொது, அவருடைய பாடகர் அப்துல்லா கான் எனக்கு, மாலையில் பாடும் பூர்வீ மேளத்திலிருந்து வந்த "பராடி" பாடிக் காட்டினார். சுப்பராம தீக்ஷிதர் பண்டைய பதினெட்டு மேளங்களின் பெயர்களைக் கொடுத்திருக்கிறார். அதை நான் மேலே எழுதியும் இருக்கிறேன். ஆனால் அவற்றின் ஸ்வரங்கள் எந்த ஆதாரத்தை வைத்து எழுதப்பட்டிருக்கின்றன என்பதை சதுர்தண்டிப் பிரகாசிகையைப் பார்த்தால் தான் புரியும். ரத்னாகரத்தின் மேளங்கள் மற்றும் ராகங்களிலிருந்து பல பெயர்கள் இங்கே பிரசாரத்தில் இருக்கின்றன. இங்கே கிரந்தங்களும் கிடைக்கின்றன. மேலும் அதை எப்படி ஆராய வேண்டும் என்பது பற்றியும் எனக்குப் புரிந்து விட்டது. அதனால் வீடு திரும்பிய பின், இந்த வேலையைச் செய்வேன்.

இங்கே கிருஸ்துமஸ்-ற்கு முன் தினம் மாலை வந்ததால் இங்கேயுள்ள பெயர் பெற்ற இரண்டு மூன்று பாடகர்கள், ஊரில் இல்லை. சங்கீதத்தில் தேர்ச்சி பெற்ற பாகவதர் மற்றும் வக்கீல் கிருஷ்ணஸ்வாமி அய்யர் இருவரும் வெளியில் சென்றிருக்கிறார்கள். இதனால் இவர்களைச் சந்திக்க முடியவில்லை. அப்படியும் என் நண்பர், நூலக எழுத்தர் ஹரிராவ்ஜீ, மற்றும் கோபால ராவ் (தஞ்சாவூரிலுள்ள மாமா)விடமிருந்து ராஜ்மகாலின் சங்கீதக் கலைஞர்களுள் மூன்றாமவரான ராமஸ்வாமி பாகவதர் ஊரில் இருக்கிறார், இவரை இங்கே பெரிய சங்கீதக் களைஞர் என்று கருதுகிறார்கள் என்று மதியம் தகவல் வந்தது. அறிமுகம் முதலியவை முடிந்த பின், அவர் தன் மகனின் இனிமையான குரலினால் இங்கேயுள்ள பல

ராகங்களைப் பாடிக் காட்டினார். அவர் பகவாஜ்ஜோடு நன்றாகப் பாடினார். கர்நாடக வழியில் தான் பாடினார். ஆனால் ஒரு ஸ்வாரஸ்யமான விஷயம் என்னவென்றால் இந்தப் பையனின் பாட்டில், நடுநடுவே ஹிந்துஸ்தானி டுமரி யின் தான்-கள் வந்துக் கொண்டிருந்தன. நான் பாகவதரிடம் உங்கள் தேசத்துப் பாடலில் இந்தப் பகுதி இங்கே சில வருடத்திற்கு முன் தான் வந்திருக்குமா என்று கேட்டேன். அவர் இந்தப் பையன் ஹரிதாசரின் வேலையைக் கற்றுக் கொண்டிருக்கிறான் என்று விளக்கினார். அதனால் அவற்றில் திண்டி, சாகீ, முதலிய உருப்படிகளைக் கொஞ்சம் அப்பியாசம் செய்திருக்கிறான். நான் சொன்னவுடன், அவன் பாடிக் காட்டினான். அவற்றில் கர்நாடக வழி வந்துக் கொண்டிருந்தது. நான் அவனை வற்புறுத்தி, ஹிந்துஸ்தானி வழியைக் காட்டினேன். அவனுக்கு அது பிடித்திருந்தது. பிறகு அவரிடம் எனக்கு சாஸ்திரம் பற்றிப் பேச வேண்டும் என்று சொன்னேன். அவர் ஒத்துக் கொண்ட பின், அவருடன் பேச்சு வார்த்தை இவ்வாறு ஆரம்பமானது.

ராமஸ்வாமி பாகவதருடன் உரையாடல்

கே: சிஷ்யர்களுக்கு முதல் முதலில் எந்த ஸ்வர ஸப்தகத்தைக் கற்றுக் கொடுக்கிறீர்கள்?

ப: மாயாமாளவ-த்தை

கே: இது பதினைந்தாவது அல்லவா, முதல் பதினான்கை விட்டு விட என்ன காரணம்?

ப: சரியான காரணத்தை என்னால் சொல்ல இயலாது. ஆனால் அந்த கனகாங்கி குழந்தைகளுக்குப் பாடுவதற்குக் கடினம். என்பது எல்லோருடைய அனுபவமாக இருக்கிறது. மாயாமாளவத்தில் ஆரம்பித்தால் தான் சரியாக அமைகிறது, அது பிடித்தும் இருக்கிறது, என்பதிலும் ஒரு விஷயம் இருக்கிறது

கே: மேளங்களைச் செய்தது யார்? எப்போது செய்யப்பட்டது?

ப: தெரியாது

கே: நீங்கள் உங்கள் சங்கீதத்திற்கு ஏதேனும் ஆதாரப் பூர்வமான கிரந்தமாக ஏற்கிறீர்களா? அதற்கேற்பப் பாடுகிறீர்களா?

ப: ரத்னாகரத்தை ஆதார கிரந்தமாகச் சொல்கிறார்கள். ஆனால், நான் அதைப் பார்த்ததில்லை. பெயர் மட்டும் கேட்டிருக்கிறேன்.

கே: பிறகு ஸ்ருதி, மூர்ச்சனை, கிராமம் , அலங்காரம் முதலிய சொற்களையும் நீங்கள் அறிந்ததில்லை இல்லையா ?

ப: இல்லை. நான் இந்த விஷயங்களைப் பற்றி தெரிந்து தான் படிக்கவில்லை. இதனால் வீணான மோதல் ஏற்படும், மற்றும் இது போன்றவைகளால் நன்றாக வாயால் பாடுவது கூட

முடியாமல் போய் விடுகிறது.

நான்: இந்தப் பேச்சுகளுக்கும் பாட்டுக்கும் நேரடியான சம்பந்தமே இல்லை. பாட்டிற்கு அப்பியாசம் செய்தால் போதும், அது பாட்டுக்கு வந்து விடும். இரண்டும் செய்ய முடியும். நான் பாடுபவன் அல்ல, ஆனால் எனக்கு பாட்டு வரும். நீங்கள் ஏதேனும் ராகத்தைப் பாடிக் காட்டினால், நான் அதை அப்படியே பாட முடியும். (பையனின் கையிலிருந்து தம்பூராவை வாங்கிக் கொண்டு நான் தனாஸ்ரீ, முல்தானி , பூர்வீ முதலியவற்றைக் கொஞ்சம் பாடிக் காட்டினேன்). ராகத்தின் சாஸ்திரத்தில் நீங்கள் வீண் விவாதம் என்று சொல்கிறீர்களே அதையும் நான் செய்வேன்.

பாகவதர்: நீங்கள் பாடிய ராகங்கள் எங்கள் பக்கதிலும் இருக்கிறது, அதை நீங்கள் சரியாகவே பாடினீர்கள். நான் ஏதோ கொஞ்சம் பாடி என் பிழைப்பை நடத்துகிறேன். அரசிடமிருந்து ஊதியம் வாங்குகிறேன், அதனால் என் பிழைப்பு நடக்கிறது. எனக்கு யார் சாஸ்திரம் சொல்லிக் கொடுப்பார்கள்?

நான் : இங்கே மஹாதேவ பாகவதர் மற்றும் ராமசந்திர பாகவதர் பிரசித்தமானவர் என்று கேள்விப்படுகிறேன்.

பாகவதர்: ஆம். ராமசந்திர பாகவதர் நன்றாக வீணை வாசிப்பார், அவருடைய வாசிப்பு இங்கேயுள்ள பாணியின் படி இருக்கும். நீங்கள் சொல்லும் சாஸ்திரம் அவருக்கு வரும் என்று என்னால் சொல்ல முடியாது. இப்போது அவர் இங்கே இல்லை. இல்லையென்றால் உங்களுக்கு அவரை நேரில் கேட்கும் அனுபவம் கிடைக்கும். அவர் விடுமுறைக்காக பாலக்காட்டுக்குப் போயிருக்கிறார். இங்கே இருந்தால் அவர் உங்கள் கேள்விகளுக்கு என்னென்ன பதில் சொல்லி இருப்பார் என்பதை நானும் பார்த்திருப்பேன்.

பாகவதர் ஹரிராவின் மூலம் பேசிக் கொண்டிருந்தார். அவருக்குக் கிரந்தங்களைப் பற்றியெல்லாம் தெரியாவிட்டாலும் இங்கிருந்து 40 மைல் தொலைவில் பத்மநாபபுரத்திலுள்ள அவர் வீட்டில் ஓலைச் சுவடியில் எழுதப் பட்டிருக்கும் சில கிரந்தங்கள் இருக்கின்றன. நான் சொன்னதன் பேரில், அவர் அந்த கிரந்தங்களை இங்கே கொண்டு வரப்போகிறார், ஹரிராவ் அதை நாகரி லிபியில் எழுதி என்னிடம் அனுப்பப் போகிறார். அதில் என்ன எழுதி இருக்கிறது என்று பார்ப்போம்.

கே: சதுர்தண்டி அல்லது வேங்கடமகி என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ப: இல்லை

கே: சுத்த, சாயாலக,ஸங்கீர்ண ராகங்களின் அர்த்தம் என்ன?

ப: தெரியாது

கே: கனராகம் என்றால் என்ன?

ப: தெரியாது

கே: கீத லக்ஷணம் அல்லது லக்ஷண கீதம் உங்களுக்குத் தெரியுமா?

ப: எனக்குத் தெரியாது. சிலர் அதைக் கொஞ்சம் பாடுவார்கள்

கே: இங்கே நீங்கள் யாராவது கோவிந்தரின் அஷ்டபதிகளைப் பாடக் கேட்டிருக்கீர்களா?

ப: பழைய வழியில் யாருக்கும் பாடத் தெரியாது. வெறுமனே அவர்களே கற்பனை மூலமாக அங்கே இங்கே இரண்டு நாலு பேர்கள் பாடுவார்கள்.

கே: உங்களுக்குத் தாளத்தின் லக்ஷண ஸ்லோகங்கள் தெரியுமா?

ப: இல்லை

கே: இங்கே வேறு என்ன தாளங்கள் மிகவும் பிரபலமாக இருக்கின்றன?

ப: ஆதி, ஜம்ப, ரூபகம், த்ரிபுடை

கே: இதன் மற்ற ஜாதிகள் இருக்கின்றனவே, அவை?

ப: பாடலில் மிக அதிகமாக வருவதில்லை. ஆனால் பாடகர்கள் அவற்றில் சிற்சிலவற்றை அமைக்கிறார்கள்.

கே: ஆலாபனைக்கு என்ன நியமம்?

ப: அதை என்னால் சொல்ல முடியாது

கே: லகு குரு மேரு ஆகியவற்றைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

திருவந்தனந்தபுரம், திருவாங்கூர் **செவ்வாய்க்கிழமை**

தேதி 26 டிசம்பர் 04

மஹாராஜா கேரள வர்மாவின் சங்கீத ஈடுபாடு

இன்று காலை ஹிஸ் ஹைனஸ் கேரள வர்மாவிற்கு ஆள் மூலம் கடிதம் அனுப்பி, எனக்கு வேண்டிய கிரந்தங்களைக் கேட்டிருக்கிறேன். கேரள வர்மா ஹரிராவ் வக்கீலிடம் நகலை சீக்கிரம் தயார் செய்யும்படியும் அது முடிந்தவுடன் எனக்கு அனுப்பித் தரும்படியும் உத்தரவிட்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். கேரள வர்மாவின் முக்கிய எழுத்தர் கூபஸ்வாமி அய்யங்கார் என்னைத் தேடி வந்தார். அவர் இதை என்னிடம் சொன்னார். ஹரிராவும் வந்து அவருடைய முதலாளி நகலெடுக்கும் வேலையை விரைவில் முடிக்க உத்தரவிட்டுள்ளதாகக் கூறினார். இது மிகவும் நல்லதாக அமைந்து விட்டது. ஸ்ரீ வக்கீல்

கிருஷ்ணஸ்வாமியின் உதவியையும் சொல்ல வேண்டும். அவரும் இது பற்றிக் கடிதம் எழுதி இருக்கிறார். தீவான் ஸ்ரீ மாதவராவும் மிகவும் பணிவான மனிதர். அவரும் சொந்தமாக அச்சுக் கூட்டம் வைத்திருப்பதாகச் சொன்னார். அதனால் உங்களுக்கு முக்கியமாகத் தோன்றும் ஓலைச்சுவடிகளை எழுதித் தந்தால் அவற்றை முதலில் அச்சிட அவர் உத்தரவு கொடுப்பார்.உங்கள் முயற்சி மிகவும் நல்லது. இவ்வாறு முயற்சிகள் செய்யவேண்டும், மேலும் உங்கள் பணி புகழ் பெற வேண்டும் என்பது என் எண்ணம் என்றார். இதைக் கேட்டு எனக்கு சந்தோஷம் உண்டானது. கிரந்தங்களை ஒரு முறை படித்தபின், அவற்றைப் பற்றி அவரிடம் சொல்லப் போகிறேன். நல்ல நிலையில் இல்லாத ஓலைச் சுவடிகளை அரசு அச்சுக் கூட்டத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்க, அவர் முதலிலேயே தீர்மானம் செய்திருக்கிறார். அதற்கேற்ப "பக்திமஞ்சரி" என்ற புத்தகத்தை பிரசுரித்துத் தயார் செய்திருப்பதை நான் நூலகத்தில் பார்த்தேன். எனக்கு சின்னஸ்வாமி முதலியாரின் "ஓரியண்டல் ம்யூஸிக்" புத்தகத்தின் ஒரு பிரதி வேண்டும், அது இன்னும் கிடைக்கவில்லை. மாதவராவிடம் இதைச் சொன்னவுடன் அவர் ஒரு எழுத்தரிடம் விசாரித்து, அதை எனக்குக் கொடுக்குமாறு சொன்னார். அவருக்கு இந்த விஷயத்தில் ஆர்வம் இருக்கிறது. அவர் வீட்டில் சொந்தமாக ஃபோநோக்ராஃப் [phonograph] வைத்திருக்கிறார். மற்றும் டி. ராமசந்திர ராவ் அண்ட் கம்பனியிடமிருந்து வாங்கிய , அதில் வரும் சில ஹிந்துஸ்தானி பாடல்களை எனக்குப் போட்டுக் காட்டினார். அவை இப்போது அவ்வளவு தெளிவாக இல்லை. இந்தப் பாடல்களைச் சேர்ப்பதை வீட்டிலேயே வைத்துக் கொண்டிருப்பதால், தீவான் ஸாஹிப்புக்கு ஹிந்துஸ்தானி பாடல்கள் அதிகம் பிடித்திருக்கிறது. காரியஸ்தரும் இவ்வாறே சொன்னார். நான் என் ஃபோநோக்ராஃபை கொண்டு வராதது தவறாகப் போனது. இங்கே பாடல்களின் வடிவங்களை நேரடியாகக் கொண்டு போயிருக்கலாம். இருக்கட்டும். சுப்பராம தீக்ஷிதர் மற்றும் ஸ்ரீ நிவாச அய்யங்கார் அங்கே வர இருக்கிறார்கள், அப்போது இந்த பணியைச் செய்கிறேன். ஸ்ரீ ஹரிராவ், கேரள வர்மா என் பற்றி இன்னும் நிறைய விசாரித்தார் மற்றும் பாகவதருடன் நடந்த பேச்சு வார்த்தையைப் பற்றி ஹரிராவ் அவரிடம் சொன்ன பொது, அவர் மஹாதேவ மற்றும் ராமசந்திர பாகவதரும் சாஸ்திர விஷயத்தில் ராமஸ்வாமியைப் போலத் தான் ஆவார் என்றார் என்று தாழ்ந்த குரலில் என்னிடம் சொன்னார். ஆனால் அவர்கள் பாடுவதில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் என்பது அவர் கருத்து. பாலக்காடு (பாகவதர் போயிருக்கும் ஊர்) ஈரோடு கொச்சி ரயில் லைனில் இருக்கிறது. எனக்கு மைசூர் செல்ல வேண்டும். முடிந்தால் கொச்சி வழியாகக் சென்று பாகவதரைப் பார்த்து விட்டு பிறகு மைசூர் செல்வேன். ஆனால் அதை இன்றே தீர்மானிக்க முடியாது

கொல்லம் **புதன்கிழமை 28**

இன்று இங்கே வந்து சேர்ந்தேன். விசாரித்ததில் இங்கே நன்றாக விஷயம் தெரிந்த சங்கீதக்காரர்கள் யாரும் இல்லை என்று தெரிய வந்தது. இந்த ஊரில் இருப்பவர்களுள் இஸ்லாமியர்களும், மதம் மாறிய கிறிஸ்தவர்களும் அதிகம் இருக்கிறார்கள். நன்றாகப் படித்த உயர்தர மக்களின் அளவு குறைவாக இருக்கிறது. சங்கீதம் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் மிகக் குறைவு. சில புதிதாகக் கற்றவர்கள் நன்றாகப் பாடுகிறார்கள் ஆனால் சொல்லும் படியாக

ஒன்றும் தெரிவதில்லை. கிலோனின் சங்கீதம் பற்றிய புகழை நான் எங்கும் கேட்கவும் இல்லை என்பதும் உண்மை தான். எங்கள் சங்கீதத்தில் விருப்பமுள்ள குழுவில் சிலர் பிரயாணத்தின் அசதியால் கொஞ்சம் உடல்நிலை சரியில்லாது போயிருக்கிறார்கள். அதனால் கொச்சின் வழியாகச் செல்வதை விட்டு விட்டு திருச்சிராப்பள்ளி செல்லத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. பாகவதரும் பாலக்காட்டில் இல்லாமல் சிறிது தொலைவில் ஒரு நகரத்தில் இருக்கிறார் என்று தெரிய வந்தது. அங்கே செல்ல ரயிலும் இல்லை. அதனால் அவ்வாறு தீர்மானம் செய்யப்பட்டது. பாகவதரை நேரடியான சந்திக்க முடியவில்லை என்று மனம் தளர்ச்சியடைந்தது ஆனால் அதற்கு வேறொன்றும் வழியில்லை.

பீமாச்சாரியா - ஒரு சிறு பேச்சுவார்த்தை **திருச்சிராப்பள்ளி,**
வெள்ளிக்கிழமை **29 டிசம்பர் 04**

இன்று மாலை, நாங்கள் இங்கே வந்து சேர்ந்தோம். இங்கே வருவதற்கு இரண்டு நோக்கங்கள். முதலாவது என்னவென்றால், உடன் வந்தவர்கள் சிலருக்கு இங்கே ஸ்ரீ ரங்கம் என்ற தீர்த்ததை தரிசிப்பது, இரண்டாவது இங்கே சங்கீத வித்வான்களைச் சந்தித்து அவர்களிடமிருந்து தகவல் பெறுவது. தஞ்சாவூரில் இருக்கும்பொது நண்பர்கள் இங்கே "கோவிந்தஸ்வாமி" என்ற ஃபிடில் கலைஞர் கேட்கக் கூடியவர், நன்றாக வாசிப்பவர் என்று சொன்னார்கள். இரண்டாவதாக பீமாச்சாரியா என்ற பெயருள்ள ஒரு வயது முதிர்ந்த பாடகர் இருக்கிறார். ஸ்ரீ வக்கீல் கோபாலராவ் இங்கே வக்கீல் ஸஞ்ஜீவ ராவிற்குக் கடிதம் கொடுத்திருந்தார். ஆனால் இங்கே வந்த பிறகு, ஸஞ்ஜீவ ராவ் விடுமுறையை கழிக்கத், திருப்பதிக்குச் சென்றிருக்கிறார் என்று தெரிந்தது. அதனால் ஸ்ரீ ரங்கத்தில் சத்திரத்தில் (யாத்ரீகள் தங்குமிடம்) தங்கினோம்.

சனிக்கிழமை தேதி 30-12-04

நான் இரவு 9 மணிக்கு வந்தேன். 30ஆம் தேதி எழுந்தவுடன் ஃபிடில் கோவிந்த ஸ்வாமியைத் தேடக் கிளம்பிய போது, அவர் சென்னைக்குச் சென்றிருக்கிறார் என்று தெரிய வந்தது. இதற்குப் பிறகு பீமாச்சாரியாவைத் தேடிக் கண்டு பிடித்தேன். இந்த பீமாச்சாரியா பிராமண புரோஹிதர். வயது 75 இருக்கும். அவர் மகன் எங்கள் புரோஹிதர் ஆகி விட்டான். அவர் தன் தந்தைக்கு "சிங்கிங்க் அசோசியேஷன் பெங்களூர் [Singing Association Bangalore] மூலமாகக் கொடுத்த, ஃப்ரேம் செய்யப்பட்ட ஒரு பிரமாண பத்திரத்தைக் காட்டினார். அதனால் அவரிடம் ஏதேனும் முக்கியத் தகவல் கிடைக்குமோ என்ற ஆசை இருந்தது. ஆனால் அந்த ஆசையும் வீணானது. பீமாச்சாரியா கூப்பிட்டவுடன் வந்தார். அவருடன் இவ்வாறு பேச்சு வார்த்தை நடந்தது.

கே: உங்களுக்கு எத்தனை வருடங்களாக சங்கீத சாஸ்திரத்தில் அனுபவம் உண்டு?

ப: 60 வருடங்களாக

கே: உங்கள் குரு யார்?

ப: எனக்குக் குறிப்பாக குரு என்று யாரும் இல்லை. நானே நிறைய பேருக்குக் குரு. ஆனால் சுப்பாராவ் என்ற பெயர் கொண்ட ஒரு பாடகர் இருந்தார் அவரை குருவாக எண்ணிக் கொண்டேன். அவர் இங்கே கொஞ்ச நாள் இருந்தார். எனக்குப் பெரிய பெரிய நகரங்களிலிருந்து (பெங்களூர், மைசூர் முதலியவை) பதக்கங்கள் கிடைத்தன

கே: நீங்கள் நடைமுறை சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவரா அல்லது சங்கீத வித்வானா?

ப: நான் எல்லாமும் தான் , எல்லாமும் தான் தெரியும்

இதற்குள் அவருடைய புதல்வன் முன்னே வந்து , இன்று என் தந்தையைப் போலப் பாடுபவரோ அல்லது இந்த விஷயத்தைப் பற்றிப் பேசும் அருகதை உள்ளவரோ வேறு யாரும் இருக்க சாத்தியமே இல்லை என்றார்.

கே: பீமாச்சாரியா! எனக்கு உங்களிடமிருந்து சில தகவல்கள் வேண்டும்

ப: உனக்குக் கொடுப்பதற்காக இந்தத் தேங்காயைக் கொண்டு வந்திருக்கிறேன், இதை எடுத்துக் கொள். குருவின் உண்மையான அனுக்ரஹம் இன்று கல்வி வராது. அப்படி வந்தாலும் அது பலன் தராது, இதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். நான் உன்னைப் பார்த்து சந்தோஷமடைந்து உனக்கு இந்த பிரசாதத்தைத் தருகிறேன், சங்கீத உபதேசமும் செய்கிறேன்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் எனக்கு எப்படி இருந்தது என்பதைக் கற்பனை செய்து பார்க்கவே முடியாது. நான் தேங்காயைக் கையிலெடுத்துக் கொண்டு நமஸ்காரம் செய்து விட்டு, அதை ஒரு பக்கமாக வைத்து விட்டேன். இதையடுத்து அவர் இறைவனைத் துதி செய்து ஒன்றிரண்டு ஸ்லோகங்களைப் படித்தார். நான் அது வரை வாயை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தேன். இதற்குப் பிறகு கேள்விகள் கேட்டேன்.

கே: இப்போது உங்கள் சென்னை க்ஷேத்திரத்தில் நீங்கள் கேள்விப்பட்டவரை பிரசித்தி பெற்ற சங்கீத வித்வான் யார்?

ப: என்னைத் தவிர யாரும் இல்லை. இங்கே தஞ்சாவூரை விட அதிகமாக சங்கீதம் பிரசித்தி பெற்ற வேறு நகரமே இல்லை. அங்கே இப்போது யாருமில்லை. தியாகய்யா இருந்தார். அவருக்குப் பிறகு எல்லாம் முடிந்து விட்டது.

கே: நீங்கள் ஏதேனும் சங்கீத கிரந்தத்தின் பெயரைச் சொல்ல முடியுமா?

ப: எல்லா சங்கீதத்தின் ஆதாரப் பூர்வமான கிரந்தம் "சங்கீத சர்வார்த்த சாரம்"

கே: நீங்கள் அதைப் பார்த்திருக்கிறீர்களா?

ப: இல்லை, பெயர் மட்டும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கே: நீங்கள் வேறு ஏதேனும் கிரந்தத்தின் பெயரைப் படித்தோ கேட்டோ இருக்கிறார்களா?

ப: இல்லை. நான் கிரந்தங்களை முற்றிலும் ஏற்பதில்லை.

கே: கடபயாதி சங்க்யா என்ற சொல்லைக் கேள்விப்பட்டதுண்டா?

ப: இல்லை

கே: உங்கள் பக்கத்தில் சங்கீதத்தின் ஆதிகர்த்தா யார்?

ப: தியாகய்யா. அவர் ஆயிரக்கணக்கான ராகங்களைத் தோற்றுவித்தார். எல்லா ராகங்களையும் அவர் தான் தோற்றுவித்தார்.

கே: அவருக்கு முன்னர் சங்கீதத்தின் நிலை எப்படி இருந்தது?

ப: அவருக்கு முன்னர் ராகம் ஆகியவை இருக்கவில்லை. தியாகய்யா இறைவனின் அவதாரம். அவருக்குக் கனவில் [இறைவன்] தோன்றி அவர் அதற்கேற்ப ஒவ்வொரு ராகத்தையும் செய்தார்.

கே: ராகங்களின் நியமங்கள் ஏதேனும் நீங்கள் அறிவீர்களா?

ப: அந்த வேலையெல்லாம் நான் வைத்துக் கொள்வதில்லை

கே: ஸ்வர பிரஸ்தாரம், தாளப் பிரஸ்தாரம் இது குறித்து எதுவும்?

ப: நான் இதை எல்லாம் ஏற்றுக் கொள்வதில்லை. நான் இந்தக் கிளிப்பிள்ளை விளையாட்டுக்களிலெல்லாம் ஈடுபடுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறேன். நான் பாட்டைப் படித்தேன். அதில் முதலிடம் என்னுடையது. நான் கீர்த்தனைகளைப் பாடுகிறேன், அதைக் கேள். மற்ற உளறல்களை எல்லாம் செய்து கேள்வியெல்லாம் கேட்காதே.

இவ்வாறு சொல்லிவிட்டு, நேராகக் கீர்த்தனைகளைப் பாடத் தொடங்கினார். பாட்டு கேட்க நன்றாகவே இருக்கவில்லை. குரல் வயதானதால் நடுங்கிக் கொண்டு கரகரவென்று இருந்தது. விரல்களில் நடுநடுவே தொடைகளில் பலமாகத் தட்டி மாத்திரைகளை எண்ணிக் கொண்டு, தாளத்தில் இடத்தில் தபாரென்று தட்டினார்.

கே: கொஞ்சம் கேளுங்கள் பீமாச்சாரியார் அவர்களே! பல்லவி, அனுபல்லவி, மற்றும் சரணத்தின் ஸ்வர நியமம் எப்படி இருக்க வேண்டும்

ப: இதிலெல்லாம் ஸ்வரங்கள் ஒரே மாதிரி தான் இருக்க வேண்டும், இல்லா விட்டால் ராகம் எப்படி இருக்கும்?

கே: ஆனால் பல்லவி, அனுபல்லவி - இதை ஸ்வரங்களால் எப்படி அடையாளம் கண்டுக் கொள்வது ?

ப: புத்தியால் (அங்கே உட்கார்ந்திருந்த ஒருவர் நடுவில் ஸ்வரங்கள் மேலேயோ கீழேயோ இருப்பதால் என்று சொன்னார்) ஆம் இது தான் சரி

கே: தாளம் மற்றும் அதன் ஜாதிகள் பற்றித் தெரியுமா ?

ப: ஏழு தாளங்கள் உள்ளன. அவையே உண்மையானவை. தாளத்தின் ஜாதியின் அமைப்பு வீணானவற்றை வளர்த்த யாரோ செய்து வைத்திருக்கிறார்கள். நான் அதற்குள் நுழையவில்லை.

அதனால் , இப்படிப்பட்ட மனிதருக்கு மேலும் கஷ்டம் கொடுப்பது நல்லதன்று என்றெண்ணி, அவரைப் பாட விட்டுவிட்டு, பேச்சை அத்துடன் நிறுத்திக் கொண்டேன். இந்த ஊரில் சங்கீதம் பற்றிய விவாதம் குறைவாக இருப்பது போலத் தோன்றுகிறது, கோவிந்தஸ்வாமி பற்றி பீமாச்சாரியா அவரும் ஃபிடில் வாசிப்பார் என்றார். நான் எவ்வளவு பாடுவேனோ அவ்வளவு தான் அவரும் ஃபிடில் வாசிப்பார். அவருக்கும் சாஸ்திரம் அதிகம் தெரியாது. ஆனால் தஞ்சாவூர்க்காரர்கள் புகழ்வதால் அவர் நன்றாக வாசிப்பவராக இருக்கவேண்டும் என்று புரிந்துக் கொள்ளவேண்டும்.

ஜாதிப் பிரகரணம் (ஒரு தெளிந்த சிந்தனை) திருச்சிராப்பள்ளி தேதி 31-12-1904

பல பேச்சுக்களில் ஜாதிப் பிரகரணம் முக்கியமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தான் மேளங்களை உண்டு பண்ணினார்கள், மற்றும் மேளங்களின் வெவ்வேறு ராகங்களும் தோன்றுகின்றன. ரத்னாகரத்தில் கிராம ராகங்களை விளக்கும் பொது, ஒவ்வொரு விளக்கத்திலும் ஜாதியைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறேன் - அதாவது பிரயோகத்தில் மேளங்களிலிருந்து இந்த ராகங்களைத் தோற்றுவிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது போல. உண்மையில் மூர்ச்சனை வழியாக ஸ்வர ஸப்தகம் விளக்கப்பட்டிருக்கிறது, இந்த ஸ்வரங்களைக் கொண்டு ஜாதியின் ஸ்வரங்கள் அமைக்கப்படுகிறது. கிராமம் மூலமாக , மூல ஸப்த ஸ்வரங்களின் "ஸ்ருதி" அமைப்பு தெரிய வருகிறது. ஜாதிக்காக/ஜாதிகளுக்கு பதிமூன்று லக்ஷணங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. மூர்ச்சனையிலிருந்து ஸ்வர ஸப்தகம் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றின் ஸ்வரங்களில் ஏதேனும் விசேஷமாக மாற்றம் செய்ய வேண்டுமென்றால், ஜாதியின் விளக்கத்தில் அவை சொல்லப்படுகின்றன - எப்படி காகலி, காந்தாரம் அந்தரம் முதலியவை. அதே போல வாதீ, சம்வாதீ, சங்கீதம், தாளம், முதலிய விஷயங்களையும் ஜாதி சொல்கிறது. இதனால் ஸ்ருதி, ஸ்வரம், கிராமம், மூர்ச்சனை மற்றும் ஜாதியின் அழகான கோட்பாடு அமைகிறது. இந்த ஜாதிகளின் வகைகள் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமான வகை இரண்டு அதாவது 1. சுத்த 2. விக்ருத இந்த வகைகள் ஒவ்வொன்றும் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளன.

शुद्धाः स्युर्जातयः सप्त:

ஏழு சுத்த ஜாதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருகிக்கின்றன. அவற்றின் பெயர்கள், ஏழு சுத்த ஸ்வரங்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஷாட்ஜீ, ஆர்ஷபி, காந்தாரீ, மத்யமா, பஞ்சமீ, தைவதீ , நைஷாதீ என்றவாறு.இவ்வாறு பெயரிடக் காரணம் என்னவென்றால் இந்த சுத்த ஜாதிகளில் "நாம ஸ்வரம்" (எந்த ஸ்வரத்தின் மேல் அந்த ஜாதி அமைந்ததோ அது) அதுவே நியாஸம். அபநியாசம், கிரஹம், அம்சம் ஆகிய நான்கு ஸ்தானங்களிலும் இருக்கிறது.(இந்தச்

சொற்கள் எல்லாம் பின்னால் விளக்கப்படும்) , மேலும் அவற்றில் (ஜாதிகளில்) நியாஸம் தாரஸப்தகத்தின் ஸ்வரத்தின் மேல் இருப்பதில்லை.

குறிப்பு:

तार न्यास विहीना என்ற இந்த நியமம் சரியாக இருப்பதாகத் தோன்றுகிறது, ஏனெனில் அந்த உயர்ந்த இடத்தில் குரலைக் கொண்டு போய் அங்கே பாட்டை நிறுத்துவது நன்றாக இருப்பதில்லை. அதனால் சுத்த ஜாதிகளைப் பொறுத்தவரை நாம் ஐந்து லக்ஷணங்களை மனதில் கொள்ளவேண்டும்.

1. கிரஹம் - நாம ஸ்வரம் 2. அம்சம் = நாம ஸ்வரம் 3. நியாஸம் = நாம ஸ்வரம் 4. அபநியாசம் = நாம ஸ்வரம் 5. சம்பூர்ணத்வம் = ஒவ்வொரு ஜாதியும் ஏழு ஸ்வரங்களுடன் சம்பூர்ணமாக உள்ளன. 6. நியாசம் தார ஸ்தாயியில் செய்யக் கூடாது. இந்த லக்ஷணங்களில் கொஞ்சம் மாறுதல் செய்தாலும் விக்ருத ஜாதி உண்டாகிறது. அவை சுத்த ரூபங்களிலிருந்து தான் தோன்றுகின்றன, அதனால் அவற்றுக்கும் அவையே பெயர் கொடுக்கின்றன. விக்ருத ஷாட்ஜீ போன்றவை. ரத்னாகரத்தின் பதினெட்டு ஜாதிகள் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவற்றில் இந்த விக்ருத ஜாதிகள் காணப்படவில்லை. அவை சுத்த ஜாதிகளுக்குள்ளேயே வருகின்றன, இந்த பதிநெட்டில் ஏழு சுத்த ஜாதிகள் உதாரணமாக - ஷாட்ஜீ, ஆர்ஷபீ, நைஷாதி முதலியவை. மிச்சமுள்ள பதினொன்றில், அவை மேலே சொல்லப்பட்ட சுத்த ஜாதிகளுள் இரண்டு அல்லது மூன்று நான்கு ஜாதிகளைச் சேர்த்து செய்யப்பட்டன, அவை வரும் பத்திகளில் கொடுக்கப்படும். சுத்த ஜாதிகளை விக்ருதமாகச் செய்யும் முறை இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. மேலே சொன்ன ஐந்து லக்ஷணங்கள் இருக்கின்றன (அதாவது நியாஸம். அபநியாஸம், கிரஹம், அம்சம் மற்றும் ஸம்பூர்ணம்) இவற்றில் முதல் லக்ஷணத்தை அப்படியே வைத்துக் கொள்ளுங்கள், மற்றும் மிச்ச நான்கு லக்ஷணங்களை விட்டுவிடுங்கள். இவ்வாறு செய்வதால் அது விக்ருதமாகிவிடும். எப்படியென்றால் - நியமத்தில் சொல்வதென்னவென்றால், நாமஸ்வரம் கிரஹமாகும். இந்த நியமத்தை விட்டு விட்டு, வேறு ஏதேனும் ஒரு ஸ்வரத்தை கிரஹமாக்கினால் விக்ருத ஜாதியாகி விடும். வெறும் நியாசத்தின் லக்ஷணத்தை மட்டும் மாற்றக் கூடாது. இதற்கு இரண்டு காரணங்கள் - ஒன்று தார ஸ்தானத்தில் முடிந்தால் நன்றாக இருக்காது, இரண்டாவது அந்த லக்ஷணத்தை அப்படியே வைத்துக் கொள்வதால் தான் சுத்த ஜாதியோடு பொருந்தும். இது எதனுடைய விக்ருத வடிவம் என்று தெரிவதற்கு இது ஒரு வழியாக இருக்கிறது.

   கிரந்தக்காரர் இவ்வாறு மற்ற நான்கு லக்ஷணங்களை மாற்றி எவ்வளவு விக்ருத வகைகளைச் செய்ய முடியும் என்று சொல்கிறார்.

संपूर्णत्व ग्रहांशापन्यासेष्वेकैक वर्जनात् |

भवंति भेदाश्चत्वारो ट्टयोस्त्यागे तु षण्मताः || 4 ||

त्यागे त्रयाणां चत्वार एकस्त्यक्ते चतुष्टये

भेदाः पंचदशैवंते षाड्ग्राः सद्भि निरूपिताः || 5 ||

[स.र . जातिप्रकारण]

அது சொல்வதாவது - உதாரணமாக, ஷாட்ஜீ ஜாதியை எடுத்துக் கொள்ளுங்கள். இதன் நாலு லக்ஷணங்களில் (அதாவது கிரஹம், அம்சம். அபநியாசம், சம்பூர்ணத்வம்) ஆகியவற்றை ஒவ்வொன்றாக ஒன்றை மட்டும் விட்டு விட்டால் நாலு விதமாகும்.

ஒரு லக்ஷணத்தின் மாற்றம்:

1. ஸம்பூர்ணத்வத்தைத் தவிர்த்து, மற்ற மூன்றை அப்படியே வைத்துக் கொண்டால் - முதல் வகை
2. கிரஹ நாம ஸ்வரத்தைத் தவிர்த்து, மற்ற மூன்றை அப்படியே வைத்துக் கொண்டால் - இரண்டாம் வகை
3. அம்ச நாம ஸ்வரத்தைத் தவிர்த்து, மற்ற மூன்றை அப்படியே வைத்துக் கொண்டால் - மூன்றாம் வகை
4. அபநியாச நாம ஸ்வரத்தைத் தவிர்த்து, மற்ற மூன்றை அப்படியே வைத்துக் கொண்டால் - நான்காம் வகை

மொத்தம் நான்கு வகை

ஒவ்வொரு முறையும் இரண்டு லக்ஷணங்களை மாற்றினால் 6 வகை தோன்றும். அவை இவ்வாறு :-

இரண்டு லக்ஷணங்களின் மாற்றம்:-

1. சம்பூர்ணத்வம் மற்றும் கிரஹத்தில் மாற்றம் - மற்ற இரண்டையும் அப்படியே வைத்தல் - முதல் வகை
2. சம்பூர்ணத்வம் மற்றும் அம்ஸத்தில் மாற்றம் - மற்ற இரண்டையும் அப்படியே வைத்தல் - இரண்டாம் வகை
3. சம்பூர்ணத்வம் மற்றும் அபநியாசத்தில் மாற்றம் - மற்ற இரண்டையும் அப்படியே வைத்தல் - மூன்றாம் வகை
4. கிரஹம் மற்றும் அம்ஸத்தில் மாற்றம் - மற்ற இரண்டையும் அப்படியே வைத்தல் - நான்காம் வகை

5. கிரஹம் மற்றும் அபநியாசத்தில் மாற்றம் - மற்ற இரண்டையும் அப்படியே வைத்தல் - ஐந்தாம் வகை
6. அம்சம் மற்றும் அபநியாசத்தில் மாற்றம் - மற்ற இரண்டையும் அப்படியே வைத்தல் - ஆறாம் வகை

இவ்வாறு இரண்டு லக்ஷணங்களை மாற்றுவதால் 6 வகைகள் உண்டாகின்றன. 3 லக்ஷணங்களை ஒவ்வொரு முறையும் மாற்றுவதால் 4 வகைகள் ஆகும்

மூன்று லக்ஷணங்களின் மாற்றம்:-

1. சம்பூர்ணத்வம் கிரஹம் மற்றும் அம்ஸத்தில் மாற்றம் - அபநியாசத்தை அப்படியே வைத்தல் - முதல் வகை
2. சம்பூர்ணத்வம், கிரஹம் மற்றும் அபநியாசத்தில் மாற்றம் - அம்சத்தை அப்படியே வைத்தல் - மூன்றாம் வகை
3. சம்பூர்ணத்வம் அம்சம் மற்றும் அபநியாசத்தில் மாற்றம் - கிரஹத்தை அப்படியே வைத்தல் - இரண்டாம் வகை
4. கிரஹம், அம்சம் மற்றும் அபநியாசத்தில் மாற்றம் - சம்பூர்ணத்தை அப்படியே வைத்தல் - நான்காம் வகை

மொத்தம் நான்கு வகை.

நான்கு லக்ஷணங்களை மாற்றுவதால் ஒரே ஒரு வகை தான் கிடைக்கும்.

1. சம்பூர்ணத்துவம், கிரஹம், அம்சம். மற்றும் அபநியாசத்தை மாற்றுதல் - மற்றவை அப்படியே - ஒரே ஒரு வகை

(மொத்தம் = 4 + 6 + 4 + 1 = 15 வகைகள் ஆனது)

அதனால் ஒரு சுத்த ஷாட்ஜ் ஜாதியிலிருந்து மேலே சொல்லப்பட்ட 15 வெவ்வேறு வகைகளைச் செய்யலாம். ஆனால் ஒவ்வொன்றிலும் "தார நியாச விஹீநத்வம்" என்ற நியமத்தை வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் இது சுத்த ஜாதியிலிருந்து தோன்றியது என்று தெரிந்து விடும்.

மேலே சொல்லப்பட்ட பதினைந்து வகைகளை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் எவற்றிலெல்லாம் சம்பூர்ணத்தை விட்டு எட்டு வகைகள் கிடைக்கின்றன. மற்ற ஏழு வகைகளில் மற்ற லக்ஷணங்களில் மாற்றம் செய்யப்படுகிறது, என்பது எளிதாகப் புரியக் கூடியது. சம்பூர்ணத்தை மாற்றுவது என்பதன் அர்த்தம் ஒன்று அல்லது இரண்டு ஸ்வரங்களைக் குறைத்தல் என்பது நமக்குத் தெரிந்தது தான். (சங்கீத சாஸ்திரம் அறிந்தவர்கள் இரண்டுக்கும் மேற்பட்ட ஸ்வரங்களைக் குறைப்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் - காரணம்

ஔடுவம், ஷாடவம் மற்றும் சம்பூர்ணம் என்று மூன்று வகை ராகங்கள் தாம் ஒத்துக் கொள்ளப் பட்டுள்ளன). வேறு விதமாகச் சொல்லவேண்டுமானால், சுத்த ஜாதியின் சம்பூர்ணத்தை மாற்றுவது என்பதன் அர்த்தம் அதை ஔடுவம் அல்லது ஷாடவமாகச் செய்தல். இவ்வாறு ஒரு ஜாதியிலிருந்து எட்டு வகைகள் தோன்றும். அதனால், ஒரு முறை ஔடுவம் மற்றும் ஒரு முறை ஷாடவத்தினால் அந்த எட்டு, பதினாறு வகை ஆகிறது. இந்த கணிதத்தினால் ஒரு ஷாட்ஜியிலிருந்து 23 வகை ஆகும் என்று புரிந்துக் கொள்ளவேண்டும். இதே கணக்கு, மற்ற ஆறு ஜாதிகளில், 23 X 7 = 161 வகை ஆகும். ஆனால் ஷாட்ஜீ ஜாதியை வெறும் ஷாடவமாகத் தான் செய்ய வேண்டும் ஔடுவமாகச் செய்யக் கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அதனால் அதன் ஔடுவ வகைகளை இவ்வாறு மேலே சொல்லப்பட்ட எண்ணிக்கையிலிருந்து எடுத்து விட வேண்டும்.

ஆர்ஷபி - 23 (ஔடவ - ஷாடவ 16 + 7 பிற)

காந்தாரி - 23 (" " ")

மத்யமா - 23 (" " ")

பஞ்சமீ - 23 (" " ")

தைவதீ - 23 (" " ")

நைஷாதீ - 23/138 (" " ")

ஷாட்ஜீ - 15/153 (ஷாடவா 8 + 7 பிற, ஔடுவத்தைத் தவிர்க்க வேண்டும்)

ரத்னாகரத்தின் ஏழு முக்கிய ஜாதி மற்றும் மற்ற பதினோறு ஜாதிகள் என்று மொத்தம் பதினெட்டு சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றில் கடைசி, பதினொன்றை எப்போதும் விக்ருதமாகச் சொல்கிறார்கள். மேலே சொல்லப்பட்ட 165 வகைகளில், அவை முதல் ஏழு ஜாதிகளுடையவை தான். எப்போதும் விக்ருதமான ஜாதிகள் கலப்பினால் உண்டாகின்றன. எப்போதும் விக்ருதமான ஜாதிகள் எப்படி உண்டாகின்றன என்பதைக் கூறுகிறேன்.

1. ஷாட்ஜீ + காந்தாரீ = ஷட்ஜகைசிகீ
2. ஷாட்ஜீ + மத்யமா = ஷட்ஜ்மத்யமா
3. காந்தாரீ + பஞ்சமீ = காந்தாரபஞ்சமீ
4. காந்தாரீ + ஆர்ஷபீ = ஆந்த்ரீ
5. ஷாட்ஜீ + காந்தாரீ + தைவதீ = ஷட்ஜோதீச்யவா
6. நைஷாதீ + பஞ்சமீ + ஆர்ஷபீ = கார்மாரவீ
7. காந்தாரீ + பஞ்சமீ + ஆர்ஷபீ = நந்தயந்தீ
8. காந்தாரீ + தைவதீ + ஷாட்ஜீ = காந்தாரோதீச்யவா
9. காந்தாரீ + தைவதீ + மத்யமா + பஞ்சமீ = மத்யமோதீச்யவா

10. காந்தாரீ + நைஷாதீ + மத்யமா + பஞ்சமீ = ரக்தகாந்தாரீ
11. ஷாட்ஜீ + காந்தாரீ + மத்யமா + பஞ்சமீ = நைஷாதீ + கைசிகீ

இந்த பதினெட்டு ஜாதிகளுள், ஷட்ஜகைசிகீ, ஷட்ஜமத்யமா, ஷட்ஜோதீச்யவா, ஷாட்ஜீ, ஆர்ஷபீ, நைஷாதீ மற்றும் தைவதீ இந்த எழும் ஷட்ஜ கிராமத்தைச் சேர்ந்தது. அதாவது அந்தக் கிராமத்தின் கரஹரப்ரியா = காஃபி அல்லது முகாரி = கனகாங்கி தாட்டின் ஸ்வர மூலத்தில் ஸ்தாபிக்க வேண்டும். (இந்த ஸ்வரங்கள் உண்மையில் என்ன என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும்). மற்ற பதினோரு ஜாதிகளுக்கு மூல தாட்டாக மத்யம கிராமத்தைக் கொள்ள வேண்டும். (நான் இந்த ஸ்வர ஸப்தகத்தை ஆராய்ந்துக் கொண்டிருக்கிறேன். இங்கே பிரயோக ரீதியாக எழுதி வைக்கப் போவதில்லை. அது விவாதமின்றி தெளிவாக நிரூபித்தவுடன் எழுதுவேன்.)

பதினெட்டு ஜாதிகளுக்கு, "பூர்ணத்வ-அபூர்ணத்வ" நியமங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. கார்மாரவீ. காந்தாரபஞ்சமி, ஷட்ஜகைசிகீ, மற்றும் மத்யமோதீச்யவா - இவை எப்போதுமே சம்பூர்ணமாகத் தான் இருக்கும். இவற்றை ஷாடவ-ஔடுவமாகச் செய்யக் கூடாது. மற்ற-10 ற்கு மூன்று வகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இதற்கு முன்பு, இருந்த ஸாதாரண பிரகரணத்தில் இரண்டு வகை ஸாதாரணம் சொல்லப்பட்டிருக்கின்றன. 1. ஸ்வர ஸாதாரணம் 2. ஜாதி ஸாதாரணம். ஸ்வர ஸாதாரணம் நான்கு வகைகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1. காகலீ ஸாதாரணம் 2. அந்தர ஸாதாரணம் 3. ஷட்ஜ ஸாதாரணம் 4. மத்யம ஸாதாரணம்

காகலீ ஸாதாரணம் = காகலீ நிஷாதமே ஆகும் ,
அந்தர ஸாதாரணம் = அந்தர காந்தாரம் ஆகும்
ஷட்ஜ ஸாதாரணம் = கைஷிகீ நிஷாதம் மற்றும்
மத்யம ஸாதாரணம் = ஸாதாரண காந்தாரம்

पंचमी मध्यमा षड्ज मध्यमाख्यासु जातिषु

स्वर साधारणं प्रोक्त मुनिभिर्भरतादिभि

(स.र. प्र. अ 7 प्र)

பஞ்சமீமத்யமா, ஷட்ஜமத்யமா இந்த ஜாதிகளின் அமைப்பில் ஸ்வர ஸாதாரணம் செய்ய வேண்டும், மற்றும் அவற்றைச் செய்யுமாறு பரதர் முதலிய முனிவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

अंशेषु समपेषु एतद्यथा स्वनियमा द्रवेत्

एतदल्प निगास्वाहुः कंबलाश्चतरादयः

अल्पद्विश्रुतिके रागभाषा दाव पितन्मनतं

(सं र प्र अ 6 प्र 22)

ஸ, ம, ப இவற்றில் ஏதேனும் ஒன்று அம்ச ஸ்வரமாக இருந்தால், அப்போது ஸ்வர ஸாதாரணம் செய்ய வேண்டும், அதாவது அந்தந்த ஸ்வரங்களிற்குப் பதில் அதைச் செய்ய வேண்டும். ஸ அம்ச ஸ்வரமாக இருக்கும் போது, "ஷட்ஜ ஸாதாரணம்" செய்ய வேண்டும். மத்யமம் அல்லது பஞ்சமத்தை, "ஷட்ஜ ஸாதாரணம் , மத்யம ஸாதாரணம் செய்ய வேண்டும். எந்த ஜாதியில் காந்தாரம் மற்றும் நிஷாதம் அல்பமாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவற்றையும் ஸாதாரணம் செய்ய வேண்டும் என்று "கம்பலர்" மற்றும் "அஸ்வதரர்" சொல்கிறார்கள்.

निगयोः अंशयोः षड्जमध्यमायां न तद्भवेत्

विकृता एव तत्रापि स्वर षाधारणाश्रयाः

(सं र प्र अ 7 प्र 23)

ஆனால் ஷட்ஜமத்யமா ஜாதிகளில் நீ மற்றும் க அம்ச ஸ்வரமாக இருந்தால், அப்போது ஸ்வரத்தை சாதாரணமாகச் செய்யக் கூடாது. பெரும்பாலும் விக்ருத வகைகளில், ஸ்வர ஸாதாரணம் முதலில் உண்டு என்பது நியமம். (அம்சங்களின் எண்ணிக்கை மொத்தம் அறுபத்து மூன்று என்று கொள்ளப்பட்டிருக்கிறது, மேலும் அவை இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன. (அதாவது பதினெட்டு ஜாதிகளுள்)

நந்தயந்தீ, மத்யமோதீச்யவா, காந்தாரபஞ்சமீ யில் (ஒவ்வொன்றிலும்)	1 அம்சம் =	3
தைவதீ, காந்தாரோதீச்யவா, பஞ்சமீ, இவற்றில் (ஒவ்வொன்றிலும்)	2 அம்சம் =	6
நைஷாதீ, ஆர்ஷபீ, ஷட்ஜகைசிகீ இவற்றில் (ஒவ்வொன்றிலும்)	3 அம்சம் =	9
ஆந்த்ரீ, கார்மாரவீ, ஷட்ஜோதீச்யவா இவற்றில் (ஒவ்வொன்றிலும்)	4 அம்சம் =	12
ரக்தகாந்தாரீ, காந்தாரீ, மத்யமா, ஷாட்ஜீ (ஒவ்வொன்றிலும்)	5 அம்சம் =	20
கைசிகியில்	6 அம்சம் =	6

மொத்தம் சேர்த்து 63

ஒரே சமயத்தில் இவற்றை அம்சமாகக் கொள்ளக் கூடாது. அதில் கொடுக்கப்பட்ட அம்ச ஸ்வரங்களுள், எது வேண்டுமானாலும் அம்ச ஸ்வரமாகலாம் என்று புரிந்துக் கொள்ளவேண்டும். இந்த அறுபத்து மூன்று அம்ச எண்ணிக்கை சம்பூர்ண ஜாதிக்காக. ஷாடவ ஜாதிக்காக, நாற்பத்தேழு அம்ச எண்ணிக்கை இருக்கிறது, அது இவ்வாறு.

எப்போதும் சம்பூர்ணமாக இருக்கும் ஜாதி - அதாவது கார்மாரவீ, காந்தார பஞ்சமீ, ஷட்ஜகைசிகீ, மத்யமோதீச்யவா முதலியவற்றுக்கு ஒன்பது அம்சங்கள். இவ்வாறு ஒரே மாதிரி எண்ணினால் நாற்பத்தேழு, அம்சம் மற்றும் ஔடவ ஜாதிக்கு முப்பது அம்சம் வரும்.

ஜாதி எது என்பதை அடையாளம் காட்டுவதற்காக, 13 வகை ஜாதி லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நமக்கு முன்னாலிருப்பவற்றில் இந்த 13 விஷயங்களைப் பொருத்திப் பார்க்க வேண்டும், பிறகு அவற்றின் உதவியால் அதற்குப் பெயர் கொடுக்க வேண்டும். இந்த லக்ஷணம் இவ்வாறு:

ग्रहांशतारमंद्राश्च न्यासापन्यासकौ तथा
अपि संन्यासविन्यासौ बहुत्वं चाल्पता ततः || 28 ||
एतान्यंस्वर मार्गेण सह लक्ष्माणि जातिषु
षाडवौडु विते वकापीत्येवमाहुष्त्रयोदशः || 29 ||

(सं र प्र अ 7 प्र)

அர்த்தம்: 1. கிரஹம், 2. அம்சம் 3. தாரம் 4. மந்த்ரம் 5. நியாசம் 6. அபநியாசம் 7. ஸந்யாஸம் 8. வின்யாசம் 9. பஹுத்வம் 10. அல்பத்வம் 11. அந்தரமார்க்கம் (12. ஷாடவத்வம் 13. ஔடுவத்வம் சில ஜாதிகளில்). இவ்வளவு விஷயங்களையும் ஒவ்வொரு ஜாதியிலும் பொருத்திப் பார்க்கவேண்டும் , அதற்குப் பிறகு ஜாதி லக்ஷணங்கள் உதாரணத்தோடு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஜாதி, பதினெட்டு ஜாதிகளில் எது என்று தீர்மானம் செய்யலாம். 12 மட்டும் 12 சில ஜாதிகளுக்காக சொல்லப்பட்டிருக்கின்றன, இதன் காரணம் என்னவென்றால், கார்மாரவி முதலிய 4 ஜாதிகள் எப்போதும் சம்பூர்ணமாக இருக்கும். அவற்றுக்கு, இந்த லக்ஷணங்கள் பொருந்தாது. கிரந்தக்காரர் மேலே சொல்லப்பட்ட 13 விஷயங்களில் ஒவ்வொன்றையும் இவ்வாறு விளக்கியிருக்கிறார்.

ग्रह

गीतादिनिहितस्तत्र स्वरोग्रह इतीरितः
तत्रांशग्रहयोरन्यत रोक्तोभयग्रहः || 30 ||

அர்த்தம்: எந்த ஸ்வரம் ஜாதியின்[39] ஆரம்பத்தில் பாடப்படுகிறதோ அதை கிரஹ ஸ்வரம் என்று சொல்ல வேண்டும். சங்கீதத்தின் பொதுவான நியமம் என்னவென்றால். எந்த ஸ்வரம் அம்ஸமோ (வாதி) ஆகுமோ அதே கிரஹமாகவும் ஆகி விடுகிறது, அதனால் ஒன்றைப் பற்றிச் சொன்னால் மற்றொன்றைச் சொல்ல அவசியமில்லை. அப்போது அவற்றுக்கு என்ன வித்தியாசம் என்று யாரேனும் சந்தேகம் எழுப்பலாம், அதனால் சொல்கிறேன்.

[39] [அதாவது ஜாதி கீதத்தின் ஆரம்பத்தில்]

अंशो वाद्येव परं , ग्रहस्तु वाद्यादिभेदभिन्नश्चतुर्विधः
अंशाश्च रागजनकत्वात्प्रधानं ग्रहस्तवप्रधानम् इति तयोर्भेदः

(பாருங்கள் ஸிம்ஹபூபாலரின் டீகா ச.ர. பிர.அ 7 ப்ர , மதங்கரிடமிருந்து)

அம்ச ஸ்வரம் எப்போதும் வாதியாகத் தான் இருக்கிறது. கிரஹத்தைப் பொறுத்த வரை அப்படி இல்லை. கிரஹஸ்வரம், வாதீ, சம்வாதீ, அனுவாதீ, விவாதீ இந்த நாலுள் எதுவாகவும் இருக்கலாம்.

குறிப்பு: ('விவாதியாகவும் இருக்கலாம்' இந்த லக்ஷணத்தால், ராகத்தில் விவாதீ ஸ்வரத்தின் அவசியம் அழகை உண்டு செய்வதற்கு என்று தெரியவில்லையா? அம்சம் ராகத்தைத் தோற்றுவிக்கக் காரணமானது, இந்தப் பெருமை கிரஹ ஸ்வரத்திற்கு இல்லை)

2. அம்ச லக்ஷணம்

यो रक्तिव्यंजकों गेये यत्संवाद्यनुवादिनौ
विदार्या बहुलौं यस्मात्तारमंद्रव्यव स्थितिः

यः स्वयं यस्य संवादिवानुवादी स्वरोपरः |
न्यासापन्यास विन्यास सन्यास ग्रहतां गतः |
प्रयोगे बहुलः यः स्याद्वाद्यंशो योग्यतावशात् || 32

(सं र , प्र अ 7 प्र)

அர்த்தம்: ஒவ்வொரு கீதத்திலும், எந்த ஸ்வரம் உண்மையான ரக்தி ஏற்படுத்துகிறதோ அது எந்த ஸ்வரத்திற்கு சம்வாதி மற்றும் அனுவாதியாக இருக்கிறது, ஒவ்வொரு விதாரியிலும் எது ஆங்காங்கே உபயோகப்படுத்தப்படுகிறதோ, (விதாரி இரண்டு வகை 1. கீத - விதாரீ 2. பத விதாரீ

கீதத்தின் பகுதிகள் அல்லது பாகங்கள் அல்லது சரணங்கள், எந்த ஸ்வரத்தின் உதவியால் மந்த்ர மற்றும் தார ஸ்வரங்களின் இடம் நிர்ணயிக்கப் படுகிறதோ (தார ஸப்தகத்தில், குறிப்பிட்ட ஸ்வரம் வரை மேலே செல்லுதல் மற்றும் மந்த்ரத்தில் குறிப்பிட்ட ஸ்வரம் வரை மட்டுமே இறங்குதல், என்ற நியமம் வைப்பது சாத்தியமாகிறது), என்ற ஸ்வரம் தானாகவோ அல்லது அதன் சம்வாதி அல்லது அனுவாதி ஸ்வரம், நியாசாபன்யாச , சன்யாச , வின்யாச, முதலிய ஸ்தானங்களிலும் நின்று ஒலிக்கிறதோ, எது ஜாதி முதலிய பிரயோகங்களில் அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ (ஷாட்ஜீ ஜாதியில் உதாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது) , அந்த ஸ்வரம் அதன் முக்கியமான தன்மையினால் அம்சம் என்று அழைக்கப்படுகிறது.

சந்தேகம்- அம்சம் என்ற இந்த சொல்லின் அர்த்தம், பிரயோகத்தில் பகுதி, பாகம் என்று இருக்கிறது. அப்போது ஏன் இந்த முக்கிய ஸ்வரத்திற்கு அம்சம் என்று பெயர் வந்தது?

பதில் - அதுவும் உண்மை தான். இந்த ஸ்வரம் தான் ஜாதி ராகம் முதலியவற்றைப் பிரிக்கிறது, வகைப் படுத்துகிறது, அதனால் அதை அம்சம் என்று சொல்வது உசிதமாகும்.

3 தார லக்ஷணம்

मध्यमे सप्त केंऽशः स्यात्तस्मात्तारा स्थितत्परान्
स्वरांश्चतुर् आरोहेदेष तारावधिः पर || 34 ||
अर्वाक् तु कामाचारः स्यात्तारे लुपतोऽपि गण्यते || 35 ||

[सं र , प्र अ , 7 प्र]

அர்த்தம் - மத்ய ஸப்தகத்தில், அம்ச ஸ்வரங்களைப் பாருங்கள். அதையே தார ஸப்தகத்தில் எடுத்துக் கொண்டு, அதற்கு முன் இருக்கும் நாலு ஸ்வரங்களை எண்ணினால், தார நியமம் கிடைக்கிறது. அதற்கு மேல் பாடக் கூடாது. (அது ஆனந்தம் தராது) அந்த நியமத்திற்குக் கீழே எப்படி வேண்டுமானாலும் கஷ்டமில்லாமல் பாடலாம். இந்த நாலு ஸ்வரங்களை எண்ணுகையில் எந்த ஸ்வரம் விடப்படுகிறதோ, அதையும் எண்ண வேண்டும். [ஏனென்றால் வர்ஜ்ய ஸ்வரத்தை எண்ணாமல் இருந்தால் குரலை மிகவும் மேலே எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும்.

குறிப்பு: பரதாச்சாரியார் சொல்லி இருக்கிறார், "चतुर्थपंचमसप्त मस्वरपर्यंतंतारगतिरुक्ता" நாலாவது, ஐந்தாவது அல்லது ஏழாவது ஸ்வரம் வரை இந்த தார நியமம் உண்டு, ஆனால் “आतारषड्जमारोहो नंदयन्त्यां प्रकीर्तितः”

அர்த்தம் - நந்தயந்தீ ஜாதியின் அமைப்பு எப்படியென்றால், அதில் தார ஷட்ஜம் வரை தான் ஆரோஹணம் செய்ய வேண்டும். பின்னால் ஜாதிகளின் உதாரணம் மற்றும் விளக்கம் இருக்கிறது, அதையும் பார்க்கலாம்.

4 மந்த்ர அவதி

मध्यस्थानस्थितादंशादामंद्रस्थांश माव्रजेत्
आमंद्रान्यासमथवा तदध स्थारिधावापि
एषा मन्द्रगतेः सीमा ततोर्वाक् कामचारिता

அர்த்தம் - மத்ய ஸப்தகத்தில் அம்ச ஸ்வரத்திலிருந்து மந்த்ர ஸ்வரம் வரை அவரோஹண நிலையைப் புரிந்துக் கொள்ள வேண்டும் அல்லது "ஆமந்த்ர நியாசம்" ஆரோஹண நிலை "ம

நி" ஸ்வரங்கள் வரை அல்லது அதற்குக் கீழே "ரி த" வரை (கிரமத்தில்) ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதை மந்த்ரஸ்தானத்தில் செல்ல வேண்டிய முறையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதற்குப் பிறகு அவரவர் ருசி மற்றும் சக்தி(?)க்கேற்ப

5. நியாஸம்

गीते समाप्ति कृन्यास एकविंशतिधा च सः

यस्तु गीत समाप्तिकः | எந்த ஸ்வரத்தில் கீதம் முடிக்கப் படுகிறதோ, அதை நியாசம் என்று சொல்கிறார்கள். நியாசம் 21 வகைப் படும்.

என்னால் மேலே எழுதப்பட்டவை மும்பையிலிருக்கும் போது ஜாதி பிரகரணத்தைப் பற்றி ரத்னாகரத்தின் ஸ்லோகங்களின் அடிப்படையில் கொஞ்சம் கொஞ்சமாக எழுதி வைத்தவை தான். இந்தப் பிரகரணம் கடினமானதும் கூட. அதனால், இதன் நடைமுறை உபயோகத்தைத் தனியாக ஒருவரால் புரிந்துக் கொள்வது கடினம். இன்று நேரமிருந்ததால், மற்றும் வேறு யாரும் இல்லாததால், ரத்னாகரப் புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு உட்கார்ந்தேன், அதில் ஜாதிகளின் வர்ணனைகளைப் படித்துக் கொண்டிருந்தேன். அவற்றில் 153 ஜாதிகளின் வகைகள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவற்றைக் காகிதத்தில் எழுதி வைத்தேன் , அவை நன்றாகவும் அமைந்திருந்தன. முன்னே எழுதி வைத்ததில் எழுத முடியாமல் போயிருந்தால், இங்கே எழுதி வைத்திருக்கிறேன். முதலிலும் எழுதி வைத்திருந்தால், புனருக்தி [சொன்னதையே சொன்னதாகி] விடும். ஆனாலும் இதனால் கெடுதல் ஒன்றும் இல்லை. ஜாதிகளுக்கு லக்ஷணம் பதிமூன்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி புரிந்துக் கொள்ள எளிதானது. பிறகு, ஸ்வரலிபியில் சின்னங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை எழுத அவசியம் இல்லை. பஹுலத்வத்தைப் புரிந்துக் கொள்ளும் போது, ஷாட்ஜியில் எத்தனை முறை “ஸா” வந்திருக்கிறது என்பதைப் பார்த்து பஹுலத்வம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பது யோசிக்க வேண்டியது. இவ்வகை முறையில் பஹுலத்வத்தைப் பார்த்து கொஞ்சம் ஆச்சரியம் உண்டானது.

திருச்சி **1 ஜனவரி 1904**

இன்று ஒரு மணி வண்டியில் நாங்கள் பெங்களூருக்குக் கிளம்புவோம், நேற்று ஸ்ரீ பீமாச்சாரியா, மைசூரின் வீணை வாத்தியக்காரரான சுப்பண்ணா, தஞ்சாவூர் சென்றிருக்கிறார் என்றார். அவர் சம்பாத்தியத்திற்காக, வருடத்திற்கொரு முறை இவ்வாறு யாத்திரை செய்வார், நான் அவரைக் காண மைசூர் செல்லலாம் என்று இருக்கிறேன். ஆனால் அதற்கு யோகம் இல்லை என்று இப்போது தோன்றுகிறது. இருக்கட்டும். அங்கே சென்றவுடன் பேலஸ் நூலகத்தைப் பார்ப்பேன், மற்றும் சேஷண்ணா - சுப்பண்ணாவைச் சந்திப்பேன்.

பெங்களூர் **2 ஜனவரி 1904**

நாங்கள் இன்று காலை சுமார் 6-30 மணிக்குச் வந்து சேர்ந்தோம். திருச்சிராப்பள்ளியிலிருந்து இந்த ஊரின் ரெவின்யூ கமிஷனர் ஸ்ரீ டீ ஆனந்தராவிற்கு ஒரு அறிமுகக் கடிதம் முதலிலேயே அனுப்பி இருந்தேன், அது அவருக்கு சமயத்தில் சென்று சேரவில்லை என்று தோன்றுகிறது. ஏனெனில், அவருடைய ஆள் யாரும் ஸ்டேஷனுக்கு வரவில்லை. நாங்கள் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே "தோடப்பா சத்திரம்" என்ற தங்குமிடத்தில் சென்று தங்கினோம். மதியம் சுமார் மூன்று மணிக்கு ஸ்ரீ டீ.வீ ஆனந்த ராவின் சொந்தக்காரர், கோவிந்தராவ் சத்திரத்திற்கு வந்து எங்கள் கடிதம் மதியம் தபாலில் வந்தது என்றார், மற்றும் என்னை இன்னும் வசதியுள்ள இடத்திற்கு அழைத்துச் செல்லத் தயாராக இருக்கிறார் என்றார். எனக்கு அங்கே எந்தப் பிரச்சனையும் இல்லாததால் நன்றி மட்டும் சொல்லி வேண்டாம் என்று தடுத்து விட்டேன். பிறகு அவருடன் ஆனந்தராவும் வந்தார், பேச்சுக்கு நடுவே, என் பயணத்தின் நோக்கத்தைத் தெரிவித்தேன். அவர் சந்தோசமடைந்தார், மேலும் மைசூரில் அவருடைய வீடு இருக்கிறது என்றார். அங்கே தங்க ஏற்பாடுகள் செய்யப்படும், என்றும் தன் எழுத்தரின் பெயரில் கடிதமும் கொடுக்கப் போகிறார். அவர் எங்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்வார். மைசூர் புத்தகாலயத்தை நல்ல முறையில் பார்க்க ஒரு கடிதமும் சந்தோஷமாகக் கொடுப்பதாகச் சொன்னார். அதனால் நான் அங்கே செல்லும் நோக்கம் வெற்றியடையும். நான் அவரிடம் சேஷண்ணா மற்றும் சுப்பண்ணாவைப் பற்றிக் கொஞ்சம் தகவல் பெற வேண்டும் என்றும் சொன்னேன். அவர் மைசூர் மஹாராஜா இப்போது பெங்களூரில் இருக்கிறார். அவருடன் சங்கீதக்காரர்கள் வந்திருக்கிறார்களா இல்லையா என்பதை இன்றிரவு விசாரித்துச் சொல்கிறேன். அதற்குப் பிறகு அப்படி இப்படிப் பேசிவிட்டு, அவருக்கு நன்றி சொல்லி, அவரிடமிருந்து விடை பெற்றேன். வேறு ஒரு பிரச்சனையும் இல்லையென்றால் நாளை மைசூர் செல்லலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். மேலே என்ன ஆகிறது என்று பார்க்கலாம். சரியாக விஷயம் கிடைக்கும் என்ற ஆசை இருக்கிறது , ஏனென்றால் மைசூர், மற்றும் தஞ்சாவூர் இரண்டுமே சங்கீதத்தைப் பொறுத்த வரை பிரசித்தி பெற்ற நகரங்கள். படித்தவர்களில் சேஷண்ணாவுக்கு முதல் இடம் கொடுக்கப்படுகிறது, மேலும் அவருக்கு சென்ற வருடம் மைசூர் மஹாராஜா "வீணா நாயக சிரோமணி" என்ற பட்டத்தைக் கொடுத்தார்.

மைசூர்

3 ஜனவரி 1904

நான் நேற்றிரவு 10.45 மணி வண்டியில் கிளம்பி இங்கே காலை 6.30 மணிக்கு வந்து சேர்ந்தேன். ஸ்ரீ டீ. ஆனந்தராவ் , ரெவின்யூ கமிஷனருடைய பங்களாவில் தங்க, நல்ல வசதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இங்கே வந்து சேர்ந்தபின், ஆனந்தராவின் குமாஸ்தாவிடம் நான் இங்கே வந்ததன் நோக்கத்தைச் சொன்னேன். அவர் ஆனந்தராவ் தனக்குக் கடிதத்திலும், உங்களை இங்கேயுள்ள இரண்டு பிரசித்தி பெற்ற புத்தகாலயங்களுக்குக் கூட்டிச் செல்ல வேண்டும், சேஷண்ணா, சுப்பண்ணா என்ற பெயர் கொண்ட இரண்டு பிரசித்தி பெற்ற வித்வான்களைச் சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எழுதி இருக்கிறார் என்றார். நான் ஆம் எனக்கு அதைத் தான் பார்க்க வேண்டும் என்றேன். நான் தஞ்சாவூரில் இருந்த பொது,

கரவீர ராவ்[40] என்ற பெயர் கொண்டவர் சங்கீதத்தில் பிரசித்தி பெற்றவர் என்று கேள்விப்பட்டேன். அதனால் அவரிடம் கேட்டேன், அவரும் ஆம் அவர் இங்கே பிரசித்தி பெற்றவர் என்றார். அவர் சாஸ்திரம் தெரிந்தவர். பிரயோகத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர் அல்ல. எனக்கும் இப்படிப்பட்ட மனிதர் தான் தேவையாக இருந்தது. அதனால் பெட்டி-படுக்கையை அங்கே விட்டு விட்டு, உடை மாற்றிக் கொள்ளாமல், அந்த குமாஸ்தாவின் சகோதரருடன் (அவருக்கும் சங்கீதத்தில் கொஞ்சம் ஆர்வம் உண்டு) கரவீர ராவைச் சந்திக்கக் கிளம்பி விட்டேன்.வழியில் கிருஷ்ணராவ் (அவருடைய சகோதரரின் பெயர்), கரவீர ராவுக்கு தன் சாஸ்திர ஞானம் பற்றி மிகவும் அஹங்காரம் உண்டு, மேலும் அவர் சேஷண்ணா-சுப்பண்ணாவை பெரிதாக எண்ணுவதில்லை என்றார். ராஜா அவரிடம் வேலையைப் பற்றிப் பேசும்போது அவர் சில வினோதமான நிபந்தனைகளை வைத்தார். சங்கீதத்தில் படித்த எல்லோரும் அவரைக் கண்டு பயப்படுகிறார்கள். இதையெல்லாம் கேட்டு, நான் இங்கே நிறைய விஷயம் கிடைக்கப் போகிறது என்ற ஆசை எழுந்ததால் மிகவும் உற்சாகம் அடைந்தேன். ஆனால் உண்மையில் அது நிராசையே ஆனது. நடந்த பேச்சு வார்த்தைகளிலிருந்து இவை எல்லாம் புரியும்.

நாங்கள் இருவரும் சுமார் எட்டு மணிக்கு அவர் வீட்டை அடைந்தோம். அவர் வீட்டில் மேஜை நாற்காலி போன்ற படாடோபங்கள் இருந்ததால் அவர் நவீனமானவர் என்று தோன்றியது. அவர் வெளியில் சென்றிருந்தார். அதனால் நாங்கள் அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கத் தீர்மானித்தோம். அவர் வீட்டில் பார்வையற்ற ஏழைச் சிறுவர்களுக்குச் சங்கீதம் கற்பிக்க ஒரு அறை இருந்தது. அவர்களுக்குப் பார்வையுள்ள ஒரு சிறுவன், பாட்டுச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான். அந்த ராகம் தர்பார் என்று அந்தப் பையன் சொன்னான். அது கொஞ்சம் நம் சாரங்கைப் போல இருந்தது, அதில் கோமள "க" மற்றும் தீவ்ர "த" இருந்தன. மொத்தமாகப் பார்த்தால் சலன் சாரங்க் வர்க்கத்தைப் போலத் தான் தோன்றியது. இங்கே இது போன்ற ராகங்கள் அதிகம் விரும்பப் படுபவனவாகத் தோன்றின. சிறிது நேரத்தில் ஸ்ரீ கரவீர ராவ் வீட்டுக்கு வந்தார், கிருஷ்ணஸ்வாமி அவரிடம் என்னை அறிமுகப் படுத்தினார், அதைத் தொடர்ந்து வரவு, நல்வரவுப் பேச்சுக்கள் நடந்தன. நான் இங்கே வந்ததன் நோக்கத்தைச் சொன்னேன். அவர் மிகச் சந்தோஷமடைந்து எனக்கு என்ன வேண்டுமோ அதைப் பற்றிப் பேச ஒப்புக் கொண்டார். எங்கள் பேச்சு இவ்வாறு நடந்தது.

கே: ஸ்ரீ கரவீர ராவ், உங்களுக்கு சமஸ்கிருதம் தெரியுமா?

ப: பொதுவாக வேலை செய்யும் அளவுக்கு வரும்

கே: மைசூரில் பெரிய பெரிய சங்கீத வித்வான்கள் இருக்கிறார்கள் என்கிறார்கள். இங்கே எந்த கிரந்தத்தை ஆதாரப் பூர்வமானதாகக் கொள்கிறார்கள்?

[40] [இது மைசூர் சதாசிவ ராவின் சிஷ்யரான மைசூர் கரிகிரி ராவைக் (1853 - 1927) குறிக்கலாம். கைராகர் பதிப்பில் கரவீர ராவ் என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது]

ப: சங்கீத ரத்னாகரம் (இவ்வாறு சொல்லிவிட்டு, பூனாவில் பிரசுரமான புத்தகத்தின் இரண்டாவது பாகத்தைக் கொண்டு வந்து மேஜை மேல் வைத்தார்) என் பையிலும் ஒரு பிரதி இருந்தது.

கே: இந்த ரத்னாகரத்தை நீங்கள் படித்திருக்கிறீர்களா?

ப: ஆம்

குறிப்பு: இந்த மனிதரைப் பார்த்து, மக்கள் ஏன் பயப்படுகிறார்கள் என்றால், அவர் ரத்னாகரத்தின் ஸ்லோகங்கள் பலவற்றை மனனம் செய்திருக்கிறார், மேலும் அதை அவ்வப்போது ஒப்பிக்கிறார். உதாரணமாக, ஸ்ருதிகளின் பேச்சை எடுத்தவுடன், இருபத்திரண்டு ஸ்ருதிகளின் பெயர்களை கடகடவென்று ஒப்பித்தார். இவ்வாறே மூர்ச்சனா மற்றும் கிராமத்தில் ஸ்லோகத்தையும் சொன்னார். ஆனால் இதனால் மட்டுமே பயப்பட்டால் வேலை நடக்காது.

கே: ஸ்ரீ கரவீர ராவ். ரத்னாகரம் 22 ஸ்ருதிகள் இருக்கின்றன என்று சொல்கிறது. (இதைச் சொன்னவுடன் தீவ்ரா, குமுத்வதி, மந்தா முதலிய ஸ்லோகங்களை ஒப்பிக்க ஆரம்பித்து விட்டார். முழு ஸ்லோகங்கள் தெரியவில்லை)

நான் - அது இருக்கட்டும், பெயர் உங்களுக்குத் தெரிந்திருக்கும். என் கேள்வி இதுவன்று. நான் கேட்பது என்னவென்றால், உங்கள் திராவிடப் பிரதேசத்தில் இவற்றை எல்லாம் உபயோகிக்கிறார்களா?

ப: நிச்சயம் உபயோகிக்கிறார்கள்.

கே: உங்களுடையது எந்தப் பத்ததி?

ப: ரத்னாகரத்துடையது. அதன் புத்தகம் உங்கள் முன் இருக்கிறது. (இதைப் பார்த்ததும் என் மேல் ஏதும் தாக்கம் ஏற்படாததால்) இந்தப் புத்தகம் ரத்ன பண்டாரம் என்று நான் எண்ணுகிறேன்.

நான் : புரிந்தவர்களுக்கு!

கே: உங்கள் பக்கத்தில், ராகம் முதலியவற்றின் அமைப்பு எந்த தத்துவத்தின் அடிப்படையில் மற்றும் எத்தனை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன?

ப: சுத்த மத்யமத்தின் முப்பத்தாறு மற்றும் பிரதி மத்யமத்தின் முப்பதாறு.

கே: ரத்னாகரத்தில் அவை எங்கே சொல்லப்பட்டிருக்கின்றன?

ப: (புத்தகத்தைத் திறந்து மூடி) அது இந்தப் பகுதியில் இல்லை.

(நான் என் பையில் வைத்திருந்த ராகாத்யாயத்தை எடுத்து முன்னே வைத்தவுடன், அவர் சோர்ந்து போய், அதைப் பார்த்தால் அதில் உங்களுக்குக் கிடைக்கும் என்று சொல்ல ஆரம்பித்தார்)

நான்: நீங்கள் சொல்வது இந்தப் புத்தகத்தின் அமைப்பில் இல்லை என்றேன். அதனால் அதில் நிச்சயமாகக் கிடைக்காது.

கே: இப்போது ராகாத்யாயம் உங்கள் முன் இருக்கிறது. இதற்குப் பிறகும் நீங்கள் சுத்த மத்யமம், மற்றும் பிரதி மத்யமத்தின் வகைகள் ரத்னாகரத்திலிருந்து என்று சொல்கிறீர்களா?

ப: இல்லை. ஆனால் அவற்றை நான் ஏற்றுக் கொள்கிறேன். மேலும் அது எங்கள் பத்ததி.

நான்: அதாவது எழுபத்திரண்டு ஜனக ராகங்கள் அல்லது மேளகர்த்தா பத்ததி தான் உங்கள் பக்கத்தில் இருக்கிறது, அதைத் தான் நீங்கள் பாடுகிறீர்களா?

ப: ஆம். ஆனால் அது ரத்னாகரத்திலிருந்து தான் வந்திருக்க வேண்டும். என்னிடம் ரத்னாகரத்தின் பிரதி ஓலைச் சுவடியில் இருக்கிறது. அதில் அது இருக்கிறது.

கே: அந்தப் பிரதியைக் கொண்டு வாருங்கள். அதில் அது எங்கே இருக்கிறது என்று பார்ப்போம் கரவீர ராவ் வீட்டிலிருந்து கையில் எழுதப்பட்ட ஒரு கட்டை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் சொன்னார், என்னிடம் நிறைய வித்வான்கள் விவாதிக்க வந்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நான் இந்தப் புத்தகத்தைக் காட்டுவதில்லை. முதலில் என்னிடம் இந்த விஷயத்தைப் பற்றி ஒருவரும் பேசுவதில்லை, இப்போது நீங்கள் கேட்டிருக்கிறீர்கள், அதனால் காட்டுகிறேன். இவ்வாறு சொல்லிவிட்டு மேளப்பெயர்களின் ஸ்லோகங்களைப் படித்துக் காட்டினார்.

அவற்றின் அர்த்தம் இவ்வாறு:

கால்வ ரிஷியுடையது - கனகாங்கி மேளம்

தேவபக்தனுடையது - ரத்னாங்கி

பாண ரிஷியுடையது - கானமூர்த்தி

நித்யானந்தம் உடையது - வனஸ்பதி

யோகானந்தம் உடையது - மானவதி

போகானந்தம் உடையது - தானரூபி

முதலிய முதலிய

இவ்வாறு இருப்பதைக் கண்டு, இது எப்படி ரத்னாகரத்தில் சொல்லப்பட்டிருக்க முடியும் என்று நான் ஆச்சரியம் அடைந்தேன். இந்த ஒவ்வொரு மேளத்திற்கும் ஸ்வரம் சுத்தரிஷபம்,

சதுஸ்ருதி ஆகியவை கர்நாடக பத்ததியில் இருந்தும் எப்படி ஆசிரியர் கண்ணில் ஏன் தென்படவில்லை? ஆனால் இன்னும் மேலே சென்றபின் இன்னொரு விஷயம் தெரிந்தது. இந்த மேளங்களின் தலைப்பில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. அதைப் படிக்கச் சொன்னபோது, "நாரத ஸூத்ரம்" என்று தெரிந்தது. இதைப் பற்றி....

கே: ஏன் அய்யா! இதில் "நாரத ஸூத்ரம்" என்று ஏன் எழுதப்பட்டிருக்கிறது?

ப: இந்த உதாரணங்கள் அங்கிருந்து வந்தன.

நான் - ரத்னாகரத்திலிருந்து இல்லையா ?

ப: இல்லை. அது அந்த சூத்திரத்திலிருந்து வந்ததாகத் தெரிகிறது

கே: எனக்கு நாரத சூத்திரம் என்ற கிரந்தத்தைக் காட்டுவீர்களா?

ப: என்னிடம் இல்லை. இந்தப் பக்கத்தில் இந்த பதினெட்டு மேளங்கள் இவ்வாறு ஸ்வரங்கள் மற்றும் ரிஷிக்களின் பெயரோடு எழுதப்பட்டிருக்கிறது. அந்த கிரந்தத்தை நான் பேலஸ் புத்தகாலயத்தில் பார்த்ததாக நினைவிருக்கிறது. ஆனால் அது எரிந்து போய் விட்டது. இது நடந்தபோது, பேலஸ் எரிந்து போயிருந்தது.

கே: அப்போது, பிறகு திராவிட அல்லது கர்நாடக பத்ததி, நாரத சூத்திரத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதா?

ப: ஆம். இதைப் பார்த்தால் அப்படித் தான் தோன்றுகிறது.

கே: எழுபத்திரண்டு மேளங்கள் இருக்கும் போது, உங்களிடம், பதினெட்டு மட்டும் ஏன்?

ப: எனக்கு இந்த எழுபத்திரண்டு பதினெட்டிலிருந்து தான் தோன்றியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏனெனில் பதினெட்டாவதில் காகலீ நிஷாதம் முதலியவை சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் இதற்குப் பிறகு வேறு எதுவும் தொடர்பு படுத்த முடியவில்லை. (இதைப் பற்றி யோசிக்க வேண்டும்)

கே: ஆனால் கனகாங்கி முதல் ஐந்தாறு பேர்கள் க்ரமத்தில் வருகின்றனவே. நடுநடுவில் இருந்தால், நீங்கள் சொல்வது போல யோசிக்க வேண்டியிருக்கும்.

ப: இருந்ததை நான் காகிதத்தில் எழுதி வைத்திருக்கிறேன். இதற்குப் பிறகு ஏதேனும் இருந்ததா என்பது எனக்குத் தெரியாது.

நான்: இந்த இரண்டு பக்கங்களின் நகலை எனக்குக் கொடுப்பீர்களா? நான் மற்ற இடங்களிலும் தேடுகிறேன். அதிக பக்கங்கள் கிடைத்த பிறகு உங்களுக்கு எழுதி அனுப்புகிறேன்.

ப: ஆம் ஆனால் நீங்கள் மைசூர் மஹாராஜாவைச் சந்தித்து அவரிடம் ஒப்புதல் வாங்கிக் கொண்டால் நான் அதைத் தர முடியும்.

கே: இது எனக்குப் புரியவில்லை. நீங்கள் ஒரு தனிப்பட்ட சுதந்திர மனிதர். மஹாராஜாவின் பணியாளர் அல்ல. இந்தப் பக்கங்கள் உங்கள் சொத்து, மகாராஜாவிற்கு இது பற்றி ஒன்றும் தெரியாது. அப்போது மஹாராஜாவின் உத்தரவு எதற்கு என்று எனக்குப் புரியவில்லை. நீங்கள் மஹாராஜாவின் கிரந்தத்தை எடுத்துக் கொண்டு உங்களிடம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?

ப: இல்லை இல்லை! எனக்கு இதனால் என் புகழ் மஹாராஜா வரை போகும் என்று தோன்றியது, அதனால் சொன்னேன்.

நான்: எனக்கு இப்படிச் செய்வது நன்றாக இருக்காது. நான் மகாராஜாவிடம் சென்று ஒரு சுதந்திர மனிதரின் ஒரு புத்தகத்தின் இரண்டு பக்கங்களை எனக்குக் கொடுங்கள் என்று எப்படிக் கேட்பேன்? புகழ் மட்டும் வேண்டுமென்றால், நான் இங்கே பேலஸ் அதிகாரி ஸ்ரீ ராமகிருஷ்ணனைப் பார்க்கப் போகிறேன். அப்போது அவரிடம் உங்களைப் பற்றிப் பேசுகிறேன்.

கரவீர ராவ் - இல்லை , அது போகட்டும். நீங்கள் இந்தக் காகிதங்களை வேண்டுமானால் நகலெடுத்துக் கொள்ளலாம்.

கே: உங்கள் பத்ததியில் பன்னிரண்டு ஸ்ருதிகளை பிரயோகத்தில் கொண்டு வந்து, மற்றவற்றை உபயோகம் செய்வது பற்றி என்ன சொல்லி இருக்கிறது?

ப; அவை அவற்றுக்குள்ளேயே அடங்கி விடும். ஸா வின் தீவிரம் முதலியன ஸாவிலேயே அடங்கி இருக்கிறது. அதனால் ஸா பாடும் போது நீ-யைத் தொட்டுக் கொண்டு தான் போகிறது. அவை மறைந்து நிற்கும் ஸ்ருதி. (ஸ்லோகம் - श्रुत्यन्तर भावी,अधराधर तीव्रा, द्वेवीणे सदृशेकार्ये முதலியவற்றை சொல்ல ஆரம்பித்தார்). இவ்வாறு சம்பந்தமில்லாமல் பேசியதைப் பார்த்து எனக்கு சிரிப்பு வந்தது. ஆனால் அவர் ஸ்லோகத்தை சொல்லிக் கொண்டே போனார். நடு நடுவே அனுதாத்த, உதாத்த, போன்ற சொற்களையும் போட்டார். "அக்னிமீடே புரோஹிதம்" - இது கூட வந்தது.

நான்: கரவீர ராவ்! நீங்கள் பேசுவதற்காக மிகவும் சிரமம் எடுத்துக் கொள்கிறீர்கள். ரத்னாகரத்தின் முதலாவதான, ஸ்வராத்யாயம் - இதைப் பாருங்கள். (எடுத்துக் காட்டி) இதில் நீங்கள் சொல்லும் எல்லா ஸ்லோகங்களும் இருக்கின்றன, அதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். உங்கள் புரிதலில் கொஞ்சம் தவறு இருக்கிறது என்று எனக்குப் படுகிறது.

கே: ரத்னாகரத்தின் ஏழு சுத்த ஸ்வரங்கள் எவை?

ப: சுத்த ரி (கோமள), சுத்த க (நம் சுத்த ரி) முதலியவை

நான்: இந்த முறை தவறு, உங்கள் முன் ரத்னாகரம் இருக்கிறது. உறுதி செய்துக் கொள்ளுங்கள். உங்கள் சுத்த ஸ்வரத்தைப் பார்க்கட்டுமா? (நான் இது அவருக்குப் புரிய வேண்டும் என்பதற்காக இவ்வாறான அணுகுமுறை எடுத்துக் கொண்டேன்)

ப: ரத்னாகரத்தில் எங்கள் ஸ்வரம் இருக்கிறது. (கடைசிப் பக்கத்தைக் காட்டி)

நான்: இது ரத்னாகரத்தின் மூலத்தில் இல்லை. இது ஸ்வரத்தின் ஒப்பீட்டுப் பட்டியல் மட்டுமே. இதை ஆசிரியர் தன் அறிவினால், தயார் செய்திருக்கிறார்.

கே: மூர்ச்சனை என்றால் என்ன?

உ: (ஸா வை எடுத்துக் கொண்டு மீண்ட் செய்து) ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் உதாத்தம், அனுதாத்தம், மற்றும் ஸ்வரிதம் என்ற இம்மூன்று அதனால் 7 X 3 = 21 ஆனது. ஆனால் நான் மொத்தம் 23 ஐ ஏற்றுக் கொள்கிறேன். இது என்னிடம் உள்ள ஒரு ஸ்லோகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. (படித்து) "आरोहश्चावरोहणंत्र क्रमात्स्वराणाम्".

நான்: நான் நீங்கள் ஸ்லோகத்தை உடனுக்குடன் சொல்லி அதன் அர்த்தத்தை வேறு மாதிரியாக எடுத்துக் கொண்டிருக்கீர்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். "क्रमात्स्वराणाम्" இந்த ஸ்லோகத்தைச் சொல்லிவிட்டு, "உதாத்த அனுதாத்தம்" என்று புரிந்துக் கொண்டிருக்கிறீர்களே. இந்த ஸ்லோகத்தின் அர்த்தத்தை எந்த கிரந்தத்திலிருந்து எடுத்தீர்கள்?

ப: சரியாகத் தான் இருக்கிறது. ஏழு ஸ்வரங்களிலிருந்து ஒவ்வொரு கிராமத்தில் ஒரு முறை ஆரோஹணம் செய்தால் "உதாத்தம்", பிறகு அவரோஹணம் அதாவது இரண்டாவது அனுதாத்தம் , மற்றும் ஒன்றும் செய்யாமலிருந்தால் "ஸ்வரிதம்" என்ற வகையில் 21 ஆகிறது.

நான்: அந்த ஸ்லோகத்தின் அர்த்தம் இதுவல்ல. "ஸாரிகமபதநீ" நீபதம[க]ரிஸ இது ஒரு சம்பூர்ண மூர்ச்சனை ஆகும், என்று அங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

ப: சொல்லி இருக்கலாம், ஆனால் நான் இப்படி அர்த்தம் கற்றிருக்கிறேன்.

கே: கிராமங்கள் பற்றி நீங்கள் என்ன புரிந்துக் கொண்டிருக்கிறீர்கள்?

ப: (சிரித்து விட்டு) நீங்கள் இதைத் தான் கேட்பீர்கள் என்று எனக்குத் தோன்றியது. """सतु नास्तीह भूतले" முதலிய இரண்டு- நாலு ஸ்லோகங்களைச் சொல்லி விட்டு, காந்தார கிராமம் உலகில் இல்லை என்பதைத் தான் நாரதரும் சொல்கிறார். ஆனால் இதெல்லாம் தவறு. நான் சொல்வது என்னவென்றால், இவை எல்லாம் இருக்கின்றன. என்னிடம் ஒரு ஸ்லோகம் இருக்கிறது, அது "ஷட்ஜ, மத்யம, காந்தாரம் இந்த மூன்று கிராமங்களும் ஒரே ஸப்தகத்தில் இருக்கின்றன" என்று सरी मन्द्रे முதலிய ஸ்லோகங்கள் சொல்கின்றன. ஸாரீ (1) - கமப (2) - தநீ (3) இவ்வாறு மூன்று கிராமங்களை நான் ஏற்றுக் கொள்கிறேன். இரண்டாவது அர்த்தம் என்னவென்றால், "ம" வை "ஸ"வாக வைத்துப் பாடினால், "மத்யமகிராமம்" ஆகிறது. "மபதநீஸா-ஸாரீகமப" என்பது மத்யம கிராமம் ஆனது. கமபதநீ - ஸாரீகமப இது காந்தாரக்கிராமம் ஆனது.

கே: இந்த அர்த்தம் எங்கே சொல்லப்பட்டிருக்கிறது?

ப: என்னிடம் கிரந்தங்களிலிருந்து உதாரணம் இருக்கிறது.

நான் இந்த மனிதருக்கு, அங்கே இங்கே என்று சமஸ்கிருத ஸ்லோகங்களைச் சொல்லும் வழக்கம் இருக்கிறது என்பதைப் பார்த்தேன். அதனால் அவரைக் கொஞ்சம் சிக்க வைக்கும் எண்ணத்துடன் நடுவிலே இவ்வாறு ஒரு கேள்வி கேட்டேன்.

கே: ஸ்ரீ கரவீர், ரத்னாகரத்தில் "கபாலம்" சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அர்த்தம் மற்றும் நோக்கம் என்ன?

ப: எங்கே அது? (கையில் புத்தகத்தை எடுத்துக் கொண்டு) (அவர் அதுவரை போயிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது). அவர் படிக்கத் தொடங்கினார். "शुद्ध जाति समुद्भूत तानि कपालानि ध्रुवे". கபாலம் மற்றும் ப்ருவே என்ற சொற்களைப் பலமாக உச்சரித்து விட்டு தலையை அசைத்து விட்டு, புருவத்தில் கை வைத்து, "ஆம் ஆம் ப்ருவே" மிகச் சரி. கபாலத்திற்கும் புருவத்திற்கும் உவமை கொடுத்திருப்பதாகப் படுகிறது. இதைப் பார்த்தவுடன் எனக்கு நிஜமாகவே சிரிப்பு வந்தது. ஸ்லோகங்களின் எல்லா கலாட்டாவும் நின்று விட்டது, பிறகு யோசித்துச் சொல்கிறேன் என்றார். இதற்கு அர்த்தம் தெரிந்துக் கொள்ளத் தான் வேண்டும். நான் சொன்னேன், அர்த்தம் சொல்ல வேண்டாம், மற்ற கேள்விகளையும் கேட்டு விடுகிறேன், வேலை முடிந்து விடும்.

கே: ஜாதி பிரகரணத்தில் பதிமூன்று லக்ஷணங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவற்றில் அந்தரமார்க்கத்தின் அர்த்தம் என்ன?

ப: எனக்குத் தெரியாது.

கே: ஜாதியின் உபயோகம் என்ன?

ப: எனக்குத் தெரியாது.

கே: அம்சம், மற்றும் கிரஹம் - இதன் அர்த்தம் மற்றும் நியமங்கள் என்னென்ன?

ப: இதைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாது.

கே: 35 தாளங்களின் ஸ்லோகம் மற்றும் அதன் அங்கங்கள் எங்கே கிடைக்கும்

ப: தெரியாது.

இவர் சமஸ்கிருத ஸ்லோகம் படிக்கிறார், அதை மனனம் செய்கிறார் என்று கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்தது. ஆனால் இவருக்கு சமஸ்கிருதம் தெரியாது அதனால் இந்த ஸ்லோகங்களின் சரியான அர்த்தம் புரியவில்லை.

கே: ராகங்களின் சில ஸ்லோகங்களைச் சொல்லுங்கள் பார்க்கலாம்

ப: தெரியாது. அவசியம் ஆனால் கனகாங்கி முதலிய மேளங்களைப் பற்றிக் கிடைக்கும்

கே: ராகபோதம் , பாரிஜாதம் , த3ர்பணம் முதலியவற்றில் ஏதேனும் பார்த்திருக்கிறீர்களா?

ப: (உள்ளே போய்க் கொண்டு வந்து) ஆம். இவை காயகலோசனம் மற்றும் பரதகல்பலதா

நான்: அவை தெலுங்கில் இருக்கின்றன, இப்போது தான் பிரசுரிக்கப்பட்டவை. பழைய சமஸ்கிருத புத்தகங்களைப் பற்றிக் கேட்டேன்.

ப: இல்லை என்னிடம் எதுவும் இல்லை.

கே: பாஷா, அந்தர பாஷா, விபாஷாவின் அர்த்தம் என்ன?

இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டு, நீங்கள் கேள்விகளைக் காகிதத்தில் எழுதுக் கொடுங்கள். நான் யோசித்து விட்டுப் பின்னர் பதில் எழுதுகிறேன் என்றார்.

நான்: சரி. (பன்னிரண்டு கேள்விகள்) மாலை வருகிறேன்

ப: அப்படி இல்லை. நான் கிரந்தத்தைப் பார்த்து பதில் எழுதி தபாலில் உங்களுக்கு அனுப்புகிறேன்.

கே: எந்தக் கிரந்தம்? அவற்றை எங்கே பார்ப்பீரகள்?

ப: ஸரஸ்வதி மஹாலில் இருந்தால் பார்ப்பேன்

கே: தசவித கமகங்களுக்கு உதாரணம் கொடுக்க முடியுமா?

ப: என்னால் கொடுக்க இயலாது

கே: ராகாங்கம் மற்றும் ராகம், பாஷாங்கம் மற்றும் பாஷா, ராகம் மற்றும் உபராகம், க்ரியாங்கம் மற்றும் உபாங்கம் இவர்களைத் தனித் தனியே விளக்க முடியுமா?

ப: என்னால் முடியாது. இந்த விஷயங்களை யாரும் எப்போதும் கேட்டதே இல்லை , அதனால் அதைப் பற்றி நான் யோசித்ததே இல்லை. ஆனால் ஸ்ருதி மற்றும் மூர்ச்சனையின் இந்தச் சக்கரத்தைப் பாருங்கள் (காட்டிவிட்டு) அவற்றை எடுத்துக் கண்டக்கிட்டு வைத்திருக்கிறேன்.

நான்: இதற்கு என்ன ஆதாரம்?

ப: ஆதாரம் எல்லாம் சொல்ல முடியாது. ஆனால் நாரத சூத்திரம் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

நான்: கரவீர ராவ், உங்களுக்கு ரத்னாகரத்தின் ராகப் பிரகரணம் புரியாது என்று தோன்றுகிறது. ஏனெனில் உங்களுக்கு ஜாதி பிரகரணம் தெரியவில்லை,மற்றும் சமஸ்கிருத ஸ்வர ஸப்தகம் தெரியவில்லை. ராகத்தின் விளக்கத்தில் மூர்ச்சனையின் அர்த்தமும் புதிய முறையில் சொல்கிறீர்கள். நீங்கள் தைவதத்துக்குப் பிறகுள்ள மூர்ச்சனைகளை எப்படி அர்த்தம் பண்ணுவீர்கள்?

ப: தைவத ஸ்வரத்தை எடுத்துக் கொண்டு அதை "உதாத்தம், அனுதாத்தம்" செய்வேன். ஆனால் இதன் அர்த்தம் “த” ஸ்வரத்திலிருந்து ஆரம்பித்து, மேலே சென்று (பாடிக் காட்டி) நிஸா என்று இவ்வாறு பாட வேண்டும். ஆனால் அது தைவதாதிகம் என்று சொல்லப்பட்டிருப்பதால், தைவதத்திற்குக் கீழே செல்லக் கூடாது என்று நினைக்கிறேன்.

பிறகு வீட்டிற்குச் சென்று (கன்னடத்தில் எழுதப்பட்ட) காகிதக் கட்டை என் முன் வைத்து, இதைப் பாருங்கள் என்னிடம் ஒரு புத்தகம் அச்சிடத் தயாராக உள்ளது. ஆனால் என்னை ஒருவரும் கண்டுக் கொள்வதில்லை. இதற்கு முன் இருந்த ராஜாவிடம் நான் என் புத்தகத்தை அச்சிடுங்கள் என்று சொன்னேன், அதற்குள் யாரோ நடுவில் அதைக் கெடுத்து விட்டார்கள், என் புத்தகம் அச்சிடப்பட்ட வில்லை.

கே: சங்கீத சாஸ்திரம் அறிந்த பிரசித்தி பெற்றவர்கள் வேறு யாரேனும் இருக்கிறார்களா?

ப: இல்லை. ரத்னாகரம் முதலிய கிரந்தங்களை யாரும் பார்த்தது கூட இல்லை.

கே: வேங்கடமகி, மற்றும் சதுர்தண்டி பிரகாசிகை இந்தப் பெயர்களைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

ப: இல்லை

கே: மாயாமாளவகௌளம் அநாதி காலமுதல் இருந்து வரும் முதல் ஸ்வர ஸப்தகமாகக் கருதப் படுகிறதா?

ப: ஆம்.

கே: மேளகர்த்தாவில் அது பதினைந்தாவது. அதனால் இந்தப் பத்ததி பிறகு வந்தவர் யாரேனும் செய்திருக்க வேண்டும், அதில் இது பதினைந்தாவதாகி இருக்கும். ஆனால் மரபை ஏற்று மாயாமாளவகௌளையை அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டது என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

ப: இதைச் சொல்ல என்னால் இயலாது

கே: உங்கள் மேளபத்ததியின் சங்கீத நியமங்கள் எந்தப் புத்தகத்தில் (பழைய) உள்ளது?

ப: காயகலோசனம் மற்றும் பரதகல்பலதா மஞ்சரி யில்

நான்: இவை இப்போது வெளி வந்த புத்தகங்கள். நான் பண்டைய மற்றும் சம்ஸ்கிருதத்தைப் பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

ப: அது எனக்குத் தெரியாது

கே: இந்த “காயகலோசனத்தில்” லகு, குரு வின் மேரு எழுதப்பட்டிருக்கிறது. அதில் கொடுக்கப்பட்ட எண்கள் எப்படி வந்தன என்பதை எனக்கு விளக்க முடியுமா?

ப: எனக்கு அதைச் சொல்ல இயலாது.

தாளத்தைப் பற்றிய தாளத்தைப் பற்றி பேச்செடுத்தவுடன் தெரிந்தது அவர் விவாதத்தில் அதிக உற்சாகம் காட்ட வில்லை, மேலும் கேள்வி கேட்பதில் அவருக்கு ஆர்வமும் இருக்கவில்லை என்று தெரிந்தது. எங்கள் முன் இரண்டொருவர் உட்கார்ந்திருந்தனர். அதனால் அவருடைய கௌரவத்திற்கு குறைவு ஏற்படுத்தும் வகையில் என் கேள்விகள் இருந்தால் அவருக்கு நன்றாக இருக்காது என்று எண்ணி, என் கேள்விகளில் அதிக பலம் கொடுக்கவில்லை. நல்ல விஷயம் என்னவென்றால் குறிப்பிட்ட கிரந்தத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா என்ற கேள்விக்கு அவர் தெளிவான சொற்களில் பதில் அளிக்க தயங்கத் தொடங்கினார்.

கே: நந்தீ பரதம் படித்திருக்கிறீர்களா?

ப: ஆம்

கேள் அதில் தாளம் பற்றிய செய்திகள் எப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது? அதாவது அந்தப் புத்தகத்தின் அமைப்பு அப்படி இருக்கிறது?

ப: நினைவில்லை. படித்து நிறைய வருடங்களாகி விட்டன.

இதற்கு மேல் வேறொன்றும் கேட்கக் கூடியதாக எனக்குத் தோன்றவில்லை என்றும் சொல்லலாம், ஒன்றும் வெளிவரவில்லை. இங்கே கரவீர ராவும் கொஞ்சம் களைத்துப் போனவராகத் தோன்றினார், அதனால் பேச்சை இத்தோடு நிறுத்துக் கொண்டு விட்டேன். எழுந்துக் கொள்ளும் பொது நான் சங்கீத ஞானத்தைத் தேடி வந்திருக்கிறேன் என்று சொன்னேன். சாயங்காலம் மீண்டும் உட்கார விருப்பம் இருந்தால் மீண்டும் வருகிறேன், இன்னும் சில பிரயோக விஷயங்களைப் பற்றிப் பேசலாம் என்றேன்.

அவர் இந்த விஷயங்களைப் பற்றிப் பேசத் தயாராக இல்லை. இதைப் படித்துத் தயார் செய்ய வேண்டும் மற்றும் அவருக்கு பதில் சொல்ல அவ்வளவு நேரம் இல்லை.உங்கள் கேள்விகளை நான் எழுதி வைத்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு பதில் உங்களுக்குத் தபாலில் அனுப்புகிறேன் என்றார் (ஆனால் முகவரியைக் கேட்கவில்லை) இவ்வாறு கச்சேரி முடிந்தது.

என்ன ஆச்சரியம் பாருங்கள். தெரியாத விஷயத்தை தெரியவில்லை என்று தெளிவாக ஒத்துக் கொள்ள மனிதனுக்கு எவ்வளவு கடினமாக இருக்கிறது. இந்த மனிதரின் புகழ் வெறும் சங்கீத சாஸ்திரத்தில்? கிருஷ்ண ஸ்வாமிக்கும் கூட ஆச்சரியம் ஆனது. இவர் எல்லோரையும் பயப்படுத்திக் கொண்டிருந்தார். வண்டியாக ஸ்லோகங்கள் சொல்லிக் கொண்டே போகிறார். அவரிடம் சந்தேகம் கேட்கப் போனால் கூட சந்தேகத்தைத் தீர்க்க இவருடைய முறை மேலே சொன்ன பிரகாரம் தான் இருக்கும். இதில் என்ன சந்தேகம் தீரும்? அதனால் இவரைப் பார்த்து ஆச்சரியம் அடைந்து இவர் ஏதோ பெரிய நிபுணர் என்று தோன்றும். நடைமுறைப் பாடகர்களானவர்கள் பெரும்பாலும் அவித்வான்களானதால், புத்தகத்தின் வழியில் தலை வைத்திருக்க மாட்டார்கள். இதனால் இவர் தன்னுடைய வண்ணத்தில் திளைப்பவராகத் தெரிகிறார். இவருடன் நான் பேசிய பேச்சு மொழிபெயர்ப்பாளர் மூலம் ஆனது என்பது

உண்மை, ஆனாலும், என் மொழி பெயர்ப்பாளர் ஸ்ரீ கிருஷ்ணா ராவ் ஆங்கிலம் நன்றாக அறிந்தவர், மேலும் அவருக்கு சங்கீதத்தில் ஆர்வமும் இருக்கிறது, சிலவற்றைப் புரிந்தும் வைத்திருக்கிறார். அதனால் அவருக்கு ஏதும் அநியாயம் நிகழ்ந்ததாகத் தோன்றவில்லை. இதைப் பற்றி அவருடைய பதில்களைப் பார்த்ததும் எனக்கு இந்த மனிதரின் சாஸ்திரிய அறிவை அதிகம் மதிக்கத் தக்கது அல்ல என்று தோன்றியது.

அவரும், மற்றவர்களும் அவர் பிரயோக சங்கீதத்தைப் பொறுத்த வரை, புகழத் தகுதியானவரும் இல்லை என்று சொல்கிறார்கள். அவர் மும்பையில் பார்வையற்றோரின் பாடசாலையில் ஏன் சங்கீதத்தைப் பாடமாக ஏன் வைப்பதில்லை என்று கேட்டார், நான் நல்ல தரத்தில் பாடப் புத்தகங்கள் கிடைத்தால், அதைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் கிடைத்தால் அதுவும் நடக்கும் என்றேன். ஆனால் அதற்கு இன்னும் சில காலம் ஆகும். பிறகு பதினொன்றரை மணிக்கு வீடு திரும்பினேன். சாப்பிட்டு முடித்து விட்டு இரண்டரை மணிக்கு இங்கேயுள்ள ஓரியண்டல் புத்தகாலயத்திற்கு கிரந்தம் பார்ப்பதற்குச் சென்றேன். அங்கே நிலைமை சென்னையில் இருந்த ஓரியண்டல் லைப்ரரியைப் போலத் தான் இருந்தது. ஒரு கியூரேட்டர் மற்றும் ஐந்தாறு எழுத்தர்கள் இருந்தனர். கிரந்தங்களின் அழகான ஒரு கேட்டலாக். கன்னடம், ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதத்தில் மூன்று வெவ்வேறு கேட்டலாக் உள்ளன. மற்றும் பிரசுரமான கிரந்தங்கள் மற்றும் சுவடிகளுக்கென்று தனித்தனி கேட்டலாக் இருக்கின்றன. நான் போனவுடன் பிரசுரமான புத்தகத்தின் கேட்டலாக்கைப் பார்த்தேன். அவற்றில் வெங்கடேச சாஸ்திரியின் புத்தகம் மற்றும் வேறு சில தெலுங்கு புத்தகங்கள் இருந்தன. சுவடிகளின் கேட்டலாக்கைப் பார்ப்பது என் விசேஷமான நோக்கமானதால் அதைப் பார்த்து, சங்கீத கிரந்தங்களின் விவரத்தை இவ்வாறு எழுதி வைத்துக் கொண்டேன்.

கிரந்தப் பட்டியல், அரசு ஓரியண்டல் லைப்ரரி, மைசூர்

பரத கிரந்தங்கள்

1. அபிநவபரதஸாரஸங்க்ரஹம் - மும்மடிசிக்க பூபர் செய்தது. கன்னட லிபியில் 21/2 சுவடிகளில் இருக்கிறது

2. ஆதி பரதம் - பரதாசார்யர் செய்தது, முழுமையடையாதது, கிரந்த லிபி ஆந்திரம், 85 பாத்திரங்களில், 83 பத்திரங்கள், முழுமையற்றவற்றில் தாளாதிலக்ஷணம்

3. பரதஸாரஸங்க்ரஹம் - சந்திரசேகரார் செய்தது (கர்நாடக) 77 பத்திரம் (கர்நாட 45)

4. சங்கீத சூடாமணி - ஹரிபால மஹீபதி செய்தது (ஆந்திரம்) 57 பத்திரம் கர்ணாடாந்திர டீகா

5. சங்கீதமகரந்தம்

6. சங்கீதலக்ஷண தீபிகா - கோரணார்யர் செய்தது (நாகரி) 11 பத்திரம்

7. சங்கீதலக்ஷணம் [ஆந்திரம்] - 26 பத்திரம்

8. சங்கீத ஸமய ஸார ஸங்க்ரஹம் - பார்ஷ்வதேவர் செய்தது (கர்ணாடம்)
93 பத்திரம்

9. ஸ்வரபிரஸ்தாரம் (கர்ணாடம்) 12 பத்திரம்

10. ஸ்வரமேளகலாநிதி - ராமாமாத்தியர் செய்தது, 7 பத்திரம், உபோத்காத பிரகரணம்

இவ்வளவு புத்தகங்கள் இந்த நூலகத்தில் இருக்கின்றன. இவற்றின் ஒன்றைக் கூட நான் கேட்கவில்லை. அதன் காரணம் என்னவென்றால்,

1. அபிநவபரத - இந்தப் புத்தகம் முதலில் வாத்யாத்யாயத்திலிருந்து தொடங்கிப், பிறகு அதன் இரண்டாம் பகுதியில் ஸ்வரம் மற்றும்
   ராகத்தைப் பற்றி எழுதப் பட்டிருக்கிறது. இந்த ஸ்லோகங்களை எழுத்தரை வைத்துப் படித்துக் கொண்டேன். இது முற்றிலும் ரத்னாகரத்தின் பிரதி போலவே தோன்றியது, ஆனால், ரத்னாகரத்தில் இதை விட விரிவாக இருக்கிறது. ரத்னாகரம் இதன் நகலா என்பது தான் கேள்வி. ஆனால் தெளிவாக இதில் "அபிநவபரதம்" என்றிருக்கிறது, மற்றும் இதன் முழு வடிவமும் ரத்னாகரத்துடையது தான். இதன் பிரசுரமான புத்தகம் என்னிடம் இருக்கிறது.
2. ஆதிபரதம் - இந்தப் புத்தகம் மும்பையில் நிர்ணயஸாகர் அச்சிட்டுப் பிரசித்தி பெற்றது, அதுவும் என்னிடம் இருக்கிறது.
3. பரத ஸாரஸங்க்ரஹம் - இந்த கிரந்தம் நிருத்ய கலையைப் பற்றியது, அது என் துறை இல்லை.
4. சங்கீத சூடாமணி - இந்தக் கிரந்தத்தின் நகலைத் திருவனந்தபுரம்
   நூல்நிலையத்திலிருந்து வாங்கிக் கொள்ள நான் விண்ணப்பக் கடிதம்
   கொடுத்திருக்கிறேன், அது எனக்கு எப்படியும் கிடைக்கப் போகிறது
5. சங்கீத மகரந்தம் - இந்த கிரந்தம் நிருத்யத்தைப் பற்றியது, மேலும் இதன் நகல் எனக்குத் தஞ்சாவூர் நூல் நிலயத்திலிருந்து கிடைத்தது. இதை நான் தவறுதலாகப் பெற்றுக் கொண்டு விட்டேன். இதன் பெயரைப் பார்த்து நான் இதை வாங்கினேன், ஆனால் அது எனக்கு உபயோகமற்றதாகப் போய் விட்டது.
6. சங்கீத லக்ஷண தீபிகா - இங்கே வெறும் பதினொரு பக்கங்கள் தான் இருக்கின்றன. எழுத்தாரால் நன்றாகப் படிக்க முடியவில்லை. ஆனால் படிக்கப்பட்ட ஒன்றிரண்டு பக்கங்களில், ஸ்வரம், ராகம், இவற்றின் விஷயம் பற்றி ஒன்றும் இருக்கவில்லை. அதனால் இந்த விஷயம் பற்றி ஏதாவது இருக்கவேண்டும் என்று தோன்றியது.
7. சங்கீத லக்ஷணம் - இந்த கிரந்தம் நூலகத்தில் இல்லை. எழுத்தர் யாராவது படிக்க எடுத்துக் கொண்டு போயிருக்கலாம் என்றார், ஆனால் அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் இல்லை.
8. சங்கீதஸாரஸங்க்ரஹம் - இந்த கிரந்தத்தைப் பெற நான் சென்னை ஓரியண்டல் லைப்ரரியில் விண்ணப்பித்து பணமும் கட்டியிருக்கிறேன். அது அங்கிருந்து கிடைக்கப் போகிறது.

9. ஸ்வரபிரஸ்தாரம் - இவை இரண்டும் தொலைந்து போயிருப்பதால் இப்போது கிடக்கவில்லை. யாருக்காவது படிக்கக் கொடுக்கப் பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை
10. ஸ்வரமேளகலாநிதி -

மொத்தத்தில் இப்படி ஆனது. இதனால் சுமார் நாலு மணிக்கு அங்கிருந்து கிளம்பினேன். பெங்களூரிலிருந்து ஸ்ரீ ஆனந்த ராவ் இங்கேயுள்ள கண்ட்ரோலர் ஆ◌ஃப் பேலஸ் இஸ்டெப்லிஷ்மெண்ட் [Controller of Palace Establishment] ஸ்ரீ ராமகிருஷ்ண ராவின் பெயரில் ஒரு அறிமுகக் கடிதம் கொடுத்திருந்தார், அதில், என் நோக்கம் நூலகத்தில் சங்கீத கிரந்தங்கள் பார்ப்பது மற்றும் சங்கீதத்தைப் பற்றி அறிவியல் மற்றும் வரலாற்றுப் பூர்வமான தகவல் பெறுவது என்பதையும் விசேஷமாகக் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு நான் ஸ்ரீ ராமகிருஷ்ண ராவைச் சந்தித்துக் கொடுத்து அவரிடமும் கேட்க நினைத்திருந்தேன். அதனால் ஓரியண்டல் நூலகத்திலிருந்து நேராக ◌ஃபோர்ட்டில் அவரது அலுவலகத்திற்குச் சென்றேன். நல்லகாலமாக அவரைச் சந்திக்க முடிந்தது. இந்த மனிதர் மிகவும் எளிமையாகவும் உதவி செய்யும் மனப்பான்மையுள்ளவராகவும் இருந்தார். அவர் நல்ல முறையில் என்னை வரவேற்றார், மற்றும் எல்லா உதவியும் செய்வதாகச் சொன்னார். எல்லா விசாரிப்புகளையும் செய்தார். அவரைச் சந்தித்தது மிகவும் சந்தோஷமாக இருந்தது. ஆனந்த ராவைப் பார்த்ததும் அவ்வாறே இருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ண ராவ் பேலஸின் முக்கிய அதிகாரியாக இருந்ததால், எல்லா சங்கீதத்துறைகளும் அவர் மேற்பார்வையில் இருந்தன. அவர் மஹாராஜா வெளியூர் யாத்திரைக்குச் சென்றிருப்பதால் இந்த சமயத்தை உபயோகிப்பதற்காக சங்கீதக்காரர்கள் மற்ற ஊர்களுக்குச் செல்ல ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றார். அதனால் சிலர் வெளியூர் சென்றிருக்கலாம். ஆனாலும் யார் ஊரில் இருக்கிறார்களோ அவர்களுக்கு, இன்றிரவு உங்கள் பங்களாவுக்கு வந்து உங்களுக்குத் தேவையான தகவலைத் தந்து தம் கலையைக் காட்ட உத்தரவு அனுப்புகிறேன். நான் அங்கே போனவுடன், அவர் விசாரிக்க அனுப்பிய ஆள் வந்து சேஷண்ணா வெளியூர் சென்றிருப்பதாகச் சொன்னார்,ஆனால் சுப்பண்ணா ஊரில் தான் இருக்கிறாராம். அதே போல, வீணா சுப்பாராவ், மற்றும் வைணிகர் சேதுராவ், மற்றும் வைணிகர் சாமண்ணாவும் ஊரில் தான் இருக்கிறார்கள். இவ்வாறு ஸ்ரீ ராமகிருஷ்ண ராவ் ஒரு உத்தரவு அனுப்பினார், தயவுடன் எனக்கு ஒரு நோட் எழுதிக் கொடுத்தார், அது இவ்வாறு இருந்தது:

பேலஸ்-இன் சங்கீதக் களைஞர்கள் மற்றும் பாடகர்கள் பண்டிதர் சுப்பண்ணா மற்றும் சேதுராஜ், ஸ்ரீ வீ. என். பாத்கண்டே-வைச் கண்டிக்க இன்று மாலை ஸ்ரீ.டீ. ஆனந்தராவின் வீட்டிருக்கு செல்ல வேண்டும். பண்டிட் கிருஷ்ணா அய்யங்காரிடம் நாளை காலை 8

மணிக்கு ஜகமோஹன் பேலஸின் சரஸ்வதீ பண்டாரத்தில் இருந்து, பண்டாரத்தின் சம்பந்தப்பட்ட ஓலைச்சுவடிகளை இவருக்குக் காட்டுமாறு தெரிவிக்கப் படுகிறது.

3-1-1905 கையெழுத்து பீ.ராமகிருஷ்ண ராவ்
பேலஸ் அதிகாரி, மைசூர்

இந்த நோட்டை வாங்கிக் கொண்டு, நன்றி சொல்லிவிட்டு, ஐந்து மணிக்குப் பிறகு வீட்டுக்குப் போனேன். ஊரையும் சுற்றிப் பார்த்தேன். அது மிகவும் அழகாக இருந்தது, சாலைகள் எல்லாம் சுத்தமாக இருந்தன. அரசு கட்டிடம் பார்க்கத் தக்கவாறு இருந்தது. இருக்கட்டும். மாலை ஏழரை-எட்டு மணிக்கு ஸ்ரீ வீணா சுப்பராவ், சேதுராவ் தத்தம் வீணையுடன் வந்தனர். அவர்கள் மிகவும் அழகாக வாசித்துக் காட்டினார்கள். ஆனால் சுப்பண்ணா வரவில்லை. அவர் பதவியுடையவர் அதனால் சுகமாக இருப்பவர். ஒரு மணி நேரம் வரை வாத்தியம் வாசித்ததற்குப் பிறகு, நான் சாஸ்திர சம்பந்தமாக, இங்கேயுள்ள கர்நாடக பத்ததியின் சங்கீத சித்தாந்தங்கள் பற்றிக் கேட்டேன். இருவரும் திறந்த மனத்துடன், அவர்கள் பரம்பரையில் கற்றவர்கள் என்று சொன்னார்கள். அரசரின் உதவியால் சாப்பிட்டுக்கொண்டு சுகமாக வாழ்கின்றனர். அவர்கள் வெறும் பிரயோகிகத் தேர்ச்சி பெற்றவர்கள். ஏதோ நல்லதோ கேட்டதோ வாசித்ததை நீங்கள் கேட்டீர்கள். கிரந்தம் மற்றும் சாஸ்திரத்தைத் தேடும் வேலையை நாங்கள் வைத்துக் கொள்ளவில்லை. இது மிகவும் உபயோகமான விஷயம், சந்தோஷம் கொடுக்கக் கூடியது, எங்களைப் போன்றவர்களுக்கு இது தெரிந்திருக்க வேண்டும் என்பதென்னமோ உண்மை. ஆனால் இந்த விஷயத்தைப் பற்றித் தெரிந்தவர்கள் இந்த ஊரில் யாரும் இல்லை, எங்களுக்கு இது பற்றி யாரும் சொல்லிக் கொடுத்ததும் இல்லை. அவர்கள் ஸ்ஃபுரிதம், பிரத்யாஹாதம், டாலூ, மோட்[மீட்டு?], விவர், முதலிய இங்கே புழக்கத்திலிருக்கும் கமக வகைகளை வீணையில் காட்டினார்கள். வீணை நன்றாக வாசித்தார்கள். நான் அதைக் கேட்டு ஆனந்தம் அடைந்தேன். அவர்கள் இங்கேயுள்ளவர்கள் எல்லோரும் பிரயோகிக சங்கீதத்தில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள் என்றார்கள். சேஷண்ணா மற்றும் சுப்பண்ணாவும் அப்படித் தான். சேஷண்ணா வுடைய வாசிப்பு எங்களுடையதை விட அதிக தேர்ச்சியுடையதாக இருக்கலாம் ஆனால் வழி இதே தான். சுப்பண்ணா தன் வாசிப்பில் கொஞ்சம் ஹிந்துஸ்தானி வழியைக் கொண்டுவருவார், அதனால் அவருக்குக் கொஞ்சம் புகழ் அதிகம். அவர் மிகவும் புத்திசாலி. சேஷண்ணா அதிகம் தேர்ச்சி பெற்றவர். சுப்பண்ணாவிற்கு அதிகம் தெரியும் என்று சொல்லப்படுகிறது. அது என்னவோ. சாஸ்திரம் மற்றும் கிரந்தம் அவருக்கும் தெரியாது. எங்கள் ஊரில் கரிகிரி ராவ் இந்த விஷயத்தைப் பற்றி ஏதோ சொல்லிக் கொண்டிருப்பார். அவர் உங்களுக்கு எதுவும் சொன்னாரா இல்லையா என்பது தெரியாது. சாமண்ணா என்ற வைணிகர் இருக்கிறார், ஆனால் அவரும் எங்களைப் போலத் தான். தஞ்சாவூர் மற்றும் தெற்கில் இந்த விஷயம் பற்றி விவாதங்கள் அதிகம் நடக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். உங்கள் மும்பை மக்கள் ஆய்வில் சிறந்தவர்கள் என்று சொல்கிறார்கள். அதனால் எங்களைப் போன்ற நடைமுறைக் கலைஞர்களிடம்

உங்களுக்கு சாஸ்திரிய விஷயமாகத் தகவல் கிடைக்கும் என்று எங்களுக்குத் தோன்றவில்லை. எனக்கு அவர்களின் அளவான பேச்சு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. இந்தப் பேச்சு வார்த்தை நடந்துக் கொண்டிருந்த போது, சிடி மேஜிஸ்ட்ரேட். ஸ்ரீ என். வெங்கடராவும் அங்கே இருந்தார். அந்த வைணிகர்கள் அவர் முன்னிலையிலேயே இதையெல்லாம் சொன்னார்கள். ஸ்ரீ வெங்கடராவ் இது பற்றிய என் உற்சாகத்தைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார். அவர் மிகவும் பணிவான, நட்புள்ள மனிதராக இருந்தார். இந்த ஊரில் நேரம் கிடைத்தால் கோவிந்தாசாரியார் என்ற ஒரு பெரியவர் இருக்கிறார். அவர் உங்களைப் போலவே இந்த சாஸ்திரத்தில் உழைத்தவர். நான் அவரிடம் உங்களை நாளை கூட்டிச் செல்கிறேன். என்றார். நான் அவரிடம் நன்றி சொல்லி நாளை அவருடன் அங்கே செல்லலாம் என்று எண்ணினேன். இருக்கட்டும் இன்று மிகவும் ஆனந்தமாக நாள் கழிந்தது. எழுதி வைத்துக் கொள்ளக்கூடிய விஷயம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் நெஞ்சம் நிறைந்தது.

மைசூர்

வியாழக்கிழமை 4 ஜனவரி 1904

தீர்மானித்தபடி இன்று காலை, எட்டு மணிக்கு எழுந்து ஸரஸ்வதி பண்டாரத்தில் ஓலைச்சுவடிகளைப் பார்க்கச் சென்றேன். ஆனால் அங்கே என்னவோ ஏமாற்றம் தான் அடைந்தேன். அங்கே இரண்டே இரண்டு கிரந்தங்கள் தாம் இருந்தன. 1. அபிநய த3ர்பணம் 2. சங்கீத ரத்னாகரம் இவற்றுள் முதலாவது எனக்குத் தேவை இல்லை, இரண்டாவது என்னிடம் இருக்கிறது மொத்தத்தில் அங்கிருந்து பதினைந்து நிமிடத்தில் திரும்பி வந்தேன். இன்று காலையே பெங்களூர் செல்லக் கிளம்பினேன் ஆனால் ஸ்ரீ வெங்கடராவுடன் கோவிந்தாச்சார்யாவின் வீட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது, மேலும் சுப்பண்ணா மற்றும் சாமண்ணாவைச் சந்திக்க முடியலாம் என்ற ஆசையினால் தங்கி விட்டேன். இரவு கிளம்ப இருக்கிறேன். உடன் வந்த எல்லோரும் பெங்களூரில் இருக்கிறார்கள் அவர்கள் தனியாக இருக்கிறார்கள்.

மீண்டும் ராமகிருஷ்ணராவ்

இன்று சுமார் 10 மணிக்கு, ஸ்ரீ ராமகிருஷ்ண ராவ் என் வீட்டிற்கு வந்தார், மேலும் அவர் மகாராஜாவின் வீட்டு மஹாலில் கையால் எழுதப்பட்ட இரண்டு ஓலைச்சுவடிகளைப் பார்த்ததாகவும் அவற்றை எனக்குக் காட்டக் கொண்டு வந்திருப்பதாகவும் சொன்னார். இவை உபயோகப்படுமானால் அவற்றை நகலெடுத்து எனக்கு அனுப்புவார். படிக்க ஒரு எழுத்தரையும் உடன் அழைத்து வந்திருந்தார். அவர் முதலில் படித்த ஸ்லோகம், "கங்காதரஸ்திலக" பைரவ்வுடையது. பிறகு பைரவியுடையதைப் படித்தார், அது, "ஸ்படிகரசித பீடே கைலாச ச்ருங்கே" என்றிருந்தது. இதைக் கேட்டவுடன் எனக்கு இந்தப் பகுதி சங்கீத த3ர்பணத்திலிருந்து எடுக்கப்பட்டது என்று தெரிந்தது. நான் த3ர்பணத்தைத் திறந்து அதற்கு மேலேயுள்ள ஸ்லோகத்தைப் படித்துக் காட்டினேன். அதற்கு அந்த எழுத்தர் அந்த கையெழுத்துப் பிரதியில் அப்படியே தான் இருந்தது என்றார். அதனால் அந்தப் புத்தகம் தேவைப் படவில்லை. அந்தப்

புத்தகத்தில் ஒவ்வொரு ராக-ராகினிக்குக் கீழே படம் வரையப்பட்டிருந்தது. பாதிப் புத்தகம் "நாயக-நாயிகா" வின் லக்ஷணங்களால் நிரப்பட்டிருந்தது. அதிலும் படங்களும் உதாரணங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. சில படங்கள் அருவருப்பாகவும் இருந்தன. இருக்கட்டும். இரண்டாவது புத்தகம், இங்கேயுள்ள எழுபத்திரண்டு மேளங்களைப் பற்றியது. அவற்றில் மேளங்களின் ஆரோஹணம் மற்றும் அவரோஹணம் எழுதப் பட்டிருந்தது. சில ஜன்ய ராகங்களின் ஆரோஹாவரோஹணமும் இருந்தன. இந்தப் புத்தகத்தின் பெயர் "சங்கீதரத்னமாலா" என்றிருந்தது. இந்த ஆரோஹண-அவரோஹணம் என்னிடம் இருந்தது, அதனால் அந்தப் புத்தகமும் எனக்கு உபயோகமாகவில்லை. அப்படி இப்படியாக அரட்டைக்குப் பின் ஸ்ரீ ராமகிருஷ்ண ராவ் சென்றார்.

கோவிந்தாச்சாரியாருடன் சின்னஸ்வாமியின் - கதை

சொன்னபடி மதியம் சிடி மேஜிஸ்ட்ரேட் ஸ்ரீ வெங்கடராவ் வீட்டிற்குச் சென்றேன், அங்கிருந்து ஏ. கோவிந்தாச்சார்யா மைசூரின் முன்னாள் காரியபாலன மந்திரி வீட்டிற்குச் சென்றேன். இந்த மனிதர் சில வருடங்களுக்கு முன்னர் சங்கீதத்தில் ஆர்வம் காட்டினார். பிறகு அந்த ஆர்வம் மாறி அவருக்கு தியோசஃபி [theosophy] பக்கம் திரும்பி, அவர் தியோசோஃபிஸ்ட் கூட. நல்ல வித்வான். என் வேலையை பாராட்டினார் மற்றும் ஆராய்ந்துக் கொண்டே இருக்குமாறு சொன்னார். அவர் வீட்டில் இருந்த சங்கீதப் புத்தகங்களை என் முன் வைத்தார், அவற்றில் டேகோர் எழுதிய "சங்கீத ஸார ஸங்க்ரஹம்" மட்டும் என்னிடம் இருக்கவில்லை. நல்லகாலமாக அவரிடம் இரண்டு பிரதிகள் இருந்தன, அவற்றில் ஒன்றை எனக்குக் கொடுத்தார். அவரிடன் நீங்கள் என்னென்ன சங்கீத கிரந்தங்கள் படித்திருக்கிறீர்கள் என்று கேட்டேன், அவர் தனக்கு எந்த கிரந்தமும் நன்றாகப் புரிந்ததில்லை என்றார். குறித்த சமயத்தில் உதவி கிடைக்காததால் அந்த ஆர்வம் குன்றிப் போய் விட்டது, அதுவும் பல வருடங்களாகி விட்டது. சின்னஸ்வாமி என் நண்பர். அப்போது ஸ்டாஃப் நோடேஷனில் நம் சங்கீதத்தை எப்படி அமைக்க வேண்டும், எதை வைத்து அமைக்க வேண்டும் என்பது குறித்து அவர் மிகவும் உழைத்திருக்கிறார். பிறகு அவருடைய பண நிலைமை குறைந்துக் கொண்டே போனதால் எல்லாம் பின்நின்று விட்டது. சின்னசாமி பற்றி அவர் இன்னொரு விஷயம் சொன்னார். அது என்னவென்றால், கோவிந்தராவ் (ஆசார்ய) விதம் ஓரியண்டல் ம்யூசிக்கின் சில பிரதிகள் விற்பனைக்காக வைக்கப்பட்டன. ஆனால் அவற்றை யாரும் வாங்க வில்லை. மக்களுக்கு சாஸ்திரத்தில் ஆர்வம் இருக்கவில்லை. முடிவில் சின்னஸ்வாமி கோவிந்தராவிடம், அந்தப் புத்தகங்களை சில நல்ல மனிதர்களுக்கோ அல்லது நூலகத்திற்கோ தானம் கொடுத்து விடச் சொன்னார். கோவிந்த ராவ் அதைத் தன் வீட்டில் அப்படியே வைத்திருந்தார். ஒரு நாள் சின்னஸ்வாமியின் கடிதம் நினைவுக்கு வரவே அவர் எழுத்தருடன் வெவ்வேறு இடங்களுக்குப் பார்சல் கட்ட உட்கார்ந்திருந்தார். இதற்குள் ஆச்சரியமாக சின்னஸ்வாமி தானே வந்து, கோவிந்த ராவின் வாசலில் வந்து நின்றார், தன் புத்தகங்கள் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அவர் கோவிந்த ராவிடம் கை கூப்பி இந்தப் புத்தகங்களை அனுப்பாதீர்கள் என்றார். அவற்றின் விற்பனையால் என் வாழ்க்கை கொஞ்ச நாள் ஓடும் என்றார். மொத்தத்தில் புத்தகங்கள் எந்த விலைக்குப் போக முடியுமோ

கொஞ்சம் கொஞ்சமாக விற்றன, அதன் மூலம் வந்த இருநூறு ரூபாயை எடுத்துக் கொண்டு சின்னஸ்வாமி சென்றார். சின்னஸ்வாமி எம்.ஏ, மற்றும் மிக புத்திசாலியும் கூட. அவர் தன்னுடைய அனைத்தையும் இந்த அச்சு- அச்சிடுவதில் போட்டு விட்டார். ஆனால் அவருக்குப் புகழ் கிடைக்கவில்லையே , மேலும் நிராசையான நிலையில் அவர் மறைந்து விட்டார்.

ஸாமகானத்தைத் தேடி

இதைக் கேட்டு எங்களுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதற்குப் பிறகு வேதம் மற்றும் வைதிக சங்கீதத்தின் பேச்சு எழுந்தது. அவர் இந்த ஊரில் கிருஷ்ணா அய்யங்கார் என்ற ஒரு பிராமணர் சாமவேதத்தை நன்றாகப் பாடுவார், இந்த ஊரில் அவருக்குப் புகழ் அதிகம் என்றார். நான் அவரைக் கேட்க விரும்புகிறேன் என்றேன். நாங்கள் மூவரும் (அதாவது கோவிந்தராவ், மற்றும் ஒரு ப்ரோஃபெஸர் - அவர் பெயர் எழுதி இருந்த காகிதம் தொலைந்து விட்டது) அந்த அய்யங்கார் வீட்டிற்குச் சென்றோம். வழியில் ப்ரோஃபெஸர், இந்த ஊரில் சுந்தர சாஸ்திரி என்ற சங்கீத வாத்தியார் கன்யா சாலையில் இருக்கிறார் என்றார். அவரும் சங்கீத கிரந்தங்கள் படித்தவர் என்று சொல்கிறார்கள். நல்ல காலமாக அவர் வீட்டிருக்குச் செல்லும் பொது அந்த சாஸ்திரிஜீயை வழியிலேயே சந்தித்தோம். நாங்கள் அவரை எங்களுடன் அழைத்துக் கொண்டு ஸ்ரீ அய்யங்கார் வீட்டிற்குச் சென்றோம். ஆனால் நாங்கள் சென்ற பொது அவர் வெளியே போயிருந்தார், அவரை அழைத்தோம். அவருக்காகக் காத்துக் கொண்டிருந்த பொது சுந்தர சாஸ்திரியுடனான கேள்வி-பதில் இவ்வாறு சென்றது :

சுந்தர சாஸ்திரியுடன் சந்திப்பு

கே: அய்யா, நீங்கள் சமஸ்கிருத கிரந்தம் படித்திருக்கிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன். எவற்றைப் படித்திருக்கிறீர்கள்?

ப: "ரத்னாகரம்" படிதிருக்கிறேன். ராகபோதத்தின் சில அம்சங்கள் மற்றும் கொஞ்சம் பாரிஜாதத்தின் அம்ஸங்களும் பார்த்திருக்கிறேன்.

கே: ரத்னாகரத்தின் ராகாத்யாயத்தின் ஒரு ராகத்தை உங்கள் முன் வைத்தால் நீங்கள் அதைப் பாட முடியுமா?

ப: ஆம்

நான்: (பையிலிருந்து புத்தகத்தை எடுத்து முன்னே வைத்து விட்டுச் சொன்னேன்) இதோ முதல் ராகம் “சுத்த சாதாரித” இதைப் பாடுங்கள் பார்க்கலாம். நான் புத்தகத்தை முன்னால் வைத்தவுடன், முணுமுணுத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் ஸ்லோகத்தைப் படிக்க ஆரம்பித்தார். ஆனால் பாட்டு வரவில்லை. அய்யா சாஸ்திரி, இதில் ஷட்ஜாதி மூர்ச்சனை என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதன் உபயோகம் என்ன , எப்படி, இதை முதலில் பாடிக் காட்டுங்கள்.

ப: “க்ரமாத்ஸ்வராணாம்” இவ்வாறு மூர்ச்சனை சொல்லப் பட்டிருக்கிறது

நான்: சரி. அப்போது ரத்னாகரத்தின் ஏழு சுத்த ஸ்வரங்கள் என்ன என்று சொல்லுங்கள். பிறகு விளக்கத்தின் இரண்டாவது அம்ஸத்தைப் பார்க்கலாம்.

ப: "சதுஸ்சதுஸ்சதுஸ்சைவ" முதலியன சொல்லி இருப்பதால் இவற்றை எல்லாம் வீணையில் காட்ட முடியும்

நான்: உங்களுக்குத் தொண்டையில் பாட முடியும். நீங்கள் சங்கீத ஆசிரியர், எனக்கு ஸ்வரங்கள் புரியும், உங்கள் கர்நாடக பெயர்களும் தெரியும். உங்கள் பக்கத்தில் இந்த க்ரோமேடிக் ஸ்கேல் இருக்கிறது. (பன்னிரண்டு ஸ்வரங்களின் ஆரோஹண-அவரோஹணத்தைப் பாடிக் காட்டி) இப்போது சொல்லுங்கள், ஷட்ஜாதி மூர்ச்சனா-விற்கு எந்த ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளலாம். ரத்னாகரத்தின் ஸ்வரப் பெயர்களை விடுங்கள், ஆனால் உங்கள் பத்ததியின் பெயர்களால் சொன்னால் கூட நான் புரிந்துக் கொள்வேன். (கரஹரப்ரியா, சங்கராபரணம், மாயாமாளவத்தின் ஸ்வர ஸப்தகங்களைப் பாடிக் காட்டி) ரத்னாகரத்தின் சுத்த ஸ்வர ஸப்தகம் இவற்றில் ஒன்றில் இருக்கிறதா? அல்லது இதற்கு அருகிலாவது இருக்கிறதா?

ப: இதை என்னால் சொல்ல இயலாது

கே: அப்போது மற்ற மூர்ச்சனைகள், உதாரணமாக, "தைவதாதி மூர்ச்சனை" முதலியவை எதற்காகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் உங்களால் சொல்ல முடியாதா?

ப: இல்லை

நான்: உங்களால் ரத்னாகரத்தின் சுத்த ஸ்வரம் எவை என்று சொல்ல முடியாத பொது அதிலிருந்து எப்படிப் பாட முடியும் என்பது எனக்குப் புரியவில்லை?

ப: என்னால் பாட முடியாது என்று ஒத்துக்கொள்கிறேன்.

கே: ஸ்ருதியின் அமைப்பு எப்படி, ஏன் செய்ய வேண்டும் என்பதையும் உங்களால் சொல்ல முடியாது

ப: ஸ்லோகத்தைப் புரிந்துக் கொண்டிருக்கிறேன், ஆனால் அதன் உபயோகம் தெரியாது.

கே: ராகபோதத்தின் ஸ்வரங்களின் உங்களுக்குக் கோமள ரி , த தெரிந்ததா?

ப: இல்லை. இது ஒரு பெரிய பிரச்சனை. இதே காரணத்தினால் ரத்னாகரத்திலும் சிக்கிக் கொண்டேன். பல ஸ்வரங்கள் கிடைக்கவில்லையே

கே: காந்தார கிராமம் இந்த பூமியில் ஏன் இல்லை?

ப: அந்த ஸ்ருதி அமைப்பைச் செய்து தோன்றும் ராகங்கள் பாடக் கடினமானவை மற்றும் கேட்க இனிமையாக இருக்காது என்பதால் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது

கே: நீங்கள் கர்நாடக பத்ததிக்காக ஏதேனும் சமஸ்கிருத கிரந்தத்தை அறிவீர்களா? நீங்கள் அதைப் படித்திருக்கிறீர்களா?

ப: இல்லை எனக்குத் தெரியாது, ஆடினால் நான் அதைப் படித்ததும் இல்லை

கே: ராகாங்கம், பாஷாங்கம் முதலியவற்றைப் பற்றிய தகவல் சொல்ல முடியுமா?

ப: இல்லை

கே: "ஜாதி பிரகரணம்" தெரியுமா (அவசியமா?) ?

ப: இல்லை

கே: உங்கள் சங்கீதம் எந்த அடிப்படையில் பாடப்படுகிறது ?

ப: பரம்பரையில் கற்று, மற்றும் தெலுங்கு புத்தகங்களில் கொடுக்கப்பட்ட தகவல்களுக்கேற்ப.

ஸ்ரீ கிருஷ்ண அய்யங்காருடன் சாமவேதம் பற்றிய பேச்சு

இத்தனைப் பேச்சுக்குப் பின், ஸ்ரீ கிருஷ்ணா அய்யங்கார் வந்தார் , பிறகு சாம வேதம் பற்றிய பேச்சு தொடங்கியது. மொழிபெயர்ப்பாளரின் உதவியை நாடியவாறு இருந்தேன்.

நான்: நான் நாரதி சிக்ஷா வில் வேதம் எப்படிப் பாட வேண்டும் முதலிய விஷயங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இது உண்மையா?

ஸ்ரீ அய்யங்கார் - ஆம். இது உண்மை

கே: நீங்கள் அப்படித் தான் பாடுகிறீர்களா?

ப: ஆம்

இதற்குப் பிறகு, அவர் நாரதீ சிக்ஷாவிலிருந்து ஸ்லோகம், சொல்ல ஆரம்பித்தார், பிறகு கையை எப்படி வைத்துக் கொள்ளவேண்டும், விரல்களை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்பது விளக்கத் தொடங்கினார். நாரதி சிக்ஷா-வை மீண்டும் நான் மொழி பெயர்த்து வைக்கப் போவதில்லை. ஆனால் அதில் முக்கியமான ஸ்லோகங்களில் ஸப்த ஸ்வரங்களின் பெயர் மற்றும் அதோடு பொருந்தும் வைணிகர்களின் ஸ்வரங்கள் என்ன என்பது தான் இருந்தது. எப்படிப் பாடினால் என்ன பலன் என்பது முக்கியமானவை அல்ல.

இதற்குப் பிறகு "ஸாமத்தை"ப் பாடினார். கையினால் ஸங்கேதங்கள் செய்துக் கொண்டிருந்தார். பாட்டில் ஸோஹினி-யின் இரண்டாம் பாதி சதுஷ்கத்தின் ஸ்வரம் இருந்தது. ஒரு ஆச்சரியம் என்னவென்றால், ஏறக்குறைய ஆறு மாதத்திற்கு முன்னர், எங்கள் க்ளப்பில் "கடியாபாட்" அல்லது "சித்தபுர" என்ற இடத்தில் ஒரு ஸாமவேதி பிராம்மணரை நான் கேட்டேன். இதே போல. இன்னொரு ஸாமவேதி (இடம் நினைவில்லை) யையும் கேட்டேன். இவர்கள் எல்லாருடைய பாட்டிலும் ஸோஹினியின் இந்த ஸ்வரங்கள் இருந்தன. "ஸா நீ த ம த நீ

ஸா" இவ்வாறு இருந்தது. இவ்வாறு ஏன் இருக்கிறது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அய்யங்கார் தேசமுழுவதிலும் ஸாமத்தை இதே ஸ்வரங்களால் பாடுகின்றனர் என்றார். உயர்ந்த குரலில் பாடிக்கொண்டிருந்தாலும், வெறும் உயர்ந்த ஸ்தானத்தில், ஆதார ஸ்வரத்தை வைத்துக் கொண்டு, ஸப்தகத்தில் அதே ஸ்வரத்தை உபயோகிக்கிறார்கள், மற்றும் அதில் "ஹௌ ஹௌ" முதலிய சப்தங்களை உபயோகிக்கின்றனர். அவற்றில் வெவ்வேறு தேவதைகளுக்கு வெவ்வேறு அக்ஷரங்கள் உள்ளன. ஹௌ என்பது வாயு தேவதைக்கானது. "அனுதாத்த", "உதாத்த" முதலிய, பெயர்கள் ஏழு ஸ்வரங்களின் பழைய பெயர்கள் அல்ல, ஆனால் அவை பொது வழக்கு. அதாவது எந்த விதமான, "உயர்ந்த ஸ்வரத்தையும் உதாத்த ஸ்வரம்" என்பார்கள். தாழ்ந்த ஸ்வரத்தை "அனுதாத்த" என்பர். மற்றும் சமமான ஸ்வரத்தை "ஸ்வரிதம்" என்பர். இவ்வாறு ஸாமகானம் கேட்டு இரவு எட்டு மணிக்கு வீடு திரும்பினேன். வீட்டுக்கு வந்து பார்த்தால், அரண்மனைப் பாடகர்கள் சுப்பண்ணா, வீணை சுப்பாராவ் (பழக்காரர் அல்ல), என். வேங்கடராவ், மற்றும் இன்னும் இரண்டு மூன்று பேர் அமர்ந்திருந்தனர். சுப்பண்ணாவிற்கு ராமகிருஷ்ண ராவ் உத்தரவு போட்டிருந்தார். அதனால் நீண்ட நேரமாக வந்து அமர்ந்திருந்தார். வீணையைக் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை. எனக்குச் சிறிது நேரம் தான் இருந்தது, ஏனென்றால் நான் 1.30 மணி வண்டியில் கிளம்ப இருந்தேன். சுப்பண்ணாவின் வீணையைக் கேட்கவில்லை. அவருக்கு சாஸ்திரம் தெரியாது என்று சேது ராவ் சொல்லி இருந்தார். அதனால் அவரிடம் அதிகம் ஒன்றும் கேட்கவில்லை, நேரமும் இருக்கவில்லை. கேள்வி-பதில் இவ்வாறு நடந்தது :-

கே: உங்களிடம் கிரந்தங்கள் இருக்கிறது என்கிறார்களே?

ப: ஆம், வண்டி நிறைய இருக்கிறது.

கே: ஒன்றிரண்டின் பெயரைச் சொல்லுங்கள்.

ப: அதை நான் எப்படிச் சொல்வது? நான் ஒன்றோ இரண்டோ கொண்டு வந்திருக்கிறேன். அவை தெலுங்கில் பரதகல்பலதாமஞ்சரி மற்றும் சிங்கராச்சாரியாரின் வரிசைக் கிரமமான புத்தகங்கள்.

நான்: எனக்கு இது போன்ற புத்தகத்தினால் திருப்தி இருக்காது. என் ஆய்வு வேறு வழி நோக்கியுள்ளது. எனக்கு சமஸ்கிருத அல்லது மிகவும் பழமையான தெலுங்கு கிரந்தங்களோ இருந்தால் பார்க்க வேண்டும்.

ப: வீட்டில் என் தந்தையாரின் ஸங்க்ரஹத்தில் இருக்கிறது. அதை நான் இன்று இங்கே கொண்டு வரவில்லை. (இந்த பதில் எனக்கு உண்மையானதாகத் தோன்றவில்லை, ஏனெனில் உடன் இருந்த, ராமகிருஷ்ண ராவின் ஆள் அவரிடம், நான் சமஸ்கிருத கிரந்தங்கள் பார்க்க விரும்புகிறேன் என்று சொல்லி இருந்தார்.

நான்: கொண்டுவரவில்லை என்றால் சரி. உங்களிடம் என்ன சமஸ்கிருத கிரந்தம் இருக்கிறதோ, அவற்றின் பெயர்களை மட்டும் சொல்லுங்கள். அவற்றில் எது உபயோகமாகும் என்று நான் பார்க்கிறேன்.

ப: இப்படி உடனே வாயில் சொல்வது சாத்தியமில்லை. வீட்டில் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் அவற்றைக் கவனமாகப் பார்க்கவில்லை.

நான்: உங்களுக்கு நேரமில்லை, இதற்கு வழியில்லை.

இதைக் கேட்டு, எங்கள் எளிமையான ஸ்ரீனிவாச ராவ், என்னிடம் நீங்கள் இன்றிரவு தங்குங்கள் என்று சொல்லத் தொடங்கினார். நாளை காலை சுப்பண்ணா உங்களுக்குக் கிரந்தம் காட்டுவார் மற்றும் தகவல் தருவார். எனக்கு இதெல்லாம் சாக்காகத் தோன்றியது. அதனால் நான் அவரிடம் நீங்கள் நான் இன்றிரவு தங்கினால், நாளை காலை கிரந்தங்களைக் காட்டுவாரா என்று சுப்பண்ணாவிடம் கேளுங்கள் என்றேன். அவரும் அதற்கேற்பக் கேட்டார், சுப்பண்ணா அப்படிச் செய்வது கடினம் என்றார். அவர் வீட்டில் ப்ளேக்கினால் ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டதால், கிரந்தங்களைத் தேட வேண்டியிருக்கும். நன்றாகத் தேடுவது சாத்தியமில்லை. அதன் மூலம் நாங்கள் இருவரும் சாக்கு வெளிப்படுத்தப்பட்டு விட்டது என்று புரிந்துக் கொண்டோம். பிறகு ஸ்ரீனிவாசராவும் கிருஷ்ணராவும் இவருடைய நம்பிக்கையைத் தகர்ப்பதில் எந்த லாபமுமில்லை என்றார்கள். சுப்பண்ணா என்னிடம், நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதை எனக்கு எழுதிக் கொடுத்து விடுங்கள் நான் உங்களுக்குப் பதில் எழுதி அனுப்புகிறேன் என்றார். (எனக்கு இதுவும் பொய்யாகப் பட்டது) ஆனால் பேருக்கு ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டேன், அவை இவ்வாறு: -

கே: உங்கள் 72 மேளங்கள் எந்த கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது? இன்றைய தெலுங்கு புத்தகங்களின் பெயர் வேண்டாம், சமஸ்கிருத கிரந்தங்களின் பெயர் சொல்லுங்கள்.

ப: அதைச் சொல்ல இயலாது

கே: ரத்னாகரத்தில் மேளம் இருக்கிறதா? அவை யாவை, எவ்வளவு மேளங்கள் இருக்கின்றன?

ப: நினைவில்லை

கே: வேங்கடமகி அல்லது சதுர்தண்டிபிரகாசிகா என்ற பெயர்களைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ப: முதலாவது இல்லை. இரண்டாவது கேள்விப்பட்டிருக்கிறேன்.

கே: இரண்டாவது எந்த சந்தர்ப்பத்தில் கேள்விப்பட்டீர்கள்? சதுர்தண்டியின் அர்த்தம் என்ன?

ப: நினைவில்லை

கே: ஜாதி தெரியுமா?

ப: இல்லை

கே: பாஷாங்கம் மற்றும் உபாங்கத்தின் அர்த்தம் என்ன? அவை எவ்வாறு இருக்கும்?

ப: லக்ஷணம் நினைவில்லை.

கே: உங்கள் மேளம் ரத்னாகரத்துடன் பொருந்துகிறதா?

ப: நினைவில்லை.

அவருக்குக் கிரந்தங்கள் பற்றித் தெரியாது. அவரிடம் கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பது அழகல்ல, அதனால் நிறுத்தி விட்டேன். அவர் நீங்கள் உங்கள் கேள்விகளை எழுதிக் கொடுங்கள், அப்போது எனக்கு அவற்றைப் பற்றி சிந்திக்க முடியும் என்றார். நான் மும்பை சென்று எழுதி அனுப்புகிறேன் என்று சொல்லி விட்டேன். ஆனால் இதில் பிரயோஜனம் இல்லை. அவருக்கு சாஸ்திர அறிவில்லை. இவர் பிரயோகிகத் தேர்ச்சி பெற்ற வைணிகர். விவகார வழக்கங்களில் நிபுணர், நன்றாக கிருதியை விரிவாக வாசிப்பது இவருக்குத் தெரியும். மஹாராஜாவுடன் பிரயாணம் செய்ததால், இவர் வடக்கத்திய வழி முறைகளைத் தெரிந்து வைத்திருக்கிறார். ஹிந்துஸ்தானி ராகங்கள் பாடி வாசிக்கிறார் என்று கேள்விப்பட்டேன். அவரிடம் திலங்க் ராகம் பாடிக் காட்டி அதில் தைவதத்தைச் சேர்த்து அசுத்தமாக்கி விட்டார்கள் என்றேன். அவர் பாடிக் காட்டியதிலிருந்து பாட்டு நான்காம் தரமாகத் தான் இருந்ததது. நான் அவருக்குப் பாடிக் காட்டி, கமாஜ் எங்கே எப்படி இருக்கும் என்று காட்டினேன். கூடியிருந்தவர்களுக்கு என்னுடையது தான் பிடித்திருந்தது. சுப்பண்ணா ஹிந்துஸ்தானி பாடகர்களுக்கு எதிராகப் பேச ஆரம்பித்தார், அதற்குள் அவரிடம் நான் தெளிவான வார்த்தைகளால், நான் ஹிந்துஸ்தானி சங்கீதத்தைப் புகழ்பவன் என்றேன். அந்த சங்கீதம் இங்கேயுள்ள சங்கீதத்தை விட உயர்ந்தது. அதில் தேர்ச்சி, அழகுணர்ச்சி கலையுணர்வு, இனிமை மற்றும் உள்நெஞ்சில் தாக்கம் ஆகியவற்றை உண்டு செய்யும் தன்மை அதிகம் இருக்கிறது. உங்கள் ஆரோஹண-அவரோஹண அமைப்பு நன்றாக இருக்கிறது ஆனால் பாடும் முறை, விரலால் மாத்திரகளை என்னும் முறை, மற்றும் அவற்றின் சங்கேதங்களில் எப்போதும் ஆழ்ந்திருந்து அதன் சைகைகளின் மூலம் செல்லும் முறையில் எதுவும் விசேஷமான அழகு இல்லை என்றேன். இந்த விஷயங்களைக் காரணங்களோடு விளக்கிக் காட்டினேன். இங்கேயுள்ள பாடகர்கள் திறந்த மனத்துடன் ஹிந்துஸ்தானி ஸ்வர அலங்காரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும், பிறகு அதில் உங்கள் நியமங்களை வைக்க வேண்டும். பிறகு சுப்பண்ணா அது நல்லது தான் என்றார். எங்கள் பக்கத்தில் எந்த பாடகர்கள் வந்தாலும் அவர்களுடைய பாட்டை நாங்கள் கேட்போம். எங்களுக்கு அது நன்றாக இருக்கிறது. அவற்றின் விசேஷ அம்சங்களை ஏற்றுக் கொள்கிறோம்.

சுப்பண்ணா தன் வீட்டிலுள்ள புத்தகங்களின் கேட்டலாக் செய்து எனக்கு அனுப்புவதாக ஒப்புக் கொண்டார். அது என்னிடம் வந்த பிறகு என் கேள்விகளை அவருக்கு எழுதி அனுப்புவேன்.

இல்லையென்றால் அண்ணா தாரபூரே ஸாஹிப்புடைய கேள்விகளைப் போல ஆகி விடும். எனக்கு எந்த கேட்டலாக்கின் தேவை அதிகம் இல்லை. அதனால் அவரிடம் நான் என் பிரயாணத்தில் சந்தித்த அத்யயனம் செய்த ஒரே பண்டிதர் சுப்பராம தீக்ஷிதர் என்றேன் அவர் மிகவும் உத்தமமான மனிதர். சுப்பண்ணா அவருடைய முகவரியை எழுதிக் கொண்டார். நான் அவரிடம் முடிந்தால் சதுர்தண்டிப்பிரகாசிகை கிரந்தத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றேன். இதற்குப் பிறகு ஒருவரையொருவர் சந்திக்கும் கேள்வியோடு மைசூர் பிரயாணம் முடிந்தது. இரவு 6.30 மணி வண்டியில் வீட்டுக்குத் திரும்பும் நோக்கத்தோடு கிளம்பினேன். வழியில் பூனாவில் இறங்கி பனஹட்டியைச் சந்தித்தேன். இந்த மனிதர் சங்கீத விஷயத்தில் மிக ஆர்வமாய் இருக்கிறார், என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நான் மூர்ச்சனை பற்றி சில கேள்விகள் கேட்க இருந்தேன். ஆனால் முதல் பேச்சு வார்த்தை தொடங்கினவுடன் இவரிடம் எந்த உபயோகமான தகவலும் கிடைக்க சாத்தியம் இல்லை என்று தோன்றியது, அதனால் அவரிடம் விடை பெற்று, நண்பர்கள் அனைவருடனும் பத்திரமாக மும்பையில் வீடு போய் சேர்ந்தேன்.

எழுத்துக் குறிப்பு - தேடுபவர்களின் உதவிக்காக

இந்தப் பிரயாணத்தினால் நான் மிகவும் சந்தோஷமடைந்தேன் என்பதை மீண்டும் எழுத அவசியம் இல்லை. மேலே சொல்லப்பட்ட சம்பவங்களை எழுதி வைப்பதன் நோக்கம் என்னைப் போன்ற வேறு சங்கீதத்தில் ஆர்வம் இருக்கும் மாணவர்கள் தெற்கு நோக்கி தகவல் சேகரிக்கப் போனால் அவர்களுக்கு இது என்னால் ஆன உபயோகமாக இருக்கும் என்பதே. புதிய மனிதர்கள் புதிய இடத்திற்குச் சென்று தகவல் தேட மிகவும் நேரமாகும். அதனால் இந்த எழுத்துக்களைப் படிப்பதன் மூலம் அவர்களுக்கு சிறிது நேரம் மிச்சமக்கும். இந்த எண்ணத்தோடு இதை எழுதி வைக்க நான் விரும்பினேன். என் நண்பர் ரதன்ஸீ, அங்கே போகலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். அப்போது அவருக்கும் இந்த விஷயம் உபயோகமாகும், என்று நினைத்துக் கொண்டு இதை எழுதி வைக்க ஆரம்பித்தேன். என் மற்ற நண்பர்களுக்கு இது உபயோகமானால் மிகவும் சந்தோஷமடைவேன், எழுதியது ஸார்த்தகம் என்று நினைத்துக் கொள்வேன்.

ஒரு குறிப்பு:

ரத்னாகரத்தின் சாரத்தைப் பற்றிய ஒருமித்த கருத்து எப்படியோ, என் பிரயாணத்தின் சாரத்தை இவ்வாறு சொல்ல முடியும், இப்போதும் தெற்கில் இது பற்றிய விவாதங்கள் இருக்கிறது, அவற்றை ஓரளவுக்கு கிரந்தத்தோடு ஒன்று சேர்க்க முடியும். பத்ததியும் பின்பற்றப்படக் கூடியது தான். அங்கே பாடும் பாடல் இங்கேயுள்ளவர்களுக்கு அப்படியே ருகிகரமாக இருக்காது. பழக்கமில்லாததாலும் இப்படி இருக்கலாம். நான் தேடுவது என்னவென்றால், ரத்னாகரத்தில் நாம் படிக்கும் சங்கீத பத்ததியோடு தெற்கின் இன்றைய கிரந்தங்களில் உள்ள தாட், ஸ்வரம் முதலியன விவரமாகக் கூறப்பட்டிருக்கின்றன, ராகங்களின் இன்றைய பெயர்கள், எவை பழையவற்றோடு ஒத்துப் போகிறது, ஆனால் வர்ணனைகள் வேறு

பரிபாஷையில் இருக்கிறதோ, அவற்றை எப்படி ஒன்று படுத்த முடியும் என்பதே. ரத்னாகரத்தின் மூர்ச்சனை, ஜாதி மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தாட், க்ரஹஅம்ஶநியாஸத்தின் எல்லா விஷயங்களும் எந்த முறையில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பது ஒரு சிந்தனை. இந்தக் கேள்விக்கு சமாதானம் கிடைக்கும் வகையில் தேடினால் என் ஜன்ம ஸாபல்யம் அடைந்து விடுமளவுக்கு ஆனந்தம் உண்டாகும், இது குறித்து ரத்னாகரத்தின் சுத்த ஸ்வரங்களாகக் கொள்ளப் படுபவையே என்று எனக்குத் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. சில கிரந்தங்களிலோ இவ்வாறு தெளிவாக எழுதப்பட்டும் இருக்கிறது - கலாநிதி, ஸாராம்ருதம் முதலியவை. இது பற்றிய சமாதானம் கிடைக்கும் ஆய்வு என்னால் செய்யப்பட முடியாதிருந்தால், என் நண்பர்கள் அல்லது சிஷ்யர்கள் இதைச் செய்வார்கள் என்பது என் அவா. தெற்கின் மற்ற கிரந்தங்களுக்கிடையே பரஸ்பரம் சம்பந்தம் இருக்கத் தான் செய்கிறது. வெறும் ரத்னாகரத்தோடு அவற்றைத் தொடர்பு படுத்த, துரதிர்ஷ்டகரமாக கிரந்தம் படித்தவர்கள் காணக் கிடைப்பதில்லை, கிரந்தக்காரர்களும் இந்த விஷயம் பற்றி மௌனமாக இருந்து விடுகின்றனர். இருக்கட்டும், இப்போது தேச முழுதும் சென்று இன்னும் ஆராய வேண்டும், எப்போதாவது எங்கேயாவது நாம் விரும்பும் தகவல் கிடைக்கும்.

தெளிவான சிந்தனை மும்பை

சங்கீதத்தின் திராவிட பத்ததி

சென்னை க்ஷேத்திரத்தில் திராவிட சங்கீத பத்ததி புழக்கத்தில் இருக்கிறது என்று சொல்லலாம். இந்த ஊரில் சங்கீதம் பற்றி நினைவில் கொள்ள வேண்டிய ஒரு விஷயம், நீங்கள் எங்கே சென்றாலும் அங்கேயுள்ள சங்கீத பத்ததி, அதிலுள்ள ராக-ராகினிகளோடு, எந்த வித்தியாசமும் இன்றி ஒத்துக் கொள்ளப்படுகிறது. அதிலும் குறிப்பாக எழுபத்திரண்டு ராகங்கள், அவற்றின் ஸ்வர வின்யாஸம், அதே ஜன்ய ராகங்கள், மற்றும் அவற்றின் அதே ஆரோஹ அவரோஹணங்கள், அதே தாளங்களின் வேறுபாடுகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது மிகவும் முக்கியமானது , ஏனென்றால், இவ்வாறு ஒன்றுபட்ட பத்ததியாக இருந்தால், அது விஞ்ஞான ரீதியாக இருப்பதால் அதன் வரலாற்றையும் அதன் ஸ்வர லிபி முதலியவற்றை எழுதுவது மிகவும் சுலபமாகி விடுகிறது. உண்மையில் எந்த பண்டிதன் இவ்வாறான அமைப்பைச் செய்து அதை மக்கள் விரும்பும்படி செய்தாரோ அவர் மிகவும் பெரியவராக இருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பத்ததியை, வடக்கின் சங்கீதத்தில் இட்டிருந்தால், நாம் அவருக்கு எவ்வளவு கடமைப்பட்டிருப்போம். நம் பக்கத்தில் இங்கே பத்து இருபது ராகங்கள் மிகவும் பொதுவாகக் காணப்பட்டு இருக்கின்றன, அவற்றின் ஸ்வர நியமங்களின் பேச்சை விட்டு விடலாம் ஆனால் மற்ற பல ராகங்களின் ஸ்வரங்களைப் பற்றி எவ்வளவு வேறுபாடுகள், வீண் வாதங்கள் காணப்படுகின்றன? எனக்கென்னவோ வடக்கின் ராக ராகினிகளுக்கு இவ்வாறான ஒரு பத்ததியை ஏற்படுத்த முடிந்தால் அது மிகவும் பெரிய காரியமாகி விடும். இந்த வேலை கடினமானது, அதிலும் இஸ்லாமியப் பாடகர்கள் கையில் சங்கீதம் இருப்பதால் இன்னும் கடினமாகி விடுகிறது. அவர்கள் படித்தவர்களாக

இல்லாததாலும், பிடிவாதமுள்ளவர்களாக இருப்பதாலும், புதிய நியமங்களை ஏற்படுத்துவதிலோ, ஏற்படுத்தினால் ஏற்றுக் கொள்வதிலோ சந்தோஷமடைய மாட்டார்கள் என்பது அனுபவப் பூர்வமான விஷயம். நான் தெற்கு நோக்கிப் போன போது, என் கவனம் முதலில் இதன் மீது தான் போனது. இவ்வாறு மக்கள் விரும்பும் பத்ததியைப் பற்றிய விஷயங்களை எங்கள் ஊரிலுள்ள நண்பர்களுக்கு என்னால் முடிந்தவரை கொடுப்பதற்காக இவ்வளவு பக்ககங்களில் எழுதி வைத்திருக்கிறேன். இந்த எழுத்துக்களால் என் நண்பர்களுக்கு இந்தப் பத்ததியைப் பற்றிய அறிவு கிடைக்க வேண்டும் என்பது என் ஆசை. வட இந்தியாவில், ஆறு ராகங்கள் முக்கியமானதாகக் கருதப்பட்டு ஒவ்வொன்றுக்கும் மனைவி, மகன், மருமகள் ஆகியவற்றைச் சேர்த்து குடும்பத்தை ஏற்படுத்தி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறான அமைப்பு தெற்கில் இல்லை. ஜன்ய ஜனக ராகங்கள் என்ற பெயர்கள் அங்கே நிச்சயமாக இருக்கிறது ஆனால் ஆறு ராகம் மற்றும் முப்பது நாற்பது ராகினி என்றவாறான அமைப்பு இல்லை. சங்கீத ரத்னாகரத்தில் ஜன்ய ஜனக ராகங்களின் படி சில அம்சங்கள் இருக்கின்றன ஆனால் ஆறு ராகங்களின் அமைப்பு அதில் இல்லை. வடக்கில் இப்படிப்பட்ட குடும்பங்கள் வெறும் பெயரளவில் தான், ஆனால் இன்று அதில் யதார்த்தம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. தெற்கில் ஜனக-ஜன்ய ராகங்களுக்கிடையே அழகான தொடர்பு இருக்கிறது மற்றும் அவை தெளிவாகப் புரியக் கூடியதாக இருக்கிறது. ஆறு ராகங்களைச் செய்தவர்களின் காலத்தில், ராக-ராகினிகளுக்கிடையே அதே போல சம்பந்தம் இருந்திருக்கலாம் ஆனால் இன்று எந்த வடிவத்தில் நம் முன் இருக்கிறதோ. அவை இது போல எந்த சம்பந்தமும் இருப்பதாகத் தெரிவதில்லை. குறிப்பிட்ட ராகங்களுக்குக் குறிப்பிட்ட ராகினிகள் எவ்வாறு ஆனது, அதாவது அவற்றில் என்ன பொருத்தம், முதலிய கேள்விகளை நாம் யாரிடமாவது கேட்டால் அதற்கு சரியான பதில் கிடைக்காது. வெவ்வேறு விதமாக வகைப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் எந்த அடிப்படையில் அதைச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக அவர்கள் எழுதி வைக்கவில்லை. இருக்கட்டும் இந்த எழுத்தில் இது பற்றி அதிக ஆழமாகப் போக மாட்டேன். ஏனென்றால் திராவிட சங்கீத பத்ததியைப் விளக்கும் முயற்சிக்காக இதை எழுத இருக்கிறேன்.

முழுப் பிரதேசத்திலும் இந்த பத்ததி வழங்கி வருகிறது என்று நான் மேலே சொன்னேன். ஒவ்வொரு பத்ததியும் ஸ்ருதிகள் ஸ்வரங்களால் அமைந்தது. நான் திராவிட ஆசிரியர்களிடம் கேட்டேன் நீங்கள் ஒரு ஸப்தகத்தில் இருபத்திரண்டு கூறுகளை ஏற்றுக் கொள்கிறீர்களா. ரத்னாகரம் முதலிய கிரந்தங்களில் ஒரு ஸா-விலிருந்து இன்னொரு ஸா வரை இப்படி இருபத்திரண்டு கூறுகளை அடையாளம் கண்டுக் கொள்ளக்கூடிய சங்கீத வடிவான நாதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அவை ஸ்ருதி எனப்படுகிறது. உங்கள் பத்ததியில் ஸ்ருதிகள் இதே போலவா இவ்வளவே தானா? அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் பொது அந்த வித்வான்கள் எங்கள் பக்கத்திலும் மக்கள் பெயரளவில் ரத்னாகரத்தை ஆதாரப் பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றனர். அதாவது அதே ரத்னாகரத்திலிருந்து எந்தக் பத்ததி தோன்றியது என்று எண்ணுகிறோம், ஆனால் ரத்னாகரத்தின் பத்ததி அவர்களுக்குப் புரிவதில்லை. ஸா முதல் ஸா வரை ஒரு ஸப்தகத்தில் ஸ்ருதி எவ்வளவு என்று கேட்டால் ஸ்ருதி இருபத்திரண்டு என்று பதிலளிக்கிறார்கள். ஆனால் இந்த ஸ்ருதிக்கு என்ன அர்த்தம் மற்றும் அவை எங்கே எப்படி என்பது மிகச் சிலருக்கே தெரிந்திருக்கிறது., அவர்களின் இந்த பதிலைக் கேட்டு எனக்கு

ஆச்சரியம் உண்டாக வில்லை, ஏனென்றால் நம் பக்கத்திலும் இதே நிலை. ஸ்ருதி இருபத்திரண்டு எப்படி எவை என்பதைச் சொல்ல இங்கேயும் மக்களால் முடியாது. அவை எவை எப்படி என்பது பற்றி நான் முன்னரே எழுதி வைத்து விட்டேன், அதே விஷயத்தை திராவிடப் பத்ததிக்கும் மனத்தில் வைத்துக் கொண்டாலும் சரியாக இருக்கும். எப்படி நம் சங்கீதம் ஏழு முக்கிய ஸ்வரங்களின் மேல் நிற்கிறதோ அதே போல தெற்கத்திய சங்கீதமும் இருக்கிறது. அதாவது "ஸா ரீ க ம ப த நீ" என்ற ஏழு ஸ்வரங்களைத் தான் அங்கேயும் ஏற்றுக் கொள்கிறார்கள். அவற்றை பிரகிருதி அல்லது சுத்த ஸ்வரம் என்று சொல்கிறார்கள். இவற்றின் விக்ருதம் நம் பக்கத்தில் ஐந்தாகக் கொள்ளப்படுகிறதோ, (எல்லா பிரயோக ரீதியாகவும்) அப்படியே அங்கேயும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஒரு ஸப்தகத்தில் ஸா வையும் பாவையும் அசலமாகக் கொண்டு, மற்ற ஐந்து சுத்த விக்ருதமாக நாம் ஏற்றுக் கொள்கிறோம், மேலும் பிரகிருத விக்ருத ஸ்வரங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாக நிர்ணயித்திருக்கிறோமோ, அதே போல தெற்கத்திய சங்கீதத்தின் ஸ்வரங்களின் நிலையும் இருக்கிறது. அவர்களும் ஒரு ஸப்தகத்தில் பன்னிரண்டு செமிடோன் ஏற்றுக் கொள்கின்றனர். மொத்தத்தில் ஐரோப்பிய க்ரோமெடிக் ஸப்தகம் தான் அங்கேயுள்ள ராக ராகினிக்கு அடிப்படை என்று புரிந்துக் கொள்ளவேண்டும், நம் பக்கத்திலும் அப்படித் தான், ஆனால் இங்கே சில வருடங்களாகத் தேர்ச்சி பெற்றவர்கள் அதிகோமளம் ஆகிய ஸ்வரங்களை ஏற்றுக் கொண்டு ராகங்களில் மிக ஸூக்ஷ்மமான வித்தியாசங்கள் கொடுக்கின்றனர்.

இதில் பெரிய தத்துவம் ஒன்றும் இல்லை என்பதில்லை,ஆனால் இந்தப் பகுதி இப்போதும் ஓரளவுக்கு முழுமையடையாமல் பிரயோகத்தில் மட்டும் இருக்கிறது எனலாம். எந்த ஹார்மோனியத்தின் ஸப்தகத்தின் ஸ்வரத்தைப் பார்த்தாலும் அதுவும் க்ரோமேடிக் ஸ்கேலின் செமிடோன்சாகத் தான் தெரியும். தெற்கத்திய பத்ததியின் எல்லா ஜனக ஜன்ய ராகங்களும் இந்த பன்னிரண்டு க்ரோமேடிக் ஸ்வரங்களில் அமைக்கப்பட்டவை தான் என்பதை மறக்கக் கூடாது. ஸ்ருதியின் தொடர்பை மனத்தில் கொள்ளாதிருந்தாலும் வேலை ஆகும். இங்கேயுள்ள பாட்டு ஸ்ருதி அமைப்பின் பக்கத்தில் கூடச் செல்வதில்லை. சுத்த மற்றும் விக்ருத்தைச் சேர்த்து பன்னிரண்டு ஸ்வரங்கள் உள்ளன என்பதை ஏற்றுக் கொண்டு இதற்குப் பிறகு அவர்கள் ராகத்தை நோக்கிச் சென்று விடுகின்றனர். அவர்களுக்கு ஸ்ருதியைப் பற்றிய அறிவு எவ்வளவு தூரம் இருக்கிறது, அதன் உபயோகத்தைப் புரிந்துக் கொள்கிறார்களா இல்லையா என்று பார்க்க, நான் இரண்டு விதமான கோமள ரிஷபத்தைப் பாடிக் காட்டி இவ்வாறு வேறாக உபயோகிப்பது சாத்தியமா என்று கேட்டேன். அவர்களால் இதற்கு பதில் அளிக்க முடியவில்லை. முதலில், இவ்வாறான ஸ்வரங்களை குரலில் ராகத்தில் பாடுகிறார்கள் என்பதைக் குறித்தே அவர்களுக்கு ஆச்சரியம் ஆனபோது . அவற்றின் உபயோகத்தைப் பற்றிய விஷயம் வெகு தூரம் சென்று விட்டது. இருக்கட்டும். நம் விஷயத்தை நோக்கி முன்னே செல்லலாம். தெற்கிலும் க்ரோமேடிக் ஸ்கேல் முக்கியமானதாகக் கொள்ளப்பட்டாலும், நமக்கும் அவர்களுக்கும் ஒரே போன்ற பன்னிரண்டு செமிடோன்ஸ் இருந்தாலும், அவர்களின் ஸ்வரங்களின் பெயர்கள் நம் ஸ்வரங்களின் பெயர்களிலிருந்து வேறுபடுகிறது என்று நான் முன்னரே எழுதி இருக்கிறேன். ஆனால் இந்த சந்தர்ப்பத்திலும் இங்கே மீண்டும் எழுதுகிறேன். நம் பெயர்கள் இவ்வாறு இருக்கின்றன:

1. ஸா (எல்லா இடங்களிலும் ஒன்றே)
2. கோமள ரி (பைரவ்வில் பாடுவது)
3. சுத்த ரி (கல்யாணுடையது)
4. கோமள க (காஃபி யினது)
5. தீவ்ர க (கல்யாணுடையது)
6. சுத்த, கோமள ம (பிஹாகுடையது)
7. தீவ்ர ம (தோடியுடையது)
8. சுத்த ப (எல்லா இடங்களிலும் ஒன்றே)
9. கோமள த (பைரவ்வில் பாடுவது)
10. சுத்த, தீவ்ர த (கல்யாணுடையது)
11. கோமள நீ (காஃபி யினது)
12. சுத்த தீவ்ர நீ (கல்யாணுடையது)

தெற்கில் இந்த பன்னிரண்டு ஸ்வரங்களுக்கு பதினாறு பெயர்கள் இருக்கின்றன, அவை கொஞ்சம் ஆச்சரியத்தை ஏற்படுத்தும். இந்த பெயர்கள் வெறும் கற்பனையே. இதை அங்கே சில கிரந்தக்காரர்கள் தம் எழுத்துக்களில் புரிய வைப்பதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது பிறகு புரியும். எப்படி ஜியாமெட்ரியில்[Geometry] யூக்ளிட்[Euclid] கற்றுக் கொள்ளும் பொது அவரது விளக்கத்தை ஏற்று , அதன் மூலம் முழுப் புத்தகத்தையும் புரிந்துக் கொள்கிறோமோ, அதே போல இதுவும். நம் முன்னே ஸ்வரங்கள் பன்னிரண்டு தான் இருக்கின்றன, அதற்கு பெயர்கள் என்ன வேண்டுமானாலும் கொடுக்கலாம். அவர்களின் பெயரை ஏற்றுக் கொண்டால் அவர்களின் புத்தகமும் புரியும், ராக ஸ்வரூபமும் உடனே விளங்கி விடும். இப்போது அவர்களுடையது அல்லது நம் பெயர்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதைப் படம் மூலமாக விரைவில் புரிந்துக் கொள்ள முடியும். அதனால் மேலே உள்ள பக்கங்களில் இப்படிப்பட்ட இரண்டு படங்களை வரைந்துக் காட்டுகிறேன்.

நம் பக்கத்தில் ஒரு ஸப்தகத்தில் 12 ஸ்வரம் இவ்வாறு உள்ளன. ஏதேனும் சீதாரில் அசல தாட்டை வாசிக்க வேண்டுமானால் நாம் இவ்வாறு ஸ்வரங்களை சேர்ப்போம்

ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் ஸ்வரப்பெயர்கள்

க்ரமஎண்ணிக்கை		ஸ்வரப்பெயர்
1		ஸா
2		கோமள ரி
3		சுத்த அல்லது தீவ்ர ரீ
4		கோமள க
5		சுத்த அல்லது தீவ்ர க
6		சுத்த அல்லது கோமள ம
7		தீவ்ர அல்லது ம
8		ப
9		கோமள த
10		சுத்த அல்லது தீவ்ர த
11		கோமள நீ
12		சுத்த அல்லது தீவ்ர நீ
13		ஸா தார ஸப்தகத்தின்

இவற்றின் பெயர்கள் கிரந்தத்தில் கொடுக்கப்பட்டவை என்று புரிந்துக் கொள்ளக் கூடாது. அவற்றை வெறும் புழக்கத்தில் பாடகர்கள் உபயோக்கிக்கிறார்கள். சிற்சில கிரந்தங்களில் இவை இப்படித் தான் இருக்கின்றன, ஆனால் எல்லாவற்றிலும் இப்படி இல்லை. திராவிட பத்ததியில் இதே அசல தாட்.-டில் பன்னிரண்டு ஸ்வரங்களின் பெயர்கள் கீழே எழுதப்பட்டவாறு கொடுக்கப்பட்டிருக்கிறது, வலது பக்கம் நான்கு பெயர்கள் அதிகமாக இருக்கின்றன. அவை கற்பனையாக அபிராக்குதமாக இருப்பதால் ஒரு விசேஷ கிரந்தகர்த்தா தன் குறிப்பிட்ட அமைப்பிற்காகக் கொடுத்திருக்கிறார்.

பன்னிரண்டு ஸ்வரங்களுக்குத் திராவிடப் பெயர்கள்

1		ஸா
2		சுத்த ரி (கவனமாகப் பாருங்கள்)
சுத்த காந்தாரம் 3		சதுஸ்ருதி ரீ (வேறு மாதங்களில் பஞ்சஸ்ருதி ரீ)
4 ஷட்ஸ்ருதி ரீ		ஸாதாரண காந்தாரம்
5		அந்தர காந்தாரம்
6		சுத்த மத்யமம்
7		ப்ரதி மத்யமம்
8		பஞ்சமம்
9		சுத்த தைவதம் (கவனியுங்கள்)
10 சுத்த நிஷாதம்		சதுஸ்ருதி தைவதம்
11 ஷட்ஸ்ருதி தைவதம்		கைசிக நிஷாதம்
12		காகலீ நிஷாதம்
13		ஸா தார ஸப்தகத்தின்

இந்த திராவிட ஸ்வர வரைபடத்தின் மூலம் ஸ்வரங்கள் பன்னிரண்டு மட்டுமே இருந்தாலும் அவற்றின் பெயர்கள் மொத்தமாக பதினாறு என்பது தெரியும், இந்த பதினாறு என்ன காரணத்திற்காகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்பதைப் பிறகு பார்க்கலாம். ஆனால் இப்போது நம் ஸ்வரங்கள் மற்றும் அவர்களின் ஸ்வரங்களின் பெயர்களை ஒப்பிட்டு அவற்றில்

என்ன வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். தெற்கில் பல பெயர்கள் கிரந்ததுடன் பொருந்துகின்றன. (ஆனால் அவர்களின் ஸ்வர ஸ்தானமும் கிரந்ததிற்கேற்ப இருக்கிறது என்று புரிந்துக் கொள்ளக் கூடாது. ரத்னாகரம், த3ர்பணம், ராகபோதம் ஆகிய கிரந்தங்களில் இந்த ஸ்வரப் பெயர்கள் உள்ளன, ஆனால் ஸ்தானம் வெவ்வேறாக இருக்கும். ஆனால் இந்தப் பெயர்களையும் இந்த ஸ்தானங்களையும் இவர்கள் எங்கிருந்து கொண்டு வந்தார்கள் என்ற கேள்வி எழுகிறது.எப்படி நம் பக்கத்துப் பாடகர்கள் கற்பதில் (கிரந்தங்களைப் கற்பதில்) குறைந்த தேர்ச்சியுள்ளவர்களாக இருக்கிறார்களோ, தெற்கிலும் ஓரளவு இதே நிலைமை தான். அங்கேயும் சமஸ்கிருதம் படித்த வித்வான் இன்று ஒன்றிரண்டு பேர் கூட கிடைக்க மாட்டார்கள். எல்லோரும் கேள்வி ஞானத்தில் வேலையை நடத்துபவர்கள் தான். கோமள ரி (நம்முடைய) யை சுத்த ரி என்று நீங்கள் எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்கிறீர்கள்? இந்த விஷயம் எந்த கிரந்தத்தில் கிடைக்கும்? இவ்வாறு நான் கேள்வி கேட்டேன். அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டவுடன், மிகவும் ஆச்சரியம் அடைந்தார்கள். ஆனால் பதில் என்னவென்றால் ஒன்றுமில்லை. நாங்கள் இப்படித் தான் ஏற்றுக் கொண்டுள்ளோம், அவ்வளவே. இதே போல, நான் சதுஸ்ருதி ரிஷபம் என்ற இந்தப் பெயரை நீங்கள் எங்கிருந்து பிடித்தீர்கள் என்று கேட்டேன். இவ்வாறு நீங்கள் எண்ணக் கூடிய ஸ்ருதிகள் எவை? சாஸ்திரத்தில் ரிஷபம் மூன்று ஸ்ருதி அளவைத் தான் கொண்டது, அப்போது சதுஸ்ருதி ரிஷபம் எவ்வாறு ஆனது , ஏன் அப்படி ஆனது? இதற்கும் பதில் கிடைக்கவில்லையே. அதனால் இந்தப் பெயர்கள் வெறும் கற்பனையானவை என்று கொள்ள வேண்டும். அவர்களும் இவ்வாறே ஒப்புக் கொள்கின்றனர். ஏதோ ஒரு கிரந்தக்காரர் தன் பத்ததியை இந்தப் பெயர்களின் ஆதாரத்தில் எழுதியதால், இந்தப் பெயர்கள் புழக்கத்தில் வந்தன. கிரந்தங்களில் சொல்லப்பட்ட அர்த்தத்திற்கேற்ப அவர்கள் எழுதவில்லை என்பது தெளிவாகிறது. கிரந்தங்களில் சொல்லப்பட்ட ஸ்வரங்களை இங்கே படமாகக் கொடுத்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் அப்போது படிப்பவர்ளுக்கு திராவிட பத்ததியின் பன்னிரண்டு ஸ்வரங்கள் பண்டைய கிரந்தங்களிற்கேற்ப இல்லை என்பது உடனே புரிந்து விடும். ரத்னாகரத்திற்குப் பிறகு வந்த தெற்கத்திய கிரந்தக்காரர்களின் அமைப்பு இது. ரத்னாகரம் மற்றும் த3ர்பணத்தின் அமைப்பு ஒரே போலத் தான் இருக்கிறது, இதனால் தனித் தனியே எழுதவில்லை.

ரத்னாகரம் மற்றும் த3ர்பணத்தில் பிரகிருத விக்ருத ஸ்வரம் - ஏனென்றால் அப்போது நம் க்ரோமேடிக் ஸ்கேல் இருக்கவில்லை, அவர்கள் இருபத்திரண்டு ஸ்ருதிகளின் மேல் எப்படி நிர்ணயித்திருக்கிறார்கள், இதைக் காட்டுவதற்கு இருபத்திரண்டு ஸ்ருதிகள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. படம் முற்றிலும் சரியாக இல்லை. கையில் எப்படி வரைய முடியுமோ அப்படி வரைந்திருக்கிறேன், ஸ்வரப் பெயர்களை மட்டும் கவனிக்கவும்.

ரத்னாகரம் மற்றும் த3ர்பணத்தின் சுத்த ஸ்வரங்களின் ஸ்தானங்கள்

ஸ்ருதிப் பெயர்	ஸ்ருதி க்ரமம்	ஸப்தகத்தில் இடம்	ஸ்வரப் பெயர் - க்ரமம்
சந்தோவதீ	4	----------	ஸா (சுத்தம்) 1
தயாவதீ	5		
ரஞ்சனீ	6		
சக்திகா	7	----------	சுத்த ரீ 2
ரௌத்ரீ	8		
க்ரோதா	9	----------	சுத்த க 3
வஜ்ரிகா	10		
ப்ரஸாரிணீ	11		
ப்ரீதி	12		
மார்ஜனீ	13	----------	சுத்த ம 4
க்ஷிதீ	14		
ரக்தா	15		
ஸந்தீபினீ	16		
ஆலாபினீ	17	----------	(சுத்த) ப 5
மதந்தீ	18		
ரோஹிணீ	19		
ரம்யா	20	----------	சுத்த த 6
உக்ரா	21		
க்ஷோபிணீ	22		சுத்த நி 7
தீவ்ரா	1	----------	
குமுத்வதீ	2		
மந்தா	3		
சந்தோவதீ	4	----------	சுத்த ஸா (தார) 8

ரத்னாகரம் (துர்பணம்) விக்ருத ஸ்வரங்களின் பெயர்

ஸ்ருதி க்ரமம்	ஸப்தகத்தில் இடம்	விக்ருத ஸ்வரப் பெயர்
4	----------	ஸா (சுத்தம்) ;
5		
6		
7	----------	ரீ (சுத்த) பேச்சுக்காக விக்ருத ரீ
8		
9	----------	க (சுத்த)
10	----------	ஸாதாரண காந்தாரம்
11	----------	அந்தர காந்தாரம்
12	----------	ச்யுத மத்யமம்
13	----------	அச்யுத மத்யமம் - (சுத்த) மத்யமம்
14		
15		
16	----------	ச்யுத பஞ்சமம் - விக்ருத
17	----------	(சுத்த) பஞ்சமம்
18		
19		
20	----------	(சுத்த) தைவதம் - பேச்சுக்காக விக்ருத த
21		
22	----------	(சுத்த) நிஷாதம்
1	----------	கைசிகி நிஷாதம்
2	----------	காகலீ நிஷாதம்
3	----------	ச்யுத ஸா
4	----------	அச்யுத ஸா, (சுத்த) தார ஸா

மேலே சொல்லப்பட்ட அட்டவணை, ரத்னாகரத்தில் கொடுக்கப்பட்ட ஆதாரத்தின் படி செய்யப்பட்டிருக்கிறது. இது சூசகமாக இன்னும் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது, என்று படிப்பவர்கள் புரிந்துக் கொள்ளவேண்டும். ராக விபோத கிரந்தத்தின் எல்லா ஸ்வரங்களும் இன்று திராவிட பத்ததியில் இல்லை.

ராக விபோத (சோமநாதரின்) சுத்த விக்ருத ஸ்வரம்

ஸ்ருதி க்ரமம்	ஸப்தகத்தில் இடம்	சுத்த ஸ்வரப் பெயர்	விக்ருத ஸ்வரப் பெயர்
1	----------		
2	----------		
3	----------	----------	ம்ருது ஸா
4	----------	சுத்த ஸா	
5			சு ரி எந்த- ஸ முதல் சு.ஸ்வரமும் இல்லை
6	----------		
7	----------	சுத்த ரீ	
8	----------		தீவ்ர ரீ
9	----------	சுத்த க	
10	----------	----------	ஸாதாரண க
11	----------	----------	அந்தர க
12	----------	----------	ம்ருது ம
13	----------	சுத்த ம	
14			
15	----------	----------	தீவ்ரதம ம
16		----------	ம்ருது ப
17	----------	சுத்த ப	
18	----------	----------	சு, ப முதல் சு த வரை எந்த ஸ்வரமும் இல்லை
19		----------	

20	----------	சுத்த த	
21	----------	----------	தீவ்ர த
22	----------	சுத்த நி	
1	----------	----------	கைசிகீ நி
2	----------	----------	காகலீ நி
3	----------	----------	ம்ருது ஸா (மீண்டும்)
4	----------	தார ஸா	(மீண்டும்)

மேலே கொடுக்கப்பட்ட படத்திலிருந்து, திராவிட பத்ததியின் பன்னிரண்டு ஸ்வரங்களின் இன்றைய பெயர்கள் மேலே எழுதப்பட்ட கிரந்தங்களில் உள்ளது இல்லை என்பது தெளிவாக தெரியும். பாரிஜாதத்திலோ கோமள தீவ்ர முதலிய நவீன சொற்களை உபயோகித்து, இருபத்தொன்பது பெயர்கள் பிரக்ருத விக்ருத ஸ்வரங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் பாரிஜாதத்தின் படம் தேவையில்லை என்பதால் நான் இங்கே கொடுக்கவில்லை. நான் வேறு ஒரு கட்டுரையில் அதைப் படத்தோடு கொடுத்துத் தான் இருக்கிறேன். அதனால் நாம் திராவிட பத்ததிக்கு ஆதாரப் பூர்வமான கிரந்தங்கள் மேலே சொல்லப்பட்ட கிரந்தங்களைத் தவிர வேறு ஏதோ இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டு முன்னே செல்வோம். அது அப்படித் தான் இருக்கிறது. சுப்பராம தீக்ஷிதர் என்னிடம் சதுர்தண்டிப்பிரகாசிகா முதலிய கிரந்தங்களில் இப்படிப்பட்ட பெயர்களை உபயோகித்திருக்கிறார்கள், அதன் உபயோகமும் அந்த அர்த்ததில் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார். அவர் எனக்கு கிரந்தத்தின் பிரதியை கொடுக்கப் போகிறார், அது கிடைத்த வுடன் அதை மொழி பெயர்க்கப் போகிறேன் . இருக்கட்டும், மேலே செல்கிறேன்.

திராவிட சங்கீத பத்ததியின் பன்னிரண்டு ஸ்வரங்கள் அவற்றின் பெயரோடு நீங்கள் கற்றுக் கொண்டு விட்டீர்கள். மேலே எழுதப்பட்ட விவரங்களினால் திராவிட சுத்த ஸ்வரங்களின் ஸப்தகம் கீழ்க்கண்டவாறு இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. :-

திராவிட சுத்த ஸ்வரங்களுக்கு சமமான ஹிந்துஸ்தானி ஸ்வரம்

வீணா தண்டம்		திராவிட சுத்த ஸப்தகம்	சமமான ஹிந்துஸ்தானி ஸ்வரம்
	1	ஸா (சுத்தம்)	ஸா
	2	ரி (சுத்தம்)	ரே கோமளம்
	3	க (சுத்தம்)	ரே சுத்தம்
	4	ம (சுத்தம்)	ம கோமளம்
	5	ப	ப
	6	த (சுத்தம்)	த கோமளம்
	7	நி (சுத்தம்)	த சுத்தம்
	8	ஸ் (தார)	ஸ் (தார)

மேலே சொல்லப்பட்டவற்றைப் பாத்து உங்களுக்கு ஆச்சரியம் உண்டாவது இயற்கை. ஆனால் பெயர்களின் வேறுபாட்டால் எந்த வித்தியாசமும் ஏற்படாது. நான் அங்கே இருப்பவர்களிடம் உங்கள் முன்னோர்கள் ஒரு ஸப்தகத்தில் இருபத்திரண்டு நாதத்தை ஏற்றுக் கொண்டு அதற்குப் பெயரும் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் அவற்றிலிருந்து பன்னிரண்டு நாதங்களைத் தேர்ந்தெடுத்து (க்ரோமேடிக் ஸப்தகத்தின் ஸ்வரம்) அவற்றுக்குப் பெயர் கொடுக்கிறீர்கள். மற்ற பத்து ஸ்ருதிகளின் நிலை என்ன? அவை உபயோகத்தில் இல்லையா? உபயோகத்தில் வந்தால், அவை எப்படி, எங்கே என்னென்ன பெயர்களோடும் நியமங்களோடும் வழங்கப்பட வேண்டும்? என்று கேட்டேன். இந்தக் கேள்விக்கு பதிலாக அவர்கள் எங்கள் பக்கத்தில் அவற்றை மீண்டும் ஸ்வரமாக ஏற்றுக் கொள்வதில்லை என்று சொல்லி விட்டார்கள். அவற்றை இங்கே நன்றாகப் புரிந்துக் கொண்டு தொண்டையில் பாடுவதில்லை. நாம் பாட்டிற்கு நடுநடுவே மீண்ட், கமகம் முதலியவற்றைப் பாடுகிறோமே, அவை அவற்றில் வரலாம். ஆனால் அவற்றின் நியமம் என்ன, என்பதை நம்மால் சொல்ல முடிவதில்லை. இருக்கட்டும். அவர்களின் பத்ததி எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அதைப் பற்றி அலச வேண்டாம். அதனால் நாம் அதை புரிந்துக் கொண்டால் மட்டும் போதும். திராவிட பத்ததியைப் பற்றிய விவரம் காலம் சென்ற சின்னஸ்வாமி முதலியார் தான் ஓரியண்டல் ம்யூசிக் என்ற பெயர் கொண்ட மாதாந்தர புத்தகத்தில் மிகவும் நல்ல முறையில் தெளிவாகக் கொடுத்திருக்கிறார். இவர் மிகப் பெரிய வித்வான், மற்றும் தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் சங்கீதத்திற்காக அர்ப்பணம் செய்தவர் என்று சொன்னாலும் சரியாக இருக்கும். அவருடைய புத்தகத்தை சிறிது காலத்திற்காக வாங்கி வைத்திருக்கிறேன், அதிலிருந்து சில விஷயங்களை நான் இங்கே கொடுக்கப் போகிறேன். இந்த மாதாந்தர புத்தகம் பல நாட்களாக வெளிவர வில்லை மேலும் கிராந்தகர்த்தாவின் ஏழ்மை நிலையை அடைந்து விட்டார். அவர் உயிரோடு இருந்தபோது அவருக்கோ அவரது புத்தகத்திற்கோ யாரும் உதவ வில்லை. ஆனால் இப்போது அது ஒவ்வொரு நகரத்திலும் அவரைப் பற்றி மிகவும் உயர்ந்த கருத்து நிலவுகிறது மற்றும் சங்கீத விஷயத்தைப் பொறுத்தவரை அது விலைமதிப்பற்ற ரத்தினம் என்று எல்லோராலும் எல்லா இடங்களிலும் கருதப் படுகிறது என்று கேள்விப்படுகிறேன். மனிதனுக்கு புகழ் மறைவுக்குப் பின் வரும் என்பதற்கு அவர் ஒரு உதாரணம் என்று சொல்லலாம். மேலே நான் ஏழு ஸ்வரங்கள் உள்ள ஸப்தகத்தைச் சொன்னேன், என்பதால் இந்த ஸப்தகம் சிறுவர்களுக்கோ அல்லது புதிதாக கற்றுக் கொள்பவர்களுக்கோ கற்றுத் தரப் படுகிறது என்று எண்ணக் கூடாது. நம் பக்கத்தில் மாணவர்களுக்குஆரம்பத்தில் சுத்த ஸ்வர ஸப்தகத்தைப் பாடச் சொல்லிக் கொடுத்து பிறகு மெதுவாக விக்ருத ஸ்வரங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். தெற்கில் இவ்வாறு இல்லை, மேலும் அப்படிச் செய்வது சாத்தியமில்லை, ஏனென்றால், அவர்களின் சுத்த ஸ்வர ஸப்தகம் நன்றாக தேர்ச்சியுடன் பாடுபவர்களுக்குக் கூட எளிதாகப் பாடுவது சாத்தியமில்லை, மற்றும் அது காதுக்கு இனிமையாகவும் இருப்பதில்லை. .உண்மையில் உங்களுக்கு ஸா ரி (கோமள) ரீ (தீவ்ர) ஒன்றன் பின் ஒன்றாகக் ஆரோஹணம் அல்லது அவரோஹணத்தில் பாடுவது கடினமாக இருக்கும் , இனிமையாகவும் இருக்காது. இதே போலத் தான் தெற்கின் சுத்த ஸ்வர ஸப்தகத்தில் இருக்கிறது. இரண்டு வகை ரி, மற்றும் த ஒன்றன் பின் ஒன்றாக வருகிறது, அதனால் சிறுவர்களுக்கு இதைக் கற்றுக் கொள்ள முடியாது, அதனால் இது கற்றுத் தரப் படுவதில்லை. அதனால் நாம் இந்த ஸ்வர ஸப்தகம் உண்டாக்கப்பட்ட, கற்பனையான ஒன்று என்று சொல்லலாம். அங்கே சிறுவர்களுக்கு எப்போதும் முதலில் சொல்லிக் கொடுக்கும் ஸப்தகம் நம் "பைரவ்" ராகத்தின் ஸப்தகம், அதாவது அவற்றின் ஸ்வரம் நம் பக்கத்தில் இவ்வாறு உள்ளன :- 1. ஸா 2. கோமள ரி 3. தீவ்ர க 4. சுத்த கோமள ம 5. ப 6. கோமள த 7. தீவ்ர நீ இவ்வாறான ஸ்வர ஸப்தகத்தை மாயாமாளவம் என்கிறார்கள். மாயாமாளவம் என்ற பெயரில் அங்கே ஒரு முக்கிய ராகம் இருக்கிறது, அதை இவ்வாறான ஸ்வர ஸப்தகத்தின் ஸ்வரத்தோடு பாடுகிறார்கள், அதனால் அந்த ஸப்தகத்திற்கும் அதே பெயரைத் தருகிறார்கள். என் அனுபவத்தில், பத்ததி ஏதுவாக இருப்பினும் அதை எப்படி கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறார்கள், அதை யார் செய்தார்கள், எப்போது செய்தார்கள், மற்றும் அதற்கு ஆதாரப்பூர்வமான கிரந்தங்கள் எவை என்பதை அறிய எந்தவொரு கற்றறிந்த மனிதனின் மனதிலும்

ஆர்வம் ஏற்படும். அதற்கேற்ப அந்த தகவலைப் பெறும் நோக்கத்தோடு நான் பல்வேறு இடங்களுக்குச் சென்று இவ்வாறு கேள்விகள் கேட்டேன், கிடைத்த பதில்களை வேறிடத்தில் கொடுத்தும் இருக்கிறேன். அந்த விஷயத்தின் சாராம்சத்தை நாம் இவ்வாறு ஏற்றுக் கொள்ளலாம் , அதாவது இன்று அங்கே இருக்கும் இந்த அழகான அமைப்பை வேங்கடமகி என்ற பெயர் கொண்ட ஒரு பெரிய வித்வான் செய்திருக்கிறார். இந்த பண்டிதர் பிரசித்தி பெற்ற கோவிந்த தீக்ஷிதரின் புதல்வர். கோவிந்த தீக்ஷிதர் தானப்பாச்சாரியாரின் சிஷ்யர் மற்றும் இந்த தானப்பாச்சாரியார் நேர் பரம்பரை வழியாக சார்ங்கதேவரின் சிஷ்யர். இதனால் இந்த வேங்கடமகி தன் பரம்பரை மூலமாக, சார்ங்கதேவரைப் போல ஒரு பண்டிதராகி விட்டார். இந்தத் தகவலுக்கு ஆதாரம் ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் என்ற பெயர் கொண்ட இன்றைய சென்னை பிரதேசத்தில் எட்டையாபபுரம் என்ற கிராமத்தில் இருக்கும் ஒரு சங்கீத பண்டிதர். வேங்கடமகி சதுர்தண்டிப்பிரகாசிகை என்ற பெயர் கொண்ட ஒரு கிரந்தத்தை எழுதி இருக்கிறார். அதில் அவர் மேலே சொன்னவாறு எழுதியும் இருக்கிறார் என்று தீக்ஷிதர் சொல்கிறார். அந்த கிரந்தம் கிடைத்தவுடன், அந்த வரலாற்றைப் பற்றி இன்னும் எழுதிவேன். அந்த கிரந்தம் ஓலைச் சுவடியில் ஸ்ரீ தீக்ஷிதரிடம் இருக்கிறது, ஆனால் அது தெலுங்கு லிபியில் உள்ளது. அவர் அந்த கிரந்தத்தின் ஒரு பிரதியை, திராவிட லிபியில் எழுத வைத்து எனக்கு அனுப்பப் போகிறார். அது கிடைத்த பிறகு எல்லாம் தெளிவாகத் தெரியும். வேங்கடமகி உண்மையில் பண்டித சார்ங்கதேவரின் பரம்பரையில் வந்திருந்தால், ரத்னாகரம் மற்றும் இந்த தெற்கத்திய பத்ததிக்கிடையே தொடர்பை நிரூபிக்க முடியும். ரத்னாகரத்தின் ஜனக ராகங்களை எடுத்துக் கொண்டு வேங்கடமகி இந்த அமைப்பைச் செய்திருக்கிறார் என்று ஸ்ரீ தீக்ஷிதர் சொல்கிறார். ஸ்ரீ தீக்ஷிதர் சமஸ்கிருத பண்டிதர் அல்ல அதனால் அவரால் இதை ஒப்பு நோக்க முடியவில்லை. ஆனால் சதுர்தண்டிப்பிரகாசிகை கிரந்தம் எனக்குக் கிடைத்தால் நான் நிச்சயம் முயற்சி செய்வேன். ஸ்ரீ தீக்ஷிதர் என்னுடன் இந்த வேளையில் ஒத்துழைக்க மிகவும் ஆவலாக இருக்கிறார். இதனால் அவரை ஆறு மாத காலம் என்னுடன் வைத்திருந்து இந்த வேலையைத் தொடங்கப் போகிறேன். ஆனால், தீக்ஷிதர் தெலுங்கு மற்றும் தமிழ் மட்டுமே பேசுகிறார், அவை எனக்கு வராது. (கற்றுக் கொள்ள ஆரம்பித்திருக்கிறேன்) . நல்ல காலமாக எனக்கு மொழிபெயர்ப்பாளர் யாரேனும் கிடைத்தால் உடனே ஸ்ரீ தீக்ஷிதரை அழைத்துக் கொள்வேன். அவர் மிகவும் வயதானவர் (அறுபத்தாறுக்கு மேல்). அதனால் காலத்தை வீணடிக்கக் கூடாது என்பது எனக்குத் தெரியும். இருக்கட்டும் இறைவனின் எண்ணம். வேங்கடமகி என்ற இந்த பண்டிதர் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். கோவிந்த தீக்ஷிதர் 1530 ஆம் ஆண்டு தஞ்சாவூரில் திவானாக இருந்தார். இவர் குடும்பத்தைப் பற்றி சுருக்கமாக சில செய்திகளை, ஸ்ரீ தீக்ஷிதர் தன் "சங்கீத ஸம்ப்ரதாய பிரதர்சினி" என்ற தெலுங்கு புத்தகத்தில் கொடுத்திருக்கிறார். வேங்கடமகி "ராகப் பிரகரணம்" என்ற பெயரில் இன்னொரு புத்தகம் எழுதி இருக்கிறார், அதுவும் ராகங்களைப் பற்றிய விவரங்களுக்கு ஆதாரப் பூர்வமாக இருக்கிறது. இன்றைய தினத்தில் சென்னை பிரதேசத்தில் ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதருக்கு இணையாக திராவிட சங்கீதத்தில் வேறு பண்டிதர்கள் யாரும் இல்லை. மேலும் அவர் காலமானால், அவரோடு சங்கீதத்தின் ஒரு பொக்கிஷமும் மறைந்து விடும். எட்டையாபுரத்தின் ஜமீன்தார் சங்கீத ஸம்ப்ரதாய பிரதர்சினி புத்தகத்தை அச்சிட்டு பல விஷயங்களை பிரசித்தமாக்கி இருக்கிறார். குறைந்த பட்சம் அதையாவது காப்பாற்றினார் என்பது உண்மை. ஆனால் இப்போது கூட சாஸ்திரிய அறிவு பின் தங்கி இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. ஸ்ரீ தீக்ஷிதரின் கருத்தும் இதுவே. இந்த விஷயமும் அவருடைய மதிப்பு என்ன என்பதூம் அந்த ராஜாவுக்கு புரியாது என்பது தெளிவாகத் தெரிகிறது. இதே காரணத்திற்காக, ஸ்ரீ தீக்ஷிதர் என் மூலம், அதை எழுதி வைக்க விருப்பம் தெரிவித்தார். ஆனால் தன்னுடைய புகழ் மற்றும் தெரிந்தவற்றை தனக்குப் பிறகு நிலைத்திருக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் அவருக்குள் எழுந்திருக்கிறது. இறைவனின் கிருபையால் தெலுங்கு மொழி பெயர்ப்பாளர் கிடைத்தால் என்னால் அந்த விஷயங்களை எழுதி வைக்க முடிய வேண்டும், என்று நான் இறைவனிடம் விண்ணப்பிக்கிறேன். வேங்கடமகி சில அம்ஸங்களில் கணித ரீதியான மாற்றங்களால், க்ரோமேடிக் ஸப்தகத்தின் பன்னிரண்டு ஸ்வரங்களை எடுத்துக் கொண்டு அதற்கு பதினாறு பெயர்கள் கொடுத்திருக்கிறார், அவை வேறு வகை அக்ஷரங்களால் எழுதப்படுகின்றன.

இவ்வாறான படத்தினால் பிறகு காட்டுகிறேன். இவ்வாறு செய்வதன் காரணம், ஸ்வரலிபி பத்ததி எளிதாக இருக்க வேண்டும் என்பதே. ஸ்வரங்களின் பெயரை மட்டும் படிப்பதால் அதன் ஜாதி (பிரக்ருத அல்லது விக்ருத) உடனே புரிந்து விடும். ஒரு ஸப்தகத்தில் "ஸா" முதல் "ஸா" வரை (தார ஸா வுடன்) எட்டு ஸ்வரங்கள் உள்ளன. முதலில் அந்த ஸப்தகத்தை இரண்டு பாகங்களாக்கலாம். அதாவது - ஸா ரி க ம மற்றும் ப த நி ஸா . ரத்னாகரத்தின் ஸ்ருதி நியமங்களில் கூட இப்படி சமமான இரண்டு பாகங்கள் உள்ளன. இந்த இரண்டு பாகங்களுள் 4 ஸ்ருதியின் இடைவெளி இருக்கும். ஸா ரி க ம இந்த பாகத்தை நாம் பூர்வ ஸ்வர சதுஷ்டகம், "லோவர் டெட்ரா கார்ட் [lower tetrachord] என்றும் "ப த நீ ஸா" இந்த பாகத்தை உத்தர ஸ்வர சதுஷ்டகம் அப்பர் டெட்ரா கார்ட் [upper tetrachord] என்று சொல்வோம். டெட்ராகார்ட் என்றால் நாலு ஸ்வரங்களின் சேர்க்கை. வேறு பெரிய அர்த்தம் எதுவும் இல்லை. "ஸா ரி க ம" இந்த முதல் டெட்ராகார்டை எடுத்துக் கொண்டு அதில் விக்ருதமாகும் ஸ்வரங்களைப் பார்க்கலாம். "ஸா" விற்கு விக்ருதி இல்லை (திராவிட பத்ததிக்கேற்ப , ரத்னாகரத்திற்கேற்ப அல்ல) , ம வின் விக்ருதியையும் கணக்கில் சேர்க்காமல் செல்லலாம் (பிரதி அல்லது தீவ்ர ம வின் விக்ருதி யின் வேறுபாடுகள் வேறு விதமாக உபயோகப் படுத்துவோம், அதனால் நாம் இதற்கேற்ப, ரி மற்றும் க இந்த இரண்டு ஸ்வரங்களை மட்டும் விக்ருதமாக்க வேண்டும், என்று வைத்துக் கொண்டு விட்டோம். இதே நியமம் அப்பர் டெட்ராகார்டுக்கு வைத்தால், பா மற்றும் ஸா விக்ருதமாகாது, தா மற்றும் நீ இந்த இரண்டு ஸ்வரங்கள் மட்டுமே விக்ருதமாகும்.

இப்போது பின்னே சொல்லப்பட்ட திராவிட பிரக்ருத- விக்ருத ஸ்வரங்களை மிகவும் கவனமாகப் பார்த்தால், நமக்கு ரி யின் மூன்று ரூபங்கள் (பிரக்ருத மற்றும் விக்ருத) உள்ளன, மற்றும் கவிற்கும் அப்படியே மூன்று ரூபங்கள் இருக்கின்றான் என்பது தெரிய வரும். அவை இவ்வாறு:- ரி யின் மூன்று ரூபங்கள் 1. சுத்த ரி (கோமளம்) 2. சதுஸ்ருதி ரி (பிரக்ருத) 3. ஷட்ஸ்ருதி ரி (கோமள க). க வின் மூன்று ரூபம் 1. சுத்த க (பிரக்ருத ரி) 2. ஸாதாரண க 3. அந்தர க

இவ்வாறு இந்த இரண்டு ஸ்வரங்களுக்கு மூன்று வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நமது பண்டைய ரிஷிகள் முனிகள் எப்போதும் சுருக்கமாக மற்றும் கவியழகோடு நம் சாஸ்திர சித்தாந்தங்களை எழுதினார்கள் என்பது தெரிந்தது தான். அதனால் இந்த ஸ்வரங்களின் இந்த நீளமான பெயர்களைத் தன் கவிதையில் போட முடியாது என்றெண்ணி வேங்கடமகி வேறு விதமாக விளக்கும் எண்ணத்தோடு செய்த யுக்தி இவ்வாறு:

ரிஷபத்தில் மூன்று வகை (அதாவது மூன்று ஸ்வரூபங்களை) , "ரா ரீ ரு" என்று இவ்வாறு எழுத வேண்டும். அதாவது:

ரா = சுத்த ரீ (கோமள ரீ)

ரீ = சதுஸ்ருதி ரீ (தீவ்ர ரீ)

ரு = ஷட்ஸ்ருதி ரீ (கோமள க)

இதே போல காந்தாரத்தின் ரூபங்களுக்கும் "கா கீ கு" பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கா = சுத்த காந்தாரம் (தீவ்ர ரீ)

கீ = ஸாதாரண காந்தாரம் (கோமள க)

கு = அந்தர காந்தாரம் (தீவ்ர க)

இதே நியாயத்தின் படி உத்தராங்கத்தின் சதுஷ்டகத்திலும் இது போன்ற ரூபம் கிடைக்கும் :-

தா = சுத்த தைவதம் (கோமள த)

தீ = சதுஸ்ருதி தைவதம் (தீவ்ர த)

து = ஷட்ஸ்ருதி தைவதம் (கோமள நீ)

நா = சுத்த நிஷாதம் (தீவ்ர த)

நீ = கைசிகீ நிஷாதம் (கோமள நிஷாதம்)

நு = காகலீ நிஷாதம் (தீவ்ர நிஷாதம்)

வேங்கடமகி தன் புத்தகத்தில் இந்த அமைப்பைத் தானே செய்திருப்பதாகக் கூறுகிறார். இந்த யுக்தி மிகவும் சுலபமாகவும் உபயோகமானதும் கூட என்று சொல்வதில் எந்த தயக்கமும் இல்லை. இங்கே இப்படிப்பட்ட ஏற்படுத்தப்பட்ட பெயர்களான "ரா ரீ ரூ கா கீ கு" என்று கொடுப்பதால் என்ன லாபம் என்று யாரேனும் கேட்கக் கூடும். ஸ்வரமோ அதே தான். அவற்றின் நீளமான பெயர்கள் சரி தான் ஆனால் அவற்றின் சாஸ்திரிய ஸ்வரப் பெயரும் தானே? பிறகு இந்தப் பெயர்களில் அப்படி என்ன விசேஷம்? அதன் உபயோகம் தான் என்ன? கேள்வி சரி, மேலும் இதற்கு பதில் தானே பிறகு வர இருக்கும் பக்கங்களில் கிடைத்து விடும்.

இப்போது இந்த புதிய பெயர்களின் உதவியோடு நாம் க்ரோமேடிக் ஸ்கேலை எழுதி பிறகு ராகத்தை எந்த தத்துவத்தின் அடிப்படையில் செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி யோசிக்கலாம். நான் மேலே ஒரு ஸப்தகத்தின் இரண்டு பகுதிகள் (அதாவது பூர்வாங்கம், உத்தராங்கம்) இருக்கின்றன என்று மேலே சொல்லி இருக்கிறேன். பிரதி மத்யமம் அல்லது தீவ்ர மத்யமம் எதற்காக உபயோகப் படுகிறது என்பதை இப்போது சொல்லவில்லை. இப்போதைக்கு நாம் அந்த ஸ்வரத்தைப் பற்றி யோசிப்பதை நிறுத்தி வைக்கலாம்.மேலும் ஸாரிகம, பதநிஸா இந்த இரண்டு சதுஷ்கங்களின் உதவியோடு ராகத்தை அமைக்கலாம். மேலே சொல்லப்பட்ட பதினாறு பெயர்களின் உதவியோடு நாம் கீழே கொடுக்கப்பட்ட படத்தை வரையலாம்.

விரைவில் புரிவதற்காக க்ரோமேடிக் ஸப்தகத்தின் ஸ்வரங்கள் தெற்கத்திய ஸங்கேதப் பெயர்களில்



		ஸா	1	அசலம்
		ரா	2	ஒரு பெயர் சு.ரி
5	கா	ரீ	3	.இரண்டு பெயர்கள் பஞ். ரி , சு.க
6	கீ	ரு	4	.இரண்டு பெயர்கள் .ஷட்.ரி, ஸா.க
7	கு			ஒரே பெயர் அ.க
		மா	8	சுத்த ம
		மீ	9	வடக்கின் தீவ்ர ம , ப்ரதி ம
		ப	10	அசலம்
		தா	11	ஒரே பெயர் சுத்த த
14	நா	தீ	12	இரண்டு பெயர்கள் பஞ் த , சு. நி
15	நி	து	13	இரண்டு பெயர்கள் ஷட். த , கை.நி
16	நு			ஒரே பெயர் கா.நி
		ஸா		தார ஸப்தகத்தில் மீண்டும்

இந்த அட்டவணையில், பதினேழு பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் பதினேழாவதை எழுத அவசியம் இல்லை ஏனென்றால் மீண்டும் ஸா ஸ்வரம் எழுதப்பட்டிருக்கிறது. மீதியுள்ள 16 ஸ்வரங்களில் பூர்வாங்கத்தின் சதுஷ்கத்தில் இரண்டு பெயர்கள் அதிகப்படியாக இருக்கின்றன, அதே போல உத்தராங்கத்தின் சதுஷ்கத்திலும் இரண்டு பெயர்கள் அதிகப்படியாக உள்ளன என்பதைக் காணலாம். . உதாரணமாக, "சதுஸ்ருதி ரீ" மற்றும் "சுத்த காந்தாரம்" வெவ்வேறு ஸ்வரங்கள் அல்ல, ஷட்ஸ்ருதி ரீ மற்றும் சாதாரண காந்தாரம் வெவ்வேறு ஸ்வரங்கள் இல்லை. அதாவது ஒரே ஸ்வரங்களுக்கு சில காரணங்களுக்காக, இரண்டு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதே விஷயம் உத்தராங்கத்தின் சதுஷ்கத்திலும் காணப்படும். அங்கே:-

சதுஸ்ருதி தைவதம் = சுத்த நிஷாதம் மற்றும்

ஷட்ஸ்ருதி தைவதம் = கைசிகீ நிஷாதம்

இந்த இரண்டாவது பெயரை ஒரு புறம் வைத்து விட்டால், பன்னிரண்டு ஸ்வரங்கள் இருக்கின்றன என்று தெளிவாகத் தெரியும். நீங்கள் இங்கே இருபத்திரண்டு நாதங்களின் ஸப்தகம் பன்னிரண்டு நாதம் உள்ள க்ரோமேட்டிக் ஸப்தகமாக ஆனது என் என்று கேள்வி எழுப்பலாம். ஐரோப்பாவின் என்ஹார்மோனிக் (ஸ்ருதி) ஸப்தகத்திலிருந்து க்ரோமேட்டிக் ஸ்கேல் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது தோன்றக் காரணமானதற்கு எது உதவியாக இருந்ததோ அது தான் இங்கேயும் இருந்திருக்கும் என்று சொல்லி இந்த விஷயத்தை விட்டு விடலாம். ஐரோப்பிய நேச்சுரல் [natural] ஸ்கேலின் ஸ்வரம் திராவிட சுத்த ஸ்வரங்களின் ஸப்தகத்தில் சேராது. ஐரோப்பிய சுத்த ஸ்வரத்தின் ஸப்தகத்தை நம் கல்யாண் ராகத்தின் தாட் என்று சொல்லலாம். மத்யமத்தை கோமளமாகப் பிடிக்க வேண்டும் அவ்வளவே.

தெற்கின் பத்ததியில் முக்கிய ஜனக ராகமான எழுபத்திரண்டை மேளகர்த்தா ராகம் என்று சொல்கிறார்கள். இந்தப் பகுதியில் மேளகர்த்தா என்ற சொல் மிகவும் பொதுவாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பாடகருக்கும் அது புரிந்திருக்கிறது. மேளகர்த்தா ராகம் மேலே எழுதப்பட்ட பன்னிரண்டு ஸ்வரங்களினால் உருவாகிறது, அவற்றைப் பற்றிச் சொல்லும் பொது சில நியமங்களை கவனிக்க வேண்டியிருக்கும். அவையாவன:-

1. ஒவ்வொரு ஜனக அல்லது மேளகர்த்தா ராகமும் மேலே எழுதப்பட்ட சதுஷ்கங்களிலிருந்து, ஒன்றன் பின் ஒன்றாக சேர்த்து எட்டு ஸ்வரங்களின் உதவியோடு செய்யப்படுகிறது.
2. இரண்டு சதுஷ்கங்களை சேர்க்கும் போது ஒவ்வொரு சதுஷ்கத்தின் இரண்டு பக்கமும் உள்ள ஸ்வரமான ஸ, மற்றும் ம , ப இவை மாற்றமடையாது என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.
3. அந்த சதுஷ்கங்களின் இடையே மிச்சமுள்ள இரண்டு இரண்டு ஸ்வரங்களை க்ரமமாக, ஒன்றன் பின் ஒன்றாக எடுத்து ஒவ்வொரு ராகத்தையும் உருவாக்க வேண்டும்.
4. ஒவ்வொரு ராகமும் ஸம்பூர்ணம் அதாவது ஏழு வெவ்வேறு ஸ்வரங்களால் உண்டாகும்
5. ஒரு சதுஷ்கத்தில் ஒரே ஸ்வரத்தின் இரண்டு விக்ருதி ஒன்றன் பின் ஒன்றாக வந்தால், அந்த சமயம் அந்த ஸ்வரத்தின் பெயர் மாறி , அதே நிலையில் உள்ள அடுத்த ஸ்வரத்தின் பெயரை கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மேளத்திலும் ஸப்தகத்தின் ஏழு ஸ்வரங்களுக்கும் பிரதிநிதி இருக்கவேண்டும் என்பதை மறக்கக் கூடாது.

   மீண்டும்:- இந்த நியமம் வெறும் சொற்களால் புரியாது. அதனால் உதாரணம் கொடுத்து விளக்குகிறேன். எப்படி, ரா ரி மற்றும் நி நு இவற்றை ஒரே மேள ராகத்தில் இவ்வாறு உச்சரிக்கக் கூடாது. நமக்கு ரியின் இரண்டாவது பெயர் கா (சுத்த காந்தாரம்) என்றும், அதே போல நி-யின் அர்த்தம் து ஆகும் என்று தெரியும், அதனால், இந்த மேளத்தின் ஸ்வரம், "ஸ ரா கா மா ப து நு"

இவ்வாறு சொல்ல வேண்டும். இவ்வாறு செய்வதற்காக, பதினாறு ஸ்வரங்களுக்கு பதினாறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதே போல, இரண்டு சதுஷ்கண்கலைன் எல்லா ஸ்வரங்களின் உதவியோடு முப்பத்தாறு வெவ்வேறு "ஜனக ராகங்கள்" அல்லது "மேளகர்த்தாக்கள்" உருவாகும். இதில் நாம் ம அவை மாற்றம் அற்றதாக வைத்துக் கொண்டோம், என்று நினைவில் இருக்கும். மத்யமத்தின் இரண்டு வகை உண்டு, அதாவது 1 சுத்த 2 ப்ரதி மத்யமம். எவ்வாறு சுத்த மத்யமத்தை மாற்றம் அற்றதாகக் கொண்டு நாம் முப்பத்தாறு ராகங்கள் செய்தோமே, அதே போல அந்த மத்யமத்தின் இடத்தில் ப்ரதி மத்யமத்தை ஏற்று, அடுத்த முப்பத்தாறை உருவாக்க வேண்டும். மத்யமம் மிகவும் மகத்துவம் வாய்ந்த விசேஷமான ஸ்வரம் என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக, நம் காலை ராகமான பைரவ் ராகத்தைப் பார்ப்போம். இதன் ஸ்வரம், "ஸா ரி கா ம ப த நி ஸா" என்று கொள்ளலாம். அதில் ஒரு சுத்த மத்யமத்தை எடுத்து, "ப்ரதி மத்யமத்தை" வைத்தால் உடனே அதில் ஸந்த்யா காலத்தின் சாயை வந்து விடும். மற்ற ஸ்வரங்களை மற்ற அவசியம் இல்லை. தீக்ஷிதர்[41] மத்யமத்தின் இந்த மகத்துவத்தைப் புரிந்துக் கொண்டு எல்லா ராக அமைப்பையும் அதன் உதவியோடு செய்து விட்டார். அதனால் சுத்த மத்யமத்துடன் முப்பத்தாறு ராகம், மற்றும் ப்ரதி மத்யமத்தோடு முப்பத்தாறு ராகம் என்று சொல்கிறார்கள்.

சுத்த மத்யமத்தின் முப்பத்தாறு ராகம் எவ்வாறு அமைக்கப் படுகிறது என்பது புரிந்தால் ப்ரதி மத்யமத்தின் முப்பத்தாறு ராகம் புரிந்து விடும். ஏனென்றால் இரண்டிலும் மத்யமத்தைத் தவிர வேறுபாடு எதுவும் இல்லை. ஸ்ரீ சின்னஸ்வாமி முதலியார் இந்த அமைப்பை மிக அழகாக விளக்கி இருக்கிறார். (ஓரியண்டல் ம்யூசிக்கைப் பாருங்கள்)

உத்தராங்கத்தின் ஆறு சதுஷ்கங்கம் மேலே சொல்லப்பட்ட பெயர்களின் உதவியோடு இவ்வாறு செய்யலாம்.

1. ப தா நா ஸா
2. ப தா நி ஸா
3. ப தா நு ஸா
4. ப தா நீ ஸா
5. ப தீ நு ஸா
6. ப து நு ஸா

இதில் நாலாவது வரிசையில் "ப த நீ ஸா" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாகப் பார்த்தால், இது ப தீ நா ஸா என்றவாறு இருக்க வேண்டும் என்று தோன்றும். ஆனால் இவ்வாறு இருக்க சாத்தியம் இல்லை. ஏனென்றால் தீ மற்றும் நா இந்த இரண்டும் ஒரே ஸ்வரத்தின் பெயர், மேலும் அவற்றை எடுத்துக் கொண்டால், நம் ராகத்திற்கு ஏழு ஸ்வரமும் கிடைக்காது.

இந்த உத்தராங்க சதுஷிகத்தில் "மத்யம" ஸ்வரம் இல்லாததால், அதில் வெறும் ஆறு விதங்கள் தான் இருக்கலாம். பூர்வாங்கத்தின் சதுஷ்கத்தில் பன்னிரண்டு விதம் ஆகும், ஏனென்றால் ஆறு

[41] [அதாவது வேங்கடமகி தீக்ஷிதர்]

சுத்த மத்யம, மற்றும் ஆறு ப்ரதி மத்யமத்தை வைத்துச் செய்ய வேண்டும். இவ்வாறு இந்த பன்னிரண்டு சதுஷ்கங்களை இப்படி எழுதலாம்.

சுத்த மத்யமத்தின் ஆறு பூர்வாங்க சதுஷ்கம்

அ 1 ஸ ரா கா மா (சுத்த மத்தியமத்தை 'மா' என்று குறிப்போம்)

அ 2 ஸ ரா கீ மா

அ 3 ஸ ரா கு மா

அ 4 ஸ ரீ கீ மா

அ 5 ஸ ரீ கு மா

அ 6 ஸ ரூ கு மா

ப்ரதி மத்யமத்தின் ஆறு பூர்வாங்க சதுஷ்கம்

ப 1 ஸ ரா கா மீ (ப்ரதி மத்யமத்தை 'மீ' என்று குறிப்போம்)

ப 2 ஸ ரா கீ மீ

ப 3 ஸ ரா கு மீ

ப 4 ஸ ரீ கீ மீ

ப 5 ஸ ரீ கு மீ

ப 6 ஸ ரூ கு மீ

இப்போது கீழே மற்றும் மேலேயுள்ள சதுஷ்கம் நம்மிடம் தயாராக இருப்பதால், சுத்த மத்யமத்தின் 36 ராகங்களை உருவாக்குவது மிகவும் எளிது. அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைச் சொல்கிறேன்.

எந்த சதுஷ்கத்தோடு எந்த சதுஷ்கத்தைச் சேர்க்க வேண்டும் என்பதன் அட்டவணை:-

மேள ராக எண்	பூர்வாங்க சதுஷ்கத்தின் க்ரம ஸங்கேதம்	+	உத்தாரங்க சதுஷ்கத்தின் க்ரம ஸங்கேதம்	மேள ராக எண்	பூர்வாங்க சதுஷ்கத்தின் க்ரம ஸங்கேதம்	உத்தாரங்க + சதுஷ்கத்தின் க்ரம ஸங்கேதம்
முதல் வகை				நான்காம் வகை		
1	1 அ	+	முதல் உத்தராங்கம்	19	4 அ	+ முதல் உத்தராங்கம்
2	1 அ	+	இரண்டாவது உத்தராங்கம்	20	4 அ	+ இரண்டாவது உத்தராங்கம்
3	1 அ	+	மூன்றாவது உத்தாராங்கம்	21	4 அ	+ மூன்றாவது உத்தாராங்கம்
4	1 அ	+	நான்காவது உத்தராங்கம்	22	4 அ	+ நான்காவது உத்தராங்கம்
5	1 அ	+	ஐந்தாவது உத்தராங்கம்	23	4 அ	+ ஐந்தாவது உத்தராங்கம்
6	1 அ	+	ஆறாவது உத்தராங்கம்	24	4 அ	+ ஆறாவது உத்தராங்கம்
இரண்டாம் வகை				ஐந்தாவது வகை		
7	2 அ	+	முதல் உத்தராங்கம்	25	5 அ	+ முதல் உத்தராங்கம்
8	2 அ	+	இரண்டாவது உத்தராங்கம்	26	5 அ	+ இரண்டாவது உத்தராங்கம்
9	2 அ	+	மூன்றாவது உத்தாராங்கம்	27	5 அ	+ மூன்றாவது உத்தாராங்கம்
10	2 அ	+	நான்காவது உத்தராங்கம்	28	5 அ	+ நான்காவது உத்தராங்கம்
11	2 அ	+	ஐந்தாவது உத்தராங்கம்	29	5 அ	+ ஐந்தாவது உத்தராங்கம்
12	2 அ	+	ஆறாவது உத்தராங்கம்	30	5 அ	+ ஆறாவது உத்தராங்கம்
மூன்றாம் வகை				ஆறாவது வகை		
13	3 அ	+	முதல் உத்தராங்கம்	31	6 அ	+ முதல் உத்தராங்கம்
14	3 அ	+	இரண்டாவது உத்தராங்கம்	32	6 அ	+ இரண்டாவது உத்தராங்கம்
15	3 அ	+	மூன்றாவது உத்தாராங்கம்	33	6 அ	+ மூன்றாவது உத்தாராங்கம்
16	3 அ	+	நான்காவது உத்தராங்கம்	34	6 அ	+ நான்காவது உத்தராங்கம்
17	3 அ	+	ஐந்தாவது உத்தராங்கம்	35	6 அ	+ ஐந்தாவது உத்தராங்கம்
18	3 அ	+	ஆறாவது உத்தராங்கம்	36	6 அ	+ ஆறாவது உத்தராங்கம்

இவ்வாறு பூர்வாங்கம் மற்றும் உத்தராங்கத்தின் இரண்டு சதுஷ்கங்களைச் சேர்த்து ஏழு ஸ்வரங்களால் ஆன முப்பத்தாறு ராகங்கள் உருவாகும். இவற்றில் மத்யமம் சுத்த மத்யமம். அதே ஸ்தானத்தில் ப்ரதி மத்யமத்தைச் சேர்த்தால் அடுத்த முப்பத்தாறு ராகங்கள் உருவாகும். ஒவ்வொரு ராகத்தின் ஸ்வரூபம் தனியாக மற்றும் வெவ்வேறாக உள்ளது என்பது தெளிவாகும். ஒவ்வொரு ஜனக ராகம் அல்லது மேளகர்த்தாவுக்கும் வெவ்வேறு பெயர் உண்டு, அந்த எழுபத்திரண்டு பெயர்கள் இவ்வாறு:-

1.	கனகாங்கி	ஸ	ரா	கா	மா	ப	தா	நா	ஸ
2.	ரத்னாங்கி	ஸ	ரா	கா	மா	ப	தா	நீ	ஸ
3.	கானமூர்த்தி	ஸ	ரா	கா	மா	ப	தா	நு	ஸ
4.	வனஸ்பதி	ஸ	ரா	கா	மா	ப	தீ	நீ	ஸ
5.	மானவதீ	ஸ	ரா	கா	மா	ப	தீ	நு	ஸ
6.	தானரூபீ	ஸ	ரா	கா	மா	ப	து	நு	ஸ
7.	சேனாபதீ	ஸ	ரா	கீ	மா	ப	தா	நா	ஸ
8.	ஹனுமதோடி	ஸ	ரா	கீ	மா	ப	தா	நீ	ஸ
9.	தேனுக	ஸ	ரா	கீ	மா	ப	தா	நு	ஸ
10.	நாடகப்ரியா	ஸ	ரா	கீ	மா	ப	தீ	நீ	ஸ
11.	கோகிலீப்ரியா	ஸ	ரா	கீ	மா	ப	தீ	நு	ஸ
12.	ரூபாவதி	ஸ	ரா	கீ	மா	ப	து	நு	ஸ
13.	காயகப்ரியா	ஸ	ரா	கு	மா	ப	தா	நா	ஸ
14.	வகுளாபரண	ஸ	ரா	கு	மா	ப	தா	நீ	ஸ
15.	மாயாமாளவகௌட	ஸ	ரா	கு	மா	ப	தா	நு	ஸ
16.	சக்ரவாக	ஸ	ரா	கு	மா	ப	தீ	நீ	ஸ
17.	சூர்யகாந்த	ஸ	ரா	கு	மா	ப	தீ	நு	ஸ
18.	ஹாடகம்பரீ	ஸ	ரா	கு	மா	ப	து	நு	ஸ
19.	ஜங்காரத்வனி	ஸ	ரீ	கீ	மா	ப	தா	நா	ஸ
20.	நடபைரவீ	ஸ	ரீ	கீ	மா	ப	தா	நீ	ஸ
21.	கீரவாணீ	ஸ	ரீ	கீ	மா	ப	தீ	நு	ஸ
22.	கரஹரப்ரியா	ஸ	ரீ	கீ	மா	ப	தீ	நீ	ஸ
23.	கௌரீமனோஹரீ	ஸ	ரீ	கீ	மா	ப	து	நு	ஸ
24.	வருணப்ரியா	ஸ	ரீ	கீ	மா	ப	தா	நு	ஸ
25.	மாரஞ்சனீ	ஸ	ரீ	கு	மா	ப	தா	நா	ஸ
26.	சாருகேசீ	ஸ	ரீ	கு	மா	ப	தீ	நீ	ஸ
27.	ஸரஸாங்கீ	ஸ	ரீ	கு	மா	ப	தீ	நு	ஸ
28.	ஹரிகாம்போதி	ஸ	ரீ	கு	மா	ப	தீ	நீ	ஸ
29.	தீரசங்கராபரணம்	ஸ	ரீ	கு	மா	ப	து	நு	ஸ
30.	நாகாநந்தினி	ஸ	ரீ	கு	மா	ப	து	நு	ஸ
31.	யாகப்ரியா	ஸ	ரூ	கு	மா	ப	தா	நா	ஸ
32.	ராகவர்த்தனி	ஸ	ரூ	கு	மா	ப	தா	நீ	ஸ
33.	காங்கேயபூஷணி	ஸ	ரூ	கு	மா	ப	தா	நு	ஸ
34.	வாகதீஸ்வரி	ஸ	ரூ	கு	மா	ப	தீ	நீ	ஸ
35.	சூலினி	ஸ	ரூ	கு	மா	ப	தீ	நு	ஸ
36.	சலநாட	ஸ	ரூ	கு	மா	ப	து	நு	ஸ

ப்ரதிமத்யம (சங்கேதாக்ஷரம் மா) வால் உண்டாகும் 36 ஜனக ராகம் அல்லது மேளகர்த்தா:-

37. சாலக
38. ஜலார்ணவ
39. ஸாலவராளி
40. நவநீத
41. பாவனீ
42. ரகுப்ரியா
43. கவாம்போதீ
44. பவப்ரியா
45. சுபபந்துவராளி
46. ஷட்விதமார்க்கிணீ
47. சுவர்ணாங்கி
48. திவ்யமணி
49. தவளாம்பரி
50. நாமநாராயணி
51. காமவர்த்தினீ
52. ராமப்ரியா
53. கமனாஸ்ரமா
54. விஸ்வம்பரீ
55. ஸ்யாமலாங்கி
56. ஷண்முகப்ரியா
57. சிம்ஹேந்திரமத்யம
58. ஹேமவதீ
59. தர்மவதீ
60. நீதிமதீ
61. காந்தாமணீ
62. ரிஷபப்ரியா
63. லதாங்கி
64. வாசஸ்பதி
65. மேச கல்யாணீ
66. சித்ராம்பரீ
67. சுசரிதா
68. ஜ்யோதிஸ்வரூபிணீ
69. தாதுவர்த்தனி
70. நாஸிகாபூஷணி
71. கோசல
72. ரஸிகப்ரியா

குறிப்பு:

முந்தைய பக்கத்தில் முதல் 36 மேளங்களுக்கு எதிராக அவற்றின் ஆரோஹ-அவரோஹணங்கள் உள்ளன. அவையே இந்த இரண்டாவது 36 க்கும். வெறும் சுத்த மத்யமத்தை விடுத்து ப்ரதி மத்யம ஸ்வரத்தை இந்த 36-இல் எடுத்துக் கொள்ளவேண்டும். அதனால் அவற்றையெல்லாம் இங்கே எழுதவில்லை. எனக்கு இது எளிதாக மற்றும் மனோரஞ்சகமாக உள்ளது என்று தோன்றுகிறது.

மேலே எழுதப்பட்ட சதுஷ்கங்களை நன்றாக கவனித்து வைத்தால் குறிப்பிட்ட க்ரம எண்ணிக்கை உள்ள மேளகர்த்தா ராகத்தின் ஸ்வரம் எப்படி இருக்கின்றன, என்பதை உடனே சொல்ல முடியாமல் போகுமா? ஆறு ஆறு ராகங்களின் ஒரு சமூகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் எந்த இரண்டு சதுஷ்கங்களைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லி விடுவது எளிதாகிறது. இப்போது ராகத்தின் பெயரைக் கேட்டால், அதன் க்ரம வரிசை மற்றும் அதன் ஸ்வரங்களைப் புரிந்து கொள்வது மட்டும் தான் எஞ்சியிருக்கிறது. தெற்கில் பண்டிதர்கள் இதையும் செய்து வைத்திருக்கிறார்கள். இதனால் இந்த அமைப்பைப் பார்த்தால் ஆச்சரியம் ஏற்படுகிறது. இந்த யுக்தியை “கடபயாதி” ஃபார்முலா என்று சொல்வேன். அதன் விளக்கத்தை சுருக்கமாக இவ்வாறு கொடுக்கிறேன். ‘கடபய்’ - இந்த நாலில் ஒவ்வொரு அக்ஷரமும் தான் மூல அக்ஷரத்தின் வர்க்கத்தைக் குறிக்கிறது. க = க + ஆதி + நவம் =

காதிநவ, ட = ட + ஆதி + நவம் = டாதிநவம், ப = ப + ஆதி + பஞ்ச = பாதிபஞ்ச , ய = ய + ஆதி + அஷ்டம் = யாத்யஷ்டம் அதாவது, க முதல் ஒன்பது, ட முதல் ஒன்பது, ப முதல் ஐந்து, யா முதல் எட்டு, இவ்வாறு அக்ஷரங்களால் ஆன அட்டவணையை எழுதிக் கொள்ளவேண்டும். எப்படி என்றால்:

1	2	3	4	5	6	7	8	9	0
க	க2	க3	க4	ச1	ச2	ஜ1	ஜ2	ஞ	ங
ட1	ட2	ட3	ட4	ண	த1	த2	த3	த4	ந
ப	ப2	ப3	ப4	ம					
ய	ர	ல	வ	ஷ	ஷ	ஸ	ஹ		

ந = இதற்கு பூஜ்யம் என்று புரிந்துக் கொள்ளவேண்டும்

மேலே சொல்ல எழுபத்திரண்டு மேளராகங்களில் எந்த ராகத்தின் எண் தேவையோ அதை இந்த கோஷ்டத்தில் தேடலாம். க்ரம எண்ணிக்கையைத் தேட பெயரின் முதல் இரண்டு அக்ஷரங்களை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும், மற்றும் அதன் வரிசை எண்ணிக்கையின் எண்களைத் திருப்பி எழுதினால் ராகத்தின் க்ரம வரிசை கிடைத்து விடும். (அங்கானாம் வாமதோ கதி:)

உதாரணம்:

கே: ரூபவதி மேளத்தின் க்ரம வரிசை எண் என்ன?

ப: இங்கே ரூ, ப இந்த இரண்டு அக்ஷரங்களை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

ரூ - இது ய வர்க்கத்தில் இரண்டாவது

ப - இது ப வர்க்கத்தில் முதல். அதனால் ரூப=21 இவ்வாறு ஆனது. இதைத் திருப்பி எழுதினால் இதன் எண் 12 ஆகும். இது மேளத்தின் சரியான எண். அதாவது இது இரண்டாவது சக்ரத்தின் கடைசி மேளம். ஆறு- ஆறு மேளங்களாக இவ்வாறு மொத்தம் பன்னிரண்டு சக்ரம் உள்ளன. அதனால் ' ஸ ரா கீ மா ப து நு ஸா = [ஸா நு து ப மா கீ ரா ஸ][42] இவ்வாறு இந்த பன்னிரண்டாவது மேளத்தின் ஸ்வரம் ஆனது.

மீண்டும் தஞ்சாவூர் - அடுத்த பக்கங்கள்
ஸ்ரீ நாகோஜீராவின் கருத்துக்கள் **தேதி 2/12/1904** **தஞ்சாவூர்**

அன்புள்ள அய்யா,

[42] கைராகர் பதிப்பில் அவரோஹணம் ஸா ரீ ரீ ம ப நி நீ ஸா என்று தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது

இங்கே நான் ஸ்ருதி சம்பந்தமாக இன்னும் அதிகமாக நிர்ணயம் செய்து, இன்னும் சரியாக இருக்கும்படியான விஷயத்தை சொல்கிறேன். நான் இங்கே சென்னையிலிருந்து கேப்டன் டே யின் புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை நீங்கள் பார்த்திரா விட்டால் இதை உங்களுக்கு நாளை காட்டுகிறேன். உங்கள் வாச காலத்தை இங்கே சந்தோஷமாகக் கழித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன்.

நட்புடன்
கையொப்பம்
சி.நாகோஜீராவ்

ஸா-விற்கு நான்கு ஸ்ருதிகள் என்பதைப் பார்த்தவுடன், ஸா-வுக்கும், ரிக்கும் நடுவில் மூன்று ஸ்ருதிகள் உள்ளன என்பது தெரிந்தது. (இல்லை என்று சிலர் சொல்கிறார்கள்),

இந்த ஸ்ருதி ஸப்தகம் சங்கராபரண ஸப்தகம் ஆகலாம். ஷட்ஜ கிராமம்:-

சீ - டீ - ஈ + எஃப் - ஜீ

ஸா - ரீ - க + ம - ப

ப - த - நீ - ஸா

G - A - B - C

ஒரு புத்தகத்தில் கொடுத்ததற்கேற்ப ஸ்வர இடைவெளிகளை எடுத்துக் கொண்டால் மத்யம கிராமம் இவ்வாறு இருக்கும்:-

க - ம - ப - த - நி

நி ஸா - ரி - க

எங்கே த 17 ஆவது ஸ்ருதியில் இருக்கிறதோ அப்போது மற்ற ஸ்வரங்கள் ஷட்ஜ கிராமத்துடையது. த இன்றைய ப்ரக்ருத அல்லது விக்ருத ஸ்வரங்களைப் போல அல்ல. மேலும் இந்த ஸ்வரம் இன்று பிரசாரத்தில் இல்லாமல் இருக்கலாம். இதே போல காந்தார கிராமம் இவ்வாறு இருக்கும்.

ஸா - ரி - க - ம

ம - ப - த - நீ

எங்கே ரீ நாலாவது ஸ்ருதியில், தா 17 -இல் , க ஏழாவதில் மற்றும் நீ 20-ஆவதில். இதில் எதுவும் நம்முடைய இன்றைய ப்ரக்ருத - விக்ருதம் அல்ல. மேலும் இதே காரணத்தினால் இந்த கிராமம் மத்யம கிராமத்திற்கு வெகு நாள் முன்னரே உபயோகமற்றதாகப்

போயிருக்கலாம். மூர்ச்சனை மாற்றத்தினால் நமக்கு கல்யாணி, கரஹரப்ரியா, காம்போதி மற்றும் நடபைரவி மேளங்கள் (தாட்) கிடைக்கின்றன.

ஸா		முதல் ஸ்ருதி	-- 1
[ரி1][43]		இரண்டாவது ஸ்ருதி	-- 1.032 அதாவது 22/2 [25/24] இதை க என்போம்
சுத்த ரி [ரி2 சு.ரி]		மூன்றாவது ஸ்ருதி	-- 1.065 அல்லது 16/15 ஏறக்குறைய
[ரி3]		4-ஆவது	-- 1.099 [10/9] ஏறக்குறைய
சுத்த கா / ரீ2 [ரி4 ச.ரி]		5-ஆவது	-- 1.134 அல்லது 9/8 ஏறக்குறைய
சாதாரண கா / ரீ3 [க1]		6-ஆவது	-- 1.180 அல்லது 7/6 ஏறக்குறைய [32/27]
	[க2 ஸா.க]	7-ஆவது	-- 1.208 அல்லது 6/5 ஏறக்குறைய
அந்தர கா	[க3]	8-ஆவது	-- 1.247 - 5/4 ஏறக்குறைய
	[க4]	9-ஆவது	-- 1.287 ஏறக்குறைய [32/25]
சுத்த ம	[ம1]	10-ஆவது	-- 1.328 4/3 ஏறக்குறைய
	[ம2]	11 -ஆவது	-- 1.371 [27/20]
ப்ரதி ம	[ம3]	12-ஆவது	-- 1.415 [45/32]
	[ம4]	13-ஆவது	-- 1.430 [36/25]
ப		14-ஆவது	-- 1.506 = (இதை 'அ' எனலாம்) அல்லது 3/2
	[த1 சு.த]	15-ஆவது	-- அ X க [25/16]
சுத்த த	[த2]	16-ஆவது	-- அ X க 2 - 8/5
	[த3 ச.த]	17-ஆவது	-- அ X க 3 [5/3]
த	[த4]	18-ஆவது	-- அ X க 4 - [27/16]
சு. நி.	[நி1]	19-ஆவது	-- அ X க 5 [16/9]
	[கை நி2]	20-ஆவது	--- அ X க 6 [9/5]
கா. நி	[நி3]	21-ஆவது	--- அ X க 7 [15/8]
	[நி4]	22-ஆவது	--- அ X க 8 [48/25]

[43] [ ] கைராகர் பதிப்பில் இந்த எண்களில் சில அச்சுப்பிழைகள் இருப்பதால், அடைப்புக் குறிக்குள் கே.வீ.ஸ்ரீனிவாச அய்யங்காரின் கான பாஸ்கரத்தில் ராவ் பஹாதூர் நாகோஜி ராவின் எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன]

ஸா 23-ஆவது --- அ X க 9 அல்லது க22 --- 2

(ஸ்ருதிகள் சம இடைவெளியில் உள்ளன என்று வைத்துக் கொள்க)

எந்த ராகத்திலும் வாதீ ஸ்வரம் மிகவும் மகத்துவம் வாய்ந்தது மேலும் மீண்டும் உபயோகப்படுகிறது. ஸம்வாதி 9 அல்லது 13 ஸ்ருதி இடைவெளியில் இருக்கிறது மற்றும் வாதிக்கு பிறகு அது முக்கியத்துவம் வாய்ந்த ஸ்வரம். வாதி ராஜாவுடன் ஒப்பிடப்படுகிறது, ஸம்வாதி மந்திரியுடன் ஒப்பிடப்படுகிறது. இது வரை சரி. முன்னோர்களுக்கு இந்த விஷயம் நிச்சயம் தெரிந்திருக்கும். ஆனால் நீங்கள் எந்த ராகத்தின் வாதீ சம்வாதி தெரிந்து வைத்திருந்தாலும் ராகத்தைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டீர்கள் என்று சொல்ல முடியாது. நான் புரிந்துக் கொண்டதில், முன்னோர்கள் எதைப் புரிந்துக் கொள்ளவில்லை என்றால் ஒவ்வொரு குறிப்பிட்ட ராகத்திலும் 2 அல்லது மூன்று மற்ற ஸ்வரத்தோடு (ஸம்வாதிக்கேற்ப எது 9 அல்லது 13 இல் இருக்கிறதோ) வாதியைப் போலவே ஸம்பந்தப்பட்டிருக்கிறதோ அது. எப்படி ஸம்வாதி வாதியிலிருந்து நான்காவது அல்லது ஐந்தாவதாகிறதோ, அதே போல வாதியிலிருந்து அணுவாதி மூன்றாவதாகிறது. வாதி மற்றும் அநுவாதிக்கிடையே யுள்ள இடைவெளி ஸா அல்லது, கா அல்லது ஸா அல்லது கோமள கா வைப் போல இருக்கும் என்பதைப் பற்றி கிரந்தக்காரர்கள் தெளிவாக அல்லது தீர்மானமாக இல்லை. அவர்கள் எந்த ராகத்தின் போக்கிலும், விஸ்ராந்தியிலும் வாதி, ஸம்வாதி மற்றும் அணுவாதி எப்படி தீர்மானிக்கப்படுகிறது என்பதைச் சொல்லவில்லை. நான் செய்த சாஸ்திரத்தில் இது இருக்கிறது. என் சாஸ்திரத்தின் மூலமாக எளிதில் தெரிந்துக் கொள்ளலாம். ஒரு ராகத்தைப் பற்றி கொஞ்சம் தெரிந்தால் என் சித்தாந்தத்தை உபயோகித்து ராகத்தின் போக்கைப் பற்றிய எல்லா விவரமும் தெரிந்துக் கொள்ளலாம். வேறு எந்த விதியினாலும் இது சாத்தியமாகாது.

இதன் பிரமாணம் என்னவென்றால், ராகங்களில் பெரும்பாலானவற்றின் போக்கு அல்லது ஒவ்வொரு ராகத்தின் போக்கைப் புரிந்துக் கொள்ள முடிகிறது. இந்த சித்தாந்தத்தின் படி, ராகத்தின் அனுவாதி ஸ்வரம் எதுவென்றால், எது மேஜர் அல்லது மைனர் கார்ட்-இல் [major minor chord] ஸ்வர ஸம்வாதத்தைத் தோற்றுவிப்பது. ஸா - க - ப ஸா - மேஜர், ஸா - க - ப - ஸா மைனர். (இதற்கேற்ப, ஸோஹனி அல்லது பிஹாக் அல்லது சாராங்க் என்று எண்ணிக் கொள்கிறேன்). குறிப்பு: இந்த புதிய சித்தாந்தம் யோசிக்க வேண்டிய ஒன்று. என் ராக சித்தாந்தம் ஸ்வர ஸம்வாதத்தின் (ஹார்மனி) அடிப்படையில் உள்ளது.

பூப் :- ஸா - க - ப ஸா சம்வாதி

ரி - த - ரீ - சம்வாதி

சலன்:- ஸாரி - கரி - கபத - ஸர்

ஸர்ரி - கரி - க்ரிஸர் - தப

தபக - ரிக - ரி ஸா

மோஹனம் - த ஸா க த - சம்வாதி
ரி ப ரி - சம்வாதி

சலன்: ரிகப - கபட - ஸா - ரிக் - ரிஸர்

தப - கரி - ஸாரி - கப கரி ஸா

ஸோஹனி:- நிஸர் -க், ம, க்ரி ஸர்நீத
ஸா மற்றும் நி , க மற்றும் நீ , தா மற்றும் ரீ சம்வாதி

ஸா - க ம, த ம, தாநீஸர், நீ, நீத , ம - க, ம க ரீ ஸா ,

ஸாக - ம த நீ - ஸர், த நீ ஸர்ரிக, மா , க், ரீ ஸர் நீத,

நீ, நீதம, க, ஸர், ஸர்நீதநீ, நீத ம க , மதநீஸர்

க், ரீ, ஸர்ஸர், நீரீஸர், நீஸா, தநீஸா, ரீ, நிஸா, தநீஸாம ரீ, ஸர்

பிஹாக் :- ஸா, ம சம்வாதி. நீ, - க -ப சம்வாதி

த மற்றும் ரீ யும் சம்வாதி ஆனால் முக்கியமில்லை

நிஸா, கம, - பம - கரிஸா - நீதப, நீஸா, கமப

இதே பகுதி தார ஸப்தகத்தில் மீண்டும் வரும்.

நிஸர், க்ரீஸா, நிரீஸர் , - நீதபமக, கமப - கரீ ஸாநிஸா

ஸாரங்க் :- ரீ - ஸர்நி - பம

மப - நீ - ஸர்ரீ - ஸர் - நீ, பம, ரீ, ஸாநீ, ப, நீ - ஸா

வீடு திரும்பிய பின் (ஸ்ரீ நாகோஜீ ராவின் கருத்துக்கள் இங்கே முடிவு பெறுகின்றன)

குறிப்பு:

தவறான புரிதல்கள் நிச்சயமாக தவறான முடிவுகளில் கொண்டு விடும். கிரந்தங்களின் அடிப்படையில் இல்லாத விஷயங்கள் சமாதானம் அளிக்கும்படி இருக்க முடியாது.

இன்றைய தெற்கத்திய பத்ததியின் சுத்த ரி மற்றும் சுத்த த உலகெங்கிலும் ஃப்ளேட் D மற்றும் ஃப்ளேட் A (கோமள ரி மற்றும் கோமள த) வுக்கு சமமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. நாகோஜீ ராவ் அவற்றை செமிடோன் என்கிறார். சமஸ்கிருத கிரந்தக்காரர்கள் இந்த ஸ்வரங்கள் ஒவ்வொன்றிற்கும் மூன்று ஸ்ருதிகளைக் கொடுக்கிறார்கள். அப்போது ஒரு செமிடோன் மூன்று ஸ்ருதியளவு உடையதா என்கிற கேள்வி எழுகிறது. நாகோஜீ, "இல்லை" அவரால் சுத்த த மற்றும் சுத்த ரி யின் இடத்தில் இரண்டு ஸ்ருதிகளின் செமிடோன் என்று நிர்ணயிக்க முடியவில்லை" என்று சொல்கிறார். ஸா மற்றும் ரி, ப மற்றும் த, வின் நடுவில் தெற்கத்திய பத்ததியோ , மற்றும் தெற்கின் சமஸ்கிருத பண்டிதர்களோ எந்த நடுவில் உள்ள இடைவெளியையும் ஸ்தாபிக்க வில்லை. அதனால் தெற்கின் சுத்த ரி மற்றும் கோமள ஸ்வரமான சுத்த த இரண்டு ஸ்ருதிகளின் தனி செமிடோனாக அதாவது கோமள ஸ்வரம், ஃப்ளேட் ஆக எப்போது எப்படி ஆனது? இந்தக் கேள்விக்கு எப்போதுமே பதிலலளிக்க முடியாமல் நின்று போகிறது. இந்த நிலையில் இன்று தெற்கின் ஸ்வர ஸப்தகத்தைப் பற்றிய சிந்தனையின் மூலம் டெர்ம்பர்ட் ஸ்கேல் [tempered scale] என்று சொல்வது சாத்தியமாகும். ஆனால் இது மேற்கத்திய டெம்பர்ட் ஸப்தகமும் இல்லை. எனக்கு இந்த கேள்விக்கு விடையை ஏதேனும் ஒரு தெற்கத்திய பண்டிதரிடம் என்றாவது தெரிந்துக் கொள்ளத் தான் வேண்டும்.